இலட்சிய பூமி

—நாவல்—

முதற் பதிப்பு : 1968.

விலை ரூபாய் ஆறு

Tamil translation of
THE FLIGHT OF THE INNOCENTS
by Lin Yutang
All Rights Reserved
Published By
Dragonfly Books
Hong Kong
Published in Tamil by
JOTHI NILAYAM
Madras—18.

[USIS – [illegible]]

MARUTHY PRESS, 83, Peters Road, Madras-14.

இலட்சிய பூமி

—நாவல்—

லின் யூடாங்

தமிழில் :

பூவை எஸ். ஆறுமுகம்

ஜோதி நிலையம்
சிறந்த உலக இலக்கியங்களைத் தமிழில்
வெளியிடும் முதன்மையான நிறுவனம்
ஆழ்வார்ப்பேட்டை : : சென்னை-18.

டிடிஃபோ பௌலாஸ் — நூநூயாநா

ஆகியோருக்கு

இந்தப் புத்தகம் பிரியத்தோடு

சமர்ப்பிக்கப்படுகிறது!

உலகப்புகழ் பெற்ற நாவலாசிரியர் லின்யூடாங்

டாக்டர் லின்யூடாங், சீனவைச் சேர்ந்த ஃப்யூகீன் மாகாணத்தில் சாங்சோவ் என்னும் என்னும் ஊரில் 1895ல் பிறந்தார். தன் சொந்த நாட்டிலும், அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் கல்வி பயின்றார். பீகிங் தேசியப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், சிங்கப்பூரில் நயாங் பல்கலைக் கழகத்தின் அத்யட்சகராகவும், யூனெஸ்கோவின் கலை இலக்கியப் பிரிவின் தலைவராகவும் 1948ல் பணி புரிந்திருக்கிறார்.

சிந்தனை, அனுபவம் ஆகியவைப்பற்றிய அவரது பிரசித்தமான வருணனைகள், சீனக் கலாசாரம், இலக்கியம் ஆகியவை குறித்து ஆயிரக்கணக்கான வாசகர்களுக்குப் புதிய ஒளியையும் விளக்கத்தையும் தந்திருக்கின்றன.

இவர் தத்துவஞானத்திலும் கற்பனை இயலிலும் மிகவும் பிரசித்தமானவர்.

இவருடைய நாவல்களில் "பீகிங்கில் போராட்டம்" "புயலில் ஒரு தளிர்" "எனது நாடும் எனது மக்களும்" ஆகியவை புகழ் பெற்றவை.

முகவுரை

கதை, கதையின் அமைப்பு, கதா பாத்திரங்கள் எல்லாம் கற்பனையானவை; ஆனால், பின்னணிப் பொருள் யாவும் உண்மையானவை. சீனாவிலிருந்து தப்பி வந்து ஹாங்காங்கில் இப்பொழுது வசித்துக் கொண்டிருக்கும் கல்விமான்கள் பலருக்கு என்னுடைய நன்றி உரியது; அவர்கள் இக்கதையில் பெயரின்றி இருப்பார்கள். அவர்களோடு நடந்த எண்ணற்ற உரையாடல்களிலிருந்து, சீனாவினின்றும் தப்பிச் செல்வதற்கான நிலைகள், மார்க்கங்கள் பற்றியும், சாலைகளில் யதேச்சையாகக் கிடைத்த சுவைமிக்க தகவல்கள் அவர்களது திறமை, யுக்திகள், அபாயங்கள் குறித்தும் நான் நேரிடையாகத் தகவல்களைப் பெற்றேன். இந்தப் பேட்டிகளிலிருந்து நான் பெற்ற எதிர்பாராத அநுபவங்களில் ஒன்று, சாலையிலிருந்த அகதிகளின் களியாட்டம் ஆகும். அவர்கள் யாத்திரிகளைப்போல் ஆனந்தமும் கனவும், குதூகலமும், வேடிக்கையும் நிறைந்தவர்களாக இருந்தார்கள்.

ராபின் குன்றிலிருந்து எல்லைக்கு அப்பால் தெரிந்த தோற்றம், ஷாடௌகாக்-லாக்மாசௌ ஆகிய இரு பகுதிகளின் எல்லை ஆகியவற்றுக்கு நான் நேரிடையாகச் செய்த விஜயங்களின் மூலம் பல தகவல்களை சேகரித்துக்கொண்டேன்.

பாத்திரங்களின் பெயர்களையும், இடங்களின் பெயர்களையும் காண்டன் மொழியிலேயே அமைத்துக் கொண்டுள்ளேன்.

லின் யூடாங்

அத்தியாயம் 1

கிழக்கு நதி, வெய்ச்சோ நகரத்தைத் தாண்டி காண்டனைச் சார்ந்த பொக்கா டைக்ரிஸ்-பேர்ல் ஆறு டெல்டாப் பகுதிகளை நோக்கி வேகமாகப் பாய்ந் தோடிக்கொண்டிருந்தது. ஆற்றின் நீர் செந்நிற மாகவும், அதன் நீரோட்டம் பயங்கரமாகவும் இருந்தது.

1959, செப்டம்பர் கடைசி வாரம்.

மூன்று நாட்களாக வெய்யில் மிகவும் அதிகம். புழுக்கமும் ஈரப்பதமான உஷ்ணமும் எங்கும் கலந் திருந்தன.

சமீபத்தில் அந்நகரம் இரண்டு பெருஞ் சோதனை களுக்கு உள்ளாகி இருந்தது. ஜூன் மாதத்தில் வெள் ளம் வந்தது; அதைத் தொடர்ந்து ஆகஸ்ட் மாதத் தில் அறுவடை குறைந்தது!

வெய்ச்சோவிலிருந்து மேற்கே அறுபது மைல் தூரத்தில் இருக்கும் காண்டனை ஓர் இருப்புப்பாதை இணைத்தது. தெற்கே ஐம்பது மைல் தொலைவில் ஹாங்-காங் இருக்கிறது. காம்ஃபர்ஹெட் ஜங்ஷனில் இருந்த காண்டன் கௌலூன் ரெயில் பாதையுடன் ஒரு சிறிய பாதை சேர்ந்தது.

சிப் பிரிவுகளை—நகர்ப்புறங்களிலும் விஸ்தரிக்கத் திட்டம் வகுக்கப்பட்டது. ஆண்டு முடிவுக்குள் இத் திட்டம் பூர்த்தியாகிவிடும்.

"பெரிய பாய்ச்சல் முன்னேற்றம்" ஓராண்டுக்கு முன்னதாகவே ஆரம்பமாகிவிட்டது. இந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடிய சக்தி 'கட்சி,க்கு உண்டு என்பதில் சந்தேகமில்லை.

ஒழுங்காக நிர்வாகம் செய்யப் பெற்ற மிருகக் காட்சிசாலையைப் போன்று வெய்ச்சோ நகரம் அமைதியாக இருந்தது. எறும்புக் கூட்டத்திடையே உள்ளதுபோல எல்லா நடவடிக்கைகளும் ஒழுங்கு முறையாக நடந்தன. உழைக்கும் தேனீக்கள் மாதிரி எல்லா மக்களும் மிகவும் கஷ்டப்பட்டு கடுமையாக உழைத்தார்கள். அரசாங்கம் இட்டதுதான் சட்டம்!

முன்னைப்போன்ற ஆரவாரம் இப்போது கிடையாது. சந்தையில் பாத்திரம் பண்டம் விழுந்தால் கூட காது கேட்கும்; அவ்வளவு அமைதி இப்போது நகரத்தில் நிலவியிருந்தது. ஆண்கள் தேவைக்கு அதிகமாகப் பேசவில்லை. சோம்பேறித்தனமாக வம்பளக்க பெண்கள் நிற்பதில்லை. ஏனென்றால், நண்பர்களையும் அண்டை அயலவர்களையும் யாரும் நம்ப முடிவதில்லை!

நாட்டின் ஒவ்வொரு நடப்பையும் கட்சி எங்கிருந்தோ, எப்படியோ மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டே யிருந்தது.

நாட்டிலே அமைதி கண்காணிக்கப்பட்டது. கூச்சல் போட்டால் எல்லோரும் ஒரே குரலில் கூச்சல் போடவேண்டும். இல்லாவிட்டால், எல்லோ

ரும் ஒன்ருக அப்படியே 'கப்சிப்' என்று அடங்கிவிட வேண்டும். 'கட்சி' விருப்பப்பட்டால், இசைத்தட்டை இயக்குவதுபோல், ஆனந்த ஆரவாரத்துடன் வர வேற்று மக்கள் மகிழ்ச்சியைத் தெரிவிக்குமாறு செய்யவோ, அல்லது நிந்தனைக் கூச்சலை எழுப்பும்படி செய்யவோ முடியும்! புகழ்பெற்ற பழைய இராணுவ மேலதிகாரியின் கூட்ட நிகழ்ச்சி நிரலை நினைவூட்டியது இவ்வகையான போக்கு.

1. சிறப்பு விருந்தினர் ஹாலில் பிரவேசிக் கிருர்.
2. பாராட்டு ஆரவாரம்.
3. பேச்சாளரை தலைவர் அறிமுகம் செய்து வைத்தல்,
4. கைதட்டல்.
5. பேச்சாளர் பேசுதல்.
6. உற்சாகமான பலத்த கையொலி.
7. மேடையைவிட்டு பேச்சாளர் இறங்குதல்.
8. தொடர்ந்த, நீண்டநேரக் கைதட்டல்.

கூட்டத்தின் நடவடிக்கைகளில் ஒன்றிரண்டு சிறிய மாறுதல்கள் இருக்குமே தவிர, மற்றபடி அதன் அமைப்பு அப்படியே தான் மாருமல் இருந்தது.

9. "அமைதியுடன் வீடு செல்லவும்!" என்கிற ஒரு திருத்தம் மட்டிலும் இப்பொழுது சேர்க்கப் பட்டது.

'அமைதியுடன் வீடு செல்லவும்' என்னும் இந்தக் கடைசிக் குறிப்பு நடைமுறையில் ஒருபோதும் சாத்தியமானதல்ல.

ஆற்றின் இக்கரையிலிருந்த பெரிய ஆலமரத்தின் அடியில் கூடிய உதிரிக்கும்பல் ஆற்றின் அக்கரையில் தெரிந்த செழிப்பான நாட்டுப்புறப் பகுதியைக் கண்ணோட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அங்கு பலதரப்பட்ட செடிவகைகளும், ஆரஞ்சுத் தோட்டங்களும், காய்கறிக் கொல்லைகளும் காணப்பட்டன, கமுகு, தென்னை இனங்களைச் சார்ந்த பலரக மரங்களும் இருந்தன. அடித்தளத்தில் இருந்த பள்ளத்தாக்கை பாக்லோ மலைச்சிகரங்களும், அவற்றிற்கு அப்பாலிருந்த லோஃயூ மலைச்சிகரங்களும் அழகுபடுத்தின. பாக்லோ வடகரையில் இருந்தது. ஆற்றிற்கும் அதற்கும் ஐந்து மைல் தூரம்.

"போக்லோவில் நேற்று இரண்டு படைவீரர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள்!...."

"நம்முடைய குட்டி நெப்போலியன் அவ்விருவரையும் அம்மட்டோடு ஒருக்காலும் விட்டுவிடமாட்டான்!"

"உழவர்கள் குத்துச் சூலத்தால் அவர்களைக் கொன்று போட்டிருக்கிறார்கள். ஆனால், ரேடியோவில் இதைப்பற்றி எதுவுமே பிரஸ்தாபிக்கவில்லை என்று நான் கேள்விப்பட்டேன்."

"ஆமாம்; அதுபற்றி ஒன்றும் ஒலிபரப்பமாட்டார்கள்!"

"ஆனால், செய்திகள் நமக்குக் கடைசியில் எப்படியும் வந்து சேர்ந்துவிடுகின்றன."

"அக்டோபர் பதினைந்து என்று 'கட்சி' நாள் குறித்திருக்கிறது. அந்தத் தேதியில் கட்டாயம் நடந்தே தீரும்."

"ஆனால், எனக்குள்ள கவலையெல்லாம் உணவு தான்! நம்முடைய ரேஷனின் கதி என்ன ஆகப் போகிறது? மாதத்திற்கு மூன்று அவுன்ஸ் இறைச்சியும் நான்கு அவுன்ஸ் எண்ணெயும்தான்! இந்த அளவு கூடுதலாகப் போகிறதா, இல்லை குறைக்கப் படப் போகிறதா?...."

"அட பூர்ஷ்வாவே!....நான் வேண்டுவதெல்லாம் ஒரு பாத்திரம் அளவுள்ள நல்ல சுத்தமான அரிசிக் காகத்தான்! இதன் நிமித்தம், நான் மன மகிழ்ச்சியோடு அடிமைபோல அவ்வளவு கஷ்டப்பட்டும் உழைப்பேன்! நீ அப்படிச் செய்யமாட்டாயா?...."

"இதோ, இந்தச் செழிப்பான பள்ளத்தாக்கைப் பார்! காய்கறிகள், அரிசி, மீன், முட்டைகள், பன்றிக் கொழுப்பு முதலியனவெல்லாம் எங்கே போய் விட்டன?"

"கழிந்த இரவு குடும்பத்தில் ஒரு சச்சரவு ஏற் பட்டுவிட்டது. என்னுடைய மருமகள்மார் மூன்று பேரும் வருஷாந்தர துணி ரேஷன் பெற்றார்கள். ஆளுக்கு பதினெட்டு அங்குலம் அளவு. மூவருக்கும் சேரவேண்டிய ஐம்பத்து நாலு அங்குலம் துணியையும் ஒரே துண்டாக—ஒரே மொத்தமாகத் தரும்படி யோசனை சொன்னேன். அப்படி தரும் பட்சத்தில் ஒருத்திக்கு ஒரு சிறிய ஜாக்கெட்டுக்குப் போதும். ஒருத்தியும் விட்டுக் கொடுக்கவில்லை!...."

"போன மாதம் மலைமலையாக வந்து சேர்ந்த ஆணிகளைப் பார்த்தாய் அல்லவா?"

"சென்ற வருஷத்தில் இரும்பு உலைகளிலிருந்து கிடைத்த உபரியான உப-பொருள்கள் அவை!"

"ஆனால் இந்த ஆணிகளை யார் சாப்பிடப் போகிறார்கள்?"

வெய்ச்சோ நகரத்தின் ஜனங்கள் இவர்கள் எல்லா வகுப்புவாரிப் பிரிவுகளும் ஒழிக்கப்பட்டு விட்டன. இரண்டே இரண்டு பிரிவுகள் மாத்திரம் தான் எஞ்சியிருந்தன. ஆளப்பட்டவர்கள்—அதாவது, உழைப்பாளி வர்க்கம். ஆளுபவர்கள்—அதாவது குறுகியகால பூர்ஷ்வாக்கள்!

முதலாளிகள் அங்கு இல்லை!

வெய்ச்சோவில் ஆளும் பிரிவுக்குள் மிகவும் முக்கியமான நபர் டெங்-பிங்.

டெங்-பிங்குக்கு 'குட்டி நெப்போலியன்'—சிறிய நெப்போலியன் என்று ஒரு பட்டப் பெயர் உண்டு. அந்தப் பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் தேடிக்கொடுக்கும் பொறுப்பை நிர்வகித்தான்.

அதாவது, உள்ளூர் கம்மிஸார் (கமிஷனர்) அவன்! அம் மாவட்டத்தில் அதிகாரமும் செல்வாக்கும் படைத்த உயர் அதிகாரி அவன். குள்ளமாகவும் பருமனாகவும் இருந்தான். ஐந்தடி இரண்டு அங்குல உயரம்; ஒரு சீனாக்காரனைக் காட்டிலும்கூட குட்டையாகத் தோன்றினான். அவன் மிகவும் சக்தி படைத்தவன். அவனுடைய தலை முடிகள் கறுத்தும் குத்திட்டு நீட்டிக்கொண்டும் இருந்தன. அவை ஒட்ட வெட்டப்பட்டிருந்தன. அகன்றிருந்த முகத்தில் ஒருவிதமாக மங்கிய கறுமைத் தோற்றம் காணப்பட்டது. ஒரு மனிதனை அவன் எவ்வளவுதான் நிதானத்தோடு சுமுகமாக நடத்த முயற்சி செய்

தாலும் அவன் எப்போதுமே கவர்ச்சியுடன் காணப் பட்டது கிடையாது.

அவனுக்கு வயது முப்பத்தொன்றுதான். இளம் பிராயம். அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒவ்வொரு மனிதனின் வாழ்வு—சாவு ஆகியவற்றின் விதி அவன் கையில் இருந்தது. ஏன், அவனே அங்கு சகலமாகவும் விளங்கினான்! குள்ளமான உருவத்திற்கும் இளம் பிராயத்துக்கும் ஈடு செய்வதே போன்று, அழகாக ஒழுங்குபடுத்தப்பட்ட மீசை வளர்த்திருந்தான். அவனுடைய கண்களில் எப்போது பார்த்தாலும் ஒருவகைக் கோபக்குறி தென்பட்டது. வல்லமை கொண்ட கடுமையான முகத்தோற்றத்துடன் அவன் விளங்கினான். அவனது நாசித்துவாரங்களின் தடித்த மயிர்கள் கீழிறங்கி அவனுடைய மீசையுடன் சேர்ந் திருந்தன!—விசேஷ குணம்தான்! அவன் சிரித்தால், அவனது கறுத்த—கரைபடிந்த பற்கள் பளிச்சிட்டுத் தெரிந்தன. இக்காட்சியைப் பார்ப்பவர்கள் அவனை ஒருபோதுமே மறக்கமாட்டார்கள். இவை போதா தென்று, அவன் விழிகள் வேறு ஊடுருவிப் பார்க்கும் பான்மையுடனோ அல்லது தந்திரசக்தி படைத்தன வாகவோ விளங்கின. ஆகவே, அவன் முன்னிலையிலே மற்றவர்கள் சரளமாக நிற்கத் தயங்கினார்கள்!

காலை ஒலிபரப்பை முடித்துக்கொண்டு இப் போதுதான் டெங்-பிங் வந்து சேர்ந்தான். மேல் மாடியில் அவனுக்குரிய அலுவலகத்திற்குப் பின் புறத்தில் இருந்த தந்தி அறையை அடுத்து இருந்தது ஒலிபரப்பு அறை. அது சிறியதாகவும் புழுக்கமாக வும் உஷ்ணமாகவும் இருந்தது. அவன் வெள்ளைநிற

பட்டுக் கைக்குட்டையினுல் தலையைத் துடைத்துக் கொண்டான்; உயர்ந்திருந்த காலருடன் கூடிய இராணுவ உடுப்பின் உட்பகுதியைச் சுற்றி இழுத்து விட்டுக்கொண்டான். டெங்-பிங் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். காலையில் மணி 7-25. வழக்கமாக ரேடியோவில் பேசும் பதினைந்து நிமிஷங்களை விட அதிகமாகவே அவன் பேசிவிட்டான். பேசிய விஷயம் மிகவும் முக்கியமானதாகும்!

செப்டம்பர் மாதத்தின் கடைசிப் பகுதி. பகல் பொழுது குளிர்ப்பதமாகவும் துன்புறுத்துவதாகவும் இருந்தது. டெங்-பிங் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். ஜன்னலுக்கு முன்னுல் வடபுறமாக நின்றுகொண்டிருக்கச் சென்ருன். தூய காற்றை அனுபவித்தான்.

இனிமேல் அவன் தன்னுடைய மேலதிகாரியான ஸெங்-கேயிடம் எல்லாவற்றையும் அறிவித்தாக வேண்டும்.

ஸெங்-கே, மாகாணக் கமிஷனர்; நகரத்தின் 'கம்யூன்' அமைப்பைப் பார்வையிட்டுப் பரிசோதிக்க கான்டனிலிருந்து அனுப்பப்பட்டவன். சம்பந்தப் பட்ட வேலை பூராவும் தன் தலைமீது விழுமென்று டெங்-பிங்குக்குத் தெரியும். தன்னுடைய கடமையை வெற்றிகரமாகச் செய்து முடித்து, தன் மேலதிகாரியிடம் தனக்கு உள்ள தொடர்பை திருப்திகரமான முறையில் பேணிக்கொள்ள வேண்டுமென்பதே முக்கியம். 'கட்சி'யில் அவனுக்கு உரிய நிலைப்பின் தன்மை அவனது செயல் திறனைப் பொறுத்தே இருந்தது. தன் கடமையைச் சிறப்பாகச் செய்து

விட முடியுமென்று அவன் அறிந்தாலும், தன் உயர் அதிகாரியின் சக்தியும், தனக்கு இருந்த பொறுப்பின் சிக்கலான நிலையும் அவனைப் பயமுறுத்தின.

ஈஸ்ட் ஆறு கீழே பாய்ந்தோடிக்கொண்டிருந்தது. ஆற்றுக்குக் குறுக்கே—போக்லோ மலையுச்சிகளுக்கு மேலே வடமேற்கில் புயல் மேகங்கள் திரண்டு கொண்டிருந்ததை அவன் பார்த்தான். போக்லோவில் முன்பு அரிசிக் கலகமொன்று நடந்தது. அதில் இரண்டு படைவீரர்கள் கொல்லப்பட்டதைப் பற்றியும் அவன் தீவிரமாகச் சிந்திக்கலானான்.

அவன் பின்புறம் திரும்பி, கண்ணாடிப் பெட்டியில் இருந்த துப்பாக்கியைப் பார்த்தான். முந்தின நாளில் புதிதாக வந்து சேர்ந்த ஜேம்ஸ் தாயெர் என்னும் ஆங்கிலேயனிடமிருந்து அவன் அத் துப்பாக்கியைக் கைபற்றினான். அந்த ஆங்கிலேயனை கண்டபின் தனக்கு ஏன் இவ்வளவு கலக்கம் ஏற்பட்டுள்ளது என்பதை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. உல்லாச யாத்ரீகனாக வந்த அந்த ஆங்கிலேயன் ஒரு துப்பாக்கியையும் தூக்கிக்கொண்டு வரத் துணிவதென்றால், அதற்கு அர்த்தம் என்ன? அது என்ன துடுக்குத்தனம்? இந்தக் குற்றத்திலிருந்து தப்பித்துக் கொள்ளக்கூடுமென்று அவன் எப்படி எதிர்பார்த்தான்? அவனது பயணம் சம்பந்தப்பட்ட சான்றுத்தாள்களெல்லாம் கச்சிதமாகவே இருந்தன. அவனுடைய அத்தையான சகோதரி ஆங்கெலிகாவைச் சந்திக்க வந்திருந்தான். செஞ்சீனாவிலிருந்து வெளியேற்றப்படவிருந்த கடைசி மதச் சேவகி அந்த அம்மணி. அந்த ஆங்கிலேயன் இன்னும் சில தினங்

களுக்குள் மதச் சேவகியான தன் அத்தையுடன் புறப்படவேண்டும், ஆதலால், அவனை ஜெயிலில் பிடித்து அடைப்பதன் மூலம் ஒரு அரசியல் தகராறு உருவாவதை அவன்விரும்பவில்லை பெட்டியைத் திறந் தான்; ஏதோ அழகான பொருள் என்று எண்ணி, துப்பாக்கியைப் பார்த்துவிட்டு, அதை அப்படியும் இப்படியுமாகப் புரட்டினான். பிறகு அதைப் பத்திர மாக வைத்தான்.

சாய்வு மேஜையில் அமர்ந்து, கைக்கடிகாரத் தைப் பார்த்தான் அவன். மணி 7-35தான். செங் கிடம் அறிவிப்பதற்கு இன்னமும் பத்து நிமிஷங்கள் இருந்தன. ஒலிபரப்புப் பேச்சைக் குறித்து மேலதி காரி என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார் என் றறிய அவன் ஆவல் கொண்டான். ஆனாலும் தான் மிகவும் அமைதியுடன் இருக்க வேண்டுமென்பதை அறிந்திருந்தான் டெங்-பிக். அவன் அறையில் அவன் மட்டும்தான் இருந்தான். தனக்குத்தானே தயார் செய்து கொண்டான். வெளி அறையில் அவனு டைய இரண்டு காரியதரிசிகளும் இருந்தனர். அவர் களுக்கு லியூ, மோய் எனப் பெயர். அவர்கள் இருந்த வெளி அறையைக் கடந்துதான் பார்வை யாளர்கள் செல்ல வேண்டும்.

ஒழுங்கை நிலைநாட்டும் தீவிரவாதியாக டெங் பிங் இருந்து வந்தான்; பெரிய கம்யூனிஸப் புரட்சி யின் கடுஞ் சோதனையில் தன்னை வலுப்படுத்திக் கொண்டவன் அவன். அந்தப் பெரிய நகரத்தின் முக்கியமான பதவியாகிய 'தலைமை அமைச்ச'ராக அவன் தன் முப்பத்தோராவது வயதிலேயே பதவி

உயர்வு பெற்ருன். 1950-ஆம் ஆண்டில் நடந்த பெரும் ஜனத்திரள் அணிவகுப்புக்களிலும் நிலப் பிரபுக்களைத் தூக்கிலிடும் நிகழ்ச்சிகளிலும் அவன் தன் இருபத்திரண்டாம் வயதிலேயே பங்கு பெற்றிருக்கிருன். 1952—53ல் நடைபெற்ற மூன்று எதிர்ப்புக்கள், ஐந்து எதிர்ப்பு இயக்கங்களிலே *பூர்ஷ்வாக்களைச் சித்திரவதை செய்து அவமானப்படுத்திய நடவடிக்கைகளிலும் அவனுக்குப் பங்கு இருந்தது. 1955-ல் வலதுசாரிகளின் நிரந்தரச் சேனைகளைக் கலைத்துத் தூய்மைப்படுத்திய சம்பவத்தையும் அவன் கண்டதுண்டு. இப்படி பல கட்டங்களிலும் அவன் பொறுப்பேற்ருலும், கடைசியில் உபத்திரவம் எதுவுமின்றித் தப்பிவிட்டான். கம்யூன்கள் எனப்பட்ட சிறு நகராட்சிப் பிரிவு அமைப்பின் பணியினுல் நாட்டுப் பகுதிகளிடையே ஏற்பட்ட உருவ மாற்றத்தையும் எழுச்சியையும் பார்த்திருந்தான். ஊர்க் குருவிகளை நிர்மூலமாக்க அப்பகுதியின் மக்கள் பூராவும் இடம் பெயர்ந்து விடுவார்கள். அத்தகைய ஜனங்கள் லோஃபூவுக்கும் போக்லோவுக்கும் அடியில் அணையொன்று கட்ட விரைந்தார்கள். அப்புறம், வெள்ளம் வந்து பயிர்களை அழிக்கு முன்னே பயிர்களை அறுவடை செய்யத் திரும்பினுர்கள். வெய்ச்சோ—போக்லோ பகுதியின் இருபது மைல் சுற்றளவிலிருந்த கிராமத் தலைவர்களுக்கு அவன் தொலைபேசி மூலம் உத்தரவுகளை அனுப்புவான்.

---

* பூர்ஷ்வாக்கள்: மேன்மக்களுக்கும் உழைப்பாளிகளுக்கும் இடைப்பட்டவர்கள்.

அவனுடைய ஆணைக்கு யாவரும் பூரணமாகக் கீழ்ப் படிவார்கள். இதை அவன் அறிந்திருந்தான்.

1955-ஆம் வருடத்தில் 'கட்சி'யின் புனருத்தாரணக் கடுஞ் சோதனைகளின்போது, அவனுக்கு உள்ளூற ஒருவகைப் பயம் இருந்தது. நிலப் பிரபுக் கள், நடுத்தர வகுப்புக் கடைக்காரர்களிடையே சீர்திருத்தம் ஏற்படாததால், அவ்வேலையின் பொறுப்பு அவனுடையதாயிற்று. அவனுக்கும் அவனுடைய நண்பனும் உத்தியோகக் கூட்டாளியுமான லான்க்வே இருவருக்குமிடையே நிகழ்ந்த தகவல்—எதிர்த் தகவல் நடவடிக்கைகளிலே, அவன்தான் வெற்றி பெற்முன். கொகோநோரின் சதுப்பு நிலங் களைச் சீர்படுத்த சீன டர்க்கிஸ்தானுக்கு லான்க்வே நாடு கடத்தப்பட்டான்; அப்புறம் அவனைப்பற்றி யாதொரு தகவலும் இல்லை. இதனுல் டெங்பிங்கின் மனைவி மிகவும் கோபமடைந்தாள். லான்க்வே அவனுடைய பள்ளித் தோழன். அவர்கள் இருவரும் ரொம்பவும் அந்நியோந்நியமாகப் பழகினூர்கள்; அவன் டெங்பிங்கின் வீட்டுக்கு இராச் சாப்பாட்டுக் காக அடிக்கடி வந்தான்; சில தருணங்களிலே, வாரத் துக்கு மூன்று நான்கு தடவைகூட வந்தான். தங்கள் தவறுகளைக் கண்டு அவர்கள் இருவருமே சிரித்துக் கொள்வார்கள். ஆதிக்கம், புகழ் முதலியவற்றைப் பெறும் ஆசைகளிலும் அவர்கள் பங்கு பெறுவ துண்டு. "**செங்கொடி**"யிலிருந்தோ அல்லது மத்தியச் செயற் குழுவிலிருந்தோ வரும் ரகசிய உத்தரவுகளை இருவரும் சேர்ந்தே படித்து விவாதிப்பார்கள். டெங்பிங் குள்ளமாகவும் பருத்தும் இருக்க, லான்

க்வேயோ அவலட்சணமாக மெலிந்தும் உயரமாக வும் இருந்தான். அவனுக்கிருந்த ஒரே உண்மை யான சிநேகிதன் லான் க்வே தான்!

ஆகவே, அவன் மனைவி அவனிடம், "உங்களு டைய அருமையான நண்பருக்கு விரோதமாக நீங்கள் எப்படி பொய் சொல்லலாம்? அவருக்கு எதி ராக எவ்வாறு சாட்சிகளைக் குவிக்கலாம்?" என்று கேட்டாள். யௌவனப் பெண் உழைப்பாளி அவள்!

"நீ வாயை மூடு. நான் அப்படிச் செய்திராவிட் டால், இந்நேரம் கோகோநோரில் அவனுக்குப் பதிலாக நான் இருந்திருப்பேன்!" என்றான் அவன்.

"ஆனால் அவர் உங்களுக்கு விரோதமாக பொய் எதுவும் சொல்லவில்லையே!" என்றாள் அவள். அவள் லான்க்வேயை விரும்பினாள். அப்போதுதான் அவன் மனைவி அவனை விட்டுப் பிரிந்து சென்றாள். அவன் மீது அவனுடைய சொந்த மனைவியே ஒரு தீர்ப்பு வழங்கி விட்டாள். இதுதான் அவனை வருத்தியது.

மக்களைத் திருத்தி மாற்றிய அந்தப் புனருத்தா ரணம் அவனுக்கு ஒரு படிப்பினையைப் போதித்தது, அதையே தனக்குரிய குறிக்கோளாகவும் கொண் டான். "வலதுசாரியைவிட இடதுசாரியே உகந் தது!"—இந்தச் சூத்திரத்தையே அவனது நண்பர் களில் பலர் உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். உண்மையான நோயாளியையும் வயதானவரையும் வேலைக்குச் செல்வதனின்றும் மன்னிப்பதைத் தீர் மானிப்பது போன்ற ஜனங்களின் சார்பான மனி தாபிமானம் மிகுந்த இரக்கச் செயலுக்கும், மத்திய

செயற்குழுவின் ஆணைகளை அப்படி அப்படியே நிறை வேற்றும் கண்டிப்பான நடவடிக்கைக்கும் ஊடே 'இடதுசாரிக் கொள்கை'யையே தேர்ந்தெடுத்துக் கொள்வான். வலதுசாரிக் கொள்கைகள் உழவர் களின் சார்பில் சுமுகமாக இருப்பதாகவும் முன்பு அவனே அறிவித்திருந்தான். இப்போது அவற்றில் பல நீக்கப்பட்டுவிட்டன. தொழில் முகாம் மூல மாகச் சீர்திருத்தம் செய்யப்படுவதற்கு அவை அனுப்பப்பட்டன.

அது நிரந்தரமானதொரு சிக்கலாக இருந்தது. பச்சாத்தாபமின்றி அதிகாரத்தின் உச்சத்தை அடைந்து, கட்சிச் சார்புடைய மிக முக்கியமான மையக் குழுவில் ஒரு நபராக ஆகவேண்டும். இல்லை, கௌரவம் இழந்து லான் க்வேயி மாதிரி எங்கேனும் தொழில் முகாமுக்கு அனுப்பப்பட்டு விடவேண்டும். 'கட்சி;யின் உயிர்ப்பான ஒழுங்குமுறை அவன் ஆன் மாவில் உறைந்திருந்தது. அந்தச் சிறு நகராட்சிப் பிரிவின் அமைப்பின் நிருவாகத்தைப் பார்வையிட கான்டன் செயற்குழு இப்போது தோழர் ஸெங்கை அனுப்பி வைத்தது.

போக்லோ அரிசிக் கலகத்தினைப்பற்றிய அறிக் கையை டெங்பிங் உன்னிப்பாகப் பார்த்து மிகவும் நுட்பமாக ஆராய்ந்தான். தெளிவான-சுருக்கமான அறிக்கையை அவன் ஸெங்கிடம் சமர்ப்பிக்க முடி யும். ஆங்கிலேயரின் வருகை சம்பந்தமான சகல உண்மைகளையும் அவன் அறியலானான்.

நாற்காலியை விட்டு அவன் எழுந்தான்; மேல் சட்டையைச் சீர்செய்து கொண்டான்; கையில்

2

மூக்குக் கண்ணாடியுடன் ஸெங்கைச் சந்திக்கச் சென்றான்.

ஸெங் தன் உத்தியோகத்தில் நீண்டகால அனுபவம் பெற்றவன். ஏனானை நோக்கி நடந்த நீண்ட ஊர்வலத்தில் அவன் கலந்துகொண்டவன். ஒல்லியாகவும் பலஹீனமாகவும் இருந்தான். ஐம்பது பிராயமுள்ள அவனது மெல்லிய குரல், இளமை மிக்க டெங்பிங்கை நடுநடுங்கச் செய்துவிடும். ஆனால், ட்ஸெங் இயல்பாகவே பெருந்தன்மையானவன். டெங்பிங்கிடம், ஒரு பிரியம். அவன் மிகவும் சுறு சுறுப்பான தன்மையோடும் ஆக்கிரமிப்புக் குணத்துடனும் 'கட்சி'யின் பொதுவுடைமைச் சித்தாந்தத்தைச் செயற்படுத்தி வந்ததைக் கண்டு ஸெங் மகிழ்ச்சியடைந்தான்.

"தோழர் ஸெங் அவர்களே! நன்றாகத் தூங்கினீர்களா?" என்று டெங்பிங் கேட்டான்.

"மிகவும் நன்றாகத் தூங்கினேன் தோழரே!" என்று பதில் சொன்னான் ஸெங்.

"அன்று ஏற்பாடு செய்யும் முன் அந்த மெத்தையை நானே சோதித்துப் பார்த்தேன். ஏதாகிலும் அசௌகர்யம் இருந்தால், என்னிடம் தெரிவித்தால் நல்லது!"

"நான் நன்றாகத் தூங்கினேன் என்று உங்களிடம் தெரிவித்துவிட்டேனே!"

"சந்தோஷம். இன்று காலையில் என்னுடைய ஒலிபரப்புப் பேச்சைக் கேட்டீர்களா? பேச்சு எப்படி இருந்தது, ஏதையாகிலும் விட்டுவிட்டேனா என்று

தெரிந்துகொள்ள ரொம்பவும் ஆசையோடு இருக்கிறேன்."

"நீங்கள் சரியாகவே பேசியிருக்கிறீர்கள். கம்யூன் எனப்படும் சிறு நகராட்சிப் பிரிவின் உறுப்புகள் ஒன்று சேர்ந்து ஒழுங்காக வேலை செய்யும் அமைப்புத் திட்டத்தைப்பற்றி அறிவிப்பு அழுத்தமாக இருக்க வேண்டும். நீங்கள் சரியாகவே அறிவித்தீர்கள். ஆனால் கடைசியில்தான், அதாவது, நீங்கள் பொது ஜனங்களின் ஒத்துழைப்பைக் கோரிய போதுதான், சரியாக அமையவில்லை. இன்னும் கொஞ்சம் விரிவாக விளக்கியிருக்க வேண்டும். அத்துடன், 'கட்சி'க்கும் பொது ஜனங்களின் உரிமைகளுக்கும் உள்ள ஒருமையையும் அழுத்தமாக எடுத்துரைக்க வேண்டும். ஊம்!....உங்கள் குரலில் கொஞ்சம் கோபம்—எரிச்சல் தொனித்தது!...."

"அப்படியா?....நான் அதற்காக மிகவும் வருந்துகிறேன். நாளைக்கு இன்னும் நல்லவிதமாக என் கடமையைச் செய்துவிடுவேன்!"

"நாம் இப்போது ராஜாங்க ஆக்கிரமிப்பாளர்களால் சூழப்பட்டுள்ள நேரம். ஆதலால், 'கட்சி'க்கும் பொது மக்களுக்கும் உள்ள இறுக்கமான ஒற்றுமையின் அக்கறையைப்பற்றி வலுவாக அழுத்திச் சொல்லுங்கள்!....அவர்கள் போக்லோவில் படைவீரர்கள் இருவரைக் கொன்றுவிட்டதாக அறிகிறேன், அதன் விருத்தாந்தம் என்ன?...."

டெங்பிங் நடப்பைச் சொன்னான். உள்நாட்டு ராணுவத்தைச் சேர்ந்த இரண்டு போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். அப்படைக்குப்

பொறுப்பேற்றிருந்த தோழர் யுவானுக்கு ஆஸ்பத்திரியில் சுயநினைவு திரும்பியிருக்கிறது. இரும்பு ஊது உலைக்குத் தேவைப்பட்ட விறகுக்காக பத்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள காட்டை அழித்துப் பொட்டலாக்கிவிட்டார்கள். இதனால் போக்லோவில் அதிருப்தி நிலவி வந்தது: கட்டாயத்தின்பேரில் ராணுவத்தில் சேர்க்கப்பட்டு அணைக்கட்டு வேலையில் உதவி செய்த தொண்டர்களில் அநேகர் அண்டை மாவட்டங்களிலிருந்து வந்தவர்கள்தாம். மரங்களையெல்லாம் வெட்டி வீழ்த்தும்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டவுடன், படையணி மலைகளுக்குச் செல்வதற்குப் பதிலாக, கிராமத்துக்கு அருகில் இருந்த மரங்களை வெட்டி வீழ்த்தத் தொடங்கியது, உள்ளூர்க்காரர்களுக்கும் வெளியாட்களுக்கும் இடையே கூச்சலோடு கூடிய சண்டை நடந்தது. மலைப் பிராந்தியங்களிலிருந்து மரங்களை வெட்டுமாறு படையணிக்கு டெங்பிங் ஆணையிட்டதும், சச்சரவு அமைதியுடன் தீர்வுபெற்றது. விறகு பஞ்சத்தைப்பற்றி போக்லோ உழவர்களின் மனைவிமார்கள் குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தார்கள். இந்த வருஷம் அறுவடை முடிந்ததும், குடியானவர்களிடம் சுமார் இரண்டு மாதங்களுக்குக் காணும்படியான போதிய தானியங்கள் சேர்ந்திருந்தன. சோவியத் நாட்டுக்குக் கப்பலில் அனுப்பப்பட வேண்டிய தானியப் பங்கை இவ்வகையில் சரிக்கட்ட 'கட்சி'யின் உள்ளூர் அலுவலகம் விரும்பியது. குடியானவர்கள் புகார் செய்தார்கள். அங்கங்கே உறுதிமொழிகளும் கிடைத்தன.

நேற்றையக் கலகம், கேவலம் ஓர் எலியினுல் ஏற்பட்டுவிட்டது. மழையின்போது, தானியக் களஞ்சியத்தின் கூரைக் கட்டில் இடைவெளி இருந்ததையும், அதன் காரணமாக ஓர் வயல் எலி உள்ளே போய் அரிசி மணிகளைக் குதறி வெளியே வீசியிருந்ததையும் வயதான ஓர் உழவன் கண்டு பிடித்தான். அரிசித் தான்யங்கள் நிறம் மங்கியும் கெட்டும் போயிருந்தன. தானிய சேதத்திஞல் குடியானவனின் ரத்தம் கொதித்தது. அறுவடை செய்யப்பட்ட ஒவ்வொரு தானிய மணியும் உழவனின் நெற்றியிலிருந்த ஒவ்வொரு வேர்வை மணியைக் குறித்தது. வீணடிக்கப்பட்ட தானியங்களைப்பற்றிய பழங்காலச் சம்பிரதாய உணர்வு இன்னமும் நிலவியது. அவன் காரியதரிசியைக் கண்டு பேசினுன். ஆனுல் யூவான் எல்லாம் நல்லபடியாக இருப்பதாக உறுதி சொன்னுன்.

தன்னுடன் சேர்ந்த மூன்று நான்கு உழவர்களையும் கூட்டிக்கொண்டு போய் அந்தக் காரியதரிசியைத் தூண்டியதன்பேரில், தானியக் களஞ்சியத்தை அவர்கள் பார்க்க முடிந்தது. எடுத்த எடுப்பிலேயே புரிந்துவிட்டது. தானிய மணிகள் உப்பிக் கிடந்தன; அவற்றின் நிறமும் கறுத்துவிட்டது. இந்தச் செப்டம்பர் உஷ்ணத்தில் சில முளைக்கவும் ஆரம்பித்திருந்தன. சிறு வயசுக் குடியானவன் ஒருவன் உள்ளூர் கமிஷனரைச் சுவரில் சாய்ந்துகிடந்த கடப்பாறையால் தாக்கினுன். பேய் பிசாசைக் கண்ட மாதிரி உழவர்கள் வெளியேறினுர்கள், வெளிப்புறத்தில் பெரும் திரள் கூடிவிட்டது.

கோபமூட்டப்பட்ட ஆடவர்களும் பெண்களும் உள்ளே பாய்ந்து, கண்ணில் தென்பட்ட பாத்திரம், கூடை முதலியவற்றைக் கொண்டு தானியங்களை வாரி அள்ளிக்கொண்டார்கள். உடனே இராணுவம் வந்தது. நாலைந்து பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். பொதுத் தானியத்தை ஒரு கூடை நிறைய அள்ளி வைத்துக்கொண்டு பின்தங்கி நின்ற போது கையும் களவுமாகப் பிடிபட்ட வயதான கிழவி ஒருத்தியும் அவர்களிடையே இருந்தாள். பிறகு நேற்று, கூரிய ஆயுதங்களால் இரண்டு படை வீரர்களின் முதுகுகளில் குத்தி ஒழித்துகட்டி படுத்திவிட்டார்கள்!

"மேற்கொண்டு நீங்கள் என்ன செய்ய உத்தேசம்?" என்று வினவினான் ஸெங்.

"இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டதற்காக நான் வருந்துகிறேன். இவ்விஷயமாக உங்களுடைய ஆலோசனையைப் பெறவே விரும்புகிறேன்!"

"இல்லை. உங்கள் யோசனையைக் கேட்கத்தான் நான் ஆசைப்படுகிறேன்!"

டெங்பிங் நிதானமான யோசனையுடன் பேசலானான்: "கலகம் தடை செய்யப்பட வேண்டும். உழவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். நான் ரேஷனைக் குறைத்துவிட முடியும்; அல்லது, ஆரஞ்சு போன்றவற்றின் தீர்வையை அதிகரித்துவிடுகிறேன். இப்படிப்பட்ட தீச்செயல்கள் மறுபடியும் நடக்காமல் இருப்பதற்கு என்னுடைய இந்நடவடிக்கை அப்போது தான் அவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கும். என் கவலையெல்லாம் தானிய மணிகளைப்

பற்றித்தான்! போக்லோவுக்கு நானே நேரில் போய் தீர விசாரிக்கப் போகிறேன். படையணி ஒன்றை யும் அங்கு அனுப்பியுள்ளேன். அந்தத் தான்யம் மெய்யாகவே உபயோகமற்றதாய் கெட்டுப்போயிருந்தால், அதற்கு உடந்தையாக நிர்வாகத் துறையில் உள்ள ஆள் கண்டிக்கப்பட வேண்டும்; அல்லது வேலையிலிருந்து நீக்கப்பட வேண்டும்!...."

"தோழர் யூவானை நீங்கள் சந்தேகப்படுகிறீர்களா?"

"உங்களுக்கு ஆட்சேபம் இல்லையென்றால், நான் நினைப்பது அதுவேதான்! அந்த நபருக்குப் பதிலாக வேறு ஆள் நியமிக்கப்பட வேண்டும். அப்போது ஜனங்களும் அமைதியடைவார்கள்!"

"உங்கள் கருத்தும் சரியே. உணவு விடுதிக் கலகங்கள் காண்டனில் நடந்தன. மக்கள் பசியுடன் இருந்தபோது, அவர்களுக்கு அங்கே உணவு இல்லை; எனவே, அவர்கள் சமையலறைக்குள் பாய்ந்துசேதப் படுத்திவிட்டார்கள். இம்மாதிரி நடப்புக்கள் யதார்த்தமானவை; யாவராலும் புரிந்து கொள்ளக் கூடியவை. உண்மையிலேயே அவர்கள் கட்சிக்கு எதிரானவர்கள் அல்லவே அல்ல! பிங்ஷானில் ஒரு சம்பவம் நடந்தது!....பிங்ஷான் அரசாங்கப் பண்ணையில் எனக்குத் தொடர்பு உண்டு. அங்குள்ளவர்களின் மனங்களை மெள்ள மெள்ளத்தான் மாற்றக் கூடும். போன வாரம் அங்கே கோழிக்குஞ்சு மாமிச விருந்தொன்று பிரமாதமாக நடந்ததாம், லெய்வா சொன்னாள்," என்று கூறினான் ஸெங்.

"யார் அந்த லெய்வா?" என்று கேட்டான் டெங்பிங்.

"பெண்கள் தொழில் ராணுவப் பகுதியின் தலைவி அவள். அன்று நகரத்தில் இருந்த கோழிக் குஞ்சுகளில் பெரும்பாலானவை காணமற் போய் விட்டதாக எனக்கு வந்த ரகசிய அறிக்கைகள் கூறு கின்றன, அங்கேயும் கம்யூன் எனப்படும் சிறு நகராட்சிப் பிரிவு அமைப்பு சீக்கிரம் ஏற்பட்டுவிடும். அங்குள்ள கோழிக்குஞ்சுகள் தேசீயமாக்கப்படுமுன், அவற்றை அந்தந்தக் குடும்பங்களில் கொன்று தின்னத் தொடங்கிவிட்டார்கள். பொதுவுடைமை மனோபாவத்தின் உண்மையான நிலையை உணர்ந்து கொள்ளும் அளவுக்கு இந்த ஜனங்கள் எப்பொழுது தான் கல்வியறிவு பெறப்போகிறார்களோ?...."

ஸெங் ஒருகணம் நிறுத்தினான். "கடுமை வேண் டாம்; உலகத்தின் முடிவுப் பகுதிக்கு நாம் இன்னும் வந்து சேரவில்லை!....கம்யூன் என்னும் சிறுநகராட்சிப் பிரிவை அமைத்தாக வேண்டும். அது உங்களது கடமையாகும். ஆங்கிலேயன் ஒருவன் நேற்று வந்த தாகச் சொன்னீர்களே, இங்கே அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான்?...."

தன் மேலதிகாரியிடம் தஸ்தாவேஜுகளைக் காண் பித்தான் டெங்பிங், அரசாங்க ரீதியான சீனப்பயண சேவையின் ஹாங்காங் அலுவலகம் மூன்று வார கெடுவுக்கு ஒரு பிரயாண அனுமதிச்சீட்டு வழங் கியது. நபரின் பெயர்: ஜேம்ஸ் தாயெர். வயது: முப்பத்திரண்டு. ஐந்தடி பதினொரு அங்குலம் உயரம். பழுப்புநிறத் தலைமயிர். பிரயாண அனுமதிச்

சீட்டில், டாய்-ஜென்-என் என்னும் அவனது சீன மொழிப் பெயர் இருந்தது. இங்கிலாந்தைச் சேர்ந்த ஸஸெக்ஸ் அவனுடைய பிறப்பிடம். ட்ரான்ஸிஸ்டர் ரேடியோ, மற்றும் அன்றாடத் தேவைக்குரிய மின் சாரக் கருவிகள் முதலியவற்றை வியாபாரம் செய்யும் ஆங்கிலேய நிறுவனமொன்றின் நிர்வாகி அவன். 1948—51ல் பீகிங்கில் வசித்தான். வடசீன கூட்டுறவு மொழிப்பள்ளியில் பகுதி நேரப் போதக ராகவும் வேலை பார்த்தவன். 1949—51ல் யென்சிங் பல்கலைக் கழகத்தில் ஐரோப்பியக்கலை விரிவுரையாள ராகவும் பணி புரிந்தான். சீன மொழியின்பால் நேசம் பூண்டவன் எனவும், 'மன்டரின்' மொழியை சரளமாகப் பேசுவதாயும் குறிப்பிடப்பட்டிருந்தான். சுறுசுறுப்பானவன்; சிநேகிக்கத் தகுந்தவன். மகிழ்ச்சி கரமான குணப்பாங்குடனும் தூய தோற்றத் துடனும் பொலிந்தவன். கொள்கைகள் ஸ்திர மற்றவை. பயணத்தின் காரணம்: வெய்ச்சோ மதப் பிரசார சபையைச் சேர்ந்த அவனுடைய அத்தை யான ஸிஸ்டர் ஆங்கெலிகா 'மக்கள் சீனக் குடி யரசை' விட்டுப் புறப்படும்பொழுது அவளுக்குத் துணை செய்வான் அவன்.

"அவன் ஒரு துப்பாக்கியைச் சுமந்து வந்தான். அதன் தொடர்ச்சி எண்ணை நான் குறித்துவைத்திருக் கிறேன். இந்தப் பிரயாணத்தில் அவனுக்கு இந்தத் துப்பாக்கி ஏன் தேவைப்பட்டது என்பதுதான் புரிய வில்லை. அவனுக்கு இது திரும்பக் கிடைக்காது. இந்த உண்மையை அவன் அறியான்!"

"துப்பாக்கி கொண்டு வந்ததற்கு அவன் என்ன காரணம் சொன்னான்?"

"தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்வதற்காக என்று காரணம் காட்டினான் அவன். இதோ, அதைத் தங்களுக்குக் காட்டுகிறேன்!" என்று சொல்லி வெளியே சென்று திரும்பினான் துப்பாக்கியுடன்.

ஸெங் அத் துப்பாக்கியை உன்னிப்பாக ஆராய்ந்தான்.

"அது விக்ஸன் 38 ஸ்பெஷல் ரகம்! குறி வைத்துச் சுடுவதில் கைதேர்ந்தவனின் கையில் அகப்பட்டால் நாசம்தான்!"

"அது மிகவும் அழகாக இருக்கிறதென்று நீங்கள் நினைக்கவில்லையா?"

அத்தியாயம் 2

டெங்பிங் ரேடியோவில் ஒலிபரப்பிக் கொண்டிருந்தான்,

அப்போது, மதப் பிரசார சபை இல்லத்தைச் சேர்ந்த பழைய பள்ளிக்கூடத்துச் சுற்று மதிலில் இருந்த ஒலிபெருக்கியினின்றும் எழுந்த கட்டளைகளுக்கேற்ப, வாலிபர் கூட்டுறவு சங்கப் பையன்களின் கூட்டமொன்று பயிற்சி செய்துகொண்டிருந்தது.

இக்காட்சியை ஜேம்ஸ் தாயெர் கவனித்துக் கொண்டிருந்தான். காலை ஆகாரம் முடிந்துவிட்டது. காட்சியில் ஒன்றியிருந்தான். அவன் திறந்த வெள்ளை நிற மேல்சட்டையும் தளர்த்தியான பழுப்புநிறக் கால்சட்டையும் அணிந்திருந்தான். பழுப்பு நிற முள்ள தடித்த காலணிகள் போட்டுக்கொண்டிருந்தான். கால் பெருவிரல்களை அழுத்தி முன்னும் பின்னும் ஆடி அசைந்த வண்ணம், காப்பியின் நறுமணத்தை அனுபவித்தவனாக காப்பிக் கோப்பையும் கையுமாகக் காணப்பட்டான். மேஜையடியில் உட்கார்ந்திருந்த தன் அத்தை ஆங்கெலிகாவை அவ்வப்போது கண்ணோட்டமிட்டுக் கொண்டிருந்தான்.

ஜைசுவிலிருந்து எட்டு வருட இடைக்காலத் துக்குப் பின்னே அங்கு வந்திருந்தான். முதல் காலைப் பொழுதிலேயே அவன் மகிழ்ச்சியோடு இருந்தான். தன்னுடைய உடன் பிறந்தார் மகனை அவள் கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் பேரில் அவளுக்குப் பிரியம் அதிகம். அவனது வெய்ச்சோ விஜயம் குறித்து ஆச்சரியப்பட்டுக்கொண்டும், பயணத்திற்கான காரணத்தை யூகித்துக்கொண்டும் இருந்தாள். ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த அவளுடைய பாட்டியினுடைய தலைமுடியைப் போலவே அவள் தலையும் பொன் நிறமாக இருந்தது. கறுப்பு கொண்டைவலை போட்டு அதை மூடியிருந் தாள். லேசாக வெளிறிய முகம்; நீலக் கண்கள்; கன்னப் பொட்டுக்களில் வெளிரிய சிவப்பு நரம்புகள் ஓடியிருந்தன, அவ்வளவு மென்மையாக இருந்தது மேனியழகு. குழந்தையிலிருந்தே ஜேம்ஸை அவளுக்குத் தெரியும். அவன் சங்கோசப்பிராணி, தன்னம்பிக்கை இல்லாதவனாக படிப்பதிலேயே நாட்டமுடையவனாக இருந்தான்; எதையும் விடாமல் படிப்பான்! அவளும் சங்கோஜப்பிராணிதான். தன்னுடைய உடன் பிறந்தார் மகன் பேரில் அவள் இயல்பாகவே பாசம் கொண்டிருந்தாள். அவன் இப்போது கலைக்கு தன்னை அர்ப்பணித்துகொண்ட மாணுக்கனாகிவிட்டான்!

ஜேம்ஸ் தாயெர், ஃப்ளாரென்ஸில் கலைக்கல்வி பயின்றான். கிழக்கத்திய நாடுகளுக்கு வருவதற்கு முன்னால், ஏதென்ஸுக்கும் ஆப்கானிஸ்தானத் துக்கும் உல்லாசப் பயணம் செய்தான். பீகிங்கில்

யென்ச்சிங் பல்கலைக் கழகத்தில் ஐரோப்பியக் கலைக்கு விரிவுரையாளனாக இருந்தவன் அவன். பீகிங்கில் இனிமேல் வசிப்பது அசாத்தியம் என்றுணர்ந்து ஹாங்காங்கில் தங்கி வீட்டுக்குரிய கருவிகள் விற்கும் கடையை ஆரம்பித்தபோது அவன் அத்தை வியப் படைந்தாள். அவனுடைய கண்களிலே மிளிரும் ஜீவன் நிரம்பிய கூர்மைமிக்க அந்தப் பார்வை அவ ளுக்குப் பிடித்திருந்தது; மற்றவர்களிலிருந்து விலகி உலகத்தை வேறு நோக்கில் பார்க்கும் ஒரு கலைஞனின் கண்கள் அவை!

அந்த மிஷன்வீடு, சிவப்புச் செங்கற்களால் கட்டப்பட்ட அடக்கமான வீடு. கடந்த நூற்றாண்டில் கட்டப்பட்டது. உலந்து, வெளிறி, பழுப்பு நிறம் கொண்ட விழுதுகளோடிச் சுற்றிலும் பரவியிருந்த ஆலமரத்துக்கும் பல யூகலிப்டஸ் மரங்களுக்கும் இடையே அது இருந்தது. தோட்டத்தின் வாசலுக்கு முப்பது—நாற்பது அடி பின்புறத்தில் வீடு அமைந் திருந்தது; வாசல் கேட்டிலிருந்து உள்ளே செல்லும் கூழாங்கற்களால் ஆன பாதையொன்றும் அதற்கு இருந்தது. மரங்கள் சூழ இருந்ததால், அந்த இடம் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. படர்கொடி களுடன் கூடிய சுவர் ஒன்று அதை ஆஸ்பத்திரியி னின்றும் இடது பக்கமாகப் பிரித்தது. தூரத்தில் இருந்த ஈஸ்ட் நதியும் கிராமப்புற சூழ்நிலையும் பின்புற ஜன்னல்கள் வழியாக கண்கவரும் தோற் றத்தைத் தந்தன.

உயர் வர்க்க ஆங்கிலேயர்களுக்குரிய உடல் வாகுடன் ஜேம்ஸ் தாயெர் விளங்கினான். உயர

மாகவும் மெலிந்தும் இருந்தான். உறுதியான முக வாய்க்கட்டை; நேரான மூக்கு. பின்புறத்தில் சுத்த மாக க்ஷவரம் செய்யப்பட்ட மயிர்க்கோடு இருந்தது. இதைப்பற்றி அவனுக்குத் திருப்தி உண்டாகவில்லை. எதிலும் சுலபமாகத் திருப்தி அடையாதவர்கள் ஆங்கிலேயர்கள்! அவனுடைய தந்தை: காப்டன் டொனல்ட் தாயெர். இந்தியப் படையில் முன்னர் பணி புரிந்தவர். அவன் தாயார் பெல்ஜீய நாட்டுக் காரி. ஐரோப்பாக் கண்டத்தில் கல்வி கற்ற தன்மை யினாலும் கலைமாணுக்கன் என்னும் முறைமையி னாலும் அவனுடைய வெளித்தோற்றத்தில் சிறிதளவு மமதை நிழலாடியது. கொழுத்த எருதுகளைப் போலத் தோன்றிய ஹாங்காங்கிலுள்ள ஆங்கிலேய வியாபாரிகளினின்று அவனுடைய முழுத்தோற்றம் அவனைப் பிரித்துக் காட்டியது. ஆங்கிலேயப் பண் புக்கு அனுசரணையில்லாத வகையில் அவன் ஹாங் காங் வீதிகளிலே அலைந்து திரிந்து சீன உண்டிச்சாலை களில் சாப்பிட்டான். கச்சிதமான பீகிங் உச்சரிப் போடு சுத்தமான மண்டாரின் மொழி பேசி, உட் நாட்டு மொழியான காண்டனீஸையும் மண்டாரின் மொழியையும் பேசிவந்த கடைகாரர்களை வியப் படைய செய்து மகிழ்ச்சி கொண்டான்.

"அந்த மனிதன் வீட்டுக்குரிய கருவிகளும் தூசு களைத் துடைக்கும் இயந்திரங்களும் விற்கும் ஒரு கடை வைத்திருக்கிறானே! நாங்கள் அவனை வெளி யேற்ற முடியாது!" என்று சக ஆங்கிலேய வியாபாரக் கூட்டாளிகள் சிலர் சொல்லிவிட் டார்கள்.

அவன் விருப்பம் அவனுக்குத்தானே தெரியும்! காப்டன் தாயெர் ஓய்வு பெற்ற பிறகு ஸஸெக்ஸில் வீடுவாங்கிக்கொண்டு வசித்தார் அப்போதுதான் ஜேம்ஸின் அன்னை இறந்தாள். அப்போது அவனுக்கு வயசு ஆறு. லண்டனில் கடை வைத்திருந்த பெண் ஒருத்தியை காப்டன் மறுமணம் செய்துகொண்டார், அப்போது ஜேம்ஸ் சிறுவன். எப்போதும் தன்னந் தனியாகவே இருந்து வந்தான். தந்தையால் மகனை முற்றிலும் புரிந்துகொள்ள முடியவில்லை. பையன் படிப்பதில் தீவிர ஆர்வம் கொண்டான். அவன் குடும்பம் கிழக்கிந்திய நாடுகளுடன் எப்போதுமே நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருந்தது. அவனுடைய பாட்டனரான பூஜ்யர் ரோடரிக் தாயெர் அலகாபாத்தில் மதப் பிரசாரகராகப் பணி செய்தார். அப்போது. பிரம்மம்தான் கிறிஸ்தவக் கடவுள் என்றும், கிறிஸ்தவக் கடவுளே பிரம்மம் என்றும் வற்புறுத்திச் சொல்லிவிட்டு அங்கேயே மாண்டு போனார். அவர்களுடைய ஸாஸெக்ஸ் வீட்டில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருந்த யானைக் குளம்பிலிருந்து குடை வைப்பதற்குத் தகுந்தபடி அடிப்பீடம் ஒன்று செய்யப்பட்டிருந்தது. இது ஜேம்ஸின் கற்பனா சக்தியைத் தூண்டிவிட்டது. சீனாவிலிருந்த அத்தை ஆங்கெலிகாவிடமிருந்து வந்த குடும்பக் கடிதங்களை அவனும் வாசித்தான். அவனுடைய தாத்தாவின் கைப்பட இருந்த சில பழங் கடுதாசிகளைக் கண்டு மயங்கினான்.

அவனுக்குப் பதினெட்டு வயசு ஆனபோது, இரண்டாம் உலக யுத்தம் முடிந்துவிட்டது. அப்

போது ஆக்ஸ்ஃபோர்டில் இருந்த அவனுடைய சமகால இளைஞரிடையே இருந்த ஆத்திரமும், மனப் போக்கும் அவனிடம் இல்லை. அந்த இளைஞர்களுடன் அவனுக்கு நெருக்கம் ஏற்படவில்லை. மூன்று வருஷங்கள் கழித்து ஆக்ஸ்ஃபோர்டில் இருக்கையில், ஏதோ ஓர் எழுச்சி அவனுள் எழுந்தது. கலை பயில அவன் ஃப்ளாரென்ஸ் சென்றான்; கலையிலேயே மூழ்கினான். ஓராண்டுக்கு மேலாக அங்கே தங்கினான். விடுமுறையையும் அங்கேயே கழித்தான். அப்போது பண்டைய எட்ரூரியக் கலையில் நாட்டம் பிறந்தது.

இளைஞன் தாயெரின் வாழ்வு கிழக்கத்திய நாடுகளோடு பிணைப்புண்டுவிட்டது. அது தவிர்க்க முடியாகதாகவும் இருந்தது, பீகிங்கில் அவனுடைய கலையார்வத்துக்கு விருந்து கிடைத்தது. அன்றாட வாழ்வின் பொழுதை ஓர் இன்பமாகச் செய்யவல்ல கட்டிடக்கலை, சிற்பம், பாமரமக்களின் வழிமுறைகள் ஆகியவற்றின் மூலம் இங்கு மேன்மையான வாழும் கலையை அவன் கண்டான். நிலவில் ஒளிர்ந்த 'வானுலக ஆலயமும்' சூரியாஸ்தமனத்தின்போது பீகிங்கின் பழங்கால மதங்களின் காம்பீர்யமும் அவனது கலையுள்ளத்துக்கு மகிழ்வு தந்தன. அவனுடைய மன ஆர்வத்திற்கு ஏற்ப கோயில் சந்தைகள் கடை வீதிகள், தெரு ஜனங்கள் போன்ற சூழலிலிருந்து பிரதேசமொழி வேறுபாட்டை எளிதில் கற்றுக்கொண்டான்.

தன்னுடைய சீனத்துக் காதலியான ஈஸுவை கள்ளத்தனமாக ரகசியப் பாதை மூலம் கடத்திச்

செல்லவே அவன் வந்திருந்தான். முந்திய இரவில் இவ்வுண்மையை தன் அத்தையிடம் சொல்லி, தான் வந்ததும் வராததுமாக அவளை அவன் விரும்பவில்லை. ஆகவே இப்போது காலையில் அவ்ளிடம் அவன் சொல்லியாக வேண்டும்!

பீகிங்கில் அவன் வசித்த நாட்களிலே ஈஸ-ஈவைச் சந்தித்தான். அப்போது அவன் நடத்திய ஐரோப் பியக் கலை வகுப்பின் மாணவி அவள். வயது பதினெட்டு. தொடக்கத்தில் எப்போது பார்த் தாலும் ஏனோ அவள் கேலியாகச் சிரித்துக் கொண்டே யிருந்தாள். ஆனால், அவனது பேச்சைக் கவனிப்பதில் அவள் விழிகள் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தன. அவளுக்குப் புரிந்ததோ, என்னவோ? பின்னர் அவள் கேலிச்சிரிப்பை நிறுத்தி விட்டாள். மூன்றாவது வரிசையில் ஜன்னலுக்கு அருகில் அமர்ந்து அவள் பேசும்பொழுது அவனையே கூர்ந்து கவனித்தவண்ணம் இருப்பாள். கறுப்புநிற மேலங்கியும், கையால் பின்னிய சிவப்புநிறக் கழுத் துச் சால்வையும் தரித்திருந்தாள் அவள்.

ஜேம்ஸ் தாயெர் ஒரு சிறந்த விரிவுரையாளர். அவனுடைய பாடத்தைப்பற்றி அவனுக்குச் சிறந்த ஞானம் இருந்தது. கலையின் வடிவங்கள் பற்றி அவன் சொல்லவில்லை, 'மான்ட்ஸான்-மைகேல் எட்சார்ட்ரெஸ்'ஸில் வரும் ஹென்ரி ஆடம்ஸ்மாதிரி காதல், அச்சம், போராட்டம், யுத்தம், மதப்பூசனை போன்ற பொதுவான மானிட உணர்ச்சிகளில் கலா ரூபமான சக்தியின் மூலகாரணங்களைப்பற்றி அவன் அறிவுறுத்தினான். அதே சமயத்தில், மனிதர்க

ளிடையே இருக்கும் ஆசை, நம்பிக்கை, ஏமாற்றம், நிராசை முதலிய புரியாத—புரிந்துகொள்ள முடியாத சக்திகளைப்பற்றியும் அவன் பேசினான்.

சில வேளைகளில் ஈஸுவின் விழிகள் தளும்பின. அவன் சொன்னதை அவள் கிரகித்துக்கொண்டாள்!

வகுப்பறைக்கு வெளியே ஈஸு சந்தோஷமாக வும் சிரிப்பு மயமாகவும் இருக்கக்கண்டான் அவன். கவர்ச்சி கனிந்த தன்னுடைய தோற்றத்தைப் பற்றிப் பிரக்ஞை இல்லாதவன்போலவும் அவன் தோன்றினான், நீண்ட வட்ட முகம். மற்ற சீனப் பெண்களைப் போன்று அவள் தோல் நிறம் அவ் வளவு அழகாக இல்லை. தன்னை அலங்காரம் செய்து கொள்வதிலும் அவள் அதிக ஈடுபாடு காட்டவில்லை. புருவங்களைப் பிடுங்கிவிடவில்லை. ஆனாலும், அவ ளது கண்களும் அழகாக அமைந்த உதடுகளும் அவற் றின் இயல்பான மகிழ்ச்சியால் மலர்ந்து அவனை அடிமைப்படுத்தின. ஆங்கிலேய பெண்களைப்போல அவள் சிறிய உருவத்துடன் காணப்பட்டாள். பூரண மான உருவ அமைப்புடன் கீழை நாட்டுக் கவர்ச்சி யும் அவளிடம் சேர்ந்திருந்தது. இவை அவனைத் திருப்திப்படுத்தின. அழகு மிகுந்த மற்றப் பெண் களிடம் காண முடியாத மன ஒற்றுமையின் ஆழத்தை அவளுடைய கறுப்பு நிறத் தோற்றத்தி லும், அவளது அழகிய கண்களிலும் கண்டான் அவன். அவள் தூய்மையுடன் ஒளிர்ந்தாள். மக்க ளிடம் அவளுக்கு இயற்கையாக-மனமார்ந்த அன்பு இருந்தது. வாழ்வின் அம்சங்கள் யாவும் அவனை ஆனந்தப்படுத்தின.

அவர்கள் இருவரது நட்பும் வளர்ந்து வேரூன்றியது. இரண்டு மாதத்திற்குள் அவன் அவளை மனமாரக் காதலித்தான். கீழ்த்திசை நாடுகளில் தனக்கிருந்த நாட்டம் அவளைக் கண்டதும் எதிர்பாராத விதமாகப் பூர்த்தியடைந்து விட்டதுபோலவும், அத்துடன் தன்னுடைய கலையின் லட்சியம் அவள் உருவில் தோன்றி உயிர் வாழ்வதாகவும் ஜேம்ஸ் கண்டான்.

ஒரு சமயம், அவர்கள் இருவரும் ஹைடனைச் சுற்றிலும் உல்லாசப் பயணம் சென்றார்கள். அப்போது அவளைப் பார்த்து, "நீ ஒரு டம்டம் ஆக இருக்கிறாய்!" என்று கூறினான்.

"டம்டம் என்றால் என்ன?" என்று கேட்டாள் அவள்.

ஜேம்ஸ் தாயெர் விளக்கம் செய்தான். அவன் தன் சொந்தப் பதங்களைக் கண்டுபிடித்து வைத்திருந்தான். அவற்றை அவன் பாடம் நடத்தும்போது. உபயோகப்படுத்தமாட்டான். ஏனென்றால், அவற்றையாருமே புரிந்துகொள்ள முடியாது. ஒரு பையனின் ரகசியமான பாஷையைப் போலவோ, அல்லது அந்தரங்கமான டைரிக்கென உபயோகப்படுத்தப் பட்டதைப் போலவோ அது இருந்தது. விண் முட்டத் தூக்கிச் செல்லவல்ல ஒரு மனிதனின்-அவனது ஆசைகள், நம்பிக்கைகளின் அதீதமான மனோ சக்திக்குப் பெயர்தான் 'டம்-டம்' என்பது! இதற்கு நேரிடையாக உள்ள சக்திக்கு 'பெலெவி' என்று பெயர். இச்சக்தியானது அவனை அடிக்கடி கீழ் நோக்கி இழுத்துப் பூமியுடனேயே வைத்துக்

கொண்டுவிடும்! மனிதனிடம் வெற்றி கொள்ளச் செய்யும் சக்தியும் சில வேளைகளில் அழித்துவிடச் செய்யும் சக்தியும் சேர்ந்திருந்தன. மானுட வாழ்க்கையின் அவலமும் அச்சமும் அக்கலப்பில்தான் அமைந்துள்ள நன்மைக்கும் தீமைக்கும் இடைப் பட்ட போட்டியல்ல அதுவென்றும் விளக்கினான். 'டம்டம்' என்பது நன்மை செய்ய வேண்டுமென்ற தூண்டுதல் அல்ல; 'பெலெவி' என்பது தீமை செய்ய வேண்டுமென்பதல்ல!....இத்தகைய மனித சக்திகளை 'உருவாக்கும் சக்தி' எனவும், 'அழிக்கும் சக்தி' எனவும் குறிப்பிட்டான். 'பெலெவி'யானது மனிதனை விழாமல் தடுத்து நிறுத்தத் தேவைப்பட்டது. 'உருவாக்கும் சக்தி'யானது அவன் வெறுத்த சமூக விஞ்ஞானங்களை நினைவூட்டியது. இவ்விரு சக்திகளுமே மனிதனுக்குத் தேவையாயின; அதுதான் மிகவும் துர்ப்பாக்கியம். அவ்விரு சக்திகளின் ஐக்கியத்தையும் அவை ஒன்றையொன்று வென்று உயரும் போராட்டத்தையும் கருதி அதை மனோசக்தியின் சமநிலை என்றும் சொல்வார்கள். 'டம்டம்' சக்தி பூரணமாக அழுத்தப்பட்டு, 'பெலவி' சக்தி பிரதானமாக நிலவுகிற மனிதர்களும் அநேகர் இருந்தார்கள். இவர்களுக்கு அவன் 'ஓபூடஸ்' என்று பெயரிட்டான். மனோபலத்தின் உயர் வாழ்வுக்கு 'ஓபூடஸ்' வேண்டியிருக்கவில்லை; அதனால் ஒரு பிரயோசனமும் இல்லை. மனிதர்களின் வாழ்க்கைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்த சக்திகள் இவைதாம்!

"பெரும்பாலான மனிதர்கள் ஓபூடஸ் ரகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்!" அவர்

கள் கல்யாணம் செய்து கொண்டு, பிள்ளை குட்டிகள் பெற்றெடுத்து, கடைசியில் இறக்கிறார்கள்!" என்றான் அவன்.

"இந்த வார்த்தைகளையெல்லாம் எங்கிருந்து பொறுக்கி எடுத்தீர்கள்?" என்று வினவினாள் ஈஸா.

"எனக்குத் தெரியாது. அவை என் மூளையில் வந்து குதித்தன. 'ஒபுட்டு' என்று ஒரு சொல் எங்காவது புழங்குகிறதா என்ன?"

ஈஸாவுக்கு தமாஷாக இருந்தது, அது காதலர்களின் அந்தரங்க மொழியாக சீக்கிரம் ஆனது. பீகிங்குக்கு வெளியே இருந்த மிங் சமாதிகளுக்கு அவர்கள் ஜோடியாக உல்லாசப் பயணம் செல்லத் திட்டமிட்டபோது, கொஞ்சம் பணம் தட்டுப்பட்டது, உடனே ஈஸா "டம்டம்!" என்று உச்சரித்தாள்.

"ஆமாம், டம்டம்....!" என்று அவனும் பதிலளித்தான்,

பிறகு இருவருமே சேர்ந்து சிரித்துக் கொண்டார்கள்.

1949-ல் கம்யூனிஸ்டுகள் பீகிங்குக்கு வந்து ஒரு வருஷத்திற்கு மேலாகத் தங்கினதைக் கண்டதும். சீனாவைவிட்டு சீக்கிரத்திலேயே வெளிக் கிளம்பிவிட வேண்டுமென்பதை அவன் உணர முடிந்தது. ஈஸாவைச் சந்திக்காமலே அவன் புறப்பட வேண்டி ஏற்பட்டது. ஈஸா அப்போது கல்லூரியில் மூன்றும் வருஷம் வாசித்தாள், கொரியா யுத்தத்தில் பங்கு பெறும் தொண்டர்களின் பட்டியலில் அவளும்

சேர்த்துக்கொள்ளப்பட்டாள். ஒரு மனிதனைப்பற்றிச் சொல்லுகையில் அவன் கட்டாயத்தின்பேரில் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டான் என்பார்கள். இது அப்படியன்று. ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமானால், அவள் தன்னிச்சைப்படியே படையில் சேர்ந்தாள் என்று குறிப்பதே பொருத்தமானது. கொரியாப் போரில் பங்கு பெறும் தொண்டர்களுடன் அவளும் புறப்பட்டாள்.

ஜேம்ஸ் தாயோர் அங்கிருந்து கிளம்ப வேண்டியவன் ஆனான். திரும்பிவர முடியுமென்றே உள்ளூர நம்பினான். பல வருஷங்கள் கழித்து, அவனது அத்தை ஸிஸ்டர் ஆங்செலிகா மூலம் அவள் தொடர்பு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. ஹாங்காங்கில் தங்குவதற்கென்று ஒரு சடை வைத்தான். ('பெலெவி' சொல்கையை அங்கீகரித்தான்) ஈஸாவை-அவனுடைய 'டம்டம்'மை மீண்டும் சந்திக்க முடியுமென்ற நம்பிக்கையை அவன் ஒருபோதும் இழந்துவிடவில்லை, ஹாங்காங்கில் தனக்கு நிச்சயிக்கப்பட்ட சீனக் கணவனைத் திருமணம் செய்து கொள்வதென்ற சாக்கில் அங்கிருந்து வெளியேறியேறிவிடுவதென்று அதற்கான அனுமதிச் சீட்டுக்காக ஈஸா விண்ணப்பம் செய்திருந்தாள். ஏற்கெனவே மூன்று வருஷங்கள் அவர்கள் காத்திருந்தனர், வெளியேறுவதற்கான அனுமதி ஒருபோதும் வராதென்றே தோன்றிற்று. இனிமேலும் காத்துக்கொண்டிருக்க அவனால் முடியாது; அங்கிருந்து, ஹாங்காங்குக்கு அவளைத் தப்பியோடச் செய்ய உதவி புரிவதென்று அவன் தீர்மானித்தான்!

விளையாட்டு மைதானத்திலிருந்த பையன்களைக் கவனித்தவாறு இருந்த ஜேம்ஸுக்குப் பின்புறம் வந்து நின்றாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா.

தன்னுடைய வருகையின் முகாந்தரத்தை அவளிடம் சொல்லிவிட விரும்பினான் அவன். நல்ல நேரத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று காத்திருந்தான்,

பதினொரு வயசுக்கும் பதினாறு வயசுக்கும் இடைப்பட்ட பையன்கள் அனைவரும் நீலநிற வாலிபர் சங்க உடுப்புக்களுடன் திகழ்ந்தார்கள். ஜேம்ஸ் உற்சாகப்படுத்தப் பட்டிருந்தான். பீகிங்கில் இம் மாதிரியான பிரத்தியேக உடைகளை அவன் பார்த்திருந்தான். ஆனால் காலைச் சூரிய வெளிச்சத்தில் பிரகாசமாக ஒளிவீசிய பையன்களின் முகங்கள் அவன் கவனத்தை ஈர்த்தன. செய்தியைக் கேட்கும்படி அவர்கள் அழைக்கப்படுவதற்கு முன் பயிற்சிக் குப்பின் இருந்த இடைவேளையில் எல்லாப் பிள்ளைகளைப்போல அவர்கள் ஒருவரையொருவர் ஓடிப் பிடித்துக்கொண்டும் ஒருவர் மீது மற்றவர் அடித்துக் கொண்டும் இருந்தனர். தலைவனின் உருவம் அவனைக் கவர்ந்தது. அவன் தன் உடுப்புக்களில் நாகரிகமாகவும் கம்பீரமாகவும் காணப்பட்டான். அற்புதமான வசீகரத்துடன் சுறுசுறுப்பாக அவன் நடந்து சென்றான்.

அரசியல் செய்திகளில் சிறுவர்கள் அக்கறை காட்டவில்லை. அரசியல் புத்திமதி-எச்சரிக்கைகளில் அவர்களது கவனம் இன்னும் குறைவாகவே இருந்தது. பிரதி தினமும் காலை வேளையில் டெங்பிங்கின்

குரலை அவர்கள் கேட்டார்கள். கேள்விகள் கேட்ட வண்ணம் ஆடம்பரமான சத்தத்தோடு கடுமையாக மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கும் நடையுடன் குரலை உயர்த்தி நம்பிக்கையிழந்த தன்மையில் பேசினான். இது அவனுக்கு வழக்கமானது.

"இப்போது நீங்கள் உங்களது வேலைக்குத் திரும்புங்கள். உரத்துக்குப் பொறுப்புக் கொண்ட இராணுவப் பகுதிகள் நகரத்தின் உள்ளேயும் வெளியேயும் நியமிக்கப்பட்ட பிரதேசங்களில் வேலையைத் தொடங்கும். மகளிர் இராணுவக் குழுக்கள் வழக்கம்போல கூடிப் பணிகளைத் தொடருவார்கள், எல்லாவிதமான இயற்கை உரங்கள் 'பொதுவுடைமைப் புனர் நிர்மாண விநியோகக் கிடங்குக்குக் கொண்டுவரப்பட வேண்டும். பையன்கள் பள்ளிக்குச் செல்லும்போதும் இவ்வகையில் கடமை புரிய வேண்டும். ஒரு உறுதிப்பாடுடன் அவர்கள் செய்வார்களாக! இது உர வருஷம்! சுற்றிலும் இன்னும் ஏராளமான பன்றி-கோழிக் குஞ்சுகளின் கழிவுப் பொருள்கள் கிடக்கின்றன. 'பொதுவுடைமைப் புனர் நிர்மாணத்துக்கும்' பெரும் பாய்ச்சல் முன்னேற்றத்துக்கும் அவை நமக்கு அவசியப்படுகின்றன. இரவில் சேரும் அழுக்குகளையும் அசுத்தங்களையும் நஷ்டப்படுத்தாமல் சேகரிக்க மறந்துவிடாதீர்கள்! பெரும் பாய்ச்சல் முன்னேற்றத்தை உருவாக்குங்கள்! தலைவர் மா நீடூழி வாழ்வாராக!...."

டெங்பிங் பேசி முடித்தான்.

பையன்களின் தலைவன் ஊதுகுழலை ஊதினான். பையன்கள் தங்களுடைய கூடைகள், கைப்பைகள்

முதலியவற்றை எடுத்துக்கொண்டு திரும்பி வரிசைப் படி நின்று பீடுநடை போட்டு நடந்து சென் ருர்கள்.

ஜேம்ஸ் தனக்குப் பின்பிறம் நின்றுகொண் டிருந்த அத்தை ஆங்கெலிகாவிடம், "அந்தச் சிறுவர் தலைவனைப் பாருங்கள். அவன் அதை மிகவும் அனு பவித்துக் கொண்டிருக்கிருன் என்று நான் அடித்துச் சொல்லுவேன்" என்று சொன்ஞன்.

"நான் அவர்களைத் தினமும் பார்த்துக் கொண் டிருக்கிறேன். பையன்கள் என்ருல் பையன்தான்! ஏதாகிலும் வேலை கொடுத்து சுறுசுறுப்பாக வைத் திருப்பது சிலாக்கியம்தான். ஆனுல் அவன் இருக்கிருனே அவன் ஒரு கொள்ளி! எனக்கு நிச்சய மாகத் தெரியும். அந்த அசாய் என்பவன்தான் சென்ற வாரம் என்னுடைய கோழிக்குஞ்சுகளைத் திருடியவன்!....என்ருள் சகோதரி ஆங்கெலிகா.

"அசாய் என்ருல்....?

"அது அவன் பெயர்."

"அவனை உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட் டான் ஜேம்ஸ் தாஸர்.

"ஆம்; அவனை ஒவ்வொருவருக்கும் தெரியும். அவனுக்கு வயசு பதினுலு. நிலச் சுவான்தார்களான அவனது பெற்ருேர்கள் கொல்லப்பட்டபொழுது, அவன் அனுதையாக விடப்பட்டான். அவனை இப் போது வாலிபர் கூட்டுறவுச் சங்கத் தலைவனுக ஆக்கி விட்டார்கள்!...."

"நல்ல மனிதனை யாரும் கெடுக்க முடியாது. அப்படித்தானே?

"ஊஹூம், அப்படியல்ல!" என்று சொல்லி உள்ளார்ந்த மென்மையான நகைப்புடன் தொடர்ந்தாள். "அந்தப் பையன், மற்றப் பையன்களையெல்லாம் அதிகாரம் செய்துகொண்டு, ஒரு குட்டிச் சைத்தானாகவே இருக்கிறான். பொதுவுடைமைப் புனர் நிர்மாணக் கிட்டங்கிக்கு அருகில் வீதியைச் சுற்றி விளையாடுகிறான்; திரும்பி வரவேண்டிய உரப்பகுதி இராணுவக் குழுவை எதிர்பார்க்கிறான். கூடையில் துர்நாற்றம் மிகுந்த உரங்களைச் சுமந்தவாறு திரும்பி வரும் பையனைப் பார்த்தால், உடனே தன்னுடைய கூடையை நோக்கித் தன் ஆள்காட்டி விரலை அசைத்துக்காட்டி, "இங்கே போடு!" என்று அதிகாரம் பண்ணுகிறான். மற்றப் பிள்ளைகளும் அமைதியுடன் அவன் கூடையில் ஆளுக்குக் கொஞ்சம் போடுகிறார்கள். தானே தன் சொந்த முயற்சியின்பேரில் எல்லாவற்றையும் சேகரம் செய்த மாதிரி பாவனை செய்து உள்ளே சமர்ப்பிக்கிறான்!"

ஜேம்ஸ் ஆச்சரியமடைந்தான். "உங்களுக்கு இவையெல்லாம் எப்படித் தெரிந்தது?" என்று விசாரித்தான்.

"ஈஸூ சொன்னாள்: அவளுடைய சின்ன மருமகனை முட்டி ஸ்ப்ரௌட், ஆசாயின் துணைத் தலைவன் மாதிரி எப்போது பார்த்தாலும் அவனைச் சுற்றியே வளைய வளைய வருகிறானும்! இளைய ஸ்ப்ரௌட்டுக்கு வயசு பத்தோ,பதினொன்றோதான். அந்தச் சின்னஞ் சிறு பையன் ஆசாயைத் போன்றே ஆகிவிடுவானோ என்று ஈஸூவுக்கு வருத்தம். நகரத்தில் உள்ள ஒவ்வொரு நபரையும் அவன் பயமுறுத்தி அடக்குகிறான்!"

"அவனைப்பற்றி ஜனங்கள் இப்படி ஏன் பயப்படுகிறார்கள்?"

" 'கட்சி' அவனைப் பயன்படுத்துகின்றது. அதனால் ஜனங்கள் அவனைக் கண்டு அஞ்சுகிறார்கள். தன்னைத் தவிர, மீதியுள்ள ஒவ்வொருவரையும் அவன் வெறுப்பதாகத் தோன்றுகிறது. கடந்த கோடையில் அதிர்ச்சி மிகுந்த அறுவடையின் போது அவனுக்கு ஓர் அடையாளச் சீட்டு வழங்கப்பட்டது. அவன் உள்ளே சுமுகமாகயிருந்தால், வெளியில் மிகவும் சுமுகமாக இருக்கிறான்; மனத்தில் அன்பின்றி இருந்தால், வெளியிலும் அன்பில்லாமல் மிகவும் கெட்டவனாக இருக்கிறான். உறைக்கும் வெயிலில் வயது சென்ற நோயாளி உழவர்கள் மயங்கி விழுந்து விட்டால், அவர்களைச் தூக்கிச் செல்ல பயிற்சிக் குழுவினரை ஏற்பாடு செய்தான். என்றாலும் அவன் மற்றவர்களை ஏமாற்றுகிறான்; பொய் சொல்லுகிறான்!"

உண்மையிலேயே அவனுக்காகக் கவலைப்பட்டு அவன் பேரில் எரிச்சல் கொண்டதன் அடையாளக் குறிப்பு ஸிஸ்டர் ஆங்செலிகாவின் குரலில் தொனித்தது. அவள் பேச்சு அவ்வாறு இருந்தாலும். அவளுக்கு ஆசாயிடம் ஓர் அன்பு இருந்ததை ஜேம்ஸ் கண்டுபிடித்தான். அவள் இயல்பு அது. திறமையும், உலகானுபவமும் மிகுந்த ஒரு கன்னிமடத் தலைவியை அவள் எந்நாளும் உருவாக்கமாட்டாள். அவள் குரல் தெளிவாக இருந்தது. ஆனால் இறக்கப் பண்புடனும் திகிலுணர்வுடனும் ஒலித்தது. ஏறத்தாழ ஐம்பது வயதாகிவிட்டது. இன்னமும் அவ

ளிடம் சிறிதளவு கூச்சம் இருந்தது. அவள் நடப்புக் களை அடிக்கடி மறந்தாள்: மற்றவர்களை அதிகமாக மன்னிக்கும் மனச்சார்புடையவளாகவும் இருந்தாள். அவளுக்குத் தலைமைத் தாதிப் பதவி அளிக்க ஆஸ் பத்திரி முன் வந்தது; அவள் மறுத்துவிட்டாள். சுயேச்சையாக இருந்து கடமை செய்வதில் அவள் திருப்தியடைந்தாள். சட்டதிட்டங்களையெல்லாம் அவள் நினைவிற் கொள்வதில்லை.

ஜன்னல் புறத்தினின்றும் அவர்கள் நடந்தார்கள். அத்தையின் தோள்களைப் பற்றியவனாக மேஜையை நோக்கி அவளை அழைத்துச் சென்றான் ஜேம்ஸ். பிரயாணத்தின் போது ரெயிலில் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் முகம் ரோஜா வண்ணத்தில் சிவந்திருந்தது.

"அத்தை, ஈஸ்தரைப் பற்றி—இதாவது, ஈஸு வைப்பற்றி விவரமாக எனக்குச் சொல்லுங்கள். அவள் எப்படி இருக்கிறாள்? ஸ்டேஷனுக்கு வந்து அவள் என்னை ஏன் சந்திக்கவில்லை?"

ஈஸு என்பது ஈஸ்தர் என்னும் சீன மொழியின் மொழி பெயர்ப்புச் சுருக்கம்; கிறிஸ்தவ வேதச் சார்புகொண்ட பெயர்; கத்தோலிக்க மதப்பிரசார சபையைச் சேர்ந்த பள்ளிக்கூடத்தில் சூட்டப் பட்டது.

"ஜேம்ஸ், விவேகத்துடன் நடந்துகொள். இது கம்யூனிஸ்ட் சீனு! அவள் ஏகாதிபத்தியக் கொள்கை யுடைய உன்னுடன் குலவி உனக்கு முத்தமிடுவது தெரிந்தால், அது அவளுக்கு நன்மை பயக்காது!"

"ஏன் அப்படி? அவள் என்னுடைய காதலி எனக்காக நிர்ணயிக்கப்பட்ட துணைவியல்லவா?"

"உண்மைதான் ஆனல் என் எச்சரிக்கைக்குரிய காரணத்தை நீ அறிவாய்!"

"சரி; அவளை நான் எப்போது பார்க்கமுடியும்?"

அவள் தன்மட்டில் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டியவள். ஒருவேளை. இன்றிரவு பார்க்கக்கூடும்!"

"இப்பொழுதே அவளைப் பார்க்க நான் ஓடிப் போகட்டுமா?"

"ஊஹூம், கூடாது, உன்னை இப்போது கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள்—நினைவிருக்கட்டும்! அவளுடன் நீ பழகக்கூடாது. நீ ஆசைப் படாதே!"

"அவளைச் சந்திக்காமல் என்னல் இருக்க முடியாது. அவளுக்கு நான் டெலிபோன் பண்ணலாமா?"

"அவள் வீட்டில் தொலைபேசி இல்லை, அவள் ஆஸ்பத்திரிக்கு வழக்கமாக எட்டேகால்மணி அளவில் வருகிறாள்" என்று சொல்லி சுவர்க் கடிகாரத்தை நோக்கினாள் அத்தை. அப்போது பத்துமணிக்கு மேலாகிவிட்டது.

"நான் ஆஸ்பத்திரிக்குப் போய், அவள் அங்கு வந்ததும் என்னை அழைக்கும்படி செய்தி சொல்லுகிறேன். நான் பேசுவதற்குத் தீங்கில்லாமல், பத்திரமாகவும் இருக்கும். எப்படியும் சைனவை விட்டு நான் போகப் போகிறேன்!"

சுவரில் பொருத்தப்பட்டிருந்த தொலைபேசியிடம் செல்ல எழுந்தபோது, ஸிஸ்டர் ஆங்கெலிகாவின் நீல விழிகள் ஒளிவீசின.

அதே சமயம் தொலைபேசியின் மணி ஒலித்தது. ஜேம்ஸ் ஆசனத்தை விட்டு எழுந்து ஒரே பாய்ச்சலாக முன்பக்கம் பாய்ந்தான். தொலைபேசிக் கருவியை அத்தை எடுக்கும் வரை பெருமூச்சுடன் காத்திருந்தான்.

"ஆமாம்....ஈஸா...." என்றாள் சகோதரி ஆங்கெலிகா. அவள் வாய் வார்த்தைகளை முடிக்கவில்லை. அதற்குள் அவள் கையிலிருந்து தொலைபேசியைப் பறித்துக்கொண்டான் அவன்.

"ஆமாம்....நான்தான்....ஜேம்ஸ். இன்னும் இரண்டொரு தினங்களிலே நான் திரும்பிச் செல்லப் போகிறேன்....டம் டம்!"

அவள், "டம் டம்" என்று பதிலளித்துவிட்டு 'கடகட'வென்று சிரித்தது அவன் செவிகளில் விழுந்தது.

ஜேம்ஸ் மீண்டும் தொடர்ந்தான்: "மீண்டும் உன் குரலைக் கேட்க இன்பமாக இருக்கிறது....இல்லை, எனக்கு இப்போது பயமே இல்லை. என் அத்தையை அழைத்துப்போக வந்தேன். இன்னும் சில நாட்களில் நாங்கள் இங்கிருந்து கிளம்பிவிடுவோம். ஒரு வேளை....ஒருவேளை....!"

மூன்றும் பேர்வழி யாராகிலும் கேட்டுக்கொண்டிருப்பார்களோ என்று பயந்து, தொலைபேசியை இருந்த இடத்தில் தொங்கவிட்டான் ஜேம்ஸ்.

"அப்படிப்பட்டவர்களை யெல்லாம் நான் ஏமாற்றிவிட்டேன். உங்களைச் சந்தித்து விடை கொடுத்தனுப்புவதற்கென்று இன்றைக்கு அவள் நிச்சயமாக வருவதாகத் தெரிவித்தாள். உண்மை யாகச் சொல்கிறேன். இந்தச் சமயத்தில் அவளைப் பார்க்க வேண்டுமென்று நான் துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறேன். அத்தை, தயவு பண்ணுங்கள். அவளிடம் போய்ச் சொல்லுங்கள்!" என்று கெஞ்சி ஞன் ஜேம்ஸ்.

தன்னுடைய உடன் பிறந்தார் மகனைக் கபட மாகப் பார்த்தாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா. நாற்காலி யில் பின்புறம் தள்ளி அமர்ந்தபடி, "இன்று நான் ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டியதில்லை; ஞாபக மிருக்கட்டும்" என்று குத்தலாக சொன்ஞள்.

"தயவு காட்டுங்கள், அத்தை. அவள் மனம் மாறிவிட்டாளா, என்ன?" என்று கேட்டான் அவன்.

"அதை நீயே உணர்வாய்!" என்ருள் ஆங் கேலிகா. அவள் குரலில் ஒரு நடுக்கம் இருந்தது; பின் அவன் முகத்தில் தோன்றிய புன்னகையில் கருத்து நிழலாடியது.

அவள் சிறு பெண்ணுக இருந்தபோது நிகழ்ந்த காதல் விஷயம் அவளுடைய அந்த அமைதி பூத்த முகத்தின் பின்னே மறைந்து கிடந்தது!...." நீயே உணர்ந்து, நீயே கண்டுபிடித்துக் கொள்வாய்!" என்று தொடர்ந்தாள். பின்னர், திடீரென்று, "ஆஹா! எத்துணை விசித்திரமானது!...." என வாய் விட்டுக் கூறிஞள்; ரத்தம் முகத்திற்குப் பாய்ந்தது. பரவசப்படுத்தும் காதல் கதை ஒன்றைப் பூர்த்தி

செய்த பெண்ணினுடையதைப் போன்றிருந்தது அக் குரலின் தன்மை.

மேஜைமீதிருந்த அவன் கையை அவள் மெள்ளப் பற்றிக்கொண்டு, "பேராசிரியர் தாயெராகிய உன் நிமித்தம் அவளிடம் போய்ச் சொல்லுகிறேன்! ஜேம்ஸ், நீ என்னை ஏமாற்றுதே! உன்னுடைய நோய் பிடித்த அத்தையான என்னை அழைத்துச் செல்ல எனக்குத் துணையாக நீ சைனுவுக்கு வந்திருக்கிருய் என்பதைப் பார்க்கிலும், உன்னுடைய சீன விஜயத்துக்கு வேறொரு சிறந்த காரணமும் இருக்கிறது. அந்தத் துப்பாக்கியை நீ ஏன் கொண்டு வந்தாய்? நான் ரொம்பவும் பயந்துவிட்டேன். சட்டவிரோதமான வியாபாரப் பிரதிநிதியென்று உன்னை அவர்கள் குற்றஞ் சாட்டுவார்களே!"

"தெரிந்துதான், திட்டமிட்ட இந்த அபாயத்தினை நான் மேற்கொண்டேன். மாட்சிமை தங்கிய மகாராணியாரின் ஆட்சிக்கு இவ்விஷயம் எட்டினுல், அவர்களும் தக்க தண்டனை வழங்குவார்கள்." தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு ஆழ்ந்த யோசனையுடன் பேசலானுன்: "அத்தை, இப்போது நான் உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும். நானும் ஈஸுவும் மணம் புரிந்துகொள்வதாக ஒப்பந்தம் செய்துகொண்டிருப்பது உங்களுக்குத் தெரிந்ததே. இவ்வளவு காலமாக நான் காத்திருந்துவிட்டேன். இங்கிருந்து அவளைக் கடத்திச் செல்லத் திட்டமிட்டுக்கொண்டிருக்கிறேன்." பேச்சின் அர்த்தத்தைக் குறையச் செய்ய அவன் ஒரு விளுடி நிறுத்திவிட்டுத் தொடர்ந்தான்:

"இப்பொழுது ஹாங்காங்கில் எனக்கு நிலையான தொழில் இருக்கிறது! அவளுக்கு அருகிலேயே இருக்க வேண்டுமென்றுதான் நான் ஹாங்காங்கில் தங்கினேன். அனுமதிச் சீட்டுக்காக மூன்றாண்டு காலம் காத்திருந்தோம். இம்முறை அவளை நான் அழைத்துச் சென்றுவிடுவேன். அதன் காரணமாகவே நான் துப்பாக்கியையும் கொணர்ந்தேன்."

"அவளை எங்ஙனம் கடத்திச் செல்வது?...."

"எல்லைக்குச் செல்லும் குறுக்கு வழியாக அவளை அழைத்துப் போவேன்!"

ஸிஸ்டர் ஆங்கெலிகாவின் முகத்தில் கவலை தோன்றியது; புருவங்கள் கோபத்தால் நெரிந்தன. "எப்போதும் போலவே, வருங்காலத்தைப்பற்றி ஒரு உறுதிப்பாடு இல்லாமலேயே இருக்கிறாயே!" என்றாள் அவள் தலையை ஆட்டிய வண்ணம்.

ஜேம்ஸின் உதடுகள் வளைந்தன; ரகசியமான புன்சிரிப்பு முகத்தில் மிதந்தது. "இச்செயலில் கஷ்டமின்றி வெற்றி பெற்றுவிடுவேன்!" என்று சந்தோஷமாக ஜாடை செய்தவாறு கூறினான்.

"உன்னால் எப்படி முடியும்? சொல்லேன்!....உன் புத்தி பேதலித்துவிட்டதா, என்ன?"

"இல்லை, இல்லை! உள்ள நிலைமையை நான் பூரணமாகப் புரிந்துகொண்டேன்; வெற்றியடைந்த ஜனங்களுடன் பேசினேன்; எல்லா வழிகளையும் விசாரித்துத் தெரிந்துகொண்டேன். பிரதி மாதமும் நூற்றுக்கணக்கானவர்கள் எல்லையைத் தாண்டி குறுக்கு வழியாக செல்கிறார்கள்!" என்றான் ஜேம்ஸ்.

"நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன்."

"அவர்கள் எல்லோரும் அப்படிச் செய்திருக்கிறார்களே! நான் மாத்திரம் ஏன் அப்படிச் செய்யக் கூடாது? நாம் மாத்திரம் ஏன் அப்படிச் செய்ய லாகாது? இந்தக் கோடையின்போது, ஆயிரக் கணக்கான அகதிகள் மலைகள் வழியாகவும் மாகோ வழியாகவும் தப்பியோடினர். சென்ற பத்து ஆண்டுகளிலே பத்து லட்சம் அகதிகள் எல்லையைக் கடந்து வெளியேறியுள்ளனர் என்பதை நீங்கள் உணர் வீர்கள் அல்லவா?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"அது அபாயகரமான செயல் அல்லவா?" என்று விசாரித்தாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா.

"நிச்சயமாக அபாயம் செறிந்ததுதான். பய மில்லாமல் துணிவுடன் இருக்கும்பொழுது ஜனங்கள் எதையும் செய்வார்கள். தாயொருத்தி தன்னுடைய நான்கு பிள்ளைகளுக்கும் நீந்தக் கற்றுக் கொடுத்தாள். மூத்தவனுக்குப் பதினெட்டு ஆனதும், அவர்களைத் தப்பி ஓடிவிடும்படி சொன்னாள். மூவரை ரோந்துப் படகுக்காரர்கள் சுட்டுவிட்டனர். ஆனால் கடைக் குட்டியான ஒன்பதே ஒன்பது வயசுப் பையன் மட்டும் நீந்தித் தப்பிவிட்டான்!....அவனைப் பார்க்கையில் எனக்கு வெட்கமாயிருக்கிறது!"

"அந்தத் தாயின் கதி?"

"அவள் பின்னால் தங்கிவிட்டாள். அம்மாதிரி யான கதைகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. கம்யூனிஸ்ட்டுகளிடமிருந்து பின்வாங்கிய ஆரம்ப காலத்தில், பெருவாரியான பேர்கள் வந்து தங்கி விட்டனர். இன்றும்கூட, சட்டவிரோதமாகக் குடி புகுந்தோர்கள் நாற்பதிலிருந்து அறுபதுவரை

தினமும் வந்து சேர்ந்து ஹாங்காங்கிலும் மெளலூனி லும் ஐக்கியப்பட்டு விடுகிறார்கள்!"

"அவர்கள் ஏன் தடுத்து நிறுத்தப்படவில்லை?"

"மிர்ஸ்குடாக் கடலுக்கும் டீப்குடாக் கடலுக் கும் நடுவில், கிழக்கே மலைப்பாங்காகவும் மேற்கில் சமமட்டமான நெற்பயிர்களோடும் அமைந்துள்ள பதினேழு மைல் எல்லைக்கோடு ஒன்று உள்ளது. இரு புறத்திலும் சீனாவுக்குரிய பகுதியிலும் பிரிட்டனுக் குரிய பகுதியிலும் ஒரு குறுகலான நீரோடைக்குக் குறுக்கே கூர்மையான கம்பி செல்கிறது. எல்லையின் ஒவ்வொரு கஜ தூரத்தையும் ரோந்தின் மூலம் பாது காப்பதென்பது துர்லபம். சிலர் அகப்பட்டுத் திருப்பி அனுப்பப்படுகிறார்கள்; பழையபடியும் முயற்சி செய் கிறார்கள். ஆனால், வேறு சிலர் எப்போதும் தப்பிவிடு கிறார்கள். மாகோ பகுதியின்ஆற்றில் ஏராளமான பேர்கள் விழுந்து அழிந்து விடுகிறார்கள்!"

ஆங்கெலிகா இப்போது சலனம் அடைந்தாள். "இது மிகவும் பயங்கரமானதாக இருக்கிறதே!.... இதைத்தவிர, வேறு வழி ஏதாகிலும் இருக்கிற தல்லவா?" என்று வினவினாள்.

"அத்தை, நீங்களோ எங்களுடன் வரப்போவது கிடையாது. உங்களுக்கு அனுமதிச் சீட்டு இருக் கிறது; நீங்கள் ரயில் மூலம் போகலாம்" என்று விவரம் சொன்னான் ஜேம்ஸ்.

"உன் விஷயம்?...."

"அது எனக்கே தெரியாது. பார்க்சலாம். மற்றவர்கள் தப்பி வெளியேறிவிட்டால், நானும் ஈஸுவுடன் தப்பிவிடுவேன்!"

"ஆனல் நீ ஒரு வெள்ளையன். நாட்டுப்புறத்தில் சில நூறு கஜ தூரத்திலிருந்தே உன்னை அடையாளம் கண்டுகொள்வார்கள்."

"நாங்கள் கிராமப் பகுதிகள் வழியாகச் செல்ல மாட்டோம். மலைகளில் ஒளிந்து செல்வோம். நீங்கள் கவலைப்படாதீர்கள்."

"அதனல்தான் உன்னுடன் துப்பாக்கியைக் கொண்டு வந்தாய் போலிருக்கிறது!"

"ஆமாம்."

"நீ யாரையாவது கொன்றுவிடுவாயோ?"

"என்னை வழியில் யாராவது நிறுத்திஞல் கொன்று போடுவேன். என்னிடம் துப்பாக்கி இல்லை. துப்பாக்கி என்வசம் இருந்தால்தான் அந்தப் பேச் செல்லாம்."

"நீ செய்யப்போகும் ஒவ்வொரு காரியத்தையும் நன்ருக யோசித்துத் திட்டமிட்டுச் செய்கிருய்; எனவே, நீ ஒன்றைச் செய்ய விரும்பும்போது, உன்னைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது" என்று அவன் கண்களை உற்றுப் பார்த்தபடி ஸிஸ்டர் ஆங்கெலிகா சொன்னுள்.

"உண்மைதான்! அவர்கள் என்னவோ என் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு விட்டார்கள். ஆகையால் நான் பத்திரமாக இருக்கிறேன்."

"ஆனல் நான் அப்படிச் சொல்லமாட்டேன்."

"ஏன்? நான் உங்களோடு கிளம்பும்பொழுது துப்பாக்கியைத் திருப்பிக் கொடுத்துவிடுவதாக அவர்கள் சொன்ஞர்களே!"

"உன் வருகையை நான் சரியாகவே மதிப்பிடு கிறேன். ஆனல், நீ என்னை கௌஹூரன் எல்லையில் சந்திப்பதாக இருந்திருந்தால், நான் இன்னும் அமைதி பெற்றிருப்பேன்," என்ருள் ஆங்கெலிகா.

"அது முடியாது. இந்தப் பயணத்தில் உங்களுக்கு நான் உபயோகமாக இருக்கவேண்டுமென்பது தான், நான் மனப்பூர்வமாக நினைத்தேன்."

"உண்மைதான். அதுதான் உன் சுபாவம். ஆனலும் ஈஸ்தரை நீ பார்க்கவும் ஆசைப்பட்டாய். அதுவும் எனக்குத் தெரியும். நான் இப்போது எவ்வளவு மூப்படைந்ததாகத் தோன்றுகிறேன்?—சொல்!"

"அத்தை, நீங்கள் என் வாயைக் கிளறவேண்டியதில்லை. துளிக்கூட நீங்கள் மூப்படைந்ததாகத் தோன்றவில்லை. கொஞ்சம் மெலிந்திருக்கிறீர்கள்; அவ்வளவுதான். ஆனல் சிறந்த தெய்வீகப் பொலிவுடன் விளங்குகிறீர்கள். நேற்று உங்களைப் பார்த்த போதே நான் இதைக் கண்டுகொண்டேன்."

"அவ்வளவு நன்ருக இருப்பதாக என்னல் உணர முடியவில்லை. நான் மிகவும் சோர்ந்துவிட்டேன். என் நோயை நானே கண்டுபிடித்திருக்கிறேன். அது நாள்பட்ட க்ஷயரோகம்—டி. பி!...." என்று தெரிவித்தாள் அவனுடைய அத்தை.

ஜேம்ஸின் கண்கள் அவளைக் கூர்ந்து நோக்கின. "நோயின் அடையாளங்கள் இம்மட்டில் தெரிந்தவரை நன்மைதான். தகுந்த சிகிச்சையும் போதிய ஓய்வும் கிடைத்தால் நீங்கள் நல்லபடியாகத் தேறி விடுவீர்கள்."

"அதற்கு அவர்கள் என்னை அனுமதித்தால், நான் முன்னேறிவிடுவேன். ஒவ்வொரு தினமும் என்னாலான நன்மையையே செய்கிறேன். இங்கு தங்கினால் நான் ஆனந்தமடைவேன்" சற்று நேரம் அவள் நிறுத்தினாள்; நன்றாக மூச்சுவிட்டாள்.

"அவர்கள் உங்களிடம் சுமுகமாக நடந்துகொள்கிறார்களல்லவா?"

"ஒற்றர் கண்காணிப்புப் போன்ற கெடுபிடி எதுவுமில்லை. அவர்கள் என்னை நன்கு அறிந்து கொண்டார்கள்; உள்ளூர் மக்கள் எல்லோருக்கும் என்னைத் தெரியும். என்னைப்போல மெலிந்த பலவீனமான ஒரு பெண்ணினால் அவர்களுடைய ஆட்சியைப் பயமுறுத்துவதென்பது அசாத்தியம்! நான் இங்கிருந்து புறப்பட்டுவிட வேண்டுமென்று சென்ற மாதம் என்னிடம் அறிவித்தார்கள், தனிப்பட்ட முறையில் அது எனக்கு ஒன்றும் விரோதமானதல்ல என்பதை நான் அறிவேன்" என்றாள் ஆங்கேலிகா.

தலையைச் சாய்த்தபடி, நிதானமாக-ஆனால் ஓரளவு துயரத்துடன் ஸிஸ்டர் ஆங்கெலிகா பேசலானாள்:

"என்னுடைய பணி வீணாகிவிட்டதாக நான் கருதவில்லை. கடந்த இருபத்திரண்டு வருஷங்களாக இதையே என்னுடைய வீடாக ஆக்கிக்கொண்டிருந்தேன். என் சீன நண்பர்கள் எல்லோரிடமிருந்தும் பிரிந்து செல்வதென்பது மிகவும் கஷ்டமான செயலாகும்; அப்பிரிவை என்னால் தாள முடியாது. உதாரணத்திற்கு ஈஸ்தரை-ஈஸுவை எடுத்துக்கொள். குழந்தையிலிருந்தே அவளை எனக்குத் தெரியும்.

அவள் தாய் மூன்று வருஷத்துக்கு முந்தி இறந்து போனாள்; அது சமயம் ஈஸ்தர் வடக்கே இருந்தாள். மரணப்படுக்கையில் அவள் அன்னை என்னிடம் தெரிவித்தது எனக்கு இன்னமும் நினைவில் இருக்கிறது. 'நான் நீண்ட நாள் உயிர்தரிக்கமாட்டேன். நீங்களும் விரைவில் எங்களையெல்லாம் விட்டுப் போய் விடுவீர்கள். ஆனால் நீங்கள் எங்கிருந்தாலும் சரி, ஈஸுவுடன் தொடர்பு வைத்துக்கொள்ள மட்டும் தவறி விடாதீர்கள். ஹாங்காங் செல்ல வேண்டுமென்று அவளுக்கு ஒரு ஆசை. ஒரு நாள் அவள் எப்படியோ வெளியேறிவிடுவாள்!' என்றாள் அவள். இவை தாம் அவள் சொன்ன இறுதி வார்த்தைகள். நான் புறப்பட்டவுடன், ஈஸ்தரின் நிலை என்ன ஆகுமென்று என்னால் யூகிக்க முடியவில்லை, இரண்டு கோடைக்குளுக்கு முன்பு அவளது இரண்டாவது சகோதரன் கொல்லப்பட்டபோது, அவளைத் தன் குடும்பத்தாருடன் சேர்ந்துகொள்ளச் செய்தார்கள். அவன் ஒரு எஞ்சினியர். கிரின் காடுகளிலே வேலை பார்த்தான். சுமை ஏற்றிச் செல்லும் திறந்தது ரயில் வண்டி ஒன்று கவிழ்ந்து அவனைப் பனிக்கட்டியில் நசுக்கி மாய்த்தது. ஆகவே அவளை வீடு செல்ல அனுமதித்தனர். விஞ்ஞானிகளிடமும் எஞ்சினியர்களிடமும் ஆட்சியாளர்கள் சுமுகமாக இருக்கிறார்கள்.''

ஸிஸ்டர் ஆங்கெலிகா மிகவும் சாந்தமாகப் பேசினாள். கம்யூனிஸ்டுகளுக்கு விரோதமாக ஒரு வார்த்தைகூட அவள் சொல்லவில்லை. விஞ்ஞானிகளை அவர்கள் நடத்திய விதம் அவளுக்குத் திருப்தியளித்

தது. அதை உறுதிப்படுத்திய விதத்தில் அவள் பேச்சு இருந்தது. அவள் ஊர்ஜிதம் செய்யாத விஷயங்களில் தீர்ப்பு வழங்கியதாக அவளது முக பாவம் இருந்தது.

பலஹீனமான, மெலிந்த தன் அத்தையை அவன் பெரிதும் போற்றினான். தன் சேவையைத் தொடர்ந்து செய்ய அவள் தங்கியது, மற்றவர்கள் வெளியேறியும்கூட, அவள் புறப்பட மறுத்தது- தான் நல்லதையே செய்ததாகவும், தான் செய்தது சரியே என்றும் உணர்ந்து புறப்பட மறுத்தது போன்ற செய்கைகள் அவனுக்குப் பிடித்திருந்தன. தனிப் பட்டவர்களிடம் தனக்கு இருந்த நம்பிக்கையையும் அவர்களுக்காக தான் அடைந்த கவலையையும் புலப் படுத்தினாள். சீன மக்கள் பின்பற்றத் தொடங்கி யிருந்த புதிய கொள்கை-கோட்பாடுகளுக்கு விரோத மாக அவள் நம்பிக்கை வலுத்தது. அதனால் அவளை வெளியேற்ற துணிந்தனர், அவள் மனக்கசப்பின்றி அதை ஏற்றுக்கொண்டுவிட்டாள் என்பது அவளது அசாத்திய துணிவையே அதாவது தளரா உறுதி யையே குறிக்கிறது.

"அத்தை, எனக்காக ஒரு உதவி செய்வீர்களா? ரொம்பவும் முக்கியமானது. எல்லைப் பகுதியின் வழிகளை நன்றாகத் தெரிந்து வைத்துள்ள வழிகாட்டி கள் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கூலி உண்டு. தொடக்கத்தில் பாதிப்பணமும் எல்லையைத் தாண்டிய பிற்பாடு பாதிப்பணமும் கொடுக்க வேண் டும், இது நிரந்தரமானதொரு வியாபாரமாகவே ரகசியமாய் நடக்கிறது. நீங்கள் நினைப்பது மாதிரி

அத்தனை ஆசை வெறி கொண்ட செயலல்ல! அத்தகைய வழித்துணைகளில் யாரையாவது உங்களுக்குத் தெரியும்பட்சத்தில் என்னிடம் சொல்லுங்கள். அம்மாதிரி, நம்பிக்கைக்குப் பாத்திரமான வழிகாட்டி ஒருவனை ஹாங்-காங்கில் என்னிடம் சிபார்சு செய்தார்கள்;" பேசிக்கொண்டே சட்டைப் பையிலிருந்து குறிப்புப் புத்தகத்தைப் புரட்டினன். அந்த வழிகாட்டியின் பெயர் ரகசியமான சங்கேத பாஷையில் ஆங்கிலத்தில் 'மாடல் ராக்ஃபீல்ட்' என்றும் சீன மொழியில் 'ஃபான் ஷெக்டின்' என்றும் குறிக்கப்பட்டிருந்தது.

"அத்தை, 'ஃபான் ஷெக்டின்' என்கிற ஒரு ஆளைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

ஜேம்ஸின் கான்டன் மொழி உச்சரிப்பை சட்டென்று அவளால் கிரகித்துக்கொள்ள முடியவில்லை. வெய்ச்சோவின் பிரதேச மொழி வேறுபாடு சற்றே மாறுபட்டிருந்தது. "ஃபான் ஷெக்டின்!....ஆமாம்.... தெரியும்!....இந்நகரத்தில் 'ஃபான்ஸ்' என்னும் பிரிவினர் கம்யூனிஸ்டுகள் வருவதற்கு முன்னே அதிகப் பணம் படைத்த குடும்பத்தினராக இருந்தார்கள். உன்னிடம் அவன் விலாசம் இருக்கிறதல்லவா?

"ஆம்."

"ஈஸ்தெரின் தந்தையான மிஸ்டர் டுவானுக்கு அந்த நபரைத் தெரியும். இது நிச்சயம்."

"இனி காலங்கடத்த நேரம் இல்லை. அந்த ஆளை இன்றே நான் சந்திக்க வேண்டும்; என் வருகையைப்

பற்றி அவன் கேள்விப்பட்டிருப்பான்; அநேகமாக என்னை எதிர்பார்த்துக்கொண்டும் இருப்பான்!....''

"அப்படியென்றால், ஈஸ்தெரைக் கண்டு பேசுகிறேன். அவளுடைய தந்தை மூலமாக இச்செய்தியைச் சேர்ப்பிக்கும்படி அவளிடம் சொல்லுகிறேன்."

"எப்போது, எப்படிச் சந்திப்பது என்பதற்கான பதிலையும் அந்த நபரிடமிருந்து பெற வேண்டும்!"

மதப்பிரசார சபை இல்லத்தையும் மருத்துவ சாலையையும் இணைத்து, படரும் கொடியால் மூடப்பட்டிருந்த குட்டையான சுவரின் வாசலை கடந்து சென்றாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா.

ஜேம்ஸ் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் திரும்பி மெல்லிய குரலில் சொன்னாள்: "விழிப்புடன் இரு! உன் நிலையில் நான் இருந்தால் தற்போது வெளியேறவே மாட்டேன்!"

"மெய்தான்; எனக்குப் புரிகிறது.

அவன் கையை ஆட்டி நிதானமாக அவளுக்கு விடை கொடுத்தனுப்பினான்; பிறகு பாய்ந்தோடிச் சென்று, தொய்ந்து கிடந்த ஆலமரக் கிளையொன்றைத் தழுவிச் சில விநாடிகள்வரை ஊஞ்சலாடினான்; அப்புறம் மீண்டும் தரைக்குத் தாவினான்.

அவன் உள்ளே நுழைந்தான்; மூக்குக்கண்ணாடி அணிந்து கொண்டான்; வெளியே புறப்பட்டான்.

அத்தியாயம் 3.

வேய்ச்சோ நகரத்தில் மேலெழுந்தவாரியாக நிலவிய அமைதி ஏமாற்றம் அளிக்கக்கூடியதாக இருந்தது.

முந்தின நாளில் அவன் வந்து இறங்கிய ரயில்வே ஸ்டேஷனுக்குக் காலால் நடந்து சென்ற அந்தப்பத்து நிமிஷ நடையை நினைவுபடுத்திக் கொண்டான் ஜேம்ஸ். தற்செயலாகப் புறப்பட்ட உல்லாசப் பிரயாணியென அவன் வந்திருந்தான்; குறிப்பிட்டுச் செய்யக்கூடிய வேலை ஒன்றுமில்லை; கடைகளிலே நின்று அலங்காரமாக வைக்கப்பட்டிருந்த சாமான்களை உற்று நோக்கிக் கொண்டிருந்தான்; எல்லோரது கவனத்தையும் தான் கவர்ந்து கொண்டிருந்ததையும் அவன் உணராமல் இல்லை. ஜனங்கள் சிநேகபாவமாக இருந்தனர். சில குழந்தைகள் மட்டும் அவனைச் சுற்றித் திரிந்து கொண்டும், அவனுடன் பேசுவதற்கு முயன்று கொண்டும் இருந்தன.

ரயில் நிலையத்தில் வியாபாரிகள், குடியானவர்கள் அவர்களின் மனைவிமார்கள் எங்கேயோ போவதற்கு ரயிலேறிக் கொண்டிருந்த பலவகை அணிகளைச் சார்ந்த படை வீரர்கள் முதலானவர்களின்

கூட்டத்தை அவன் கண்டான். ஜனங்கள் 'க்யூ'வில் நின்றூர்கள்; கால்களைப் பரப்பியபடி சிறு குழந்தைகளை முதுகுப் புறங்களில் வைத்துக் கொண்டிருந்தார்கள் பெண்கள்; ஏழை உழவர்கள் விசித்திரமான மூட்டை முடிச்சு வகைகள், பைகள், கூடைகள் ஆகியவற்றுடன் நின்றூர்கள், டிக்கெட் ஆபீஸ் திறப்பதை எதிர்நோக்கிக் காத்திருந்தார்கள். அந்த இடத்தில் தானியக் களஞ்சியத்தின் வாசனை அடித்தது; அல்லது விவசாயப் பண்ணையின் மணம் வீசியது. சாமான்கள் எல்லாம் வரிசைப்படி க்யூவில் அடுக்கி வைக்கப்படுவதற்கு அந்த இடம் உபயோகிக்கப்பட்டதென்பதை அவன் புரிந்துகொண்டான். ஜனங்களின் அமைதியான ஒழுங்கு அவனை வருத்திற்று. ஸ்டாலின், மா ஆகியவர்களின் பூதாகாரமான ஓவியங்களைத் தவிர, சுவர்களிலே பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்த கடந்தபத்தாண்டுகளின் உற்பத்தி அளவுகளின் அட்டவணைகள், வரைப்படங்கள் ஆகியவையும் இருந்தன, ரயில், பஸ் ஆகியவற்றின் கால அட்டவணைகளும் வெகு எடுப்பாக அமைக்கப்பட்டிருந்தன. நகர வீதிகள், மாகாணத்தின் செய்திப் போக்குவரத்துக்குரிய பிரதான வழிகள், புதிய நிர்வாகப் பகுதிகளைப்பற்றிய கவனமான-விரிவான குறிப்புக்கள் அடங்கிய பெரிய தேசப்படம் ஒன்றும் இருந்தது. அதிகாரவர்க்க ஆட்சி முறையின் ஒரு புதிய பாணிக்கு இவையெல்லாம் ஆதாரம்! முழங்கால்களின் அளவுக்குள்ள ஒரு வகையான கால் சட்டைகளையே அநேக ஜனங்கள் போட்டுக் கொண்டிருந்ததை அவன்

கவனித்தான். காரணம்: துணிப் பற்றுக்குறை! அவனுடைய உயர்ந்த தோல் காலணிகள், பெருமை மிகுந்த பலரது பார்வைகளை ஆகர்ஷித்தன!

சுவரில் இருந்த தேசப்படத்தை அவன் ஆராய்ந்து கொண்டிருக்கையில், அந்தப் பெரிய ஹாலில் திடுதிப்பென்று அமைதி நிலவியது. பன்னிரண்டு அல்லது பதினைந்து இராணுவ வீரர்கள், கைவிலங்கு பூட்டப்பட்ட ஆறு ஏழு குடியானவர்களை ரெயில் பிளாட்பாரத்துக்கு வழிகாட்டி அழைத்துச் சென்றார்கள். கூட்டத்தினர் அமைதியான அச்சத்துடன் கவனித்தார்கள். வயதான பெண் ஒருத்தி முன்னால் ஓடிவந்தாள். வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட கைதிகளில் ஒருவனுக்கு கைகளை அசைத்து நம்பிக்கையற்றவர்களாக விடை கொடுத்தாள். பிறகு. அடக்க முடியாத துன்பத்தால் கூக்குரலிட்டுக் கதறினாள். போலீஸ்காரன் ஒருவன் அவளை அமைதியுடன் வெளியே அழைத்துப் போனான். கைதிகள் அனுப்பப்பட்டிருந்த இடம் மஞ்சூரியாவா, அல்லது டர்க்கிஸ்டானா அல்லது ஹாய்னனா என்ற ஊகப்பேச்சில் கூட்டத்தினர் ஈடுபட்டனர். ஆனால் இம்மனிதர்கள் மீண்டும் வீடு நோக்கித் திரும்பி வரவே மாட்டார்கள் என்னும் முடிவை அவர்கள் ஒப்புக்கொண்டதாகத் தோன்றியது. அவர்களிலே சிலர் கொகொனோரைச் சேர்ந்த பயங்கரமான உப்புச் சதுப்பு நிலங்களைச் சீர்படுத்த அனுப்பப்பட்டிருக்க வேண்டும். குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்ட தொழிலாளர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் அங்கு சென்று இறந்தார்கள்.

ஜேம்ஸ் தேசப்படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பது போலப் பாசாங்கு செய்தான். அப்போது ஒரு போலீஸ்காரன் அவனை லேசாகத் தட்டி அவனுடைய பயண அனுமதிச் சீட்டைக் கேட்டான்.

தன்னுடைய தஸ்தாவேஜுகளைக் காட்டிய வண்ணம், "இப்போதுதான் நான் வந்து சேர்ந்தேன்" என்று நல்ல கான்டன் மொழியில் சொன்னான் அவன்.

போலீஸ்காரன் அவற்றைப் பரிசோதனை செய்து திருப்தி அடைந்தவன் போன்று அவற்றை அவனிடம் திருப்பிக் கொடுத்தான்.

"நீங்கள் ஹாங்காங்குக்கு எப்போது திரும்பப் போகிறீர்கள்?"

"அநேகமாக இன்னும் ஒரு வாரத்தில் புறப்படலாமென்று நினைக்கிறேன்."

ரயில் நிலயத்தைவிட்டு வெளியேறிச் செல்வதே புத்திசாலித்தனமென்று ஜேம்ஸ் கருதினான். மேற்குத் திசையில் நெடுஞ்சாலையை அவன் கண்ணோட்டமிட்டான்; அவன் தப்பிச் செல்லவேண்டிய பாதையை நோக்கி அது அவனை அழைத்துச் செல்லும். அலைந்து திரிந்து நகரத்தின் மையப் பகுதிக்குத் திரும்பினான். 1926இல் நடந்த கோமின்டாங் புரட்சியின் முதல் யுத்தம் வெய்ச்சோவில்தான் வெற்றி பெற்றது. நகரத்தின் சுவர்கள் சிதைக்கப் பட்டுவிட்டன. கிழக்குப் பக்கத்தில் இருந்த ஸாய்காங் ஆறு வடபுறத்தில் இருந்த ஈஸ்ட் நதியுடன் கலந்தது, திசைகளின் ஞானம் அவனுக்குப் போதிய

அளவு இருந்தது; நகரத்தின் குறுக்கே கடந்து சென்றால், பெரும்பாலும் எந்த ஒரு வீதியும் அவனைக் கரைகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுமென் பதை அறிந்திருந்தான்.

கதவுகளின் வெளிப்புறத்தில் ஓர் அடி மூங்கில் கழிகளால் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த தட்டி—திரைகளின் பின் பக்கத்திலிருந்து ஜனங்கள் தன்னை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததை அவன் கண்டு கொண்டான். புதிய தெருக்களில் நடை பாதைகள் இருந்தன: பெரும்பாலான பழைய வீடுகளில் கதவு களுக்கு முன்னே படிக்கட்டுகள் இருந்தன; அவை வெள்ளம் வரும் காலத்தில் பொங்கிப் புடைத் தோடும் ஆறுகளால் சேதம் ஏற்படாமல் காப்பளித் தன.

ஈஸூ பிறந்து, வளர்ந்து, வசித்த அந்நகரத்தை நன்கு பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் தீவிரமான ஆசை அவனுள் எழுந்தது. ஆற்றின் கரை நெடுகிலும் மரங்களின் இதமான நிழல் கவிந்து கிடந்த ஓர் அமைதி பூத்த இடத்துக்கு வந்தான்; சைப்ரஸ் எனப்படும் ஊசி இலை மரத்தின் பழைய அடிப் பகுதியில் சாய்ந்துகொண்டு ஒரு சிகரெட்டை எடுத்தான் ஜேம்ஸ்.

அவன் தன்னைப் பற்றி மிகவும் ஆச்சரியப் பட்டான். அவன் என்ன செய்துகொண்டிருந்தான்? நகரத்தைவிட்டு ஈஸூவோடு எப்படி வெளியேறப் போகிறான்? அவன் வழிகாட்டியான ஃபானைச் சந்திக் கும்வரை அவனுக்கு ஒன்றும் புரியாது.

ஆற்றின் குறுக்கே மறுகரையில் தெரிந்த தோற்றம் அவன் கவனத்தைப் படிப்படியாகக் கவர்ந்தது. அரைமைல் தொலேவில் இருந்த ரயில் வந்து நின்றது, ஆடுமாடுகளுக்குரிய திறந்த பெட்டிகளில் ஆட்கள் நிரம்பியிருந்தனர்; அவர்கள் வெளியில் நின்றுகொண்டிருந்தார்கள்; யாரும் இறங்கக் காணும். சில நிமிஷங்கள் கழித்து, கொஞ்ச தூரத்திலிருந்து சங்குச் சத்தம் கேட்டது. கான்டனின் திசையினே நோக்கி, ஆற்றில் புகைகக்கிய வண்ணம் ரயில் புறப்பட்டது. உழைப்பு ஏற்றிச் செல்லப்படுகிறது என்று அவன் தன்னுள் எண்ணினன். அவர்கள் விதியின் முடிவை அனுபவிக்க தூரத்திலிருந்த ஏதோ ஒரு மாகாணத்துக்கு அனுப்பப்பட்டிருக்கலாம்; அல்லது அருகில் இந்த லோஃபு மலேகளில் உள்ள மரங்களே வெட்டுவதற்காகக் கட்டாயத்தின் பேரில் அனுப்பப்பட்டிருப்பார்கள். ரயிலிலிருந்து புகைச் சுருள்கள் மெதுவாக மேலே எழும்பிக்கொண்டிருந்தபோது, இனம் பிரித்துச் சொல்லமுடியாத ஜனங்களின் கறுப்பு நிறக் கும்பல்கள் நீண்ட வரிசைகளில் நின்ற, ஊர்ப் பகுதியின் குறுக்கே, எறும்புகளேப்போல நகர்ந்துகொண்டிருந்த காட்சியை அவன் பார்த்தான். அந்த நீண்ட வரிசைகள் வெவ்வேறு திசைகளில் நகர்ந்துகொண்டிருந்தன. அவன் யூகித்த மாதிரியே, அது செயற்பட்ட கிராம கம்யூன்களின் அமைப்புத்தான் என்று அறிய அவன் நிம்மதியடைந்தான். கம்யூன் எனப்பட்ட சிறு நகராட்சிப் பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்களின் சில அணியினர் உடைந்து, சூடான அந்த இயற்கை

சூழலில் பரவி வந்தனர். அந்தக் காட்சி பயமுறுத்தியது; அது போலியாகவும் இருந்தது. கோடிக் கணக்கான மக்கள் கொண்ட ஒரு தேசம் உணவு உற்பத்தியைப் பெருக்க இராணுவ அடிப்படையில் இயக்கப்பட்டால், அதன் விளைவு என்னுகும்?—குடியானவர்களைப் போல அவன் இப்பெழுது கவனித்துக் கொண்டிருந்தான்!

அவனுக்கு ஐம்பது கஜம் கீழே எழுபது—எண்பது படைவீரர்கள் தோள்களில் சுமந்த துப்பாக்கிகள் சகிதம் பாலத்தைக் கடந்து மறு கரையை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள், அவர்கள் நகர நகர, காலடிச் சத்தமும் தேய்ந்தது. சிப்பாய்கள் பாலத்தைக் கடந்து இடதுபுறம் திரும்பிஞர்கள். அவன் கண்கள் அவர்களைத் தொடர்ந்தன.

அவன் திரும்பிய போது சிறுவன் ஒருவனிடம், "சற்று முன்னே பாலத்தைத் தாண்டிய படைவீரர்கள் யார்?" என்று விசாரித்தான் ஜேம்ஸ்.

"குடிமக்களால் உருவாக்கப்பட்ட படையைச் சேர்ந்த வீரர்கள் அவர்கள்!"

"எங்கே போய்க்கொண்டிருக்கிருர்கள்?"

"போக்லோவுக்குப் போகிருர்கள் என்று நினைக்கிறேன். அங்கே நேற்று இரண்டு போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்!"

தப்பாக எதையோ சொல்லி விட்டவனைப் போன்று பயந்து ஓடத் தலைப்பட்டான் அப்பையன்.

போக்லோவிற்கு என்ன நேரப்போகிறது?—இக்கேள்வி அவனை வருத்திற்று; மதப் பிரச்சாரசபை இருந்த இல்லத்தை நோக்கிப் புறப்பட்டான் ஜேம்ஸ்.

சிற்றுண்டியின்போது, ஜேம்ஸ் இருப்புக்கொள்ளாமல் தவித்தான். காரணம், ஈஸுவிடமிருந்து இன்னமும் ஒரு தகவலும் வராததுதான்.

"அந்த மனிதனைத் தேடிப் பிடித்துப் பேசுவதாக உறுதி சொன்னுனல்லவா?" என்று கேட்டான் அவன் அத்தையிடம்.

"ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்ப இயலாதென்றும், இடைவேளைச் சாப்பாட்டின்போது தன் தந்தை மூலமாக ஏற்பாடு செய்வதாகவும் தெரிவித்தாள். செய்தியின் விவரத்தை அவளது சகோதரர் மகன் ஆஸ்பத்திரிக்கு வந்து சொல்லுவான்; உடனே அவள் நமக்கு அறிவிப்பாள்!........அந்த ஆள் ஃபான் ஹெக்டினைக் குறித்து உனக்கு ஏதாவது விவரம் தெரியுமா? அவன் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்தானு?" என்று ஸிஸ்டர் ஆங்கெலிகா வினவினுள்.

"ஹாங்காங்கில் அவன் உதவியால் தப்பிச் சென்ற ஒரு அகதியிடமிருந்து அவன் பெயரைத் தெரிந்துகொண்டேன். அநேகம் பேர்களுக்கு அந்த வழிகாட்டி இம்மாதிரி ஒத்தாசை செய்திருந்தான். அதிசயமான ஒரு புதிரான விஷயம் என்னவென்ருல் அவனுடைய உத்தியோக ரீதியான முகவரி கம்யூனிஸ்ட் பத்திரிகை அலுவலகத்தினுடையதாயிருக்கிறது. அவனுக்குச் செல்வாக்குள்ள தோழர்கள் பலர் 'கட்சி'யில் இருப்பதாகத் தோன்றுகிறது."

"பணத்திற்காக அவன் அதைச் செய்கிருனு?

"அப்படித்தான் இருக்கவேண்டும். சமீப காலத்தில் 'கள்ளமார்க்கெட்' ஏராளமாகிவிட்டது; ஆகவே

அவன் அதில் ஈடுபட்டிருக்கிருன். அதற்குரிய வழி முறை உபாயங்கள் பல இருக்கின்றன!"

"அவர்கள் அவனுக்கு எப்படிப் பணம் கொடுக்கிருர்கள்?"

"அவர்கள் ஹாங்காங்கிலுள்ள ஒரு பாங்கில் பணத்தை டெபாஸிட் செய்கிருர்கள், ஹாங்காங்கில் அவனுக்கு நண்பர்கள் இருக்கிருர்கள்" என்று விவரித்தான் ஜேம்ஸ்.

ஃபான், சமூகத்தில் உயர் மதிப்புப் பெற்ற குடும்பத்தைச் சேர்ந்தவன். அவனுடைய தாத்தா ஒரு 'டால்டாய்'—மாவட்டத்தை ஆளும் அதிகாரி. ஈஸ்தரின் அப்பாவுக்கு அவனைக் கட்டாயம் தெரிந்திருக்கத்தான் வேண்டும். நாலைந்து வருஷத்திற்கு முன்னதாக, அவர்களின் சொத்து, கடைகள் முதலியவற்றை 'கட்சி' பறிமுதல் செய்துவிட்டது. கட்சிக்கு தன் இஷ்டப் பிரகாரம் முப்பதாயிரம் டாலர்கள் அன்பளிப்புச் செய்துவிட்டு, ஃபான் தப்பி வெளியேறி விட்டான். எல்லாவிதமான சுகபோகங்களுக்கும் கட்டுப்பட்டவன். பாவம், கஷ்டம்தான்!"—ஸிஸ்டர் ஆங்கெலிகா விளக்கம் தந்தாள்.

அடுத்து மூன்றுமணிநேரம் கழித்து. ஆங்கெலிகாவுக்குக் குறிப்பொன்று வந்தது. "வெளியே இருந்து கொண்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் நோயாளி ஒருவரை நாலரை மணிக்கு எதிர்பார்க்கிறேன், அறை எண் 13. நான் நுழை வாயிலில் இருப்பேன்." இதுவே செய்தி.

"இதோ ஈஸ்தரின் செய்தி வந்திருக்கிறது," என்று அவனிடம் அக் குறிப்பை நீட்டினுள் அவள்.

"பதின்மூன்றும் எண் அறை எங்கே உள்ளது?"

அவள் புன்னகை பூத்தாள். "கீழ்த்தளத்தில் அது உள்ளது. வழக்கமாக பூட்டித்தான் கிடக்கும். அது ஒரு தற்காலிக சவக்கிடங்கு. பயந்துவிடாதே! அது காலியாகத்தான் இருக்கும்!" என்ருள்.

"நான் அங்கே ஃபானைச் சந்திக்கவேண்டுமென்று எண்ணுகிறீர்களோ?"....

"நிச்சயமாக செய்தி அப்படித்தான் இருக்குமென்று நம்புகிறேன். பக்கத்திலிருக்கும் வாசல் வழியே நீ உள்ளே போய்விடு; உன்னை யாரும் கவனிக்க முடியாது."

சிவப்புச் செங்கற்களாலான ஆஸ்பத்திரிக் கட்டிடம், மிஷன் வீடு கட்டப்பட்ட சமயத்தில்தான் கட்டப்பட்டது. அங்கிருந்து ஒரு கல்லெறி தூரம் தான் இருந்தது ஆஸ்பத்திரி. இடையில் புல் மைதானம், வாழைமரங்கள், மூங்கில் புதர்கள் இருந்தன. சுற்றுமதிலின் இந்தப்பக்கத்திலிருந்து பார்த்தால், ஆஸ்பத்திரியின் விசாலமான மேல்தளத் தாழ்வாரங்களில் ஜனங்கள் நடமாடுவது தெரியும்.

எந்த நேரத்திலும் ஈஸுவை எதிர்பார்த்தவனுக பக்கத்து வாசற்படியில் ஜேம்ஸ் காத்துக்கொண்டிருந்தான். அவன் இதயம் அடித்துக்கொண்டது. வெண்ணிற உடையில் நர்ஸ் குல்லாய் தரித்திருந்த உருவமொன்று அருகிருந்த நுழைவாயிலில் தோன்றியது. அவளுடைய தலைமுடி கறுத்திருந்தது; அவள் வதனம் வட்டவடிவமாக இருந்தது; அவன் நினைவூட்டிப் பார்த்ததைவிட, அவள் உருவம் நிறைவு பெற்றிருந்தது. வாசல் வழியே அவன் உள்ளே

நுழைந்ததுதான் தாமதம்; உடனே அவ்வுருவம் இருண்டு கிடந்த தாழ்வாரத்தை நோக்கி அச்சமுற்ற மானெனப் பாய்ந்தது.

முடிந்தமட்டில், அவன் தன்னை மறைத்துக் கொண்டு குறுக்கு மறித்து நகர்ந்தான். மறுபடியும் அந்த முகம் தோன்றியது; மறுகணம், முன்மாதிரி இருளில் மறைந்தது.

தாழ்வாரத்தில் விளக்கு இல்லை. அனலாக வீசிய வெய்யிலிலிருந்து வந்திருந்ததால், எதுவும் சரியாகப் புரியவில்லை. "இங்கே வாருங்கள்!" என்ற தளர்ந்த குரலொன்று கேட்டது; கையொன்று அவனைப் பற்றியது. ஒரு பெண்ணின் உடல் தன்மீது நெருக்க மாகச் சாய்ந்துகொண்டதை அவன் உணர்ந்தான். அவ்வுருவம் மென்மையுடனும், கதகதப்பாகவும், சிறிய ஆகிருதியோடும் இருந்தது. தன்னுடையதை விட தலை குட்டையாக இருந்தது. "நான்தான்!...." என்று அவள் முணுமுணுத்தாள். அந்தக் குரலைக் கேட்டு எவ்வளவு காலம் ஆகிவிட்டது!

"ஈஸா! என் அன்புக்குரிய காதலியே!"

"ஜேம்ஸ்!....கடைசியில்....நீண்ட இடைவெளிக் குப்பின்....கடைசியில் வந்துவிட்டீர்கள்!" அழுது விட்டாள் ஈஸா.

ஒருகணம் அவர்கள் பேசவில்லை. நீண்டகாலப் பிரிவுகளுக்குப் பின்னே, அவர்களிருவரும் காத்திருந்த —விரும்பிய இனிய பொழுது அது. அவனுக்கு வேகமாகவும் அழுத்தமாகவும் மாறி மாறி முத்தங் கள் கொடுத்தாள் ஈஸா. பிறகு அவர்கள் அசை வற்று அமைதியுடன் இருந்தார்கள். அவளுடைய

தலைமயிரின் சுகந்தத்தை அவன் அனுபவித்தான்; அவளுடைய சிறிய உடலை தன் உடம்போடு இறுக அணைத்துக்கொண்டன அவனது கரங்கள். அப்போது தனக்கே உரித்தான ஒரு பெண்ணைக் கைப்பிடித்துக் கொண்டிருந்ததாகவும், அவளை அவ்வாறு பற்றியிருந்ததால் அவன் புனர்ஜன்மம் எடுத்து மீண்டும் வாழ்ந்து கொண்டிருந்ததாகவும் அவன் உணரலானான். அவனுடைய கைவிரல்கள் வழக்கம் போலவே தன் முதுகின்மீது விளையாடிக்கொண்டிருந்ததை அவள் உணர்ந்தாள். தன் முகத்துக்கு மேலே இருக்கும் அவன் முகத்தை அருகில் வைத்துப் பார்க்க எண்ணி அவள் தன் தலையை உயர்த்திய போது, இருட்டில் அவள் விழிகள் ஒளி வீசியதை அவன் பார்த்தான்.

''என்னுடன் வாருங்கள்'' என்று அவள் மெல்லிய தொனியில் சொன்னாள். பிறகு ''ஃபான் போனதும் நான் உங்களைச் சந்திக்கிறேன். இங்கு நம்மை யாரும் பார்க்க வேண்டாம்'' என்றாள். முன்போலவே அவள் பேச்சு உணர்ச்சி மிகுந்திருந்தது.

அவனைக் கைபிடித்து அழைத்துப் போனாள் அவள். அவன் சமாளித்துக்கொண்டான். பட்டை உதிர்ந்து, வெடிப்பு கண்டிருந்த சுண்ணும்புப் பூச்சுடன் கூடிய ஓடு வேய்ந்த தாழ்வாரத்தையும் சுவர்களையும் அவன் கண்டான்.

அவள் ஒரு கதவைத் திறந்தாள். இரண்டு சிறிய, உயர்ந்த ஜன்னல்களிலிருந்து வந்த வெளிச்சம் நாற்பது வயசுள்ள தாடியுடன் கூடிய ஒரு மனிதன்

அங்கிருப்பதைக் காட்டியது. அவன் உடனே எழுந்து நின்றான்.

"இவர்தான் மிஸ்டர் ஃபான். இவர் என் சிநேகிதர்....மிஸ்டர் டாய்!" என்று பரஸ்பரம் அறிமுகப்படுத்தினாள் ஈஸு.

ஃபான் கையை நீட்டினான்; ஜேம்ஸ் அதைப் பற்றினான். ஃபானும் ஜேம்ஸும் கைகுலுக்கிக் கொண்டார்கள்.

"உங்களைச் சந்தித்ததில் ரொம்பவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று மெதுவாக, காண்டன் மொழியில் கூறினான் ஃபான்.

இருவர் கண்களும் சந்தித்தன. பீகிங்கில் சாந்தமுடனும் அளவான சிறிய வார்த்தைகளுடனும் பேசிய கல்விமான் ஒருவனை அவன் அறிந்திருந்தான். அத்தகையதோர் அறிவாளியின் முகவிலாசத்தை இப்பொழுது மனத்தளவில் காண ஜேம்ஸ் தயாராக இருந்தான். ஆனாலும், அவன் அதில் ஏமாற்றமடையவில்லை. ஃபான் பழுப்பு நிறம்கொண்ட மீசை வைத்திருந்தான். எஃகு விளிம்பு கொண்ட மூக்குக்கண்ணாடி அணிந்திருந்தான். ஆனால், மேன் மகனுக்குப் பொருந்தாத அவ்வுடைகள்—தூசு படிந்து மடிப்புக்கள் விழுந்திருந்த கைகளுள்ள மேலங்கியும் கால்சட்டையும்—அவனுடைய அறிவுத் தோற்றம் முழுவதையும் கெடுத்துவிட்டன! இருந்த போதிலும், அவன் சாந்தமானவனாகவும் அடக்கம் நிறைந்தவனாகவும் ஜேம்ஸின் மனத்தில் பதிந்தன.

"உங்கள் இருவரையும் விட்டுச் செல்கிறேன் இன்னும் சில நிமிஷங்களில் திரும்பிவிடுவேன்."

அவளுடைய சிநேகிதனைப் பார்த்து முறுவல் செய்தாள் ஈஸு. தயக்கத்துடன் கதவைப் பார்த்த படி திரும்பி வெளியே சென்றாள். அவள் டென்னிஸ் பூட்ஸ் போட்டுக்கொண்டிருந்ததால் நடந்து சென்ற போது துளிகூட சத்தம் எழவில்லை. கதவில் சாவியை திருப்பும் அரவம் அவன் காதில் விழுந்தது.

அறையில் மூடப்படாத துப்பட்டிகளுடன்கூடிய இரண்டு படுக்கைகள் இருந்தன. கிருமிகளை அழிக்கும் 'லைசால்' மருந்தின் பலத்த நெடி எங்கும் ஊடுருவிப் பரவியிருந்தது. மேஜை நாற்காலி முதலியவை சும்மா கிடந்தன. ஃபான் ஆட்டங்கண்ட ஒரு பிரம்பு நாற்காலியை முன் பக்கமாக இழுத்துப்போட்டு அவனை உட்காரும்படி கோரினான்.

"ஊஹூம், வேண்டாம். நீங்கள் உட்காருங்கள்" என்றான் ஜேம்ஸ். அவன் தன்னுடைய கட்டுமஸ் தான உடம்பை மெத்தையொன்றில் சாய்த்தான்.

"கண்காணிக்கும் நோக்கத்துடன் உங்களை யாரும் பின்தொடரவில்லை என்பதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?....இங்கே ஆபத்தில்லாமல் பத்திரமாக இருக்கிறதா?" என்று ஃபான் கேட்டான்.

"ஆம்; இங்கு ஆபத்தில்லாமல் பத்திரமாக இருப்பதாகவே நான் உறுதியுடன் நம்புகிறேன்."

"மிஸ்டர் டுவான்—ஈஸுவின் தந்தை சொன் னார்—தாங்கள் என்னைப் பார்க்க விரும்பினதாக!" என்றான் ஃபான்.

"வாஸ்தவம்."

"நீங்கள் உங்கள் காதலியைக் கடத்திச் செல்ல விரும்பியதாயும் அறிந்தேன்."

"சரிதான்; தன்னுடைய இரண்டு பிள்ளைகளுடன் வெளியே தப்ப நீங்கள் உதவியதாக மிஸ்டர் ஹுவாங்சியூபா சொன்னார்."

"ஓஹோ! மிஸ்டர் ஹுவாங்சியூபா சொன்னாரா? ஆமாம், உண்மைதான்!" ஃபானின் முகத்தில் புன்னகை தோன்றியது. பின்புறம் சாய்ந்து, வசதியாகத் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

"உங்களிடம் சிகரெட் இருக்கிறதா?"

"நாம் இங்கே புகை பிடிக்கலாமா?" ஜேம்ஸ் தயங்கியவாறு கேட்டான்.

"அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை!"

அவன் குரலில் ஒரு கௌரவம் இருந்ததை ஜேம்ஸ் கவனித்தான். சிகரெட் பெட்டியை எடுத்து அவனிடம் நீட்டினான். ஃபான் ஒரு சிகரெட்டை எடுத்துக்கொண்டான்; அதை வாயில் பொருத்து முன் ஆவலுடன் கையாண்டான்.

"தயவு செய்து நெருப்பு தாருங்கள்."

ஜேம்ஸ் கொளுத்திய தீக்குச்சியை அவன் வசம் நீட்டினான். ஃபான் ஆவலுடன் புகையை இழுத்தான். ஆர்வமும் திருப்தியும் மிகுந்த அவனுடைய நாசித் துவாரங்கள் சுருங்கி விரிந்தன.

"கொடிய புகையிலைகளைப் புகைப்பதற்கு நாங்கள் கட்டாயப் படுத்தப்படுவதையும் சேர்த்து, அடிமைப்பட்டிருக்கும் ஒரு மனிதன் அடையும் அவமானங்களை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்!" ஃபான், மான்டரின் மொழிக்குத் திரும்பினான்; சிறந்த உச்சரிப்புடன் பேசினான்.

சிகரெட்டிலிருந்து முழு அளவு ஆனந்தத்தை ஃபான் அனுபவித்துக் கொண்டிருந்தான். ஜேம்ஸ் இதை உன்னிப்புடன் கவனித்தான். அவனுடைய முதல் சிந்தனையில், ஃபான் ஒரு விநோதமான ஆளாகத் தோற்றமளித்தான். பழுப்பு நிறமுள்ள அவலட்சணமான கையுள்ள மேலங்கியும் கிழிந்த கறுப்புக் கால்சட்டையும் ஃபானுடைய முகத்துக்கோ அல்லது அவனுடைய பாஷை உச்சரிப்புக்கோ பொருந்தவில்லை. ஜரிகையால் ஆன சித்திர வேலைப்பாடுகள் கொண்டிருந்த கைகளுடன் அங்குமிங்கும் ஆடி அசைத்துகொண்டிருந்த நீண்ட பட்டு மேலங்கியை அணிந்து, வெண்ணிறக் கரங்களில் வெள்ளைத் தாமிரத்தாலான புகைக் குழாயையும் பிடித்துக்கொண்டிருக்கும் ஒரு மேன்மகனுடன் தான் பேசிக்கொண்டிருப்பதாகவே அவன் கற்பனை செய்து பார்த்துக்கொண்டான். ஃபான் போட்டிருந்த துணிச் செருப்புகளைக் கவனிக்காமலிருக்க எத்தனம் செய்தான். பொருத்தமற்ற தன்மை மிகவும் அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.

"எல்லையைக் கடப்பதற்கு அவளுக்கு நீங்கள் உதவி செய்யத் தயாராக இருப்பதாக நான் நம்புகிறேன்."

ஜேம்ஸ் தலையை அசைத்தான் இணக்கத்துடன்.

"நீங்களும் செல்ல விருப்பப்படாமல் இருந்தால், காரியம் இன்னும் சுலபமாகிவிடும்· நீங்கள் வெள்ளையர் ஆனதால். உங்களை எளிதில் இனம் கண்டுபிடித்துவிடுவார்கள். ஆனால் அப்படி ஒரு போதும் நடந்ததில்லை."

"அப்படியென்றால் முதல் தடவையாக அதை நான் செய்கிறேன்!" என்றான் ஜேம்ஸ், ஆங்கிலேயர்க்குரிய அடக்கத்துடன்.

உங்கள் காதலியைத் தப்பிக்கச் செய்வது மட்டுமே உங்களது விருப்பமானால், அதற்குரிய ஒரு வழி, அவளைக் காண்டனுக்குக் கப்பலேற்றிவிட்டு அதன்பின் அவளை வாக்கோவுக்கு ஆற்றின் வழியே அனுப்பிவிடுவதுதான்!"

"அவள் தன்னந்தனியாகவே போகவேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்களா?"

"ஆம் அதுதான் சிக்கல் இல்லாதது!"

"ஆனால், அவ்வாறு நடக்க நான் ஒப்பமாட்டேன். அபாயகரமான அச்செயலில் அவளை மாத்திரம் தனியே ஈடுபடுத்த எனக்கு விருப்பம் இல்லை. எனக்குப் பயண அனுமதிச் சீட்டு இல்லை; காண்டனில் நான் ஊடாடுவதற்குரிய தக்க காரணமும் இல்லை. படகில் அவள் மறைந்து சென்றால் முதலில் கம்யூனிஸ்ட் ரோந்துப் படகுகள் அவளைச் சுட்டுவிடும்; பிறகு, கடலில் பிரிட்டனுக்குரிய ரோந்துப் படகுகள் ஒருவேளை அவளைச் சுட்டுவிடக்கூடும்."

"ஆதலால் மலைகளைக் கடந்து செல்லவே நீங்கள் விரும்புகிறீர்களா?" என்று துருவினான் ஃபான்.

"ஆம்; என்னை நான் காத்துக்கொள்ளும் வகையில் நான் நடப்பேன், அதற்குத் தரை மார்க்கமே உகந்ததாகும்" என்றான் ஜேம்ஸ்.

"அப்படியென்றால், ஹூவாங்சியூபா கடைப்பிடித்த உபாயத்தையே நீங்களும் பின்பற்றி, கோலநட் மலையின் வழியாகத் தப்பிவிட உத்தேசமா?"

"ஆமாம், அப்படியேதான்! நாங்கள் இரவில் தான் பிரயாணம் செய்வோம்; பகல் நேரத்தில் மலை களிலே மறைந்துகொள்வோம். நான் தரையில் இருக்கும்பரியந்தம், என்னை நான் சமாளித்துக் கொள்வேன். உங்களுடைய ஆட்கள் எல்லாப் பாதைகளையும் அங்குள்ள தங்கும் இடங்களையும் அறிவார்கள் என்றே கருதுகிறேன்."

"ஒரு வகையில் இது சரிதான். பகல் பொழுது பூராவும் உங்களை யாரும் கண்டுகொள்ள முடியாது. அதைக்காட்டிலும் என்ன செய்ய முடியும்? பிங் ஷானிலிருந்தோ அல்லது லுங்காங்கிலிருந்தோ எங்களுடைய ஆட்கள் உங்களைக் கவனித்துக் கொள் வார்கள். அங்கே நீங்களும் உங்கள் காதலியும் எப்படிப் போய்ச் சேருவீர்கள் என்பதுதான் பிரச்னை!" என்று கூறினான் ஃபான்.

"இங்கிருந்து லுங்காங்குக்கு இருபது மைலுக் குக் கூடுதலாக இருக்காது, அங்கும் பாதை இருக்கத் தான் வேண்டும்."

"ஆம்; அங்கிருந்து டாம்ஷுயிக்கும் பிங்க்ஷா னுக்கும் நெடுஞ்சாலை போகிறது. பிங்க்ஷானிலிருந்து என் ஆள் அழைத்துச் சென்று போய்விடுவான்."

"பிங்ஷானுக்குப் பிரயாணம் செய்ய அனு மதிச் சீட்டு அவசியம்தானா?"

"உங்களை மெய்ப்பித்துக் கொள்வதற்குரிய அத் தாட்சிகள் உங்கள் வசம் இருந்தால், அனுமதிச் சீட்டு அவசியமில்லை!" அவற்றிற்கு நான் ஏற்பாடு செய்ய முடியும். மேலும் அந்தக் கெடுபிடி இந்த இரண்டாண்டுகளாகச் சற்றுத் தளர்ந்துள்ளது."

"ஏன் அப்படி?"

"நகரங்களிலிருந்து கிராமங்களுக்கும், கிராமங் களிலிருந்து நகரங்களுக்கும் ஜனங்கள் பலமுறை குடிபெயர்ந்து விட்டனர். அதிர்ச்சிப் படையணிகள் இங்கும் அங்குமாக இயங்கின. யார் யார் எந்த எந்த இடத்தைச் சேர்ந்தவர் என்று காவல் படை யினருக்கே தட்டுப்படவில்லை. ஷாங்காயைச் சேர்ந்த ஒரு மனிதனுக்கு பிங்ஷான் குடியிருப்புச் சீட்டை உதவினேன். அவர்களும் அம்மனிதனைப் போக அனுமதித்துவிட்டனர். இன்னும் பலருக்கும் இவ் விஷயத்தில் வெற்றிபெற ஒத்தாசை செய்திருக் கிறேன், ஆனால் உங்கள் நிலை பிரத்தியேகமான சிக்கலை உண்டாக்கியிருக்கிறது."

ஒரு நிமிஷம் ஃபான் மௌனம் சாதித்தான். அடிப்பகுதி வரையிலும் சிகரெட் எரிந்துவிட்டது. பிறகு அவன் புன்சிரிப்புடன் கூறினான்: "நீங்கள் இச்சோதனையில் தேர்ந்துவிடுவீர்களென்னும் எண் ணம் எனக்கு நிரம்பவும் ஆனந்தம் தரும். நீங்கள் கொரியாவில் இருந்தீர்களல்லவா?"

ஜேம்ஸ் ஆம் என்று தலையை ஆட்டினான்.

"அப்படியென்றால் நீங்கள் துப்பாக்கி சுடுவதில் தேர்ந்தவராக இருக்க வேண்டுமே!"

"வாஸ்தவம்தான். ஆனால், சண்டை எதிலும் நான் பங்கு பெறவில்லை. ஐக்கிய நாடுகளின் சக்தி களுடன் எனக்கு மிகுந்த தொடர்பு இருந்தது; என்னை நான் காத்துக்கொள்ளக் கற்றுக்கொண் டேன்!" என்று சொன்னான் ஜேம்ஸ்.

"உங்களால் முடியும்; நான் நம்புகிறேன்."

தன் துப்பாக்கியைப்பற்றி அவனிடம் ஜேம்ஸ் பிரஸ்தாபித்தான்; ஃபான் கூர்மையாகக் கேட்டான்.

"ஆட்சியினர் அதை எடுத்துக்கொண்டார்கள். நான் புறப்படும் தருணம், அதை என்னிடம் திருப்பித் தந்துவிடுவார்கள்!"

"அப்படியானால் போய் அதை வாங்குங்கள்."

"முன்பின் ஆலோசிக்காமல் முட்டாள்தனமாக ஆபத்துக்களில் அகப்பட்டுக் கொள்ளும் அசட்டுத் தைரியம் எனக்கு இல்லை!"

"துப்பாக்கி எங்கே இருக்கிறது?"

"கட்சி அலுவலகத்தில்."

"உங்களுக்கு அது தேவைப்படும். நீங்கள் துப்பாக்கி சுட நன்கு பழகியவர்;அல்லவா?"

இக்கேள்வியை ஃபான் கேட்பது இது இரண்டாம் தடவை.

அப்படித்தான் நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" ஜேம்ஸ் பதில் சொன்னான்.

"மேலை நாட்டுத் திரைப்படங்களில் அம்மாதிரிச் சண்டைகளை நான் கண்டு களிப்பதுண்டு. கட்சி அலுவலகத்துக்குச் சென்று. அவர்களுடன் சொகுசாகப் பேசி, உங்களுடைய துப்பாக்கியை ஏன் கேட்கக்கூடாது?...."

"நான் கேட்கிறேன் என்பதற்காக அவர்கள் அதைக் கொடுத்து விடுவார்களென்று எனக்குத் தோன்றவில்லை."

"அப்படியல்ல. அவர்கள் நிச்சயம் கொடுப்பார்கள்........அல்லது உங்களுக்காக நான் அதை வாங்கிக் கொடுத்துவிடட்டுமா?"

ஜேம்ஸ் அவனை ஆச்சரியத்துடன் உற்று நோக்கினான். ஃபானின் முகம் அவனது மனவெழுச்சியை வெளிப்படுத்தவில்லை. இறுதியாக அவன் மொழிந்தான்; "அதைப்பற்றி நான் கவனித்துக் கொள்ளுகிறேன்!"

ஜேம்ஸ் திகைப்படைந்தான், "இங்கிருந்து நான் எப்போது புறப்பட முடியும்?"

"லுங்காங்கில் அல்லது பிங்ஷானில் இருக்கும் எங்கள் ஆலோசகரை கலந்துதான் நான் அது பற்றி முடிவு செய்ய வேண்டும். உங்கள் அத்தாட்சிப் பத்திரங்களை தயாராக வைத்திருங்கள். இரண்டு தினங்கள் எப்படியும் வேண்டும்.

கதவுச்சாவி 'க்ளிக்' என்று ஓசைப்படுத்தியது; கதவு திறந்தது. அவர்களிரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே ஈஸு உள்ளே அடியெடுத்து வைத்தாள். அவள் விழிகளில் ஒரு மலர்ச்சி மின்னியது. தாழ்குரலில், "நலந்தானே? வேறு ஒன்றும் விசேஷமில்லையே?" என்று கேட்டாள். தலையிலிருந்த குல்லாயை அப்புறப்படுத்தினாள்; தலை மயிரைத் தட்டி விட்டுக்கொண்டாள்; ஜேம்ஸை ஓரக்கண்ணால் அவசரமாகப் பார்த்தபடி "என் கடமை முடிந்துவிட்டது இப்போது" என்று அறிவித்தாள்.

முதல் தடவையாக-இப்போதுதான் ஈஸுவை வயதடைந்த ஒரு பெண்ணாகக் கண்டான் ஜேம்ஸ். வயசான இளம் பெண்ணின் பண்பட்ட கவர்ச்சி மாறியது; அதற்குப் பதிலாக பதினெட்டு வயதுள்ள பெண்ணின் பரிசுத்தப் பொலிவு ஒளிர்ந்தது. யுத்தம்

நடந்த வருஷங்களிலும் அவர்கள் பிரிந்திருந்த காலத்திலும் அவள் எவ்வளவு துன்பப்பட்டிருப்பாள் என்பதைப்பற்றிக் கதை சொல்லுவதுபோல அவளுடைய கண்கள் தோன்றின. அவன் இதுவரை கண்டிராத ஒரு நூதனமான ஆழத்தை தயக்கம் நிரம்பிய அமைதியான அந்தப் பார்வை புலப்படுத்திற்று. இயல்பாகவே அழகியான அவள் இப்போது நல்ல எழிலுடன் திகழ்ந்தாள். அவளது கண்களில் ஈரக் கசிவு இருந்தது. இது அவன் மனத்தை உருக்கியது. காத்துக்கிடந்த வருஷங்களின் துயரங்கள் உருவாக்கிய நேசம், அல்லல், கோபம் போன்ற உணர்ச்சிகளை அக் கரிய கண்கள் காட்டின. அவள் கன்னங்கள் முழுமை பெற்றிருந்தன. எப்போதும் மெல்லியதாக இராத அவள் உதடுகள் மென்மையுடன் வளைவு பெற்றிருந்தன! வெண்ணிறத் தொண்டையின் பக்கமிருந்த வட்டமான அவளது முகவாய்க்கட்டை ஓர் அழகிய வளைவை உண்டாக்கியது. ஒருவகை நடனத்தைச் சித்திரித்த வெள்ளைப் புள்ளிகளுடன் கூடிய பருத்தியாலான நீலவண்ண 'கவுன்' அணிந்திருந்தாள். ஃபானின் பேச்சை அவள் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கையில், தீவிரமான உணர்ச்சிப் பெருக்குடன் அவள் ஜேம்ஸை உற்றுப்பார்த்தாள்.

"திட்டங்களைப்பற்றி நாங்கள் விவாதித்துக் கொண்டிருந்தோம். அவரும் உங்களுடன் மலைக்குப் பக்கமாக வருவதாக விடாப்பிடியாகச் சொல்கிறார். நாம் ரொம்பவும் ஜாக்கிரதையாக இருந்தாக வேண்டும், அவர் அதி சீக்கிரமாக பிறர் கவனத்தைக்

கவரும் வகையில் இருக்கிறூர்-இது உங்களுக்குத் தெரிந்ததே. எவ்விதத்திலும் நாங்கள் காரியத்தைச் சாதித்துவிடுவோம். உங்கள் காதலர் இஷ்டப்பிர காரமே முயற்சி செய்து பார்க்க வேண்டுமென்று தானே நீங்களும் திடமுடன் ஆசைப்படுகிறீர்கள்?"

ஈஸு கடைக்கண்ணுல் பார்த்தாள். "ஆமாம் என் பக்கத்தில் அவர் இருந்தால், நான் பயப்பட மாட்டேன்!" என்ருள்.

"அதில் ஆபத்தை விளைவிக்கக்கூடிய சாந்தர்ப் பங்களே அதிகமாக இருக்கின்றன!"

"எப்படியும் நாங்கள் இருவரும் போகத்தான் போகிறேம். இந்த ஒரு சந்தர்ப்பத்துக்காகவே நான் வருஷக் கணக்கில் காத்துக் கொண்டிருக்கிறேன்" என்ருள், அவள் இதைச் சொன்னபோது அவளது புன்னகையில் தன்னம்பிக்கை மிகுந்து நின்றது.

"அப்புறம் ஏன் கவலைப்பட வேண்டும்? நாம் அவ்வப்போது சந்தித்துத் தொடர்பு கொள்ளுவ தற்கு நான் உதவுவேன். ஈஸுவையும் நான் பொறுப் புடன் பார்த்துக் கொள்ளுவேன்." என்ருன் ஜேம்ஸ்.

"பிறகு நான் உங்களுக்குச் சொல்லியனுப்பு கிறேன். என்னுடைய நேரத்துக்குத் தோதாக உங்கள் அத்தை புறப்படுவதற்குத் தயாராக இருக் கும்படிச் செய்யுங்கள்" என்ருன் ஃபான்.

இப்போது ஈஸுவைப் பார்த்துப் பேசலாஞன்: "பிரயாணம் நாலைந்து நாட்களுக்குத் தொடரும், ஆகவே, நீங்கள் அதற்குத் தக்கபடி தயாராக இருக்க வேண்டும். நீங்கள் பிங்ஷானைச் சேர்ந்த பிரஜை

யாகப் பிரயாணம் செய்தாக வேண்டும்; குடியானவ பெண் மாதிரி நீங்கள் உடுத்துக்கொள்ள வேண்டும். குடியிருப்புச் சீட்டுக்களை நான் ஏற்பாடு செய்து கொடுக்கிறேன். கதகதப்பான சில ஆடை அணிகளும் ஒருசில ப்ளாஸ்டிக் பைகளும் உபயோகமாக இருக்கும். குடியானவப் பெண்ணுக்குரிய சாமான் களுக்கு மேல் அதிகப்படியாக மூட்டை முடிச்சு வேண்டாம். ஒரு அகலமான கச்சையை இடுப்பு வரைத் தயார் செய்து, அதை ஒட்டியாணம்போல அணிந்துகொள்ளுங்கள். அதில், யாரும் கண்டு கொள்ள முடியாத வகையில், எவ்வளவு தூக்கிச் செல்ல முடியுமோ அவ்வளவு வறுத்த அரிசி போட்டு வைத்துக்கொள்ளுங்கள். மிஸ்டர் ஜேம்ஸூம் கொஞ் சம் எடுத்துச் செல்ல நேரிடும். அவ்வளவுதான்!"

ஜேம்ஸ் பணம் வைத்திருந்த தோல்பையை எடுத்தான்; ஈஸூவின் செவிகளில் ஏதோ முணு முணுத்தான். ஈஸூ முகத்தைச் சுளித்து அவனைத் தடுத்தாள். அந்த மனிதனை ஜேம்ஸ் மனக்குழப்பம் அடையும்படி செய்யக்கூடாது. அவளுடைய தகப்ப னார் அந்த ஆளிடம் கட்டணப் பணத்தைப்பற்றி மறைமுகமாக நிச்சயம் கேட்பார்.

ஃபான் புறப்பட எழுந்தான். "எனக்குத் தகவல் வந்ததும் உங்களுக்குச் சேதி அனுப்புகிறேன்."

அவனுடன் கை குலுக்குவதற்கு ஒரு தப்படி முன்னே எடுத்து வைத்தான் ஜேம்ஸ்.

"நல்லது. உங்களை நான் மறுபடியும் பார்க்க வாய்க்குமா? இங்கே, ஒருவேளை நாளைக்கே சந்திக்க முடியுமா?" என்று வினவினான் ஜேம்ஸ்.

"என்னால் ஒன்றும் உறுதியிட்டுச் சொல்ல முடியாது. நகரத்தில் பல விஷயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. எது எப்படியிருந்தாலும், நாம் தொடர்பு வைத்துக்கொண்டே இருப்போம்!" ஃபான் தெளிவாகவும் ரத்தினச் சுருக்கமாகவும் பேசினான்.

"நீங்கள் அந்தத் துப்பாக்கியை எனக்காகப் பெற்றுத் தருவதாகச் சொன்னீர்கள் அல்லவா?"

"நிச்சயம் முயற்சி செய்கிறேன். உங்களுக்கு அது அவசியம் தேவைப்படும்!"

ஜேம்ஸ் அவனுக்கு மனப்பூர்வமாக நன்றி சொன்னான்.

ஃபான் கிளம்பினான்.

கதவை சப்தமின்றி அடைத்துக்கொண்டு, சிறிது தூரம் அவனைப் பின் தொடர்ந்தாள் ஈஸா.

ஈஸாவுக்காகப் பொறுமையுடன் ஜேம்ஸ் காத்திருந்தான். அவள் திரும்பச் சில நிமிஷங்கள் ஆயின.

"எல்லாம் சுமுகமாக இருக்கிறதல்லவா?" என்று விசாரித்தான் அவன்.

ஈஸா தலையை அசைத்துக்கொண்டாள். "என் லட்சியம் தவறிவிடலாகாது என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளவே கொஞ்ச நேரம் காத்திருந்தேன். ஃபானைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"அவனை நம்பலாமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. வியாபார ரீதியான புள்ளி. மேலேயிருந்து கீழே பூமிக்குத் தள்ளப்படுகிற வகை.... 'பெலெவி' இனம்!"

அவர்கள் இருவரும், தங்களை ஒன்று சேர்த்த அந்த மாயப்பந்தத்தைத் தேடிக்கொண்டும் அதற்கு மறு உத்தரவாதம் கொடுத்துக்கொண்டும், ஒருவரை யொருவர் ஒருகணம் பார்த்துக்கொண்டனர். பிறகு அந்தப் பந்தத்தை அறியாமலேயே, அவர்கள் இரு வரும் அரவணைப்பில் மெய்ம்மறந்தனர்.

"ஜேம்ஸ்!"

"என் அன்பே!"

தன் கழுத்தில் வெம்மை மிக்க நீர்த் துளிகள் விழுந்ததை ஜேம்ஸ் உணர்ந்தான். தன் நெஞ்சில் அவளது தலைமயிரை உராயச் செய்தபடி அவளைத் தன் வசத்தில் மிருதுவாக அணைத்துக்கொண்டான்; பிறகு, அவள் தலையை உயர்த்தி, கண்ணினூடே புன்னகை பூத்த அவள் வதனத்தை நெருக்கமாக உற்றுப் பார்த்தான் அவன். கலவரத்துடன் அவள் தன் தலையை அவனுடைய தோள்களில் மீண்டும் சாய்த்து, அவனது உள்ளத்தின் மகிழ்ச்சியை உணரும் வகையில் மெதுவாக உருண்டுகொண்டிருந் தாள். இருவருமே வாய் திறக்கவில்லை. அவனுடைய கைகள் அவள் முதுகை இன்பமாகத் தடவி, வருடி அலைந்தன.

"நான் உன்னை ஞாபகத்தில் வைத்திருந்ததை விட—உன்னை என் கனவுகளில் பார்த்ததைக் காட்டி லும் நீ மிகவும் அழகாக இருக்கின்றாய்!"

அவள் தலையை உயர்த்தினாள்; அவனுடைய முகத்தைக் கவனத்துடன் பார்த்தாள். தளர்ந்த திருப்தியுடன் உதடுகளைக் கீழே இழுத்துக்கொண்

டாள். அப்போது அவள் கண்கள், அவனுடைய முகம் முழுவதையும் அளந்தபடி துடித்தன.

"நீங்கள் என்னைப்பற்றிக் கனவு கண்டீர்களா?" அவன்மீது அவள் மூச்சு விட்டாள்.

"வேறு எதைப்பற்றியுமே இல்லை!"

"எப்போதுமா?"

"ஆம்; எப்போதும்தான். நாம் ஒரு நாளும் பிரிக்கப்படமாட்டோம்."

"ஃபான் வரும்வரையிலும் என்னால் காத்திருக்க முடியாது; அவன் என்ன அபத்தம் பேசிக்கொண்டிருந்தானென்று எனக்குத் தெரியவில்லை."

"ஏன் நீ கவனிக்கவில்லை. அவன் சொன்னதையெல்லாம் நீ கேட்கவில்லையா?"

"அவ்வளவு துல்லியமாகக் கேட்கவில்லை."

"இடுப்பில் அணியும் கச்சையைப்பற்றிக் கூறியதாவது காதில் விழுந்ததா?"

"ஊஹூம். கச்சை என்றால் என்ன?"

"பிரமாதம். நீ நிஜமாகவே அதையெல்லாம் கேட்கவில்லை போலிருக்கிறது!"

"இல்லை. அந்த ஆள் கூறியது எதையும் நான் கேட்கவில்லை."

"நீ ஒரு விசித்திரமான பெண்ணாக இருக்கிறாய்!" என்று பாராட்டினான் ஜேம்ஸ்.

"அதை மீண்டும் சொல்லுங்களேன்!"

"நீ ஒரு விசித்திரமான பெண்ணாக இருக்கிறாய்! —நீ அகலமான கச்சைகள் தயார் செய்து அவற்றில் வறுத்த அரிசியை நிரப்பி வைத்துக்கொள்ளும்படி அவன் கூறினான். நமதுபயணத்துக்கு அதுவே உணவு."

அதுமாதிரியான பேச்சுக்கள் ஏதோ காதுகளில் விழுந்தது. இப்போதுதான் அதைப்பற்றி யோசிக்கிறேன். என்னைப்பற்றி ரொம்பவும் அற்புதமாகப் பேசியிருக்கிறுன். சீனப் பெண்கள்தான் கச்சைகள் அணிந்துகொள்வது வழக்கம். மேலங்கிக்குக் கீழே மையத்தில் அணிந்துகொள்ளக்கூடிய முக்கோண வடிவமான ஒரு துணி அது!....அதில், நாணயங்கள், கைக்குட்டை முதலியவை வைத்திருக்க ஒரு பையும் இருக்கும்!...."

"நான் அதை அறியேன்!"

"அந்த முறையில் வறுத்த அரிசியை எப்பொழுதும் கதகதப்புடன் வைத்துக்கொண்டிருக்க முடியுமென்று எனக்கு நன்ருகத் தெரியும். அதற்கு உடலின் உஷ்ண நிலைதான் காரணம்."

"என்ருல் உணர முடிகிறது—நீ உனது மகிழ்ச்சியை இழந்துவிடாமல் இருக்கிருய்."

"நீங்களும்தான் உங்கள் மகிழ்ச்சியை இழந்துவிடாமல் இருக்கிறீர்கள். என்னை சிறை எடுத்துச் செல்லும் உங்களுடைய அந்த அழகான யோசனையே போதுமே!....'கண்மூடித்தனமாக இருப்பது', 'அறிவிழந்த நிலையில் இருப்பது' ஆகிய இவ்விரண்டு நிலைகளுக்கும் உள்ள வேறுபாடு பற்றி நாம் பேசி, முடிவில் 'அறிவிழந்த நிலையில் இருப்பது' என்னும் வார்த்தையே சிறப்பானதென்று நாம் இருவரும் ஒப்புக்கொண்டோம். அதை நினைவுபடுத்திப் பார்! அது ஏறக்குறைய சிறுபிள்ளைத் தனமாகவோ, அல்லது முட்டாள் தனமாகவோதான் இருக்கின்றது

—காதலர்களின் நிலை எப்போதுமே இப்படித் தானே!"

"நீ 'சாவ்மோர' என்ற சொற்றொடரை—அதாவது, 'காதல் பைத்தியம்' என்ற சொற்றொடரை எனக்குச் சொல்லிக் கொடுத்தாய்!" என்றான் ஜேம்ஸ்.

" 'சா-மோர!' " என்று அவள் திருத்தம் செய்தாள்.

அவளைத் தொடர்ந்து அவனும் "சாமோர!" என்று சொன்னான். அவனுடைய இதழ்களை அவள் தொட்டாள்.

"மோர!...."

"மோர!...."

அவர்களது உதடுகள் சந்தித்தன. அவள் விலகிக்கொள்ள விழைந்தாள். ஆனால், அவன் விடவில்லை. மெத்தையின் கெட்டியான பலகைப் பகுதியில் அவன் அமர்ந்து, அவளைத் தன் வசமாக இழுத்துக்கொண்டான். அவனுடைய மடியின் ஓரத்தில் அவள் உட்கார்ந்துகொண்டாள். "கனவுலகில் இருப்பது போலவே நான் உணருகிறேன்" என்றாள் அவள்.

"கடந்த சில வருஷங்களிலே நீ ஏராளமான கனவுகளைக் கண்டிருக்க வேண்டுமே!"

"அதைப்பற்றி நான் பேசவில்லை. நீங்கள் இம் மாதிரி திரும்பி வருவீர்களென்று நான் நினைக்கவே இல்லை. ஆனால், நீங்கள் இதோ, இங்கே இருக்கின்றீர்கள்!" என்றாள் ஈஸா.

"என்னோடு வருவதற்கு நீ அச்சப்படவில்லையே?"

"அச்சமா?....என் உள்ளம் துடிக்கிறது. இந்தக் கோட்டையில் ஏராளமான மக்கள் தப்பிச் சென்ருர் கள். நானும் அம்மாதிரி முயற்சி செய்ய எண்ண மிட்டேன். ஆனால், என் தந்தை என்னை அனுமதிக்க வில்லை."

"எனக்குச் சொல்வதற்குப் பல விஷயங்கள் இருக்கின்றன. எங்கிருந்து தொடங்குவதென்று தெரியவில்லை. ஹாங்காங்கில் நம் இருவருக்கும் திருமணம் நடக்கும். அங்கே உனக்கென்று தயாராக ஒரு வீடு வைத்திருக்கிறேன்....அடடே, நீ ஏன் அழு கிருய்?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

அவள் கைக்குட்டையை எடுத்து, மூக்கைச் சிந்தினுள். "என்னுல் அதை நம்பவே முடியவில்லை; அந்த அளவுக்கு நான் ரொம்பவும் ஆனந்தமாக இருக்கிறேன். நீங்கள் சொல்வது நிஜம்தானு?"

"ஆம்; நிச்சயமாக—முற்றிலும் உண்மை!"

ஜேம்ஸ் அவளது முகத்தைப் பார்த்தான்; அவள் முன்னேக்கிச் சரியப்போனுள்; அவளைச் சட்டென்று இறுக்கி இழுத்துக் கட்டிகொண்டான். நீண்ட நேரமாக அவளைத் தாங்கிக்கொண்டிருந்த பாரத்தி னின்றும் அவளுடைய உடலும் உள்ளமும் திடீ ரென்று விடுதலை பெற்றுவிட்டதைப் போன்று தோன்றியது. அது மகிழ்ச்சிதான்!

"ஜேம்ஸ், என்னை நீங்கள் அழைத்துப்போக வரும் விஷயத்தை ஏன் என்னிடம் முன்னமேயே சொல்லவில்லை?"

"கடிதங்களில் அந்த விவரத்தையெல்லாம் காட்ட முடியுமா?"

தன்னுடைய கரங்களை அவனது தோள்களில் பதித்தாள்; அவளுடைய கை விரல்கள் அவனது தலை மயிரை அலைத்தன; பிறகு அவள் கைகள் கீழே தாழ்ந்தன; அவனது தோள்களையும் புஜங்களையும் கொஞ்சுதலுடன் சீராட்டினாள்; தன்னுடைய சகல உணர்ச்சிகளையும் ஒன்று திரட்டி அவனது ஸ்பரி சத்தை—அவன் தன்னை அணைத்திருப்பதை—அனுப விக்க அவள் இப்படிச் செய்தாள்.

"தாங்கள் மெய்யாகவே ஜேம்ஸ் தாயெர் தானே? கனவல்லவே? சொல்லுங்கள்!...."

"நான் ஜேம்ஸ்தாயரேதான்!—உன்னுடைய வனே தான்!"

பிறகு, அவனுடைய உதடுகளில் அவள் ஒரு முத்தத்தைப் பதியவைத்தாள். ஆழ்ந்த ஆர்வம் மிக்க சுவையான முத்தம் அது. அந்த முத்தத்தின் பயனாக, அவள் தனது இதயத்தின் தாகத்தைத் தணித்துக்கொண்டாற் போலவும், தன் ஆன்மாவும் உடலும் மீண்டும் புத்துயிர் பெற ஊட்டத்தைச் சேகரம் செய்து கொண்டாற் போலவும் தோன் றியது. மனவுறுதி, மனோசக்தி, உடல் ஆகியவை முழுமையாகச் சரணடைந்த வகையில், அவனுடைய புஜங்களிலே துவண்டு சரிந்து கிடந்த அவளது மேனியை ஆரத் தழுவினான் ஜேம்ஸ்.

அவன் இதயம் அடித்துக்கொண்டது. அவன் இப்போது 'கண்மூடித்தனமான நிலையில், இருந் தான்; ,அறிவிழந்த நிலையில்' அல்ல. இன்னும் சில நாட்களிலே அவனுடைய மணமகளாக ஆகப்போகிற ஒருத்தியை—இந்த விலை மதிக்கமுடியாத சுமையை

அவன் தன்னுடைய புஜங்களில் ஏந்தியிருந்தான் தலையைக் குனிந்து அவளை ஆதரவுடனும் நேசத்துடனும் முத்தமிட்டான். தங்களுடைய உடல்—ஆன்மாவின் முதல் ஐக்கியத்தை அருவருப்பான அந்தச் சூழலிலே களங்கப்படுத்த அவன் விரும்பவில்லை.

ஆனாலும் தங்கள் இருவருடைய மனித உணர்வுகள் உருகி உருக்குலைந்து இரண்டும் ஒன்றாகிவிட்டதைப் போன்ற விசித்திர உணர்வு அவனுள் கிளர்ந்தெழுந்தது. அவள் சீனப்பெண் என்பது பிரச்சினை அல்ல. இடம், காலம் ஆகியவற்றின் தடைகளெல்லாம் உதறி ஒதுக்கப்பட்டுவிட்டன. அவள் வயதடைந்த ஒரு பெண்; அவனுக்கு அவள்தான் எல்லாம்! அதேபோல அவன்தான் அவளுக்குச் சகலமும். பீகிங்கில் மணம் கோரி காதலில் திளைத்திருந்த நாட்களில்கூட, சீனத்துப் பெண்மையின் பாரம்பரிய பண்பில் அவன் கருத்து மிக்கவனாகவே இருந்தான், அவன் கறைப்படுத்தக்கூடாத ஒரு பரம்பரையின் சின்னமாக அவள் இருந்தாள். தன்னுடைய சுயக் கட்டுப்பாட்டைக் கண்டு அவன் ஆச்சரியமடைந்தான். அதை நியாயமென்று காட்டினாள் ஈஸா. ஒரு பெண் தன் நெஞ்சத்தை ஒருவனுக்குக் கொடுத்துவிட்டால், அப்பால் வாழ்நாள் பூராவும் அவள் அவனுக்கே சொந்தம் என்கிற பண்டைய கீழ்த்திசை நாடுகளின் பாரம்பரியத்தைச் சேர்ந்தவள் அவள். விவாகப் பேச்சுக்கள் பல நடந்தன; ஆனால் அவள் ஆர்வம் இழந்திருந்தாள். ஆரம்ப காலத்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ், சகஜமான திருமணம் நடக்காமல், உடலுறவு கொள்ளும் விசித்திர வழக்கம்

பெருவாரியாக அனுஷ்டிக்கப்பட்டது; அதற்குச் சட்டமும் அனுமதித்தது. திருமணம் என்பது எளிதாகவும், விவாக ரத்து என்பது அதைப்பார்க்கிலும் எளிதாகவும் இருந்தது! "நாங்கள் இருவர்!" என்று ஆரம்பித்து, இரண்டு மூன்று வரிகளுடன் கூடிய ஒரு செய்தித்தாள் விளம்பரம் அன்றைய போக்குக்குப் போதுமானதாக இருந்தது. இளைஞர்களும் பெண்களும், தாங்கள் 'நவநாகரிகமாகவும்' விஞ்ஞான ரீதியாகவும்' ஆகிவிட்டதாக நம்பினார்கள். ஆனால் ஈஸுா துல்லியமான சீனத்துப் பாரம்பரியப் பண்பாட்டைக் கடைப்பிடித்தாள், அவள் "கட்சி"யின் உறுப்பினள் அல்லள்; 'நவநாகரிகமாக இருப்பதற்கு' அவள் சம்மதிக்கவில்லை.

அவள் தாராளமாக, மனம் உவந்து பழகினாள் ஆனால் காதலில் அவ்வாறின்றி அளவோடுஇருந்ததை ஜேம்ஸ் பெரிதும் உணர்ந்து அவள் சுபாவத்தை அறிந்தான். ஆனால் கம்யூனிஸ்ட் வாலிபனோ காதலில் தாராளமாகவும் மனோபலத்தில் அவ்வாறு இல்லாமலும் காணப்பட்டான். எட்டாண்டுகளின் சித்திரவதை இப்பொழுது முடியப்போகிறது. அவள் அவனுக்கே உரியவளாக ஆகிவிடப் போகிறாள்.

"நான் இப்போது புறப்படவேண்டும். இரவு திரும்பிவிடுகிறேன்" என்றாள் அவள்.

"சற்றுப் பொறு. நாம் பேசவேண்டியது நிரம்ப இருக்கிறது."

"ஆகையால்தான், நான் இரவு வரப்போகிறேன். சில நிமிஷங்களில் பேசி முடிப்பதற்கு அது சாதாரணமான சங்கதியல்லவே!"

"இரவு எப்போது வருவாய்!"

சுமார் எட்டு மணிக்கு. சரிதானே? சுவரின் இந்தப் பக்கத்தில் அந்தரங்கமான கொடிப் பந்தல் வீடு ஒன்று இருக்கிறதே, அது உங்களுக்குத் தெரியுமல்லவா? நான் அங்கே இருப்பேன்.

"அது நமக்குப் பாதுகாப்பாக இருக்குமா? நீ அதற்குத் துணிவாயா?"

"நிச்சயம் துணிவேன், நம் இருவருக்காக! ஆஸ் பத்திரி வழியாக நான் வந்துவிடுவேன். நான் என் தகப்பனுருடன் பேசியாக வேண்டும். நகரத்தில் பல சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன!" என்றாள் ஈஸு.

தயக்கத்துடன் அவளைப் போக அனுமதித்தான் ஜேம்ஸ். கதவுக்கப்பால் அவள் மறைந்ததைக் கவனித்தான். பிறகு, மதப்பிரசார சபை இல்லத்துக்குக் குறுக்குவழியாகத் திரும்பினான்.

அந்தக் கொடிப் பந்தல் வீடு—கோடைகால வீடு, சில வாழை மரங்களுக்குப் பின்புறத்தில் ஆஸ் பத்திரிச் சுற்று மதிலின் அருகே செடிகள் அடர்ந்த ஒரு மூலையில் இருந்தது. அவள் மனச் சோர்வடைந்திருந்தபோதோ, அல்லது மனச் சலனம் அடைந்த சமயத்திலோ அவ்விடத்தைத்தான் தேடிச் செல்வது வழக்கம். ஆனால் வழக்கமாக யாரும் அங்கு வருவதில்லை. ஆசனங்களுக்குரிய பலகைகள் உடைந்து கிலமாகி இருந்ததால் அவை வசதிக் குறைவாக அமைந்திருந்தன. ஈஸு தரையில் கிடந்த ஒரு கந்தல் மெத்தையில் முழங்கால்களைக் கட்டிய வண்ணம் அமர்ந்திருந்ததைக் கண்டான் ஜேம்ஸ். அவள்

அவனைப் பார்த்தாள். செப்டம்பர் மாதத்தின் ஆரம்பப் பகுதியின் மாலைப்பொழுது குளிர்ச்சியாக இருந்தது; அவர்கள் தங்கள் முகங்களைப் பகுத்துண ரும் அளவுக்குப் போதிய வெளிச்சம் இருந்தது. தரை யில் அவளுக்கு முன்னால்குனிந்தான்; அவர்களின் கைகள் பிணைந்திருந்தன.

சில கணங்கள் வரை தங்கள் மூக்குகளை சேர்ந் தாற்போல் தேய்த்துக்கொண்டார்கள். இருவர் நெற்றிகளும் ஒன்றோடொன்று உருண்டு புரண்டன —பூனைக் குட்டிகள் மாதிரி. அவர்களது பழைய காதல் விளையாட்டுக்களில் இதுவும் ஒரு வகை! சீனக் காதலர்கள் முத்தமிட்டுக்கொள்ளாமல் ஒருவரை யொருவர் நுகர்ந்து பார்த்துக்கொண் டார்கள் என்பது உண்மைதானா என்று ஈஸுவைக் கேட்டான் ஜேம்ஸ். அதற்கு, ஆங்கிலேயக் காதலர் கள் தங்கள் மூக்குகளை பரஸ்பரம் தேய்த்துக்கொள் வதன் மூலம் மனநிறைவு பெற்றார்கள் என்பது மெய் தானா என்று பதிலுக்குக் கேட்டாள் ஈஸு. அவர் களுக்கு அது தமாஷாக இருந்தது.

"நீ உன் தந்தையுடன் கலந்து ஆலோசித் தாயா?" என்றான் ஜேம்ஸ்.

"ஆம்," அவள் அலட்சியமாகத் தலையைத் திருப் பினாள். மௌனமாக இருந்தாள்.

"உண்மையிலேயே அவர் உன்னை புறப்பட அனு மதிப்பாரல்லவா?"

"ஆம்; உண்மைதான்!"

அவள் குரல் கடுமையாக ஒலித்தது. "ஜேம்ஸ் மிகவும் முக்கியமான சில விஷயங்களை உங்களிடம்

கேட்க விரும்புகிறேன். கவனமாக அதைப் பரிசீலிப் பீர்களா? அது எனக்கு ரொம்பவும் முக்கியம்!"

"நிச்சயமாக நீ கேட்பதைப் பரிசீலனை செய்வேன்."

அவன் அவ்வாறே செய்வான் என்பதற்குரிய நம்பிக்கையின் அடையாளமாக அவன் கையை அவள் லேசாகத் தட்டினாள்.

"நாம் திருமணம் புரிந்துகொள்ளப்போகிறோம். நம்முடன் என் தந்தையையும் அழைத்துச் செல்ல முடியுமா? அவருக்கு வயது ஐம்பத்தொன்பது ஆகி விட்டது. உடல் நலமும் சீர்கெட்டுவிட்டது. எங்களை நீங்கள் அறிவீர்கள். ஒரு சீனப் புதல்வி தன் னுடைய வயது சென்ற பெற்றோர்களின் சந்தோஷத் தைப் பற்றி மட்டிலும்தான் சிந்திக்க முடியும். என் தாய் இறந்துவிட்டாள். அவர் நாளெல்லாம் தனியே இருக்க நேரிடும். அவர் என்னுடன்—நம் முடன் வருவதை நான் பெரிதும் விரும்புகிறேன்."

"எனக்குப் புரிகிறது. நம்முடன் தங்கியிருப் பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. எங்களுக்கு ஒரு பெரிய வீடும் தோட்டமும் இருக் கின்றன. நமக்குத் தேவைப்படும் வேலையாட்களும் நிறைய உள்ளனர். நம் பயணத்தைப்பற்றித்தான் நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். உன் தந்தைக்கு நீந்தத் தெரியுமா? நாம் ஒரு ஆற்றைக் கடக்க வேண்டும். உனக்கு நீந்தத் தெரியும் என்பதை நான் அறிவேன்."

"அவருக்கு நீந்தத் தெரியாது. ஆனால், அவரது உடல்நலக் குறைவுதான் எனக்குக் கவலையாக இருக்

கிறது. அதற்கு ஊட்டக் குறைவுதான் காரணம். தினமும் ஒரு மனிதனுக்குத் தேவைப்படும் பாதிக் கலோரிக்கும் குறைவான உஷ்ணம்தான் நமக்குக் கிடைக்கிறது. ஹாங்காங் போய், தேவையான ஆகாரமும் பராமரிப்பும் கொடுத்தால், அவர் தேறி விடலாம். அவரை விட்டுவிட்டுப் போவதென்பது மிகவும் பயங்கரமான செயலென்றே எனக்குத் தோன்றும்.''

ஜேம்ஸ் ஒரு நொடிப்பொழுது அவளைப் பிடித்தான். "இது உன்னை மகிழ்வடையச் செய்யுமானால் எனக்குச் சம்மதமே!"

"என்னுடைய சகோதரர் மகன் சிறுவன் ஸ்ப்ரௌட்டும் வரவேண்டும். அவனுக்கு இப்போது தான் வயது பத்தாகிறது'' என்று கூறி அவள் லேசான பெருமூச்சு விட்டுச் சிரித்தாள். பிறகு "நான் துணிந்துவிட்டேன். என்ன ஆனாலும் சரியென்று. ஆனால் உள்ள நிலை இதுதான்'' என்றாள்.

"நாம் இன்னும் அதிக அபாயத்தைச் சமாளிக்க நேரிடும்!....சரி, ஆனால் உன் தகப்பனார் உன்னுடன் இல்லாவிட்டால் நீ நிம்மதியாக இருக்கமாட்டாய் என்பது எனக்குத் தெரியும்'' என்றான் ஜேம்ஸ்.

வாய் பேசாமல் அவனுடைய முழங்கால்களில் மிருதுவாக அழுத்தியபடி, தனது தன்னம்பிக்கையையும் நன்றியையும் ஜேம்ஸுக்குத் தெரிவித்தாள் ஈஸூ. அதிகப்படியான சம்பவங்கள் நடந்துகொண்டிருப்பதாக என் தந்தை சொல்கிறார். நாம் விரைவாகச் செயல்பட வேண்டும்.''

"என்ன விஷயம்?''

"ஜனங்கள் மிகவும் மூர்க்கத்தனமாக இருக்கிறார்கள். போக்லோவில் ஏராளமான கொலைகள் நடந்துள்ளன. சில வீடுகள் இன்று கொளுத்தப் பட்டுவிட்டன; யாரால் அப்படிச் செய்யப்பட்டதென்பது நமக்குப் புரியாது. அகதிகள் நகரை நோக்கி வெள்ளமாகப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கின்றனர்! 'கம்யூன்' எனப்படும் சிறிய நகராட்சிப் பிரிவு அமைப்பு முறை ஜனங்களைப் பயமுறுத்தி விட்டது. யுத்த அடிப்படையில் எல்லாவற்றையும் தொழில் முகாம்களாக மாற்றி நிர்வாகம் செய்வார்களென்று தெரிகிறது. ஒருவருமே அத்தகைய முறையை விரும்பவில்லை. எந்த நேரத்திலும், கொந்தளிப்பு உச்ச நிலைக்கு வந்துவிடும். நாம் தயாராக இருக்கவேண்டும்."

இருவரும் ஒருவருக்கொருவர் 'நல் இரவு' சொல்லிக்கொண்டு முத்தம் பரிமாறிக்கொள்வதற்கு முன்பாக, அவர்களின் கனவுகள், ஹாங்காங் வீடு, பிரயாண முஸ்தீபுகள் போன்றவை பற்றிப் பேசித் தீர்த்தார்கள்.

மறுநாள் மாலை மூன்று மணி அளவில், ஸிஸ்டர் ஆங்கெலிகாவுக்கு ரோவான் குடும்பத்தினர் விடை கொடுத்தனுப்பும் சாக்குப் போக்கின் பேரில், அவளது தந்தையும் அவளது சகோதரரின் மகனான சிறுவன் ஸ்ப்ரௌட்டும் அவளைச்சந்திப்பதென்று ஏற்பாடாகி இருந்தது.

அத்தியாயம் 4

கமிஷனர் டெங்பிங்கும், எழுபது—எண்பது படைவீரர்களும் போக்லோவை வந்தடைந்தனர். இச் செய்தி கிராமமக்களின் இதயங்களை பீதியுறச் செய்தது. கம்யூனிஸ்ட் ஆட்சியின் தொடக்கத்தில் 'நிலச்சுவான்தாரர்'களின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட காட்சியைக் கண்முன் காண எல்லாக் கிராமங்களும், நகரங்களும் கட்டாயப்படுத்தப் பட்டிருந்தன. அந்தச் சம்பவத்தைப் போலவே, இப்போது மக்கள் அனைவரையும் பெருந் திரளாகக் கூட்டி, 'மக்களைக்கொண்டே' சோதனை நடத்தப் போகிறார்களோ, என்னவோ? போக்லோவைச் சேர்ந்த எல்லாக்குடி ஜனங்களும் வரிசை வரிசையாக நிற்குமாறு ஆணையிடப்பட்டதிலிருந்து, முன் போலவே இப்போதும் பரிசோதனை நடக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது.

உச்சிப்பொழுது இருக்கும். கிராமத்துக்கு வெளியே கரடுமுரடான—கூழாங்கல் மைதானத்தில் ஆண்களும் பெண்களுமாக இருநூறு முந்நூறு பேர் வரிசைக் கிரமமாக நின்றுகொண்டிருந்தார்கள். நடு மையத்தில், கைகள் முதுகுக்குப் பின்னால் கட்டப் பட்டு முழந்தாளிட்ட வண்ணம் இருந்த ஐந்து

உருவங்களின்மீது உச்சிப் பகல் சூரியன் கூர்மையான வெய்யிலைப் பாய்ச்சிக்கொண்டிருந்தது. ஒருசில தலைவர்களைக் கைது செய்து, உடனே அவர்கள் 'தொழில் முகாம்கள் மூலம் சீர்திருத்தம்' என்னும் பகுதிக்கு அனுப்பப்பட்டுவிடும் மாமூலான நடவடிக்கையாக அது அமைந்திருக்கவில்லை. ஏதோ ஒரு உருவில் அவமானப்படுத்தும் நோக்கத்தோடு பொது ஜனங்கள் அந்நிகழ்ச்சியைக் காணும்படியும் அதில் பங்கு கொள்ளும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார்கள். துப்பாக்கி முனைகளில் பொருத்தப்பட்டிருந்த குத்துவாள்களுடன் இரும்புத் தொப்பிகள் அணிந்த காவலர்கள் விழிப்புடன்-உஷார் நிலையில்-நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஆடவர்களும் பெண்டிரும் குழந்தைகளும் வேடிக்கை பார்த்தவாறு காத்திருந்தனர்.

எல்லாம் தயாரானது. ஒரு ராணுவத் தலைவனும் இரு காரியதரிசிகளும் பின் தொடர டெங்பிங் தோன்றினான். "குட்டி நெப்போலியன்!" என்ற முணுமுணுப்பு சுற்றிலும் பரவியது. அது ஒரு நீண்ட நடவடிக்கையாக இருக்கப் போவதாகவே மக்கள் கருதினர்.

சாய்வு மேஜையும் நாற்காலியும் போடப்பட்டிருந்த மையப்பகுதியை நோக்கி டெங்பிங்கின் கட்டை குட்டையான உருவம் வந்துகொண்டிருந்தது தெரிந்தது. சாய்வு மேஜைமீது இருந்த தஸ்தாவேஜுகளைக் கலைத்துப் பிரித்துப் பார்த்துவிட்டு, முழந்தாளிட்டுப் பணிந்திருந்த உருவங்களை விரைவுடன் நோக்கினான். அவ்வுருவங்களுக்கு மத்தியில்

வயதான ஸ்திரீ ஒருத்தியும் இருந்தாள். பொதுச் சொத்தான தானியத்தைத் திருடிவிட்டு அகப் பட்டுக்கொண்டவள் அக் கிழவி. வேடிக்கை பார்த்த வர்களைக்கூட அவன் நோக்கவில்லை. அவர்களுக்கு நடுவில் 'சுறுசுறுப்பு மிகுந்த, கட்சிச் சார்பு கொண்ட வர்கள்' நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

அந்நேரத்தில், தலைவர்கள் வெவ்வேறு பிரிவு களின் முன்பாகப் போய், பலவகைப்பட்ட குழுக்களை நெருங்கி, அவர்களிடம் தாங்கள்தாம் நீதிபதிகள், ஜூரிகள் என்று நினைவுபடுத்திப் பேசினார்கள். குற்ற வாளிகள் என்று நிர்ணயிக்கப்பட்ட கைதிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுவதை நேரில் பார்க்கக்கூடாது என்றே கிராமமக்கள் நினைத்தார் கள். மண்டியிட்டு இருந்த அவ்வுருவங்கள் வேண்டு மென்றே மௌனம் சாதித்தன. அவர்களது குனிந்த தலைகளும் முதுகுகளும் கொதித்துப் பொசுக்கிய வெய்யிலுக்கு ஆளாகியிருந்தன; அவற்றில் ஏற் கெனவே வேர்வை பெருகி ஓடிக்கொண்டிருந்தது. எப்போதாவது ஒருவன் கண்களில் அச்சத்துடன் மெல்லத் தலையை உயர்த்திப் பார்த்தான்.

அது ஒரு பெரிய விவகாரம். அந்த மேலதிகாரி அங்கு நடந்து முடிந்திருந்த நடப்பின் காரணமாக மிகுதியான கோபாவேசம் கொண்டிருந்தான். மக்கள் செய்த ஒரு செயலுக்காக, அவன் வெட்கத் தால் குமுறினான். பொதுவுடைமைத் தத்துவ அமைப்புப்பற்றிய புரட்சிகரமான போக்கையோ, அல்லது அதைப் புரிந்துகொள்ளும் தன்மையையோ அல்லது அவர்களது பலகாலப் பயிற்சி போதித்தது

கிடையாது. புரட்சியின் அர்த்தம்—பொதுவுடைமைச் சமுதாயத்தை அமைத்து, பதினைந்தே ஆண்டுகளில் இங்கிலாந்தை சைஞ பின்தொடர்ந்து பிடித்து வெற்றிகொள்ள வேண்டுமென்னும் கட்சியின் இலட்சியம்—பெரும் பாய்ச்சல் முன்னணி அமைப்பின் விசேஷம்—ஜனங்களின் மனோபலம், பற்ருக்குறை ஆகியவற்றைப்பற்றி உரத்த குரலில்ஆடம்பரமான பிரசங்கம் செய்தபோது, கடுமையான ஸ்தாயியில் அவன் குரல் ஒலித்தது.

அவன் கிட்டத்தட்ட முக்கால்மணி நேரம் சத்தம் போட்டுப் பேசினுன். பிறகு, பகிரங்கமான பரிசோதனையின் வேலைமுறை தொடங்கப் பெற்றது.

குற்றவாளிகள் ஒருவர் பின் ஒருவராகக் கொண்டுவரப்பட்டார்கள். பொதுச் சொத்தான தானியக் களஞ்சியத்தை உடைக்கத் தொடங்கியவர்களிலே முதலில் கிழக் குடியானவனும் மற்றவர்களும் நின்றனர். அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டார்கள் என்பதை கிராமவாசிகள் அறிந்து வைத்திருந்தார்கள்; அதுபற்றி அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. தலைவர்கள் அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொரு கேள்வியின்போதும் உயர் அதிகாரி அவர்களை நோக்கிக் கூச்சலிட்டான். அவர்கள் "இல்லை!", "ஆம்!", "குற்றவாளிதான்!" என்று திருப்பிக் கூச்சலிட்டார்கள். அவர்கள் செய்ய வேண்டியிருந்ததெல்லாம், தலைவர்களைப் பின்பற்ற வேண்டுமென்பதேயாகும். 'பொதுஜன நீதிபதிகள்'

ஒழுங்காக பிரமாணத்தோடு கோஷமிட்டனர்; கூச்சலின் இடியோசை இயந்திர கதியில் இயங்கி ஞலும், வரவர பெரிதாகிக்கொண்டிருந்தது. ஒருவர் பின் ஒருவராக, எதிரிகள் குற்றவாளிகளென நிரூபிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர். உயர் அதிகாரியைக் கடப்பாறையால் குத்தித் தாக்கிச் சாய்த்த குற்றவாளியும் கொண்டுவரப்பட்டான்; அப்போது எழுந்த கூச்சல் காது செவிடுபடும்படி செய்தது; கால் தப்படிகள் துரிதம் பெற்றன,

டெங்பிங்கின் குரல் உலோகத் தொனி பெற்று, படிப்படியாக உச்சத்தை அடைந்து, இயந்திரத் துப்பாக்கியைப் போன்று தீயைக் கக்கியது.

கிழவியின் முறை வந்தது; கிராம மக்களுக்கு ஒரு நல்ல படிப்பினையை கற்றுக்கொடுக்க நினைத்தான்.

ஏற்கெனவே ஒன்றரை மணி நேரம் கழிந்துவிட்டது.

"பொதுத் தான்யத்தை நீ களவாடியதை ஒத்துக்கொள்கிருயல்லவா?"

பதில் இல்லை.

"கட்சியின் பொதுவுடைமைப் புனர் நிர்மாண திட்டத்துக்கு நீ இடையூறு விளைவித்துக்கொண்டிருக்கிருய் என்பதை நீ அறிவாயா?"

பதில் இல்லை.

"தானியங்கள் பொதுமக்களுக்குச் சொந்தமானது என்பதையும் பொதுமக்களுக்குரிய தான்யங்களைத் திருடியதன் மூலம் நீ பொதுமக்களின் விரோதி என்பதையும் நீ உணர்கிருயா?"

இதற்கும் விடை கிட்டவில்லை; டெங்பிங் எழுந்து நின்ருன். 'நீதிபதிகள்' மௌனமாக இருந்தனர்.

"நான் யாரென்று உனக்குத் தெரியுமல்லவா?"

"நல்ல அதிகாரியே, நான் வயது சென்ற கிழவி. உன் இஷ்டப்படி எனக்குத் தண்டனை அளியும்!"

டெங்பிங் அத்தகைய அவமரியாதையைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. முழந்தாளிட்டிருந்த கிழவியின் முகத்தில் பலமாக அறைகள் கொடுத்தான்: அவள் உடம்பு ஊசலாடித் தரையில் சாய்ந்தது.

பார்வையாளர்களிடையே திகில் மூண்டது.

"எழுந்திரு. இத்துடன் நீ தப்பிக்க முடியாது!" என்ருன். பிறகு காப்பாளனிடம் திரும்பி, "அவள் கைகளை அவிழ்த்துவிட்டு, அவள் உடைகளை நீக்கி விடுங்கள்!...." என்று ஆணையிட்டான்.

தலைவர்களும்கூட இப்போது வாயடைத்துப் போயினர்.

கிழவி இப்போது அறை நிர்வாணமாக நின்ருள்.

சில பெண்டுகள் விம்மி வெடித்துக் கண்ணீர் சொரிந்தனர். கிழவியின் பேரன் பத்து வயசுச் சிறுவன் ஒருவன் கூக்குரலிட்டான். கிழவியின் மங்கிய கண்கள் இப்பொழுது சூன்யமான விறைப்பில் அமிழ்ந்திருந்தன.

"மன்னிப்புக் கேள்!"

கிழவி மன்னிப்புக் கேட்டாள்.

"கன்னத்தில் போட்டுக் கொள்!"

வயதான கிழவி தன் முகத்தின் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலுமாக மாறி மாறி அறைந்து கொண்டாள்.

"இப்போது நீ மண்டியிட்டுப் பணிந்து சென்று, ஒவ்வொருவருக்கும் முன்பாக உன் முகத்தில் அறைந்துகொண்டு, பொதுமக்களின் விரோதியாக ஆனதற்காக அவர்களிடம் நீ மன்னிப்புக் கேள்!"

காவலன் ஒருவன் அவளை இட்டுச்சென்றான். கூழாங்கல்தரையில் கிழவி முழந்தாளிட்டாள். போக்லோ போன்ற கிராமத்தில் முதிய பிராயத்துக்காக மதிக்கப்பட்ட பாட்டி அவள். அவளை நேசித்து அன்பு பாராட்டி மரியாதை செய்தவர்களுக்கு அவள் பெரிய அத்தை. "பெரிய அத்தை" என்றே பெரும் பகுதிக் கிராம மக்கள் அவளைக் கூப்பிட்டனர். பெண்கள் அழுதனர்; பேரப்பிள்ளை பலமாக அழத் தொடங்கினான். அந்தக் கிழவி ஒவ்வொருவர் முன்னிலையிலும் முழந்தாளிட்டு நின்று தன் கன்னங்களில் தானே அறைந்த வண்ணம் கூட்டத்தை வலம் வந்தாள்.

வெறுக்கத்தக்க விஷயம் அது! அவளது ஒவ்வொரு சிறு அசைவும் வேதனையாக இருந்தது. அவளது முழங்கால்களில் கூரிய கூழாங்கற்கள் உராய்ந்து குழிகள் உண்டாகியிருந்தன.

கிழவி சோர்ந்து சாயத் தொடங்கினாள். அவள் மேனிமுழுவதிலும் வேர்வை பெருகி வழிந்துகொண்டிருந்தது.

திடீரென்று அவளுடைய பேரப்பையன் ஓடி வந்து அவளது அரைநிர்வாண மேனியின்மீது விழுந்

தான். மேற்கொண்டு செல்ல முடியவில்லை; அவள் கல்குவியலில் சாய்ந்துவிட்டாள்.

இந்தத் தடையினால் வெகுண்ட டெங்பிங் அங்கு நடந்து போனான்.

"இந்தப் பையனை அப்புறப்படுத்துங்கள். அவனை வடக்கு பிரதேசத்திற்கு மற்றவர்களுடன் அனுப்புங்கள்!"

தன்னிச்சையற்ற முணுமுணுப்புக்கள் அதிகரித்தன! மக்களின் அத்தகைய தன்னிச்சையற்ற முணுமுணுப்புக்களை யாரும் கட்டுப்படுத்தமுடியாது பயம் வெறுப்பாகவும், வெறுப்பு கோபமாகவும் மாறியது.

"ஒரு பையனை நீங்கள் அவ்வாறு செய்யலாகாது!" என்று யாரோ ஒருவன் டெங்பிங்கிடம் சொன்னான்.

"ஓஹோ! நான் அப்படிச் செய்யக்கூடாதோ?"

அதிகாரியிடம் ஓர் உயரமான ஆள் வந்து நியாயத்தை எடுத்துப் பேசினான்.

"அன்புகொண்ட ஐயா, நான் கெஞ்சிக்கேட்டுக் கேட்டுக்கொள்கிறேன். அவனை விட்டுவிடுங்கள். பையன்மீது கருணைகாட்டுங்கள். அவனுக்கு ஒன்றும் தெரியாது!"

"நீ யார்?"

"சாங்ஃபூ! கிழவி என் அம்மா. பையன் என் மகன். அவனை விட்டுவிடுங்கள். மன்றாடிக் கெஞ்சுகிறேன். அவனுக்குப் பதிலாக என்னை வேண்டுமானால் வடக்கே அனுப்புங்கள்!"

கமிஷனர் டெங்பிங் அவனை அமைதியாக ஆராய்ந்தான்.

"அப்படிச் செய்ய என்ருல் இயலாது. 'கம்யூனுக்கு' நீ தேவை! நீ வருத்தப்படாதே. உன்ருல் அளிக்கமுடியாத சரியான பயிற்சியை உன் மகன் அங்கு பெறுவான்."

சாங்ஃபூ வாட்டசாட்டமான வலுமிக்க அமைதியான மனிதன். ஓர் அறை அறைந்தானேயாஞல் அந்த உயர் அதிகாரியைக் கீழே தள்ளிவிடுவான் அவன். ஆனுல் அவன் தன்னுடைய விரல் மூட்டுக்கள் வெளுத்து வெள்ளையாக மாறும் வரையில் கைமுஷ்டியை இறுக மூடியபடி தன்னைக் கட்டுப் படுத்திக்கொண்டு அமைதியாக இருந்தான். உயர் அதிகாரி-கமிஷனர் அவனை உற்றுப் பார்த்துப் புன்னகை புரிந்தான்.

தான் செய்த தவறு என்ன என்பதை அறியக் கூட முடியாத அந்தப் பையனை ஒரு காவலன் அழைத்துச்சென்று விட்டான்.

சம்பவங்களின் எதிர்பாராத திருப்பம் நடவடிக் கைகளைத் தடைச்செய்தன. சுற்றிலும் நின்ற ஜனங்கள் வம்பளந்து கொண்டிருந்தனர்.

"உங்கள் இடங்களுக்குத் திரும்பிப் போங்கள்!" என்று டெங்பிங் கத்திஞன்;

சாங்ஃபூ குனிந்த தலையுடன் தன் அன்னையிடம் சென்ருன். அவனுடைய மெலிந்த இளம் மனைவி குப்புறப் படுத்துக்கிடந்த தம் மாமியாரின் உடலைப் புரட்டித் திருப்பிக் கொண்டிருந்தாள். அவள்

அதிர்ச்சி அடைந்தாள். அவளுடைய மகனை 'அவர்கள்' பறித்துச் சென்றுவிட்டனர்.

"இன்னும் அது முடியவில்லை," என்று பாதுகாப்பாளனிடம் திரும்பினுன் டெங். "அந்தக் கிழவியை கொண்டு வாருங்கள். அவளை மறுபடியும் கட்டுங்கள். மைதானத்தின் நடுவில் அவளை மண்டியிடச் செய்யுங்கள். பகிரங்கப் படிப்பினையாக இருக்கட்டும் இது! இவ்விஷயம் இத்துடன் இருக்கட்டும். அவளைக் கட்டிப் போடுங்கள். அவளை நெருங்கி யாரும் வரக் கூடாது. விரும்பினுல், கிராம ஜனங்கள் இப்போது இங்கிருந்து புறப்பட்டுச் செல்லலாம்!...."

அப்பொழுது மணி மூன்று.

வெய்யிலில் மூன்று மணிநேரம் மண்டியிட்டு நின்றபின் அந்தக் கிழவி தரையில் சாய்ந்தாள். நினைவிழந்த நிலையில் அவளை அவள் மகன் சாங்ஃபூவும் அவன் மனைவியும் தூக்கிச் சென்றுர்கள்.

வெய்ச்சோவில் அடுத்த நாள் சூரியன் உதித்தான். மூடுபனி நிரம்பிய ஒரு பலமான கரைமேலே சூரிய ஒளியின் செஞ் சிவப்பு நிறம் பாய்ந்தது. அது, கெடுங்குறிகாட்டும் ஒளியை ஆகாயத்தில்பரப்பியது. வழக்கத்திற்கு மாறுக வெய்யில் மிகக் கடுமையாக இருக்குமென்பதை அது உறுதி செய்தது.

ஸிஸ்டர் ஆங்கெலிகா வழக்கத்தைவிட அதிகமாக இருமினுள். துப்பாக்கிகள் சுட்ட சத்தம் விடியற்காலையில் கேட்டது. மறுபடி அவளால் தூங்க முடியவில்லை.

"சென்ற இரவில் துப்பாக்கி வேட்டுச்சத்தம் உன் காதுகளில் விழுந்ததா? என்று அவள் விசாரித்தாள்,

"இல்லை. நான் அயர்ந்த தூக்கத்தில் இருந்தேன்." என்று சிற்றுண்டி மேஜையிலிருந்த ஜேம்ஸ் பதில் மொழிந்தான்.

"வைகறைக்குக் கொஞ்சம் முந்தின பொழுது அந்நேரத்தில் விழித்துக்கொள்வது வழக்கமாகி விட்டது. இப்போது. ஆனாலும் சற்று சிரமமாகத் தான் இருக்கிறது. என் படுக்கையிலிருந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தேன். சில நட்சத்திரங்கள் கண்ணுக்குத் தெரிந்தன. எதற்காக இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். மீண்டும் உறக்கம்பிடிக்கவில்லை."

நெற்றிக்குக் குறுக்கே ஒரு கைக்குட்டையைக் கட்டிக் கொண்டான் ஜேம்ஸ். "காலையிலேயே வெயில் இப்படிக்கொளுத்துகிறதே! இரவில் சாப்பாடு கொண்டுவந்தபோது அந்தப் பையனின் முகத்தைக் கவனித்தீர்களா? பொங்கி வெடிக்கப் போகிறவன்போலவே தோன்றினன். காரணம் புரியவில்லை; என் உடம்பு நலம் குன்றியிருப்பதாகத் தோன்றுகின்றது" என்ருன்.

"பகிரங்கமாகத் தூக்கிலிடுவதை நான் பார்த்ததுண்டு. ஆனல் விடியற்காலையில், அமானுஷ்யமான வகையில் ஒரு துப்பாக்கிச் சத்தம் கேட்கிறது. என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பது புரியவில்லை."

ரத்தம் சிந்தப்பட்டால், அந்த விவரம் வழக்கமாக ஆஸ்பத்திரிக்குத்தான் முதன்முதலில் தெரியும். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு, ஆஸ்பத்திரியிலிருந்து சகோதரி ஆங்கெலிகாவுக்குத் தகவல் ஒன்று வந்தது. காயம் அடைந்தவர்களுக்குப் பணிபுரிய சிப்பந்திகள்

தட்டுப்பாடாக இருந்தமையால், அவளால் உதவ முடியுமா என்று கேட்கப்பட்டிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை.

ஸிஸ்டர் ஆங்கெலிகாவின் இதயம் சிறிதுநேரம் ஊசலாடியது. பின், தன்னைத் தயார் செய்து கொண்டு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள்.

வெளியிலிருந்து வந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்குரிய கூடத்தின் தரையில், கைகளும் பாதங்களும் ரத்தம் தோய்ந்து சதசதவென்று காயமடைந்த ஏராளமானபேர் கிடத்தப்பட்டிருந்தனர். வலி தாளாமல் மூர்க்கத்தனமாக முரண்டு பிடித்த மூன்று வயசுக் குழந்தையை அமைதிப்படுத்த முயன்றுகொண்டிருந்த பெண் ஒருத்தி கால்களைச் சம்மணமிட்டுத் தரையில் குந்தியிருந்தாள். 'உதவுங்கள்' என்று வாய்விட்டுச் சொல்ல முடியாத ஒரு மனப்பூர்வமான பிரார்த்தனையுடன் ரத்தம் பீறிட்ட குழந்தையின் முன் கையைப் பிடித்துக் கொண்டு, தன்னைக் கடந்துசென்ற மதப்பிரச்சார சபைப் பெண்மணியைக் கெஞ்சுதலுடன் பார்த்தாள் அவள்.

குழந்தையைப் பார்வையிடுவதற்காக ஸிஸ்டர் ஆங்கெலிகா நின்றாள்; குழந்தை அதிர்ச்சியடைந்திருந்தது. அதன் கண்கள் அகன்று பெரிதாகத் தோன்றின; பாதங்கள் வலிப்பு நோயால் இழுத்து இழுத்து உதறின. அதைச் சாந்தப்படுத்தும் நோக்கத்துடன் அதன் முகத்தை தன் மார்பகத்தில் புதைத்த வண்ணம் இருந்தாள் குழந்தையின் தாய்.

"சற்றும் தெய்வ நம்பிக்கையற்ற சிப்பாய்கள்" என்று ஸிஸ்டர் ஆங்கெலிகா தன் மனத்திற்குள்

சபித்துக்கொண்டு, குழந்தையின் புஜத்தைத் தூக்கிப் பரிசோதனை செய்தாள். ஒரு துப்பாக்கி ரவை அவனுடைய சுண்டுவிரலைப் பிய்த்துவிட்டு, முன்கையை உராய்ந்திருந்தது. ரத்தம் இன்னமும் சொட்டுச் சொட்டாக வடிந்து, அவனுடைய அன்னையின் கால் சட்டைகளில் விழுந்தது.

நான்கைந்து மருத்துவப் பணிப் பெண்கள் மிகவும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டனர். கெட்டியாகக் குழந்தையைப் பற்றிய வண்ணம், அந்தத் தாயை எழச் செய்ய ஆங்கெலிகா உதவினாள்.

"நீ எந்த ஊர்?"

"போக்லோ!"

"யார் உன்னைச் சுட்டார்கள்?"

"இராணுவ வீரர்கள்!"

"ஏன்?"

"தெரியாது!"

காயமடைந்தவர்களுக்குச் சிறிது நேரமாக சிகிச்சை செய்து கொண்டிருந்த டாக்டருக்கும் மருத்துவப் பணிப் பெண்களுக்கும் சுறுசுறுப்பாக உதவி செய்து கொண்டிருந்தாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா. சிகிச்சை பெற வேண்டி மற்றவர்கள் பொறுமையாகக் காத்திருந்தனர். அன்று தினம் ஓய்வு பெற்றிருந்த நர்ஸுகள் அனைவரும் திருப்பி அழைக்கப்பட்டிருந்தனர்.

காலில் துப்பாக்கி சூடுபட்ட சிறுவன் ஒருவனுக்கு உதவிய வண்ணம் அசாய் உள்ளே நுழைந்ததை அவள் பார்த்தாள்.

அவள் அசாயிடம், என்ன நடந்ததென்று விசாரித்தாள்.

"பாலத்தைக் கடக்க முயன்றதால், இந்த ஆட்கள் சுடப்பட்டனர். இன்று காலையில் என்ன நடந்ததென்பதைப் பார்ப்பதற்கு ஒரு கூட்டம் கூடி விட்டது. போக்லோவில் கலகம் இருந்தது. இவர்கள் தப்பிக்க முயன்றனர். சிறிது தூரத்தில் மூன்று பேர்கள் செத்துக் கிடக்கின்றனர். நான் அவர்களைப் பார்த்தேன். இரண்டு ஸ்திரீகள், ஒரு குழந்தை! அவர்களுக்கு அருகில் செல்ல யாரும் அனுமதிக்கப்படவில்லை. பாலத்தின்மீது எல்லா போக்குவரத்தையும் மூடிவிட்டது காவல் படை. இரவில் தப்பிச் சென்றிருந்தவர்களைச் சேகரம் செய்யும் நோக்கத்துடன் வீதிகளிலுள்ள ஜனங்களை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்."

ஸிஸ்டர் ஆங்கெலிகா பொறுமையுடன் சகித்துக்கொண்டு வருத்தம் தோய புன்சிரிப்புச் சிரித்தாள். "அசாய், உனக்கு நல்ல வாழ்வு கிடைக்கும். அந்தப் பையனை அங்கேயே உட்காரும்படி செய். அவன் கொஞ்ச நாழிகை காத்திருக்க வேண்டி வரும்."

ஈஸூவைப் பார்த்து, தான் அவளுடன் பேச விழைந்ததாகக் கண்ணால் சமிக்ஞை செய்தான் அசாய். குட்டி ஸ்ப்ரௌட்டுடன் அவன் கொண்டிருந்த நட்பின் காரணமாக அவளை அவனுக்கு நன்ருகப் பழக்கம்.

ஈஸூவுக்குக் கோபம் வந்தது; "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

அவன் அவளுக்குப் பக்கவாட்டில் நகர்ந்து அவளது அங்கியின் கைப்பாகத்தை இழுத்தான். "என்னுடன் வாருங்கள்," என்று அழைத்தான் பையன்.

"நான் இப்போது என் கடமையை முடிப்பதில் முனைந்திருக்கிறேனே, அது உனக்குப் புரியவில்லையா?"

பொறுமையிழந்த முகச் சுளிப்புடன் அவளை வற்புறுத்தினான் அசாய். "என்னுடன் வந்து, ஒரு ஸ்திரீயின் உயிரைக் காப்பாற்றுங்கள். பாலத்தில் இறந்த மனிதர்கள் சிலர் கிடக்கிறார்கள். உங்கள் சிநேகிதர் ஒரு வெள்ளையர். சரிதானே?"

"அவருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?"

"அவரும் வரவேண்டுமென்று ஆசைப்படுகிறேன் நான்."

"எங்கே? எதற்காக?"

"பாலத்தில் கிடக்கும் இறந்த மனிதர்களுக்காக!...."

"இறந்த மனிதர்களா?....இறந்த மனிதர்களை அவர் காண வேண்டுமென்று நீ ஏன் விரும்புகிறாய்!"

"அவர் வந்து பார்க்க வேண்டும். இது என் விருப்பம். பாலத்தில் இரண்டு ஸ்திரீகளும் ஒரு குழந்தையும் இறந்து கிடக்கின்றனர்; அல்லது இறந்து போனதாக கருதப்படுகிறது. ஆனால் ஸ்திரீகளிலே ஒருத்தி இறந்து கொண்டிருக்கிறாள்; ஆனால் இறந்துவிடவில்லை. அவர்களை அணுக காவல் படையினர் யாரையும் அனுமதிக்கவில்லை. உங்கள் சிநேகிதர் ஒரு ஆங்கிலேயர்; பலசாலி. அவரிடம்

போய்ச் சொல்லுங்கள். அவரும் நானும் அந்த பெண் பிள்ளையை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு வர முடியும்."

"அந்த ஸ்திரீ இன்னமும் உயிருடன் இருப்பதாக நீ நிச்சயம் நம்புகிருயா?" என்று கேட்டாள் ஈஸா.

"அவளை நான் என் கண்களால் பார்த்தேன். அங்கு கூட்டம் கூட்டமாக மக்கள் சென்றுகொண்டிருக்கிருர்கள். நான் முதல் தடவை அந்த ஸ்திரீயைப் பார்த்தபோது, அவள் முகம் எங்களை நோக்கி திரும்பியிருந்தது. நான் பின்னுல் சென்றதும், அவள் முகம் எங்களிடமிருந்து அப்பால் திருப்பப்பட்டு இருந்தது. இறந்த மனிதர்கள் தங்கள் முகங்களைத் திருப்பிக் கொள்ள மாட்டார்கள் அல்லவா?' அவள் இறந்துவிட்டதாகக் காவல் படையினர் சொல்கின்றனர். ஆனுல் அவள் சாகவில்லை என்று நான் நினைக்கிறேன்!" என்முன் அசாய்.

ஈஸாவின் முகம் சிவந்தது. "நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். நான் இறந்துகொண்டிருக்கும் ஒரு ஸ்திரீயிடம் போகவேண்டும்" என்ருள் மற்ருெரு நர்ஸிடம்.

அசாய் ஓடத் தலைப்பட்டான்; அவளும் அவனைப் பின்பற்றினுள்.

பலமாகக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு ஜேம்ஸ் கதவைத் திறந்தான்.

"என்ன விசேஷம்?" என்று அவன் ஆச்சர்யத்துடன் ஈஸாவைக் கேட்டான்; 'வாலிபர் கூட்டுறவு சங்கத்தின் தலைவன் என்று அந்தப் பையனைப் பார்த்

ததும் நினைவுபடுத்திக் கொண்டான். அசாய்க்கு உறுதியான, உருண்டையானவாய் இருந்தது. முன் பற்களில் இரண்டு வரிசை தப்பியிருந்தன.

"செத்துக் கொண்டிருக்கும் பெண் ஒருத்தி பாலத்தில் கிடக்கிறாள், காவல் படையினர் யாரையும் அவள் பக்கம் செல்ல அனுமதிக்கவில்லை. என்று அசாய் சொன்னான். நம்மால் ஆனதைச் செய்வோம். நானும் உங்களுடன் வருகிறேன்!" என்று விவரம் சொன்னாள் ஈஸா.

உள்வசமாக அமைக்கப்பட்டிருந்த சிறிய வாசல் வழியே மூவரும் சேர்ந்து ஓடினார்கள்.

அவர்கள் ஓடியபோது, திரும்பிப் பார்த்துப் பேச அசாய்க்கு நேரம் கிடைத்தது. ஜேம்ஸிடம், "வெள்ளை மனிதரே நீங்கள் சீனமொழியைப் பேசுவதற்குத் திறமை பெற்றிருப்பதற்காக உங்களை நான் விரும்புகிறேன்" என்றான் அவன்.

"இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்துக்குக் காரணம் என்னவென்று எனக்குச் சொல்லுங்கள்."

ஓட்டத்தின் வேகத்தைக்கட்டுப்படுத்திக்கொண்டார்கள் அவர்கள்.

"பெரும் எழுச்சியே காரணம். நகரத்தில் படைவீரர்கள் நேற்று வந்துசேர்ந்து இருபது-முப்பது பேர்வழிகளைப் பிடித்து ஜெயிலில் அடைத்துவிட்டதாக போக்லோ ஆட்கள் சிலர் என்னிடம் தெரிவித்தார்கள். அரிசிக் கலகம் ஒன்று நடந்தது. இரண்டு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் எல்லோரையும் ஒரு சிறுவனையும் சேர்த்து வடக்கு பிரதேசத்திற்கு கப்பலேற்றி அனுப்பப் போவதாக

இருந்தது. கைது செய்யப்பட்டவர்களின் மனைவி மார்கள் நேற்றிரவு ஆத்திரங்கொண்டு சிறைக் குள்ளே பிரவேசித்துவிட்டார்கள். படை வீரர்களில் எத்தனை பேர் கொல்லப்பட் டார்கள் என்று ஒருவருக் கும் தெரியாது. எல்லாம் இருட்டில் நடந்தது. கிராமத்து மக்கள் பீதியடைந்து அவரவர் தப்பிப் பிழைக்க முயன்றனர். இன்று காலையில் ஆற்றின் கரையில் பலர் சுடப்பட்டனர்."

"அரிசிக் கலகம் ஏன் நடந்தது?"

"எனக்குத் தெரியவில்லை. மக்கள் பசியால் துடித்துக்கொண்டிருக்கையில், அரிசி, தான்யங்களை எலிகள் தின்னும்படி 'அவர்கள்' அனுமதித்ததாக நான் கேள்விப்பட்டேன். அது சரியல்ல. அப்படித் தானே?"

"அது சரியல்ல என்றே தோன்றுகிறது."

"இன்னும் கூடுதலாக துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவே செய்யும். போக்லோ-டுங்க்வான் மனிதர் களின் சுற்றத்தார்கள் நகரத்தில் ஏராளமாக இருக் கிறார்கள்."

பாலத்தின் தலைப்புப் பகுதியைச் சுற்றிலும் வீரர்கள் அடங்கிய காவல் வளையத்தை அமைத்து ஜனங்களை வரிசையாக நிறுத்த முயன்றுகொண் டிருந்தது காவல்படை.

"துப்பாக்கிப் பிரயோகம் முடிந்துவிட்டது. நீங்கள் என்ன பார்க்கவேண்டும்?"

பாமர ஜனங்கள் சில நிமிட நேரத்துக்கு நின்று விட்டுப் புறப்பட்டார்கள். பாலத்தில் கிடந்த அந்த

மூன்று பிணங்களைப் பார்ப்பதற்காக மற்றவர்கள் வந்து சேர்ந்தனர்.

அசாய், ஜேம்ஸையும் ஈஸாவையும் அழைத்துக் கொண்டு கூட்டத்தில்உந்திச்சென்று முன்னேறினான்; அனைவரும் திரும்பினர்.

அசாய் தன்னுடைய முத்திரைச் சீட்டைக் காண்பித்தான்; முன்னே போய் பிணங்களைப் பார்ப்பதற்கு அனுமதி கோரினான்.

"அந்த அம்மாள் இன்னமும் சாகவில்லை." என்றான் அவன், ஓர் உடலைச் சுட்டியபடி.

ராணுவத் தலைமை அதிகாரி-ஸார்ஜெண்ட் அவ்விடம் வந்து, விஷயம் என்னவென்று கேட்டான்.

அசாய், "அந்த ஸ்திரீ தன் முகத்தைத் திருப்பியதை நான் பார்த்தேன்!" என்று விளக்கம் கொடுத்தான்.

"வேறு யாராகிலும் பார்த்தார்களா?"

பதில் ஏதும் வரக்காணோம்.

அந்த அயல்நாட்டானைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்தான் சார்ஜெண்ட்.

ஈஸா கூறினாள்: "நான் ஆஸ்பத்திரியிலிருந்து வருகிறேன். நான் ஒரு நர்ஸ். இந்த ஆங்கிலேயர் ஒரு டாக்டர். அந்த ஸ்திரீயைப் பரிசோதனை செய்து பார்க்க அனுமதிப்பதில் தொந்தரவு ஒன்றும் இருக்காது. அவள் இன்னமும் உயிருடன் இருக்கும் பட்சத்தில், நாங்கள் அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்கிறோம்."

ராணுவத் தலைமை அதிகாரி விடை எதுவும் சொல்லமுடியவில்லை. வெள்ளை மனிதர்கள் எல்லாருமே சீனர்களுக்கு எவ்வகையிலேனும் டாக்டர்கள் தாம்!

"நல்லது. போய்பாருங்கள்!" பிறகு ஜனங்கள்பக்கம் திரும்பி, "திரும்பிச் செல்லுங்கள். பார்ப்பதற்கு ஒன்றும் இல்லை!" என்று கூக்குரல் எழுப்பினார்.

முப்பதடி தூரத்தில் கிடந்த அசைவற்ற உடல்களை நோக்கி அவர்கள் மூவரும் விரைந்தனர். இராணுவத் தலைமை அதிகாரி அவர்களைப் பின் தொடர்ந்தான். ஈஸா அந்த ஸ்திரீயின் அருகில் மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு, அவள் நாடியைப் பார்த்தாள். கண் இதழ்களைத் திறந்தாள். ஜேம்ஸ் அவளது இருதயத்தைக் கவனித்துக் கேட்டான்.

இராணுவத் தலைமை அதிகாரியை நோக்கி, "நீங்கள் கவனியுங்கள்; அவளுடைய இருதயம் இன்னமும் அடித்துக்கொண்டிருக்கிறது," என்றான் அவன்.

ஸார்ஜண்ட் மண்டியிட்டு, அவள் இருதயத்தை உற்றுக் கேட்டான்; நாடித் துடிப்பை உணர்ந்தான்: அவனுக்குத் திருப்தி உண்டாயிற்று. பிறகு, அவன் மற்ற இருவரையும் பரிசோதித்தான். ஒருத்தி பாட்டி; அவளது பாதங்கள் சேர்த்து கட்டப்பட்டிருந்தன. முழங்கால்களில் உறைந்த ரத்தம் மூடியிருந்தது. அடுத்ததாக இறந்த பத்து வயதுச் சிறுவன் வாயிலிருந்து ரத்தம் ஒழுக, அவள் பக்கத்தில் கிடந்தான்.

"நல்லது; இந்த அம்மாளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லுங்கள். மற்ற இருவரும் செத்து விட்டார்கள். அது உறுதி!"

ஈஸா குனிந்து அந்த ஸ்திரீயைப் பரிசோதனை செய்தாள். துப்பாக்கி ரவை பாய்ந்த காயங்கள் எதுவும் காணப்படவில்லை. ரத்தம் ஒழுகவில்லை; ஆனால் சுயப் பிரக்ஞை தப்பிக் கிடந்தாள். அவளு டைய கைகளையும் கால்களையும் மென்மையுடன் படியவைத்தாள் ஈஸா. அவளைக் கொண்டுவரும்படி ஈஸா கேட்டுக்கொண்டாள்.

ஜேம்ஸ் குனிந்தான்; உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த அந்த பெண் பிள்ளையைச் சுமந்து செல்ல அவளைத் தூக்கியபோது மடிந்துபோன பையனின் உடலை சார்ஜண்ட் காலால் உதைத்து ஆற்றில் தள்ளிய காட்சியை அவன் கண்டான்.

கரையிலிருந்து பயமுறுத்தும் கூக்குரல் கேட்டது

"நீங்கள் ஏன் அப்படிச் செய்தீர்கள்?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"மக்கள் கூட்டம் விகாரப்படும் வகையில், சுற்றி லும் பிணங்களைப் போட்டு வைத்துக்கொண்டு இருப்பதால் ஒன்றும் உபயோகமில்லை அல்லவா?" என்று அவன் பதிலிறுத்தான். மூட்டைபோல் சுற்றப் பட்டிருந்த அந்தப் பாட்டியின் உடலை பாலத்தின் விளிம்புக்கு மேலே உதைத்துத் தள்ளத் தொடங்கி ஞன், சார்ஜண்ட். உடலின் கறுப்புத் தோற்றம் தண்ணீரில் உருண்டு விழுந்தபோது; திகிலின் அலறல் சத்தங்கள் ஆற்றின் கரையில் மோதி எதிரொலித்தன.

அமைதியுடனும் குழப்பம் அடையாமலும் சார்ஜண்ட் திரும்பினான். அசாய் பீதியின் வடிவமாகத் தோன்றினான்.

ஜேம்ஸ் மௌனமாக நடந்து சென்றான்; மரணப் பிடியில் ஊசலாடிய அந்த ஸ்திரீயின் மேனி அவனுடைய கைகளில் இருந்தது; அவனுக்குப் பக்கமாக ஈஸா நடந்தாள்.

அவர்கள் நெருங்கியதும், கூட்டம் பின் வாங்கியது.

"இனி போய்விடுங்கள்!" என்று கூச்சலிட்டான் இராணுவத் தலைமை அதிகாரி. "இனிமேல் பார்ப்பதற்கு உங்களுக்கு ஒன்றுமில்லை!" என்று தொடர்ந்தான். நீண்ட நடையுடன் அவர்களைக் கடந்தான். அப்போது, ஜனங்களின் கண்கள் பிடிவாதமாக மௌனம் சாதித்தன; பகைமை உணர்ச்சியும் அவற்றில் இருந்தது.

நீண்ட தாடியுடனும் அகலமான குடியானவத் தொப்பியுடனும் கூடிய கிழவன் ஒருவன் அவனிடம் நெருங்கி வந்து "மகனே, அந்தக் கிழவி மிகவும் முதிர்ந்த பிராயம் வரை வாழ்ந்திருக்கிறாள். அவளுக்குக் கண்ணியமான ஈமச்சடங்கு நடைபெற நீ அனுமதித்திருக்க வேண்டும்!" என்றான்.

"எனக்குத் தெரியும் பெரியப்பா. ஆனால், அந்தச் சவங்கள் எல்லோரது கவனத்தையும் ரொம்பவும் பயங்கரமாகக் கவர்ந்து கொண்டிருந்தன."

கிழவன் கடந்து சென்றான்.

குனிந்த தலையுடன் ஜனங்கள் கலைந்து போய்க் கொண்டிருந்ததை அதிகாரி கவனித்தபோது,

விவகாரம் இத்துடன் முடிந்துவிடவில்லை என்றே அவனுக்கு உள்ளூறத் தோன்றியது.

வயதான அந்தப் பெண்மணியின் உடல் மிகவும் கனமாக இல்லை. அவள் முகம் அதைக் காட்டவில்லை. தொண்ணூறு பவுண்ட் எடைக்குமேல் அவள் இருக்கமாட்டாள். சாப்பாட்டு வசதி அவளுக்குக் குறைவு. ஜேம்ஸ், ஈஸு, அசாய் மூவரும் தெரு வழியே சென்றபோது, ஆடவர்களும் பெண்டிர்களும் வெளிப்படையான வியப்போடு பார்த்தார்கள். ஓரிருவர் கை தட்டினார்கள். அவர்களுக்கு வழியை உண்டாக்கிய வண்ணம் முன்னே நடந்து சென்றான் அசாய்,

அன்றைக்கு அவன் எல்லோரது கவனத்தையும் கவர்ந்திழுத்துக் கொண்டிருந்த தன்மையைப்பற்றியோ, அல்லது காப்பாற்றப்பட வேண்டி தான் கைகளில் ஏந்தியிருந்த அந்த அம்மாளைப்பற்றியோ ஜேம்ஸ் சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால், தனக்கு முன்னே நிமிர்ந்த நடையுடன் போய்க் கொண்டிருந்த அந்தப் பையனைப்பற்றித் தான் ஆச்சரியமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தான்; முடிவில் தன்னுள்ளே திருப்தியடைந்தான்.

ஆஸ்பத்திரியில் குழப்பம் குறைந்திருந்தது. காயமடைந்தவர்களில் பெரும் பகுதியினர் முதல் சிகிச்சை பெற்றுவிட்டனர். சிறிய காயங்களுடன் இருந்தவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதில் டாக்டர் கருத்துடன் இருந்தார்.

காலமடைந்திருந்த பெண்மணி ஒருத்தியைக் கைகளில் தாங்கிய வண்ணம் ஈஸுவுடன் ஜேம்ஸ் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்ததைக் கண்டதும் ஸிஸ்டர் ஆங்கெலிகா திடுக்கிட்டாள். அவன் முகம் சூரிய வெப்பத்தால் சிவந்து முகம் உஷ்ணமாக இருந்தது. கழுத்துப் பகுதியில் வேர்வை ஊற்றெடுத்து ஓடிக் கொண்டிருந்தது.

விரைவுடன் அந்த அம்மாளை டோலியில் வைத்து உட்புற அறை ஒன்றிற்குக் கொண்டு சென்றார்கள்.

விளக்கம் தேடும் வகையில், தன்னுடைய உடன் பிறந்தார் மகனையும் ஈஸுவையும் ஒரு கணம் உறுத்துப் பார்த்தாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா. சோர்வுடன் தோள்களை ஒரு குலுக்குக் குலுக்கிக் கொண்டு, அந்தப் பையனைத் தமாஷாகப் பார்த்தான். "நம் இருப்பிடத்துக்கு இவன் வந்து, உதவி செய்யும்படி என்னிடம் கோரினன்" என்றான்.

அசாய் பேசினன்: "இந்த அம்மாள் செத்துச் சவமாகிவிட்டாள் என்ற தீர்மானத்தின் பேரில் பாலத்தில் கிடந்தாள். அவள் உயிருடன் இருப்பதாக நான் கண்டு கொண்டு, இவரை உதவிக்கு அழைத்துக் கொண்டேன்."

ஈஸு சோர்வுற்றுப் பெருமூச்செறிந்தவாறு, "காயமுற்றவர்கள் இன்னும் யாராவது வந்து கொண்டிருக்கிறார்களா?" என்று விசாரித்தாள்.

"இனி யாரும் இல்லையென்றே தோன்றுகிறது. சிலர் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்; மருந்து போட்டுக்கொள்ள வரமாட்டார்கள். மற்ற இரு உடல்

களையும் காவல் படையினர் காலால் உதைத்து ஆற்றில் தள்ளிவிட்டனர். அவை ஆற்றோடு போய் விட்டன. பார்வையாளர் கூட்டம் கரையில் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது" என்று விவரித்தான் அசாய்.

"என்ன கூச்சல் போட்டார்கள்?" என்று ஸிஸ்டர் ஆங்கெலிகா வினவினாள்.

"முதலில் அவன் பையனைக் காலால் உதைத்துத் தண்ணீரில் தள்ளினான்........."

"யார் அப்படிச் செய்தது?" என்று இடைமறித்தாள் அவள்.

"சார்ஜண்ட்!....இந்த அம்மாளுக்கு வேண்டிய உதவியை நாங்கள் செய்து கொண்டிருந்தோம், கிழவி ஒருத்தியின் சவம் ஆற்றில் எலியைப்போல வீசப்பட்டதும், கூட்டத்தில் ஆரவாரம் மிகுந்தது. காவல் படையினர் கர்ஜனை செய்து கூட்டத்தைப் பின்னே தள்ளி விலக்கினர். அவர்களால் சமாளிக்கக் கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை. அவர்கள் சமாளிக்கமாட்டார்கள்!...."

பையன் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் ஈஸா, ஜேம்ஸையே பார்த்துக் கொண்டிருந்தாள். அத்தையின் முகம் முதல் தடவையாகச் சிவப்பாக மாறியதைக் கண்டான் ஜேம்ஸ்.

அவள் மெதுவாகச் சொன்னாள்;

சீன மக்கள் அந்த ஒரு விஷயத்தை மட்டும் அனுமதிக்க மாட்டார்கள். மரியாதையுடன் கூடிய ஈமக் கடன் செய்வதற்கு ஒவ்வொருவனுக்கும் பாத்தி

யதை உண்டு. குற்றவாளியாக ஒருவன் இறந்தால் கூட அவனுக்கும் இவ்வுரிமை இருக்கிறது?"

பெருமிதம் கொண்ட பார்வையை ஜேம்ஸ் மீது வீசியவளாக "எனக்கு வேலை இருக்கிறது," என்றாள் ஈஸா.

அசாய், "நானும் போகவேண்டும்" என்று தெரிவித்தான்.

"அசாய், நல்ல சேவை இது!" என்று ஆங்கெலிகா பாராட்டினாள்.

"அவ்வளவு அவசரம் என்ன?....கொஞ்சம் தண்ணீர் குடித்துவிட்டுப் போகலாமே!" என்றான் ஜேம்ஸ்.

வழியில் அசாயிடம், "ஆங்கிலேயனுடன் நீ காணப்படுவதற்காக நீ பயப்படவில்லையே?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"ஊஹூம், நான் 'கட்சி ஆள்.' ஒவ்வொருவருக்கும் என்னைப் புரியும்."

வீட்டில் அசாய்க்கு கண்ணாடிப் பாத்திரம் நிறைய தண்ணீர் கிடைத்தது.

ஜேம்ஸ் சுத்தமாகக் கழுவினான். "களைத்துவிட்டாயா?" என்று நனைந்த டவலினால் முன் கையைத் துடைத்துக் கொண்டே கேட்டான்.

"இல்லவே இல்லை!" என்றான் அசாய். ஜேம்ஸையே பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தான் அவன்."ஆங்கிலேயர்கள் என்றால் எனக்குப் பிரியம்!" என்று தொடர்ந்தான்.

"எங்களை நீ எந்த வகையில் விரும்புகிறாய்?"

"உங்களுடைய 'பால்பாயிண்ட்' பேனுக்கள் கைக்கடிகாரங்கள், சிகரெட்டுகள் என்ருல் எனக்குப் பிரியம் அதிகம். சரி எனக்கு ஒரு சிகரெட் கொடுப்பீர்களா?" என்று கேட்டான் அசாய்.

"நிச்சயம் கொடுப்பேன்" என்ருன் ஜேம்ஸ். ஆனுல், அசாய் சிகரெட் பிடிக்கக்கூடாத அளவுக்கு அவ்வளவு சிறு பையனுக இருக்கிருனே என்று உள்ளூற எண்ணமிட்டான். ஆனுல் அதுதானே அவனுக்கு அலுவல்!

"அது 'ஸ் டே ட் எ க் ஸ் பி ர ஸ்' சிகரெட்டு தானே?"

எதற்காக? இது ஸ்டேட் எக்ஸ்பிரஸ் இல்லே.

"தலேவர் மா-ஸே-துங் அவர்கள் ஸ்டேட் எக்ஸ்பிரஸ் சிகரெட் மட்டுமே புகைப்பார். ஆதலால் மேல்மட்டத் தலேவர்கள் எல்லோரும் அதைத்தான் பிடிக்கிருர்கள். நான் 'கமிஸாராக'-கமிஷனராக ஆகும்போது ஸ்டேட் எக்ஸ்பிரஸ் சிகரெட்டையே உபயோகிப்பேன்!" என்ருன் அசாய்.

"இப்போது என்ன சிகரெட் பிடிக்கிருய்?"

"கிடைப்பதை உபயோகிப்பேன்!"

"அப்படியென்ருல்....?"

" 'க்ரேட் வால்' — 'ருபிக்வீன்' — இவற்றில் கிடைப்பதை உபயோகிப்பேன். உலகானுபவமுள்ள மனிதனுன்தும் தலேவர் மா அவர்களேப் போன்றே நான் நான்கு மனேவிமார்களே வைத்துக்கொள்வேன்!...."

பேச்சு சுவாரஸ்யமாகப் போய்க் கொண்டிருப்பதாகவும், ஆனுல் அசட்டுத் துணிச்சல் கொண்

டிருந்ததாகவும் ஜேம்ஸ் நினைத்தான். பேச்சின் விஷயத்தைத் திருப்ப நினைத்து அவன் கேட்டான்: "வெள்ளையர்களைப்பற்றி உண்மையாக நீ என்ன நினைக்கிறாய்?"

"நீங்கள் ஏகாதிபத்தியக் கொள்கையுடையவர் கள். நீங்கள் சண்டையையே விரும்புகிறீர்கள்; அவ்வளவுதான். நாங்கள் சண்டை செய்யவும் விரும்புகிறோம். நாங்கள் அறுநூறு, எழுநூறு, எண் ணூறு மில்லியன்—அறுபது, எழுபது, எண்பது கோடி இருக்கிறோம். உங்களுக்கு நாங்கள் பயப்பட மாட்டோம். ஆகையால், நாம் சண்டை போடு வோம்!"

"நியாயமாகச் சண்டை போட வேண்டுமென் பது உன் கருத்தா?"

ஆம்; நேர்மையான சண்டைதான்!"

"அவசியம் ஏற்படும்போது நீயும் சண்டையிட வேண்டுமென்று கருதுவாயா? இல்லை, நீ சண்டை இடமாட்டாயா?"

"நிச்சயம் சண்டை செய்வேன். அவ்வளவு தான்!"அவன் பேச்சு முடிவானதாகத் தொனித்தது.

"சந்தோஷம். எல்லாம் உன்னுடைய நன்மைக் கேதான்!" என்று ஜேம்ஸ் சாந்தமாகச் சொல்லி அவன் தோளில் லேசாகத் தட்டினான். அவன் ஆச்சரியப்படும் வகையில், அவனுக்கு ஒரு குத்து கொடுப்பவன் மாதிரி தன்னுடைய கைமுஷ்டியை உறுதியுடன் பற்றி மூடி முழங்கையை வளைத்தான், அசாய்! ஆனால் அவன் புன்னகை செய்துகொண்டிருந் தான்.

"நான் இப்போது புறப்பட வேண்டும். ஏராள மான சம்பவங்கள் தெருக்களிலே நடந்துகொண் டிருக்கின்றன!"

அசாய் தன் குல்லாயை எடுத்துக்கொண்டு, அவ் வீட்டை விட்டுத் தாவி வெளியேறினன். அவன் திருப்பி, 'போய் வருகிறேன்' என்று கைகளை ஆட்டி விடை பெற்ருன்.

ஜேம்ஸ்,"கடவுள் அருள் உனக்கு இருக்கட்டும்!" என்று கைகளை ஆட்டி விடை கொடுத்தான், "சற்று நில்!" என்று சொன்னுன்.

"என்ன விஷயம்?" என்று கேட்டான் அசாய்.

ஜேம்ஸ் ஒரு 'பால் பாயின்ட்' பேனவை எடுத்து அதை அசாயிடம் கொடுத்தான்.

"நீ இதை விரும்புவாயல்லவா?"

"ஆம், விரும்புவேன். மிகுந்த நன்றி."

அசாய் அதைப் பெற்றுக்கொண்டு, மீண்டும் குதித்துத் தாவிச் சென்ருன். அவன் கண்களில் ஒரு புதிய ஒளி வீசியது.

"வெய்ச்சோ நகரை அந்தப் பையனிடமிருந்து ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்!" என்று ஜேம்ஸ் தன்னுள் எண்ணமிட்டான்.

அத்தியாயம் 5

சகோதரி ஆங்கெலிகா திடீரென்று ஏற்பட்ட வேலைச் சுமை காரணமாக மிகவும் களைத்து ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பியபோது, போக்லோ விவகாரம் பற்றி மேற்கொண்டு சில தகவல்களைத் தன் மருகன் ஜேம்ஸிடம் சொன்னாள். அவன் காப்பாற்றி உயிருடன் கொண்டு வந்த அந்த அம்மாளுக்கு தலையில் ஒரு ரணம் இருந்தது. அதன் விளைவாக அவள் சுயப் பிரக்ஞை இழந்தாள். ஆனால் அவள் திடீர்ப்பயம் காரணமாகவும் ஊட்டக் குறைச்சல் காரணமாகவும்தான் அதிகப்படியான கஷ்டத்தை அனுபவித்தாள். பாலத்தில் அவள் கிடந்தபோது யாரோ அவளை வலுவாக மிதித்துவிட்டார்கள்; அவளுடைய இடது தோளில் அபாயகரமான ஊமைக் காயம் ஏற்பட்டுவிட்டது. மற்றபடி வேறு பலத்த காயம் எதுவும் கிடையாது. அவளுக்குச் சுய நினைவு வந்து, தான் ஆஸ்பத்திரியில் இருந்ததை அறிந்ததும் அவள் தன்னுடைய மாமியாரைப்பற்றியும் குழந்தையைப் பற்றியும் விசாரித்தாள், உடனேயே ஆற்றில் தூக்கி வீசியெறியப்பட்ட இரண்டு உடல்களைப்பற்றி அநேகர் சிந்தித்தனர். ஆனாலும் அவர்கள் எங்கிருந்தனர் என்பது பற்றி யாரும் அவளிடம் சொல்ல

முடியவில்லை. தன் கணவனை சாங்லிபூவைக் குறித்தும் அவள் கேட்டாள். அவன் என்ன ஆனான் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. இரவோடு இரவாக அவர்கள் சேர்ந்தாற் போல் தப்பிவிட்டனர். மஞ்சூரியாவுக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டிய அந்தப் பிள்ளையின் வாழ்வு ஆற்றில் முடியவேண்டுமென்று விதித்திருந்ததால்தான், அப்போது காப்பாற்றப்பட்டான் போலும்!

"யாருக்கோ வெறியும் பைத்தியமும் பிடித்து விட்டது!" என்று ஜேம்ஸ் சுருக்கமாக விமர்சனம் செய்தான். "காவல் படையினர் பீதியடைந்து போய், அகதிகளைக் கைது செய்ய முயல்வதற்குப் பதிலாக அவர்களை இருட்டில் மனம்போனவாறு சுட்டுத் தள்ளிவிட்டார்கள்" என்று தொடர்ந்தான்.

குழப்பம் ஏதாவது நடக்கிறதாவென்று தேடியபடி அசாய் வீதிகளுள் அலைந்துகொண்டிருந்தான். காயமடைந்த போக்லோ அகதிகளில் சிலர் தப்பியிருந்தால், அவர்கள் சொந்தக்காரர்களின் வீடுகளில் தான் ஒளிந்துகொண்டிருப்பார்கள். வெய்ச்சோ பெரிய நகரம். டாம்ஷு, போலோ, டுங்வான், மற்றும் சுற்றுவட்டப் பகுதிகளில் சிலகாலம் வசித்து வந்த ஜனங்களில் அநேகம்பேர் இந் நகரத்தில் இருந்தனர்.

ஊர்க்காவல் படையின் தலைமையாளரான வாங்காஷியங் சஞ்சலம் அடைந்திருந்தார். சமீபத்தில் ரத்துச் செய்யப்பட்டிருந்த வையாங்ஷியான் மாஜிஸ்டிரேட் அலுவலகக் கட்டடத்தில் அவர் அலுவலகம் இருந்தது. இருபது—முப்பது அகதிகள்

பிடிக்கப்பட்டு, பிரதேச நிர்வாகத் துறைச் சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்கள் செய்த குற்றம் என்னவென்று சரியாகச் சொல்வது கஷ்டம். முக்கிய மாக, அவர்கள் போக்லோவில் பிறந்தவர்கள். போக்லோவுக்கும் இடையே பிரயாணம் செய்வது சகஜமாகவும் சட்டபூர்வமாகவும் இருந்தது. பிறகு, அவர்கள் மீது இருந்த குற்றச்சாட்டுத்தான் என்ன? கிராமத்து மக்களிலே பெரும்பாலான ஸ்திரீகள் சிறையை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து வடக்கே கப்பலில் அனுப்ப தண்டனை விதித்திருந்த மனிதர்களைக் காப்பாற்றியதாக தொலைபேசிப் புகார்கள் சுட்டிக்காட்டின. போக்லோவைச் சேர்ந்த வயதான பெண்கள் மஞ்சூரியாவில் இயங்கிய 'தொழில் முகாம் மூலம் சீர்திருத்தம்' பற்றிக் கேள் விப்பட்டிருந்தார்கள். அங்கே ஆழமான பனியில் கிரீன்—ஹெய்லங்கியாங் காடுகளில் மரம் வெட்டு வதற்காக சிலர் அனுப்பப்படுவார்கள்; ஏனென்றால், மரங்கள் மரத்துண்டுகள் இடம்விட்டு இடம் கொண்டுபோகப்படுவதற்குச் சிறப்பாக உதவியது உறைபனி. வெய்ச்சோவில் கைது செய்யப்பட்ட வர்களில் யாராவது இரவுத் தாக்குதலில் பங்கு கொண்டிருந்தார்களா என்பதை நிர்ணயம் செய்வது கடினமாகவே இருந்தது. மேற்படித் தாக்குதலில் ஒரு படைவீரன் கொல்லப்பட்டான்; இரண்டு அல்லது மூன்று பேருக்கு மட்டிலும் சிறிய காயங்கள் ஏற்பட்டன.

சுற்றுவட்டப் பிரதேசங்களிலிருந்து காவல் படைப் பிரிவுகள் சில வந்து சேர்ந்தன. அமைதி

இழந்திருந்தது நகரம்; இராணுவத் துணைப்படை ஒழுங்கான அமைதியை நிலவச்செய்ய வேண்டு மென்று வாங் காஷியங் விரும்பினன். ஆனல் கட்சி யின் மேலிடமோ, இராணுவப் படையில் எழுபது—எண்பது பேர்கள் போக்லோவில் தங்கியிருக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தது.

நகரத்தில் என்ன நடந்துகொண்டிருந்தது என்று சொல்வதற்காகவும், தின்பதற்கு பன்ரொட்டி வாங்கிக்கொள்வதற்காகவும் லெய்வாவின் வீடு தேடிப் போயிருந்தான் அசாய். அவன் எப்போதுமே பசியுடன் இருந்தான். அவன் அனுதையாக விடப் பட்டதிலிருந்து, லெய்வா ஒருத்தி மட்டுந்தான் அவன் மீது அன்பு சொரிந்து வந்தாள். அவன்பால் பெருந்தன்மையையும் மனப்பூர்வமான அன்பையும் அவள் பொழிந்தாள். பெருந்தன்மையும் மனப் பூர்வமான அன்பும் அரிதான உலகில் வளர்ந்திருந் தான் அவன். முன்னர் பாடகியாக இருந்த பெண் ணுக்கும் அனுதைக்கும் இடையே ஏற்பட்ட நட்பு சுமார் பத்து வருஷங்களாக நீடித்திருந்தது.

அசாய், வாலிபர் கூட்டுறவு சங்கத்தின் தலைவன்; அவன் இப்போது ஒதுங்கத் துணிந்திருந்தான். அவன் சார்பாக டெங்பிங்கிடம் லெய்வா பேசியிருந்தாள், ஒருவேளை அவளுக்கு பிள்ளை இல்லை என்பதாலோ என்னவோ, டப்பாக்களில் அடைக்கப்பட்டிருந்த உயர் ரகச் சுவைப் பொருள்கள், காய்ந்த மாட் டிறைச்சி புகை போட்ட மீன் ஆகியவைகளை எப்பொழுதும் அவனுக்குக் கொடுத்துக்கொண்டிருந் தாள் லெய்வா. அவனுக்கு அவளால் கொடுக்க

முடியாமலிருந்த ஒரே ஒரு பொருள், ஸ்டேட் எக்ஸ்பிரஸ் சிகரெட்டுகள்தான்! அவன் புகை பிடிப்பதை அவள் விரும்பவில்லை. இது விஷயத்தில் அவள் உறுதியுடன் இருந்தாள். "நீ புகை பிடிக்க இது வயசல்ல!" என்று கூறியிருந்தாள்.

லெய்வா இப்போது, 'பெண்கள் தொழில் ரோந்துப்படை'க்குத் தலைவி.

சென்ற பத்து தினங்களாகக் கொண்டாடப்பட்ட 'கோழிக்குஞ்சு விழா'த் தருணத்தில் இரவில் கடமை செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொண்டான் அசாய். கம்யூன்கள் எனப்படும் சிறு நகராட்சிப் பிரிவு அமைப்புக்கள் நகரப்பகுதிகளிலும் நிறுவப் பெறுமென்ற வதந்தி பரவியபோது, வெய்ச்சோவில் இருந்த குடும்பத்தினர் தாங்கள் ஆகாரத்துக்கென வளர்த்த கோழிகளைக் கொல்லத் தலைப்பட்டார்கள்; அவை தேசீய மயமாக்கப்படக்கூடாது என்பது அவர்கள் உள்நோக்கம். அசாய்க்கு எதிராக எந்தக் கோழிக்குஞ்சும் பத்திரமாக இருந்ததில்லை. இரவுப் பள்ளியின் சமயம், அவன் விரும்பும் இடங்களுக்குச் சென்று, எதிர்ப்படும் கோழித் திருடனைக் கைது செய்து, கொள்ளையிட்ட கோழிகளைப் பறிமுதல் செய்தான். அங்கு அவனுக்குப் பழக்கமில்லாத குறுக்குப் பாதையோ அல்லது கோழிக்கூண்டோ இருந்ததில்லை.

அது சம்பந்தமாக, அசாய்க்கு முடிவான சில கோட்பாடுகள் இருந்தது.

முதலாவது; இப்போது சில வீடுகளில்தான் நாய்கள் காவலிருந்தன.

இரண்டாவது: இந்த நடவடிக்கை முழுவதும் காதும் காதும் வைத்தமாதிரி அமைதியாக நடந்தது. கோழியின் கழுத்தில் கைவைக்க கட்டைவிரலும் மற்ற விரல்களும் சாமர்த்தியமாக இயங்கின; ஆகவே சத்தம் எழ எவ்வித முகாந்தரமும் இல்லை.

மூன்றாவது: சட்டத்தை மீறுமல், கொலை நிரூபிக்கப்பட முடியாது. இறகுக் குவியல்களை காலையில் திறந்தவெளியில் வீசி எறிந்துவிடலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, அதைக் கழுவிச் சுத்தம் செய்யவோ இறகுகளை நீக்கிவிடவோ அவசியமில்லை; கோழிக் குஞ்சை 'பிச்சைக்காரர் பாணி'யில் சமைக்கும்போது எண்ணெயோ அல்லது தண்ணீரோ தேவையில்லை. கோழிக்குஞ்சின் உடல் முழுவதும் மூச்சுத் திணறும் படியாகக் களிமண் பூசி, தீ மூட்டி, அந்தச் சாம்பலில் அரைமணி நேரம்வரையிலோ அல்லது சற்றுமுன் பின்னுகவோ அதைப் புதைத்து வைக்கவேண்டும். வெந்த களிமண் பூச்சு தேங்காய்மாதிரி திறந்து கொள்ளும். நீராவி கக்கும்—சூடான—சாறு நிரம்பிய கோழிக்குஞ்சின் இறைச்சி அதனுள்ளே காணப்படும். களிமண்ணேடு இறகுகள் வந்துவிடும்.

தனக்குச் சொந்தமான கோழிக்குஞ்சுகளைச் சமைத்து, தான் விரும்பிய நேரங்களிலே அவன் ஏன் சாப்பிடக்கூடாது? இதில் வருந்தத்தக்க விஷயம் என்னவென்ருல், ஒரு வாரத்தின் குறுகிய கால நிலையில், ஜனங்களின் வீடுகளிலிருந்து எல்லாக் கோழிக்குஞ்சுகளும் மறைந்துவிட்டன போலத் தோன்றின; ஆனுலும் திருடுவதற்குத் தோதாக ஆள் யாரும் இல்லை.

அதுபற்றிய எல்லா நடப்பையும் லெய்வாவுக்கு அசாய் சொல்லியிருந்தான்.

"பலே ஆள் நீ!....நீ குழந்தையாக இருந்தது முதல், மேலும் மேலும் பெருகி வரும் உன் சாப் பாட்டுத் திறமைதான் உன்னிடமுள்ள குறிப்பிடத் தக்க விசேஷமாகும்!...."

காலையில் ஃபான்ஷெக்டினுடன் அவளைக் கண்டான் அசாய். ஃபானும் லெய்வாவும் காதலர் கள். லெய்வாவுக்கு வயது முப்பது. சுமாரான அழகி என்று கூறலாம். நடுத்தரமான உயரம்; நெஞ் சின் மேல் பகுதி வட்டவடிவமாக இருந்தது; உருண்ட கைகள். அவளுடைய சதைப்பிடிப்பான நீண்ட வட்ட முகத்தைவிட்டு ஒதுங்கி அவளது கறுநிறக் கூந்தல் அழகாகத் தொங்கியது. இளமையைக் கடந்த மத்திய வயதுப் பெண்ணாக அவள் இருந்தாலும், 'ஷூ அம்மையின் முதிர்ந்த அழகுக் கவர்ச்சி' அவளிடம் பொலிந்தது; மனத்தை உருக்கும் வகை யில் அவள் கண்கள் அமைந்திருந்தன. சிறிய வெள்ளைக் கால்சட்டைக்கு மேலே, ஜரிகைச் சித்திர வேலை செய்யப்பட்டிருந்த வெளிர் சிவப்பான இறுகிய உள்சட்டை தரித்திருந்தாள் அவள். பத்தாண்டு களுக்கு முன் நாகரிகமென்று கருதப்பட்ட செருப்புக் களை அவள் அணிந்துகொண்டிருந்தாள், அவளுடைய குரல் இனிமையாக இருந்தது; மனத்தளர்ச்சியுடன் பேசினாள்; எல்லோருக்கும் பரிச்சயமான ரீதியில், அவளிடம் திட்டமற்ற சஞ்சல சுபாவம் குடிகொண் டிருந்தது; இதை ஆடவர்கள் தடுக்கக் கஷ்டப் பட்டனர். சூச்சோ பெண்கள் பழக்கப்படுத்திக்

கொண்டதுமாதிரி மெதுவாக இழுத்து இழுத்து அவள் பேசினாள். இன்னும் ஏராளமான பட்டு உடைகள் அவளிடம் இருந்தன; அவற்றை அவள் வீட்டில் இருக்கையில் அணிந்துகொண்டாள். வெளி யில் புறப்பட்டுச் சென்றால், உயர்ந்த கட்சி உறுப் பினர்மாதிரி, பருத்தியாலான நீண்ட கையுள்ள மேலங்கியையும் கால்சட்டைகளையும் அவள் அணிந்து கொள்ளவேண்டும். தனது மங்கலான பழுப்பு நிற முள்ள சுங்ஷான் உடுப்புக்களை அணிந்த போதும்கூட, அவள்பால் பெண்மையின் வசீகரம் மிளிர்ந்தது.

'புரட்சி' ஏற்பட்டபோது, அவளுக்கு வயசு இருபத்தொன்று, வெய்ச்சோவில் மிகவும் பிரசித்த மான முறையில் பொதுமக்களைச் சந்தோஷப்படுத் தியவர்களிலே அவள் ஒருத்தி. நகரத்தில் அப் பொழுது உயர்ந்தபட்ச பணக்காரர்களிலே ஒருவ ராக இருந்த ஃபானின் அந்தரங்கக் காதலியாக அவள் கருதப்பட்டாள். அதுமுதல், பெண்களை சந்தோஷத்திற்கென சுயநல நோக்கத்துடன் பயன் படுத்தும் வழக்கத்தை கம்யூனிஸ்ட் கட்சி கடிந்தது; அவளைப் 'பெண்கள் தொழில் இராணுவப் பகுதி'யில் சேரும்படி கட்சி வற்புறுத்தியது. காற்று உலை ஒன்றில், நெருப்புக்கு விறகு போட்டுத் தீயைக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அவள் ஏற்றாள், அவளது உலைத்தீ பிரமாதமாகக் கர்ஜித்தது. ஒரு பொதுவுடைமை அரசாங்கத்திலும்கூட, அழகான இளம் பெண் கவனிப்புப் பெற்றாள்; விறகு பற்றாக் குறையால் அவள் ஒருபோதும் கஷ்டப்படவில்லை.

வேலை செய்வதிலும் அல்லது இதர நடவடிக்கைகளிலும் அவள் உற்சாகமாகவே இருந்தாள். பொதுவுடைமை ஆட்சிமுறையின்கீழ் ஒருபோதுமே தொல்லை அடையாத சிலருள் லெய்வாவும் ஒருத்தி; பல சிறப்புக்கள் ஒன்று சேர்ந்த பெண் அவள். அவள் ஒவ்வொருவனுடனும் குறிப்பாக ஆண்களுடன்—அவர்கள் கம்யூனிஸ்ட் ஆனாலும் சரி, சோஷலிஸ்ட் ஆனாலும் சரி, அல்லது பூர்ஷ்வா ஆனாலும் சரி—சகஜமாகப் பழகினாள். பிள்ளைப் பருவத்தில் அவள் அனாதையாக விடப்பட்டாள்; வயோதிகப் பெண் ஒருத்தி அவளைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டு பாட்டுப்பாடும் பெண்ணாக அவளைப் பழக்கினாள்; லெய்வாவுக்குத் தன் பெற்றோர்கள் யார் என்பதே தெரியாது. உலக சம்பந்தமான வகையில் பாதிரிமார்கள், கன்னிகாஸ்திரீகளுடன் அவளைச் சேர்க்கத் தீர்மானம் செய்தபோது, அவள் குடும்பப் பெயரைக் கேட்க, அதற்கு அவள், "என் குடும்பப் பெயர் எதுவென்று எனக்கு எவ்வாறு தெரியும்?" என்று பதில் கொடுத்தாள்.

அவளுடைய தொழில்முறைப் பெயர் லெய்வா அல்லது 'ப்யார் ப்ளாஸம்'! ஒவ்வொருவரும் ஒரு குடும்பப் பெயரை வைத்துக்கொள்ள வேண்டியிருந்ததால், உயர் அதிகாரி அவளுடைய பெயரின் முதல் பகுதியைத் தூக்கினார்; "இனிமேல் உன் குடும்பப் பெயர் லெய் ஆகும்!" என்றார். இவ்வாறாக, சைனாவில், 'பியார்' என்னும் குடும்பப் பெயரைச் சுமக்கும் ஒரே ஆளாக அவள் அமைந்தாள். உத்தியோக பூர்வமாக அவள் பெயர்: லெய்வா.

ஆனால் அவளை 'லெய்-வா' என்று பிரிக்காமல், 'லெய்வா' என்று சேர்த்தே அழைத்தார்கள்.

அவள் நல்ல காரியம் செய்தாள்!—டெங்பிங்கின் மனைவி வெறுப்படைந்து அவனைவிட்டுப் போய் விட்டாள். அவன் அடிக்கடி லெய்வாவின் அன்பையும் ஆதரவையும் தேடினான். புத்தி நுட்பத்துடன் அவனுக்கு ஆதரவு அளித்தாள்; பதிலுக்கு, டெங்பிங்கின் நல்லாதரவையும் பெற்றாள்.

லெய்வாவிடம் ஆழ்ந்த பிரேமை பூண்டொழுகினான் ஃபான்ஷெக்டின்; அவளை நேசிப்பதை ஒரு போதுமே நிறுத்தினதில்லை. உண்மையான ஆழப் பதிந்த ஒரு பிணைப்பு அவர்களிடையே நிலவியது. அறிவும் குணமும் சம விகிதத்தில் ஒன்று சேர்ந்திருந்த ஒரு மனிதன் என்ற அளவில் அவனை அவள் மதித்தாள். அவர்கள் இருவரும் தப்பிப்பிழைப்பதற்காக, கம்யூனிஸ்ட் கட்சியை நேசிப்பதாக பாவனை செய்தனர். உண்மையிலேயே, ஃபான் எல்லாவற்றையும்-தனது மூன்று கடைகளையும் ஒரு பெரிய வீட்டையும் இழந்துவிட்டான். அவ்வீட்டின் கீழ்த் தளத்தில் தனக்கென ஓர் அறையை வைத்துக் கொள்ளுவதற்கு மட்டுமே அவன் அனுமதிக்கப் பட்டிருந்தான். குடும்பத்தின் பண்டைப் பொருள்கள் ஓவியங்கள், வெண்கலச் சாமான்கள், பீங்கான் பாண்டங்கள் முதலிய எல்லாம் 'தேசீயமயமாக்கப்பட்டு விட்டன' அல்லது அதிசயமான 'மக்களிடம்' போய்ச் சேர்ந்துவிட்டன. இந்த உலகத்தில் அவனுக்கென மிஞ்சியிருந்த ஒரே ஒரு திருப்தியும் ஆறுதலும் லெய்வாவின் காதல் ஒன்றுதான்!

"நான் அறிவு பூர்வமானவன். ஒரு பெண்ணின் காதல்-அன்பு இல்லாமல் என்னுல் உயிர்வாழ இயலாது!"—அவன் அப்படித்தான் வியாக்யானம் செய்தான். 'அறிவு பூர்வமானவன்' என்று தன்னைக் குறிப்பிட்டுக்கொண்டதன் மூலம், உயர்வர்க்க பூர்ஷ்வாவின் ரத்தம்கொண்ட, திருத்தமுடியாத ஒரு பூர்ஷ்வாவேதான் என்று அவன் உணர்ந்தான்.

பையன் அங்கு வந்தான்.

"உள்ளே வா, அசாய். சமீபத்திய செய்தி என்ன?" என்று வினவினுன் ஃபான்.

"தெருக்களில் ஒரு விசேஷமும் இடையாது. ஓடி ஒளிந்துகொண்டிருப்பவர்களைத் தேடுவதை காவல் படை கைவிட்டுவிட்டது. போக்லோவைச் சேர்ந்த ஒரு ஊர்க் காவல்படையினனை அதே மாவட்டத்தைச்சார்ந்த ஒரு கடைக்காரன் செருப்பால் அடித்துவிட்டான். அந்த ஊர்க்காவல் படையைச் சேர்ந்தவனை "நீ உன் ஜாதிப்பெயரை மறந்துபோனுயா?" என்று கடைக்காரன் கேட்க, அவன் வெட்கமடைந்து கடைக்குள் சோதனைப்போட நுழையவில்லை!"

அன்று காலையில் பாலத்தடியில் கண்டவைகளை அவர்களுக்குச் சொல்லத் தொடங்கினுன் அசாய்.

லெய்வா ஒரு பன் ரொட்டியை எடுத்து அவனிடம் நீட்டினுள். "நீ பசியுடன் இருப்பாய் என்று எனக்குத் தெரியும். இனி தடுமாருதே. நாங்கள் நடப்புக்களை விவாதித்துக் கொண்டிருக்கிருேம்," என்ருள்.

அசாய் புறப்பட முனைந்தான்; பிறகு, தன்னுடைய வழக்கமான பரிசைப்பற்றி அவளிடம்

நினைவூட்டத் திரும்பினான். "எருப் பொருள் களின் பெரிய குவியலை வழக்கம்போல அந்த மரத் தடியில் வைத்திருக்கிறேன்," என்று தெரிவித்தான்.

"ஒரு நிமிஷம் நில். உன் உதவி எனக்குத் தேவைப்படுகிறது," என்று அவனை அழைத்தான் ஃபான்.

லெய்வா, ஃபானை நோக்கினாள். பின்னர்,"அவன் நல்லபடியாகவே இருக்கிறான்" என்றான் அவன்.

"அவனை நம்பமுடியுமென்றே நினைக்கிறேன்," என்று மெதுவாகச் சொன்னாள் லெய்வா. பையனிடம் திரும்பி, "உன்னை நம்பலாமல்லவா? என்று கேட்டாள்.

"நிச்சயமாக நம்பலாம்!"

"நீ யாரிடமும் சொல்ல மாட்டாயே?"

"நிச்சயமாகச் சொல்லமாட்டேன்!"

"அப்படியென்றால் இப்படி அமரு" என்று ஒரு முக்காலியைச் சுட்டினான் ஃபான். வெய்ச் சோவில் இருந்த வசதிமிக்க வீடுகளில் இதுவும் ஒன்று.இவ்வீடு அவளுக்கே உடைமை ஆகும்படி வழிவகை செய்தவன் டெங்பிங். வெள்ளை பூசப்பட்ட சுவர் அறைச்சுற்றி நின்றது. அறையில் வெளிச்சமும் காற்றும் நிறைந் திருந்தன. பின்புறம் இருந்த ஜன்னல், கௌன்டி மியோ கோவில் மரங்களின் கூட்டத்தைக் கண் காணித்தது.

"அந்த ஆங்கிலேயரை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா?"

"ஆம்; காலையில் மதப்பிரச்சாரசபை இல்லத்தில் இருந்தேன்."

"அவருக்குச் சொந்தமான துப்பாக்கி ஒன்று 'கட்சி அலுவல'கத்தில் இருக்கிறது. வாலிபர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் என்ற முறையில் டெங்பிங்கின் அலுவலகத்திற்குப் பின்னால் உள்ள ஒலிபரப்பு அறைக்குச் செல்ல உனக்கு வழி கிட்டும். அந்தத் துப்பாக்கி எங்கே இருக்கிறதென்று கண்டு பிடி; டெங்பிங் சாப்பாட்டுக்கு வெளியே போனவுடன், நீ அதைத் திருடிக்கொண்டு வந்துவிடு. ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்; உன் செயலை வேறு யாரும் பார்த்துவிடலாகாது!"

"பார்வைக்குத் தெரியும்படி அது எங்கு இருந்தாலும், என் கண்களில் படாமல் போகாது! என் கண்களை உபயோகிக்கிறேன்!"

"அத்துடன் உன் மூளையையும் உபயோகப் படுத்திக்கொள். நீ எதையும் வெளியில் விட்டுவிடக் கூடாது!"

"அந்தத் துப்பாக்கி உங்களுக்கு எதற்கு?"

"நகரத்தில் குழப்பம் விளையப்போகிறதென்று நீ நினைக்கவில்லையா?"

"குழப்பமா?" நினைத்தமாத்திரத்திலேயே அவன் கோபத்தால் பொங்கினான்.

"குழப்பம் ஏற்படுமென்று நான் சொல்கிறேன். ஆனால் நீ என்னைக் கேள்விகள் கேட்கக்கூடாது. யாரிடமும் இதுபற்றிச் சொல்லவும் கூடாது!"

"அலுவகத்தில் அது இருந்தால், உடனேயே வேலை முடிந்துவிடும்!" என்றான் அசாய், சுய திருப்தியுடன்; செயற்படுவதற்குத் தனக்கு ஏதோ விஷயம் கிட்டிவிட்டதில், மகிழ்ந்தான் அவன். தன் கைகளைச்

சட்டைப் பைகளில் நுழைத்தவண்ணம் சிறிய முற்றத்தின் வழியாக நிதானமாக நடந்து சென்முன்.

பையன் அங்கிருந்து சென்றதும் :

"நீங்கள் அவனிடம் எல்லாச் சங்கதியையும் சொல்லாமல் இருந்தது கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்முள் லெய்வா.

அசாய், கட்சி உறுப்பினனுக இருக்க முடியாத அளவுக்கு சிறுவனுக இருந்தான் என்பது உண்மை தான் என்முலும்கூட அவன் தீவிரமாக ஓர் உழைப்பாளி. லெய்வாவும் கட்சி உறுப்பினள். அவ்வாறே ஃபானும் ஓர் உறுப்பினனுக இருந்தான்.பத்திரிகைத் தொழில் சம்பந்தப்பட்ட அலுவலகத்தில் அவனுக்கென்று ஓர் இடம் இருந்தது.

இதெல்லாம் ஐந்து எதிர்ப்பு இயக்கத்தின் போது முப்பதாயிரம் டாலர் கொடுத்துத் தன்னுடைய சுதந்திரத்தை விலைக்கு வாங்கியபிறகு ஏற்பட்டவை. அவனுடைய அந்தஸ்துக்கு ஏற்ப மாதம் மூன்று பவுண்டு மாமிசமும் ஒரு பவுண்டு எண்ணெயும் கிடைத்தன. (இந்த அளவு அவ்வப்போது மாறியது) பொது ஜனங்களுக்கு மாதத்திற்கு மூன்று அவுன்ஸ் இறைச்சிதான். பொதுவுடைமைவாதியின் குறியீட்டுச் சொல் அகராதிப்படி பொருத்தமாகச் சொன்னுல் ஃபான் ஒரு 'சந்தர்ப்பவாதி'!

கம்யூனிஸ்ட் ஆட்சி முறையில் அவர்கள் மூவரும் சிறப்பாக பணிசெய்தார்கள். தனிப்பட்ட முறையில் நெருக்கமான ஒரு விசுவாசம் அவர்களுக்குஇருந்தது. கட்சியின்பால் உள்ள விசுவாசத்தைவிட இதையே

அவர்கள் உயர்வாக மதித்தார்கள். லெய்வாவின் ஆதாரவாளன் என்ற வகையில், ஃபானிடம் அசாய்க்கு மிகுந்த மரியாதை பெருகியிருந்தது; மனத்தை எரிக்கும் ரீதியில் அவன் அவ்வப்போது குறிப்பிட்டுவந்த சில விஷயங்களும் இதற்குக் காரணம் ஆகும். மதி நுட்பத்துடன் பேசும் ஒரே மனிதன் அவன் என்றும் அசாய்க்குத் தோன்றினான்.

ஃபான் பேசத் தொடங்கினான்:

"நான் உன்னிடம் சொல்லிக்கொண்டிருந்தாற் போல, வேண்டிய அளவுக்கு நான் எல்லாம் அனுப வித்துவிட்டேன். ஒரு மனிதனுக்குப் பிழைப்பதற்கு இது உகந்த வழியன்று, சீக்கிரமோ அல்லது காலந் தாழ்த்தியோ, அவர்கள் என்னைத் தெரிந்துகொண்டு விடுவார்கள்! இந்தத் துப்பாக்கிப் பிரயோகம், கிளர்ச்சி போன்றவை டெங்பிங்குச் சாதகமாயிராது ஏராளமானபேர் அழிக்கப்பட்டனர்; பலர் இரவோடு இரவாக மறைந்துவிட்டனர். உணவுச் சாலைகளில் ஒன்றை நான் பொறுப்பேற்று நடத்தமுடியுமா வென்று அவர் என்னிடம் கேட்டார்."

"என்னிடமும் கேட்டார் அவர்," என்றாள் லெய்வா.

"பொதுஜன உபயோகத்திற்கென முப்பது உணவு விடுதிகள் ஏற்படப் போகின்றனவாம்; எனக் குச் சொன்னார்கள். எண்ணாயிரம் அல்லது எண்ப தாயிரம் பேர்களுக்கு பதில் சொல்லியாகவேண்டிய ஒரு சமையற்கூடத்தை எப்படி மேற்பார்வையிட்டு, எல்லோருக்கும் பன்னிரண்டரை மணிக்குக் கச்சித மாக எப்படி உணவு பரிமாற முடியும்? வாணலிகள்,

பாத்திரம் பண்டங்கள் எல்லாம் பறிமுதல் செய்யப் பட்டுவிடும். தன் சொந்த உணவைச் சமைக்கக்கூட யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இரண்டரை லட்சம் ஜனங்களுக்கு எண்ணெய், மாமிசம், சாமான் விநியோக வண்டி வசதி போன்ற எதுவுமில்லாமல் மதிய உணவு, சிற்றுண்டி சமைத்துப் பரிமாற வேண் டும்!—எவ்வளவு வேடிக்கையான யோசனை, பார்த் தாயா?....சற்று யோசித்துப்பார்; காய்கறிகள் தாமத மாக விநியோகிக்கப்பட்டாலோ, அல்லது வராமல் இருந்துவிட்டாலோ, நிலைமை என்ன ஆகும்? நகரத் தின் பூரா ஜனத்தொகைக்கும் சமையல் செய்ய வேண்டுமென்று 'கட்சி' விரும்புகிறது. சரி, சமைப் பதற்கு ஒன்றும் இல்லாவிட்டால், என்ன ஆவது? அது சம்பந்தமாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறார் டெங்பிங். பிறர் பாவங்களையும் பழிகளையும் சுமந்து நிற்கும் பலி ஆடாக யாரோ ஒருவன் இதற்கெல்லாம் பயன் படுத்தப்படப் போகிறான். ஆனால் நான் அல்ல!"

ஃபான் மெல்லிய தொனியில் பேச ஆரம்பித் தான்: "அந்த ஆங்கிலேயன் ஹாங்காங்குக்குத் தப்பிச் செல்லத் திட்டம் போட்டிருக்கிறான், நானும் அவனுடன் போகிறேன்."

"ஹாங்காங்கில் உங்களுக்கு இரண்டாயிரம் அமெரிக்க டாலர் கிடைத்ததாகச் சொன்னீர்களே!"

"ஆமாம்; என்னுடன் வா."

"ஹாங்காங்குக்கா?....அம்மம்ம!"

அந்த எண்ணம் தேய்வதற்காக ஒரு கணம் இடைவேளை கொடுத்தான் ஃபான்.

"உன்னைத் தடுப்பதற்கு ஏதுமில்லை. டெங்பிங்கை விட்டுச் செல்வதற்கு நீ கவலைப்பட வேண்டாம்."

"அவலட்சணமான, அகந்தை பிடித்த, சின்ன புத்தி படைத்த ஆள் அவர். அவர் எனக்கு ஒரு பொருட்டல்ல; நிச்சயமாக இல்லை. அவரால் எனக்குச் சில சாதகங்கள் கிடைக்கும். அவ்வளவுதான்" என்றாள் லெய்வா.

"அப்படியானால் ஹாங்காங் போக வேண்டியது தான்! இரண்டாயிரம் டாலர்கள் என்பது ஒரு பெருந் தொகையல்ல. எனக்கு ஒரு மகன் இருக்கிறான். நான் யாருக்கும் இதை தெரிவிக்கவில்லை. அவன் இறந்துவிட்டதாகச் செய்தி அறிவித்து விட்டேன். அவன் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் இருக்கிறான். அவன் இல்லினாய்ஸ் பட்டதாரி. மெக்கானிக்கல் எஞ்சினீயர் அவன். நிரம்பப் பணம் அனுப்புவான் அவன். நேற்றுச் சந்தித்த இந்த வேலைக்காரர் கண்ணியமான ஆளாகத்தான் தோன்றுகிறார். அவரிடம் ஒரு துப்பாக்கி இருக்கிறது. நமக்கு இது ஒரு அரிய சந்தர்ப்பம். அவருக்கு உதவி செய்வதாக நான் தீர்மானம் செய்திருக்கிறேன். ஹாங்காங்கில் அவருக்குத் தொழில் நடக்கிறது. ஆகவே நமக்குக் கட்டாயம் ஒத்தாசை செய்வார். நீ என்ன சொல்கிறாய்?"

"எந்தப் பெண்தான் ஹாங்காங் செல்ல ஆசைப் படமாட்டாள்?....மூன்று வருஷமாக எனக்குப் புதிய உடைகள் கிடைக்கவில்லை."

"உனக்கு ஒரு முத்து அட்டிகை பரிசு தருகிறேன். இது உறுதி."

"அப்படியா?....பேஷ்!"

"அழகான பச்சைக் கல்லும், அழகுச் சாதனங்களும், பிரெஞ்சு வாசனைத் திரவியங்களும் உனக்குத் தருவேன்."

"அத்துடன் உதட்டுச் சாயமும் வேண்டும்!" பகற்கனவில் திளைத்தாள் அவள்; கண்கள் மூடிக் கொண்டன. ஆழ்ந்த பெருமூச்செறிந்தாள்.

"உங்களை யாருமே தடுக்க முடியாது....பயணம் எத்தனை நாளைக்குத் தொடரும்? வேறு என்ன விசேஷங்கள்—அதிர்ஷ்டங்கள் உள்ளன?" ஆச்சரியம் பொங்கக் கேட்டாள்; அவன்பேரில் நேசம் நிரம்பிய கடைக்கண் பார்வையை வீசினாள்.

"குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு தினங்களாகலாம். வெள்ளைக்காரர் ஜேம்ஸ் தாயெர் கொரியாவில் இருந்தவர். தான் துப்பாக்கிப் பிரயோகத்தில் கைதேர்ந்தவரென்று உறுதி சொல்கிறார். எனக்கு துப்பாக்கியைக் கையாளத் தெரியாது; இம்மாதிரியான ஒரு தோழருக்காகவே நான் இதுவரை காத்திருந்தேன்."

"நீண்ட காலமாக உங்களுக்கு இந்தமாதிரியான எண்ணம் உண்டோ?"

"ஆம், பல வருஷமாக உண்டு."

"வருஷக்கணக்கிலா?"

"ஆமாம்."

"அதைப்பற்றிப் பிரஸ்தாபித்ததுகூட இல்லையே ....தாங்கள்?"

"என்னை இத்தகையதொரு முடிவுக்கு வரச் செய்த விவரத்தை உனக்குச் சொல்லவேண்டும். சில

மாதங்களுக்கு முந்தி, கோடையின் துவக்கத்தில். ஒருநாள் ஆற்றில் அசாய் மீன் பிடித்ததை ஞாபகப் படுத்திப்பார்."

"ஞாபகம் வருகிறது; அதைப்பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள்."

"அவன் இரண்டு மீன் பிடித்தான்; ஒன்றை எனக்குக் கொடுத்தான். என்னுடைய மண்ணெண்ணெய் அடுப்பில் அதைச் சமையல் பண்ணினேன், மறுநாளே இது சம்பந்தமாக மேலிடத்துக்குச் சேதி போய்விட்டது. ஒருவன் ஆற்றில் மீன் பிடித்து அதை ஆக்கித் தனியே சாப்பிடக்கூட முடியவில்லையென்றால் அப்புறம் அவனுக்கு வேறு எந்த் உரிமைதான் இருக்கப்போகிறது? இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று அப்பொழுதே—அவ்விடத்திலேயே முடிவு கட்டிவிட்டேன்!"

"நீங்கள் அதைப்பற்றி மறந்துவிட்டிருக்கிறீர்கள் என்று நான் நினைத்திருந்தேன். அதைப்பற்றி இன்னமும் கிலேசப்படுகிறீர்களா?"

"ஆம்; பெரிதும் கிலேசப்படுகிறேன். அது ஒரு சாதாரணச் சம்பவம்தான்; ஆனாலும் அதை நான் ஒருபோதும் மறவேன்."

லெய்வா புதுமையுடன் புன்னகை பூத்தாள்; ஓய்வு கொண்டாள். ஃபானின் கண்களில் வீசும் உறுதியை அவள் கண்டாள்.

"ஷெக்டின், உங்களைப் பார்த்து நான் சிரிக்க வில்லை....உங்கள் உட்கருத்து புரிகிறது எனக்கு."

"இம்மாதிரியான அற்ப விஷயங்கள் என்னை வெகுவாகப் பாதிக்கின்றன; எனக்கு எரிச்சலூட்டு

கின்றன. தான் ஆசைப்பட்ட உணவைச் சாப்பிடவும் மேலதிகாரிகளால் கூப்பிட்டனுப்பப்படாமல் இருக்கவும் உரிமை கொண்ட ஒரு மனிதனாக நான் இருக்க விரும்புகிறேன். என் கருத்தை நீ ஒப்புக்கொள்கிறாயல்லவா?"

"ஆஹா!"

லெய்வாவின் பிரகாசம் பொருந்திய கண்கள் அவன் மீது உற்சாகமான புன்னகையை வீசின. "நாம் இப்படிச் சொல்லிக்கொள்ளலாம். நீங்கள் இங்கிருந்து தப்பிச் செல்லப்போகிறீர்கள்; ஏனென்றால், நீங்கள் விரும்புகிறமாதிரி உணவு உண்ண நீங்கள் ஆசைப்படுகிறீர்கள். நான் என் வாழ்க்கையை அபாயத்திற்கேதுவாக்க விரும்புகிறேன்; ஏனென்றால் உதட்டுச் சாயம் பூசிக்கொள்ளவும் உயர்குதிச் செருப்புகள் போட்டுக்கொள்ளவும் பெண்கள் மாதிரி மறுபடியும் உடை அணிந்துகொள்ளவும் நான் ஆசைப்படுகிறேன். அட, கடவுளே!....நான் ஒரு பெண்ணென்பதையே அவர்கள் ஒருபோதும் புரிந்து கொள்ளவில்லையே!"

"நீ மிகவும் அழகாக இருக்கிறாய். நம்மைத் தவிர்த்து இன்னும் நிறையப் பேர்கள் எல்லையைத் தாண்டிச் செல்ல முயன்று வருகிறார்களென்று நான் நினைக்கிறேன்" என்றான் ஃபான்.

"நிலைமை என்ன?"

"கடந்த இரண்டு நாட்களில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றிச் சிந்தித்துப் பார். என்ன நிகழப் போகிறதென்றே தெரியவில்லை. ஆனால் இது நமக்கு ஒரு அற்புதமான வாய்ப்பு. ஊர்க்காவல்

படை, இராணுவ வீரர்களை வரவழைக்க விரும்பு கிறது; ஆனல் டெங்பிங் இதற்கு இணங்காமல் அவர்கள் திட்டத்தை ரத்து செய்துவிட்டான். தான் சமாளித்தாகவேண்டிய சூழலை இந்த ஆள் பாவம், உணர்ந்துகொள்ளவில்லை. காவல் படைத் தலைமை அதிகாரியை அழைத்துவர அவன் ஆள் அனுப்பி யிருப்பதாகத் தெரிகிறது. கமிஷனர், நெருக்கடி யான நிலைமையை உண்டாக்கிக்கொள்கிருர்!...."

"எதற்கு?"

"அகதிகளைச் சுட்டுக் கொன்றதற்காக இருக் கலாம் என்று தோன்றுகிறது. அல்லது, காவல் படைத் தலைமை அதிகாரி, ஆலோசனைகள் கேட்பதற் காகக் 'கட்சிக் காரியாலய'த்துக்குப் போயிருப்பதை ஒட்டியும் இருக்கும்!...."

அத்தியாயம் 6

ஜேம்ஸ் இரண்டாவது தம்ளர் தண்ணீரைக் குடித்து முடித்தான். தன் கணுக்காலிலும் விரல் காளிலும் அநேக சிவப்புப் புள்ளிகளை உண்டாக்கி யிருந்த கண்ணுக்குத் தெரியாத ரத்தம் உறுஞ்சும் ஈக்களை அடித்துப் போட்டுக்கொண்டிருந்தான் அவன். அமர்ந்திருந்த அறையின் ஜன்னலுக்கு வெளியே அடிக்கடி அவன் கவனமாக எட்டிப் பார்த்தான். மேஜை மீது தேநீர் தயாரிக்கும் சாமான்கள் கிடந்தன. ஒன்றுடன் ஒன்று பொருந் திச் சுழலவல்ல இரண்டு பாகங்களைக் கொண்ட ஒரு பழைய மின்சார விசிறி, உயரத்தில் அமைக்கப்பட் டிருந்த தண்டியக் கட்டையிலிருந்து சுற்றியபடி, உஷ்ணக் காற்றை மெதுவாக, ஆனால் வழி முறைப் படி அள்ளி வீசியது. அது, தெருவிலிருந்து வந்த ஈக்களின் ரீங்கார சத்தத்தை விட்டுவிட்டு மறைத் துக் கொண்டிருந்தது. வேண்டுமென்றே அமைதி யுடன் கிராம மக்கள் அவ்வழியே அடிக்கடி கடந்து சென்றார்கள். காய்ந்த வெயிலில் அவர்களின் மேல் சட்டைகள் அவர்களுடைய உடம்புகளில் ஒட்டிக் கொண்டிருந்தன. ஒரு பறவைகூடச் கீச்சிடவில்லை; ஓர் இலை அசையவில்லை.

முன் வாசல் வழியாக ஈஸு வந்துகொண்டிருந்ததைக் கண்டவுடன், ஜேம்ஸ் எழுந்தான். நீல வண்ணத்தில் நீண்ட முழு மேலங்கியையும் பொதுவான அகன்ற கூலி தொப்பியையும் அணிந்திருந்தாள் அவள். வெள்ளை நிற மேலங்கியையும் கால்சட்டையும் மிளிர, அடர்த்தியற்ற தாடியுடன் கூடிய வயதான ஒரு மனிதனுக்குப் பக்கமாக அவள் நடந்து வந்துகொண்டிருந்தாள். கிழவனின் மறுபுறத்தில் அவன் பேரன் குட்டி ஸ்ப்ரௌட் காணப்பட்டான்.

"அவர்தான் மிஸ்டர் டுவான்—ஈஸுவின் அப்பா" என்று மெள்ளச் சொன்னாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா.

அவர்கள் உள்ளே பிரவேசித்ததும், ஜேம்ஸ் அருகில் வந்தான். அங்கே எல்லோருக்கும் இடம் இருந்தது. இடைகழியில் தன் தந்தையின் தொப்பியுடன் தன்னுடையதையும் சேர்த்து வைத்தாள் ஈஸு. கண்ணாடியில் பார்த்து தன் தலை மயிரைக் கோதிக்கொண்டாள்.

"நாங்கள் தாமதமாக வந்திருக்கிறோம்" என்றாள் ஈஸு, மகிழ்ச்சியுடன். "ஜேம்ஸ் இது என் தகப்பனார். அப்பா இவர்தான் மிஸ்டர் தாயெர். அவரது சீனமொழிப் பெயர் டாய்!" என்று தொடர்ந்தாள்.

டுவான் கையை நீட்டினான். அவன் தலை மயிர் பழுப்பு நிறமாக இருந்தது. நோய்வாய்ப்பட்ட ஒட்டிய முகம். பசுமை நிறமான ரத்தசோகைத் தோற்றம், பழுப்பு நிறத் தாடி, கண்களுக்கடியில் கனமான மடிப்புகள் ஆகிய குறிப்புக்கள் அவனை

வாலிபப்பருவம் கடந்து தேய்ந்த வாழ்க்கையின் எல்லையில் நிற்பவனைப் போலத் தோன்றச் செய்தன. கோடைகால மேலங்கி, தோள்களுக்குக் கீழே குழிவுடன் கூடிய அவனது மெலிந்த உடலமைப்பை எடுத்துக் காட்டியது. அவன் பேசிய போது அவன் குரல் மென்மையாகவும் அமைதியாகவும் இருந்தது; துயரத்தின் வழக்கமான குறிப்பை அவனுடைய கண்கள் மட்டும் வெளிப்படுத்தின.

"இவன் என் சகோதரன் பிள்ளை. இளைய ஸ்ப்ரௌட்," என்றாள் ஈஸா.

பத்து வயசுப் பையன் அவன். சிறிய உருண்டையான முகமும், மிகப் பெரிய கரிய விழிகளும் கொண்டிருந்தான். அவன் தன் தாத்தாவுடன் சதா ஓடிக் கொண்டிருந்தான். போதிய போஷாக்குடன் ஆரோக்கியமாகத் தோன்றினான்; ரோஜா நிறக் கன்னங்கள் அவனுக்கு இருந்தன.

"இவன் என் பேரன்," என்றான் டுவான்; ஆரோக்கியம் இழந்திருந்த அவன் முகம் சுருங்கியது. புன்னகை தெரிந்தது. 'பேரன், என்ற சொல்லில் அபூர்வமான அழுத்தம் கொடுத்து அதைத் தனிக் குரலில் உச்சரித்தான் அவன். டுவான் உயிர் தரித்திருந்ததற்குப் பொருள் கொடுத்த அவனது நம்பிக்கைகள், வாழ்க்கை முதலான அனைத்துமே அந்தப் பையனிடம் நிலவிக்கிடந்தன. அவன் பெற்றோர்கள் இறந்ததிலிருந்து அவனுடைய பாட்டன்தான் அவனைப் பத்திரமாகக் கவனித்துக்கொண்டு வந்தான்.

சிறுவன் ஸ்ப்ரௌட் தன்னுடைய தொடை களுக்குக் கீழே கைகளை வைத்துக்கொண்டு சோபா வில் உட்கார்ந்து உற்றுக் கேட்டான். அதுவே அவன் பயிற்சி. பெரும்பாலான சீனக் குழந்தைகளை காட்டிலும் அவன் சுத்தமாகக் குளிப்பாட்டப்பட்டு உடுத்திருந்தான்; அவனுடைய விரல் நகங்கள் துப்புரவாக இருந்தன. முக்கியமாக இது ஈஸுவின் அலுவலாக இருந்தது. அவனிடம் கூச்சம் இல்லை. மற்ற பிள்ளைகளைப் போலவே அவனும் இயற்கைத் தன்மையுடன் இருந்தான். அவன் அந்த வெள்ளை மனிதனைத் தமாஷாகவும் ஆச்சரியமாகவும் குதூகல மாகவும் விறைத்துப் பார்த்தான்.

"இவன் வாலிபர் கூட்டுறவு சங்கத்தில் இருக் கிறான். கணக்குப் போடுவதில் அவன் வெகு வேகம். இப்போதெல்லாம் அவர்கள் பள்ளிகளில் அதிகம் படிப்பதில்லை. நான் அவனுக்கு வீட்டில் கற்பித்துக் கொடுக்கிறேன்." தன் குழந்தையை டாக்டரிடம் எடுத்துச் செல்கையில் கேட்கப்படுவதற்கு முன்பே எல்லா விவரங்களையும் கூறிவிடும் தாய்போல டுவான் இவ்வாறுபேசினான்.

ஈஸுவுக்கு அடுத்து ஜேம்ஸ் அமர்ந்திருந்தான். மற்றவர்கள் சோபாவில் உட்கார்ந்திருந்தனர். ஜேம்ஸ் தன்னை முறைத்துப் பார்த்ததை உணர்ந்த ஈஸுவின் முகம் நாணத்தால் சிவந்தது. தன் காத லனைத் தவிர ஸிஸ்டர் ஆங்கேலிகாவையும் மற்றவர் களையும் அவள் உற்றுப் பார்த்தாள். அவளது நாசித் துவாரங்கள் சுருங்கி விரிந்தன. கூச்சத்தோடு அவள் புன்னகை செய்தாள். அவளும் தன்னுடைய

சகோதரர் மகளைப் போலவே உட்கார்ந்தாள் கைகள் இரண்டையும் அவளைப்போலவே வைத்திருந் தாள். அவளுடைய அரைக்கை மேலங்கி வெண்மை யான, இரு புஜங்களும் மனைவியாகவும் தாயாகவும் ஆவதற்குத் தயாராக இருக்கும் முதிர்ந்த பெண் ணின் புஜங்களை நினைவூட்டின.

ஈஸாவின் தந்தையோடு ஜேம்ஸ் பேசிக்கொண் டிருந்தான்; ஆனால் அவன் கண்கள் ஈஸாவைச் சுற்றியே சதாவட்டமிட்டன. கள்ளத்தனமாக அவளுடைய கழுத்தின் பின்பகுதியில் கெஞ்சுத லுடன் சீராட்டி, நிமிண்டி விளையாடினான். இந்த அழகிய பெண்ணை தன்வசப்படுத்தி வைத்திருந்ததில் பெருமிதமும் பூரிப்பும் கொண்டான்.

"உங்களுக்கு ஆசைவெறிமூண்டு விட்டதா?" என்று ஈஸா இனிமையாக அவனைக் கண்டித்தாள்.

"ஊஹூம்; புத்தி தப்பிவிட்டது."

புன்சிரிப்போடு ஈஸா தன் உதட்டைக் கடித்துக் கொண்டாள். விளையாட்டுத்தனமான இளம் காத லர்களின் ஜோடியைப் பார்த்து ஆங்கெலிகா மனம் பூரித்தாள். ஈஸாவின் தந்தை, தனது எதிர்கால மாப்பிள்ளையின் குணங்களை ஆராய்ந்துகொண் டிருந்தான்.

"மிஸ்டர் டுவான், நான் உங்களுக்கு நன்றி பாராட்ட கடமைப்பட்டுள்ளேன்!"

"எதற்காக?"

"எனக்கு உங்கள் புதல்வியைக் கொடுப்பதன் மூலம், என் வாழ்க்கையில் அன்போடும் மரியாதை யோடும் மதிக்கத்தக்க ஒருபொருளை நீங்கள் எனக்குக்

கொடுக்கிறீர்கள். எத்துணை நன்றியறிவுடன் நான் இருக்கிறேன் என்பதை நீங்கள் அறியமாட்டீர்கள். அவள் அழகானவள்!" என்றான் ஜேம்ஸ். 'அழகானவள்' என்ற சொல்லுக்கு கவர்ச்சியான ஓர் அழுத்தம் கொடுத்தாள். ஈஸா கண்களைச் சிமிட்டினாள்.

"அவள் நல்லவள்" என்றான் தந்தை. வாழ்நாள் பூராவும் அவளைக் காப்பாற்றும் பொறுப்பை உங்களிடம் விட்டு விடப் போகிறேன்" என்று தொடர்ந்தான்.

தேநீர் தயாரிப்பதற்கு வேண்டிய பொருள்களை மேஜைமீது கண்டாள் ஈஸா. உடனே ஸிஸ்டர் ஆங்கெலிகாவை நோக்கி, "நீங்கள் ஏன் சிரமப்பட வேண்டும்" என்று சொல்லிவிட்டு; பாத்திரமும் கையுமாக அடுப்படிக்குச் செல்ல எழுந்தாள்.

"ஸ்டவ் அடுப்பில் ஒரு கெட்டிலில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருக்கிறது; நாங்கள் தனியே இருக்கவே விரும்புகிறோம். அதனால்தான், ஓய்வில் இருந்த அந்தப் பையனைக்கூட அனுப்பிவிட்டேன். ஜேம்ஸ், நீ கொஞ்சம் உதவிசெய்வாயா?" என்றாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா.

"ஆகட்டும்," என்று பதிலளித்தான் ஜேம்ஸ், குதித்தவண்ணம் ஈஸாவைத் தொடர்ந்து அவள் சமையலறைக்குள் புகுந்தான்!

உள்ளே அவள் அவனிடம்,

"ஊஹாம், நான்தான் தேநீர் போடுவேன் உங்களுக்குத் தெரியாது," என்றாள்.

"எனக்கா தெரியாது?"

கொதிநீரை பாத்திரத்தில் ஊற்றினுள்; அப் பாத்திரத்தை உள்ளே எடுத்துச் செல்லுமுன் ஒரு கணம் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்; கள்ளத்தனமான முத்தம் ஒன்றை அவனுக்குக் கொடுத்தாள் அவள்.

தேநீர்க் கோப்பையை முதலில் தன் தந்தைக்கும் அடுத்து ஸிஸ்டர் ஆங்கெலிகாவுக்கும், பிறகு ஜேம்ஸுக்கும் கொடுத்தாள். ஆங்கெலிகா பெருமை யுடன் நடப்பதைக் கவனித்துக்கொண்டிருந்தாள்; இதுவரை ஜேம்ஸ் சொன்னதெல்லாம் உண்மை யாகவே பலித்துவிடுமென்று அதிசயப்பட்டாள்; காதலர்கள் இருவரும் அடுத்த வாரத்தில் ஹாங் காங்கில் மறுபடியும் கூடிவிடுவார்கள் என்றும் அவள் யோசித்துக்கொண்டிருந்தாள்.

"பையன் வருவதானுல், சமையலறைக் கதவைத் திறந்தே வைக்கிறேன்," என்றுள் அவள்.

"வீதிகளில் மக்கள் கூட்டங்கள் ஊர்வலம் போய்க்கொண்டிருந்ததை நாங்கள் பார்த்தோம். அதனுல்தான் நாங்கள் வர தாமதமாகியது" என்று விவரம் தெரிவித்தாள் ஈஸு.

"அது அவ்வளவு சுமுகமாகத் தோன்றவில்லை. வேடிக்கை பார்த்தவர்களிடம் கேட்டேன். இவர் களெல்லாம் போக்லோ மக்களென்றும் தங்கள் உற வினர்கள் கைதுசெய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரி விக்கப் போய்க்கொண்டிருக்கிருர்களென்றும் சொன் ஞர்கள். அவர்கள் வெயாங்ஹியான் மாஜிஸ்டிரேட் ஹாலே நோக்கி மோதிக்கொண்டிருந்தார்கள்," என்றுன் டுவான்.

"அப்பா, நேரத்தை நாம் வீணடிக்கக்கூடாது. நம் நண்பரிடம் விஷயத்தை விளக்கிச் சொல்வீர்களா?"

"நிச்சயமாக."

டுவானின் கண்கள், ஒன்று சேர்ந்த புருவங்களுக்கு அடியில் பிரகாசித்தன. அவன் குரலில் கடுமை தொனித்தது; நிரம்பச் சொல்லவேண்டுமென்று விரும்பியவன் போலவும் எங்கே ஆரம்பிப்பது என்று புரியாமல் இருப்பவன் போலவும் தோன்றியது.

"நீங்களும் ஈஸுவும் போட்டிருக்கும் திட்டங்களை நான் புரிந்துகொள்கிறேன். அதிகமான ஆபத்திற்குள்ளாகும் ஒரு செயலினை நீங்கள் துணிச்சலுடன் மேற்கொண்டிருக்கிறீர்கள்; அதன் மதிப்பைச் சரியாக உணர்கிறேன் நான்."

"நலி....நலி! பேஷ்!" என்றான் ஜேம்ஸ், சரளமான மரியாதைமிக்க மன்டாரின் மொழியில்.

"மன்டாரின் மொழியை அழகாகப் பேசுகிறீர்கள் நீங்கள்."

"பூகன்டாங்!—பாராட்டுக்கு நன்றி!"

ஈஸு நமட்டுச் சிரிப்பு சிரித்தாள். "நீங்கள் இரண்டுபேரும் இப்படியே புகழ்ச்சிகளைப் பரிமாறிக்கொண்டிருந்தால், நாம் பேசத் தொடங்கவே முடியாது."

ஜேம்ஸை கிழவன் ஆழ்ந்து நோக்கினான்; மெள்ள இருமினான்; ஆவலுடன் ஆரம்பித்தான்;

"தன்னோடு நானும் என் பேரனும் வரவேண்டுமென்பதே தனது ஆவல் என்று உங்களிடம் ஈஸு

தெரிவித்திருக்கிறாள். உங்களிடம் நிலைமையை விளக்கி உங்கள் சகாயத்தைப் பெறவேண்டும். இன்று என்னுடைய ஒரே குழந்தையாக ஈஸா மட்டுமே இருக்கிறாள். அவள் புறப்பட்டுப்போனால், என்னிடம் என் பேரன் மாத்திரம் தான் இருப்பான்."

அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதையும், டுவான் அச்செய்தியைத் தன்னிடம் மரியாதைக்கென நேரிடையாகவே சொல்ல விரும்புகிறான் என்பதையும் ஜேம்ஸ் அறிந்திருந்தான். அவள் தந்தை தொடரவேண்டுமென்று விரும்பிய பாவனையில் அவன் ஈஸாவை நோக்கினான்.

"ஈஸாவும் மிகுந்த வேதனையடைந்திருக்கிறாள். எனக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள் என்று நான் சொன்னால், நீங்கள் அநேகமாக அதை நல்ல விதமாகப் புரிந்துகொள்ளக் கூடும். மூத்தவன் ஒரு டாக்டர். அவன் கொரியா யுத்தத்தில் கொல்லப்பட்டான். இரண்டாம் மகன் ஒரு எஞ்சினியர். அவன் கிரினில் விபத்தொன்றில் சாகடிக்கப் பட்டான். இரண்டு வருடங்களுக்குமுன்! முதிய பிராயத்தைச் சௌகரியத்துடன் கழிக்க வேண்டுமென்று உரிமையுடன் நான் ஆசைப்பட்டேன். ஆனால், எல்லாம் மாறிவிட்டன....ஆம்; நான் தோற்கடிக்கப்பட்ட—சோர்வடைந்த மனிதன்!"

கிழவனால் மேற்கொண்டு தொடர முடியவில்லை.

"மிகச் சிறப்பாகப் படித்துத் தேர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் மிஸ்டர் டுவான். அவரது இரண்டாவது மகன் மாண்டது அவருக்கு ஒரு பெரிய அடி" என்றாள் ஸிஸ்டர் ஆங்கெலிகா.

றேவான் தொடர்ந்தான்.

"இந்தப் பையனின் தகப்பனுக்கு ஒரு கம்யூனிஸ்ட் மனைவி இருந்தாள். அவள் அவனை விட்டுவிட்டு, வேறு ஒருவனுடன் ஓடிவிட்டாள். இப்போது என் இரண்டாம் மகனும் இறந்துவிட்டான். குடும்பத்தை நிர்வகித்து நடத்த யாருமே இல்லை. எனக்கு இருப்பதெல்லாம் இவள் ஒருவள்தான். இரண்டு கோடைக்கு முன்பு ஈஸா திரும்பி வந்ததிலிருந்து, அவள் எனக்குப் பேருதவியாக இருந்து வருகின்றாள். அவளுடன் இதைப்பற்றிப் பேசினேன்; நீங்கள் இந்தப் பையனை அவளுடன் போகச் செய்து, அவனைச் சிரத்தையுடன் கவனித்து, அவனை வளர்த்து படித்த மனிதனாக ஆக்கிவிடுவீர்களென்று நாங்கள் நினைத்திருந்தோம்."

"ஆம்; இதுபற்றி நாங்கள் பேசியிருக்கிறோம். அவன் நம்மோடு வரவேண்டுமென்பதே என் ஆவல். இல்லையேல், அவன் இங்கேயே வளர்ந்தால், இந்த எண்ணங்கள் படிந்து, அவன் மற்றொரு அசாயாக ஆக நேரிடலாம். அவன் மிகவும் சிறு பையன். ஆகவே அவனுக்குக் கட்டாயமாக ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொடுக்கவேண்டும்."

"எனக்குத் தீர்க்கமாகப் புரிகிறது."

"நான் இதை உங்களிடம் ஏன் கோருகிறேனென்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதே என் ஆவலாகும். பிரயாணத்தில் நான் உங்களுக்கு ஒரு சுமையாக ஆகிவிடலாமல்லவா?"

"மெய்யாகவே, நாம் சந்தர்ப்பங்களை நம்பித் தான் இத்துணிகர முயற்சியில் இறங்குகிறோம்.

என்ன நடக்குமென்று யாராலும் உத்தரவாதம் கொடுக்க முடியாது. ஆனால், வயதான ஆண்களும் பெண்களும் இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றதை நான் பார்த்திருக்கிறேன்.”

“அதைப்பற்றி எனக்குப் பயம் இல்லை. இருந்த போதிலும், என்னுடைய பேரன் சிறப்புற வாழ்வதற் குரிய ஒரு வாய்ப்பை அடைந்து, நல்ல முறையில் கல்வி பெறுவான் என்று எனக்குத் தெரியும். இப் போது என் வாழ்வில் நான் கோருவதெல்லாம் அவ் வளவுதான்!” என்றான் டுவான்.

ஜேம்ஸ், நாம் இம்முயற்சியில் ஜெயித்துவிடக் கூடுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்; ஆம்; நாம் வெற்றிபெற்றே தீருவோம்!” என்று தைரியத் தோடு சொன்னாள் ஈஸா.

“உங்களுக்கு ஒரு நல்ல சேதி சொல்லவேண்டும். ஃபான் நமக்கு வழிகாட்டுவான்” என்றான் டுவான்.

“ஃபான்தானே?”

“ஆம்; ஃபானேதான்! நம்மோடு அவரே தொடர்வதாகச் சொல்கிறார். ஏதாவது கஷ்ட நஷ்டம் வந்தால், வழியில் அவருக்குச் சகலமான பேர்களையும் தெரியும்.”

“அவர் நம்முடன் எல்லைக்கே வருவதாகத் தெரி வித்தாரா?”

“அப்படித்தான் அவர் என்னிடம் சொன்னார். என்னையும் உடன் வரும்படி ரொம்பவும் தூண்டி னார் அவர். நாங்கள் வெகுகாலத்திய சிநேகிதர்கள்!” என்றான் டுவான்.

ஜேம்ஸ் எழுந்து நின்றான். அறையில் நிதான மாக நடந்தான். அப்போது அவனை அன்பும், நம்பிக் கையும் நிரம்பிய புன்னகையோடு பார்த்தாள் ஈஸா.

டுவானை நோக்கித் திரும்பினான் ஜேம்ஸ்.

"நம்முடன் ஃபான் வருவது உறுதிதானா?"

"அவர் அப்படித்தான் சொன்னார்."

"வழி நெடுகிலும்தானே?"

"அப்படித்தான் கருதுகிறேன்."

"ஏன்?"

"ஒவ்வொருவரும் அவர் உதவியை விரும்பு கிறார்கள். பருவநிலை முதலியவைகளை ஆலோசிக்கை யில், தப்புவதற்கு இதுவே நல்ல நேரம் என்று அவர் சொல்லுகிறார்."

"அவர் ஒரு துப்பாக்கி விஷயமாக ஏதாவது குறிப்பிட்டாரா?" என்று விசாரித்தான் ஜேம்ஸ்.

அப்பொழுதுதான் வீட்டுப் பையன்—மதப் பிரசார சபை இல்லத்துப் பையன்—முன் வாசல் வழி யாக உள்ளே விரைந்து வந்தான். ஜேம்ஸ் பேச்சை நிறுத்தினான்.

உள்ளே நுழைந்தபோது அவனுக்கு மூச்சு இரைத்தது. "வெளியில் ஒரே குழப்பமாக இருக் கிறது; வெளியே தெருக்களுக்குச் செல்லவேண்டா மென்று உங்களுக்கு எச்சரிப்பதற்காக வேகமாகத் திரும்பி வந்தேன்."

"துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததா?"

"இல்லை. உள்ளே நுழையும் உரிமை கோரி ஒரு பெரும் கூட்டம் போலீஸ் தலைமை அலுவலகத்தில் கூடியது. போலீஸ் தலைமை அதிகாரி அங்கு இல்லை

யென்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் ஏற்கெனவே ராஜிநாமா செய்துவிட்டதாக யாரோ சொன்னார்கள். சுற்றிச் சுற்றி வந்து கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் வெறிகொண்ட அம்மாதிரி கும்பலை நான் பார்த்தது கிடையாது. காவல் படையினர் கூட்டத்தை நிறுத்த முயன்றார்கள்; அவர்களோடு வாதாடினார்கள். அநேகமாக, அவர்கள் அச்சமடைந்திருக்கவேண்டும். இரும்புக் கதவை மோதித் தள்ளித் திறந்துகொண்டு கூட்டம் உள்ளே பாய்ந்தது, போலீஸ் தலைமை அதிகாரியைப் பார்க்கவேண்டுமென்று உரிமை கோரியது. அவர் எங்கு இருக்கிறாரென்று யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் அங்கிருந்து கிளம்பியபோது, ஜனக்கூட்டம் பிரதேச சிறைச்சாலையை நோக்கி மோதிக்கொண்டிருந்ததாகச் சொன்னார்கள்.''

''காவல் படையினர் என்ன செய்தார்கள்?''

''அவர்கள் என்ன செய்ய முடியும்? கூட்டத்தினர் அவர்களைப் பயமுறுத்தி விரட்டிவிடுவார்கள். அவர்கள் ஆயிரம் பேராவது இருப்பார்கள்; வெளியே மேலும் மேலும் மக்கள் திரண்டு வருகின்றனர்.''

முகங்கள் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன,

''மிஸஸ் டாய், மிஸ்டர் டாய்! நீங்கள் இருவரும் வீட்டிலேயே தங்குவதுதான் உசிதம்'' என்றான் வீட்டுப் பையன்.

''குழப்பம் தீரும்வரை தங்கலாம்'' என்று ஈஸுவிடம் தெரிவித்தான் ஜேம்ஸ்.

"ஆஸ்பத்திரி மறுபடியும் சுறுசுறுப்பாக இருக்குமென்று நான் நினைக்கிறேன்."

"அது ஒன்றும் அயல் நாட்டார்களுக்கு எதிரானது இல்லைதானே?"

"காவல் படையினர் ஜனங்களைக் கொன்றதற்கும் துப்பாக்கியால் சுட்டதற்கும் எதிரான குழப்பம் அது. ஆனாலும், ஸிஸ்டர் ஆங்கெலிகா, மிஸ்டர் டாய், நீங்கள் இருவரும் வீதிகளில் நடமாடக் கூடாதென்பதுதான் என் புத்திமதியாகும். ஜனக்கூட்டம் எதையும் செய்யும்" என்று பதில் மொழிந்தான் டுவான்.

"நீ ஏன் போய் பார்த்து, என்ன நடந்துகொண்டிருக்கிறதென்பதை எங்களிடம் வந்து சொல்லக் கூடாது?" என்று பையனிடம் கேட்டான் ஜேம்ஸ்.

"அவ்வாறே செய்கிறேன்."

முகவாய்க்கட்டையைக் கையில் ஏந்தியவளாக, ஜன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்துக்கொண்டு ஈஸு உட்கார்ந்திருந்தாள். அவளை ஆவலுடன் கவனித்தான் ஜேம்ஸ். இம்மாதிரிச் சமயங்களில் அவள் முகம் குழம்பிக் கிடப்பது வழக்கம். ஆனால், இப்போது அவள் வதனம் குழப்பத்தின் அடையாளத்தைக் காட்டவில்லை.

"ஊர்க்காவல் படையினர் ஸ்தம்பித்து விட்டனர்போல் தோன்றுகிறது" என்றான் டுவான். அவன் முகம் சற்றே தளர்ந்தது; உள்ளூரச் சிரித்துக் கொண்டான். "அவர்கள் கூட்டத்தினரைச் சுட விரும்பமாட்டார்கள்; அவர்களுக்கு அந்தத் துணிவும் இருக்காது."

"மக்கள் மரணத்துக்கு அஞ்சமாட்டார்கள். கொல்லுதல் மூலம் அவர்களை ஏன் பயமுறுத்துகிறார்கள்?" என்று லாவோ-ஸேயின் பொன்மொழியை எடுத்துக் கூறியபடி திடீரென்று சொன்னாள் ஈஸு.

"காவல்படைத் தலைமை அதிகாரி எங்கேயோ கோபத்துடன் பேசாமலிருக்கிறார். அவர் கட்சி அலுவலகத்திலிருந்து தொப்பி இல்லாமல், பரபரப்புடன் சத்தம் போட்ட வண்ணம் வெளியேறியதாக காலையில் ஃபான் என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தான். அவருக்கும் கட்சித் தலைவருக்கும் இடையில் சூடான வார்த்தைகள் பரிவர்த்தனை ஆனதை மக்கள் கேட்டனர்.

"கடைசியில் அவர், எதிர்பார்த்தபடி தலைமை அலுவலகத்தில் இல்லை!"

"இம்மாதிரியான கலகங்கள் வரவரச் சகஜமாகி விட்டன. கடந்த கார்காலத்தில், மலைகளில் சில குடியானவர்கள், மேற்பார்வைக்கென வந்திருந்த உயர் அதிகாரி ஒருவரைக் கொன்றுவிட்டார்கள். பிறகு, அக்காலங்களில் சம்பந்தப்பட்டோ, அல்லது சம்பந்தப்படாமலோ இருந்த ஒரு டஜன் குடியானவர்கள் பிடிக்கப்பட்டு வடக்கே அனுப்பப்பட்டார்கள். உங்களைப்போன்ற வெளியில் உள்ள ஜனங்கள் இதை அநேகமாக அறிந்திருக்க முடியாது" என்றாள் ஈஸு.

"நாங்கள் அறிவோம். ஹாங்காங்கில் இப்படிப்பட்ட ஏராளமான கதைகளை நாங்கள் கேட்பதுண்டு. கலகங்கள் வழக்கமாக உணவின் பொருட்டே உண்டாகின்றன" என்றான் ஜேம்ஸ்.

"இது அப்படிப்பட்டதன்று. இது உடை விஷயமாக எழுந்தது. மலைகளில் அதுசமயம் மிகவும் குளிராக இருந்தது. உறைத்துணி—காடாத்துணி தேசீயமயமாக்கப்பட்டது-இது உங்களுக்குத் தெரிந்தது தான். கம்யூனில் யாருக்கும் எதுவும் சொந்தமில்லை. துணி விநியோகம் நியாயமான முறையில் நடைபெறவில்லை; அல்லது, காடா துணிகளாலான நீண்ட கைகளுள்ள மேலங்கிகள் எல்லோருக்கும் போதிய அளவு கிடைக்கவில்லை. நிலக்கரியும் கிடைக்கவில்லை. மலைப்பிராந்தியங்கள் சிலவற்றின் தரைப் பகுதிகளிலே — வடகிழக்குப் பக்கமாக — நிலக்கரி பொறுக்கலாம். தாங்கள் பொறுக்கிய நிலக்கரியை எல்லாம் வடக்கே கப்பலில் ஏற்றி அனுப்பியதைக் குடியானவர்கள் கண்டார்கள். விளக்குமாறு, குப்பைக்கூடை, களைக்கொட்டு, மண்வெட்டி போன்ற எதுவுமே ஒருவருக்கும் சொந்தமில்லை. எல்லாம் கம்யூனுக்குச் சொந்தம். அது பார்த்து ஒவ்வொருவருக்கும் அளிக்க விரும்புகிறது. ஆனல் அதனுல் இயலாது. மழை நாட்களில் குடைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது."

இந்த நடப்புகளெல்லாம் சரித்திரத்துக்குச் சொந்தமானவை என்ற பாவனையில் டுவான் இடைமறித்து தாழ்ந்த, தெளிந்த தொனியில் பேசலானுன். "கியாங்ஸி எல்லையிலுள்ள கான்ஷியன், டிங்சோ போன்ற இடங்களிலிருந்து எண்ணெய்த் தாள் குடைகள் வந்து சேருவது வழக்கம், அங்கு தான் மேற்படி குடைகளுக்கு வேண்டிய ஒருவகையான எண்ணெய் பெருமளவில் கிடைத்தது. தனிப்

பட்ட வியாபாரிகள் மாகாண எல்லையைத் தாண்டி அவற்றைக் கொண்டு வந்துவிடுவார்கள். எண்ணெய்த்தாள் குடைகளை மக்கள் தயாரித்து தேவைப் பட்ட இடங்களில் விற்பனை செய்தார்கள்'' நன்றாக மூச்சுவிட்டதும், அவன் குரல் இன்னும் தெளிவடைந்தது. ''நான் இதைப்பற்றி யோசித்துப் பார்த்திருக்கிறேன், தனியார்கள் குடை வியாபாரம் செய்வதைக் கட்சி விரும்பவில்லையானால், எழுபது கோடி ஜனங்களுக்குப் போதுமான குடைகளை அது தயாரித்து ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் விநியோகம் செய்தாக வேண்டும். அதை யார் எப்படிச் சாதிக்க முடியுமோ, எனக்குப் புரியவில்லை.''

அந்தக் கலவரம் நீண்ட கைகளுள்ள காடாத் துணி மேலங்கிகள் சம்பந்தமாக எழுந்தது'' என்று தொடர்ந்தாள் ஈஸு. சிலருக்கு அவை கிடைத்தன. சிலருக்குக் கிடைக்கவில்லை. அப்பகுதியைப் பரிசோதித்த உயர் அதிகாரியை அவர்கள் கொன்றனர்; சூடான சொற்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன; ஜனங்கள் கொதித்தெழுந்தனர். மூன்று நாள் கழித்து, படைவீரர்களின் அணி ஒன்று வந்து சேர்ந்தது; மாமூல் பிரகாரம், ஒருசில பெரியவர்களைப் பிடித்து வடக்கே அனுப்பியது. அத்துடன் அந்த நடவடிக்கை முடிவு பெற்றது'' என்றாள் ஈஸு.

ஹாங்காங்கில் சீன மொழிச் செய்தித்தாள்களை ஜேம்ஸ் படிக்க முடிந்ததால், இவற்றில் எதுவும் அவ்வளவு புதிதாக அவனுக்குப் படவில்லை.

''ஆதலால், 'கட்சி' மீதுதான் ஒவ்வொரு விஷயத்துக்கும் குற்றம் சாட்டவேண்டும்!'' என்றான் ஜேம்ஸ்.

"ஆம்; ஒவ்வொன்றுக்கும் 'கட்சி' மீதுதான் குற்றம் சாட்டவேண்டும். ஏனென்றால், நமது வாழ்க்கையை எல்லா வகையிலும், 'கட்சி' தானே கட்டுப்படுத்துகின்றது."

"உங்களுடைய சாமான்களையெல்லாம் மூட்டை கட்டுங்கள்; ஃபோனுடன் தொடர்பு வைத்திருங்கள்" என்றான் ஜேம்ஸ் கிழவர் டீவோனிடம்.

ஜேம்ஸ் தன் அத்தையின் பக்கமாகத் தலையைச் சாய்த்து, "நாங்கள் திடுதிப்பென்று புறப்படவேண்டியிருக்கும். நீங்கள் நாளைக்குப் புறப்படவேண்டும்" என்று கூறினான்.

"நீ என்ன செய்யப் போகிறாய்?"

"நான் உங்களை ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லவேண்டும். நீங்கள் நகரத்தைவிட்டு அவசரமாகப் புறப்பட விரும்புவதாகவும், உங்களது கனமான மூட்டை முடிச்சுக்களை நான் கவனித்து எடுத்துக்கொண்டு அடுத்த ரெயிலில் புறப்பட்டு விடுவதாகவும் அங்கே அறிவித்து விடுவேன்."

எதிர்பார்த்தபடி, ஆஸ்பத்திரியிலிருந்து ஸிஸ்டர் ஆங்கெலிகாவுக்கும் ஈஸாவுக்கும் அழைப்பு வந்தது. தாத்தாவும் பேரனும், ஜேம்ஸை வீட்டில்தனித்திருக்கச் செய்துவிட்டு, விடைபெற்றுச் சென்றார்கள்.

"இப்பொழுது நீ வீட்டைவிட்டு வெளியே நகராதே!" ஸிஸ்டர் ஆங்கெலிகா மருத்துவ மனைக்குப் புறப்பட்டபோது மருகனை எச்சரித்தாள் ஈஸா.

அத்தியாயம் 7

கலகக்காரர் கூட்டம், காவல் படைத் தலைமை அதிகாரியைக் கண்டு பிடிக்கத் திராணியற்று குறுக்குத் தெருவை நோக்கி அலை அலையாகப் பாய்ந்தது. அசாய், அவர்களுக்கு மத்தியில் குழப் பத்தை எதிர்பார்த்துப் பரபரப்புடன் காணப்பட் டான். என்ன நடந்து கொண்டிருந்ததென்று யாருமே அறியவில்லை. போக்லோ தலைவர்கள் சிலர் தங்களுக்குப் பின்னால் இருந்த ஜனத்திரள்களினால் உற்சாகமூட்டப் பெற்றவர்களாய், முன்னேக்கி ஓடினார்கள்: பிரதேச சிறைக் கூடத்துக்கு அவர்களை வழி நடத்திச் சென்றனர். அதற்குள், ஜனக்கூட்டம் தெருக்களை நிறைத்துவிட்டது. காவல் படையினர் கண்காணித்துக் கொண்டிருந்தனர்; அவர்கள் மேலிடத்திலிருந்து உத்தரவுகள் கிடைக்கப்பெறாமல் என்ன செய்வது என்று புலனாகாமல், உறுதியற்ற நிலையில் குழம்பிப் போயிருந்தனர். கூட்டம் பெருகி இருமடங்கானது. அங்கு கூடியிருந்த இரண் டாயிரம்—மூவாயிரம் மக்கள்—வாய் பேச முடியாத நிலை-பண்டைப் பெருங்குடியின் தளராத சக்தி-கொந்தளிக்கும் ஆத்திரம் அடைபட்டுக் கிடக்கும் வெறுப்பு ஆகியவற்றின் வெறியினால் குமுறிக்

கிளர்ந்தெழுந்தனர், எப்படியோ ஒரு வகையில் தப்பிவிடுவதற்கான வழியைத் தேடிக் கொண்டிருந் தார்கள்! திட்டமோ, காரணமோ இல்லாமல், முன் யோசனையற்ற நிலையில் ஜனங்கள் இந்தக் கலகத்தில் இறங்கியிருந்தார்கள் என்பதை அவர்கள் மட்டும் அறிந்தார்கள்.

மக்களில் சிலர் பின்னடைந்தனர்; ஆனால் அவர் களுள் சிலர் அங்கு என்ன நடக்கப் போகிறதென் பதை அறிய விரும்பிக் கூட்டத்துடன் திரும்பவும் சேர்ந்து கொண்டார்கள். காவல்படையின் எதிர்ப்பு எவ்விதத்திலும் இல்லாமல் போகவே, கூட்டத்தினர் உற்சாகத்துடன் விடுமுறை நாட்களில் காணப்படும் சுதந்தர உணர்வுடன் விரைந்தனர். இம்மாதிரி சுதந்திரத்தைக் கடந்த பத்தாண்டுகளில் அவர்கள் கண்டதே இல்லை.

சந்தைப் பகுதியில் மக்களின் கூட்டம் உணர்ச்சி வசப்பட்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்தான் அசாய். ஊர்வலம் நின்றுவிட்டது, பல கடைகள் சூறையாடப்பட்டன. கொள்ளையடித்தவர் களுக்கு மாவு, அரிசி மூட்டைகளுடன் எண்ணெயும் உதவின. யாரோ ஒருவன் தற்செயலாகவோ அல்லது திட்டமிட்டோ தீக்குச்சியைக் கிழித்துப் போட்டிருந்தான்; கனமான கறுப்புப் புகை ஓர் எண்ணெய்க் கடையிலிருந்து கிளம்பியது! பயங்கரக் கதறல்களுக்கும் வெறி கொண்ட பேய்ச் சிரிப்புக்கும் மத்தியில் பயங்கர தீ ஜ்வாலைகள் வீட்டைச் சூழ்ந்து விழுங்கியது.

கூட்டம் தள்ளிச் சென்றது. பிரதேசச் சிறை, நாலைந்து வீட்டுத் தொகுதிகள் தள்ளித்தான் இருந்தது. அவர்களுக்கு என்ன தேவை என்பதை போக்லோ தலைவர்கள் மாத்திரமே அறிந்திருந்தார்கள்.

அசாய் அவர்களுக்கு முன்னே நடந்து சென்று கொண்டிருந்தான்.

சிறை ஒரு சிமிட்டிக் கலவைக் கட்டடம்; பலமாகப் பாதுகாக்கப்பட்ட சுற்று மதிலின் உள்ளே அது அமைக்கப்பட்டிருந்தது.

கிழவன் ஒருவன் வெறுந்தலையுடன் முன்னேறிக் அடியெடுத்து வைத்தான்.

ஸார்ஜன்ட் ஒரு வடக்கத்தியான். அவன் மனக் குழப்பத்துடன் இந்தப் பயங்கரக் கூட்டத்தைப் பார்த்தான்.

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"போலீஸ் தலைமை அதிகாரியை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்."

"அவர் இங்கு இல்லை."

"இங்கு இருப்பதாகத்தான் சொன்னார்கள்!"

"அவர் இங்கு இல்லையென்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்."

முன்னால் இருந்தவர்கள் முன்னேறிக் நெருக்கித் தள்ளியதால், சார்ஜன்ட் தன்னுடைய துப்பாக்கியை பயமுறுத்தும் வகையில் தாழ்த்தினான்.

பின்புறமிருந்து தள்ளியவர்களை இச்செய்கை மேலும் கோபமூட்டவே செய்தது.

"முன்னேக்கிச் செல்லுங்கள்!....எங்களைக் கொல்லுங்கள்!" என்று ஒருவன் கூச்சல் போட்டான்.

சார்ஜன்ட் எதையாவது செய்துவிடுவதற்கு முன்னே, அந்தக் கிழவன் வந்து அவனுடைய துப்பாக்கியின் வாய்ப்பாகத்தை மென்மையாக வேறு பக்கம் சாய்த்துவிட்டு "ஊஹூம், நீங்கள் அதைச் செய்யப்போவதில்லை" என்று சொன்னன்.

சார்ஜன்ட் தன் துப்பாக்கியை மெதுவாகத் தரையை நோக்கி இறக்கினன்.

கோபம் கொண்ட கூட்டம் இப்போது மற்ற காவல் படைகளைத் தோற்கடித்தது; வாசலை மோதி நொறுக்கியவாறு பெருங்கூச்சலிட்டு ஆரவாரம் செய்துகொண்டு உள்ளே நுழைந்தது. உள்ளே காவல் படையினர் தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓட்டம் பிடித்தனர்.

துப்பாக்கி வெடித்த சத்தம் படீரென்று கூர்மையாக ஒலித்ததை அசாய் கேட்டான். அங்கிருந்து கிழக்கே ஐம்பது கஜ தூரத்திலிருந்த 'பொதுவுடைமை புனர் நிர்மாண விநியோகக் கிடங்கி'லிருந்து மற்ெருரு வெடிச் சத்தம் தெளிவாகக் கேட்டது.

அசாய் மறுபடியும் குதித்துத் தாவி வெளியேறினன். கலகக் கும்பலின் பெரும் பகுதி விநியோகக் கிடங்கை நோக்கி விரைந்தது; குழப்பம் அங்குதான் நிலவியது. துப்பாக்கிக் குண்டுகள் ஆகாய வெளியில் வெடிக்கப்பட்டன. கூட்டத்திலிருந்த ஜனங்கள் அச்சத்தை உதறிவிட்டு கிளர்த்தெழுந்தனர்; தங்களுக்குத் தேவைப்பட்ட சர்க்கரை, எண்

ணெய், டப்பாக்களில் அடைக்கப்பட்ட பொருள்கள் சிகரெட், மாவு, பழம், காய்கறிகள் இவையெல்லா வற்றுக்கும் மேலே அரிசி ஆகியவைகளைப்பற்றி நன்ருக உணர்ந்து கொண்டிருந்தார்கள். கப்பலில் ஏற்றப்படுவதற்காக அரிசி டன் கணக்கில் சேமித்து வைக்கப்பட்டிருந்தது. மற்ற அரிசிச் சாக்குகள், சோவியத் யூனியனுக்குச் செல்லும் வழியில் ஹாங் காங்கில் சேர்ப்பிக்கப்படுவதற்காக அடையாளக் குறி இடப்பட்டு, தற்காலிகமான சிறு வீடுகளின் கொல்லைப்புறங்களில் அடுக்கப்பட்டிருந்தன.

அக்கட்டிடத்தின் வலது பக்கமாக அசாய் பாய்ந்து சென்ருன். அங்கு அவனை எல்லோருக்கும் தெரியும். "கவனியுங்கள்! அவர்களுடைய துப்பாக்கி களை அப்புறப்படுத்திவிட்டு, அவர்களைக் கட்டிப் போடுங்கள்!" என்று அவன் கூச்சலிட்டான்.

இளைஞர்கள் சிலர் மகிழ்ச்சியுடன் செயற்பட தயாராயினர். அவர்கள் விரைந்து சென்று, காவ லர்களின் ஆயுதங்களை அப்புறப்படுத்திவிட்டு அவர் களின் கைகளை பின்புறம் சேர்த்துக் கட்டிப்போட்ட னர். அவர்கள் ஆதரவற்று விடப்பட்டனர்; புழுப் போல நெளிந்து கொண்டிருந்தனர்.

கட்டிப் போடப்பட்டிருந்த காப்பாளன் ஒருவன் வாலிபர் கூட்டுறவுச் சங்கத் தலைவனை அடையாளம் கண்டு கொண்டான்.

"நீ கூடவா?" என்று கேட்டான்.

"ஆமாம்; நான்கூடத்தான்!"

தங்களது பொதுப்படையான குறிக்கோளை நோக்கியே பெரும்பகுதி மக்களின் எண்ணங்களெல்

லாம் ஒன்று சேரக் குவிந்து கொண்டிருந்தன. அவர்களைப் பற்றி யாரும் கவலை கொள்ளாமல் போக்லோ தலைவர்கள் விடுவிக்கப்பட்ட தங்களது உறவினர்களுடன் வீட்டுக்குப் போய்விட்டார்கள். அசாயின் தலை கிறுகிறுத்தது; வாசலுக்கு வந்து அங்கே நின்றான்; பெண்கள் சிலர் தலைகளில் முட்டைகோசுகளைச் சுமந்தவண்ணம் வந்து கொண்டிருந்தனர்! மற்றவர்கள் தங்களுடைய சுருட்டிவைக்கப்பட்டிருந்த மேலங்கிகளில் விலைமதிப்புள்ள அரிசியையும் டப்பாக்களில் அடைக்கப்பட்ட பொருள்களையும் தூக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். ஆடவர்கள் தங்கள் தோள்களில் அரிசி மூட்டைகளைச் சுமந்து சென்றனர். கூச்சலிட்டுக் கத்தியபடி ஒருவரையொருவர் நசுக்கிக்கொண்டும் ஒருவர்மீதொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டும் மெள்ள மெள்ளச் சென்றுகொண்டிருந்த மகிழ்ச்சி மிக்க ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் கூட்டத்துக்கு மத்தியில் மிதிபட்ட காய் கறிகள். ஆரஞ்சுப் பழங்கள், கிள்ளப்பட்ட கறுப்பு அவரைக்காய்கள், சர்க்கரை அரிசி முதலியன தரையெங்கும் சிதறிக் கிடந்தது.

"வாருங்கள், உங்களுக்குத் தேவையானதை அள்ளிக்கொள்ளுங்கள். டப்பாக்களில் அடைக்கப்பட்டிருக்கும் சாமான்கள், சர்க்கரை, அரிசி எல்லாம் இருக்கின்றன. வேண்டுமென்பதை எடுத்துப் போங்கள்!" என்று அசாய் வாசலில் நின்று சத்தம் போட்டான்.

அப்பொழுது ஃபான் வாசலில் தோன்றினான்.

"நீ இங்கே என்ன காரியம் செய்துகொண்டிருக்கிருய்?"

"நீங்களும் உள்ளே போய் உங்களுக்கு வேண்டியதை ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது?" என்று கேட்டான் அசாய்.

"நீ ரொம்பவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்."

"நான் பயப்படவேண்டிய அவசியம் என்ன?"

"படை வீரர்கள் கூடிய சீக்கிரம் இங்கு வந்து விடுவார்கள். நீ உன்னை அவர்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்!"

அவனிடம் எதையோ தேடுபவன் மாதிரி உன்னிப்புடன் பார்த்தான் ஃபான்; பிறகு அடாடா, வெய்ச்லோவுக்கு இந்தக்கதி வந்திருக்கிறதே," என்று தன்னுள் முணுமுணுத்துச் கொண்டான்.

என்ன நடந்ததென்று ஒருவரும் அறியவில்லை. அடுத்திருந்த கட்சிக் காரியாலயத்திற்கு யாரோ தீ வைத்துவிட்டார்கள். மேல் தளத்தில் ஜன்னல்களினின்றும் கரிய புகைச் சுருள்கள் எழும்பிக்கொண்டிருந்தன. ஃபான் அமைதியாக ஆழ்ந்த சிந்தனை வசப்பட்டிருந்தான். சில மனிதர்கள் சட்டைகளோடு கட்டிடத்திலிருந்து வெளியேறி பின்புறத்தை நோக்கி வெகு வேகமாக ஓடிச் சென்றதையும், அவர்களுக்கு இடையே டெங்பிங்கின் உருவம் இருந்ததையும் அவன் கண்டான்.

சதுக்கத்தின் மறு பகுதியில் இருண்ட கப்பிக் கல் குறுக்கு வழியிலிருந்து படைவீரர்களின் காலடி ஓசை கேட்டது. அவர்கள் தலைகளில் இரும்புத்

தொப்பிகளுடனும் தோள்களில் துப்பாக்கிகளுடனும் அணிவகுத்துக் காலடி போட்டு நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

"படைவீரர்கள்! படைவீரர்கள்!" என்று குரல் எழுந்ததுதான் தாமதம், அத்தனை கூட்டமும் கிடங்கின் சுற்று மதிலை விட்டு கண்டபடி ஓடத் தலைப்பட்டது; அவர்கள் எவ்வளவு வேகமாகக் கூடினார்களோ அவ்வளவு வேகமாகக் கலைந்தும் விட்டனர்.

"இந்த கூட்டத்தில் நீயும் கலந்துவிடக்கூடாது. நீ இப்படி வா," என்று அசாயை அப்பால் இழுத்துக் கொண்டே சொன்னான். ஃபான். அவனுக்கு மிகவும் பழக்கமான அப்பகுதியின் மூலையை நோக்கி அசாய் விரைந்ததை ஃபான் கண்டான்.

அன்றிரவு, டுவான் அண்டை அயலில் இருந்தவர்களிடமிருந்து, கட்சி அலுவலகம் தீப்பற்றி எரிந்ததைப்பற்றியும் விநியோகக் கிடங்கு கொள்ளையடிக்கப்பட்டதைப் பற்றியும் அறிந்தான்.

கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை அள்ளிக் கொண்டதாகவோ, அல்லது காவலர்கள் சம்பந்தமாக ஏற்பட்ட கலவரத்தில் பங்குபெற்றதாகவோ ஒருவரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஜனங்கள், தங்கள் வெறி அடங்கியதும் மேற்படி கலகத்தின் விளைவு என்ன ஆகுமோ என்ற அச்சத்தினாலும் பீதியினாலும் மனங்குழம்பி இருந்தார்கள். "என்ன நடக்கப் போகிறது?" என்னும் கேள்விதான் ஒவ்வொருவரது உதடுகளிலும் இருந்தது. ஊர்க் காவல் படையினர் 'ரோந்து சுற்றுவதற்காக தெருக்களில் இருவர் இருவராகத் திரும்பவும் தோன்றினர்.

மிச்சம் மீதம் கிடந்ததை அழித்துக்கொண்டு, கிடங்கின் வலது பக்கம் தீ பரவியது. எரிந்துகொண்டிருந்த உரத்தினின்றும் கிளம்பிய துர்நாற்றம் சகிக்க முடியாததாக இருந்தது.

ஃபான் டுவானின் வீட்டிற்குள் விரைந்து சென்று, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு அதில், பொத்'தென்று அமர்ந்தான். ஒரு கோப்பைத் தேநீர் வேண்டுமென்றான். பிறகு தேநீருக்காகக் காத்திருக்காமல் அவசரமாக அவன் பேச ஆரம்பித்தான்; அப்போது மூக்குக் கண்ணாடிகளுக்குள் அவன் கண்கள் ஒளி வீசின. முன் நெற்றி வழவழப்பாகவும் விறைப்பாகவும் இருந்தது. அவனது மேதாவிலாசத் தோற்றம் மறைந்து செயலுக்குரிய விழிப்புடன் கூடிய முரடன்போல் இருந்தான் அவன்.

"தெருக்கள் அமைதியாக இருக்கின்றன. மக்கள் இனி மேற்கொண்டு எவ்விதத் தொல்லையையும் விரும்பமாட்டார்களென்பதற்காக, உத்தரவு புதுப்பிக்கப்பட்டது. நகரம், தலைவன் இல்லாமல் இருக்கின்றது. போலீஸ் தலைமை அதிகாரி ராஜிநாமா செய்துவிட்டு, தாய்நாடு சென்றுவிட்டார். டெங்பிங்கைக் கண்டுபிடிக்க முடியாது, இராணுவ வீரர்கள் போக்லோவிலிருந்து திரும்பி வந்துகொண்டிருக்கிறார்கள். ஒரு நூறு படைகளுடன் இந்த நகரத்தின் பொறுப்பை ஏற்க யாராவது விரும்பினால் இன்றிரவே அவ்வாறு செய்யலாம்."

இடையீடு இல்லாமல் அவன் மேலும் தொடர்ந்தான்; "வெய்சோ நகரம் இம்மாதிரியான ஒரு

தினத்தை தரிசிக்குமென்று ஒருபோதும் எண்ண வில்லை. நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய அற்புதமான சந்தர்ப்பம் இது. நாம் நகரத்தை விட்டு நாளைக்கே புறப்பட வேண்டும்."

"மிஸ்டர் டாய்க்குத் தெரிவித்துவிட்டீர்களா?" என்று உணர்ச்சிவசப்பட்டு நடுக்கத்தோடு கேட்டாள் ஈஸா.

"உங்கள் மூலம் அவருக்குத் தகவல் அனுப்ப வேண்டுமென்றிருந்தேன். பலர் நாளைய தினம் நகரத்தைவிட்டுப் புறப்படுவார்கள். சிலர் எல்லை யைக் கடக்க முயற்சி செய்வார்களென்றும் யூகிக் கிறேன்—போக்லோ தலைவர்களில் சிலரும், தப்பிய கைதிகளும்தான் இவர்கள். திரும்பிச் செல்வதற்கு அவர்களுக்கு வீடுவாசல் இல்லை; ஆகவே அவர்கள் வெளியேறித்தான்ஆகவேண்டும்.இல்லையேல் மாமூல் பிரகாரம் அத் தலைவர்கள் வளைத்துப் பிடிக்கப்பட்டு வடக்கே அனுப்பப்பட்டு விடுவார்கள். "உத்தரவு புதுப்பிக்கப்பட்டது; குற்றவாளிகள் தண்டிக்கப்பட் டார்கள்; மக்கள் வேலைக்குப் போகவேண்டும்!"—இது வழக்கமான சங்கதிதானே! செய்தி மிஸ்டர் டாய்க்கு உடனடியாக எட்டிவிடவேண்டும்," என்றான் ஃபான்.

"நான் போய்ச் சொல்லுகிறேன். இன்றிரவு அவர்கள் அவ்வளவு உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள்" என்றான் ரேவான்,

"நான் அதைச் செய்கிறேன், ஆஸ்பத்திரி வழி யாக நான் உள்ளே செல்ல முடியும்; என்னை யாரும் கவனிக்கமாட்டார்கள்" என்றாள் ஈஸா.

"நல்லது, கான்டன்-கோவ்லூன் ரயிலோடு இணைப்புப் பெறும் வண்ணம் ஸிஸ்டர் ஆங்கெலிகா நாளைக்கு வெகு சீக்கிரமாக ரயிலில் புறப்பட வேண்டும், உங்கள் நண்பர் டாய் அந்த அம்மணியின் மூட்டை முடிச்சுகள் காரணமாக, அடுத்துப் புறப்படும் ரெயிலில் கிளம்பப் போவதாகப் 'பாவனை' செய்வார்! அருமையான காரணம். பொதுவாக உள்ள குழப்பங்கள் காரணமாக எவ்வளவு துரிதமாக முடியுமோ அவ்வளவு துரிதமாக வெளியேறி விட விரும்புகிறாள் அந்த வயதான அம்மணி."

ஃபானின் வார்த்தைகள் தெளிவாகவும் கச்சிதமாகவும் இருந்தன. தொடர்ந்து பேசினான்; "மூட்டை முடிச்சுக்களை சேகரம் செய்து கட்டுவதில் சுறுசுறுப்பாக இருப்பதுபோல பாவனை செய்து கொண்டு அவர் தன் வீட்டில் இருட்டும் வரை தங்கியிருக்க வேண்டும். லங்காங்குக்கு நம்மை ஏற்றிச் செல்வதற்கு ஒரு பஸ் டிரைவரிடம் ஏற்பாடுகள் செய்துள்ளேன். உங்களோடு நான் வருகிறேன். நம் பிரயாணத்துக்கு வேண்டிய தஸ்தாவேஜுகளைத் தயார்ப்படுத்துவதற்கு நாளைப்பொழுது முழுவதும் கழிந்துவிடும். நகரத்திலிருந்து நாம் பஸ்ஸில் ஏறிச் செல்ல முடியாது. நகரத்தின் மேற்கே உள்ள சாய்சாம் தெருவை அடைந்து, கிராமத்தின் குறுக்கே சென்று, வெளியே இருக்கும் பஸ் நிறுத்தத்தில் நாம் பஸ்ஸை பிடிக்கவேண்டும்."

"ஆனால், முதலில் ஜேம்ஸ் நம்மோடு வந்து சேர்ந்துவிட வேண்டும். அவருக்கு சாய்சாம் தெரு எங்கேயிருக்கிறதென்று தெரியாதே!"

"அது உண்மைதான். ஒரு பிரிவாக நீங்கள் சேர்ந்து புறப்பட வேண்டியிருக்கும். நான் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இன்னும் இருக்கின்றன. மிஸ்டர் டூவான், நீங்கள் நாளை இரவு அவருடன் இங்கே தொடர்ந்து வந்துவிடலாம். பொழுது போக்கிற்காக நடந்து வருபவர் போலத் தோன்றும்படி கொஞ்ச தூரம் எட்டியிருந்தே அவர் உங்களைத் தொடரட்டும். ஞாபகம் இருக்கட்டும். நீங்கள் எல்லோரும் பிங்ஷான் குடியானவர்கள் மாதிரி உடை அணிந்திருக்க வேண்டும்."

"பஸ்ஸில் நமக்கு இடம் கிடைக்கவில்லையானால் என்ன செய்வது?" என்று வினவினாள் ஈஸா.

"பஸ் டிரைவரும் நானும் நெருங்கிய சிநேகிதர்கள். நாங்கள் தொழிலில் சேர்ந்தே இருக்கிறோம். ஒரு தடவை பிரயாணத்துக்கு அவனுக்கு ஹாங்காங் டாலர்கள் ஐம்பது ஊதியம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்; அவனுக்கு அது ஏறக்குறைய ஒரு மாதச் சம்பளம், கட்சி ஆட்களால் ஐந்தாறு இடங்கள் 'ரிசர்வ்' செய்யப்பட்டிருப்பதாக அவன் கூறுவான். ஏற்கெனவே அவன் இம்மாதிரி நம்பிக்கையுடன் நடந்திருக்கிறான்!"

டூவான் பெருமூச்சு விட்டான்.

"இப்போதுதான் ஞாபகம் வருகிறது. உங்கள் உதவிக்காக அவர் எவ்வளவு ஊதியம் கொடுக்க வேண்டுமென்று மிஸ்டர் டாய் கேட்டுக்கொண்டிருந்தார். உங்களைக் கேட்டுச் சொல்லுவதாக அவரிடம் தெரிவித்தேன்" என்றாள் ஈஸா.

"நான் அதைப் பொருட்படுத்தமாட்டேன்!" ஃபானின் பழைய மாண்டரின் வழக்கங்கள் சில மீண்டும் வந்தன.

"நீங்கள் சொல்லத்தான் வேண்டும்."

"ஊஹூம். நானும் உங்கள் தந்தையும் நெடு நாளைய சிநேகிதர்கள். நான் இப்போது உங்கள் நண்பரான ஜேம்ஸுக்கு மட்டும் உதவி செய்ய வில்லை; உங்கள் தகப்பனுருக்கும் கூடத்தான். அத்துடன் நானும் உங்களுடன் வருகிறேன்."

"எல்லையைத் தாண்டித் தானே?" என்று கேட்டான் டுவான்.

ஃபான் மென்மையாகப் புன்னகை செய்தான். "ஆமாம், அமெரிக்காவில் எனக்கொரு மகன் இருக்கிருன். உங்களுக்கு யூஃபாங்கை நினைவிருக்கிறதா?"

"ஓஹோ! அவன் அமெரிக்காவிலா இருக்கிருன்? குழந்தைகளாக இருக்கையில் ஈஸுவும் அவனும் ஒன்ருக விளையாடுவது வழக்கம். அவன் இறந்துவிட்டதாக நான் நினைத்தேன்."

"அவன் உயிருடன் சௌக்கியமாக இருக்கிருன், அமெரிக்காவில் அவனுக்கு நல்ல சம்பாத்தியம். நான் ஹாங்காங்கில் வசித்தால், அவன் வந்து என்னைப் பார்ப்பான். வயதான நாம் உயிர் வாழ்வதே இந்த மகிழ்ச்சிக்காகத்தானே, இல்லையா!"

"நீங்கள் என்னிடம் இதை இதுவரை சொன்ன தில்லையே!" என்று பதிலிறுத்தான் டுவான்.

"அப்படி இல்லை. இங்கு அவனைப்பற்றிய செய்தி கிடைப்பது ரொம்பவும் சிரமமான காரியம். மேலும் ஒரு சமயம்—அதாவது மூன்று நான்கு வருஷங்கள்

வரை அவனைப்பற்றி தகவல் எதுவுமே தெரியாமல் இருந்தேன். நீங்கள் அறியமாட்டீர்கள். வயிற்றிலே அவ்வளவு சூன்யம்; நெஞ்சிலே அவ்வளவு தனிமை.''

அவனது நெற்றி சிந்தனையினால் சுருங்கியது. அவன் திடீரென்று உணர்ச்சி மிக்கவனாக-மனிதத் தன்மையுள்ளவனாக-பலஹீனமானவனாக - சங்கடங்க ளால் சுற்றி வளைக்கப்பட்டவனாக அப்பொழுது தோன்றினான். அப்போது அவனிடம் எப்போதும் காணப்படும் அடக்கமான ஆன்மீக தோற்றம் தென் பட்டது.

"ஜேம்ஸ் உங்களுக்கு எவ்வளவு பணம் ஊதியம் தரவேண்டுமென்பதை நீங்கள் இன்னமும் தெரி விக்கவில்லையே?'' என்றாள் ஈஸு.

"நீங்கள் அவரைத் திருமணம் செய்து கொள் ளப் போகிறீர்கள் அல்லவா?''

"நிச்சயமாக! நாங்கள் ஹாங்காங்கில் போய் நிலைத்ததும் எங்கள் திருமணம் நடக்கும்.''

"நல்லது. பிறகு நான் ஏன் கவலைப்பட வேண் டும்? இந்தப் பயணத்தில் நாம் ஒன்று சேர்ந்து செல் லும்போது, எளிதில் மறக்கக்கூடாத வகையில், ஓர் நல்ல ஏற்பாட்டைச் செய்து கொள்வோம். நாம் மிகவும் அந்நியோந்நியமான சிநேகிதர்களாக ஆகப்போகிறோம் என்ற ஓர் உணர்ச்சி என்னுள் வளர்ந்து வருகிறது.''

"அவ்வாறே நானும் திடமாக நம்புகிறேன்.''

"சரி, ஈஸு, இந்த விஷயத்தை அத்துடன் விட்டு விடு; மிஸ்டர் டாய் இதை மறக்கமாட்டார்'' என்றான் டுவான் தன் மகளிடம்.

"ஆமாம்! இதுதான் என் மனத்துக்கு மிகுந்த இதமாக இருக்கிறது" என்றான் ஃபான். சீன வழக்கப்பிரகாரம் பணம் சம்பந்தமான பேச்சு கைவிடப்பட்டது; ஆனாலும், தன் சேவை பலன் பெறாமல் போகாது என்பதை அவன் நன்கு உணர்ந்தான். ஃபான் ஒரு கண்டிப்பான வியாபாரி. ஆனாலும், ஒரு கத்தை கரன்ஸி நோட்டுக்களைப் பார்க்கிலும் சிறந்த நட்பு அதிகப் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அவன் அறிவான்.

அவன் தேநீரைப் பருகினான்; புறப்பட எழுந்தான்.

"எங்கே புறப்பட்டுவிட்டீர்கள், ஷெக்டின்?.... இப்போது போகவேண்டாம்" என்றான் டூவான்.

ஃபான் ஷெக்டின் ஈஸுவின் பக்கமாகத் திரும்பினான்.

"எனக்கு மற்ற அலுவல்கள் இருக்கின்றன. நீங்கள் ஒவ்வொருவரும் இடுப்பைச் சுற்றி அணியும் கச்சை தயார் செய்து கொள்ளுங்கள். ஆமாம், ஜேம்ஸுக்கும் கூடத்தான், கச்சைகளின் அகலம் சுமார் ஐந்து அங்குலம் இருக்கட்டும். உங்களால் முடிந்த அளவுக்கு வறுத்த அரிசி தயார் செய்யுங்கள். நமக்குக் கிடைக்கக்கூடியது அவ்வளவுதான். கிடைக்கும் இடத்தில் தண்ணீர் குடிப்போம். மூட்டை முடிச்சு எதுவும் கூடாது; ஞாபகமிருக்கட்டும். சிறிய துணி முடிச்சுமட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். போர்வை கொண்டு போக முடியாதாகையால், உங்களுக்கு இரவில் ஒரு 'கோட்' தேவைப்படும். எல்லையில் போலீஸ் நாய்களை மந்திரவித்தை

போன்று ஆட்டிப் படைக்கக்கூடிய ஒரு அதிசய மருந்து நாளை எனக்குக் கிடைக்கும். அது நாயை ஐம்பது கஜத் தொலைவிலேயே மயங்கச் செய்து தூங்க வைத்துவிடும்."

"என்ன மருந்து அது?" என்ருள் ஈஸா.

ஃபான் மெல்லச் சிரித்து மழுப்பிவிட்டான்; அதைச் சொல்லமாட்டேன்; "எங்கள் ஆட்கள் பல முறை சோதித்துப் பார்த்துவிட்டார்கள். அது அற்புதமாக வேலை செய்கிறது" என்ருன்.

"எங்களிடம் அதைச் சொல்லக் கூடாதா? என்று அவள் கேட்டாள்.

"மருந்து கைக்குக் கிடைத்தவுடன் பெயரைச் சொல்கிறேன். இயற்கை தந்த மருந்து அது"

"சரி ஜேம்ஸின் துப்பாக்கி உங்கள் வசம் வந்து விட்டதா? இதை அறிந்துகொள்ள அவர் மிகவும் ஆவலுடன் இருப்பார்" என்று தெரிவித்தாள் ஈஸா.

ஃபான் வியப்புடன் முறுவல் பூத்தான். "துப் பாக்கி என்னிடம்தான் இருக்கிறது என்று அவரிடம் சொல்லுங்கள். பாவம், அசாயைக் கைது செய்து விட்டார்கள். அதுபற்றி என்ன செய்ய வேண்டு மென்பதைக் கவனிக்க வேண்டும்" என்ருன் அவன்.

கேட்டுக் கொண்டிருந்தவர்களின் முகங்களில் பயம் குடிகொண்டது. சிறுவன் ஸ்ப்ரௌட்டுக்கு அசாய்தான் போர்வீரன்; அவன் கலங்கினுன், அச்ச மடைந்தான்!

"அவன் ஏன் கைது செய்யப்பட்டான்? அவ னுக்கு உதவி செய்யுங்கள். தயவு செய்து உத வுங்கள்!" என்ருன்.

"காவலர்களைக் கட்டிப் போடும்படி உத்தரவு கொடுத்தவன் அவனேதான் என்று காவலன் ஒருவன் அடையாளம் கண்டு சொல்லிவிட்டான். இது சம்பந்தமாக உடனடியாக ஏதாவது செய்யா விட்டால் பிறகு அவனை மஞ்சூரியாவுக்கு அனுப்பி விடுவார்கள். அதுதான் எனக்குப் பயமாக இருக் கிறது. ஜேம்ஸிடம் அமெரிக்க நாட்டுப் பணம் ஏதாவது இருக்கிறதா? அவரிடம் இருந்தால், முப்பது அல்லது நாற்பது டாலர் கொண்டு வந்து என்னிடம் தாருங்கள். அசாவைக் காப்பாற்ற அது பயன்படுமென்று நான் நம்புகிறேன்!"

அத்தியாயம் 8

லெய்வாவின் வீட்டை அடைந்து, கதவை மெல்லத் தட்டினுன் ஃபான். கதவு லேசாகத் திறந்திருந்தது. "உள்ளே வாருங்கள்" என்று தாழ் குரலில் சொன்ஞள் லெய்வா.

"உங்களுக்காக சாயங்காலம் முதல் காத்துக் கொண்டிருக்கிறேன். என்ன நடந்தது?" என்று பீதி நிரம்பிய மெல்லிய குரலில் கேட்டாள் அவள்.

"எவ்வளவோ விஷயங்கள் நடந்து கொண்டிருக் கின்றன. நீ அதைப்பற்றிக் கவலைப்படாதே. நம்மு டைய திட்டம் தயாராகிவிட்டது."

அவனைக் கைகளால் அணைத்த வண்ணம் அவ னுக்கு ஒரு முத்தம் கொடுத்தாள் லெய்வா.

"இரவு இங்கே தங்குகிறீர்களல்லவா? என்று கேட்டாள். ஃபான் தலையை அசைத்தான், சம்மதத் தைத் தெரிவிக்கும் வகையில் இருவரும் கைகோர்த் துக்கொண்டு நடந்து மெத்தையிலே உட்கார்ந் தார்கள்.

சகல ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன அல்லவா? மொத்தத்தில் விஷயம் இவ்வளவுதானே?" என்று அவள் வினவிஞள்,

"ஆமாம்; இவ்வளவேதான். நாம் நாளை இரவு புறப்பட்டுவிடுவோம். நடுச்சாமம் கழியும்வரை சந்திரன் கிளம்பாது. எனக்கு ஒரு சிகரெட் கொடு"

ஆடை அலங்கார மேஜையின் இழுப்பைத் திறந்து பிரித்திருந்த இளஞ்சிவப்பு நிறம் கொண்ட 'ரூபிக்வீன்ஸ்' சிகரெட் பாக்கெட்டை எடுத்து அவனிடம் நீட்டினாள் லெய்வா.

"இதைவிடச் சிறந்ததாக உன்னிடம் எதுவும் இல்லையா?" ஃபான் ஏமாற்றமடைந்ததுபோல் காணப்பட்டான்.

"ஊஹும்"

"டெங்பிங் வந்துபோனாரா?"

"அவர் மூன்று நாட்களாக இங்குவரவில்லை. அவர் எங்கு இருக்கிறாரென்பதே பொதுமக்களுக்குத் தெரியாது· அவர் எங்கோ தலைமறைவாக ஒளிந்து கொண்டிருக்கவேண்டும்."

டப்பாவில் மூன்றே மூன்று சிகரெட்டுகள்தான் மிஞ்சியிருந்தன. லெய்வா ஒன்றை எடுத்துத் தன் வாயில் வைத்துக்கொளுத்தி அதை அவனிடம் கொடுத்தபின், மெத்தையில் அவனருகில் உட்கார்ந்தாள்; சுவரில் இருந்த கண்ணாடியில் பார்த்தவாறு அவனை அணைத்துக்கொண்டு, "என்னால் நம்பவே முடியவில்லை; இன்னும் ஒரு வாரத்தில் நாம் ஹாங்காங்கில் இருப்போம். ஆச்சரியம்தான்!" என்றாள்.

ஃபான் அந்நினைவை மகிழ்வுடன் கற்பனை செய்து பார்த்தான். "ஆம்! சுமார் ஒரு வாரத்தில், அநேகமாக ஒரு வாரத்திற்கு உள்ளாகவே நாம் போய்ச் சேர்ந்துவிடமுடியும். பிறகு. நாம் மறுபடி நல்ல

மூச்சு விடுவோம். நீ அப்பொழுது ஓர் உணவு விடுதியை அடைந்து உனக்குப்பிடித்தமானவைகளைக் கொண்டுவரச்செய். ஹாங்காங்கில் முதல் சாப்பாட்டுக்கு நீ என்ன வாங்கிக்கொள்ளப் போகிறாய்?"

"நண்டு!"

"வெளிப்புறம் மங்கலாகவும் பழுப்பு நிறமாகவும் உள்ளே மிருதுவாகவும் பாலேடு படிந்தும் உள்ள நன்கு வறுக்கப்பட்ட அவரைக்காய் போட்ட தயிர் பச்சடியை நான் சாப்பிடுவேன். ஊட்டமிக்க ருசியான குழம்பில் ஊறிய சாறுநிறைந்த வெண்ணெய் போன்ற வாத்து இறைச்சியும் நான் உண்பேன்!" உடம்பைத் தளர்த்தியவனாக பின்னால் படுக்கையில் சாய்ந்தான் அவன்.

லெய்வா அவன் பக்கம் திரும்பினாள்.

"அப்படிப்பட்ட ஆகாரங்களை நமது வயிறு ஏற்காது. நாம் ரொம்பவும் கவனத்துடன் இருக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள்" என்றான். பிறகு சோம்பல் முறித்து சிகரெட் சாம்பலைத் தட்டிவிட்டபடி, "அது என்னைக் கொல்வதாயிருந்தால்கூட நான் கவலைப்பட மாட்டேன்" என்றான் அவன்.

தனக்கருகில் அவளைப் படுக்கச் செய்வதற்காக அவளைப் பின்வசமாக இழுத்தான் அவன். ஒரு கை அவளைச் சுற்றியிருந்தது; மறுகை சிகரெட்டைப் பற்றியிருந்தது; கூரையை நோக்கி கண்களைச் சிமிட்டிக்கொண்டே சொன்னான்; "ஆஹா! இருமுறை கொதிக்க வைத்து சமைக்கப்பட்ட சுவைமிகுந்த, செச்சூயென் பன்றி இறைச்சியையும், வாசனைமிக்க

முறுகிய கோழிக்கறியும் விலாங்குமீன் சூப்பும் நான் அங்கேதான் சாப்பிடப்போகிறேன்!''

லெய்வாவின் விழிகளும் கூரையை நோக்கித் திரும்பின, ஒரு நீண்ட பிரயாணத்தின்பொழுது பெரும்பகுதி பட்டினி கிடத்துவிட்டு பிறகு ஹெங் யாங்கில் மாட்டிறைச்சி சாப்பிட்டதால் டூஃபூ என்னும் கவி இறந்தாரென்று நான் கேள்விப்பட்டேன். அது உண்மைதானா?''

''அதைப்பற்றியெல்லாம் எனக்கு அக்கறை இல்லை. நான் விஸ்கி மது அருந்தப் போகிறேன். பத்து வருஷமாக நான் விஸ்கி குடிக்கவில்லை. பெட்டி பெட்டியாக 'ஜானிவாக்கெர்' மதுவை உனக்கு நான் அனுப்பிவந்தேனே, நினைவிருக்கிறதல்லவா?''

''ஆமாம்; அந்த இன்பமான காலங்களை நான் மறக்கவில்லை, நினைவில் வைத்திருக்கிறேன்.''

அத்தகையப் புட்டிகளிலே ஒன்று என் கையில் கிடைத்து, அதன் மீதிருக்கும் அந்தப் பழைய பழக்கமான முத்திரைச் சீட்டை நான் பார்க்கமுடிந்தால்.... ஆஹா!....பிரகாசம் பொருந்திய பெரிய கிளாஸில் ஊற்றி, துளித்துளியாக அதை உறிஞ்சிச் சுவைக்க நான் ஆசைப்படுகிறேன்! அங்கே அது கிடைக்கிறதாவென்று தேடிப்பார்க்க வேண்டும்; அது எனக்குக் கிட்டுமென்றே நான் எண்ணுகின்றேன்.''

அவனுடைய மார்பில் தலையைப் பதித்த வண்ணம் உள்ளூறச் சிரித்துக்கொண்டு ''ஏ, சின்ன பூர்ஷ்வாவே!'' என்று மெல்லிய குரலில், பரிகாசம் செய்யும் வகையில் கூறினாள் லெய்வா.

"தலைவர் மா, பிரதமர் சூ இவர்களைப் பார்க்கிலும் நான் ஒன்றும் அதிகமில்லை! அவர்கள் எல்லோரும் விஸ்கியைத்தான் விரும்புகிறார்கள். குறுகியகால பூர்ஷ்வாக்கள்—மேன்மக்களுக்கும் குடியானவர்களுக்கும் இடைப்பட்ட இவ்வகை ஜனங்கள் எல்லோரும் தங்களுக்குரிய சுகங்களைத் தவறான வழிகளில் பழகிக்கொண்டார்கள், நம்மைப்போல."

அவன் அவளது வெண்மையான கையைப் பற்றிக் கொண்டு, ஆனந்தம் பொங்கத் தடவினான். "விஸ்கி எனக்குக் கிடைத்துவிடும்; நீயும் எனக்குக் கிட்டி விடுவாய். ஹாங்காங்கில் முதல் காரியமாக நான் என்ன செய்யப்போகிறேன், தெரியுமா?"

"என்ன செய்யப் போகிறீர்கள்?"

"கெட்டியான, பச்சைக்கல் வளையல் ஒன்று உனக்காக வாங்கப் போகிறேன்" என்றான் ஃபான்.

அவள் தன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு அவனுடன் நெருக்கமாக அணைந்தாள்; அவனுக்கு முத்தம் கொடுத்தாள்.

"அழகிய உன்னுடைய கைகள் கொட்டிலிலிருந்து சாணம் பொறுக்குவதற்காக ஏற்பட்டவை அல்ல. இத்தகைய கைகள் ஒரு ஆடவனைத் தழுவுவதற்காக ஏற்பட்டவை, குழந்தையை அணைக்க ஏற்பட்டவை; அப்படி அல்ல என்றும், நீண்டபிடி கொண்ட மண் வெட்டிகளையும், எருக்கூடைகளையும் பிடிப்பதற்காக ஏற்பட்டவை என்றும் மா-சே-துங் உத்திரவு பிறப்பிக்கும் பொழுது மனித உணர்ச்சிக்கும் பிரபஞ்ச தத்துவத்துக்கும் கேடு செய்தவராகிறார்" என்றான் ஃபான்.

"நீங்கள் அம்மாதிரியான கருத்துக்களைச் சொல் வதைக் கேட்கவே நான் விரும்புகிறேன். நீங்கள் என்னை கைவிட்டுவிடமாட்டீர்களல்லவா?" என்றாள் லெய்வா.

திடீரென்று எழுந்து உட்கார்ந்துகொண்ட மாதிரி அவன் உணரலானான்.

"இதோ பார். நீயும் நானும் பதினான்கு-பதினைந்து வருஷங்களாக ஒன்றாகப் பழகி வந்திருக் கிறோம். நான் அப்படிச் செய்வேனென்று தோன்று கிறதா? பல துன்பங்களுக்கிடையே இத்தனை கால மாக எனக்கு ஓரளவு சந்தோஷத்தைக் கொடுத்த ஒரே ஒரு நபர் நீ ஒருத்திதானே! நான் நேசித்த ஒவ்வொன்றும்—என் புத்தகங்கள், ஓவியங்கள், பண்டைக்காலக் கலைப்பொருள்கள், பணியாட்கள், நல்வாழ்வு—வீடுவாசல் எல்லாம் போய்விட்டது. நாம் ஹாங்காங்கு சென்றபின் இதுபோல வசிக்கக் கூடாது; நல்ல வீடொன்றை நாம் அமைத்துக் கொள்வோம். என் தந்தையை அறிந்து நான் யார் என்பதை ஞாபகம் வைத்திருக்கக்கூடிய ஏராளமான நண்பர்கள் எனக்கு இன்னமும் ஹாங்காங்கில் இருக் கிறார்கள். ஒரு கோடீஸ்வரன்—ஒரு செல்வச் சீமா னின் மகன், கல்வி மந்திரி ஒருவரின் மருமகன் இப்படிப் பலர் இருக்கிறார்கள்! நல்லது. சர்வ சாதாரணமான மனிதன் நான்; சமுதாயத்திற்கு என்றால் அவ்வளவு நன்மையில்லை; ஆனால், தன்னு டைய சொந்த வாழ்க்கையைச் சிந்தித்து, திட்ட மிட்டுஅமைத்துக்கொள்ளக்கூடிய-தன் தவறுகளுக்கு தானே பொறுப்பாளியாக ஆகக்கூடிய நாகரிக

மனிதன் நான்! என் பழைய நண்பர்களான சென் சாம், லியூ இவர்களை நினைவிருக்கிறதல்லவா உனக்கு?" என்றான் ஃபான்.

"லியூவை எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. பூர்வாசிரமத்தில் நான் யாரென்பதை அவர்கள் நினைவில் வைத்திருப்பார்கள். என்னைப்பற்றி அவர்கள் அனைவருக்கும் தெரியும்."

"அதனாலென்ன? வேசியாக இருந்தவள் நீ! இருந்தால் என்ன? அங்கே உன் சிநேகிதிகள் சிலரை நீ நிச்சயம் சந்திப்பாய் என்று நான் பந்தயம் கட்டு கிறேன். தங்களுடைய நகைகளை ஆடம்பரமாக அணிந்துகொண்டு ஹாங்காங் பெரிய மனிதர்கள் கும்பலில் நடமாடும் விலைமகளிரையும் வைப்பாட்டி களையும் அங்கு நீ சந்திக்கக்கூடும்."

"என் கவலையெல்லாம் அதுவல்ல."

"அவர்களைப்பற்றியோ, அல்லது சினிமா நட்சத் திரங்களைப் பற்றியோ எனக்கு விரோதம் ஒன்றும் இல்லை.

"நீங்கள் விரோதம்கொள்ள என்ன இருக் கிறது!"

"அதைத்தான் நான் சொல்கிறேன். வேசிகளைச் சிலர்தான் பார்க்கிறார்கள்; சினிமா நட்சத்திரங்களை லட்சக் கணக்கிலே பார்க்கிறார்கள். இதுதான் வித்தியாசம்."

"அவர்கள் நடிக்கிறார்கள்."

"அவர்கள் நடிக்கவில்லை; தங்கள் இனக் கவர்ச் சியைக் காண்பிக்கிறார்கள்."

"ஒவ்வொருவரும் பி ழை ப் பை ப நடத்த வேண்டுமே!"

"ஆமாம் அது வாஸ்தவம்தான். ஒவ்வொருவரும் வாழ்க்கையை நடத்தத்தான் வேண்டும்; எப்படியோ ஒரு பிடிப்பை உண்டாக்கிக் கொண்டு வாழ்க்கையை ஆரம்பிக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஹாங்காங்கில் உள்ள அகதிகள் எல்லோரும் அப்படித்தான் செய்கிறார்கள்; சிலர் வாழ்க்கையை மிகச் சிறப்பாகவும் செய்து கொண்டிருக்கிறார்கள். போட்டிருக்கும் மேல்சட்டையுடன் ஒவ்வொருவனும் ஹாங்காங்கில் வந்து இறங்கி தன் வாழ்வுக்காகப் போராடுகிறான். யாரும் அதற்கு வெட்கப்பட வேண்டியதில்லை. ஆனால் குறைந்தபட்சம் அவனவனும் தன்னுடைய சொந்த வாழ்க்கையைப்பற்றிச் சிந்தித்துப்பார்க்க அங்கே சுதந்திரம் இருக்கிறது; அரசாங்கம் அவனுக்காகத் திட்டமிட்டு யோசிக்கவோ, அவனைச் சம்ரட்சித்துப் பாதுகாக்கவோ அவனுக்கு தங்க இடம் அளிக்கவோ, அவனைப் போஷிக்கவோ அல்லது அவனுக்காக சிந்திக்கவோ முடியாது. இது ஒன்றுதான் இங்கே மூளையைக் குழப்புவதாக இருக்கிறது" என்றான் ஃபான்.

லெய்வா பேசத்தொடங்கினாள்: "கம்யூன்களைக் குறித்து நான் கேள்விப்படுகிற மிகப் பயங்கரமான செய்தி இது; தூங்குமிடம் ஒன்றில் ஆண்களும் மற்றொன்றில்பெண்களுமாக அவர்கள்வாழ்கிறார்களாம்! இரண்டு வாரங்களுக்கு ஒரு முறைதான் அத்தம்பதிகள் ஒன்று கூடிப் பிணைய அனுமதிக்கப்படுகிறார்களாம்! 'சமுதாய சம்பந்தமான ஆரோக்கிய சாஸ்

திர சபை'யின் பிரத்தியேகமான அறையொன்றில் குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் வரிசைக்கிரமமாக நிற்கிருர்கள்; ஒவ்வொரு தம்பதிக்கும் அளிக்கப்பட்ட நேரம் இருபது நிமிஷங்கள்! ஒரு ஜதை ஒரு சில நிமிஷங்கள் காலதாமதம் செய்து வெளியே வந்தால், அவர்கள் அடுத்தபடி காத்திருப்பவர்களிடம், பொது மக்களின் சௌகரியங்களைப்பற்றி யோசிக்காமலும், சுயநலத்தோடும் இருந்துவிட்டதற்காக, மன்னிப்புக் கோரவேண்டும்!....அட கடவுளே,!....குறிப்பிட்ட நேரத்திற்குள்—இருபது நிமிஷத்தில்—சம்போகம் நடத்துவதைக் காட்டிலும் செத்து விடுவேன் நான்!"

"நகரத்தில் எவ்வாறு அவர்கள் இதையெல்லாம் ஒழுங்குடன் அமைக்கப் போகிருர்களோ, தெரியவில்லை. எது எப்படி ஆனுலும் சரி; நாம் இதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிடுவோம்."

மறுநாளையத் திட்டங்களைப் பற்றி அவளிடம் சொல்லத் தொடங்கினுன் ஃபான்.

"டெங்பிங்கைப் பற்றித்தான் நான் பயப்படுகிறேன். அவன் வெளியில் வந்தால், அவனுடன் சற்று விளையாடலாம்; ஆனுல், நாளை இரவு நாம் பயணப்படும் திட்டத்தில் எதுவுமே குறுக்கிடக் கூடாது. சந்தேகங்கள் எதையும் கிளப்பாதே. கால அட்டவணைக்கு ஏற்ப நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் ஒட்டித்தான் நமது திட்டங்கள் அமைகின்றன. தேவைப்பட்டால், நான் அவனைக் கொல்லவும் செய்வேன். அசாயைப் பற்றித்தான்

எனக்கு வேதனையாக இருக்கிறது. அவன் கைது செய்யப்பட்டிருக்கிறான்."

"ஐயோ!"....என்று அதிர்ந்தாள் லெய்வா. அவள் நெஞ்சம் பிளந்துவிட்டமாதிரியாக உணரலானாள்.

"நாம் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டாள் அவள், நாம் போகும்போது நம்மோடு அவனையும் அழைத்துப் போகலாமா என்று உங்களிடம் கேட்க இருந்தேன். அவன் என் இதயத்தில் வளர்கிறான்."

"உனக்கு அவ்வளவு பிரியமா அவனிடம்?"

"அவன் ஒரு புத்திசாலியான பையன். அவன் பெற்றோர்கள் சாகடிக்கப்பட்டது முதல் அவன்மீது நான் அனுதாபம் கொண்டுவிட்டேன்; காரணம், நானும் ஓர் அனாதையாக இருந்ததுதான். இப்போது, எனக்கு வயதாகிவிட்டதாலோ, அல்லது எனக்கு மகன் இல்லை என்பதாலோ அல்லது என்னுள் இணைந்துவிட்ட ஓர் அங்கமாக அவனை நான் கருதியதாலோ அவனை நான் உண்மையாக விரும்புகிறேன்; அன்பு பாராட்டுகிறேன். அவன் கதி என்ன ஆகும்?"

அவன் மஞ்சூரியாவுக்கு அனுப்பப்பட்டு விடுவான் என்று தோன்றுகிறது. கலகத் தலைவர்களில் ஒருவனாக அவனை படைக் காவலன் ஒருவன் அடையாளம் கண்டுகொண்டான்!"

"அது சரி; அவனுக்கு நாம் ஏதாவது வழி செய்தாக வேண்டும்!" என்று சொல்லி சிந்தனையிலாழ்ந்தாள் லெய்வா. பிறகு சொன்னாள்: "அன்பு இன்னதென்றே அறியாதவன் அவன்; ஏனென்றால், அந்த

அன்பை அவன் என்றுமே பெற்றது கிடையாது. என்னை அவன் நம்புவதற்கு வெகு காலம் பிடித்தது. அதன் பிறகு நான் அவனுடைய அன்னையாகவே ஆனேன். உங்களுக்குத் தெரியாது....அந்தப் பையன் நான் இல்லாவிடில் சதா அழுது தீர்ப்பான். அவன் என் மார்பில் அணைந்து கதறி அழுதுவிட்டான். உங்களுடன் நானும் வரவேண்டுமென்று நீங்கள் நேற்று என்னிடம் சொன்னபோது, எடுத்த எடுப்பில் அவனைக் குறித்துத்தான் நான் யோசித்தேன். போகும் வழியில் அவன் நமக்குப் பெரிதும் உபயோக மாக இருப்பான் என்றே நான் கருதுகிறேன்."

"ஓஹோ! கோழிக் குஞ்சுகளைத் திருடுவதற்கு உபயோகமாக இருப்பான் என்று நீ நினைக்கிறாயோ?" என்று சிரித்தான் ஃபான்.

"அவன் ஒரு சிறந்த சாரணனாக இருந்தவன். அவனை விடுதலை செய்யும்படி டெங்பிங்கிடம் கேட்டுக்கொள்ளட்டுமா?"

"வேண்டாம் டெங்பிங்கின் இருப்பிடம் இப்போது எதுவென்று ஒருவருக்கும் தெரியாது. தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்த கட்டிடத்திலிருந்து நாய்போல ஓட்டம் பிடித்ததை நான் கண்ணால் பார்த்தேன்" என்று வேண்டா வெறுப்பாகப் பதில் அளித்தான் ஃபான்.

"மஞ்சூரியாவுக்கு அனுப்பப்படுவதற்கு முன் பாக நான் என்னுடைய அசாயைப் பார்க்க வேண்டும்."

மஞ்சூரியா என்பது பிரத்தியேகமாக வழங்கப் படும் பொதுச் சொல்லாக ஆகிவிட்டது; அதன்

குளிரைக் கண்டு தென் பகுதி மக்கள் மிகவும் அஞ்சினார்கள்.

"அவன் கதி என்ன ஆகும்? இந் நிலையை அவன் எவ்விதம் சமாளிக்கப்போகிறான்?" என்றாள் அவள்.

"நாளை நீ அவனை ஜெயிலில் சந்திக்கலாம்."

நாளையதினம் நேரம் இருக்காது. இன்றிரவு முடியாதா?"

"எனக்குத் தெரியவில்லை. கட்சி உறுப்பினர் சீட்டு உன்னிடம் உள்ளது; அவர்கள் உன்னை உள்ளே அனுமதிக்கக்கூடும். நீ அவனைப் பார்த்தால் நாளைக்கு அவனுக்குக் கொஞ்சம் பணம் கொண்டுவந்து தருவதாகச் சொல், அதை அவனிடம் கொடுத்து விட்டால், பையன் தாஜா பண்ணியோ, ஏமாற்றியோ, பணம் கொடுத்தோ எப்படியோ அங்கிருந்து தப்பி வந்துவிடுவான்."

இரவு வானத்தில் சந்திரன் இல்லை, மலைகளைக் கடந்து குளிர் காற்று வீசியது. தாழ்ந்த ஒற்றை மாடிக் கட்டிடங்கள் உள்ள கூழாங் கல்லாலான குறுகிய தெருக்களில் புகுந்து லெய்வா நடந்து சென்றாள். பையனிடம் பிரியா விடை பெற்றுவரப் போய்க்கொண்டிருப்பதை எண்ணியபோது,அவளது நெஞ்சம் கனத்தது; கிழக்குத் திசையில் திரும்பி கப்பி போட்ட அகலமான தெருவைக் கடந்தாள் அவள். பிற்பகலில் நிகழ்ந்த கலகத்தை ஒப்பிட்டுப் பார்த்த போது, அது பேய் நகரம்போலத் தோன்றியது. வடகிழக்கில் சில கட்டிடத் தொகுதிகளுக்கு அப்பால், நட்சத்திரங்கள் மண்டிய ஆகாயத்தின் கீழே மரங்கள் கூரை உச்சிகள் ஆகியவற்றின் தெளிவற்ற இருண்ட

நிழல் வடிவங்களை அவள் பார்த்தாள்; அந்தக் கட்டிடத் தொகுதி ஒன்றில் தான் அசாய் சிறை வைக்கப்பட்டிருந்தான் என்பதை அவள் அறிந்தாள்.

வழிப்போக்கர்களைச் சந்தித்தபோது, தலையைக் குனிந்துகொண்டு அவள் நடந்து சென்றாள்.

திடீரென்று ஒரு போலீஸ் காவலன் இருட்டினின்றும் வந்து, அவள் எங்கே போய்க்கொண்டிருக்கிறாளென்று அவளிடம் விசாரித்தான்.

"மாவட்டச் சிறைச்சாலைக்குச் செல்கிறேன். என் பையன் கைது செய்யப்பட்டிருக்கிறான்."

காவலன் அவளைச் சோதிப்பது போன்று பார்த்தான்.

லெய்வாவின் பெண்மைக் குரல் இனிமையுடன் ஒலித்தது; மிகவும் பரிசுத்தமான தோற்றத்துடன் விளங்கினாள் அவள்.

"நீங்கள் அவனை இன்றிரவு பார்க்க முடியாது."

"அவன் விசாரிக்கப்படுவான் அல்லவா?"

"அது பற்றி நிச்சயமாகத் தெரியாது எனக்கு."

"என் பையன் நிரபராதி. விசாரணை நடந்தே தீரவேண்டும்,"

தெரு வெளிச்சத்தின் கீழே இளமை தளராத அந்த அழகிய பெண்ணுடன் சற்று வாயாட வேண்டுமென்று தீர்மானித்து நிதானமாகச் சிரித்தான் காவலன். "நீங்கள் எங்கே போயிருந்தீர்கள், அம்மா? இன்று நடந்த ரகளையைப் பாருங்கள். கட்சி அலுவலகம் தீக்கிரையானது. 'பொதுவுடைமைப் புனர் நிர்மாணக் கிடங்கு' கொள்ளையடிக்கப்பட்டது. கடைகள் பல தீவைக்கப்பட்டன. ஏதாவது சிறிய

விஷயமென்ருல், சிலரைக் கைது செய்தால் போதும். ஆனல் இதைப்போன்ற சம்பவத்திற்கு முப்பதிலிருந்து ஐம்பது பேர் எப்படியும் கைது செய்யப்பட்டாக வேண்டும். அப்போதுதான் அதுபற்றிய அறிக்கையை உருவாக்க முடியும். யார் கைது ஆகியிருக்கிருர்கள் என்பதுபற்றி யாருக்குக் கவலே?........" என்ருன்.

"கைதானவர்களே நாளேக்கே வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்துவிடமாட்டார்கள் அல்லவா?"

"அதை நான் சொல்ல முடியாது அம்மணி. பட்டியல்கள் தயாராகி புகார்கள் செய்யப்படுவதற்கு இன்னும் இரண்டு நாட்களாகும்."

"நன்றி, ஐயா."

தெளிவாகச் சிந்தித்துப் பார்க்க இயலாத அளவில் கலவரத்துடன் முன்னேக்கி நடந்தாள் லெய்வா.

முற்றத்தில் எரிந்துகொண்டிருந்த நிறமற்ற காஸ் விளக்குகளின் உதவியால், சிறைச்சாலே சுற்று மதிலின் வாசல் மிகவும் பிரகாசமாக ஒளிர்ந்ததைக் கண்டாள் அவள். இது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. லெய்வா தன் உறவினர்களேப் பார்க்க முயலுகிருள் என்றெண்ணிக்கொண்டு, வாசலுக்கு வெளியே சுற்றிலும் நின்ற பெண்கள் சந்தடியின்றி அமைதியாக இருந்தார்கள். உள்பக்கம் பத்திரமாக அடைக்கப்பட்டிருந்த வாசலின் வழியாக எட்டிப் பார்த்தாள். தோளுக்கு மேலே தாங்கிய துப்பாக்கியுடன் படைக்காவலன் ஒருவன் முற்றத்தில் மெல்ல நடைபோட்டுக் கொண்டிருந்ததைக் கண்டாள்.

உடனே "ஹோ! ஹோ!" என்று அலட்டினுள். அவள் குரல் அவனுக்குக் கேட்கவில்லை. வாசற்கதவைப் படபட வென்று தட்டிக் குலுக்கினுள்.

சதுரத் தலையுடன் இருந்த பாதுகாப்பாளன் ஏறிட்டு நிமிர்ந்தான்; ஓர் இளம் பெண்மணியின் முகத்தைப் பார்த்தான்.

"நீ என்ன செய்ய முயன்றுகொண்டிருக்கிருய்? மறுபடியும் சிறையை உடைத்துக்கொண்டு உள்ளே புக எத்தனம் செய்கிருயா?"

"நான் டாங்பூ (உயர் அதிகாரி) விடமிருந்து வருகிறேன்" என்று தைரியமாகக் கூறினுள் லெய்வா.

பாதுகாப்பாளன் அவளை நெருங்கி நடந்தான் அப்பொழுது, மற்ற ஸ்திரீகள் முண்டியடித்துக் கொண்டு நெருங்கினர்.

தன்னிடமிருந்த சீட்டை லெய்வா காண்பித்தாள். காவலன் அதை உற்றுப் பார்த்தான். "பெண்கள் தொழில் இராணுவப் பகுதித் தலைவியா நீங்கள்?" என்று வினவினுன்.

"ஆம்."

"உங்களுக்கு என்ன வேண்டும்?"

"கைதி ஒருவனைப் பார்க்கவேண்டும்."

"டாங்பூ (உயர் அதிகாரி) உங்களை அனுப்பினுரா?"

சற்றுத் தயங்கியவளாக அவள் சொன்னுள்: "நான் என்னுடைய பையன் அசாவை இப்பொழுது பார்க்க விரும்புகிறேன்."

சிறைக்காவலன் சிரித்தான்: "ஓ....அசாயா?.... ஆமாம்; அவனை நான் அறிவேன்."

"தயவுசெய்து என்னை உள்ளே செல்ல அனுமதி யுங்கள்."

"நான் வருந்துகிறேன். எனக்குக் கண்டிப்பான உத்தரவுகள் இடப்பட்டிருக்கின்றன."

"அவர்கள் அவனை மஞ்சூரியாவுக்கு அனுப்பப் போகிறார்களா?"

"எனக்கு எப்படித் தெரியும்?"

இதைக் கூறிவிட்டு காவலன் அவளைத் தாண்டி மேலே நடந்து செல்லலானான்.

பெண்மணிகள் சிலர் லெய்வாவை நினைவுபடுத் திக்கொண்டு அவளுடன் பேச முயன்றனர். ஆனால் அவளால் பேச முடியவில்லை; அவள் நிம்மதியிழந் தாள். கட்சியின் தலைமை அலுவலகமிருக்கும் இடத் தைக் காண அவள் குறுக்கு வழியாக கால்களை எட்டி வைத்து நடந்தாள். செங்கல்லால் ஆன அக்கட்டிடம் இடைவெளி விட்டுப் பிளந்திருந்தது; அதன் பெரும் பகுதி இருண்டு கறுத்திருந்தது; உத்தரங்களும் குறுக்கு விட்டங்களும் விழுந்துவிட்டன. மேல்தளம் அகலப் பிளந்துவிட்டமாதிரி தோன்றியது.

அவள் ஓய்வாக நடந்து திரும்பி, மறுபடியும் அவ் விடத்தைச் சுற்றி வந்தாள். அசாயை மீண்டும் பார்க்காமலிருக்க முடியவில்லை. உள்ளே இருண்ட நிலவறையில் என்ன நடந்துகொண்டிருந்ததென் பதை அவளால் கற்பனை செய்துபார்க்க முடியவில்லை. சில பெண்கள் அங்கிருந்து சென்றார்கள்; வேறு சிலர் தங்கியிருந்தார்கள்.

இருபது நிமிஷம் கழித்து, காவலாளன் பின் தொடர ஓர் அதிகாரி வந்தான். கறுப்பு மீசை

வைத்து இருந்தான்; தோள்களில் அகலமான சிவப்புப் பட்டை இருந்தது; கையில் சிறிய பெட்டி ஒன்றும் இருந்தது.

இத்தருணத்தைத் தவறவிடக்கூடாது என்று லெய்வா முடிவு செய்தாள். அதிகாரி நெருங்கியதும் அவள் முன்வந்து அவனிடம், "ஹெல்லோ! காப்டன் ஷியாவோ!" என்று சொன்னாள்.

காப்டன் நின்றான்; அவளை ஞாபகப்படுத்திக் கொண்டான்.

"ஓஹோ! காம்ரேட் லெய்வா!"

அவன் செவியில் ஏதோ சொல்ல அவனை நெருங்கிச் சென்றாள். அவள் சொல்வதைக் கேட்கக் காப்டன் தலையைக் குனிந்தான்.

"உள்ளே செல்வதற்கு டெங்பிங்கிடமிருந்து எனக்கு அனுமதிச் சீட்டு இருக்கிறது."

"அப்படியா?" என்று காப்டன் ஆச்சரியத்தில் தன் முகத்தைத் தேய்த்துக்கொண்டான். டெங் பிங்கின் அந்தரங்கக் காதலி லெய்வா என்பது அவனுக்குத் தெரியும். "வேறு ஏதாகிலும் அத்தாட்சி உங்களிடம் இருக்கின்றதா?" என்று கேட்டான்.

"நான் சொல்லிக்கொண்டிருக்கிறேனே, இது போதாதா?"

"கமிஷனர் எங்கே?" காப்டன் ஆவல் மிகுந்து கேட்டான்.

லெய்வா இனிமையாகப் புன்முறுவல் செய்த வண்ணம், "எனக்கு அச்சமாக இருக்கிறது; அதை நான் உங்களிடம் சொல்லக்கூடாது" என்றாள்.

வாசலில் இருந்த காவலாளியிடம் திரும்பி, "அவளை உள்ளே போக விடு!" என்று காப்டன் உத்திரவு போட்டான். 'நல்லிரவு' சொல்லிவிட்டு அவன் நடந்து சென்முன்.

காவலாளி கவனமுடன் நேராக நின்று, லெய்வா கடந்து சென்றபோது அவளுக்கு வணங்கி மரியாதை செய்தான்.

முன்புறமிருந்த அலுவலகத்தைத் தாண்டி இரு பக்கங்களிலும் அறைகள் கொண்டிருந்த—தாழ் வாரத்தின் மங்கலான வெளிச்சத்தில் அவளை அழைத்துச் சென்முன் காவலன். மனித வேர்வையின் துர் நாற்றம் அவள் நாசியைத் தாக்கியது. கல்லறை களினின்றும் திடீர் திடீரென்று எழும் மனிதரின் மரண ஓலத்தால் கலக்கப்பட்ட அமைதியினூடே சந்தடியின்றி அந்த இருண்ட சிறைச்சாலையின் அறை களைக் கடந்தபோது, அவளுடைய உடம்பு மயிர்க் கூச்செறிந்தது.

ஒவ்வொரு பகுதியிலும் வரிசைக்கு எட்டு அல்லது பத்து சிறு அறைகள் இருந்தன. காவலன் சாவியை அழுத்தித் திருப்பி, கதவைத் தள்ளித் திறந்து டார்ச் விளக்கை அடித்து "அசாய், உன்னை யாரோ பார்க்க வந்திருக்கிமுர்கள்" என்முன்.

விளக்கொளியில் முகங்கள் விட்டுவிட்டுப் பிரகாசித்தன. சிலர் ஒன்முக அடைந்து கிடந்தனர்; சிலர் சம்மணமிட்டுக் குந்தியிருந்தனர்; சிலர் தரையில் படுத்துக் கிடந்தனர். யாரும் பதில் சொல்லக் காணோம்.

"ரொம்பவும் வேடிக்கையாக இருக்கிறது.அவன் பெயர் 12-ஆம் அறையில் காணப்படுகிறது. அது தவருக இருக்க வேண்டும்" என்ருன் காவலாளன்.

உள்ளே பார்ப்பதற்காக காவலாளி திரும்பிய நேரத்தில் லெய்வா இருட்டில் "அசாய், அசாய்! நீ எங்கு இருக்கிருய்?" என்று கூவி அழைத்தாள்.

"இதோ! இங்கே இருக்கிறேன் நான்!...." என்று மூலையிலிருந்து ஒரு குரல் வந்தது.

அந்த திக்கை நோக்கி ஒளிவிளக்கை அடித்தான் காவலாளி.

கதவின் சிறு திரைக்குப் பின்புறமிருந்து ஒரு பையனின் முகம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டான் அவன். கவனத்தைக் கவர்வதற்காக கதவில் தட்டிச் சத்தம் எழுப்பிக்கொண்டிருந்த அறைக்கு விரைந்தாள் லெய்வா.

கதவு திறக்கப்பட்டதும் வெளியே பாய்ந்த அசாயை தடுத்து நிறுத்திஞன் காவலாளி.

"நான் விடுதலை செய்யப்பட்டிருக்கிறேன்! நான் விடுதலை ஆகியிருக்கிறேன்!" என்று தன்னைப் பிடித்துக்கொள்ள முயன்ற காவலாளியிடம் கூச்சலிட்டான் அசாய்.

"அமைதியாக இரு; நான் உன்னைப் பார்க்கவே வந்திருக்கிறேன்" என்ருள் லெய்வா.

"என்னைப்பற்றி நீங்கள் டெங்பிங்கிடம் பேசவில்லையா?....என்னைக் கைது செய்ததன் நோக்கம் என்ன?" என்று கேட்டான் அசாய்.

காவலாளி லெய்வாவை நோக்கி "இதோ பாருங்கள். நான் இப்பொழுது இங்கு பொறுப்பில் இருக்கி

றேன். இந்தப் பையனை விடுவிக்கும்படி டெங்பிங்கிடமிருந்து நீங்கள் அனுமதி பெற்றிருந்தால் நான் இவனை விடுதலை செய்கிறேன். இல்லாத வரையில் அவன் இங்கேயே தங்க வேண்டியதுதான். இது வரைக்கும் கமிஷனர் இருக்குமிடத்தை யாராலும் கண்டு பிடிக்க முடியவில்லை" என்றான்.

"என்னால் முடியும்" என்று லெய்வா சுருக்கமாகச் சொன்னாள். "இப்பொழுது அவனுடன் தனிமையில் பேச விரும்புகிறேன் நான். அவனை நல்ல முறையில் நடத்துங்கள் நீங்கள். நாளை தோழர் டெங்கினிடமிருந்து உங்களுக்குத் தொலை பேசிச் செய்தி கிடைக்கும்" என்றாள்.

காவலாளி விஷயத்தை மனத்தில் வாங்கிக் கொண்டான்.

"அப்படியென்றால் இதுதான் வழி" என்று கதவைப் பூட்டிக்கொண்டு சொன்னான் அவன்; அவர்களை முன்புறமிருந்த ஓர் அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு ஒரு பெஞ்சும் மேஜையும் இருந்தன. மேலே மையத்தில் மச்சு விளக்கு இருந்தது;

"நீங்கள் இப்போது வெளியில் போய் கதவை மூடிக்கொள்ளுங்கள்?" என்று அதிகாரத் தொனியில் சொன்னாள் லெய்வா. காவலாளி தோள்களைக் குலுக்கியபடி நகர்ந்தான்.

அசாய் அப்போதும் நின்று கொண்டிருந்தான்.

"வா, வந்து உட்காரு!" என்று அவன் அருகில் இருந்த இடத்தைச் சுட்டினாள் அவள். அசாய் வந்து அமர்ந்தான்.

"நீ பயந்துவிட்டாயா?" என்று மெல்லிய குரலில் கேட்டாள் அவள்.

"ஆரம்பத்தில் நான் பயந்து போனேன்; ஆனால் எப்படியோ ஒரு வழியில் நான் தப்பிவிடுவேன் என்பதையும் நான் அறிவேன். வாலிபர் கூட்டுறவு சங்கத்தின் தலைவன் நான். அவர்கள் என்னைக் கைது செய்ய முடியாது."

"அவர்கள் உன்னை நியாய விசாரணை செய்தால் என்ன ஆகும்? நான் வெகுளித்தனமாகப் பேசிவிட்டேன். கவனமாகக் கேள். வடக்கே அனுப்பப்பட்டவர்களுக்கு என்ன நடக்கிறதென்பதை நீ அறிவாய். நீ இங்கிருந்து தப்பி வெளியேறி எல்லையைக் கடந்து ஹாங்காங்குக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும். அதற்கு முயற்சி செய்."

"ஹாங்காக்குக்கா?"

"அங்கு போவதற்கு நீ விரும்புவாயல்லவா? ஏனென்றால் இந்நிகழ்ச்சிக்குப் பிறகு உனக்கு இங்கே மன நிம்மதி இருக்காது. இங்கிருந்து நீ வெளியேற உனக்கு உதவவே நான் வந்திருக்கிறேன். நீ ஹாங்காங் வர விரும்பினால் என்னோடும் ஃபானோடும் நீ வரலாம். நாங்கள் நாளை இரவு புறப்படுகிறோம்."

அசாயின் கண்கள் அகல விரிந்தன.

"ஹாங்காங்குக்கா?"

"சத்தமிடாதே! நீ வர விரும்புகிறாயா?"

இணக்கமுடன் தலையை அசைத்தான் அசாய்.

"சரி; நான் உன்னிடம் சொல்கிறேன். வேறு யாரிடமும் நீ சொல்லக்கூடாது. நாம் மூவர் மட்டும்

-அதாவது ஃபான், நீ, நான் ஆகிய மூவர் மட்டுமே புறப்படப் போகிறோம்!"

"நான் முதலில் வெளியேற வேண்டும். அதற்குத் திட்டம் வகுத்தாகிவிட்டதா?"

"கவனித்துக் கேள். இங்கிருந்து உன்னை நாளைக்கு அழைத்துச் செல்கிறோம் நாங்கள். உன்னை விடுதலை செய்யும்படி தொலை பேசித் தகவலொன்று வரும். அப்படி வரவில்லையென்றால் நீ இங்கிருந்து வெளியேறி எப்படியோ எங்களை வந்தடைய வேண்டும். நாளைக் காலையில் உனக்குப் பணம் கொண்டு வந்து தருவேன். அவர்கள் இப்போது மனம் குழம்பிக் கிடக்கிறார்கள். கமிஷனர் டெங்பிங்கிடமிருந்து தகவல் வந்ததா என்று அவர்களைக் கேட்டுக்கொண்டிரு. அதற்கான ஏற்பாட்டை அவர்கள் நம்பும் வகையில் செய்துவிடுவார் ஃபான். "டெங்பிங்கின் இருப்பிட விவரம்பற்றிய ரகசியம் ஒன்றுதான் நான் இவர்களை ஆட்டிவைக்க உதவக் கூடியது." என்றாள் புன்னகையுடன்.

அங்கிருந்து புறப்பட்டு நகரத்துக்கு வெளியே உள்ள ஓர் இடத்தில் பஸ் ஏற வேண்டியதற்கான விவரங்களை அவனுக்கு அவள் சொன்னாள். ஹாங்காங்கிலிருந்த ஃபானின் ஏஜண்டின் முகவரியையும் அவனிடம் கொடுத்தாள்.

புறப்படும் பொழுது, டெங்பிங்கிடமிருந்து தொலைபேசிச் செய்தி வருமென்றும் பையனை முறையோடு நடத்தும்படியும் காவலாளிகளிடம் கூறிஅசாயிடம்விடை பெற்றாள்.

அத்தியாயம் 9

இருபத்திரண்டு ஆண்டுகள் மக்களுக்கு அன்புப் பணிசெய்தபிறகு, சீனுவைவிட்டு தான் புறப்படும் தேதியை செப்டம்பர்-28 என்று தன்னுடைய நாட் குறிப்பில் குறித்து வைத்திருந்தாள் சகோதரி ஆங்கெலிகா.

காலையில் ஆகாயம் மந்தாரம் போட்டிருந்தது. சீதோஷ்ண நிலையின் திடீர் வீழ்ச்சி, ரம்யமான ரெயில் பயணத்துக்கு உகந்ததாயிருந்தது. அவளது இரண்டு கைப்பெட்டிகளும் கட்டப்பட்டுத் தயாராக வைக்கப்பட்டிருந்தன. தன்னைப் பயணப்படுத்த வர வேண்டாமென்று ஆஸ்பத்திரியிலிருந்த தன் சிநேகி தர்களிடம் அவள் சொல்லியிருந்தாள். கௌலூன் செல்லும் முதல் ரெயில் 10-45க்குப் புறப்பட இருந்தது.

தங்களது பயணம் பற்றிச் சொல்லவும், தாங்கள் சந்தேகிக்கப்படாமல் இருக்கும் வகையில் தன் னுடைய துப்பாக்கியைக் கேட்கும் பொருட்டும் கட்சித் தலைமை இருப்பிடத்துக்கு ஒன்பது மணிக்குச் சென்றான் ஜேம்ஸ் தாயெர்.

தலைமை அலுவலகத்தில், மின்னிக்கொண் டிருந்த துப்பாக்கியில் பொருத்தப்பட்டிருந்த குத்து

வாள்களின் வளையத்தை அவன் பார்த்தான். இரும்புத் தொப்பிகள் அணிந்த இருபது-முப்பது சிப்பாய்கள் இடைவெளிகளில் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

அங்குள்ளவர்களில் இளம் பிராயமுள்ள ஒல்லியான லெஃப்டெனென்ட் ஒருவனிடம் ஜேம்ஸ் நடந்து சென்றான். அவனுக்கு வயது அநேகமாய் இருபது அல்லது இருபத்தொன்றிருக்கும். தன் தஸ்தாவேஜுகளை அவனிடம் காண்பித்தான் ஜேம்ஸ்.

"நாங்கள் இன்று இங்கிருந்து கிளம்புகிறோம். இதைத் தெரிவிக்க விரும்புகிறேன் நான்."

அவனுடைய பிரயாண அனுமதிச் சீட்டை புரட்டியவாறு, "எங்கே உங்கள் அத்தை?" என்று லெஃப்டெனென்ட் கேட்டான்.

"மதப்பிரச்சாரசபை இல்லத்தில் இருக்கிறார்கள். அவர்களின் வெளியேற்றம் சம்பந்தமான எல்லாத் தஸ்தாவேஜுகளும் வரிசைக்கிரமமாக அவர்களிடம் இருக்கின்றன."

"அங்கு வேறு யாரும் இல்லை போலிருக்கிறது. நீங்களே ஆகவேண்டியதைக் கவனித்துக்கொள்ளலாம்" என்றான் லெஃப்டெனென்ட்.

"என் துப்பாக்கியைத் திரும்பிப்பெற விரும்புகிறேன். மூன்று தினங்களுக்கு முந்தி நான் இங்கு வந்துசேர்ந்தேன். நான் இங்கிருந்து புறப்படும் சமயம் அதைத் திருப்பிக்கொடுப்பதாக அதிகாரி உறுதி சொன்னார். உள்ளே போய் அதைப் பார்க்கலாமா?"

"உள்ளே யாரும் நுழையக்கூடாது. எனக்குத் தெரிந்தமட்டில் அது அநேகமாக சேதமடைந்த பொருள்களோடு சேர்ந்து எரிந்து போயிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். உங்களுக்கு இவ் விஷயமாக உதவிசெய்ய முடியாதென்று நினைக்கிறேன்."

அரைமைல் தொலைவில் இருந்த படைத்தலைவர் அலுவலகத்தில் விசாரிக்குமாறு அவன் ஜேம்ஸிடம் சொன்னான். சிறப்பான வடக்கத்தியப் பிரதேச மொழியில் லெஃப்டெனன்ட் பேசியதை ஜேம்ஸ் கவனித்தான்.

"நீங்கள் இவ்விடத்திற்குப் புதிது, அப்படித் தானே?" என்று அவன் கேட்டான்.

"நாங்கள் நேற்று வந்து சேர்ந்தோம்."

ஜேம்ஸ் புறப்பட்டுச் செல்லத் திரும்பினான்.

"சற்றே பொறுங்கள்."

அதிகாரி அவனை நோக்கி ஒரு அடி முன்னே வைத்தான்.

"நீங்கள் ஒரு நிருபர் அல்லவே?"

"அல்ல. என்னுடைய தஸ்தாவேஜுகளை நீங்கள் பார்வையிட்டுவிட்டீர்களல்லவா?"

"இதைப்பற்றியெல்லாம் அறிந்துகொண்டு எங்களைப்பற்றி தவறான விஷயங்களை சொல்லிவிட மாட்டீர்களே?" அவன் கண்கள் அவனையறியாமலே, கட்சி அலுவலகத்தின் சேதங்களை அளந்தன.

"நான் எதற்காகச் சொல்லப்போகிறேன்? நாங்கள் சீன மக்களின் நெருங்கிய நண்பர்கள். உங்கள் ஆட்கள்தாம் என் அத்தையை வெளியேற்றி

விட முனைந்து நின்றனர். அவர்களுக்கு இங்கிருந்து கிளம்பவே இஷ்டமில்லை.''

ஜேம்ஸ் படைத்தலைவர் அலுவலகத்துக்குச் சென்றான். அவர்கள் பகிரங்கமாகவும் சட்டரீதியான முறையிலும் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள்; அவன் அத்தை அவசரமாகக் கிளம்பிக்கொண்டிருந் தாள்; பயணச் சாமான்கள் தயாராகாததால் அவன் அடுத்துள்ள ரெயிலில்தான் செல்லவேண்டும்; சுருக்க மாகச் சொன்னால், அவனது மறைந்து செல்லும் செயல் இயன்றமட்டில் சந்தேகமோ பரபரப்போ இல்லாதவாறு அமையவேண்டும். விவரங்கள் எல்லாம் தஸ்தாவேஜுகளில் பதிவு பெற்றுவிட வேண்டுமென்று அவன் விரும்பினான்.

நிகழ்ச்சிகள் மாறிவிட்டன; இராணுவ வீரர்கள் எல்லாக் குறுக்குச் சாலைகளிலும் நியமிக்கப்பட்டார் கள்: நகரம் தன்போக்கில் வழக்கம்போல் இயங்கிக் கொண்டிருந்தது. இராணுவப் படைகள் வந்து சேர்ந்ததும், பொதுமக்களாலான காவல் அணி திரும் பியதும் ஒருவகைப்பட்ட நம்பிக்கை யுணர்ச்சி மீட்கப்பட்டிருந்தது. யொவாங்மியோ கோயிலைக் கடந்தான்; பள்ளிப் பிள்ளைகள் முற்றத்தில் விளை யாடிக்கொண்டிருந்ததைக் கண்டான் அவன்.

படைத்தலைவர் அலுவலகத்துக்கு அவன் விஜயம் செய்தது பயனற்றதாய்விட்டது. குழப்பம் மிகுந்த வார முடிவுக்குப்பின், யாருக்கும் எதைப்பற்றியும் எதுவும் தெரியாமல் இருந்தது. தொலைபேசிகள் சுறுசுறுப்புடன் இருந்தன; யாரும் அவனைக் குறித்து அக்கறை கொள்ளவில்லை. தற்காலிகமான அலுவல

கத்தை விட்டுப் புறப்பட்டுக்கொண்டிருந்த கட்சி அதிகாரி ஒருவரைப் பார்க்க முனைந்தான். பிரயாணம் குறித்து அறிவித்ததை இந்த ஆள் அறிந்திருந்தான் என்பதை அவன் உறுதிப்படுத்திக்கொண்டான்.

ஊரடங்குச் சட்ட அமல்பற்றி அப்போது அலுவலகத்திலும் வேறு இடத்திலும் அறிவித்த சுவரொட்டிகளினுல் அவன் வெகுவாகக் கவலைகொண்டிருந்தான். இருட்டியதும் தெருக்களிலே யாரும் நடமாடக்கூடாது. ஈஸாவின் திட்டத்திற்கு இணங்க அவர்கள் ஏறிச் செல்வதாயிருந்த இரவு நேர பஸ்ஸிற்கு என்ன நேருமோ?

இந்தப் பயணம், அவன் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகமாக அவனை அலைய வைத்தது; அவன் திரும்பியபொழுது பத்து மணிக்கு மேலாகி விட்டது.

"நான் ஈஸாவைச் சந்திக்கவேண்டும்" என்று அவன் தன் அத்தையிடம் சொன்னுன். அவள் புறப்படத் தயாராயிருந்தாள்.

"நமக்கு இன்னும் சில நிமிஷங்களே இருக்கின்றன. நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று என் சிநேகிதர்களிடம் 'போய் வருகிறேன்' என்னும் வந்தன மொழி சொல்லி விடை பெற்றுவர ஆசைப்படுகிறேன்."

"நானும் உங்களோடு வருகிறேன்" என்முன் ஜேம்ஸ்.

"வா; ஆனுல் ஆஸ்பத்திரியில் ஐந்து நிமிஷத்துக்கு மேலாக நாம் தங்க முடியாது."

பாதையின் மறுகோடியில் ஸிஸ்டர் ஆங்கெலிகா சகிப்புத்தன்மையின் பெருமூச்சுடன் கூறினாள்: "ஆம்; இன்றுதான் கடைசி தினம். நான் பிரிந்து போகப் போகிறேன் என்பதை என்னால் நம்பவே இயல வில்லை" புதிரான புன்சிரிப்புடன் அவள் மேலும் சொன்னாள்: "சைனாவிலுள்ள ப்யூரிட்டன்களிலே அநேகமாக நான்தான் கடைசியானவள் என்று கருதுகிறேன்."

அலுவலாளர் குழாத்துடன் அவர்கள் 'வந்தன மொழி' பரிமாறிக்கொண்டார்கள்; ஆனால் ஈஸு மட்டும் அங்கு இல்லை என்பதை அவர்கள் உணர்ந் தார்கள். நோயாளி ஒருவர் தன்னைப் பார்க்க விழைந்ததாக ஜேம்ஸ் அறிந்து ஆச்சரியமடைந் தான்.

முன்தினத்தில், பாலத்தில் இறந்தவள் என்று கருதப்பட்டுக் கிடந்த ஒருத்தியை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு வந்தானே, அதே வயதான அம்மாள்தான் அது! நேரம் சுருக்கமாக இருந்தது; எனினும், அவனால் மறுக்க முடியாதென்பதை எண் ணினான். அவள் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்; குழி விழுந்த முகத்திலிருந்து இரண்டு பெரிய கறுப்புக் கண்கள் அவனை உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தன. ஜேம்ஸ் அக்கண்களைத் தான் பார்த்தான்.

அந்த அம்மாள் அர்த்தமில்லாமல் ஏதேதோ பிதற்றினாள். உள்ளங்கைகளை ஒன்று சேர்த்துக் குவித்து இடுப்பை வளைத்து மூன்றுதரம் அவள் வணங்கினாள். ஜேம்ஸுக்கு ஒரு வார்த்தைகூட புரிய

வில்லை. *'மறுபிறப்பின் தந்தை'யாக அவனை அவள் நினைத்து அவனுக்கு நன்றி சொன்னதாக நர்ஸ் அர்த்தம் சொன்னாள்.

"மெய்யாகவே அவள் நிலைமை பரிதாபகர மானது; தன் குழந்தையையும் மாமியாரையும் இழந்தாள். கணவனை அவளால் கண்டுபிடிக்க முடிய வில்லை. அவர்கள் எல்லோரும் நள்ளிரவில் தப்பி விட்டார்கள்."

இதயம் நெகிழ்ந்ததைவிட கோபம்தான் மிஞ்சி யது ஜேம்ஸுக்கு. "நான் இவள் உயிரைக் காப் பாற்றி என்ன புண்ணியம்? இந்த அம்மாளுக்கு என்ன நேரப்போகிறதோ, என்னவோ?" என்று அவன் தன் அத்தையிடம் சொன்னான்.

"நான் இங்கிருந்து கிளம்ப கொஞ்சமும் விரும் பாதது ஏன் என்று, இம்மாதிரியான நடப்புக்களை நீ காணும்போது உனக்கு நன்றாக விளங்கும்."

அச்சமயம், அவர்கள் அந்த அம்மாளிடம் விடை சொல்லி, ஆறுதல் அடையும்படி கேட்டுக்கொண் டார்கள். அவள் கண்ணீர் விட்டாள். அவன் அதைப் பார்த்தான். பாவம், அவளுக்கு யாரும் ஆதரவில்லை. மீண்டும் அவள் அவனுக்குத் தலை வணங்கினாள்.

ஸிஸ்டர் ஆங்கெலிகா, தன் மருகன் பக்கம் திரும்பி, நான் அறிந்ததுபோல் சீன மக்களின் அருமையை நீயும் அறிந்திருந்தால், நீ புரிந்து கொள்ள முடியும் அவள் தான் இறக்கும் பரியந்தம்

---

* இந்து மதத்தைப்போன்று சீனப் பழைய மதமும் மறு பிறப்பில் நம்பிக்கை கொண்டிருந்தது.

உனக்குச் சாம்பிராணித் தூபம் போடுவாள்; வாழ் நாள் பூராவும் உனக்கு அடிமையாக இருக்க விரும்புவாள்.''

ஜேம்ஸ் மறுமொழி சொல்ல நினைத்தான்; ஆனால் தொண்டை அடைத்தது; மௌனமானான். நர்ஸை நோக்கித் திரும்பினான். ''ஈஸுவுக்கு, அதாவது மிஸ் டுவோனுக்கு நீங்கள் அவசரச் செய்தியொன்றை அனுப்ப முடியுமா? என்னுடன் தொடர்பு கொள்ளும்படிஅவளுக்குத் தெரிவியுங்கள். இன்றிரவு ஊரடங்குச் சட்டம் அமலில் இருப்பதாகவும் சொல்லுங்கள். அவள் புரிந்துகொள்வாள்.''

மருத்துவப் பணிப்பெண் உறுதி சொன்னாள்.

குறித்த நேரத்திற்கு பதினைந்து நிமிஷம் முன்பாக ஜேம்ஸும் அவன் அத்தையும் ஸ்டேஷனை அடைந்தனர், அநேக ஜனங்கள் அவர்களைக் கவனித்தனர்; ஆனால் யாரும் கேள்வி கேட்கவில்லை, மதப் பிரசார சபை அம்மணிக்கு விடை கொடுத்தனுப்ப வேண்டி, சீன டாக்டரும் ஆஸ்பத்திரி உதவியாளன் ஒருவனும் வந்திருந்தனர். ஈஸுவோ அல்லது டுவோனோ தங்களைக் காட்டிக்கொள்ளவில்லை; இதை ஜேம்ஸ் புரிந்துகொண்டான்.

பிளாட்பாரத்தில் நகர்ந்துகொண்டிருந்த ரெயிலோடு ஓடிச் சென்று, கைகளை ஆட்டி அவளை வழியனுப்பியபோது, ''உங்களை வெகு விரைவில் ஹாங்காங்கில் சந்திப்பேன்!'' என்று ஸிஸ்டர் ஆங்கெலிகாவிடம் உறுதி சொன்னான் ஜேம்ஸ்.

''ஹாங்காங்கில்!....வெகு விரைவில்!....பேஷ்!'' அவள் உணர்ச்சிவசப்பட்டாள், திறந்திருந்த ரெயில்

ஜன்னல் வழியாக ஸிஸ்டர் ஆங்கெலிகா பதிலுக்குக் கைகளை ஆட்டினுள்.

ஜேம்ஸ் தந்தி அலுவலகத்திற்குச் சென்று தன் சிப்பந்திக்குச் செய்தி ஒன்று அனுப்பினுன்:

"ஸ்டேஷனில் என் அத்தையைச் சந்திக்கவும்; மாலை 4 மணிக்கு வந்து சேருவாள். கனமான சாமான்கள் காரணமாக, நான் தாமதித்து வந்து சேருவேன்!"

அவனுக்கும் கட்சி அலுவலகத்துக்கும் நன்மை பயக்கக்கூடியதாகும் அந்தத் தந்தி.

தன் அத்தைக்குக் காம்ஃபர்ஹெட் ரெயில் இணைப்பு கிடைத்துவிட்டால், மாலையில் சுமார் நான்கு மணி அளவில் அவள் பத்திரமாக ஹாங்காங்கில் இருக்கலாமென்று, ஜேம்ஸ் மனத்தில் கணக்கிட்டுப் பார்த்தான். அப்போது அவன் இல்லத்தில் இருந்தான். ஈஸாவிடமிருந்து செய்தியை எதிர் நோக்கியபடி இருப்புக் கொள்ளாமல் காத்திருந்தான் அவன்; ஏனென்ருல் அவர்களது புறப்பாட்டின் கால அட்டவணை தலைகீழாகப் புரண்டுவிடுமே! ஆஸ்பத்திரியிலிருந்து தனக்கு அனுப்பப்படுமென்று அவன் நம்பிய பழைய கல்லீயச் சாமான்கள் சிலவற்றையும் எழுதக்கூடிய காகிதக் சுருள்களையும், பலதரப்பட்ட ஞாபகார்த்த மலர்களையும் பார்வையின் அமைப்பின் பொருட்டு ஒன்ருக வைப்பதற்கு முயன்ருன் அவன். சிகரெட் பற்றவைத்துக்கொண்டு, நாற்காலியின் கைகளில் நீண்ட கால்களைப் பரப்பி வைத்தவண்ணம் எண்ணங்களைச் சேகரம் செய்ய முயன்ருன்.

பணி பதினொன்றரை, தலையைக் கீழே சாய்த்த வண்ணம், மருத்துவமனைப் புல் தரையைக் கடந்தாள் ஈஸா. அவளைக் கவனித்துக்கொண்டு, வீட்டினுள்ளே அவன் பொறுமையாகக் காத்திருந்தான். அவள் ஒருவகை நடன அமைப்புப் புள்ளிகளுடன் கூடிய நீல நிறப் பருத்தி ஆடை உடுத்தியிருந்தாள். தாழ்ந்திருந்த ஆலமரக் கிளைகளை அவள் கடந்தபோது, கண்களை உயர்த்தி, கதவடியில் அவன் காத்திருந்ததைக் கண்டாள். அவள் கண்களின் ஒளி பீதியூட்டும்படி கடுமையாக இருந்தது; ஆனால் அவளது உதடுகளில் தவழ்ந்த, அபூர்வமான, புன்னகை அவள் உள்ளத்தைக் காட்டிக்கொடுத்தது.

அவன் கதவை தயாராகப் பற்றிக்கொண்டான்; "உள்ளே வா" என்றான்.

"இல்லத்து வேலைக்காரப் பையன் சுற்றுப்புறத்தில் இருக்கிறானா?" என்று தாழ் குரலில் கேட்டாள் அவள்.

"இல்லை, அவனை என் அத்தை வெளியே அனுப்பிவிட்டாள். இப்போது நாம் மாத்திரமே இருக்கிறோம்."

ஈஸா தன் உள்ளத்துணர்ச்சிகளை வெளிப்படையாகத் தெரிவிக்க முடியாமலிருந்தாள். சொல்ல வேண்டியதை அவள் தன் கண்கள் மூலம் சொன்னாள். அவளிடமிருந்த மரியாதை, நிதானம் ஆகியவற்றின் அபரிமிதமான சக்தியை—எந்த ஒரு நிலையையும் ஆழ்ந்த மௌனத்தால் எதிர்த்துச் சமாளிக்கும் ஆற்றலையும் அவன் உணர்ந்துகொண்டான்.

"என்னுடைய செய்தி உனக்குக் கிடைத்ததா?"

"கிடைத்தது. எப்படியாவது உங்களிடம் சொல்லிவிடவேண்டுமென்று நான் வந்தேன். நிலைமை மாறிவிட்டது. காலையில் எங்களிடம் தெரிவிப்பதற்காக ஃபோன் வந்தார். ஒலிபரப்புச் சேதியை நீங்கள் கேட்டீர்களா?"

"ஊஹூம்."

"ராணுவம் பொறுப்பேற்றிருக்கிறது. இருட்டினதும், ஊரடங்கு சட்டம் அமலில் வருகிறது."

"அப்படியானால் ஹாங்காங்குக்கு நாம் இரவில் பஸ் ஏறிச் செல்ல முடியாதென்று அர்த்தமா?"

"நாம் செல்ல முடியும். ஆனால் ஊரடங்கு சட்டம் அமுலாவதற்கு முன்னதாக நாம் நகரை விட்டு வெளிக்கிளம்பிவிட வேண்டும்."

"எத்தனை மணிக்கு?"

"இதில் அதிசயமான விஷயம் என்னவென்றால். ஊரடங்குச் சட்டத்துக்கு அவர்கள் ஒரு கால நேரத்தை நிர்ணயிக்க வில்லை. இருட்டுவதற்கு முன்பாகவே நாம் நகரத்தை விட்டுக் கிளம்பவேண்டும். நான் பின் வாசலில் இருப்பேன். ஒரு படகு நம்மை நகரின் எல்லைக்கு இட்டுச் செல்லும். பொழுதுபட்டதும், ஸாய்காங் கரையை அடைந்து, ஃபானை நாம் சந்திப்போம்."

"எங்கேயென்று உனக்குத் தெரியுமா?"

"ஆம்; நான் உங்களோடும் என் தகப்பனாரோடும் என் மருமகனோடும் இருப்பேன். நாம் அனைவரும் ஒன்றாகத்தான் இருப்போம்" என்றாள் ஈஸா.

ஒரு கணம் நிறுத்திவிட்டு, முட்டாள்தனமான காரியம் ஒன்றை நான் செய்யப்போகிறேன்" என்றான் ஜேம்ஸ்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"நேற்று ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு வந்த அந்த ஸ்திரீயை நீ அறிவாய் அல்லவா? அவள் கண்களை என்னால் மறக்க முடியாது. திரும்பிப்போக அவளுக்கு வீடில்லை; குடும்பமுமில்லை. அவளையும் அழைத்துச் செல்ல வேண்டும் போல் இருக்கிறது எனக்கு."

"நம்முடன் எல்லையைத் தாண்டி அழைத்துப் போகக் கருதுகிறீர்களா?"

"பயணத்துக்குத் தக்க உடல் நலத்துடன் அவள் இருக்கிறாளா?"

"அப்படித்தான் தோன்றுகிறது."

"நான் இக்காரியத்தைச் செய்ய விரும்புகிறேன். நான் விளக்கமுடியாது."

"நீங்கள் யோசனையின்றி முரட்டுத்தனமாக ஏதாகிலும் செய்யும்போது. எப்போதுமே உங்கள் இஷ்டம் போலத்தான் நடக்கிறீர்கள்!"

"அதற்கு எடுத்துக்காட்டு?"

"எங்களைக் கடத்திச் செல்ல எத்தனம் செய்கிறீர்களே, அதுதான்! எச்சரிக்கை மிக்கவர்கள் உங்களைப் பைத்தியம் என்பார்கள்!"

"அப்படித்தான் நீயும் என்னைப் பற்றி நினைக்கிறாயா?" என்றான் ஜேம்ஸ்.

"ஜேம்ஸ், இந்த ஒரு சிறந்த குணத்திற்கெனவே உங்களை நான் நேசிக்கிறேன். நாம் அப்படியே செய்யலாம். அவள் பல ஹீனமாகவும் சோர்வோடும் இருந்தாள். நாங்கள் அவளுக்குக் கொஞ்சம் சூப் கொடுத்தோம்; அவள் ரொம்பவும் தெளிவோடு

காணப்படுகிறுள். இந்த நாட்டுப்புற பெண்டிர் மிகவும் வலுவுள்ளவர்கள்: நகர மக்களைக் காட்டிலும் அதிக வலுவுள்ளவர்கள்!"

"சரி, அப்படியென்றுல், அவளை அழைத்துச் செல்வோம். நம்முடன் படகில் அவளையும் ஏற்றிக் கொள்வோம்."

சம்மதம் தெரிவிக்கும் கண்களால் அவனை நோக்கினுள் ஈஸு. பிறகு மெதுவாக, செவிக்கினியதாக அவள் சொன்னுள்: "நாம் முட்டாள்தனமாக ஏதாவது செய்துகொண்டிருக்கலாம். ஆனுல் யார் அறிவார்கள்?" அவள் அமைதியுடன் ஒரு விஞடி ஜேம்ஸை உற்றுப் பார்த்தாள். பிறகு அவனுக்கு வேகமாக ஒரு முத்தம் கொடுத்தாள். "நான் இப்போது போகவேண்டும்" என்றுள்.

அவன் அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்; அவளைப் போகவிடவில்லை. அவன் கண்கள் ஆழமாக ஊடுருவிய வண்ணம் இருந்தன." என்னுடைய எட்டூரியப் பெண் தெய்வம் நீ!" என்றுன் அவன்.

"நான் ஒரு சீனப் பெண்!" என்று மகிழ்வுடன் முறுவல் பூத்தாள் ஈஸு.

"மிகவும் சரி, என்னுடைய க்வானின்!.... என்னுடைய தொழுகைக்குரிய க்வானின்!....என்னுடைய கருணை மிகுந்த பெண் தெய்வமே!....நீயே எனது வாழும் க்வானின்!"

ஈஸுவின் விழிகள் பாதி மூடியிருந்தன. அவள் இன்னும் அதிகமாகக் கேட்க விழைந்தாள். "ஏன்" என்று விஞ விடுத்தாள்.

"அறிவுள்ள பொருள்கள் என்றும் பேதைமையான பொருள்கள் என்றும் எட்டூரியக்கலை பற்றியும் புத்தமதக் கலைப்பற்றியும் நான் கூறியதை நினைவூட்டிக்கொள். நான் கலையை நேசிக்கிறேன், ஆமாம். ஆனல் உன் முன்னிலையில் நான் உயிர்வாழத் தொடங்குகிறேன். மீண்டும் உன்னுடன் நான் இருக்கத் தொடங்கியதிலிருந்துதான் நான் மெய்யாகவே உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதாக உணருகிறேன்"

இன்னும் கூடுதலாகச் செவிமடுக்கவேண்டுமென்ற ஆவலில், "ஏன்?" என்று கேட்டாள் அவள்.

"பீங்கானுலானக்வானினுக்கும், சதையும் ரத்தமும் கொண்டு ஜீவித்திற்கும் க்வானினுக்கும் உள்ள வேறுபாட்டை நீ அறிவாய். என் இதயத்தை நான் உணர்கிறேன்."

"என் இதயத்தையும் உணருகிறீர்களா?"

ஜேம்ஸ் அவளுடைய மார்பைத்தொட்டான். அவன் கைபட்டதும், ஈஸூ மகிழ்ச்சியினல் பூரித்துப் போனுள்.

"ஜேம்ஸ்! ஜேம்ஸ்!" என்று நெடுமூச்செறிந்தாள்.

"என்னுடைய இதயத்தின் மாணிக்கமே!" என்று ஜேம்ஸ் முணுமுணுத்தான். அப்பால், "வோட்டிஷிங்கன்! வோட்டிரோவ்! என்னுடைய உள்ளமும் உடலும் ஆனவளே!" என்ருன். அந்தப் பதம், மிகமிக நெருங்கிய உறவின் தருணங்களில் மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டது என்பதை ஜேம்ஸ் அறியான்.

"தயவு செய்யுங்கள்," என்று மெள்ள அவன் பிடியிலிருந்து நழுவினாள் ஈஸா.

"நான் பூரணமாக உங்களுடையவளே. ஆனால் அதுவும் சில தினங்கள் வரையில்தான்; பின் நாம் கணவன்-மனைவியாக ஆகிவிடுவோம். நான் முழுக்க முழுக்க உங்களுக்கே சொந்தமானவள். ஆகவே, அதற்காக வேண்டியதை நாம் மகிழ்ச்சியோடு எதிர் பார்ப்போமாக" என்றாள் அவள்.

பிறகு, அவள் கரங்கள் அவன் கழுத்தை வளைத் தன. இதற்குமுன் கொடுத்த எல்லா முத்தங்களி னின்றும் வேறுபட்ட முறையில் அவனுக்கு ஒரு முத்தம் ஈந்தாள் அவள்.

இஷ்டமில்லாமல் அவளைப்போக அனுமதித் தான் அவன்.

அவள் புறப்பட்டபோது திரும்பி, "நான்கு மணிக்கு!" என்றாள்.

ஆற்றின் மறுகரையில், அழகிய நாட்டுப்புறத் தோற்றத்துடன் மதப் பிரச்சார சபை இல்லம் தென் பகுதியில் அமைந்திருந்தது. ஆற்றங்கரையை நோக்கிப் பாதையொன்று சென்றது. தெற்கிலுள்ள பெரும்பாலான மதப்பிரச்சார சபை இல்லங்கள் மாதிரி, மரங்கள் சூழ்ந்து கணிசமான நிலப்பரப் புடன் புத்தராலயம் போன்றே விளங்கியது.

மணி நான்கு!

இல்லக் கதவைக் கவனமாகத் திறந்துவைத்து விட்டு, படிகளில் இறங்கி, படர் கொடியால் மூடப் பட்டிருந்த மதில் சுவரினின்றும் யாரும் அறியா வண்ணம் மெல்லக் குதித்துவெளியேறினான் ஜேம்ஸ்.

இருபதடிக்குக்கீழே மரங்களுக்கு அடியிலிருந்த சிறிய புதர் ஒன்றிலே பாதியளவு உடல் மறைய ஒளிந்திருந்த ஈஸாவைக் கண்டான்.

ஒரு வார்த்தைகூடப் பேசாமல், அவர்கள் ஆற்றங்கரையை நாடி இறங்கினார்கள். அங்கு அவர்களுக்காக படகு ஒன்று காத்திருந்தது. அதில் மூன்று அல்லது நான்கு பேர்களுக்கே இடம் இருந்தது, மூங்கிலால் பின்னப்பட்ட தட்டி ஒன்று அவர்களைக் காண முயன்ற கண்களைத் தடுத்து நின்றது.

மௌனமாக, டுவானையும் அவரது பேரப்பிள்ளையையும் அவன் வரவேற்றான்.

"நாம் இப்போது புறப்படலாமென்று படகின் பின்புறத்திலிருந்த செம்படவனை நோக்கிச் சொன்னான் டுவான்.

எங்கே அந்த அம்மாள்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

படகின் முன்பகுதியைச் சுட்டி, "அதோ!" என்றாள் ஈஸா.

படகின் வளைவுப் பகுதியில், பளிச்சென்று தெரியும்படியாக தலையில் கறுப்பு முண்டாசு கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த அந்தப் பெண்மணி செம்படவனின் மனைவியல்லள் என்றும், தான் காப்பாற்றிய அம்மாள்தான் அவள் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள அவனுக்குச் சில விநாடிகள் ஆயின. சாந்தமான இளநகையுடன் வைத்த கண் வாங்காமல் அவள் பார்த்தபொழுதுதான், அவ

ளுடைய ஆழப்பதிந்த கண்களை அவன் அடையாளம் புரிந்துகொண்டான்.

படகோட்டி கரையிலிருந்து படகைத் தள்ளிப் புறப்படச் செய்தான். கழியை துடுப்பாகப் பயன்படுத்தி படகை அவன் செலுத்திகொண்டிருந்ததை ஜேம்ஸ் தன் இருப்பிடத்திலிருந்தே பார்த்தான். பாலத்தின் கீழே, இரண்டு ஆறுகளின் சங்கமத்தால் நீரோட்டம் வேகமாக இருந்ததால் படகு சற்றுத் திணறியது. பின்னர் திரும்பி சிறிய வாய்க்காலில் வலது பக்கம் சென்றது.

டூவான் இப்போது நல்ல மூச்சு விட்டான்; கரையிலிருந்த தெருக்கள்மீது அவன் கண்கள் நிலைத்திருந்தன.

பொழுது சாயவில்லை. அரைமைல் தூரம் சென்றவுடன், வீடுகள் மறையலாயின: படகு மலையடிவாரத்தை அடையும் வரையில், பிற்பகல் வெயிலில் பொன்னுக மிளிர்ந்த விவசாயப் பண்ணைகளும், தோப்புக்களும் நிரம்பிய நாட்டுப்புறத் தோற்றம் சரிவாகத் தெரிந்தது.

நகரத்தைச் சுற்றியுள்ள துறைகளில் படகுகள் கூட்டம் கூட்டமாக இருந்தன. ஆனால் அவர்கள் நகரத்தை நெருங்கியபோது அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பிரிந்து கிடந்த இரண்டு அல்லது மூன்று படகுகளின் தொகுதிகளே காணப்பட்டன. தாழ்வான பாய் விரிப்பின் காரணமாக உடல் தசைகளில் இழுப்புவலி உண்டாகிவிட்டது போன்று ஜேம்ஸ் உணரலானான். சஞ்சலத்துடன் இடத்தை மாற்றிக்கொண்டான். கடைசியாக, ஆசனப்

பலகையைவிட்டுப் படகின் அடிப்பகுதிக்கு தன்னுடைய நீண்ட கால்களைப் பரப்பியவாறு அவலட்சணமாக நடந்து வந்தான்.

"உங்களுக்கு வசதியாக இருக்கிறதா, அப்பா?" என்று விசாரித்தாள் ஈஸா.

"சௌகரியமாக இருக்கிறது. இப்போது மணி என்ன?"

"நாலே முக்கால்."

"நாம் ஃபாரனை எத்தனை மணிக்குச் சந்திக்க முடியும்?" என்று ஜேம்ஸ் மெல்லிய குரலில் கேட்டான்.

"ஒன்பது மணிக்குப் பிறகு தன்னைச் சந்திக்கும்படி அவர் சொன்னார். ஒன்பது மணி அளவில் அங்கு இருப்பதாக உறுதி கூறியுள்ளார் அவர்."

"அதுவரை நாம் என்ன செய்யலாம்?"

"சற்று பொறுங்கள். அங்குதான் நமக்குப் பாதுகாப்பாக இருக்கும்."

"ஃபாரனை நாம் எங்கே சந்திப்பது?"

"த்ரீ காம் பார்ஸில் சந்திக்க வேண்டும். இங்கிருந்து சுமார் அரை மைல்தான் இருக்கிறது அந்த இடம்."

"அந்த இடம் உனக்குத் தெரியுமா?"

"நான் அங்குதான் பிறந்தேன் என்பதை மறந்து விடுகிறீர்களே!...." என்று பதிலளித்தாள் ஈஸா. "மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருப்பதால் புகழ் பெற்றுள்ள 'டுடிமியோ'—மாவட்டத் தேவாலயம் அங்கு உள்ளது" என்று தொடர்ந்தாள் அவள்.

சிறுவன் ஸ்ப்ரௌட் பெரியவர்கள் பேசி முடிக்கும்வரை காத்திருந்தான்; பிறகு, "அசாய் அங்கு இருப்பானல்லவா?" என்று தன் மனத்திலிருந்ததை ஆவலுடன் கேட்டான்.

"எனக்குத் தெரியவில்லை; அநேகமாக அங்கு இருப்பான் என்றே நம்புகிறேன்" என்றார் அவனுடைய தாத்தா.

இலையுதிர்காலத்தின் நாட்டுப்புறத் தோற்றம் அழகாக இருந்தது. வடக்கிலும் தெற்கிலும் இருந்த மலைச் சிகரங்கள் மேகங்களால் கவிந்திருந்தன. அப்பொழுதுதான் சூரியன் மறுபடியும் வெளிக் கிளம்பினான்; பள்ளத்தாக்கின்மீது மென்மையான கதகதப்பைப் பரப்பினான்; ஆரஞ்சுத் தோட்டங்களும் காய்கறி வகைகளும் நிரம்பிய மலைப்படுகைகள் வர்ணப் புள்ளிகளாகத் திகழ்ந்தன.

ரோந்துப் படகு ஒன்று பாலத்தைச் சுற்றி, பிறகு தாங்கள் உள்ள திசையில் வந்துகொண்டிருக்கும் சத்தம் அவர்களுக்குக் கேட்டது.

ஜேம்ஸ் கீழேயிருந்து எட்டிப்பார்த்தான்.

"எல்லோரும் கீழே இறங்கிக்கொள்ளுங்கள்" இரையாமல் சொன்னான்.

எல்லோரும் படகின் அடிப்பகுதிக்கு இறங்கி அமைதியாக இருந்தனர். அந்த வயதான அம்மாள் மட்டும் படகின் முன்புறத்தில் கால்களை மடக்கிக் குந்தியபடி, அசையாமல் இருந்தாள். படகு மெதுவாக நகர்ந்துகொண்டிருந்தது.

ரோந்துப் படகின் சத்தம் வரவர நெருங்கி, இருபது முப்பது அடி தூரத்தில் கேட்டது. சிறுவன்

ஸ்ப்ரௌட் ஏதோ முணுமுணுக்கத் தொடங்கினான். ஜேம்ஸின் தலைக்கு மேலே முகம் கவிழ்த்துப் படுத்திருந்த ஈஸூ சட்டென்று அவன் வாயைப் பொத்தினாள். இயந்திரத்தின் இயக்கம் குறைந்து, மிக மெல்லிய ஓசை மாத்திரம் கேட்டது. பத்து வினாடி நேரம் கவலையுடன் கழிந்தது. ஆற்றின் மறுகரைக்குச் செல்ல தண்ணீரை அரை வட்டமாகப் பிளந்து சென்றபோது படகின் இயந்திரம் வேகமாக இயங்கியது; நகரத்திற்குத் திரும்பும் வழியில் சத்தமிட்டுக் கொண்டே சென்றது.

ஈஸூ எழுந்து உட்கார்ந்து வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, "அவர்கள் போய்விட்டார்கள்" என்று மெதுவாகச் சொன்னாள்.

ரீவானும் மற்றவர்களும் ஆசுவாசப் பெருமூச்சு விட்டவண்ணம் மறுபடியும் அமர்ந்தார்கள்.

ரோந்துப் படகு வந்தபோது வளைவுப்பகுதியில் உட்கார்ந்திருந்த அந்த அம்மணி துளிக்கூட அசையவில்லை. அவள் ரோந்துப் படைகளை அலட்சியத்தோடும், அவமதிப்போடும் பார்த்துக்கொண்டிருந்தாள். அடியில் அமர்ந்திருந்தவர்களுக்கு அவளே ஓரளவு பாதுகாப்பாகவும் உதவினாள். கூடுமானவரையில் அசல் குடியானவப் பெண்ணைப்போலவே கரை கட்டுடன் கூடிய நீண்ட கைகள் உள்ள கைத்தறி மேலங்கியுடனும், கறுப்புநிறக் கால்சட்டையுடனும் அவள் காணப்பட்டாள். வழி நெடுகிலும் அவள் மௌனமாகவே இருந்தாள். காரணம், தன்னைக் குடியானவர் வர்க்கத்தைச் சேர்ந்தவள் என்றே

அவள் கருதிக்கொண்டிருந்தாள்; உட்புறம் இருந்தவர்கள் பேச்சுக் கொடுத்தாலொழிய, அக்குழுவினருடன் அவள் பேசுவதில்லை. ரோந்துப் படகு போன பின்னரும் அவள் தன் மௌனத்தைக் கலைக்கவில்லை.

"அவள் பெயர் என்ன?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"ஸ்வாட் அல்லது ஆஸ்வாட்!" என்று பதில் சொன்னாள் ஈஸா.

"அவளிடம் நீ அந்த யோசனையைத் தெரிவித்த போது, அவள் என்ன சொன்னாள்?"

நாம் அவளை ஹாங்காங்குக்கு அழைத்துச் செல்லப் போவதாக அவளிடம் சொன்னேன். எடுத்த எடுப்பில் அவளால் கிரகித்துக்கொள்ள முடியவில்லை. அவள் அங்கு வருவதை நீங்கள் விரும்புவதாக அவளிடம் தெரிவித்தபோது, அவள் கொஞ்சமும் தயங்கவில்லை,

"அவள் நிரம்பக் கேள்விகள் கேட்டாளா?"

"வாயை மூடிக்கொண்டு என்னைப் பின் தொடரும்படி அவளிடம் நான் சொன்னேன். என் வழியை நான் அறிவேன்; நாங்கள் வேகமாக அங்கிருந்து வந்துவிட்டோம். அவள் தனது துயரங்களை எல்லாம் மறந்தாள். நாட்டுப்புறத்து மனிதர் யாரும் தன் உயிரைக் காப்பாற்றிய மனிதரை ஒருபோதுமே மறக்கவேமாட்டார்கள் என்பதை நீங்கள் பிறகு உணர்வீர்கள். நம்முடைய வேலைக்காரியாக இருப்பதற்கு அவள் மகிழ்ச்சியடைவாள்!"

"அப்படியே செய்யலாமே!"

"உண்ண உணவும், இருக்க இடமும் கிடைத்தாலேனும் அவள் நன்றி பாராட்டுவாள். தன் சொந்த மகனைப்போல எண்ணி அவள் உங்களைக் கவனித்துக்கொள்ளுவாள்."

"அவளுடைய புருஷனின் கதி என்ன?"

"துப்பாக்கிப் பிரயோகத்தின்போது தாங்கள் இருவரும் அதில் சிக்கிக்கொண்டதாக அவள் சொன்னாள். அவனைத் திரும்பக் கண்டுபிடிக்க முடியுமா என்றே அவள் ஏங்குகிறாள். தப்பிச் சென்றவர்களில் ஒருவனாகக் கருதி அவனை ஊர்க்காவல் படையினர் கைது செய்திருக்கலாம். அவளிடம் ஒரு சல்லிக்காசுகூடக் கிடையாது. பரிதாபத்துக்குரியவள் அவள்!—பாவம்! ஒரே நாளில் தன் குடும்பம் முழுவதையுமே இழந்து நிற்கிறாள்!"

"நம்மையும்—நமது திட்டம் பற்றியும் படகுக்காரனுக்கு ஏதாவது தெரியுமோ?"

"அவனிடம் எதுவும் நான் சொல்லவில்லை. கிராமத்துக்குப் போவதற்காக இந்தப் படகை அமர்த்தினேன்; அவ்வளவுதான். ஆறு மணி நேரத்துக்கு ஆறு யூவான்....கூலி! நல்ல வரும்படிதான்!"

"அவன் ஏதோ ஐயப்படுகிறான் என்று தோன்றுகிறது. ஆனால் இதைப்பற்றியெல்லாம் அவனுக்கு என்ன கவலை?" என்றாள் ஈஸு.

தன் சட்டைப் பையிலிருந்து ஜேம்ஸ் சில சிகரெட்டுகளை எடுத்தான்; பிரித்த ஒன்று போக இரண்டு பாக்கெட் சிகரெட்டு வைத்திருந்தான் அவன். திறந்திருந்த டப்பாவில் ஆறு சிகரெட்டுகள் இருந்தன; ஒரு நாளைக்கு ஐந்து சிகரெட்டுகளுக்கு

மேற்படாமல் அளவு செய்துகொள்ள வேண்டு மென்று அவன் தீர்மானித்துக் கொண்டான். பின் ஒன்றைதானே எடுத்துக்கொண்டு ஒன்றை டுவா னுக்குக் கொடுத்தான்.

ஊஹூம், வேண்டாம் என்று டுவான் நாகரிக மான முறையில் மறுத்தான்; "நீங்கள் அவைகளை உங்களுக்கே வைத்துக் கொள்ளுங்கள்" என்றான்.

"என் செய்கையை நான் அறிகிறேன். நாம் நான்கு அல்லது ஐந்து நாட்கள்கூட போக வேண்டி யிருக்கும். யார் அறிய முடியும்? எனக்கு நானே பங்கீடு செய்து கொள்வேன். அதே நேரத்தில்...." என்று இழுத்தான் ஜேம்ஸ்.

"நீங்கள் வற்புறுத்தினால்....சரி!"

டுவான் ஆனந்தமாகப் புகையைக் 'குப்'பென்று வெளியே விட்டான்; சிகரெட்டின் அடித் துண்டு களைப் பத்திரப்படுத்தி வைத்திருந்தால் அவை நீண்ட நாளைக்கு நீடிக்கும்" என்றான்.

"உங்களுக்காக இடுப்புக் கச்சையில் வறுத்த அரிசி கொஞ்சம் வைத்திருக்கிறேன். நாம் த்ரீ காம்ஃபர்ஸை அடைந்தவுடன் அதை உங்களிடம் கொடுக்கிறேன்" என்றாள் ஈஸா.

தன்னிடம் இடுப்புக் கச்சை இருந்தது என்பதை அறிவிக்க அவள் தன் இடுப்பைத் தட்டிக்கொண் டாள்.

"அந்த மூட்டையில் இன்னும் வேறு என்ன இருக்கிறது?"

"ஒரு கத்தி, கத்தரிக்கோல், நெருப்புப் பெட்டி கள் ஏராளமான ப்ளாஸ்டிக் பைகள்" ஜேம்ஸ்

சிரிக்கக் கண்டாள் அவள். நான் எடுத்துச்செல்ல வேண்டுமென ஃபான் சொன்னவை அவை.'

ஜேம்ஸ் சிந்தித்தான்: விரைவாகப் புரிந்தும் கொண்டான்.

"அவன் படு சமர்த்தனாகவே இருக்க வேண்டும்."

"அதுதான் அவன் தொழில். உண்மையில் அவனேதான் பிளாஸ்டிக் பைகளை என்னிடம் தந்தான்; அவை நல்லனவாகவும் தடித்தும் இருக்கின்றன; அவை ஹாங்காங்கிலிருந்து கள்ளக் கடத்தல் மூலம் கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும்,"

"அவை எதற்காகவென்று அவர் உன்னிடம் சொன்னாரா?"

"இல்லை. பொருள்களை உலரச் செய்வதற்காக இருக்குமென்று நான் கருதுகிறேன். போதுமான அளவுக்கு அரிசி இல்லாவிட்டால், வறுத்த மாவும் அதுபோலச் சுவையாக இருக்குமென்றும் அவன் சொன்னான்."

இப்போது படகு கரையில் நின்று கொண்டிருந்தது. செம்படவன் சப்பணமிட்டுக் குந்தியிருந்த வண்ணம் புகை பிடித்தான்; அவளுக்கு அருகில் உட்கார்ந்திருந்தாள் ஸ்வாட்; ஒரு வார்த்தை சொல்லவில்லை அவள்.

கொஞ்சம் தேநீர் தயாரிக்கும்படி செம்படவனைக் கேட்டான் டுவான். பாய் விரிப்பின் வெளிப்புறத்தைக் கடந்து படகின் வளைவுப் பகுதியை அடைந்து நெருப்புப் பற்றவைக்கத் தொடங்கினான் படகோட்டி. அது ஸ்வாட்டை வேலைசெய்யத் தூண்

டிற்று; அதுவே தன் வேலை என்று கருதியவளாகச் செயற்படலானாள் அவள்.

சீக்கிரமாகத் தேநீர் தயாராகிவிட்டது; நாகரிக மில்லாமல் பளபளப்புடன் விளங்கிய பெரிய மண் பாண்டமொன்றில் தேநீர் பரிமாறப்பட்டது. தன் மூட்டையை அவிழ்த்து உள்ளங்கை யளவிலிருந்த எள் அடைகளை எடுக்குமாறு மக்களிடம் ஆணையிட்டான் டுவான். அடைகள் ஒரு டஜன் இருந்தன. பையனிடம் ஒன்றைக் கொடுத்தான். "நீ இதைச் சாப்பிடு, இன்றிரவு இராச்சாப்பாடு நமக்குக் கிடையாது. அந்த அம்மாள் ஆஸ்வாட்டுக்கு ஒன்றைக் கொடு. அவள் அதிகமாகச் சாப்பிட வேண்டும்" என்றான்.

ஸ்வாட் அதை எடுத்துத் தன் சட்டைப்பையில் வைத்துக்கொண்டாள்.

"ரொம்பவும் நன்றி; பெரியப்பா இன்னமும் எனக்குப் பசி எடுக்கவில்லை" என்றாள்.

சாதாரணமாக எள் அடைக்கு அவ்வளவு மதிப்பு இல்லாமல் இருந்தாலும், இம்மாதிரிச் சமயங்களிலே அதுவே ஒரு சிறந்த பொருளாக இருந்தது, அத்துடன் ஓர் ஆறுதலாகவும் தோன்றியது.

"நல்லது. நம் பயணத்தைக் கச்சிதமாகத் தொடங்க வேண்டும் நாம். நாம் பிரயாணம் செய்கையில் ஏதாவது கொஞ்சம் ஆகாரத்துக்கு ஃபான் ஏற்பாடு செய்ய முடியும்."

டுபான் எள் ரொட்டி ஒன்றை எடுத்துச் செம்படவனிடம் நீட்டினான்.

தயைக்கு-சமுதாய ரீதியான வாழ்வு முறைக்கு ஒரு பொருளாக தேநீர் இருந்தது. படகோட்டி ரொட்டியை விண்டு அதில் ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு, "பேஷ்....ரொம்பவும் நன்றாக இருக்கிறது!" என்றான்.

மற்றவர்களைப்போல் எனக்கும் ரேஷன் கிடைக்கிறது. நான் அரசாங்கத்துக்கு மீன் பிடிக்கிறேன். நான் மீன் பிடித்து கொடுக்கவேண்டிய பங்கிற்கு அதிகமாக நான் பிடித்தால், அதை நான் எனக்கென்று வைத்துக்கொள்ளலாம், ஹைஃபாங்கிலும் லாக்ஃபாங்கிலும் உள்ள செம்படவர்கள் ரொம்பவும் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள் என்று நான் கேள்விபடுகிறேன். ரோந்துப் படகுகளின் கடுமையான மேற்பார்வையின்கீழ் அவர்கள் கடலில் கூட்டமாகச் செல்கிறார்கள். அவர்கள் பிடித்தவற்றையெல்லாம் ஒப்படைக்கிறார்கள்; அவர்கள் ஹாங்காங்கிற்குத் தப்பிச்செல்ல எத்தனம் புரிந்தால். ரோந்துப்படையினர் அவர்களைச் சுடுகிறார்கள்."

"நீங்கள் பிடித்த மீன் என் கண்ணில்படுவதில்லை. சந்தையில் கொஞ்சமாகத்தான் கிடைக்கிறது."

"அதில் பெரும்பகுதி பதப்படுத்தி டப்பாக்களில் அடைக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறதென்று கேள்விப்படுகிறேன். டப்பாக்களில் அடைத்து மூடப்படும் பெரிய தொழிற்சாலை ஒன்றை டுங்வானில் அவர்கள் நிறுவி இருக்கிறார்கள். டப்பாக்களில் அடைத்து சரியானபடி மூடுவதற்கான வசதிகள் இங்கு இல்லை; ஆதலால், ஜனங்களுக்கும் ஏதோ கொஞ்சம் கிடைக்கிறது. ஆனால், டுங்வானில்

உள்ளவர்களுக்கு எங்களுக்குக் கிடைப்பதுகூட கிடைப்பதில்லை. கம்யூன் என்று சொல்லப்படும் சிறிய நகர ஆட்சி அமைப்பு முறை அமலானால்' நிலைமை இன்னும் மோசமாகிவிடும். அப்போது இந்தப்படகு எனக்குச் சொந்தமானதாக இருக்காது."

ஜேம்ஸ் யோசிக்கலானான்; குப்லாய்கான் சீனாவின் சக்ரவர்த்தியாக இருந்தபோது, வெற்றியின் உரிமையின் பேரில் சைனாவில் இருந்த ஒவ்வொரு ஆண், பெண், குழந்தை, மிருகம், பூ, புல்பரப்பு ஆகியவையாவும் தனக்கே சொந்தமென்று நம்பினான்!

செம்படவன் புகை குடிப்பதை நிறுத்திவிட்டு, "அந்தத் தேநீர்ப் பாண்டத்தைப் பாருங்கள். அது என்னோடு முப்பது வருஷங்களாக இருந்துவருகிறது. கம்யூன் ஆட்சிமுறை வந்தால் அதாவது சிறு நகராட்சிப்பிரிவு நிர்வாகமுறை அமல் செயற்பட்டால், எல்லாப் பொருள்களும் பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்படும். கிராமங்களிலே இயங்கும் சிறு நகராட்சிப்பிரிவு நிர்வாக முறையில் அப்படி இருப்பதாகவே நான் அறிகிறேன். 'இது மக்களின் குடியரசு; ஆகவே, இங்குள்ள ஒவ்வொரு பொருளும் மக்களுக்குச் சொந்தம்' என்று அவர்கள் எல்லோரிடத்திலும் சொல்லுகிறார்கள். என்னிடமிருந்த அந்தத் தேநீர் பாண்டத்தை எடுத்துக்கொண்டால், பிறகு நான் அதை வெறுப்பேன். எங்களுக்கு மகன் பிறந்த போது என் மனைவிக்கு அன்பளிப்பாக நான் தந்தது இது, வெய்ச்சோவின் ஆட்சிப் பொறுப்பை

கௌமின்டாங் ஏற்றுக்கொண்ட வருஷம் அது!" என்றான் அவன்.

"உங்கள் மகன் எங்கே?"

செம்படவனின் நெற்றிக்கோடுகள் விரிந்தன.

"எனக்கு என்ன வயது இருக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று எதிர்க்கேள்வி கேட்டான் அவன்.

"உங்களுக்கு என் வயதுதான் இருக்கும். போற்றுதலுக்குரிய வயதான அறுபதை நீங்கள் எட்டி இருக்கமுடியாது. எனக்கு ஐம்பத்தொன்பது ஆகிறது."

"எனக்கு ஐம்பத்தெட்டுதான்!"

"நல்வாழ்த்துக்கள். உங்களுக்கு விரைவிலேயே அறுபது ஆகிவிடவேண்டும்."

"ஆமாம். இன்னும் இரண்டு புதிய வருஷங்கள் வந்தால் எனக்கு அறுபது ஆகிவிடும். அது கேட்பதற்கு இனிமையாகத்தான் இருக்கிறது. ஆனால் என்னைப் பாருங்கள். அறுபது வயதான கிழவன் நான். தனியாக இந்தப்படகை எதற்காக ஓட்ட வேண்டும்? என் மகனைப்பற்றி விசாரித்தீர்கள். நல்லது. பத்தாண்டுகளுக்கு முன்னர் அவனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. அந்த இரண்டாவது பாய் விரிப்பு அவன் திருமணத்துக்கு வாங்கியதுதான். பேரப்பிள்ளைகளுடன் கூடிய ஒரு குடும்பம்—ஒரு வம்சம் எனக்குக் கிட்டுமென்றும், எனக்கு வயசாகி விட்டால், அப்புறம் என்மகன் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வான் என்றும் நினைத்தே அவ்வாறு திட்டமிட்டேன். ஆனால், அவர்கள்

அவனை ஓர் இரவில் அழைத்துச்சென்றுவிட்டார்கள்; அதன்பிறகு அவனை நான் ஒருபோதும் பார்க்கவே இல்லை. முதல் இரண்டு வருஷங்கள் அவன் வீட்டுக்கு கடிதம் எழுதினுன். மஞ்சூரியாவிலும் பிறகு கொரியாவிலும் அவன் இருந்தான். பிறகு அவனைப்பற்றிய தகவலே இல்லை!''

"அவனுடைய இளம் மனைவிக்கு என்னநேர்ந்தது'' என்று கேட்டான் டுவான்.

"அவள் எங்களுடன்தான் தங்கியிருந்தாள். புது மணப்பெண்-தேன் நிலவை இன்பமாக அனுபவிக்கவேண்டிய ஓர் இளம் மனைவிக்கு இக்கதி நேர்ந்தால் அது சாதாரண விஷயமா என்ன? அவள் தாயாக ஆவதற்கு இருந்தாள். அவ்வாறே ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள், மற்றொரு செம்படவக் குடும்பத்தைச் சேர்ந்த பெண் அவள்; ஆகையால் எங்களுக்கு அவள் பெரிதும் உதவியாக இருந்தாள். பிறகு, குழந்தைக்கு மூன்றரை வயது ஆன போது ஒரு நாள் அக்குழந்தை அரசாங்கச் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று உத்தரவு வந்தது. அவள் ஒப்படைக்க மறுத்தாள். குழந்தை எங்களுடைய உணவைச் சாப்பிட்டுக் கொண்டு எங்களுடன் தங்கியிருந்தது; அது யாருக்கும் எவ்விதத் தீங்கும் செய்யவில்லை.ஒரு யௌவனப் பெண் கமிஷனர் வந்து என் மருமகளிடம் பேசினுள்: அப்போதும் அவள் தன் குழந்தையை ஒப்படைக்க மறுத்தாள். மறுநாளும் அந்தப் பெண் கமிஷனர் திரும்பவந்தாள்; அவளுக்குப் பதினாறு வயதுக்குமேல் இராது. இருவரும் விவாதம் செய்தனர். தற்காலத்

திய பள்ளிப் பெண்களிலே ஒருத்தி அவள். அவள் என் மருமகளை அறிவில்லாதவள் என்றும், படிக்காதவள் என்றும் பேதை என்றும் ஏசினாள்!....

"உன் குழந்தையை அரசாங்கத்துக்கு ஏன் ஒப்படைக்கக் கூடாது?" என்று அவள் கேட்டாள்.

"ஏனென்றால், அவன் என் குழந்தை; நான் அவன் பேரில் அன்பு பாராட்டுகிறேன்; அவனைக் கவனமாகக் காப்பாற்றி வருகிறேன் என்றாள் என் மருமகள்.

"அப்படியென்றால், பாமர மக்களை நீ நேசிப்பதைக்காட்டிலும் உன் குழந்தையை நீ அதிகமாக நேசிப்பதாக நீ கருதுகிறாயா?" என்று வினவினாள் பெண் அதிகாரி.

"அதற்குப் பதில் ஒன்றும் தரவில்லை; ஆம்; பதில் ஏதும் வரவில்லை. பள்ளியில் இப்போது பாடம் சொல்லிக் கொடுக்கும் லட்சணம் அப்படித்தான் இருக்கிறது!...."

பிறகு என் மருமகள் என்ன பதில் கூறினாள் என்பது எனக்குத் தெரியாது. தன் குழந்தையை அவள் பெரிதும் நேசித்ததாயும், அதை அவளிடமிருந்து யாரும் பிரித்து எடுத்துச் சென்றுவிட முடியாதென்றும், அந்தப் பெண் அதிகாரி தானே தாயாக ஆகும் பொழுது இவ்வுண்மையை உணருவாள் என்றும் என் மருமகள் கூறினாள். இருவரும் பரஸ்பரம் சில சூடான சொற்களைக் கோபத்துடன் பரிமாறிக்கொண்டார்கள் என்று நினைக்கிறேன்!....

"அடுத்த நாள் ஓர் இராணுவ வீரன் வந்து பையனைத் தூக்கிச் சென்றுவிட்டான். தாய் உன்

மத்தம் கொண்டாள்; சிறுவர் இல்லத்துக்கு அவர்களுடன் தொடர்ந்தாள். அவளால் சாப்பிடமுடியவில்லை; தண்ணீர் அருந்தக்கூட முடியவில்லை. சாப்பாட்டு நேரத்தில், தன் மகன் சாப்பிடுவதைக் காண சிறுவர் இல்லத்துக்கு ரகசியமாகச் சென்று விடுவாள். மற்றத் தாய்மார்களும் அவ்வாறுதான் செய்கிறார்கள்—அவர்கள் அநேகமாக பசியுடனேயே செல்வார்கள்!"

அதன் பிறகு, அந்தப் பையன் இறந்துவிட்டான். என் மருமகள் ஓர் இரவில் அவளாகவே நீரில் மூழ்கி மாண்டாள். தெய்வமே அவளுக்கு நீந்தத் தெரியும், ஆனால் அவள் அப்புறம் ஜீவித்திருக்க விரும்பவில்லை. வட கரையில் அவள் உடலை நாங்கள் தேடிப்பிடித்தோம்!" என்று முடித்தான் செம்படவக்கிழவன்.

யாரும் எதுவும் சொல்லவில்லை; யாரும் எதுவும் சொல்லவிரும்பவில்லை.

அத்தியாயம் 10

சூரியன் தொலைவிலிருந்த மலைமுடிகளுக்குப் பின்னால் மூழ்கிவிட்டிருந்தான். ஜேம்ஸ் முன்னேறிப் போக ஆவல் மிகுந்திருந்தான். அப்பொழுது எட்டு மணிக்குமேல் ஆகிவிட்டது. சாலைகளை பார்க்கும் அளவுக்கு போதுமான மங்கல் ஒளி அங்கு இருந்தது. அன்பு காட்டிய வயதான படகோட்டி கிழவனுக்கு வந்தனம் சொல்லி விடைபெற்றுக்கொண்டு அவர்கள் கரைக்குச் சென்றார்கள். ஆஸ்வாட் உடன் வந்தாள்; சிறிய மூட்டை முடிச்சுகளைச் சுமந்து வருவதாக வற்புறுத்தினாள். அப்பொழுது தான், தோற்றத்தில் அவள் எத்துணை சிறியவளாக இருந்தாள் என்பதை ஜேம்ஸ் கண்டான். காலமும் கசப்பான அனுபவமும் அந்த முகத்தை உருக்குலைத்திருந்தது. வாழ்க்கை—மன உணர்ச்சி ஆகியவற்றின் பொதுவான முகக்குறிகளை இழந்துவிட்டதைப் போன்று, அவள் முகத்தில் துயரமும் மௌனமான அமைதியும் குடிகொண்டிருந்தது.

படகில் ஏறியதிலிருந்து, பாட்டனார் தன் பேரனை எடுக்கவில்லை. இப்போது, 'ஸ்வாட் அவனைப்பற்றிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளஆசைப்பட்டாள்.

வீடு திரும்பிக்கொண்டிருந்த உழவர்கள் சிலரை அவர்கள் பார்த்தார்கள். இதைத்தவிர, மற்றபடி மங்கிய ஒளியில் அங்கு அமைதியாகவும் ரம்யமாகவும் இருந்தது. அவர்கள் மெதுவாக நடந்துசென்ருர்கள். தூரத்தில் தான் அடையாளம் கண்டு கொண்டதைச் சுட்டிகாட்டி, "அதோ, த்ரீ காம்ஃபர்ஸ்," என்று சொன்னுள் ஈஸு.

"ஒன்பது மணிக்கு முன்னர் நாம் அங்கு இருக்க வேண்டும்," என்ருன் ஜேம்ஸ்.

அவர்கள் முன்னேக்கி நடந்து கொண்டிருந்தார்கள். தாத்தா, ஸ்வாட்டோடும் பையனேடும் பின்னே நெருக்கமாகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார்கள். ஜேம்ஸுடன் கையோடு கைகோர்த்த வண்ணம் நேராக-சுறுசுறுப்பாக-அமைதியாக ஈஸு நடந்து கொண்டிருந்தாள். பெரும்விபத்திலிருந்து அவள் தப்பித்துக்கொண்டிருந்தாள் என்னும்படியாக அவள் தோன்றவில்லை. நாட்டுப்புற பகுதியைச் சுற்றிலும் அவள் பார்த்தாள். பிறகு, இன்னும் சில நாட்களில் நாம் ஹாங்காங்கில் இருப்போம் என்று என்னுல் நம்பவே முடியவில்லை" என்று அவள் சொன்னுள். ஜேம்ஸின் மீது ஒரு கண்ணேட்டம் செலுத்தினுள். மன நிறைவின் புன்னகையால் அவள் உதடுகள் அகல விரிந்தன,

"சந்தோஷமாக இருக்கிருயல்லவா?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"ஆமாம் நிச்சயமாக! மூன்று அல்லது நான்கு தினங்கள் இருக்குமா? மிங் கல்லறைகளைச் சுற்றி நாம் நடந்துகொண்டிருந்த அந்த நாட்களை எனக்கு

இது நினைவூட்டுகிறது. நிகழ்ச்சிகள் சூழல்கள் சில சமயத்தில் சிக்கல் இல்லாமல் சாதாரணமாக அமைந்துவிடுகின்றன. நீங்கள் காலாற நடந்து செல்ல ஆசைப்பட்டால். இப்பொழுது செல்லலாம்."

ஜேம்ஸ் குதூகலமடைந்தான். "நீங்கள் காலாற நடந்து செல்ல ஆசைப்பட்டால், இப்பொழுது செல்லலாம். சுலபமானது இல்லையா?" என்று நம்பிக்கையின்றி பாதியைத் திருப்பிச் சொன்னான்.

ஈஸா இனிமையான சுருதியில் சீழ்க்கையடிக்கத் தொடங்கினாள்.

"ஊஹூம், வேண்டாம், "என மூச்சிழையில் மெள்ளச் சொன்னான் ஜேம்ஸ். "நாம் இப்பொழுது உல்லாசப் பயணம் செல்லவில்லை; ஞாபகமிருக் கட்டும், ஈஸா!" என்று தொடர்ந்தான்.

"அது எனக்குத் தெரியும். கால்கள் இருக்கின் றனவே அவை விசித்திரமானவை என்றே எனக்குத் தோன்றுகிறது. நாம் எல்லையைத் தொடும்வரை இதுபோலவே கால்களை விசிறிப்போட்டு நாம் நடந்துகொண்டிருப்போம்."

"அல்லது, நாம் தடுத்து நிறுத்தப்படும்வரை நடந்துகொண்டிருப்போம்."

"நாம் அந்நிலைக்கு ஆளாகும்போது அதைப் பற்றி நாம் கவலைப்படுவோம். நாம் அந்நிலையைச் சமாளித்துக்கொள்வோமென்று நீங்கள் கருத வில்லையா?"

"அதைப்பற்றி அப்போது பார்த்துக்கொள் வோம். நாம் சமாளித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லையா! உங்களுக்குப்

பிடிக்காத ஒரு சூழ்நிலையிலிருந்து வெளியேற எல்லாப் பிராணிகளுக்கும் கால்கள், இறகுகள், செதிள்கள் இருக்கின்றன; ஆனால் அவைகளுக்குப் பிடித்தமான மற்றொரு சூழ்நிலைக்குத்தான் அவைகளை இட்டுச்செல்கின்றன!" என்றான் அவன்.

"அது நம்மால் முடியும். இது உண்மைதான்.

"ஆகவே, தடுத்து நிறுத்தப்படும் வரையிலும் அவை செல்கின்றன. அவை அப்படிப் போனாலொழிய தாம் தடுத்து நிறுத்தப்படுவோமென்று அவை எங்ஙனம் அறிந்து கொள்ளும்?"

"என்னவோ, எனக்கு அவ்விதம் தோன்றவில்லை ஆனால், நீ தப்பிக்க முயற்சி செய்யும்போது, நீ குதூகலமாகப் போய்விடாதே! என்று சந்தேகம் கொள்ளாதவகையில் சொன்னான் ஜேம்ஸ்.

"இருந்தாலும் அப்படித்தான் நாம் செய்கிறோம் ஆழ்ந்து பார்த்து அறிந்துகொள்ளுவதற்கு அது ஒரு வழியாகும். நீங்கள் கடந்துசெல்லுங்கள்; அல்லது கடந்து செல்லாதிருங்கள்! இரண்டிலொரு வழியை நோக்கினால் குதூகலமாகச் செல்வதே மேலானது!.... ஏன் உங்களுக்குக் கவலையாக இருக்கிறதா? வேதனைப் படுகிறீர்களா?

"இல்லை. நான் இப்போது துப்பாக்கியைக் குறித்துத்தான் விசாரப்படுகிறேன். ஃபான் அதை வாங்கிக்கொண்டு விட்டாரா?"

"தான் அதை வாங்கி வைத்திருப்பதாக அவர் என்னிடம் உறுதி கூறினார்."

கிராமத்தின் நடுவில் ஒரு சிறிய சிற்றோடைக்குப் பக்கத்தில் 'த்ரீ காம்ஃபர்ஸ்' இருந்தது. அதற்குப்

பல பாதைகள் வழிகாட்டின; பூமியிலிருந்து சுமார் மூன்றடி உயரத்தில் சிவப்புச் செங்கற்களால் கட்டப் பட்ட கிராம தேவதைக்குரிய சிறிய கோயிலொன்று சாலைகள் சந்திக்குமிடத்தில் இருந்தது. ஜேம்ஸ் அண்ணாந்து மரங்களின் உச்சிகளை நோக்கினான்; அவை ஒரு நூற்றாண்டைக் கடந்த மரங்கள். இருட்டிக்கொண்டு வந்தது. இருண்டிருந்த பகுதிக்கு அருகில், ஒரு சிறிய குட்டையைக் கண்டனர். அபரிமிதமாக வளர்ந்திருந்த முட்செடிகளும் கோரை களும் அதை மூடியிருந்தன.

ஃபான் இன்னமும் வந்துசேரவில்லை. அவர்கள் கால்மணிநேரம் காத்திருந்தனர். அப்போது நகரம் இருக்கும் திசையிலிருந்து இரண்டு கரிய மனித உருவங்கள் தங்களைநோக்கிவந்துகொண்டிருப்பதைப் பார்த்தனர்.

அது ஃபான் என்று அவர்களால் ஊர்ஜிதப் படுத்திக்கொள்ள முடியவில்லை.

"ஆமாம், அது நிச்சயம் ஃபான்தான்! என்று முணுமுணுத்தான் டுவான்.

"ஆனால், கூட ஒரு பெண்ணும் இருக்கிறாளே? யார் அது?" என்றான் ஜேம்ஸ்.

"அவளைத்தான் அவன் தன்னோடு அழைத்துச் செல்லப் போகிறான்."

ஃபான் சமீபத்தில் வந்ததும், மரங்களுக்குப் பின்னால் தாங்கள் ஒளிந்து நின்ற பகுதியைக் கவன மாக ஆராய்ந்தவண்ணம் தலையை உயர்த்திப் பார்த் தான் ஜேம்ஸ்.

"அது ஃபான்தான். அந்த அம்மணி அவரது சிநேகிதி லெய்வா," என்று மெல்லிய குரலில் சொன்னுள் ஈஸு.

இதுபற்றி ஜேம்ஸுக்கு யாரும் சொல்லவில்லை. ஒரு பெரிய கோஷ்டியாக இது வளர்ந்துகொண்டிருந்தது!

அப்போது. "சரி, நாமெல்லாம் இங்கே இருக்கிரும். அசாய் எங்கே?" என்று கத்திக்கொண்டே வேகமாக வெளியேஓடிவந்தான் சிறுவன் ஸ்ப்ரெளட்.

அமைதியாக :இருக்குமாறு பையனுக்கு ஜாடை காட்டிவிட்டு அவர்களை நோக்கி முன்னேவந்தான் ஃபான்.

"நாம் எல்லோரும் வந்துசேர்ந்து விட்டோமல்லவா?" என்று விசாரித்தாள் லெய்வா. அவள் கோட் ஒன்றைச் சுமந்துகொண்டிருந்தாள். நீண்ட கைகளுடன் கூடிய பருத்தி மேலங்கியையும் முழுநிஜாரும் கையில் ஒரு மேல்சட்டையும் இருந்தது. அப்படியிருந்தும் அவள் மெல்லிய உருவத்துடன் விளங்கினுள்; மிகவும் இறுக்கமாயிருந்த அவளுடைய உடைகள் அவள் உருவ அமைப்புக்கு முக்கியத்துவம் அளித்தன. டூவானுக்கும் ஈஸுவுக்கும் அவள் முகமன் கூறினுள். ஜேம்ஸ்மீது வேகமான கண்ணேட்டம் செலுத்தினுள் அவள்.

"நாம் அனைவரும் இங்குவந்து சேர்ந்துவிட்டோம்" என்று பதில் சொன்னுன் டூவான்.

"வழியில் உங்களை யாரும் கவனிக்கவில்லை என்றே நான் நம்புகிறேன். அப்படித்தானே?" என்று கேட்டான் ஃபான்.

"நான் அப்படிக் கருதமாட்டேன். நகரத்தி லிருந்து படகின்மூலம் சந்தடியின்றி வெளியேறி, இருட்டியபின் இங்குவந்தோம்" என்று பதிலிறுத் தாள் ஈஸா.

"நீங்கள்தானே மிஸ்டர் டாய். நான் லெய்வா!" மற்றொருவர் அறிமுகப்படுத்தப்படுவதற்காகக் காத் திராமல், தன் கையை கொடுத்தபடியே சொன்னாள் அவள்.

"உங்களைச் சந்திப்பதில் பெரிதும் மகிழ்கிறேன்" என்றான் ஜேம்ஸ்.

"நீங்கள் ஆங்கிலேயர் என்பதாக ஷெக்டின் என்னிடம் சொன்னார்."

"ஆம்" என்றான் ஜேம்ஸ். என்ன காரணமோ அவன் வார்த்தைகள் திக்கின.

அவனுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந் தாள் அவள்; மரக்காட்டிற்குள் அவர்கள் திரும்பிய சமயம் அவனுடன் வருஷக் கணக்கில் பழகியவள் போன்று, அவன் கைமீது தன் கையை சகஜமாகப் போட்டுக்கொண்டாள் லெய்வா. ஜேம்ஸ் இதை எதிர்பார்க்கவில்லை. அவனது ஆங்கிலப் பண்பு இரண்டாம் முறை தவிடுபொடி ஆயிற்று. லெய்வா வின் மனோபாவம் துணிச்சலானதாக இருக்கலாம். தற்காலிகமாக சம்பிரதாயத்தை மீறிய போக்கி னையே அவள் விரும்பினாள் என்று நினைக்கும் அவ்வ ளவு இயல்பாக நடந்து கொண்டாள்.

"நீங்கள் சாப்பிட்டு விட்டீர்களா?" என்று விசா ரித்தான் ஃபான்.

தாங்கள் சாப்பிட்டுவிட்டதாக அவர்கள் சொன்ஞர்கள்.

தன் கைக்கடிகாரத்தின் மீது டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தான்.

இதுதான் சரியான நேரம். இதைவிட இன்னும் சீக்கிரமாக நாங்கள் வந்துசேர விரும்பவில்லே. ஏனென்ருல் நாம் பிரதானச் சாலையை அடையும் போது பிரயாணிகள் சிலர் தென்படலாம்! சாப்பிட ஏதாவது வைத்திருந்தால் இப்போதே சாப்பிட்டுவிடுங்கள். இன்றிரவு சாப்பிடுவதற்கு வேறெதுவும் கிடைக்காது" என்ருன் ஃபான்.

"அசாய் நம்முடன் அங்கே இருப்பாளு?" என்று சிறுவன் ஸ்ப்ரௌட் மீண்டும் கேட்டான்.

"எனக்குத் தெரியாது. எப்படியும் அவன் சமாளித்து வந்திருப்பான் என்றே நான் நம்புகிறேன். பார்க்கலாம் நம்மில் எத்தனே பேர் இங்கு இருக்கிருேம்?" என்று கேட்டுவிட்டு நபர்களே எண்ணிஞன் அவன்.

"அந்த அம்மாள் யார்?" என்று ஸ்வாட்டைச் சுட்டியவாறு குழப்பமடைந்து கேட்டான் ஃபான்.

ஜேம்ஸ் விவரித்தான்: "அவளே நம்மோடு வரும்படி நான்தான் அழைத்தேன். துப்பாக்கிச் சூடு நடந்தபோது அவள் தன் குடும்பம் முழுவதையும் இழந்துவிட்டாள். உங்களுக்கு இதில் மறுப்பு இருக்காதென்று நம்புகிறேன்.

ஃபான் வந்து சேர்ந்ததில் ஜேம்ஸ் நிம்மதி எய்திஞன்.

"நாம் எல்லோரும் இங்கு ஒன்று சேர்ந்திருக்கிறோம் பேஷ்!" எங்களுடன் நீங்கள் வருவதற்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்; விரும்பியதற்கு அதிகமாகவே நன்றி சொல்ல வேண்டும்" என்றான் ஜேம்ஸ்.

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. என் நண்பர் மிஸ்டர் ரீவானுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் உதவி செய்வதில் நான் அதிகமான ஆர்வம் கொண்டிருக்கிறேன். ஆமாம் உண்மைதான்!" என்றான் ஃபான் ஷெக்டின்.

உணவுக் கூடை அளவில் இருந்த ஒரு பிரம்புப் பெட்டியிலிருந்து கறுப்புத் துணியில் சுற்றப்பட்டிருந்த கனமான பொருள் ஒன்றை இழுத்து அதை ஜேம்ஸிடம் கொடுத்தான் அவன்.

"நான் வாக்குக் கொடுத்த பிரகாரம் உங்களுக்காக இதைக் கொண்டு வந்தேன்" என்று பெருமையுடன் உற்சாகம் மிகுந்த குரலில் தொழில் ரீதியாக கூறினான் அவன்.

"எப்படி?"

"அசாய் அதை கொண்டு வந்துவிட்டான். துப்பாக்கிக் குண்டுகளையும் அவன் மறக்கவில்லை."

"கட்சி அலுவலகம் தீப்பிடித்து எரிந்தபோது, நீங்கள் அதை எடுத்தீர்கள் என்று எண்ணினேன்."

"இல்லை, அந்தச் சம்பவத்துக்கு முன்பே அது என் வீட்டுக்கு பத்திரமாக வந்துவிட்டது. அந்தப் பையன் அசாய்தான் சமாளித்துக் கொண்டுவந்தான். எப்படியும் வந்துவிடுவான் என்று எதிர்பார்க்கிறேன். அவன் விடுவிக்கப்பட்டான் என்றும், நகரத்

தில் எங்கோ ஓரிடத்தில் இருக்கிறுன் எனறும் அறிந்துகொண்டேன். அவன் என் கட்டளைகளை சரியானபடி புரிந்துகொண்டான் என்று நம்பு கின்றேன்."

"ஷியாஷுவில் இன்றிரவு பத்தரை மணி பஸ்ஸைப் பிடிக்கும்படி அவனிடம் கூறினேன்; நகரத்திலிருந்து சரியான நேரத்தில் வெளியேறுவ தற்குத் தோதாக ஊரடங்கு சட்டம்பற்றியும் அவன் அறிந்திருந்தான்" என்ருள் லெய்வா.

தங்கள் குழுவை நோக்கி இப்போது விவரித்துக் கொண்டிருந்தான் ஃபான்:

"நம்மில் இப்போது ஏழு பேர் இருக்கிறோம். அசாய் வருவானுனல் எட்டாகும். பஸ்ஸில் கூட்டம் இருக்கலாம்: இருந்தபோதிலும், எல்லாம் சரியாகி விடும். நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய சில விஷயங்கள் உள்ளன. முதலாவது: நம்மில் யாரும் மற்றவர்களைக் கலந்து சொள்ளாமல் எதுவும் செய்யக்கூடாது. என்னிடம் சரியான தேசப்படம் இருக்கிறது; என்னுடைய ஆட்கள் வழி முழுவதையும் நன்கு அறிவார்கள். பிங்ஷானுக் குச் சற்றுத் தாண்டி லுங்காங்குச் சரியாகக் கீழே பக்சியிலிருந்தும் சும்சூனிலிருந்தும் பரவிய வண்ணம் எல்லை ரோந்துப் படைகள் ஆரம்பமாகின்றன. சட்டப்பிரகாரம், இருப்புப் பாதையின் இருமருங்கி லும் ராணுவப்படைகள் பரவி,யிருக்கின்றன. ஆகை யால் நீங்கள் எப்போதாவது வழி தவறினுல் மேற்கே ஓடாதீர்கள். எப்போதும் ரெயில்பாதைப் பகுதியி னின்றும் அப்பால் தள்ளியே இருங்கள். சுமார்

இரண்டாயிரம் அடி உயரமுள்ள கோலநட் மலையை -டுங்ஹானை நோக்கி நாம் எல்லோரும் போய்க் கொண்டிருக்கிறோம். அதன் மூன்று சிகரங்களும் எல்லாத் திக்குகளிலிருந்தும் நன்றாகத் தெரியும். பிறகு அவைகளை உங்களுக்குச் சுட்டிக் காட்டு கிறேன். ஆனால் நாம் பகலில் ஒளிந்து இரவில் நடந்து வழியைக் கடக்க வேண்டும். இதை மறந்துவிடாதீர் கள்; அனைவரும் ஒன்று சேர்ந்து உறுதியாயிருக்க வேண்டும்; இல்லையேல் நாம் தவறிவிடுவோம். நாம் எப்போதும் விடிவதற்கு முன் மறைவிடத்தை அடைந்துவிடும் வகையில் இரவு பயணம் திட்ட மிடப்பட்டிருக்கிறது. தன் இஷ்டம்போல யாருமே நடக்கக்கூடாது புரிந்ததல்லவா?....

"இரண்டாவது: நாம் ஒரே குழுவாக இருக்கின் றோம்; ஆயினும் பஸ்ஸிலோ அல்லது பிறர் முன்னிலை யிலோ புதியவிடத்திலோ நாம் தனித்தனியாக பிரிந்திருக்க முயற்சி செய்ய வேண்டும். வயதான டுவான் அவர்களே, நீங்களும் உங்கள் குடும்பத்தவ ரும் எப்போதும் ஒன்றாகவே இருங்கள். நீங்கள் பிங்ஷான்ஷியில் இருக்கிறீர்கள். தஸ்தாவேஜுகளை பிறகு தருகிறேன்; இப்போது அவை உங்களுக்குத் தேவையில்லை. நீங்கள் தற்சமயம் ஹுங்காங்குக்குப் போய்க் கொண்டிருக்கிறீர்கள். 'ஏன்' என்று கேட் காதீர்கள். அது யாருடைய அலுவலும் அல்ல!...."

"மூன்றாவது: பஸ்ஸில் இருக்கையில், இயன்ற வரை குறைவாகப் பேசுங்கள். சிறுவன் ஸ்ப்ரௌட் டைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது நலம். நீங்கள்

பேசும் முறையே உங்களைக் காட்டிக் கொடுத்து விடும்!" என்று முடித்தான் ஃபான்.

"எனக்கு பிங்ஷான் மொழியின் மாறுபாடு தெரியும். நாங்கஸ் பிங்ஷான் வேலைக்காரியை வீட்டில் வைத்துக்கொண்டிருந்தோம்" என்றாள் ஈஸு.

"அதை நீங்கள் முயற்சி செய்ய வேண்டாம். ஆஸ்வாட், உங்களது அடையாள ஒற்றுமைச் சீட்டை நீங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?"

ஆஸ்வாட் தன் சட்டைப் பையிலிருந்து துண்டுக் காகிதம் ஒன்றை எடுத்தாள். அதன்மீது வெளிச்சத்தை அடித்தான் ஃபான்.

"உங்கள் விஷயமாக என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. பார்க்கலாம்; அநேகமாக நீங்கள் போக்லோ வாசியாக இருப்பதே சிலாக்கியம். பிங்ஷானில் ருவான் குடும்பத்துக்கு ஆக வேண்டியதைச் செய்து கொண்டிருங்கள்........அசாயைப்பற்றித்தான் எனக்குக் கவலையாகயிருக்கிறது."

"எனக்கு நிச்சயமாகத் தெரியும். அவன் நம்மை ஒருபோதும் ஏமாற்றமாட்டான்" என்றாள் லெய்வா.

குட்டையிலிருந்த தவளைகள் சத்திக்கொண்டிருந்ததையும் மரக்கிளைகளுக்கு மத்தியில் இருந்த பறவைகள் அடிக்கடி கிறீச்சிட்டுக் கொண்டிருந்ததையும் தவிர்த்து இரவு அமைதியாகவே இருந்தது; கீழேயிருந்த மனிதர்களால் அமைதி கலைக்கப்பட்டது. சுமார் ஒரு மைல் தூரத்தில் சுற்று வட்டாரங்களில் இருந்த வீடுகளின் விளக்குகள் தெளிவாகத் தெரிந்தன.

அங்கிருந்து புறப்பட்டதும் ஒவ்வொருவருக்கும் அவன் தைரிய முட்டினுன். ஆபத்தான பிரயாண மொன்றில் தன் குடும்பத்தை அழைத்துச் செல்வ தாக வோன்கூட உணர்ந்தான்.

"அப்பா உங்களால் நன்கு பார்க்க முடிகிறதா?" என்று ஈஸூ கேட்டாள்.

"ஏதோ முடியும்!"

இருந்தபோதிலும் அவள் தன் தந்தையின் பக்கத்தில் நடந்து சென்றுள். இருபுறங்களிலும் சிறிய நீர்ப்பாசன வாய்க்கால்களுடன் கூடிய நாலைந்து அடி அகலமுள்ள கூழாங்கல் பாதையில் அவர்கள் வெகு விரைவில் நுழைந்தார்கள். அறு வடை முடிந்துவிட்டதால் வயல்களில் பெரும் பகுதி ஈரமின்றி வறண்டு கிடந்தது. குழுவினர் வரிசையாக நின்றனர். ஈஸூ தன் தந்தையுடன் நடந்தாள்; ஸ்வாட் சிறுவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண் டிருந்தாள். அவர்களுக்கு சற்று முன்னுல் ஸ்பானை யும் ஜேம்ஸையும் நெருக்கமாகத் தொடர்ந்தபடி லெய்வா சென்றுள்.

"இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று கேட்டான் ஜேம்ஸ்; அவன் கையில் ஒரு கோட் இருந்தது. அது சரியானபடி இருந்ததா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள அதன் பையி லிருந்த கனமான ஒரு சாமானை அடிக்கொருதரம் தொட்டுப் பார்த்துக் கொண்டான் அவன்.

"இன்னும் கொஞ்ச தூரம்தான் அரைமணி நேர நடை இருக்கிறது" என்று சொல்லிவிட்டு பின்னுல் வரும் லெய்வாவின் பக்கம் திரும்பி, "உனக்குச்

சௌகரியமாக இருக்கிறதா?'' என்று கேட்டான் ஃபான்.

''சௌகரியம் இருக்கட்டும்; இன்று திங்கள். வெள்ளிக்கிழமை இரவு அங்கு நாம் இருக்க முடியு மென்று நீங்கள் நினைக்கிறீர்களா?''

''வெள்ளி அல்லது சனியன்று போய்ச் சேர்ந்து விடலாம். எல்லாம் சந்தர்ப்பத்தைப் பொறுத்திருக் கிறது.''

''கற்பனை செய்து பாருங்கள். நான் சனிக்கிழமை இரவன்று நன்கு விருந்து சாப்பிடப் போகிறேன்!'' லெய்வாவின் குரல் கலகலப்பாகவும் உற்சாகம் நிறைந்ததாகவும் இருந்தது.

அவ்விதமான உல்லாசத்துடன் அவள் பயணத் தைத் தொடரத் துணிந்தது கண்டு ஃபான் மகிழ்ச்சி யடைந்தான். அவனும் நல்ல மனமகிழ்ச்சியுடன் இருந்தான்.

''பத்தாண்டுகளாக நான் ஹாங்காங்கைப் பார்க்கவில்லை. நினைத்துப் பார்ப்பதற்கு அது குன்று களுக்கு அப்பால் இருப்பதுபோலத் தோன்றுகிறது; குன்றுகளைக் கடந்து செல்ல நான் ஒருபோதும் முயன்றதில்லை. யாங்செங் ஏரியின் மிகச் சிறந்த நண்டுகள் ஹாங்காங்கில் கிடைக்குமென்பது மெய் தானு? ஆனுல், சூசௌ வாசிகள் அவைகளை ஒரு போதும் காண்பதில்லையாமே? அவ்வாறு எனக்குச் சொன்னுர்கள்.''

அது எனக்குத் தெரியாது. ஷன்டுங்கைச் சேர்ந்த வயது சென்ற அகதிப்பெண் ஒருத்தி தன் உறவினர் வீட்டில் ஷன்டுங்கைச் சார்ந்த பருமனுன

வேர்க்கடலை வகையைப் பார்த்தபோது அவளுக்கு பெரு வியப்பு ஏற்பட்டது. ஷன்டுங்கில் வருஷக் கணக்கில் அவைகளைப் பார்த்ததில்லையென்று அவள் கூறினாள்" என்று ஜேம்ஸ் சொன்னான்.

ஃபானை நன்கு அறிந்துகொள்ளுவதற்கு உதவிய இச்சந்தர்ப்பத்தை ஜேம்ஸ் மெச்சினான். அவன் சைனாவில் பல வருஷங்கள் இருந்தவன். அவனுக்கு பல நண்பர்கள் இருந்தார்கள். வெளிநாட்டு உல்லாச பிரயாணிகளின் மனதைக் கவரும் வகையில் அங்குள்ளவைகளை எல்லாம் கண்டுகளித்துவிட்டான் அவன். ஆகவே அங்குள்ளவைகள் பற்றி அனுமானம் செய்வதை அவன் நிறுத்திவிட்டான். ஃபான் ஒரு தனி ஆள். ஈஸூ அவனுக்குச் சொன்னதிலிருந்தும் தன் சொந்த அறிவிலிருந்தும் தெரிந்துகொண்டதாவது: ஃபான் செஞ்சீனாவிலிருந்து ஆட்களைக் கள்ளக் கடத்தல் மூலம் வெளியேற்றுவதையே ஒரு ஜீவனமாகக் கொண்டிருந்தான் என்பதேயாகும். அதே சமயத்தில், அவன் நற்பண்புள்ள ஒரு பழமையான குடும்பத்திலிருந்து வந்தவன் என்பதையும் தெரிந்துகொண்டான். அவனுடைய குணத்தைப் புரிந்துகொள்ள அவன் வெகுவாகப் பாடுபட்டான். ஃபான் நாற்பதாவது வயதைத் தாண்டிவிட்ட போதிலும், வலுவுடனும் வேகமாகவும் கால்களை அகலவைத்து நடந்தான்.

"அவர்களைவிட நாம் ரொம்பவும் விரைவாகப் போய்க்கொண்டிருக்கிறோம்" என்றான் ஜேம்ஸ்.

"ஓஹோ! நான் அடிக்கடி இதை மறந்து விடுகிறேன்.

"மிஸ்டர் டாய், ஹாங்காங்கிலுள்ள உணவு விடுதிகளில் நீங்கள் ஆசைப்படுவதையெல்லாம் கொண்டுவரும்படி செய்வீர்களென்பது உண்மை தானா? அதிகார உரிமைச் சீட்டுக்களை நீங்கள் காண்பிக்க வேண்டிய அவசியமில்லையே? பின்புறமிருந்து லெய்வா இதைக் கேட்டாள்.

"உங்களுக்கு ஹாங்காங் நன்கு பழக்கம் உண்டல்லவா?"

"நான் சிறு பெண்ணாக இருக்கையில், பலமுறை அங்கு சென்றிருக்கிறேன்."

"பின்னே என்ன, அப்போது ஹாங்காங்கை உங்களுக்கு நன்றாகத் தெரியுமே!"

"இருந்தாலும் என்னால் இப்போது நம்பமுடியவில்லை."

"எதை நம்பமுடியவில்லை?"

"எதாவது ஒரு உணவு விடுதிக்குச் சென்று, நீங்கள் விரும்புவதைக்கொண்டு வர ஏற்பாடு செய்வதாகச் சொன்னதை! மிஸ்டர் டாய், சனிக்கிழமை இரவன்று உங்களை நாங்கள் நண்டு விருந்துக்கு அழைப்போம்."

"என்னை ஜேம்ஸ் என்று அழையுங்கள்!"

"அப்படி அழைப்பதால் நான் மகிழ்ச்சியடைவேன்." தொடர்பற்ற இப்பேச்சினால் உள்ளூற இன்பமடைந்து, நிதானமாக சொன்னாள் அவள்.

"ஈஸா உங்களை சிமெஸ் என்றுதானே அழைப்பாள்?"

பழகுவதற்கு இந்தப்பெண் மிகச் சிறந்த சிநேகிதி என்று தோன்றியது ஜேம்ஸுக்கு. பெருங்

கஷ்டங்கள், ஆபத்து ஆகியவற்றைப் பற்றிய கதைகளை அவன் கேள்விப்பட்டிருந்தான். அகதிகளின் இதயங்களிலும் நம்பிக்கை உல்லாசம் நண்டு விருந்து போன்ற கனவுகள் குறைந்திருக்கும் என்று அவன் எண்ணியதில்லை. யாத்ரிகர்களுக்கு நம்பிக்கைகளும் கனவுகளும் இருந்தன. அவ்வாறு இல்லாவிட்டால், அவர்கள் யாத்ரிகர்களாக இருக்க மாட்டார்கள் என்பதை அவன் உணர்ந்தான். கவலையற்ற அந்நியோந்யமான குரலில் லெய்வா பேசினாள். தெய்வ நம்பிக்கையற்ற சீனர்கள் கவலை இல்லாமலும், சம்பிரதாயப்படி இல்லாமலும் இருப்பதை அவன் அறிந்திருந்தான். ஆனால் லெய்வாவைப்போன்ற ஒரு பெண்ணை அவன் இதுவரை சந்தித்ததே இல்லை. தங்கள் வாழ்நாள் பூராவும் தங்களுடனேயே தங்கிவிடக்கூடிய வகையில், பாட்டுப்பாடும் பெண்கள் சந்தோஷமாகப் பேசும் பாணியை அவன் கண்டிருந்தான். ஆனால் லெய்வா அவ்வகையைச் சேர்ந்தவளல்ல!

"நீங்கள் பஸ்ஸில் போகும்பொழுது உங்கள் குல்லாயை அப்புறப்படுத்திவிட்டு, உங்களது மேல் சட்டையின் கழுத்துப் பட்டையைத் தூக்கிவிட்டுக் கொள்ள வேண்டும்; ஒரு அசல் சீனன் மாதிரி, நீங்கள் எவ்வாறு நடமாட முடியும் என்பதைத்தான் என்றால் கற்பனை செய்து பார்க்கவே இயலவில்லை; சிமெஸ் நீங்கள் பஸ்ஸில் செல்லும்போது வருத்தமாக இருப்பதுபோல் பாவனை செய்யுங்கள்; வாய் திறந்து பேசாதீர்கள். அதுதான் நல்லது" என்றாள் லெய்வா.

"ஆகட்டும். தூங்குகிறுற்போல நான் பாசாங்கு செய்ய இயலும்.

"சீனர்களாகிய நாங்கள் எப்படியும் ஓர் ஆங்கி லேயரை அடையாளம் கண்டுகொள்ள முடியும்!"

"எப்படி?"

"ஆங்கிலேயர் உயரமாகவும் கடூரமாகவும் உயர்ந்த மூக்குடனும் காணப்படுவார், வெள்ளையரை அவரது மூக்கைக் கொண்டு ஜனங்கள் எப்போதும் தெரிந்து கொள்கிறுர்கள்."

பேச்சின் விஷயம் சொந்த முறையில் போய்க் கொண்டிருந்தது. மேலும், அவனுக்குள்ள அபா யத்தைப் பற்றியும் அவள் தமாஷாகப் பேசிக் கொண்டு இருந்தாள். அது கீழ்நாட்டுப் பாணியில் இருந்தது. அவள் சொன்னதை அப்படியே அதே அர்த்தத்தில் எடுத்துக்கொண்டான் அவன்; "மூக்கை இப்போது வெட்ட முடியாமல் இருப்பதற்காக வருந்துகிறேன்" என்றுன்.

இந்தச் சிறிய நகைச்சுவை அவர்களின் உற்சா கத்தைக் கிளறிவிட்டது. பாட்டுப் பாடும் பெண் ணின் வேலை பிறரை மகிழ்விப்பதே என்றுல், அவள் அதைச் சரிவரச் செய்தாள். டுவான் குடும்பத் தினர் சில கஜதூரம் பின் தங்கிவிட்டனர். அவர் களுக்காக இவர்கள் காத்திருந்தனர். அவர்கள் வந்து சேர்ந்ததும், லெய்வாவை அண்டி, அவர்கள் எதற்காகச் சிரித்துக் கொண்டிருந்தார்களென்று ஈஸ¬ வினவினுள். அவளிடம் லெய்வா சொன்ஞள்.

"நம் இருவரில் உங்கள் சிநேகிதருக்குத்தான் வெகு அழகான மூக்கு இருக்கிறது" என்றுள் லெய்வா.

முன்புறமிருந்த ஜேம்ஸை நோக்கி, "காதில் விழுந்ததா?—உங்களது அழகிய நாசியை லெய்வா புகழ்கிறாள்" என்றாள், ஈஸா.

"அப்படியா, மிக்க நன்றி" என்றான் ஜேம்ஸ்.

ஃபான் கடுமையைத் தளர்த்திக் கொள்ளவுமில்லை; அங்கு எதிர்ப்படவும் இல்லை; ஓர் அயல் தேசத்தவனை இம்மாதிரியான பயணத்தில் அழைத்துச் செல்வது அறிவற்ற செயல் என்று அவன் மனத்தில் எண்ணினாலும், அயல் நாட்டாரின் நட்பையும் சம்பாதித்துக் கொள்ளவே விரும்பினான்.

"என் சிநேகிதியிடம் நீங்கள் அன்பு கொள்கிறீர்களா?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"உங்கள் சிநேகிதி துருதுருப்பானவள், ஆர்வம் தேங்கும் ஆரணங்கு!"

அவள் வெய்ச்சோவுக்கு வந்தபோதுதான் அவளுடன் முதலில் பழக்கம் ஏற்பட்டது. அப்போது அவளுக்கு பதினெட்டு வயது. அவள் வெய்ச்சோவுக்கு வந்தபோது ஆண்மகன் ஒவ்வொருவனும் அவளுக்காகப் போட்டி போட்டனர், அவள் இல்லாமல் எந்தப் பெரிய விருந்தும் பூர்த்தியானதில்லை. அப்போது எனக்கும் சிறு வயசுதான். அவள் பேச்சைக் கேட்பதற்காகவே அவளைச் சந்திக்க அடிக்கடி நான் போவேன். வெள்ளைக்காரிகள்கூட அம்மாதிரி பேசுவார்களோ என்னவோ?"

"பேசாமலென்ன, பேசுவார்கள்!"

"உலகம் பூராவிலும் பெண்கள் ஒரேமாதிரிதான் இருக்கிறார்கள். அந்தப் பேச்சை நான் மிகமிக ரசிப்பேன்"

ஆங்கிலேயப் பெண்களைப் பொறுத்த அளவில், அவர்களுக்கு பேச்சுச் சுதந்தரத்துக்குச் சட்டரீதியாக உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. அது ஒரு புனிதமான உரிமையாக ஆகிவிட்டது இல்லையா?"

"நான் கேள்விப்பட்ட அளவில் அது வேடிக்கையான வீண் வார்த்தையாகவே இருக்கிறது. கொள்கையில் சுதந்திரம், மதச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம் என்றால், என்னால் புரிந்துகொள்ளமுடியும் ஆனால், பேச்சுச் சுதந்திரத்துக்கு சட்டப்படி ஏன் உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்? அது அவ்வளவு முக்கியமானதாக எனக்குத் தோன்றவில்லை. பேசுவதற்கு விஷயம் இல்லாவிடில், பேச்சுச் சுதந்தரத்தினால் என்ன பயன்?"

ஜேம்ஸ் பெரிதும் வியப்படைந்தான்; "நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்?" என்று மட்டும் கேட்டான்,

"வருஷக் கணக்காக கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் நான் இருந்ததன் காரணமாக இருக்கலாம். நீங்கள் விஷயங்களைச் சொல்ல விரும்புகிறீர்கள்; அவற்றைச் சொல்ல உங்களை அவர்கள் அனுமதிப்பதில்லை. ஆகையால் அவைகளை நீங்கள் சொல்ல மாட்டீர்கள். அதுகூட அவ்வளவு பெரிய கஷ்டமல்ல. நான் விரும்புவதெல்லாம் நிம்மதியாக இருப்பதற்குச் சுதந்திரம் வேண்டுமென்பதுதான். நான் தனியாக விடப்பட வேண்டும்; என் சொந்தப் பாதையில் நடக்க வேண்டும்; என் சுய எண்ணங்களைச் சிந்திக்க வேண்டும்; கட்சியின் சங்கேத முழக்கங்களுக்கு குரங்கு மாதிரி கூச்சலிடக் கூடாது!-ஒரு

முறை நானே அம்மாதிரி நடந்துகொண்டேன். எனக்குப் பின்புறம் என் கைகள் கட்டப்பட்டு மைதானத்தில் முழந்தாளிட்ட வண்ணம் நான் பகிரங்க விசாரணை செய்யப்பட்டேன். கமிஷனர் ஆணையிட்ட பிரகாரம் மக்கள் கூட்டம் 'ஆம்' என்றோ 'இல்லை' என்றோ கூக்குரலிட்டது. கூக்குரலிடும் பேராசை பிடித்த கொடியவர்களின் மந்தை அது! என் சுதந்திரத்தை விலை கொடுத்துத் திரும்ப வாங்கினேன்; கட்சியில் சேர்ந்தேன். இன்னும் என்னால் என்ன செய்யக்கூடும்?"

"உங்கள்மீது சுமத்தப்பெற்ற குற்றம் என்ன?"

"அதுவா?-எல்லாம் மாமூலான விஷயங்கள் தாம்-பொது மக்களுக்குக் கொடுமை இழைத்தது, பணத்தை வட்டிக்குக் கொடுத்தது, என்னிடம் வேலைக்கு இருந்தவர்களை நல்ல முறையில் நடத்தாதது-இப்படித்தான்!....நிஜமாகவே அவையெல்லாம் ஜோடிக்கப்பட்டவை. என் தாத்தா பெரிய பஞ்சாயத்துத் தலைவர்! எங்களுக்கு மூன்று கடைகளும் ஒரு மாளிகையும் இருந்தன. அதுதான் நான் செய்த பாவம், நான் கட்சியில் சேர்ந்தேன்!" என்று சொன்னான் ஃபான்.

"அமெரிக்காவில் சொல்வதுண்டு, 'உன்னால் அவர்களை எதிர்த்துப் போராட முடியவில்லையானால் அவர்களுடன் சேர்ந்துவிடு!' என்று. அது மாதிரிதான்! அது உங்களை ஒன்றும் நோகச் செய்யவில்லையே?"

"இல்லை. ஒரு கெட்ட நிலைமையினின்றும் மிக நல்லதை உண்டாக்கிக் கொண்டேன். காத்திருந்தேன்!"

"அது உங்களை உள்ளூற மாற்றவில்லையா?"

"ஒருவன் மற்றொருவனை உள்ளூற மாற்றிவிட இயலாது. அமெரிக்க ஐந்கிய நாடுகளில் 'இலிஞய்' என்றொரு இடம் உண்டே, உங்களுக்குத் தெரியுமா?"

"ஆஹா! தெரியும். இல்லிஞய்ஸ் என்று பேர்!"

"இல்லிஞய்ஸ் அரசாங்கப் பல்கலைக் கழகத்தை அறிவீர்களா?"

"அதைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதைப்பற்றி என்ன?...."

"இல்லிஞய்ஸ் பல்கலைக் கழகத்தில்தான் என் மகன் பட்டம் பெற்றான். அது மிகப் பெரிய மிகப் பிரசித்தமான பல்கலைக் கழகமோ?"

"ஆமாம்; மிகப் பெரியது; மிகப் பிரசித்த மானது!"

"உங்களுக்கு இது தெரிய வேண்டுமென்று விரும்பினேன்; அவ்வளவுதான். நான் ஹாங்காங்கில் இருந்தால், அவன் மீண்டும் அங்கு வந்து என்னைப் பார்க்க முடியும்."

"ஹாங்காங்கில் நீங்கள் என்ன செய்ய உத்தேசம்?"

"எனக்குத் தெரியாது. எனக்கு நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள்; கொஞ்சம் பணமும் சேமித்து வைத்திருக்கிறேன், என்னவோ பார்க்கலாம்."

"உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?"

"இல்லை. நான் ஒண்டிக்கட்டை, என் மனைவி கம்யூனிஸ்டுகள் வருவதற்கு முன்னதாக இறந்து போனாள்; கடந்த பத்தாண்டுகளின் கஷ்டங்களினின்றும் அவளுக்கு விடுதலை கிடைத்துவிட்டது!"

அவர்கள் செங்கியங் செல்லும் நெடுஞ்சாலேக்கு வந்து சேர்ந்தனர். பிறகு திரும்பி நெடுஞ்சாலேக்கு பக்கமாகச் செல்லும் நாட்டுப்புறச்சாலேயில் நடந்தார்கள். சாலேயில் விளக்குகள் இல்லே. ஒரு சிறிய குன்றைக் கடப்பதற்கு முன்னுலுள்ள பஸ் நிற்கும் இடம் இப்போது நிலவொளியில் மங்கிய சாம்பல் நிறத் துணுக்குப்போல் தெரிந்தது. கிராமப்புறச் சாலேக்கு சில அடிகள் மேலே நெடுஞ்சாலே சற்று உயர்ந்து சென்றது. நெடுஞ்சாலே நெடுகிலும் நீண்ட இடைவெளிகளில் செடிகள் நட்டு வைக்கப்பட்டிருந்தன.

கீழேயிருந்து அவர்கள் ஜாக்கிரதையாகக் கவனித்தனர். சுற்றிலும் யாரும் இல்லே; காத்திருக்கும் பஸ் பிரயாணிகளுக்கு தங்குமிடங்கூட அங்கு இல்லே.

குறித்த நேரத்தில் பஸ் வந்துவிடுமா?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"வருமென்று நினேக்கிறேன். ஊரடங்குச் சட்டம் தவிர, மற்றப்படி எல்லா விஷயங்களுக்கும் வழக்கம் போலவே நடக்க வேண்டுமென்றுதான் ராணுவம் விரும்புகிறது. இதில் வேடிக்கை என்னவென்ருல், உள்ளூர் கமிஷனர் கலகம் நடந்ததிலிருந்து இருக்குமிடம் தெரியாமல் மறைந்துவிட்டார்; மாகாண கமிஷனர் ஸெங்கே சம்பவம்பற்றி மேலிடத்துக்கு அறிவிக்க மறு ரெயிலில் கான்டனுக்குச் சென்றுவிட்டார். உள்ளூர் நிர்வாகத்தின் பொறுப்பை மேற்கொள்வது தான் தன் கடமையென்று அவன் கருதவில்லே. அமைதியையும் ஒழுங்கையும் நிலேநாட்ட

டுங்வானிலிருந்து ராணுவம் வந்தது. ஒரு வகையில் உங்களுக்கு இது அதிர்ஷ்டமானதாகும். கட்சி அலுவலகத்தின் வழக்கமான வேலை முறை மாறி விட்டது; நீங்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறும் வரை புதிய அதிகாரி அதையெல்லாம் கவனிக்க மாட்டார்!'' என்றான் ஃபான்.

"பஸ்ஸில் நம்மைச் சோதனை போடுவார்களோ?''

"இல்லை. அடுத்துள்ள செங்கியாங் ஸ்டேஷனில் சில வேளைகளில் ஊர்க்காவல் படையினன் ஒருவன் வரலாம். நீங்கள் அதைப்பற்றிச் சட்டை செய்ய வேண்டாம்; அதையெல்லாம் என்னிடம் விட்டு விடுங்கள். அவர்கள் அதிகம் தொந்தரவு செய்ய மாட்டார்கள். லுங்காங்கில்தான் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அவ்விடத்தை அடைவதற்கு முன் நாம் பஸ்ஸைவிட்டு இறங்கிவிட வேண்டும். நமது பயணம் உண்மையாக அங்குதான் ஆரம்பமாகிறது!

அப்போது தூரத்தில் வரும் பஸ் விளக்குகள் தெரிந்தன. பஸ் ஒரு திருப்பம் திரும்பி அவர்கள் உள்ள திசையில் வந்து கொண்டிருந்தது. பஸ் விளக்கொளி அவர்கள்மீது நேராக வீசியதால் அவர்கள் சற்றுத் தள்ளி சாலை ஓரத்தில் இருட்டுக்கு பின் வாங்கினர். "நமது பஸ்தான் அது'' என்று ஃபான் தாழ்குரலில் கூறினான்.

ஈஸாவும் ஜேம்ஸும் இணைந்து நின்றனர், அவன் கை தன்னுடைய கையைக் கெட்டியாகப் பற்றியிருந்ததை அவள் உணர்ந்தாள்.

"அவர்கள் முதலில் போகட்டும்" என்றாள் ஈவா.

"பஸ்ஸின் உள்ளே விளக்கு எரியவில்லை. அதுவும் நல்லதுதான்!"

பஸ்ஸின் 'கடகட'வென்ற சத்தம் இப்போது கேட்டது. பஸ் நிற்கும் இடத்துக்கு அது சீக்கிரமாக வந்தது; டிரைவர் கீழே இறங்கினான்; டார்ச் விளக்கை அடித்தான்.

"நீங்கள் எத்தனை பேர்?" என்று காரோட்டி கேட்டான்.

"ஏழு பேர். பஸ்ஸில் யாராவது பையன் ஒருவன் வந்தானா"

"பஸ்ஸில் சில குழந்தைகள் இருக்கின்றன."

"பதினான்கு வயசுப் பையன் ஒருவனை-நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அழகான தோற்றமுள்ள வாலிபன்.

"அப்படி யாரையும் நான் பார்க்கவில்லை உங்கள் அனைவருக்கும் போதிய இடம் இருக்கிறது. நகரில் ஊரடங்குச் சட்டம் அமலில் இருப்பதால், பஸ்ஸில் பாதி காலியாக உள்ளது."

அவர்கள் ஒவ்வொருவராகத் தொற்றி மேலே ஏறினார்கள். டிரைவர் கை விளக்கை அடித்து அவர்களுக்குரிய இடங்களைக் காண்பித்தான்; வந்தவர்களைச் சில பிரயாணிகள் ஏறிட்டுப் பார்த்தனர்; ஆனால் அவர்களின் பெரும் பகுதியினர் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டும், ஒருவர் மீதொருவர் சாய்ந்து கொண்டும் மரப் பெஞ்சுகளில் தூங்கி வழிந்தனர்.

"அசாய்!" என்று மெல்லிய குரலில் லெய்வா கூப்பிட்டாள். மறுமுறையும் கூப்பிட்டாள்.

யாராவது பதில் சொல்லவேண்டுமே!— ஊஹூம்!

பெண்குரல் கேட்டுச்சிலர் கண்களை விழித்துப் பார்த்தனர். ஆனால் உடனே தங்கள் விழிகளை மீண்டும் மூடித் தூங்கலாயினர்.

இந்தக்கூட்டம் இரண்டு பெஞ்சுகளை அடைத்துக் கொண்டது. ஈஸூவுக்குப் பக்கத்தில், ஜன்னலுள்ள ஒரு இடத்தில் அமர்ந்துகொண்டான் ஜேம்ஸ். தன் தொப்பியை எடுத்துக்கட்டினான்; அவள் தோள் மீது சாய்ந்துகொண்டான். யாராகிலும் வரும் பட்சத்தில், அவன் முகம் மறைக்கப்பட்டுவிடும்.

பஸ் அதிவேகத்தில் சென்றது; குன்றுகளுக்கு இடையே சுற்றிச்சுற்றிச் செல்லும் சாலைவழியாக சிலசமயம் சத்தமிட்டுக்கொண்டும், சிலசமயம் சந்தடியில்லாமலும் பஸ் சென்றுகொண்டிருந்தது. பின்னால் இருந்த சிலபேர் குறட்டை விட்டுக்கொண் டிருந்தனர். தாய் ஒருத்தி தன் குழந்தையைத் தூங்க வைத்துக்கொண்டிருந்தாள்; ஆனால் அது வீரிட்டு அலறியது.

எல்லோரும் அமைதியடைந்த நேரத்தில் ஜேம்ஸ் எழுந்து உட்கார்ந்தான்; அவர்கள் கடந்து சென்றுகொண்டிருந்த குன்றுப் பகுதிகளின் மாறிக் கொண்டிருந்த அமைப்புக்களை ஜன்னல் வழியாகப் பார்த்தான். பிறகு ஒரு சிகரெட் பற்றவைத்தான்; ரஸ்தாவில் பஸ் திரும்பியபோது, அடிக்கடி வீசிய அதன் வெளிச்சத்தில் தெரிந்த டிரைவரின் முதுகுப்

புறத்தை நிதானமாகப் பார்த்தான். அவனுக்குப் பக்கத்தில் நல்ல தேகக்கட்டுடன்கூடிய ஃபான், கம்பி யொன்றில் சாய்ந்த வண்ணம், டிரைவருடன் மெல்லிய குரலில் உரையாடிக்கொண்டிருந்தான்.

பஸ் இறக்கத்தில் செல்லத் தொடங்கியது; விரைவில் ஒரு சிறு நகரத்தில் நின்றது; தெரு விளக்குகள் மங்கலாக எரிந்தன. போலீஸ்காரன் ஒருவன் வந்தான். பஸ்ஸின் கதவருகே நின்று கொண்டு நகரத்தின் நிலைமைபற்றியும் பிரயாணி களின் எண்ணிக்கை குறித்தும் டிரைவரை விசா ரித்துக்கொண்டிருந்தான். நுழைவாயிலுக்கருகில் விழிப்புடன் கவனித்துக் கொண்டிருந்தான் ஃபான். எந்தக் கணத்திலும் போலீஸ்காரன் பஸ்ஸிற்குள் நுழைந்துவிடுவான்!

ஃபான் கீழே இறங்கினான்; கதவுக்கு எதிர்வசத் தில் நின்றுகொண்டான். சிகரெட் டப்பாவை வெளியே எடுத்து, அதை போலீஸ்காரனிடம் நீட்டினான்.

"புகை பிடியுங்கள். நான் கமிஷனரிடமிருந்து வந்திருக்கிறேன்!"

போலீஸ்காரன் அவனை உற்றுப் பார்த்தான். அவனுடைய சுங்ஷான் இராணுவ உடுப்பு, விளிம் பிட்ட மூக்குக் கண்ணாடி, தொழில் ரீதியான முகம் ஆகியவற்றின்மூலம் அசல் அதிகாரியாகவே ஃபான் தோன்றினான்.

"அது மிகவும் பயங்கரமாகயிருந்தது. அறிவு கெட்ட ஜனக்கூட்டம் அது. நாங்கள் இருபது— முப்பது ஆட்களை வளைத்துப் பிடித்துவிட்டோம்.

ராணுவம் பொறுப்பேற்றுவிட்டது. ஒழுங்கும் அமைதியும் பழைய நிலைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது."

"நீங்கள் லுங்காங்குப் போய்க்கொண்டிருக்கிறீர்களா?" என்று போலீஸ்காரன் விசாரித்தான்.

"இல்லை. பிங்ஷான் அரசாங்க விவசாயப்பண்ணைக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். உள்ளே சில குடியானவர்கள் இருக்கிறார்கள்: அவ்வளவுதான். இஷ்டப்பட்டால் உள்ளே சென்று பாருங்கள். மெதுவாகப் போங்கள். என் மனைவியையும் என் குடும்பத்தினரையும் தொந்தரவு செய்யாதீர்கள்."

"அப்படியானால் அவர்களை தொந்தரவு செய்யாதிருப்பதே நல்லது" என்று பணிவாகச் சொன்னான் போலீஸ்காரன்.

சிகரெட்டின்அடிப்பகுதியைத் தரையில் பலமாக வீசியெறிந்துவிட்டு உள்ளே தாவினான் ஃபான். படிக்கட்டில் நின்றுகொண்டு, மிச்சம் இருந்த சிகரெட் பெட்டியை போலீஸ்காரனிடம் வீசினான். அவனுக்கு நல்வாழ்த்துச் சொன்னான். போலீஸ்காரன் புன்னகை புரிந்தான்; பஸ் புறப்படுவதற்காக தன் கையை அசைத்தான் அவன்.

ஃபான் தன் இருப்பிடத்திற்குத் திரும்பினான். "இனி நீங்கள் அனைவரும் தூங்கலாம். லுங்காங் போய்ச் சேருவதற்கு அநேகமாக இன்னும் இரண்டரை மணி நேரமாகலாம்."

ஜேம்ஸ் அப்போதுதான் நல்ல மூச்சுவிட்டான்.

"பஸ் நிறுத்தப்படும் இடம் இனி எதுவும் இல்லை அல்லவா?" என்று டிரைவரிடம் கேட்டான் ஃபான்.

"ஷின்சூவில் யாராகிலும் பிரயாணிகள் இறங்கினுலொழிய பஸ் நிற்காது. இந்த இரவு வேளையில் அப்படி யாரும் இறங்கமாட்டார்களென்றே தோன்றுகிறது."

ஈஸூவைச் சுற்றிக் கையைப் போட்டு அணைத்து மகிழ்ந்தான் ஜேம்ஸ். மடியில் பேரப்பிள்ளையைக் கிடத்திக்கொண்டு டுவோன் நித்திரையிலாழ்ந்திருந்தான். முதல் வரிசையில் லெய்வாவோடு நெருக்கமாய் இணைந்து உட்கார்ந்திருந்தான் ஃபான்.

இரவுக் காற்று குளிர்ந்திருந்தது. ஈஸூவின் தலை கீழே தொங்கி தன் தோளின்மீது சாய்ந்திருந்ததை ஜேம்ஸ் உணர்ந்தான். தன்னுடைய 'கோட்'டின் ஒரு பகுதியைக்கொண்டு அவள்கால்களை மூடுவதற்காக அவளை மெள்ள நகர்த்தினுன்.

பஸ் சத்தமிட்டுக்கொண்டும், சந்தடிசெய்யாமலும் முன்னேறிப் போய்க் கொண்டிருக்கையில், பிரம்மாண்டமாய்க் கடந்துசென்ற இருண்ட தோற்றங்களை மணிக்கணக்கில் வெறித்துப்பார்த்தான் ஜேம்ஸ். இரண்டு உயர்ந்த மலைகளுக்கு நடுவில் ஒரு குறுகிய நீர்ப்படுகையின் வழியை அவர்கள் கடந்து கொண்டிருந்தார்கள். மலையுச்சிக்கு மேலே அவனுக்கு இடப்புறத்தில் சந்திரன் தெரிந்தது. அது அமைதியாகவும் மாயசக்தி கொண்டதாகவும் இருந்தது. பிற்பகலில் ஹாங்காங் போய்ச்சேர்ந்திருக்க வேண்டிய தன் அத்தையைப்பற்றி அவன் எண்ணமிட்டான். அருகில், வயதான டுவோன் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தான். கறுப்பு நிறக் காற்சட்டை அணிந்தலெய்வாவின் கால்கள்

ஆசனத்தில் நீட்டியவாறும். அவள் தலை ஃபானின் மடியில் சுகமாகப் பொருந்தியபடியும் இருந்தது வெளிச்சத்தில் தெரிந்தது.

ஈஸா கலக்கம் அடைந்தாள். அவள் கரங்கள் நழுவின; அவற்றை ஜேம்ஸ் ஏந்தினான். அவனுடைய கழுத்தில் இழைந்த அவளது தலைமுடியின் மணமும் அவளது மேனியின் மென்மையான கதகதப்பும் அவனைச் சுகமாகத் தூங்கச் செய்தன.

“நாம் இங்கு இறங்க வேண்டும்,” என்று ஈஸா மெள்ளச் சொல்லி அவனை உலுக்கியதும் அவன் விழித்தெழுந்தான்.

அவன் எழுந்து உட்கார்ந்தான்; கண்களைத் திறந்து பார்த்தான். பஸ் நின்றுவிட்டது. மற்றவர்கள் இறங்குவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தார்கள்.

அவன் கீழே இறங்கினவுடன், “நாம் இப்போது எங்கே இருக்கின்றோம்?” என்று ஈஸாவைக் கேட்டான்.

“எனக்குத் தெரியாது” என்றாள் அவள்.

அத்தியாயம் 11

இரவு, கிட்டத்தட்ட மணி ஒன்று ஆகி விட்டது. கிராமம் உறங்கிக் கிடந்தது. அரவம் ஏதும் இல்லை. கிராமத்தின்பரந்த நெல்வயல்கள் மீது நிலவொளி வீசிப் பிரகாசித்தது.

"இவ்விடத்தில் இருந்துதான் நாம் நமது பயணத்தைத் தொடங்குகிறோம்" என்றான் ஃபான்.

அரளிச் செடிகள் மண்டிய மேட்டுக் கரையுடன் கூடிய ஒரு சிறிய நீரோடையின் அருகே அவர்கள் வந்தார்கள். ஃபான் அவர்கள் எல்லோரையும் ஒன்றாக அழைத்தான்.

"நாம் இப்போது லுங்காங்குக்குச் சமீபத்தில் இருக்கிறோம்; அதனின்றும் நாம் விலகிவிடவேண்டும். இங்கிருந்து பிங்ஷான் வரைக்கும் திறந்த வெளி தான். பிங்ஷானிலிருந்து சில மைல் தொலைவில் மலைகள் ஆரம்பமாகின்றன. நாளைக் காலையில் கோலநட் மலையின் மூன்று சிகரங்களை உங்களுக்குக் காட்டுகிறேன். இதற்கும் பிங்ஷானுக்கும் இடையில் பூராவும் நெல்வயல்தான். பஸ்ஸில் போக முடிந் தால் அரைமணி நேரப் பயணந்தான். நாளையதினம் நாம் பகல் முழுவதும் மறைந்திருந்து, இரவில் விரை

வாக முன்னேறி மலையடிவாரத்தை அடைவோம். உணவைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். இங்கு எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். நானே அவர்களைக் கண்டு பிடிக்கிறேன், நெடுஞ்சாலையை நாம் விலக்கி விடவேண்டும்; முக்கியமாக, அடுத்துள்ள லுங்காங் நீர்த்தேக்கத்திலிருந்து நாம் தப்பிவிடவேண்டும். எழுபது, எண்பது பேர்கொண்ட படை ஒன்று அங்கே நிரந்தரமாக உள்ளது."

"இன்றிரவு எந்த இடத்தில் நாம் நம் பயணத்தை நிறுத்தப் போகிறோம்?" என்று கேட்டான் டுவான்.

"நாம் சமவெளிகளிலிருந்து கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். சமீபத்தில் குன்றுகள் சில உள்ளன. நமக்கு அதிர்ஷ்டமும் இருந்து, அது பாதுகாப்பாகவும் இருந்தால், வெள்ளைக்கல் குகைகளுக்கு நாம் செல்வோம்; அங்கு நீங்கள் நாள் பூராவும் தூங்க முடியும். இங்கிருந்து அது மூன்று மைல் தூரம்தான்!"

இரவின் அமைதியினூடே, பல நீரோடைகளைக் கடந்து சென்றது அக் குழு. குன்றுகளுக்கு மேலே, நீர்ப் படுகைக்கு அப்பால் நிலவு வந்திருந்தது. இரவுக் காற்றுமிகுந்த குளிர்ச்சியாக இருந்ததால்; நிலப் பரப்பைக் குளிர்வித்தது.

"இது ஒரு மறக்க முடியாத இரவு!" என்றாள் லெய்வா.

"இம்மாதிரி இன்னும் பல மறக்க முடியாத இரவுகள் உங்களுக்குக் கிடைக்கும்" என்று ஃபான் பதிலளித்தான்.

"அசாயைக் குறித்துத்தான் எனக்கு மிகுந்த கவலையாக இருக்கிறது. வெளிப்படையாக அவனால் இக்காரியத்தைச் செய்ய முடியாது."

"நகரத்திற்கு வெளியே எங்கோ ஓரிடத்தில் அவன் இருக்க வேண்டாம். நான் நிச்சயமாக இருக்கிறேன். அகப்பட்டுக் கொள்ளமாட்டான் அவன்; சாமர்த்தியமான பையன்."

ரஸ்தா மேல்நோக்கி வளைந்து சென்றது; மலை செங்குத்தாகயில்லை; பாறைப் பிரதேசமாக இருந்தது. சிறுவன் ஸ்ப்ரௌட்டை கையால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள் ஸ்வாட்; இவ்வகையில், தான் அவர்களுக்கு உபயோகமாயிருப்பதை அவள் நிரூபித்தாள். அவள் மனத்தில் என்ன நினைத்துக் கொண்டிருந்தாள் என்பது யாருக்குமே தெரியாது. ஏனென்றால்? அவள் அவ்வளவு குறைவாகப் பேசினாள். சிறுவன் ஸ்ப்ரௌட்டின் வயதுள்ள மகன் ஒருவனை அவள் அப்போதுதான் இழந்திருந்தாள்.

அவர்களது முன்னேற்றம் தாமதமாக இருந்தது. ஈஸாவின் துணையுடன் நடந்த டுவான் களைப்பினால் அடிக்கடி நிற்கவேண்டி இருந்தது. அவர்கள் குறிப்பிட்ட தூரம் மேலே போய்ச் சேர்ந்ததும், அடியிலிருந்த இயற்கைக் காட்சியைப் பார்த்தார்கள்; எண்ணற்ற நீரோடைகளால் பிரிக்கப்பட்ட வயல்களின் அகன்ற பரப்பு, இப்போது கறுத்த சாம்பல் நிறமாகவும் மூடுபனி சூழ்ந்த வெள்ளைத் திட்டுகளாகவும் தோன்றின. அகன்ற நதி ஒன்று லுங்காங் நகரத்தைச் சுற்றி ஓடியது: அது அவர்கள் காலடி

யின் கீழே திசை மாறி பள்ளத்தாக்கை நோக்கித் திரும்பியது.

அந்த மலைப்பாதையில் குடி இருப்பு இல்லை. அங்கும் இங்குமாக, கல் உடைப்பவர்களின் குடிசைகள் இரண்டொன்று இருந்தன; ஆனால் வீடுகள் இல்லை. சிறு தொலைவு தள்ளி, மரங்கள் அடர்ந்த ஒரு சிறிய தேய்ந்த பாதை வடக்கே சென்றது. சுமார் ஒன்றரை மைல் தூரம் நடந்திருந்தார்கள் அவர்கள்; எல்லோருமே களைத்திருந்தனர்.

"மேலே சென்று' சிறு காடு ஒன்றைத் தேடிப் பிடிப்போம்" என்று சொன்னான் ஃபான்.

"நாம் குகைகளுக்குப் போய்க்கொண்டிருக்க வில்லையா?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"அவ்வளவு உறுதியாகச் சொல்வதற்கு இல்லை. அருகே கிராமம் ஒன்று இருக்கிறது. நாய்களை எழுப்ப நான் விரும்பவில்லை. நாளைக்குப் பார்த்துக் கொள்வோம்."

அவர்கள் சாலையைத் துண்டித்துக் கீழே இறங்கினார்கள். சற்று மேலே புதர்களால் சூழப்பட்ட மரங்கள் அடர்ந்த மறைவான இடம் ஒன்று இருப்பதைக் கண்டார்கள். சுத்தமாக இருந்த அந்த இடத்தைச் சுற்றி புதர்கள் மண்டியிருந்தன; அவர்கள் உள்ளே மேற்கொண்டு செல்ல முயற்சி செய்யவில்லை. ஒரு மெல்லிய பனிப் படலம் உச்சி மீது தொங்கியது; தரை ஈரமாக இருந்தது;

திறந்த வெளியில் சமமான ஓர் இடத்தைக் கண்டுபிடித்து, அதன்மீது தன்னுடைய 'கோட்டை கழற்றி வைத்தான், ஜேம்ஸ்.

"இந்த இடம் நல்ல பாதுகாப்பாக இருக்கிறது. நாம் இங்கேயே அமர்ந்து, இரவுப் பொழுதுக்கு ஓய்வெடுத்துக் கொள்வோம்," என்றான் அவன்.

ஃபானும் லெய்வாவும் மேல்நோக்கி சிறிது தூரம் சென்று இராப்பொழுதைக் கழிக்க ஒரு நல்ல இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார்கள். பள்ளத் தாக்கை பார்த்தவண்ணம் அவர்கள் இருவரும் சேர்ந்து நின்று கொண்டிருந்ததைக் கவனித்தான் ஜேம்ஸ்.

"எல்லோரும் இங்கே வாருங்கள். உங்களுக்கு ஒன்றைக் காண்பிக்கிறேன்."

ஜேம்ஸ்—ஈஸா ஜோடி உடனே சென்றார்கள்; மற்றவர்கள் களைப்படைந்திருந்ததால் அங்கு செல்ல வில்லை.

"அங்கே பார்த்தீர்களா? தெற்கே நோக்குங்கள். 'மினுக்' 'மினுக்' கென்று ஒரு வெளிச்சம் தெரிகிற தல்லவா?" என்றான் ஃபான்.

"ஒன்றையும் காணோமே!"

"இல்லை. கவனமாகப் பாருங்கள். மேகங்களின் விளிம்புக்குச் சற்று மேலே....அங்கேதான்!........அது தான் கோலநட் மலை, உச்சியில் மணிக்கூண்டு இருக் கிறது. அங்கிருந்துதான் அந்த வெளிச்சம் வரு கிறது. துருவ நட்சத்திரத்தைப் போல, அதைக் கொண்டுதான் அகதிகள் யாவரும் வழியை நிதா னித்துக் கொள்கிறார்கள்; இதில் விநோதம் என்ன வென்றால், அம்மாதிரி இரண்டு மலைகள் இருக் கின்றன. இரும்புப் பாதையின் கிழக்கே கோலநட் இருக்கிறது; மேற்கே மெய்லின்ஷான் உள்ளது;

இரண்டும் உயரமானவை; வெகு தொலைவிலிருந்து பார்வைக்கு நன்கு தெரியக்கூடியவை."

"என்றால் எதையும் பார்க்க இயலவில்லையே?" என்றாள் ஈஸா.

"நான் பார்க்க முடிகிறது," என்றான் ஜேம்ஸ்.

"நல்லது. நன்றாக ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். நாளை காலையில் சீக்கிரமாகவே எழுந்து, என் ஆளைக் கண்டுபிடிக்கிறேன். பிறகு என்ன செய்ய வேண்டுமென்பதை நாம் தெரிந்து கொள்வோம்."

அவர்கள் தனித்திருக்க விரும்பினர் என்பதற்குரிய மென்மையான ஜாடையாக அதைப் பாவித்து ஈஸாவுடன் திரும்பினான் ஜேம்ஸ்.

தரையில் ஒரு பக்கமாக முன்னமேயே ஸ்வாட் படுத்திருந்தாள். அவளது வலது கை வெளியே நீட்டிக் கிடந்தது. அவளுடைய கால்கள் ஒன்றன் மீதொன்றாகப் பின்னிக் கிடந்தன. கடந்த நாட்களின் பயங்கர அனுபவங்களின் கலக்கத்தினின்றும் அவள் இன்னும் மீளவில்லை. ஒரு கையைப் போட்டு பையனைச் சுற்றி அணைத்துக் கொண்டு ஒரு பாறை மீது சாய்ந்து கொண்டிருந்தான் டுவான்.

"அப்பா, எப்படி இருக்கிறீர்கள்?" என்று பத்தடி விலகியிருந்த ஈஸா விசாரித்தாள்.

"என் எலும்புகள் நோகின்றன. களைத்துப் போய்விட்டேன்; அவ்வளவுதான். இளைப்பாறினால் நல்லபடியாக ஆய்விடுவேன்." மலை ஏறி நடந்ததால் மிகவும் சோர்வடைந்திருந்தார் டுவான்.

"நீங்கள் இம்மாதிரியாக இராப் பொழுதைக் கழிப்பது உகந்ததல்ல; படுப்பதற்கு ஓர் இடத்தை உங்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கிறேன்" என்றாள் ஈஸா.

அவள் மூட்டையிலிருந்து ப்ளாஸ்டிக் பைகளை எடுத்து அவைகளைத் தரையில் கவனமாகப் பரப்பினாள்; தலைப்பில் தன் 'கோட்'டை விரித்தாள்; தலையணையாகப் பயன்படும்படி அம் மூட்டையை ஒரே அளவில் தட்டிவிட்டாள். மூப்படைந்த தந்தையை அந்த இடத்துக்கு வழி நடத்திச் சென்று அவரை வசதியாகப் படுக்கச் செய்தாள்.

"நீ என்ன செய்வாய்? உன் கோட் உனக்குத் தேவைப்படுமே!"

"பரவாயில்லை; அப்பா; ஜேம்ஸின் கோட்டைப் பகிர்ந்துகொள்ள முடியும்."

இருட்டைக் கண்டு பயந்து போயிருந்தான் சிறுவன் ஸ்ப்ரௌட். அவன் தன் அத்தையோடு ஒட்டிக் கொண்டான்; அவனுக்கு அழுகை வந்தது; ஈஸா அவனருகே அமர்ந்து "சின்னதம்பி! பயப்படாமல் தூங்குடா! நாம் 'சுதந்தர நகரத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்!" என்றாள். ஹாங்காங்கைக் குறிப்பதற்கு அகதிகள் இப்போது உபயோகிக்கும் சொல்லான "ஸேயுசெங் என்னும் பதத்தைப் பிரயோகித்தாள் அவள். (ஸேயுசெங் என்பது பொருள் குவிந்த இடத்தைக் குறிக்கும்) "சுதந்திர நகரிலே, தெருக்கள் நியான் விளக்குகள் நிறைந்து பிரகாசமாக இருக்கின்றன; ஒரு பெரிய மலை மேகங்களில் ஒளிந்திருக்கிறது; பெரிய கப்பல்

களுடன் கூடிய கடல் இருக்கிறது. அங்கே கடை களும் உண்டிச் சாலைகளும் பொருள்களால் நிரம்பி இருக்கும் மனிதர்களும் குழந்தைகளுமாக தெருக்கள் நிரம்பி வழியும். எல்லோரும் சிரித்துக்கொண்டும், பேசிக் கொண்டும் இருப்பார்கள். ஒருவரும் பயப் படவே மாட்டார்கள் ஆமாம்; ஒருவரும் பயப் படுவதே இல்லை........!"

"டங்பூ (கமிஷனர்) இல்லையல்லவா?"

"இல்லை."

"நான் சாணி பொறுக்க வேண்டியதில்லையே?"

"இல்லை. ஆனந்தமாக மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து நீ பள்ளிக்குப் போக முடியும். நீ அச்சப் படவே தேவையில்லை. வீதிகளில் உன்னை நோக்கி ஒலி பெருக்கிகள் கர்ஜனை செய்யமாட்டா. தாத்தா, நீ, நான் எல்லோரும் எப்போதும் ஒன்றாகவே இருப்போம்; அங்கு இன்னும் அழகு அழகான காட் சிகள் நிறைய இருக்கின்றன. உனக்கு ஒரு கைக் கடிகாரம் வேண்டுமல்லவா?—பேஷ், நான் வாங்கிக் கொடுக்கிறேன், நிச்சயமாக!"

"தாத்தா, அத்தை சொல்வதைக் கேட்டீர்களா? எனக்கு ஒரு கைக் கடிகாரம் வாங்கித் தருவதாக சொல்கிறாள்!"

"ஆமடா! ஸ்ப்ரௌட், அதனால்தான் நாம் சுதந்திர நகரத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறோம். இரண்டொரு நாட்கள்தான்! நாம் ஒரு மலையைக் கடந்தாக வேண்டும். அவ்வளவுதான். எதிர்ப் பக்கத்தில் 'சுதந்திர நகரம்' இருக்கிறது. சரி; இப் போது நீ தூங்கு!"

பாட்டனுக்குப் பக்கத்தில் பையனைப் படுக்க வைத்தாள் ஈஸு; அவனுக்கு முத்தம் ஈந்தாள்; தலைக்கு அணைவாக துணி மூட்டையை வைத்துக் கொண்டு தன் தகப்பனார் சுகமாகப் படுப்பதற்கு ஒத்தாசை செய்தாள்; அவன் தலைமயிரை அன்புடன் தடவிக் கொடுத்தாள் அவள்,

அவள் திரும்பிவர காலெடுத்து வைத்தாளோ இல்லையோ, பையன் மீண்டும் அழலானான்.

"தாத்தா, எனக்குப் பசிக்கிறது,"

"ஈஸு புன்னகை புரிந்தாள்.

"சற்று பொறுங்கள், அப்பா."

மூட்டையைத் திரும்பவும் அவிழ்த்துக் கரண்டி ஒன்றை எடுத்தாள் அவள், பிறகு தன் இடுப்புக் கச்சையைத் தளர்த்தி, அதிலிருந்து வறுத்த அரிசியை மிகவும் கவனமக்க அளந்தெடுத்து, அதைப் பையன் ஒவ்வொரு கரண்டியாக உண்ணும்படிச் செய்தாள், நோயாளிக்கு மருந்து கொடுப்பதுபோல,

"அப்பா உங்களுக்கும் கொஞ்சம் தரட்டுமா?"

"வேண்டாம் எனக்குப் பசியில்லை."

"ஜேம்ஸ் காத்துக் கொண்டிருந்த இடத்துக்குத் திரும்பிச் சென்றாள் ஈஸு.

"வறுத்த அரிசி கொஞ்சம் சாப்பிடுகிறீர்களா?"

"ஊஹூம். எனக்குப் பசியில்லை.'!

அகன்றிருந்த கறுத்த இடுப்புக் கச்சையிலிருந்து கொஞ்சம் அரிசியை எடுத்து, "சுவைத்துப் பாருங்கள்," என்று சொல்லி அவனது திறந்திருந்த கையில் கொட்டினாள்.

மொரு மொருவென்றிருந்த அரிசி மணிகளை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு நிதானமாக மென்றான் ஜேம்ஸ்.

"பரவாயில்லை. ஓரளவு கதகதப்பாயும் இருக்கிறது."

"வாஸ்தவம்தான். இடுப்புக் கச்சைப் பையி லிருந்து இப்பொழுதுதானே எடுத்தேன்!"

"தானியங்களான ரொட்டியை நீ சாப்பிட்ட துண்டா?" அற்புதமாக இருக்கும்!"

"எனக்கு ஞாபகமில்லை. அம்மாதிரி ரொட்டி பீகிங்கில் இருந்ததா வென்றும் எனக்குத் தெரிய வில்லை. அது இனிப்பாக இருக்குமா?"

"ஆமாம்; வழக்கமாக அப்படித்தான் இருக்கும். வெண்ணெயில் அதை நாங்கள் வறுப்போம்."

"எங்களுக்குச் சர்க்கரை கிடைக்கவில்லை. ஆகையால், ஸோயா சாற்றை ஊற்றி அரிசியை வறுத்தேன். மிகவும் நேர்த்தியாக இருக்கிறது இல்லையா?"

"மிகவும் ருசியாக இருக்கிறது."

சுற்றிலும் பார்க்கத் திரும்பினான் ஜேம்ஸ், அவர்களுக்கு மேலே, குன்றின் பாறை நிறைந்த முனையில், நிலவொளி தேங்கியது. அந்தத் தெளி வற்ற வெளிச்சத்தில் அந்த வெண்ணிறத் தோற்றம் ஜீவனுடன் விளங்கியது.

ஜேம்ஸ் பின்னால் சாய்ந்து, ஈஸுவை தன்னுடன் நெருக்கமாக இழுத்துக் கொண்டான்.

"உன் தந்தைக்கு நீ மிகவும் அவசியம்!"

"வாஸ்தவம். அதனால்தான் அவரை நான் தனியாக விட முடியவில்லை. நம்முடன் அழைத்து வந்தேன்!"

"உன் கருத்து எனக்கு விளங்குகிறது. மிகவும் முதிர்ந்த கன்ஃபூஷியஸ் அவர்!...." என்றான் ஜேம்ஸ்.

"ஒரு ஆங்கிலேயப் பெண் காதலனிடம் இம் மாதிரி கோரமாட்டாளா?"

"சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தகுந்தபடி கட்டாயம் கோருவாள்."

"இப்போதுதான் சமயம் கிட்டி இருக்கிறது. நான் செய்யத்தக்க நல்ல காரியம் இது ஒன்றுதான். என் தந்தைக்கு பணிவிடை செய்ய நான் இருக்க வேண்டும், இதை நான் நன்கு அறிவேன். ஆங்கிலேயப் பெண்ணாக இருந்தாலும் அவளும் இப்படித் தான் செய்வாள். இம்மாதிரியான குடும்ப உணர்ச்சிகளைத்தான் கம்யூனிஸ்டுகள் அழித்துக் கொண்டிருக்கிறார்கள்."

"இந்த நிலைமை ஹாங்காங்கிலும் கௌலூனிலும் பரவியிருக்கக் காண்கிறேன், சல்லிக்காசு கூட இல்லாமல் ஹாங்காங் வந்து சேர்ந்த அகதிகள் எப்படிக் காலந்தள்ளுகிறார்களோ, என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை; ஒவ்வொரு பகுதியிலும் நான் கண்ணாரக் கண்டேன். அவர்களிடமிருந்து சில விஷயங்களைக் கற்றுக் கொண்டேன்."

ஜேம்ஸ் அநேகமாகத் தூங்கிப் போய்விட்டான். அவன் கண்கள் குவிந்தன. அவளது இடுப்பைச் சுற்றியிருந்த அவனுடைய கைதளர்ந்தது. நட்சத்திர வெளிச்சத்தில் அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்

தாள் ஈஸா; அவனது உதடுகளில் அப்போதும் புன் முறுவல் இழைந்திருந்தது. இத்தனை வருஷங்களாக அவன் தன்னிடம் எவ்வளவு உண்மையுடன் நடந்து வந்தான் என்பதையும், சைனுவிலிருந்து தங்களை அழைத்து வருவதற்கு எத்தகைய பயங்கர மான ஆபத்தில் அவன் துணிந்து இறங்கியுள்ளான் என்பதையும் எண்ணியபோது அவள் உள்ளம் நெகிழ்ந்தது. அவன்மீதுள்ள அன்பு எல்லையற்றுப் பெருகியது. இப்போது குவிந்துள்ள அவனது நீல விழிகளில் நாளை காலையில் மீண்டும் பிரகாசமும் குறும்பும் நிரம்பிவிடும். அவள் குனிந்து அவனுக்கு மென்மை மிகுந்த முத்தம் ஒன்றை அளித்தாள். அருகாமையில் இடைவிடாமல் கேட்டுக்கொண் டிருந்த சிள்வண்டுகளின் இனிய ரீங்கார ஒலியி னூடே அவளும் நித்திரை வசப்பட்டாள்.

அத்தியாயம் 12

மறுநாள் காலையில் குழுவினரைப் பத்திரமாக அங்கேயே இருக்கச் செய்துவிட்டு, ஃபான் புறப் பட்டான்; கொஞ்சம் உணவு கொண்டுவருவதற்காக ஸ்வாட்டையும் தன்னுடன் அழைத்துச் சென்முன். அந்தக் குழுவினர் தாங்கள் இருந்த இடத்திலிருந்து ஐம்பதடிக்குக் கீழே பாதை நெடுகிலும் யாராவது வருகிருர்களா என்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ள முடியும்; தேவைப்பட்டால், பிறர் பார்வை யிலிருந்து அவர்கள் சுலபமாகத் தப்பி காட்டிற்குள் நுழைந்துவிட முடியும்.

ஃபானும் ஸ்வாட்டும் திரும்பியபோது எல் லோரும் எழுந்து விட்டார்கள். அவர்கள் ஒரு பொட்டணம் சூடான பன் ரொட்டிகளும் வெங் காயம் தாளித்த பன்றி இறைச்சியும் ஒரு பெரிய பாண்டம் நிரம்பத் தேநீரும் கொணர்ந்தார்கள்; பாண்டத்துக்கு அவர்கள் உத்தரவாதப் பணம் கட்டவேண்டியிருந்தது.

காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு, எல்லோரும் கல கலப்பாக காணப்பட்டார்கள்; அன்றையப் பொழு தும் மந்தாரமின்றி தெளிவாக இருந்தது முக்கிய மான காரணமாகும். அவர்கள் ஃபானைப் பின்

தொடர்ந்தனர். அவர்களுக்கு அடி மட்டத்தில் அகன்றதொரு நீர்ப்படுகை இருந்தது; அப்பால், சுமார் ஐந்துமைல் தூரத்திற்கு தெற்கிலும் தென் கிழக்கிலும் மலைத் தொடரே காணப்பட்டது. அவர்களுக்கு வலது பக்கத்தில் தொலைவில் சுற்றிலும் தாவரங்களால் சூழப்பட்ட லுங்காங் அமைந்திருந்தது. பல முக்கியமான சாலைகளும் உபநதிகளும் அதை நோக்கிக் குறுகிச் சென்றன; அதற்கப்பால், கான்டன்—கௌலூன் இருப்புப் பாதை சென்றது; ஆனால் அது பார்வைக்குத் தென்படவில்லை.

அவர்களுக்குக் கீழே, காலைக் கதிரொளியில் லுங்காங் நீர்த்தேக்கம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. லுங்காங்கை விட்டு நேராகப் புறப்பட்ட ஓர் ஆறு பள்ளத்தாக்கில் பாய்ந்து அவர்களுக்கு முன்புறம் கிழக்கு நோக்கிச் சென்றது.

"அதோ, மலைகள் இருக்கின்றன. தென்கிழக்கில் மலையடிவாரத்தில் உள்ள சிறுநகரம் தான் பிங்ஷான்" என்று விளக்கினான் ஃபான்.

மேகக் கூட்டம் ஒன்று போல நட்மலைச் சிகரங்களை அவர்களின் பார்வையிலிருந்து மறைத்தது.

"இனி நடை கொஞ்சம் கடினமானதாகவே இருக்கப் போகிறது" என்று குறிப்பிட்டான் ஃபான். அவன் மனம் சரியாக இல்லை. அவன் தொடர்பு கொள்ள விரும்பிய அந்த ஆள் வீட்டில் இல்லை. அவர்களின் வருகை பற்றி அந்த ஆளுக்கு அறிவிக்க அவனுக்கு நேரமில்லாமல் போய்விட்டது. இன்னும் ஒன்றிரண்டு நாட்களுக்கு அவன் திரும்பமாட்டா

னென்று அவன் மனைவி ஃபானிடம் சொன்னாள். ஆண்கள், பெண்கள், பையன், அயல் நாட்டவன் ஒருவன் ஆகியோர் அடங்கிய இந்தக் கூட்டத்தினர் எங்ஙனம் வயல்களை இரவு நேரத்தில் கடக்கமுடியும்? கிராமங்கள், ஓர் ஆறு, நெடுஞ்சாலை ஆகியவற்றைக் கடந்தாக வேண்டும். பிங்ஷான் இங்கிருந்து பத்து அல்லது பன்னிரண்டு மைல் தூரமாவது இருக்கும். அங்கே கிராமத்து நாய்கள் இருக்கும்; அல்லது ராணுவ வீரர்கள் இருப்பார்கள். ஆகவே நகரங்களையும் முக்கியமான சாலைகளையும் அவர்கள் ஒதுக்கி விட வேண்டியிருந்தது. தங்கள் வருகையைப் பொருட்படுத்தாத வகையில், பிறர் கவனத்திலிருந்து அவர்கள் எவ்விதம் தப்ப முடியும்?

பையனின் செருப்புக்களை ஃபான் கூர்ந்து நோக்கினான்; திருப்தியற்ற பெருமூச்சு விட்டான்.

"அவனுக்கு ஒரு ஜதை செருப்புகள் வேண்டும். இனி போகும் வழி கரடுமுரடாக இருக்கும்" என்றான் ஃபான்.

கிராமத்துக்குச் சென்று செருப்பு வாங்குவதாகக் கூறினாள் ஈஸு.

"நீ போக வேண்டாம். அவனை ஸ்வாட் அழைத்துப் போகட்டும். அவர்களை அவ்வளவு கவனமாக யாரும் பார்க்க மாட்டார்கள். அவளுக்குப் பாதை தெரியும். சுமார் ஒரு மைல்தான் இருக்கும். தோலாலான குறடுகள் கொண்ட செருப்பு கிடைப்பது துர்லபம்: நன்றாகத் தாங்கி உழைக்கக்கூடிய வலுவாக தைக்கப்பட்ட அடிப்பட்டைகள் கொண்ட செருப்புக்களை வாங்க வேண்டும். ஸ்வாட், உங்க

ளுக்கும் ஒரு ஜோடி நல்ல செருப்பு வேண்டும்! அப்படியே கடையில் தேநீர்ப் பாண்டத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, பணத்தைத் திரும்ப வாங்கி வாருங்கள்.''

பையனை அழைத்துக் கொண்டு ஸ்வாட் கீழே சென்றதும், குழுவினர் நிழலுக்கு வந்து தங்கினர்.

இரண்டு ஜோடி செருப்பு வாங்குவதற்காக ஸ்வாட்டும் பையனும் ஒரே ஒரு வீதி கொண்ட அந்த ஊரில் அரைமணி அலைந்தனர். புதுச் செருப்புடன் கடையினின்றும் ஆனந்தமாகக் குதித்தான் குட்டி ஸ்ப்ரௌட். ஸ்வாட் தன் கண்ணீரை மௌனமாகத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

''என்ன சங்கதி? நீங்கள் ஏன் அழுகிறீர்கள், ஸ்வாட்?''

அவள் வாய்விட்டு அழுது விட்டாள். கண்ணீரைத் துடைக்கத் துடைக்க அது மேன்மேலும் குமுறிப் பொங்கி அவள் முகத்தில் வழிந்தோடியது. பரிதாபமாக ஆற்றுவாரின்றித் தேம்பி அழுதாள்.

''நீங்கள் எதற்காக அழுகிறீர்கள்?'' என்று பையன் திரும்பவும் கேட்டான்.

அவள் தன் அங்கியின் கைப் பாகத்தினால் கண்ணீரை வழித்துவிட்டாள்; நடக்கத் தொடங்கினாள்; சிறுவனைப் பிடித்துக்கொள்ள கையை நீட்டினாள் அவள்.

''ஜாக்கிரதையாக இரு. நாம் இப்போது திரும்பிச் செல்லவேண்டும்.''

அவள் கையைக் கெட்டியாகப் பற்றி அழுத்திக் கொண்டாள்; ஆயினும் அவளை அறியாமல் அழுகை

யினல் மீண்டும் அவள் மூக்கை உறிஞ்சிக் கொண்டிருந்தாள்.

"டேய்! சின்ன கண்ணு! உன் வயதில் எனக்கொரு கண்ணன மகன் இருந்தானடா! அந்தச் செருப்பு ஜோடியை நான் கையிலெடுத்தபொழுது.... அட கடவுளே! நான் என்ன பாவம் செய்தேன்....?" அவள் மீண்டும் பலமாக அழுது கொண்டிருந்தாள்.

சாலையின் நடுவில் அழுது கொண்டிருந்த ஒரு பெண்மணியின் துயரம் சிறு கும்பலைக் கூட்டியது. போலீஸ்காரன் ஒருவன் கால்களை நீட்டிவைத்து நடந்து வந்து, நிதானத்துடன், "என்ன நேர்ந்தது?" என்று கேட்டான்,

"ஒன்றுமில்லை," என்றாள் அவள்.

"எங்கிருந்து வருகிறாய்?"

"போக்லோவிலிருந்து."

"அப்படியா?........எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்? என்ன நடந்தது?"

"போக்லோவில் என் குடும்பம் முழுவதையும் இழந்துவிட்டேன். பிங்ஷானிலுள்ள என் உறவினர்களைப் பார்ப்பதற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். நான் நல்லபடியாகவே இருக்கிறேன், ஐயா."

காவல் படையினன் அலட்சியத்துடன் தோள்களைக் குலுக்கிக்கொண்டு போய்விட்டான். கூடி நின்று அனுதாபத்தோடு வேடிக்கை பார்த்த சிறு கும்பல் அவர்களுக்கு வழி விட்டது.

"போக்லோவில் எத்தகைய பயங்கரம் நடந்திருக்கிறது! சென்ற இரு தினங்களிலே பல அகதிகள்

வந்திருக்கின்றனர்,'' என்று யாரோ ஒருவன் சொன்ஞன். இது அவள் காதில் விழுந்தது.

தன் கிராமத்தார்கள் சிலரை அநேகமாக தான் சந்திக்க முடியும் என்றும், தன் கணவனைப்பற்றி அவர்கள் மூலம் தகவல் கிட்டுமென்றும், அநேகமாக சாங்ப்பூ அகதிகளுக்கிடையே உயிரோடு இருக்க வேண்டுமென்றும் எண்ணமிட்டவளாக, ஸ்வாட் சிறுவனுடன் நடந்தாள். அவன் உயிரோடிருந்தால் அல்லது கைதுசெய்யப்பட்டிருக்காவிட்டால், அவன் கட்டாயம் இவ்வழியே வருவான்!

திரும்ப மனமில்லாமல் வெய்ச்சோவிலிருந்து வரும் சாலையிலுள்ள ஒரு பாலத்தில் இளைய ஸ்ப்ரௌட்டுடன் அவள் நின்ருள். தூரத்தில் ஒரு பஸ் வந்துகொண்டிருந்தது.

''நாம் இவ்விடத்தில் சற்றே தங்குவோம்.''

பஸ், கறுப்பு மனிதர்களின் கூட்டத்தை அடைத்துக்கொண்டு, பாலத்தில் மெதுவாகச் சென்று, பிறகு அவர்களைக் கடந்து விரைந்து சென்றுவிட்டது.

பஸ்ஸின் பின்புறத்தில் தொற்றிக்கொண்டிருந்த ஒரு பையனின் உருவத்தை சிறுவன் ஸ்ப்ரௌட்டின் கூர்மையான பார்வை கண்டு பிடித்துவிட்டது,

''அசாய்! அசாய்!'' என்று சிறுவன் ஸ்ப்ரௌட் கூச்சல் போட்டான்.

அசாய் தலையைத் திருப்பினுன். தன்னுடைய சிறிய கைகளை அசைத்த வண்ணம் சிறுவன் ஸ்ப்ரௌட் அவனை நோக்கி வெறிப்பிடித்தவன் போல் ஓடிக்கொண்டிருந்தான்.

அசாய் கீழே குதித்து சமாளித்துக் கொண்டு தன் தோழனை நோக்கி ஓடிவந்தான். மகிழ்ச்சியால் அவர்கள் இருவரும் ஆரத்தழுவிக் கொண்டனர்,

"லெய்வா எங்கே''''

"இருக்கிருள், நான் காண்பிக்கிறேன் வா. நீ எப்படித் தப்பித்தாய்?"

"எப்படியோ தப்பிவிட்டேன், இல்லையா?"

பஸ் நிற்கப் போகிறதென்று நினைத்து, ஸ்வாட் முன்னமேயே அதை நோக்கி ஓடிவிட்டாள்.

"ஸ்வாட்! ஸ்வாட்!" என்று ஸ்ப்ரௌட் அவளைக் கூப்பிட்டான். ஆனல், அ வ ன் அழைத்தது அவளுக்குக் கேட்கவில்லை. "சரி; நாம் அவள் வரும் வரை காத்திருப்போம்" என்முன் சிறுவன்.

"உன்னுடன் இருந்த அந்த அம்மாள் யார்?"

"ஸ்வாட். அவளும் எங்களோடு வந்து கொண்டிருக்கிருள். இதோ பார், இந்தப் புதிய செருப்புக்களை நான் வாங்கினேன்:"

"சரி லெய்வா எங்கே?" என்று மீண்டும் அசாய் கேட்டான்.

"அதோ மேலே....கொஞ்ச தூரம்தான் இருக்கிறது."

"அந்த அம்மாள் எதற்காக பஸ்ஸைத் துரத்திக் கொண்டு ஓடுகிருள்?"

"போக்லோவைச் சேர்ந்தவர்களை அவள் தேடிக் கொண்டிருக்கிருள்" என்முன் சிறுவன் ஸ்ப்ரௌட்.

ஸ்வாட் பஸ்ஸைப் பிடித்துவிட்டாள்; நான்கு அல்லது ஐந்து பிரயாணிகள் இறங்கியதை அவள் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்கு

ஒருவரையும் தெரியவில்லை. முரண்டுபிடித்து அவள் பஸ்ஸில் ஏறிக்கொண்டு "சாங்ஷீபூ!....சாங்ஷீபூ! என்று கத்தினுள். பதில் இல்லை; அங்குள்ள யாரையும் அவள் அறியவில்லை. அவளை பலவந்தமாக இறக்கி விட்டு லுங்காங் நோக்கி பஸ் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தது.

மன ஆறுதலின்றி கால்கள் தள்ளாட ஸ்வாட் பாலத்தை நோக்கி மெள்ளத் திரும்பினுள். பையன்களோடு சேர்ந்தபொழுது லேசாக மூச்சுத் திணறியது.

"நாம் போகலாமா?" என்றுன் அசாய்.

"நீங்கள் முன்னுல் செல்லுங்கள்" என்று பதில் சொன்னுள் ஸ்வாட்.

"குட்டி ஸ்ப்ரௌட் உனக்குப் பாதை தெரியும். நான் உனக்குப் பின்னுல் வருகிறேன்." என்றுள்.

சிறுவன் ஸ்ப்ரௌட்டின் வருகைக்காக டுவானும் ஈஸுவும் கவனமாக வழிபார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்போது இரு சிறுவர்கள் தூரத்தில் ஓடி வருவதை அவர்கள் கண்டுகொண்டனர். சந்தேகமே இல்லை, அவர்களில் ஒருவன் ஸ்ப்ரௌட்; மற்றவன் அசாய்தான். பையன்கள் வழி முழுவதும் சிரித்துக் கொண்டும் தாவிக்கொண்டும்,ஒன்று சேர்ந்து கூச்சல் போட்டுக்கொண்டும் வந்தனர். நல்ல வேளையாக, அக்கம் பக்கத்தில் யாருமில்லை.

ஸ்ப்ரௌட் பத்திரமாக திரும்பி வந்ததைக் கண்டு டுவானும் ஈஸுவும் மகிழ்ச்சியடைந்தனர்.

அசாய் எவ்வாறு அங்கே வந்திருந்தான்? அவனுக்கு எப்படித் தெரிந்தது? ஸ்வாட் எங்கே?

அவள் ஏன் அவர்களுடன் வரவில்லை? முந்தின இரவில் அசாய் எங்கே இருந்தான்? என்பன போன்ற கேள்வியும் பதிலும் எல்லோரையும் திணர அடித்தன.

நான் சீக்கிரமாகப் புறப்பட்டுவிட்டால் உங்களை நிச்சயம் கண்டுபிடித்துவிட முடியுமென்று எண்ணி இருந்தேன். நீங்கள் எல்லோரும் எங்கே போயிருக்கிறீர்கள் என்றுடெங்பிங் கேட்டுக்கொண்டிருந்தார். அவரிடம் எனக்கு ஒன்றும் தெரியாது, என்று சொல்லிவிட்டேன் என்ற விவரங்களை அவன் லெய்வாவிடம் சொன்னான்.

ஃபானின் முகத்தில் கவலை சூழ்ந்தது; "டெங்பிங் எங்கே இருக்கிறார்?" என்றான்.

"அவர் எங்களுடன் பஸ்ஸில் வந்தார்."

"அவர் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்?"

"எனக்குத் தெரியாது. பிங்ஷானுக்குப் போய்க் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன்."

ஃபான் முகத்தைச் சுளித்துக்கொண்டான்.

"அவர் லெய்வாவைப்பற்றி விசாரித்தது நிச்சயந்தானா?"

"நிச்சயம்தான். அவர் என்னைக் கேட்டார். ஆனால் நான் அவரிடம் சொல்லவில்லை."

ஃபானின் கவலையடைந்த தோற்றத்தைக் கண்டான் ஜேம்ஸ்.

"இங்கே வா, இப்படி உட்காரு!" என்று சொல்லி ஒரு பாறையைச் சுட்டினான் ஃபான். "ஆரம்பத்திலிருந்து நடந்ததை அவன்சொல்லட்டும்.

டெங்பிங்கை நீ எப்படிக் கண்டுபிடித்தாய் என்பதை எங்களுக்கு விவரமாகச் சொல், ஊம்!" என்ருன்.

கேள்வி கேட்பதற்கு வசதியாக பையனுக்கு முன்ஞல் சப்பணமிட்டுக் குந்திஞன் ஃபான்.

அசாய் கூற ஆரம்பித்தான்:

"நடுப்பகலுக்குப்பின் கொஞ்ச நேரம் கழித்து நான் சிறையிலிருந்து தப்பி வெளியேறினேன். நீங்கள் வீட்டில் இல்லை. நீங்கள் இரவு பஸ் மூலம் லுங்காங்குக்குப் புறப்படுவதாக லெய்வா என்னிடம் சொன்ஞள். பத்தரைமணி பஸ்.... சரிதானே?....நேரம் ஆகவில்லை. வீதிகளைச் சுற்றி அலைந்தேன்."

ஈஸுவின் பக்கம் திரும்பி,

"உங்களில் ஒருவர்கூட வீட்டில் இல்லை" என்ருன் அவன்.

"நாங்கள் பிற்பகலில் அந்நேரம் படகில் இருந் தோம்," என்று விளக்கிஞள் ஈஸு.

"அவனே தொடரட்டும்" என்று ஃபான் இடை மறித்தான்.

"நல்லது; நீங்கள் அங்கே போயிருந்தீர்களோ என்று மதப்பிரச்சாரசபை இல்லத்தை எட்டிப் பார்க்க எண்ணினேன். அங்கும் யாரும் இல்லை."

"மிஷன் இல்லத்துக்கு நீ எப்போது போஞய்?" என்று ஜேம்ஸ் கேட்டான்;

"சுமார் நாலரைக்கு!"

"உள்ளே சென்ருயா?"

"ஆம்; கதவு திறந்திருந்தது; சுற்றிப் பார்க்க உள்ளே சென்றேன்."

"யாராகிலும் அங்கு இருந்தார்களா?"

"ஊஹூம். சற்று நேரம் காத்திருந்தேன்; பிறகு கிளம்பிவிட்டேன்."

"அப்புறம் நீ என்ன செய்தாய்?" என்று விசாரித்தான் ஃபான்.

"நான் ராணுவ வீரர்களுடன் பேசினேன். லெய்வா எனக்கு நிறைய பணம் கொடுத்திருந்தாள்; ஆகவே உணவு விடுதியில் திருப்தியாகச் சாப்பிட்டேன்; பஸ் நிலையத்துக்குப் போவதற்குரிய நேரத்துக்காகக் காத்திருந்தேன் நான். ஊரடங்குச் சட்டம்பற்றி எனக்குத் தெரியாது. அவர்கள் அனுமதிச் சீட்டு இல்லாமல் என்னை எந்த இடத்துக்கும் செல்ல அனுமதிக்கவில்லை. என்னுடைய உத்தியோகச் சின்னத்தைக் காட்டினேன்; ஆனால், அதனால் பலன் கிட்டவில்லை; நான் வெளியேற அவர்கள் அனுமதிக்கவில்லை; அவ்வளவு அவசரமாக லுங்காங் நீ ஏன் செல்ல வேண்டும்?" என்றும் அவர்கள் கேட்டார்கள். நான் நம்பிக்கை இழந்திருந்தேன், 'சரி....சரி' என்று சொல்லித் திரும்பிவிட்டேன்."

அவன் நடந்த கதையைச் சொல்லிக் கொண்டிருந்த விதம் அவன் அதை மிகவும் ரசித்தான் என்பதைக் காட்டியது.

"அப்புறம் என்ன நடந்தது?" என்று கேள்வி கேட்டான் ஃபான்.

"என்ன நடந்தது?....எனக்குப் போவதற்கு வேறு இடமில்லை, என் சொந்த ஊருக்கும் திரும்பிச் செல்ல நான் விரும்பவில்லை. ஆகவே நீங்கள் யாராவது திரும்பியிருக்கக் கூடுமென்று லெய்வாவின்

வீட்டுக்குச் சென்றேன். அங்கே இருந்தது யார் என்று நினைக்கிறீர்கள்? டெங்பிங் அவள் மெத்தையில் படுத்திருந்தார்! நான் நுழைந்ததைப் பார்த்தவுடன் முதலில் அவர் பயந்து விட்டதைப்போலத் தோன்றினார்; பிறகு அவர் கோபமடைந்தார். எடுத்த எடுப்பில் அவரை என்னால் அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை; ஏனென்றால் அவர் தன் மீசையை எடுத்துவிட்டிருந்தார்!"

"லெய்வா எங்கே?" என்று அவர் விசாரித்தார்.

"எனக்குத் தெரியாது; உங்களுக்குத் தெரியுமா? அவனைத்தான் கண்டு பிடிக்க முயன்று கொண்டிருக்கிறேன்" என்றேன்.

"அவனை இன்றைக்கு நீ பார்த்தாயா?" என்று அவர் கேட்டார்.

'இல்லை' என்று நான் சொன்னேன்.

"நான் இங்கே இருக்கிறேன் என்று யாரிடமும் சொல்லிவிடாதே!" என்றார் அவர்.

"ஏன்? நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று ஒருவருக்கும் தெரியக்கூடாதா?" என்றேன் நான்.

"என்னைப் பார்த்ததாக நீ யாரிடமும் சொல்லாதே" என்றார் டெங்பிங்.

"அவர் பயங்கரமாகக் கலவரம் அடைந்திருந்தார்" என்றான் அசாய்.

"ஏன் அப்படி என்று அவர் கூறினாரா? அவர் திகிலடைந்திருந்தாரா? என்று கேட்டான் ஃபான்.

"அவ்வாறு தான் அவர் தோன்றினார். நான் அங்கிருந்து கிளம்ப விழைந்தேன்; ஆனால் அவரோ

என்னைத் தங்கும்படி தூண்டினார். தன் போக்கை அவர் மாற்றிக்கொண்டு நான் சாப்பிட்டுவிட்டேனா வென்று அன்புடன் என்னை விசாரித்தார். சாப்பிட்ட தாகச் சொன்னேன் நான். அவர் கொஞ்சம் பணத்தை என் கையில் வைத்தழுத்தினார்; போய் நன்றாகச் சாப்பிடு; நினைவில் வைத்துக்கொள். நீ என்னைப் பார்த்ததாக மட்டும் யாரிடமும் சொல்லக் கூடாது!" என்றார்.

"நீ அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டாயா?"

"இல்லை. என்னிடம் நிரம்பப் பணம் இருப்ப தாகக் கூறி, நான் வைத்திருந்ததை அவரிடம் காட் டினேன். அவர் கண்கள் அகல விரிந்தன. 'எங்கி ருந்து உனக்குப் பணம் கிடைத்தது?' என்று வினவி னார். 'லெய்வா ஜெயிலில் எனக்குக் கொடுத்தாள்' என்றேன் நான். 'எப்போது?' என்று துருவினார். 'இன்று காலையில்' என்றேன் நான். 'என்னிடம் நீ பொய் பேசுகிறாய். இன்று நீ அவளைப் பார்க்க வில்லையென்று இப்பொழுதுதான் சொன்னாய். அவ் வளவு பணத்தை அவள் ஏன் உனக்குத் தந்தாள்?' என்று மேலும் கிண்டினார். 'ஒரு சமயம்....' என்று நான் சொன்னேன்.

ஒரு சமயம் என்ன? அவள் வெளியேறிப் போய் விட்டால் என்பதற்காகத்தானே? என்றார்.

'இல்லை; அவர்கள் என்னை வடக்கே அனுப்பும் பட்சத்தில் எனக்கு உதவியாகயிருக்கும் என்ற காரணத்திற்காக!' என்றேன் நான். நான் பொய் பேசு வதாகக் கூறி முன்னும் பின்னும் தப்படி போட்டு நடக்கலானார்.

பிறகு சட்டென்று திரும்பி 'சரி, அவள் இப்போது எங்கே?' என்று என்னைக் கேட்டார். வாஸ்தவமாகவே அவர் ஏதோ சந்தேகப்பட்டார். அப்போது ஒன்பது அல்லது பத்து மணி இருக்கும். ஆகவே அது சமயம் அவள் தன் வீட்டில் இருந்திருக்க வேண்டியவளே அல்லவா? அவர் சென்று அலமாரியைத் திறந்தபோது உங்கள் கோட் அங்கு காணப்படவில்லை!....'' என்று நிறுத்தினான் அசாய்.

எல்லாவற்றையும் ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தாள் வெய்வா. ''பிறகு என்ன நடந்தது?'' என்று விசாரித்தாள்.

''நான் வெளியேறிவிட விரும்பினேன். அவர் என்னுடன் இருப்பதை நான் விரும்பவில்லை; ஏனெனில் நான் உங்களோடு வரவேண்டியவன். ஊரடங்குச் சட்டம் அமலில் இருப்பதால் நான் புறப்படக் கூடாது என்பதாக அவர் தெரிவித்தார். அப்போது நான் அங்கிருந்து வெளியேறி என் அறைக்குத் திரும்பினேன்'' என்றான் அசாய்.

''அதுதானே கடைசி இரவு?....''

''ஆம். உங்களுக்கு ஒரு விஷயம் சொல்கிறேன்- அவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றே நான் கருதுகிறேன்! எல்லாவிதத்திலும் அவர் அப்படித்தான் தோன்றினார். அவர் பயங்கரமான முறையில் மனக்கிளர்ச்சி அடைந்திருந்தார். சதா தனக்குத்தானே பேசிக்கொண்டும், படுக்கையில் புரண்டுகொண்டும் மீண்டும் குதித்தபடி கண்ணாடியில் தன்னைத்தானே மூர்க்கமாக முறைத்துப் பார்த்துக்கொண்டும், சிரித்துக்கொண்டும் இருந்தார். பார்க்

கச் சகிக்கவில்லை; எனவே நான் அங்கிருந்து கிளம்பி விட்டேன்!" என்றான் அசாய்.

"பஸ்ஸில் நீ அவரைப் பார்த்தாயா?"

"அவர் பயந்து போயிருந்தார். மிகுந்த கலவரத்தோடு அவர் பஸ்ஸில் ஏறினார்; கறுப்பு மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தார் அவர்."

"அவர் உன்னைப் பார்த்தாரா?"

அசாய் ஆனந்தமாக நிம்மதியுடன் சிரித்தான்.

"இல்லை. அவர் என்னைப் பார்த்திருந்தாலும், அவர் என்னோடு பேசுவதற்குத் துணிந்திருக்கமாட்டார். அவர் எங்கோ தப்பி ஓடிக்கொண்டிருந்தார்!"

தன் உதடுகளைச் சுற்றிலும் நாக்கை இழையவிட்ட வண்ணம், சப்பணமிட்டுக் குந்தியிருந்த நிலையிலிருந்து ஃபான் எழுந்தான். அவன் ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினான்; வல்லூறுகள் சில பறந்து கொண்டிருந்தன; "அதோ பாருங்கள். பறவைகள் உட்பட எல்லோருமே தெற்கு நோக்கித்தான் பறந்து கொண்டிருக்கிறார்கள்!" என்றான்.

ஸ்வாட் திரும்பி வந்தாள். போக்லோ ஆட்கள் சிலரைக் கண்டுபிடிக்க அவள் முயற்சி செய்து கொண்டிருந்தாள்.

அசாயின் கையைப் பற்றியவண்ணம், "நீ இப்போது பசியோடிருக்கிறாய். எனக்குத் தெரியும்" என்று கூறினாள் லெய்வா.

"இல்லை; எனக்குப் பசியில்லை. பணம் கொடுத்து சாப்பிட்டு விட்டேன்."

ஃபான் அவனை நெருங்கி வந்து, "அது சரி, டெங்பிங் லெய்வாவைத் தேடி வந்துகொண்டிருக்க வில்லையே?" என்று கேட்டான்.

"அவரும் நம்மைப்போல் தப்பி ஓடிக்கொண் டிருக்கிறார்."

"அவர் அப்படிச் சொன்னாரா என்ன?"

"இல்லை!" சுருக்கமாகக் கூறி நிறுத்திக்கொண் டான் பையன்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஃபானிடம் கேட்டாள் லெய்வா.

"எனக்குத் தெரியாது. யாரோ ஒருவன் பழியை தலைமீது போட்டுக்கொண்டு பலியாக வேண்டும். கலவரத்துக்கும் தீ வைத்தலுக்கும் ஆன குற்றச்சாட்டை யாராவது ஒருவன் ஏற்க வேண்டி யிருக்கிறது. டெங்பிங் எப்போதுமே அதிகார தோரணையுள்ளவராகஇருந்து வந்திருக்கிறார். ஏராள மான ஜனங்களை அவர் அவமதித்திருக்கிறார்; காவல் படையுடனும் ராணுவத்துடனும் அவர் அனுசரித் துப் போனதில்லை. கட்சி, வழக்கை விசாரணை செய்யும்போது, அவருக்கும் போலீஸ் கமிஷனருக்கும் இடையில் குற்றச் சாட்டுகளும் எதிர்க் குற்றச் சாட்டுகளும் உண்டாகப் போகின்றன. அவர் மன உறுதியை இழந்துவிட்டார். தன் நிலைக்காக அவர் போராட வேண்டுமென விரும்பியிருந்தால் அவர் நேராகக் கான்டனுக்குச் சென்றிருப்பார்! ஆபத்து மிகுந்த கட்டத்தில் அவர் தன் உத்தியோகத்தை கைவிட்ட காரியம் மெய்யாகவே அவர் நிலையை இரு மடங்கு மோசமாக்கிவிட்டது," என்று சொன்னான்.

கணப்பொழுது மௌனத்திற்குப் பிறகு "அவர் நம்மைத் தேடிக்கண்டுபிடிக்க எத்தனம் செய்யலாம். ஒரு வேளை அவர் எல்லைக்கு வர ஆயத்தம் செய்தால், அவரோடு நாம் ஒன்று சேர்ந்துவிடுவோம்," என்று ஃபான் தொடர்ந்தான்.

"அவர் இங்கு நம்மை தொடர்வதை நான் விரும்பவில்லை" என்ருள் லெய்வா.

"நானும் விரும்பமாட்டேன். எப்படியிருப்பினும் அவரோடு கணக்குத் தீர்த்துக்கொள்ளுவதற்கு என்னிடம் காரணம் இருக்கிறது!" என்று சொன்ஞன் ஃபான்.

"அவர் ஓர் அபாயகரமான, இரக்கமற்ற மனிதன்; மறந்துவிடாதீர்கள்," என்ருள் லெய்வா.

"அதையும் நான் அறிவேன்!"

அத்தியாயம் 13

ஆறுமணி ஆவதற்கு இன்னும் நேரம் இருந்தது இருட்டில் ஃபான் சிறுபயணம் போய்த்திரும்பினுன்; உடனடியாகப் புறப்படும்படி ஒவ்வொருவருக்கும் உத்தரவிட்டான். தன்னுடைய திட்டங்களை அவன் மாற்றிக்கொண்டிருந்தான்; சமவெளிகளை இரவில் கடந்து அவர்கள் அபாயத்துக்கு உள்ளாகக்கூடா தென்று முடிவு செய்தான். பள்ளத்தாக்கு பிரதேசம் ஜன நெருக்கமுள்ளது.

பிங்டிசியை நோக்கிச் சென்ற கப்பிப்பாதையில் அவர்கள் சிரமத்துடன் முன்னேறினுர்கள்.

நெடுஞ்சாலைப் பாலத்திலிருந்து சுமார் முப்பதடி தூரத்தில் ஒதுப்புறமாக அலறிச் செடிகளால் மறைக் கப் பட்டிருந்த படகொன்று தயாராக நின்றுகொண் டிருந்தது. லுங்காங்கைத் தாண்டி சிலிஷியாவுக்கு அவர்களை அழைத்துச் செல்வதற்கு படகுக்காரனேடு ஏற்பாடு செய்திருந்தான் ஃபான்; அங்கிருந்து அவர்கள் குன்றுகளை நோக்கி நடந்து செல்வார்கள், நடு இரவுக்கு முன்பே அவர்கள் போய்ச் சேர்ந்தால் வைகறைக்கு முன்னதாக மலைகளில் ஏறிச்செல்ல நான்கு அல்லது ஐந்து மணி நேரம் கிடைக்கும்.

ஆமை வேட்டைக்கு உபயோகப் படுத்தப்பட்ட படகு அது. படகுக் காரி தன் தலையைச் சுற்றிலும் இறுக்கமான கறுப்புச் சால்வையைத் தரித்திருந் தாள். இளம் பருவமுள்ள மகளோடும் மகனோடும், வயது முதிர்ந்த கணவனோடும் அவள் வசித்து வந்தாள். வெறுங்காலோடு அவர்கள் எல்லோரும் நடந்தார்கள். தங்களது குட்டையான முழுக்கால் சட்டைகளுக்குக் கீழே தெரியும்படி கெண்டைக்கால் களில் சேறு அப்பிக் கொண்டிருந்தது. இவர்கள் ஆமை கள் பிடிப்பதற்காக பின்புறமிருந்த கால்வாய்களிலும் சிறிய கடல்கழிகளிலும் குட்டைகளிலும் திரிந்து, பிடித்த ஆமைகளைச் சுத்தம் செய்து சந்தையில் விற்றார்கள். அவர்கள் தங்களது சொந்த பாஷை யையே பேசினார்கள்; ஹாங்காங்கிலுள்ள படகுக் காரர்கள் பேசும் டான்சியா மொழியை ஒத்திருந் தது. வம்ச பரம்பரையாக, வரிவிதிப்பிலிருந்து அவர்கள் விலக்களிக்கப்பட்டிருந்தனர். அரசாங்க ஆதிக்கத்தின் கரங்கள் இன்னமும் அவர்களை தீண்ட வில்லை. தங்கள் பரம்பரை வழக்கப்படி காற்றுகள், அலைகள் ஆகியவற்றின் தெய்வத்தை—மட்சூ தீவி லுள்ள மட்சூ தேவியை அவர்கள் தொழுதார்கள். ஆயினும் ஆமைகளை வேட்டையாடி விற்கும் அருவருப்பான தொழிலை மட்டும் அவர்கள் விட்டு விடவில்லை.

உயரமான வெள்ளைக்காரன் மற்றவர்களோடு படகுக்கு வந்தபோது, அங்கிருந்த பதினான்கு வயது டைய படகோட்டிப் பெண்ணின் கண்கள் அவனை வெறித்துப் பார்த்தன. அவள் வதனம் மஞ்சள்

கலந்த பழுப்பு நிறமாக இருந்தது. புதிய இளஞ் சிவப்பு நிறப்பூவொன்று அவள் தலையை அலங்கரித் தது. அயல் நாட்டினனுக்குத் தன் புன்னகையைக் காண்பிக்கச் சற்றும் துணியாமல் அவள் தன் வாயை பொத்திக்கொண்டாள்.

மேல் தளத்தில் ஆமை ஓடுகள் சிதறிக்கிடந்தன, புதிதாக பிடிக்கப்பட்ட ஆமைகள் பெரிய கூடையில் அடைக்கப்பட்டு படகில் கட்டப்பட்டு தண்ணீரில் விடப்பட்டிருந்தன. படகு செல்லும்போது அவை கூடையோடு இழுத்துச் செல்லப்படும். படகின் மையப்பகுதிக்கு மேலே மூங்கில் படல்களின் மீது கித்தான் துணியால் மூடுபோடப்பட்டிருந்தது. அந்தக் குடும்பத்தின் தூங்கும் இடமாக இது பயன் பட்டது.

"நாம் எல்லாரும் இதில் எப்படி அடைந்து கொள்ளப் போகிறோம்?" என்று ஜேம்ஸ் தயக்கத் தோடு கேட்டான்.

"நம்மால் முடியுமே!" என்று பதிலிறுத்தான் ஃபான்.

படகின் நடுப்பகுதியைச் சுறுசுறுப்பாகச் சுத்தம் செய்து ஈரத் துணியினால் துப்புரவாகத் துடைத்து கொண்டிருந்தார்கள் படகுக் குடும்பத்தினர்.

"நாங்கள் சீக்கிரம் தயாராகி விடுவோம்."

பிரயாணிகளுக்கு இடவசதிக்காக பிடித்த ஆமைகளில் சிலவற்றை சிற்றோடையில் வீசியெறிந் தார்கள். ஏனென்றால் சுலபமாக, ஓர் இரவில் இருபது யுவான் சம்பாதிக்கக்கூடிய வேறொரு சந்தர்ப்பம் அவர்களுக்கு இனிக் கிடைக்காதல்லவா!

அவைகள் அங்கேயே கிடக்கட்டும்; நாம் திரும்பியதும் அவைகளைச் சகதியிலிருந்து தேடிக் கண்டு பிடித்துக்கொள்ளலாம்."

சுத்தம் செய்யும் வேலை முடிந்தது; உட்பகுதியை மூடிவிட்டு, வளைவுப் பகுதியில் பெரிய வலைக்கண் கொண்ட கூடைகளைப் படகோட்டி வைத்தான். அவர்கள் வழியில் லுங்காங்கின் எல்லை ஓரமாகச் செல்லவேண்டும்; நகரத்திலிருந்துவீசும் வெளிச்சம் எதுவானாலும் அது கூடைகளின் மீதுதான் விழும்.

ஒருவர்பின் ஒருவராக அவர்கள் படகின் பாது காப்பான அடிப்பகுதிக்கு ஊர்ந்து சென்றார்கள். எல்லோரும் அமர்ந்து பின்புறமிருந்த சுற்றுவட்ட அடைப்பின் மீது அழகாகப் பின்னப்பட்ட மூங்கில் தட்டியொன்றை வைத்து மூடிவிட்டான் பட கோட்டி.

குழுவினர் ஒருவரோடொருவர் நெருக்கியடித் துக்கொண்டு ஒன்றாய் அமர்ந்தார்கள். முறைப் பிரகாரம் ஒருவர் மாற்றி ஒருவர் கால்களை நீட்டிக் கொள்ளலாமே தவிர, எல்லோரும் கால்களை நீட்டிக் கொண்டு அமர அங்கு போதுமான இடம் கிடை யாது. ஆனால் இடம் கதகதப்பாகவும் இருட்டாக வும் பாதுகாப்பாகவும் இருந்தது. ஃபான் எல்லோ ருக்கும் பன் ரொட்டிகளை நிறைய விநியோகம் செய் தான்; படகோட்டியின் மகளை அவர்களுக்காகத் தேநீர் தயாரிக்கும்படிச் சொன்னார்கள்.

படகோட்டி தன் குடும்பத்தாருடன் பேசிக் கொண்டிருந்தான்; வார்த்தைகள் அவர்களுக்குப் புரியவில்லை; படகு முன்னேக்கித் தள்ளாடியது;

ஒவ்வொரு தடவை தண்ணீரிலிருந்து துடுப்புகள் மேலெழுந்த போதும் ஒவ்வொரு தரமும் மூங்கில் தட்டிகள் 'கிறீச்கிறீச்' என்று சத்தத்தை உண்டாக்கியது. அத்துடன் படகோட்டி இளம் பெண்ணின் சிரிப்பும் கேட்டது.

தட்டியின் இடுக்குகளின் வழியாகவும் திறப்புகளின் மூலமாகவும் கரையில் தெரியும் விளக்குகளை அவர்கள் நன்கு பார்க்க முடிந்தது.

புதிய ஆமைகளின் வலுவான துர்நாற்றம் அவர்கள் மூக்கைத் தாக்கியது. ஈஸு ஒரு கைக்குட்டையின் மூலமாக மூச்சுவிட்டுக்கொண்டிருந்தாள். எங்கும் ஒரே புழுக்கமாக இருந்தது.

ஜேம்ஸ் சிகரெட் பற்றவைத்தான். ஒன்றை ஃபானிடமும் லெய்வாவிடமும் கொடுத்தான்.

"சுற்றிலும் புகையை விடுங்கள். இந்த இடத்தின் துர்நாற்றத்தை அகற்ற அது உதவும்" என்றாள் ஈஸு.

ஃபான் சிகரெட் கொளுத்தியபோது, அவனுடைய புன்னகை தவழும் முகத்தை அவள் கண்டாள்; ஆனால் வார்த்தை பேசவில்லை.

சிகரெட்டை ஒரு முறை இழுத்துப் புகைவிட்ட பிறகு, "சங்கடப்படாதீர்கள்; இதற்குப் பிறகு பெரும்பாலான நேரம் திறந்தவெளியிலேயே நீங்கள் தூங்கலாம்" என்றான் அவன்.

ஸ்வாட்டினாலும் துர்நாற்றத்தைத் தாங்க முடியவில்லை; அவள் வெளியே சென்று படகுக்காரக் குடும்பத்தோடு உட்கார்ந்து கொண்டாள்.

லெய்வாவை அடுத்து அமர்ந்திருந்த அசாய் பூரிப்புடன் புகையை மோப்பம் பிடித்தபடி, "ஆஹா! ரொம்பவும் சிறந்ததாக இருக்கிறது. நானும் சிகரெட் பிடிக்கிறேன்" என்றான்.

அவனுக்குக் கொடுக்காதீர்கள்: அவனுக்குப் பதினைந்து வயதுகூட ஆகவில்லை" என்று தடுத்தாள் லெய்வா.

வெளியேற வழியில்லாத நாற்றமும் ஆமை ரத்தத்தின் வாடையும் மூச்சைத் திணரவைக்க அவர்கள் இருட்டில் நெருக்கியடித்து அமர்ந்திருந்தனர். படகு நகரத்தைவிட்டு விலகி வேறு வழியில் சென்றதும், நல்ல காற்று உள்ளே வருவதற்காக, பின்புறமிருந்த தடுப்பை அப்புறப்படுத்திவிட முடிவு செய்தார்கள்.

இப்போது அவர்கள் குன்றுகளை நோக்கி நீரோடையின் உட் பகுதியில் போய்க் கொண்டிருந்தார்கள், படகு கொஞ்சம் சிரமத்துடன் சென்று கொண்டிருந்தது. படகின் இயக்கம் சிலரைத் தூங்க வைத்தது. மற்றவர்கள் மௌனமாக இருந்தனர்; ஒவ்வொருவரும் அவரவரது சொந்த விஷயங்களைப் பற்றிச் சிந்தித்த வண்ணம் இருந்தார்கள். லெய்வாவுக்கு அருகில் அமர்ந்திருந்த ஃபான், கசங்கிய காகிதத்தாள் ஒன்றை கைவிளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு கவனமாகப் படித்துக் கொண்டிருந்தான்.

"இதோ, இதுதான் நாம் பின்பற்றிக் கொண்டிருக்கும் மார்க்கம்," என்றான் அவன்.

ஜேம்ஸ் அதை எடுத்தான்; அதைக் கவனமாகப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக டார்ச் விளக்கை

வாங்கிக் கொண்டான். அது வழிகளைக் காட்டும் சிறுவரை படம்; பென்சிலால் வரையப்பட்டிருந்தது. ஹூவாங்ஹாகெங், பிலிங்சூன், சஞ்சொஙடின் போன்ற நிற்குமிடங்கள் மாத்திரம் கொடுக்கப்பட்டு பென்சிலால் குறிக்கப்பட்டிருந்தன; ஆனால் தூரங்கள் மட்டும் கிலோமீட்டர்களில் கச்சிதமாகக் குறிக்கப் பட்டிருந்தன.

"இவைதாம் மலைகளிலுள்ள காவல் நிலையங்களா?"

"ஆம். இரண்டு பஸ் நிறுத்தத்துக்கு நடுவில் டாகுலிங்கைச் சுற்றிக் கொண்டு நாம் செல்ல வேண்டும். சஞ்சொடினுக்குச் சரியாகக் கீழே ஆயுதம் தாங்கிய ரோந்துப்படையின் எல்லை ஆரம்பமாகின்றது."

"எல்லையில் அமைக்கப்பட்டுள்ள முள்வேலிக் கம்பிகளை நாம் எப்படிக் கடந்து செல்லப் போகிறோம்?"

"என் ஆட்கள் அங்கு தயாராக இருப்பார்கள்," என்று நம்பிக்கையளித்தான் ஃபான்.

படகு நின்றது; பின் புறத்தில் சலசலப்பு கேட்டது.

குப்புறப்படுத்து நகர்ந்து கொண்டே படகின் பின்பக்க முனைக்குச் சென்றான் ஜேம்ஸ்.

அப்போது இருண்டிருந்தது. சில விநாடிகளுக்கொருமுறை, மேகங்களில் புகுந்து வெளிவந்து கொண்டிருந்தான் சந்திரன். வெண்ணிற ஒளிப் புள்ளிகள் சிற்றலைகளினின்றும் விட்டு விட்டு மங்கலாகப் பிரகாசித்தன. நீரோடையின் மத்தியில் படகோட்டி நங்கூரம் பாய்ச்சியதால், நீரோட்டம்

தத்தளித்து சத்தத்துடன் படகின்மீது மோதி யடித்தது.

ஈஸுவும் வெளியே வந்து ஜேம்ஸின் பக்கத்தில் படுத்தாள்.

"படகு ஏன் நின்றுவிட்டது?"

"பிங்ஷான் செல்லும் கடைசிப் பஸ் போகு மட்டும் நாம் இங்கேயே படுத்திருப்போமே!"

ஃபான் தலையை வெளியேவிட்டு, கண்களைத் துறுவிப் பார்த்தான், பிங்ஷான் செல்லும் நெடுஞ் சாலைதான் என்பதை அவனால் கணிக்க முடிந்தது. அவர்களுக்கு இடதுபுறத்தில், இரண்டு அல்லது மூன்று மைல் தொலைவில் விளக்குகள் தெரிந்தன.

"அதோ, அதுதான் பிங்ஷான். அதை நோக் கித்தான் நாம் சென்று கொண்டிருக்கிறோம்" என்று சொன்னான் அவன்.

படகுப் பெண் மண் அடுப்பை நகர்த்திவைத்துப் பற்றவைத்தாள்; பிறகு ஆற்றிலிருந்து எடுத்த நீரை, கெட்டிலில் நிரப்பி அடுப்பின்மீது வைத்தாள். அப் பொழுது பதினைந்து வயசுப் பையன் ஒருவன்—அவ ளுடைய அண்ணன்—புல்லாங்குழலை எடுத்து அபஸ் வரமாக ஏதோ பாட்டுக்களை வாசித்தான். பிறகு, சட்டையின் கைப்பகுதியால் வாயைத் துடைத்துக் கொண்டான்; பிறகு சிரமம் இல்லாமல் வாசிக்க சுலபமான மெல்லிசை ஒன்றை தொடங்கினான் அவன்.

"பையனைக் குழல் வாசிக்க வேண்டாமென்று சொல்ல தோன்றவில்லையா உங்களுக்கு?" என்றாள் ஈஸு.

"அவன் வாசிக்கட்டும். அதனால் நமது பாதுகாப்புக்குப் பங்கம் வந்துவிடாது"

தேநீர்ப் பாண்டத்தையும் கோப்பைகளையும் அந்தப் பெண் சுத்தம் செய்து கொண்டிருந்தாள்; தண்ணீர் கொதிப்பதற்காகக் காத்திருந்தாள். அவளது சிறிய, வட்டமான, புன்னகை பூத்த முகத்திற்கு நெருப்பு ஒளியூட்டியது.

ஒரு சிறிய மரக்கோயிலுக்கு முன்னால் மரத் தீப் பந்தங்கள் எரிந்து கொண்டிருந்ததை ஈஸூ கவனித்தாள். அடிக்கடி வீசும் இளங் காற்றில் ஆற்று நீரில் மங்கிய சிவப்புப் பொறிகள் மின்னின.

"அதுதான் மட்சூதேவியின் கோயில்" என்று ஜேம்ஸிடம் சொன்னாள் ஈஸூ. "காற்று அலை ஆகியவற்றின் தெய்வம் அவள்!....எல்லாப் படகோட்டிகளும் அவளை வணங்குகின்றனர்," என்று மேலும் சொன்னாள். "படகோட்டி தேநீருக்குக் காத்திருந்தான்!"

"எங்களுக்கும் கொஞ்சம் தேநீர் கிடைக்குமா!" என்று கேட்டாள் ஈஸூ.

"உங்களுக்குத் தேவையான உயர்ந்தரக தேயிலை எங்களிடம் இல்லை. நாங்கள் குடிக்கும் தேநீர் காட்டமாக இருக்கும். ஆனால் நீங்கள் இரவு பூராவும் நடப்பதாக யிருந்தால் இந்த தேநீர் உங்களுக்கு நல்லது!"

படகோட்டி சாவகாசமாக அமர்ந்து அமைதியாக புகைக் குழாயை உறிஞ்சிக்கொண்டிருந்ததை ஜேம்ஸ் கவனித்தான், படகின் பின்புறத்தில் அடைந்து கிடந்த ஆமை வேட்டையாடும் இந்த

ஆனந்தமான படகுக் குடும்பத்தினரின் எளிய வாழ்க்கைக் காட்சியை மனக்கண் கொண்டு நோக்கி சிந்தித்துக் கொண்டிருந்தான் ஜேம்ஸ்.

"நீங்கள் வாழும் முறை இதுதானா? இரவில் இந் நேரத்தில் தேநீர் அருந்துகிறீர்களே?" அவனால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

"ஆமாம்! வேலை பார்ப்பதற்கு இராக்காலம் தான் சாலச் சிறந்தது. அதுவும் முக்கியமாக நிலாக் காலம் மிகச் சிறந்தது. இல்லையேல், நாங்கள் கரைகளில் விளக்குகளைப் பிடித்துக் கொண்டு நிற்க வேண்டும். ஆமைகள் அவைகளை உற்றுப் பார்க்கும். அவற்றால் எங்களைப் பார்க்க முடியாது; ஆனால் நாங்கள் அவற்றைப் பார்க்கக்கூடும். அவ்வளவுதான் அவற்றைத் தண்ணீரிலிருந்து வலையோடு இழுத்து வெளியே போட்டுவிடுவோம்!"

யோசனை ஒன்று ஜேம்ஸுக்குத் தோன்றிற்று. ஈஸுவின் பக்கம் நெருக்கமாகச் சாய்ந்து, "ஆமை சூப் வேண்டுமா?" என்றான்.

"ஆமை சூப்பா?" என்று முணுமுணுத்தாள் ஈஸு.

"ஆமாம்; ஆமை சூப்!"

ஈஸு தலையைத் தூக்கினாள்; படகுக்காரனிடம், "எங்களுக்கு ஆமை சூப் தயார் செய்து கொடுக்க முடியுமா?" என்று கேட்டான்.

"நிச்சயமாகச் செய்து கொடுக்கிறேன். இம் மாதிரி புதிதாகப் பிடித்த ஆமைகள் சந்தையில் கிடைக்காது."

"எங்கள் எல்லோருக்கும் கிடைக்குமல்லவா?"

"கூடையில் அபரிமிதமாக இருக்கிறது; தண்ணீரிலும் நிறைய வைத்திருக்கிறேம்."

"நமக்கு நேரம் இருக்குமா?"

"ஏன் இல்லே? அவைகளை வெட்டி, கொதிக்க வைக்க வேண்டும்; கொஞ்சம் உப்பு சேர்க்க வேண்டும். அவ்வளவுதான். ஆனுல் ஒரு சுற்று எல்லோருக்கும் வரும்படியாக எங்களிடம் கிண்ணங்கள்தான் இல்லே,"

படகுக்காரி சுறுசுறுப்பாகச் செயற்படத் தொடங்கினுள்; வெங்காயங்களை அரிந்தாள் அவள்.

ஆமை சூப் தயாரிப்பு. அவர்களது பிரயாண திட்டத்தில் இல்லே. அங்கு நான்கு கிண்ணங்கள் மட்டிலுமே இருந்தன; நகரத்து ஆட்கள் நாசூக்கானவர்கள் என்பதைப் படகுக்காரி கருத்தில் கொண்டிருந்தாள்; ஆகவே, பரிமாறுவதற்கு முன் கிண்ணங்களே அவற்றை ஆற்றுநீரில் சுத்தமாகக் கழுவினுள் அவள்.

சூப் அருந்தியதும் எல்லோரும் சற்று உற்சாகமடைந்தனர். ஒவ்வொருவரது கண்களும் பிரகாசம் அடைந்தன. இவ்வளவு ருசிகரமான ஆமைசூப்பை ஹாங்காங்கில் கூட தான் அருந்தியதில்லே யென்று ஜேம்ஸ் பாராட்டினுன்,

வெள்ளேக்காரன் கான்டன் பேசும் கொச்சை மொழியைக் கேட்டு அவனே நோக்கிக் கேலிச்சிரிப்புச் சிரித்துக் கொண்டிருந்தாள் படகுப் பெண்.

"உங்கள் குடும்பம் அழகாக இருக்கிறது. ஒவ்வொரு இரவிலும் உங்களுக்குத் தேநீரும், ஆமை சூப்பும், நிலவொளியும் குழலிசையும் கிடைக்கின்

றனவே! அது ஆனந்த மல்லவா!" என்ருன் ஜேம்ஸ், படகுக்காரனிடம்.

அப்போது தாங்கள் இருந்த பயங்கரமான சூழ் நிலையையே அவர்கள் மறந்தனர்.

ஜேம்ஸ் ஹாங்காங் நாணயத்தைக் கொஞ்சம் எடுத்து, அதை ஃபானின் கைகளில் திணித்தான்,

" இதை அவரிடம் கொடுங்கள். படகுக்கு நாம் கொடுக்க வேண்டும்."

"அதை எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். நாம் தப்பிச் சென்றதற்கான அடையாளங்கள் தெரியும்படி நடந்து கொள்ளக்கூடாது."

"ஹாங்காங்கு சென்ற பிறகு உங்களிடம் அதை வரவு செலவு செய்து கொள்கிறேன்."

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த தரு ணத்தில், பிங்ஹான் செல்லும் திசையில் சென்று கொண்டிருந்த ஒரு பஸ்ஸின் முகப்பு விளக்குகளைக் கண்டனர்."

சில நிமிஷங்கள் கழிந்ததும், படகோட்டி நங்கூ ரத்தை எடுத்துவிட்டு' மீண்டும் புறப்பட்டான். இப்போது பள்ளத்தாக்கில் நிலவு நன்குவந்திருந்தது. நடுச்சாமம் கடந்துவிட்டது.

நெடுஞ்சாலைக்கு அருகே வந்ததும் குழுவினர் படகோட்டியின் குடும்பத்தாருக்கு நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டார்கள்.

குன்றுகளை நோக்கி அவர்களை மௌனமாக அழைத்துச் சென்ருன் ஃபான். நெடுஞ்சாலையைக் கடந்த பின், கூழாங்கல் தடம் படிப்படியாக பாறை மண்டிய தரையாக ஆனது. ஆனல் அவர்கள்

தாழ்ந்த குன்றை வளைத்துக்கொண்டு கிழக்கில் சென்றபோது பாதை சுலபமாக அமைந்திருந்தது.

தேய்ந்த தடத்தை அடைவதற்கு அவர்களுக்கு இரண்டு மணி நேரத்துக்குக் கூடுதலாக ஆயிற்று. கோஷ்டியினர் பிரிந்து இளைப்பாற தரையில் அமர்ந்தனர். ஜேம்ஸ் தன் கைக் கடியாரத்தைக் கவனித்தான். மணி இரண்டே முக்கால்.

அவர்களுக்கு இடது பக்கத்தில் மலையினின்றும் சரிந்த சிற்றருவியின் சலசலப்பொலி இரவில் இனிமையாக இருந்தது. மற்றப்படி தாழ்குரலில் பேசினுல்கூட இருபதடிக்கு அப்பால் கேட்கும் அளவுக்கு அவ்விடம் அமைதியாக இருந்தது.

"அது இன்னும் எவ்வளவு தூரம் இருக்கும்?" என்று ஃபானைக் கேட்டான் டூவான். அவனுக்கு மூச்சுத் திணறியது.

"உண்மையாக அதிகத் தூரமில்லை. கிட்டத் தட்ட ஒரு மைல் இருக்கும். ஆனல் பாதை நெடுகிலும் செங்குத்தாக இருக்கிறது. நமக்கு ஒரு மணி நேரம் பிடிக்கலாம்."

"நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிருேமென்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?"

"ஹுவோங்ஷாகெங்கில் எனக்கொரு நண்பர் இருக்கிருர். எங்கள் ஆட்களிலே அவரும் ஒருவர். அங்கு போய்விட்டால் நமக்கு பாதுகாப்பாக இருக்கும்;"

பாறைப் பாதையில் வயதான டூவானுக்கு ஜேம்ஸ் உதவ வேண்டி இருந்தது. சிறுவன் ஸ்ப்ரௌட்டைக் கவனித்துக் கொண்டாள் ஈஸு.

அசாயோடு முன்னால் நடந்து கொண்டிருந்த ஸ்வாட் மூட்டைகளைச் சுமந்தாள். அவர்கள் ஒரு சிறிய வாய்க்காலைப் பின் தொடர்ந்தார்கள்; பின்னர், கூர்மையாக மேலே சென்ற அடிச்சுவட்டுப் பாதையைக் கண்டு பிடித்தார்கள். பாதை சரிவாகவும் பிடிப்பில்லாமலும் இருந்ததால் தொத்தித் தொத்தி ஏறிச் செல்லுவதில் பயணம் தாமதமாகவும் சிரமமாகவும் இருந்தது. மேலே சென்று அவர்கள் வளைவில் திரும்பியபோது, தூரத்திலிருந்த நீர் வீழ்ச்சியின் சத்தத்தைக் கேட்டனர்.

பிறகு பாதை சமதரையாக கொஞ்ச தூரம் வரை இருந்தது; ஈஸாவும் அவள் தந்தையும் சில வினாடிகள் ஓய்வு பெற்றனர்; அசாயும் ஸ்வாட்டும் முன்னால் நிதானமாக முன்னேறிச் சென்று கொண்டிருந்ததை அவர்கள் கவனித்தார்கள். தன் உயிரைக் காப்பாற்ற அசாய் உதவியதை ஸ்வாட் தெரிந்து கொண்டாள்.

சிறுவன் ஸ்ப்ரௌட் உருவில் சிறியவனாக இருந்தாலும், மற்றவர்களுடன் சமாளித்து நடந்து வந்தான்.

"நாம் சுதந்திர நகரத்துக்குத் தானே போய்க் கொண்டிருக்கிறோம்?" என்று அவன் ஈஸாவைக் கேட்டான்.

"ஆமாம்; அங்கேதான்."

"உங்களைப் போலவே அங்கே நிறைய ஆங்கிலேயர்கள் இருக்கிறார்களா?" என்று ஜேம்ஸிடம் கேட்க அவன் பின்பக்கம் திரும்பினான்

"என்னைப்போல் என்றால் நீ மனத்தில் கருதுவது என்ன?" என்று ஜேம்ஸ் இளநகையுடன் பதில் சொன்னான்.

"உங்களைப்போல் என்றால், உயரமாகவும் நீல நிறக் கண்களோடும் துப்பாக்கியைச் சுமந்துகொண்டும் இருப்பார்கள் என்று கருதுகிறேன்."

"நாங்கள் எப்போதும் துப்பாக்கிகளைத் தூக்கிச் செல்வதில்லை. ஆங்கில சினிமா படங்களைப் பார்த்து விட்டு உனக்கு இம்மாதிரி தோன்றுகிறது. வீட்டில் நாங்கள் துப்பாக்கிகளைச் சுமக்கமாட்டோம். துப்பாக்கி வைத்துக்கொள்ளஅனுமதிச் சீட்டு பெற வேண்டும்."

"உங்களைப் போலத்தானே அவர்களிடமும் மணம் வீசும்?"

அவன் பேச்சை நிறுத்த முயன்றாள் ஈஸா.

அப்போது தூரத்திலிருந்து ஓநாயின் ஊளைச் சத்தம் கேட்டது. பையன் காலோடு தலை நடுங்கிக் கொண்டிருந்ததை ஈஸா உணர்ந்தாள். பிறகு சிறிது நேரம் ஒரே அமைதி; மீண்டும் சில விநாடிகள் கழித்து அந்தப் பயங்கரமான புதிய ஒலி மீண்டும் கேட்டது. அது அவர்களுக்கு மேலே எங்கோ ஓர் இடத்திலிருந்து கேட்டது. எங்கிருந்து வருகிறதென்று எளிதில் புரிந்துகொள்ள முடியாதபடி சத்தம் வந்து கொண்டிருந்தது.

அவர்கள் மேலே பார்த்தார்கள். நேர் எதிரே ஐம்பது கஜம் தள்ளி செங்குத்தாகப் பாறை ஒன்று இருந்தது. அதன் சிவந்த பழுப்பு நிற விளிம்புகளில் இருண்ட துவாரங்கள் இருந்தன; அவை நிலவு

வெளிச்சத்தில் துல்லியமாய்த் தெரிந்தன. உயரத்தில் ஆகாயத்திற்கு எல்லை காட்டிய வண்ணம் ஊசி இலை மர வகைகள் நின்றன. சந்திரன் மேற்கு நோக்கிச் சரியத் தொடங்கியது.

பின்னால் லெய்வாவுடன் வந்து கொண்டிருந்த ஃபானுக்காக அவர்கள் காத்திருந்தனர்.

"அது என்ன சத்தம்!"

"மலைகளிலே ஓநாய்களும் காட்டுப் பன்றிகளும் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். சந்திரனை நோக்கி ஓநாய் குரைத்துக் கொண்டிருப்பது மாதிரி அது கேட்கின்றது."

"அதோ பாருங்கள்" என்று கத்தினான் ஜேம்ஸ். செங்குத்துப் பாறையின் முனையைச் சுட்டிக்காட்டினான் அவன். ஒரு பிரயாணியின் தலையும் கழுத்தும் ஆகாயத்தை நோக்கி நீட்டிக்கொண்டிருக்கும் தெளிவானதொரு நிழலுருவத்தை அவர்கள் கண்டனர்.

ஃபான் சொன்னான்:—

"அது ஒரு ஓநாயாக இருக்கும். மனிதர்களின் நடமாட்டத்தின் காரணமாக அது பீதியடைந்திருக்கலாம். மோப்பத்தால் உணரும் அறிவு அவற்றுக்கு மிக அதிகமாக உண்டு என்பார்கள்!"

"மலைகளில் வேட்டைக்காரர்கள் இருக்கிறார்களா?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"எனக்குத் தெரியாது. காட்டுப் பன்றிகளைப் பிடிப்பதற்கு சில சமயங்களில் குடியானவர்கள் வலை விரிக்கிறார்கள். முக்கியமாக இங்கே டாசிலிங்கைச் சுற்றிலும்தான் அப்படி; கோலநட்டில் அவ்வளவு அதிகமில்லை!"

"நான் அதை அடிக்க முயற்சி செய்யப் போகிறேன்" என்று ஃபான் தனக்குள் கூறிக்கொண்டான்; பிறகு தன் உணவுக் கூடையிலிருந்து உலோகத்தாலான சிறு பெட்டி ஒன்றை எடுத்தான்; அதை அவன் திறந்தான்; கொஞ்சம் தூளை காற்றில் தூவினன்.

"அது என்ன?"

அவன் பதில் சொல்லவில்லை. தன் வேலையில் மனம் முனைந்திருந்தான்.

"அது மறுபடியும் கத்துமா?"

அவர்கள் மௌனத்தில் ஆழ்ந்து நின்றனர். அந்தத் தலை மறைந்துவிட்டது. பிறகு எந்தச் சத்தமும் கேட்கவில்லை.

"என்ன அது?" என்று விசாரித்தான் ஜேம்ஸ் மீண்டும்.

"இது வேலை செய்வதாகவே தோன்றுகிறது" என்றான் ஃபான்.

"சரி; அது என்ன?"

"புலி எரு! அந்த ஓநாய் அதை மோப்பம் பிடித்திருக்க வேண்டும்; அதனால்தான் தப்பி ஓடிவிட்டது"

"அது எதற்காக?"

"போலீஸ் நாய்களுக்காக! என் ஆட்கள் முயற்சி செய்து பார்த்துவிட்டார்கள். இதை மோப்பம் பிடித்தால் போலீஸ் நாய் அப்படியே ஓய்ந்துபோய் தரையில் படுத்துவிடுகிறது.

"என்னல் அதன் வாசனையை நுகர முடியவில்லையே!" என்றாள் ஈஸ்.

"உங்களால் முடியாது; ஆனால் பிராணிகளால் முடியும்! அதுதான் அவைகளது இயற்கையான பாதுகாப்பு!"

"இது புதியதாக இல்லை; நாள் பட்டதா" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"முற்றிலும் புதியது, இருப்பினும் நீண்ட காலத்துக்கு அதன் நெடிநீடிக்கும், லேசான ஈரப்பதமாக வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு புலி வாலை விலா எலும்புக்கும் தொடைக்கும் இடைப்பட்ட பகுதியை நோக்கி வெட்டினால் அந்த வால் இம் மாதிரியே வேலை செய்யுமென்று எனக்குச் சொன்னார்கள்."

"ஆம்; முதலில் புலிச்சாணத்தை ஓநாய் நுகரும் படிச் செய்துவிடுங்கள்; அதன் ஈரல் சுரப்பியிலிருந்து ஒரு திரவம் கொப்புளிக்கும்; அது அச்சத்தால் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிடுகிறது. பிறகு நீங்கள் அதைப் பிடியுங்கள்; சாதுவாகும் மருந்தை ஊசி மூலம் உள்ளே செலுத்துங்கள்; பிறகு ஓநாயும் ஆட்டுக்குட்டியும் சிநேகிதர்கள் போல விளையாடுகின்றன."

அவர்கள் ஹூவாங்ஷாகெங்கை அடைந்த போது வைகறைக்கு வானம் மங்கிச் சாம்பல் நிறமாக இருந்தது.

அத்தியாயம் 14

பாகுலிங்கின் சிகரம் செம்பவழ வண்ணத்தோடு தூரத்தில் தெரிந்தது. பாறைகளினின்று சமவெளியாகவே காணப்பட்டது. உலர்ந்த பழுப்பு நிறப்புல் அதன்மீது லேசாக மூடிக் கிடந்தது. சிகரத்துக்கு அடியில் இருநூறு அடி கீழே ஊசி இலை மரம்; தேவதாரு மரம் போன்ற பலவகை மரங்கள் நிறைந்த காடு இருந்தது. பெரிய சிகரத்தைச் சுற்றிலும் கூட்டமாக இருந்த சிறிய முடிகளின்மீது அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த மரங்களின் உச்சிகள் வானத்தின் எல்லையைக் கோடிட்டன. அக்காட்டு நிலம் கிழக்கு நோக்கிக் கிடந்த அகண்ட இருண்ட பசுமையான நிலபரப்பினிடையே பரவியிருந்தது. மலை ஏறிகளின் குடிசைகள் அதன் மூலைகளில் இங்குமங்குமாக மறைந்தும் மறையாமலும் காணப்பட்டன; அவை விநோதமாக நிறம் மங்கி மூன்று அல்லது நான்கு குடிசைகளாகப் பரவியிருந்தன; 'பட்டிதொட்டி' என்று கூறலாம்.

அதைப்பற்றி யாரும் அதிகமாக அறியமாட்டார்கள்; மக்கள் அபூர்வமாகத்தான் அப்பகுதி வழியாக பிரயாணம் செய்தார்கள். ஏனென்றால் மிர்ஸ் விரிகுடாவுக்குச் செல்லும் வழியில் அமைந்

திருந்த அம்மலைகளின் எல்லையில்தான் பொதுவாக கிராமச் சாலைகள் சென்றன. கண்ணி வைத்து மிருகங்களைப் பிடிப்பவர் சிலர் காட்டுப் பன்றிகள், மான்வகைகள், முயல்கள் ஆகியவைகளை வேட்டையாடி இங்கே வாழ்ந்து வந்தார்கள்.

பிங்ஷான் நகரத்தை நோக்கி மூன்று, நான்கு மைல் நீளத்துக்கு ஓடிய ஹுவாங்ஷா ஓடையின் தலைப்பில் இருந்த கிராமங்களிலே ஹுவாங்ஷா கெங்கும் ஒன்று.

விஸ்தாரமான இந்த மலைப்பகுதியை ஒட்டி பாஓ—ஆன் மாவட்ட எல்லையென வரையறுக்கப் பட்ட கற்பனைக் கோடொன்று ஓடியது; அதன் காரணமாக, நீதியினின்றும் தப்பி ஓடியவர்களுக்கு அது ஒரு வசதியான புகலிடமாகப் பயன் பட்டது.

ஆயினும், கடந்த சில ஆண்டுகளில் எண்ணற்ற பிரயாணிகள் அதை கடந்து சென்றனர். ஹுவாங் ஷாகெங்கிலும் பிலிங்சூனிலும் வசித்தவர்கள் சிலர் பாஓ—ஆன் மாவட்டத்தின் 'எல்லைவாசி'களாக அடையாளச் சீட்டுப் பெறும் சலுகை கொண்டிருந் தார்கள். அத்தகைய அனுமதிச் சீட்டுடன் ஒருவன் எல்லை நெடுகிலும் சுதந்திரமாகப்பிரயாணம் செய்ய வும், குடியானவர்கள் விளைவுப் பொருள்களை பிரிட் டிஷ் பகுதிக்குள் கொண்டு செல்லவும் உரிமை அளித்தது.

இப்பகுதியில் வசித்தவர்கள் சிலர், சட்டப் படியும், சட்டவிரோதமான வர்த்தகத்தின் மூலமும் அதிக அளவு பணம் சம்பாதித்தார்கள்.

சைசாமின் குடிசை குறுகலான நீரோடையின் கரையில் இருந்தது, ஃபான் ஒருபோதும் இவ்வளவு தூரம்வரை வந்ததில்லை. அவனது விவகாரங்கள் யாவும் வழக்கமாக பிங்ஷானிலேயே முடிந்துவிடும். இந்தத் தடவை இவ்வளவு தூரம் வரவேண்டியிருந்தது; அது ஒரு தனி வீடு; சுற்றிலும் பேரீச்ச மரங்கள் இருந்தன. அவன் கதவைத் தட்டினான்.

நாற்பது வயது கடந்த பருத்த குடியானவப் பெண்மணி ஒருத்தி கதவைத் திறந்தாள். அவள் ஃபானைக் கூர்ந்து பார்த்தாள். வெள்ளைக்காரனையும் அவனுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த குழுவினரையும் அவள் பார்வை கவர்ந்தது. உடனே அவள் புரிந்துகொண்டாள்.

"நான் வெய்ச்சோவைச் சேர்ந்த ஃபான் ஷெக்டின்; இவர்கள் என் நண்பர்கள்."

"ஓஹோ! சரி! உள்ளே வாருங்கள்; என் கணவர் வெளியூர் போயிருக்கிறார். அவர் ஹாங்காங்குப் போகும்போது என்னிடம் தகவல் கூறிவிட்டுச் சென்றார். உங்கள் குழுவினர் பிங்ஷானுக்கு வந்து கொண்டிருப்பதாக என் மகன் சொன்னான்."

தளம்பாவப்படாத தரையுடன்இருந்தஇருண்ட அறையை கண்ணோட்டமிட்டான் ஃபான். அறையில் நான்கு பையன்கள் இருந்தனர்; அவர்களில் இளையவர்களான இருவர் சுவர் ஓரமிருந்த படுக்கையில் அமர்ந்திருந்தனர்.

மூத்தவனுக்குப் பதினெட்டு வயசு. அவன், "நேற்றுப் பிற்பகலில் பிங் ஷானில் இருந்தேன்; அப்போது நீங்கள் தென்படவில்லையென அவர்கள் கூறி

ஞர்கள். அங்கே நீங்கள் இருந்தீர்களா?" என்று கேட்டான்.

"இல்லை. நாங்கள் ஆட்ஸாடௌ வழியாக நேராக வந்துவிட்டோம். அதனுல்தான் நாங்கள் வரமுடிந்தது; எங்களால் உங்களுக்கு தொந்தரவு ஒன்றும் இல்லை என்றே நம்புகிறேன்."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. என்கணவர் இந்நேரத்தில்தான் வீட்டுக்கு வருவது வழக்கம்." என்று அமைதியான குரலில் பதிலிறுத்தாள் அப் பெண்மணி.

"அவருக்கு என்ன வேலை?"

"அவர் கண்ணிவைத்து பிராணிகளைப் பிடிப்பவர். இங்கிருக்கும் நாங்கள் உங்கள் மாதிரி வாழ்வதில்லை. என் கணவர் இரவு நேரங்களில் அடிக்கடி வெளியே சென்றுவிடுவார்."

லெய்வாவோடும் மற்றவர்களோடும் ஃபான் கலந்தாலோசித்தான்.

ஜேம்ஸ் மறைந்து தப்பிச்சென்ற விவரம் கண்டு பிடிக்கப்பட்டுவிடும் என்றும் எவ்வளவு விரைவாக வெய்ச்சோவிலிருந்து வெகு தூரம் செல்லமுடியுமோ அவ்வளவிற்கு விரைவாகச் செல்வதே நல்லதாகும் என்றும் முடிவுசெய்தனர். ஈஸாவும் அவ்வாறே நினைத்தாள். ஆனுல் அவர்கள் இப்போது இங்கு மலைமீது இருந்தார்கள். சைசாம் திரும்பும்வரை அவர்கள் காத்திருப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை.

"உங்கள் கணவர் திரும்பும்வரை நாங்கள் இங்கே தங்கமுடியுமா?"

தாராளமாகத் தங்கலாம். உங்களை யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள். ஏராளமான இடம் இருக்கிறது. ரோந்துப் படையினர் சில வேளைகளிலே எதிர் பக்கத்திற்கு வருகின்றனர். இந்தப் பாதையில் அவர்கள் வருவதில்லை. இங்கே வாருங்கள், உங்களுக்கு இடங்களையெல்லாம் காட்டுகிறேன்."

அந்த அம்மாள் ஒரு மெழுகுவத்தியைக் கொளுத்தினாள்; வீட்டின் பின்புறத்தை நோக்கி சுறுசுறுப்பாக நடந்தாள். ஊசி இலைமரக்காட்டுக்கு செல்லும் அகலமான ஓர் இடம் காணப்பட்டது. இடைவெளி கொல்லைப்புறமாக பயன் படுத்தப் பட்டது; அதற்கு அருகாமையில், ஊசி இலைமரங்களுக்கடியில் சவுக்கண்டி ஒன்று இருந்தது,

அவள் கதவைத் தள்ளித் திறந்தாள். உள்ளே விறகுக் குவியல் தாறுமாறாகக் கிடந்தது. ஒரு முடுக்கில் துண்டுபோடப்பட்ட கட்டைகள் சில இருந்தன. சுவரில் பழங்கால மோஸ்தருடன் கூடிய துப்பாக்கி, நெருப்புக்கல், கூடைகள், ரம்பம் முதலியனவும் உழவுக்கு வேண்டிய பல்வேறு சாதனங்களும் இருந்தன. கூரையில் உள்ளிப்பூண்டுச்செடி போன்ற இன்னும் சில செடிவகைகள் வேயப்பட்டிருந்தன.

"இதைத்தவிர நீங்கள் தூங்குவதற்கு வசதியான இடம் என்னிடம் இல்லை. அதை உபயோகித்துக் கொள்ள முடியுமானால் இராப்பொழுதுக்குப் பாதுகாப்பான இடம் இது.

கடினமான பிரயாண அசதியினால் சோர்வடைந்த அவர்களுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது. அந்த அம்மணி அவர்களுக்குத் தேநீர் கொணர்ந்தாள். டூவானும் பிறரும் தரையில் அகப்பட்ட இடத்தில் சாய்ந்தார்கள். ஜேம்ஸூம் ஈஸூவும் ஓய்வுகொள்ள வெளிப்புறத்தில் ஓர் இடத்தைத் தேடினார்கள். மரங்களுக்கடியில் பரப்பிக் கிடந்த ஊசி இலைகளின் விரிப்பை அவர்கள் கண்டுபிடித்தார்கள். மென்மை மிகுந்த இயற்கையான அந்தப் படுக்கையின்மீது தன்னுடைய மேற்சட்டையை விரித்தான் ஜேம்ஸ்.

"நான் எங்கே தூங்கட்டும்?" என்று ஈஸூ கேட்டாள்.

"என் மேற் சட்டைமீது! உன் மேற் சட்டை போர்த்திக்கொள்ளுவதற்கு இருக்கட்டும்" என்றான் ஜேம்ஸ்.

ஈஸூ ஏதும் சொல்ல வில்லை; அவள், இதயம் படபடத்தது. ஆனால் சிறிது நேரத்தில் அவர்கள் ஒருவரையொருவர் அணைத்த வண்ணம் படுத்துக் கொண்டனர். அவள் மல்லாந்து திரும்பிக்கொண்டாள். மேலே உயர்ந்த மரங்களின் விதானத்தையும், அவற்றுக்கு மிக அதிக உயரத்தில் ஊடுருவ இயலாத நட்சத்திரப் பிரபஞ்சத்தையும் இருவரும் கண்டனர். ஆயினும், ஊசி இலை மரக்காடு, நீலவானம், பைன் மரத்தின் நறுமணம் மகிழ்வூட்டும் மலைக்காற்று, இரவின் அந்தரங்கம், புதிய இடத்தின் குழப்பம் ஆகியவை யாவும் சேர்ந்து கவலை தரும் அன்றைய நினைவுகள் அனைத்தையும் துடைத்து

எரிந்து விட்டதுபோல அவர்கள் ஒருவரையொருவர் அணைத்தபடி விரைவிலேயே ஆழ்ந்த நித்திரை வசப்பட்டனர்.

ஃபான் லேசாகத் தூங்கினான். சிறு கோழித் தூக்கம் போட்டு விழித்ததும், பொழுது விடிந்து விட்டதை அறிந்தான். வீட்டின் முன்புறத்துக்குச் சென்றான்; மூத்த பையனோடு உரையாடினான். அவன் முகம் ஒட்டிப்போய், கபிலநிறமாக இருந்தது; கறுப்புத் தலைப்பாகை தரித்திருந்தான். சின்னப் பிள்ளைகளுக்கு உடை அணிவிப்பதில் தாய் உதவிக் கொண்டிருந்தாள்.

பையனிடம், "உன் பேர் என்ன?" என்று கேட்டான் ஃபான்.

"கைமூன்."

"உன் சகோதரன் பெயர் என்ன?"

"கிஷ்ஹான்."

ஃபானால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை,

களங்கமற்ற மனங்கள்தான் அம்மாதிரி பொருத்தமான பெயர்களைச் சிந்திக்கக் கூடுமென்று ஃபான் நினைத்தான்.

"கை மூனுக்கு வயசு பதினெட்டு; கின்ஷானுக்குப் பதினாறு," என்று பெருமையுடன் கூறினாள் தாய்.

"நிலைமை எப்படி இருக்கிறது?" என்று கைமூனை விசாரித்தான் ஃபான்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

"இங்கே இருக்கக்கூடிய பொதுவான நிலைமை எப்படி வென்று கேட்கிறேன்."

"சௌகரியம்தான் என் தகப்பனுருக்கு எப்போதும் ஏதாவது வேலை இருந்து கொண்டே இருக்கும்."

"அதாவது இவ்வழியே பிரயாணிகள் பலர் அடிக்கடி வந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறாயா?"

"ஆமாம்; சென்ற கோடையில் நூற்றுக்கணக்கான பேர்கள் வந்தார்களே! அவர்கள் பெருங் கூட்டமாக வந்து காடுகளுக்குள் பதுங்கி மறைந்தனர். அவர்களை என்ன செய்வதென்றே ரோந்துப் படைகளுக்குப் புரியவில்லை."

"ரோந்துப் படைகளின் தொகை எவ்வளவு இருக்கும்?"

"மூன்று அல்லது நான்கு பேர்கள் அடங்கிய பிரிவுகள் கொண்டது. எதிர்க்கரையிலிருக்கும் பிலிங்சூனுக்கு அவர்கள் சில சமயங்களில் வருவதுண்டு."

"ரோந்துப் படையினர் என்ன செய்வார்கள்?"

கின்ஷான் பேசலானான்: "நேற்று நாங்கள் பிங்ஷானில் இருந்தோம். நிறையப் பேர்கள் வீதிகளிலே அலைந்து திரிந்து கொண்டிருந்தார்கள். வெய்ச்சோவிலிருந்தும், போக்லோவிலிருந்தும் அவர்கள் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். பிங்ஷான் காவல் படையினரோடு அவர்கள் சண்டை பிடித்தார்கள். அவர்கள் பேரில் காவல் படையினர் கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்பார்கள் என நான் ஊகம் செய்கிறேன்."

"காவல் படையினரோடு அவர்களுக்கு என்ன தகராறு?"

"அவர்கள் ஒரு இளைஞனை அடித்துக் கொண்டிருந்தார்கள். போலீஸ் வந்தது; அவர்களைக் கலைத்தது!"

"அவன் ஒரு திருடனா?"

"ஊஹூம். 'டங்பூ....டங்பூ!' என்று அவர்கள் கூச்சலிட்டுக்கொண்டிருந்தது என் காதில்விழுந்தது"

"அப்படி இருக்க முடியுமா?"

கைமூன் குறுக்கிட்டான்: "போக்லோவில் தங்கள் உறவினர்களைக் கொன்ற 'டங்பூ'வை—கமிஷனரை—அவர்கள் அடையாளம் கண்டு கொண்டார்கள் என்றே தோன்றுகிறது. அவரை அடித்து நொறுக்கிக்கொண்டிருந்தார்கள் அவர்கள்;அவரைக் கெட்டியாகப் பிடித்து வைத்துக் கொண்டார்கள்! காவல்படை குறுக்கிட்டிராவிட்டால், அவரை அவர்கள் நார் நாராகக் கிழித்திருப்பார்கள்!"

ஃபான் மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தான். அது போக்லோ கமிஷனராக இருக்கக் கூடுமோ என்று அவன் அதிசயித்தான்; அல்லது அன்றைய தினம் பிங்ஷானுக்கு வந்து சேர்ந்த டெங்பிங்காகவும் அந்த நபர் இருக்கக்கூடு மென்று அவனுக்குத் தோன்றியது.

"கமிஷனர் பார்ப்பதற்கு எப்படி இருந்தார்?"

"அவ்வளவு நன்றாக நாங்கள் பார்க்க இயலவில்லை. அங்கு பெருங் கூட்டமாக இருந்தது; பூசல் இருந்தது. இம்மாதிரியான தெருக் கலவரங்களை நாங்கள் நிரம்பப் பார்த்திருக்கிறோம்; ஆனால்,

பட்டப்பகலில் ஒரு கமிஷனரை எந்தக் கலகக் கும்பலும் ஒருபோதும் அடித்தது கிடையாது!"

"அவர் கட்டுமஸ்தான உடம்போடும், குள்ளமாகவும் சதுரவடிவான முகத்துடனும் இருந்தாரா?"

"நான் அறியேன்; அவ்வளவு நன்ருகப் பார்க்க முடியவில்லை."

ஃபான் பின் பகுதிக்கு நடந்து சென்ருன்; குழுவினர் படுத்துக்கிடந்ததைக் கண்டான். டுவான் தன் பேரனோடு துணை வீட்டில் நன்ருகத் தூங்கினுன். ஈஸா மரங்களின் அடியில் உட்கார்ந்து தலைமயிரைச் சீவிச் சீர்ப்படுத்திக் கொண்டிருந்தாள். அவள் முகம் அவ்வளவு பிரகாசமாக இருந்ததை ஃபான் அதற்கு முன் கண்டதே இல்லை.

ஜேம்ஸ் தரையில் குனிந்தபடி ஊசி இலை மரத்தின் இலைகளை தட்டிச் சுத்தப்படுத்தியபடி ஈசுவைப் பார்த்துக் கொண்டிருந்தான். துணை வீட்டுக்குச் சமீபத்திலிருந்த சிறிய ஓடையில் லெய்வா முகம் கழுவிக் கொண்டிருந்தாள். சமையலறையிலிருந்து முகம் துடைக்கும் துண்டொன்றை இரவல் வாங்கிக் கொண்டிருந்தாள் அவள்.

"நாம் என்ன சாப்பிடப் போகிருேம்?" என்று கேட்டாள்.

"அந்தச் சந்தர்ப்பத்திற்குத் தோதாக ஒரு தமாஷ் செய்தபடி, "பெர்ரி பழங்கள்!" என்று உடனே பதிலிறுத்தான் ஃபான். "கவலைப்படாதே. இந்த அம்மாள் நமக்காகக் கொஞ்சம் கஞ்சி வைத்துக் கொடுப்பாள் என்றே திடமுடன் இருக்

கிறேன். உரிய பணத்தை அவளுக்குக் கொடுத்து விடுவோம். அசாய் எங்கே?" என்றான் தொடர்ந்து.

"அவனை இங்கே ஒரு விநாடிக்கு முன்னே கண்டேன். அநேகமாக, அவன் மேலே போயிருக்க வேண்டும்."

மேலே இருந்த சிற்றோடையைச் சைகை மூலம் அவள் உணர்த்தினாள். அசாய் நீரோடையின் நடுவில் தண்ணீரில் குனிந்த வண்ணம் நின்று கொண்டிருந்ததை ஃபான் கண்ணோட்டமிட்டான். ஆசாய் செருப்பு அணிவதில்லை; அவை இல்லாமல் இருப்பதே தனக்குச் சௌகரியமாக இருக்கிறதென்று அவன் சொல்லிக் கொண்டான்,

"ஏ, அசாய்!" என்று ஃபான் கூப்பிட்டான்.

அசாய் திரும்ப சீழ்க்கை ஒலி செய்தான்,

"இங்கேவா. விரைவில் நாம் காலைச் சிற்றுண்டி சாப்பிடுவோம்; அதன் பிறகு, உன்னை கீழே பிங்ஷானுக்கு அனுப்பப்போகிறேன். நமது குழுவின் உணவு தேடும் பகுதிக்கு உன்னை நான் தலைவனாக நியமனம் செய்கிறேன். நாம் ராணுவ முறையில் தானே பிரயாணம் செய்கிறோம், சரிதானே?"

"சரிதான்!"

காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு பின்புறமிருந்த காட்டில் தன் குழுவினரைக் கூட்டி உள்ள நிலைமையை விவரித்தான் ஃபான். சைசாம் திரும்பி வரும்வரை அவர்கள் அடுத்த இரவையும் இங்கேயே கழிப்பது என்று முடிவாயிற்று.

"ஃபான் மேலும் கூறலானான்;—இன்னொரு சங்கதி. இங்கே அகதிகள்பலர் திரிந்து கொண்டிருக்

கிறார்கள். அதில்—போக்லோவைச் சேர்ந்தவர்கள் சிலர் இருப்பதாகவும், எல்லையைக் கடப்பதற்காக அவர்களும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கலா மென்றும் தோன்றுகிறது. நமது வழிகாட்டி திரும்பியதும், உடனடியாக நாம் குறுக்கு வழியாக பாய்ந்து சென்று விடவேண்டும். மற்றவர்களிட மிருந்து விலகி இருங்கள். பெரிய கும்பல் சேர்ந்தால் அதன் விளைவு, ரோந்துப் படைகளோடு சண்டை சச்சரவு செய்து கொள்வதில்தான் முடியும். நாம் ஏற்கனவே ஒரு பெரிய குழுவாக யிருக்கிறோம். ரோந்துப் படைகளை எதிர்ப்படாமல், நாம் சந்தடி யின்றித் தப்பிவிட வேண்டும்!"....

இவ்வாறு ஃபான் திட்டத்தை விளக்கினன்.

அருகில் ஸ்வாட் நின்றிருந்தாள்; பேசவில்லை. போக்லோ அகதிகளைக் குறித்துத் தான் கேள்விப் பட்டதை ஃபான் விவரித்தபோது, தன் கணவனைத் தேடிப்பார்க்க வேண்டுமென்றும் கடைசிப் பட்சமாக போக்லோவில் உள்ளவர்களோடு பேசவேண்டு மென்றும் அவள் தெரிவித்தாள். அசாயுடன் ஸ்வாட் கீழே செல்ல ஃபான் சம்மதித்தான்.

அசாயை நோக்கி, "அங்கே ஜனங்கள் அடித்துப் போடவிரும்பிய கமிஷனர்யார்? அவர் போக்லோவை சேர்ந்த யுவானு, அல்லது நமது தோழர் டெங்பிங்கா என்பதை நீ கண்டுபிடிக்க வேண்டும். இது என் விருப்பம்; உன் கண்கள் விழிப்புடன் இருக்கட்டும்; உன் வாய் மூடியிருக்கட்டும். இதோ பார்," என்று சொல்லி அவனிடம் கொஞ்சம் சீன நாணய நோட்டுக்களைக் கொடுத்தான் ஃபான். "நீ வாங்குகிறவை

களுக்குப் பணம் கொடுத்துவிடு; நீயாகவே போய் சிக்கலில் அகப்பட்டுக் கொள்ளாதே. விலை சல்லி சான—வேண்டாமென்றால் நாம் வீசி எறிந்துவிடக் கூடிய—தண்ணீர்ப் பானை ஒன்று வாங்கிவா. இருட்டு வதற்கு முன்னால் திரும்பிவிடு'' என்றான்.

பையன் கின்ஷானும் அவர்களோடு செல்ல முன் வந்தான்.

*　　　*　　　*

பிங்ஷான் நாலாயிரம் பேருக்கு அதிகமான ஜனத்தொகை கொண்ட ஒரு நகரம்; ஐந்து அல்லது ஆறு வீதிகளும், ஒரு பலசரக்கு மண்டியும் ஒரு திரைப்படக் கொட்டகையும் இருந்தன. பஸ் மார்க் கங்களின் கடைசி நிலையம் அது.

பையன்கள் இருவரும் சட்டைப் பைகளில் பணத்தோடு வீதிகளைச் சுற்றி மகிழ்வுடன் சென் றார்கள். கின்ஷானுக்கும் போலீஸ்காரர்கள் அறி முகமானவர்கள், அவர்களும் அவனை நன்கு அறிந் திருந்தனர்.

இரண்டு மணிக்குத் திறக்கப்பட்ட திரைப்படக் கொட்டகைக்கு முன்பாக அவர்கள் நின்று கொண் டிருந்தார்கள். கொட்டகைக்கு முன் பகுதியில் இருந்த சுவரொட்டியில் துயரத்துடன் காணப்பட்ட எண்ணற்ற முகங்களுக்கு மேலே, காலைக் கதிரவ னுக்கு எதிரே துப்பாக்கியை உயரப் பிடித்துக் கொண்டிருந்த ஒரு குடியானவனின் புன்னகை பூத்த பிரகாசமான முகம் மஞ்சளும் கருப்பும் கொண்ட வண்ணத்தில் தீட்டப்பட்டிருந்தது.

சிறுவர்கள் ஒருவர் பின் ஒருவராக 'க்யூ' நின்று கொண்டிருந்தனர்.

"வாருங்கள்; நாம் உள்ளே போவோம்," என்றான் அசாய்: "ஆஸ்வாட், வாருங்கள். உங்களையும்தான் அழைக்கிறேன்" என்று தொடர்ந்தான்.

ஸ்வாட்டின் முகம் வெறிச்சென்று இருந்தது: விவரிக்க இயலாத ஒரு குழப்பம் அவள் பார்வையில் தவழ்ந்தது.

"நான் வரவில்லை. நீங்கள் போங்கள். என் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது இருந்தால் தேடிக் கண்டுபிடிக்கிறேன் நான்."

"பிறகு வழி தவறிவிடாதீர்கள்; இதே இடத்தில் எங்களுக்காகக் காத்திருங்கள். நான்குமணி அளவில் நாங்கள் வெளியே வந்துவிடுவோம்.

இரண்டு கட்டிடத் தொகுதிகளுக்கு அப்பால் இருந்த பஸ் நிலையத்துக்கு ஸ்வாட் சென்றாள்; பஸ்ஸிலிருந்து இறங்கிய பிரயாணிகளைக் கவனமாகப் பார்த்தாள்; பிறகு, அவள் திரும்பி வந்து, கடுகடுத்த முகத்தோடு ஒரு தேநீர்க் கடையில் உட்கார்ந்தாள்; அங்கே பேசுவதை ஒட்டுக் கேட்க அவள் முயன்றாள்.

நான்கு மணிகழிந்து சற்றைக்கெல்லாம், திரைப் படக் கொட்டகையிலிருந்து ஜனக் கூட்டம் நெரித்துக் கொண்டு வெளி வந்துகொண்டிருந்ததை அவள் பார்த்தாள். பொறுமையாய்க் காத்திருந்தாள்; சிறுவர்களின் கும்பலோடு அசாய் பேசிக் கொண்டிருந்தான். தேவையானவைகளை வாங்கிக் கொண்டு அவர்கள் திரும்பப் புறப்பட்டார்கள்.

"உங்கள் ஊர்க்காரர்கள் யாரையாகிலும் கண்டு பிடித்தீர்களா?" என்று அசாய் விசாரித்தான்.

சில பேர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன், ஆனால் ஒருவரும் என் புருஷனைப் பார்க்கவில்லையாம்! அவர்களிலே என்னை அறிந்த ஒருவன் "போக்லோவிலிருந்து வந்த சிலர் தங்கள் உறவினர் இல்லங்களிலே ஒளிந்து கொண்டிருப்பதாக கூறினான். தனக்கு சாங்ஃபூவைத் தெரியுமென்றும் சொன்னான். அவன் சந்திக்க நேர்ந்தால், என்னைப்பற்றிக் கூறும்படி சொன்னேன். அவர் உயிருடன் இருந்தால், எப்படியும் என்னிடம் வந்து விடுவார்."

அவள் பேசியபோது, அவள் கண்களில் கண்ணீர் ததும்பியது. அவநம்பிக்கை, கிலேசம் ஆகிய உணர்ச்சிகளுக்கு அவள் இடம் கொடுத்துப் பழக்கம் இல்லை; இருப்பினும் அவள் முகம் கலங்கி எதையும் புரிந்து கொள்ள இயலாதபடி வெறிச்சோடிக் கிடந்தது.

அவர்கள் வேட்டைக்காரனின் வீட்டை அடைந்த சமயம், மணி ஏழு ஆகிவிட்டது. ஃபான் வெளியே நின்றபடி அவர்கள் திரும்பி வருவதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அரிசி தோசை காட்டுப் பேரிக்காய், காய்கறிகள் ஆகியவை நிறைந்த கூடையைச் சுமந்தவாறு கின்ஷான் பின்னால் வந்து கொண்டிருந்தான். அசாயின் முகத்தில் புன்முறுவல் பூத்திருந்தது. அவன் ஒரு கோழிக் குஞ்சை அலக்காகத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான். அதன் பாதங்கள் கயிற்றினால் கட்டப்பட்டிருந்தன. குன்றின் அடிவாரத்தில்

இருந்த ஓர் உழவனை சரிக்கட்டி அக் கோழி குஞ்சை தங்களுக்கு விற்கும்படி செய்து எடுத்துவந்தான்.

"யாராவது உன்னைக் கவனித்தார்களா?"

"அவ்வாறு எனக்குத் தோன்றவில்லை."

"சரி விஷயத்தைக் கண்டு பிடித்தாயா?"

"ஆமாம், அது டெங்பிங்தான்!"

"உனக்கு எப்படித் தெரிந்தது?"

"இளைஞர் பலருடன் நான் பேசினேன். இதைக் கேளுங்கள்! சினிமாக் கொட்டகைக்கு நேர்முன்னால் தான் மேற்படி சம்பவம் நடந்ததாம்; அவர் உள்ளே நுழையும்போது யாரோ ஒருவன் அவரை இன்னா ரென அடையாளம் புரிந்து கொண்டான், அவர் வெளியே வந்ததும், போக்லோவைச் சார்ந்த ஏழெட்டுப் பேர்கள் ஒன்றுகூடித் தாக்கி அவரை நடுத்தெருவுக்கு, இழுத்து வந்தார்கள், அவரை அவர்கள் அடித்து உதைத்துக் கொண்டிருந்தார்கள். அவரை அக்கக்காகக் கிழித்து விடுவார்கள் போலத் தோன்றியது. அவர் சோர்ந்து தரையில் விழுந்து விட்டார்; அவர் மூக்குக் கண்ணாடியும் தொலைந்தது. போலீஸ் வந்து சண்டையைத் தடுத்தது; அவர் தன்னுடைய பல் ஒன்றை இழந்ததாக ஒரு பையன் சொன்னான். காவல் படையினர் ஜனங்களை அப்பால் தள்ளியபோது, நடை பாதையில் கொஞ்சம் ரத்தம் சிந்தி இருந்ததை கண்டானாம் அவன்!....

"அப்புறம்?"

"காவல்படைக் காரியாலயத்துக்கு இரண்டு மூன்று பேரை அழைத்துச் சென்றார்களாம். அவர்

களைக் கைது செய்யும் தருணத்தில், டெங்பிங் எங்கோ மறைந்து விட்டாராம்!"

"அவர் இன்னாரென்று அவர்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் ஃபான்.

"சம்பவத்துக்குப் பிற்பாடு, ஜனங்கள் பேசிக் கொண்டார்களாம்! வெய்ச்சோ வாராவதியில் நடந்த சம்பவம்பற்றி இறந்த கிழவியையும் மாண்ட ஒரு சிறுவனையும் ஆற்றில் காலால் உதைத்துத் தள்ளியதைப் பற்றி என்னிடம் அந்தப் பையன் விசாரித்தான்; அது உண்மைதானாவென்று என்னிடம் கேட்டான் அவன். போக்லோவில் நடந்த விசாரணையில் வயதான பாட்டி ஒருத்தியை டெங்பிங் அரை நிர்வாணமாக்கி, உயிர்போகும் வரையில் வெய்யிலில் அவளை முழந்தாளிடச் செய்ததைப் பற்றியும் அவர்கள் கேள்விப்பட்டிருந்தனர்!" என்றான் அசாய்.

எதிர்பாராத வகையில் கிடைத்த கோழி விருந்து எல்லோருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. உண்டு முடிந்ததும் அவர்கள் பின்புறம் சென்று படுத்துக்கொண்டார்கள். மரங்கொத்தி அண்டங் காக்கை ஏனையப்பறவைகளின் கலரவம் அடங்கி இரவின் அமைதி இனிமையாக இருந்தது. லெய்வாவும் ஈஸுவும் பகலில் சிறு தூக்கம் போட்டு விட்டார்கள். டூவானும் அவன் பேரனும் உள்ளே உறங்கிக் கொண்டிருந்தார்கள். துணைவீட்டை அவர்கள் ஓரளவு சுத்தம் செய்தார்கள்; படுப்பதற்கு இடம் உண்டாக்குவதற்காக தரையின் ஒரு பகுதியைக் காலி செய்தார்கள். ஜேம்ஸும் ஈஸுவும்

தாங்கள் திறந்த வெளியில் தூங்குவதையே விரும்புவதாகச் சொன்னார்கள்.

சைசாமின் வருகைக்காகவே அவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். அவன் மனைவி சொன்ன பிரகாரம், அன்று மாலை அவன் எந்த நேரத்திலும் திரும்பிவிடுவான்.

ஆந்தைகளின் அலறலும், தூரத்தில் உருமும் காட்டு மிருகங்களின் ஒலியையும் தவிர, அன்றிரவு அமைதியாகவே இருந்தது.

அத்தியாயம் 15

அடுத்த நாள் காலையில் குழுவினர் படுக்கையை விட்டு எழுந்து வீட்டின் முன்புறம் சென்றபோது சைசாம் மஞ்சத்தில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். காலை ஐந்து மணிக்குத்தான் தன் கணவன் திரும்பினான் என்றும், சூடாகச் சாப்பிட்டபின்பு, இழந்த தூக்கத்தைச் சரிக்கட்ட உறங்கிக்கொண்டிருப்பதாகவும் அவள் மனைவி சொன்னாள். ஆகவே அவர்கள் அவனைத் தொந்தரவு செய்யவிரும்பவில்லை,

அவர்கள் மறுபடியும் புறப்படும் சமயம் கிட்டத்தட்ட மணி இரண்டாகிவிட்டது. சைசாமுக்கு இது ஒரு நீண்ட பயணமாகத் தோன்றியது; குறைந்தது ஒரு வாரத்திற்குள் திரும்பமுடியுமென அவன் எதிர்பார்க்கவில்லை.

கண்ணி வைத்து பிராணிகளைப் பிடிப்பவர்கள் வழக்கமாக அணியும் உடைகளை வழிகாட்டி சைசாம் அணிந்திருந்தான். மிகப் பெரிய மூங்கில் தொப்பி ஒன்று அவன் முதுகின் குறுக்கே கயிற்றில் தொங்கியது. பழுப்பு நிறத் தென்னை நாரினால் அரை அங்குல கனத்திற்குத் தைக்கப்பட்ட மேற்சட்டை, நீர்புக முடியாத நீளமான உடுப்பு அவனது தோள்

களை அகலமாகத் தோன்றச் செய்தன. காட்டி னூடே பாதைகளை வெட்டுவதற்கு பயன்படும் அரிவாள் ஒன்று அவன் இடுப்பு வாரில் செருகப்பட் டிருந்தது. அவன் ஐந்தடி பத்து அங்குல உயரம் இருந்தான். வலிவுமிக்க அவனது கெண்டைக்கால் தசைகள் வெண்ணிறப் பட்டுத் துணியால் குறுக்கு வசமாக இறுக்கிக் கட்டப்பட்டிருந்தன; வைக்கோ லால் ஆன காலணிகளை அவன் அணிந்திருந்தான். இடுப்பு வாரின் பின்புறத்தில் செம்படவனின் கூடையை ஒத்திருந்த நேர்த்தியாகப் பின்னப்பட்ட சதுரவடிவமான பெட்டி ஒன்றைச் சுமந்திருந்தான் அவன். இவ்வாறு எல்லா சீதோஷ்ண நிலைகளுக்கும் பொருத்தமாக அவன் உடை அணிந்திருந்தான்.

"நாம் பிலிங்குனுக்குப் போய்ச்சேர இரண்டு அல்லது மூன்று மணி நேர நடை இருக்கும்; தென் பகுதியில் மறைந்திருக்கும் தேய்ந்த தடத்தில் நாம் நடந்து செல்லலாம். வடக்கேயுள்ள பாதையில் போவது சுலபமாக இருந்தபோதிலும், அங்கே ஜன நடமாட்டம் அதிகமாக இருக்கும். கடைசிவரை பாதை பெரும்பகுதியும் சமதளமாகவே இருக்கிறது. அப்படியே சென்றால் நாம் டாகூலிங்கின் மறுபக்கத் திற்கு போய்ச் சேர்ந்து விடுவோம்."

டாகூலிங் சிகரத்திற்குத் தென்புறமாகச் சென்ற பாதையில் அவர்கள் நடந்து சென்றார்கள். ஏற்றங்களும் இறக்கங்களும் மிகுந்திருந்தன; ஆனால் தேய்ந்த களிமண் வழியாதலால் பாதங்களுக்குச் சுளுவாக இருந்தது. அவர்கள் பெரும்பகுதி ஒற்றை வரிசையில் நடந்து சென்றார்கள். சைசாம் அந்தக்

கூட்டத்தை முன்னால் வழி நடத்திச் சென்றான். அசாயும் ஸ்வாட்டும் வரிசையின் கடைசியில் இருந்தார்கள். குடியானவப் பெண்மணியோடு அந்தப் பையன் சிநேகம் பூண்டான்; ஏனெனில் அவள் எல்லாவற்றையும் இழந்து நிராதரவாகத்தவித்தாள் வேறு யாரிடமும் அவள் பேசுவதில்லை.

அடர்த்தியாக வளர்ந்திருந்த முட்புதர்களினூடே சென்ற ஒரு வேளையில் குழுவினர் திரும்பிய போது, அசாய் கொஞ்சம் பின்னால் இருந்தான்; அப்போது யாரோ உரத்த குரலில் கூக்குரலிட்டு அழும் சத்தத்தை அவன் செவி மடுத்தான்.

"லெய்வா!....லெய்வா!...."

இலைகள் சலசலத்து அசைந்தன; புதர் விலகியது அடர்ந்திருந்த புதரினின்றும் கறுப்பு உருவமொன்று மேலெழும்பி, குழுவினரைப் பின் தொடர்ந்துபிடிக்க மூர்க்கத்தனமாக ஓடிவந்தது. அவனுடைய திகிலடித்த ஓலம் வேட்டையாடப்பட்ட பிராணியினுடைய கதறலை நினைவூட்டியது.

அசாய்க்கு பீதியினால் நடுக்கமெடுத்தது. அந்த ஆள் லேசாக நொண்டி நொண்டி நடந்தான். பேர்வழி குட்டையாகவும் சற்று பருமனாகவும் இருந்தான். பரந்த தோள்கள்....அந்தக் குரல்....!ஆமாம்! அது டெங்பிங்தான்!....

அசாய் முன்னால் ஓடினான், மற்றவர்கள்,தங்களை நோக்கி வேகமாக பாய்ந்தோடிவந்த அந்தப் பைத்தியக்கார உருவத்தை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டே நெருங்கிவிட்டார்கள்,

சைசாம் தன் போக்கில் எல்லோரையும் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு வந்து, பாதையை அடைத்தவண்ணம் நின்றான்; கடுங்கோபம் அடைந்தவனாகத் தோன்றினான் அவன். பரிதாபத்துக்குரிய அம்மனிதனைக் கூர்ந்து பார்த்தவண்ணம் லெய்வா பயத்தால் ஃபானைப் பற்றிக்கொண்டாள். அவன் தலைமுடி அலங்கோலமாகக் கலைந்திருந்தது. கண்கள் ரத்தச் சிவப்பாகக் காணப்பட்டன. அவனுடைய கறுப்பு நிற சுங்ஷான் கோட்டில் அக்குளுக்கு அடியில் இருந்த ஒரு கிழிசல் மூலம் உள்ளே இருந்த அவனது வெள்ளைச் சட்டை தெரிந்தது.

"யார் நீ?" என்று அதிகாரம் செலுத்துகிற தொனியில் வினவினான் சைசாம்.

அந்தப் பைத்தியக்காரன் நின்றான்; துவண்டு தரையில் சாய்ந்தான்; அவன் கண்கள் உள்ளுக்கு சொருகின; அவன் உடம்பு வலியால் நெளிந்து துடித்துக்கொண்டே இருந்தது.

"என்னைப்பிடி லெய்வா....எனக்கு கைகொடு!" என்று அவன் கதறினான்.

அவர்கள் அறிந்திருந்த அந்தப் பழைய டெங்பிங் அல்ல அது! ஆனால் அவன் அதே ஆள்தான்!....

லெய்வா திகைத்து மௌனமானாள்.

முன்னால் அடியெடுத்துவைத்தவாறு "அவருடன் நான் பேசுகிறேன்" என்றான் ஃபான்.

"எழுந்திருங்கள்" என்று சுருக்கமாகவும் ஆத்திரத்துடனும் கூறினான் ஃபான்.

அவன் பாதங்களை நோக்கி டெங்பிங் மெதுவாக கஷ்டப்பட்டு நகர்ந்து சென்றான்.

"நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டான் ஃபான்.

அப்போது அசாய் வந்து சேர்ந்தான். டெங்பிங் ஒருவர் மாற்றி ஒருவராகப் பார்த்தான். அவன் முகம் குழம்பிப்போய்க் காணப்பட்டது.

"அசாய், நீ வந்துகொண்டிருந்ததாக நான் அறிந்தேன். என்னிடம் ஏன் நீ சொல்லவில்லை? ஏன் நானும் உன்னோடு வருவதை நீ விரும்பவில்லை?" என்றான் அவன்.

இவன் செல்வாக்கோடு அதிகாரத்தில் இருந்த காலத்தில் மிகுந்த அகம்பாவமும் ஆத்திரமும் கொண்டு தன்னை படுநாசமாக்கினான். பகிரங்க விசாரணைகளில் தன்னை அவமானப்படுத்தினான். ஆகவே இந்த மனிதன் பேரில் ஃபானுக்கு வெறுப்பும் கோபமும்தான் உண்டாயிற்று. டெங்பிங்கை அடித்துத் தள்ளி ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முந்தி, தான் முகத்தில் அறைபட்டமாதிரி இப்போது அவன் முகத்தில் அறையவேண்டும் என்று அவன் விரும்பினான். ஆனால் லெய்வா அவனைத் தடுத்துவிட்டாள்.

டெங்பிங் கைகுவித்து "தயவு செய், லெய்வா. நாம் நண்பர்கள் அல்லவா?" என்று கெஞ்சினான்.

"இவரும் உங்களில் ஒருவரா? நீங்கள் அவரையும் அழைத்துச்செல்ல விரும்புகிறீர்களா? ஞாபகம் இருக்கட்டும்; நமக்கு இந்தத் தொல்லை ஏதும் வேண்டாம்" என்றான் சைசாம்.

"அது எல்லோரும் தீர்மானிக்க வேண்டிய விஷயம்" என்று கூறி அவன் பால் குளிர்ந்த புன்னகையை வீசினாள் லெய்வா.

சில தப்படிகள் தாண்டியதும் ஒரு வெட்டவெளி இருந்தது. அங்கே, வழிகாட்டியைப் பின்பற்றி, அவர்கள் தாங்களாகவே நின்றுவிட்டார்கள்.

"நீங்கள் முடிவு செய்யுங்கள். இது விடுமுறை உல்லாசப் பயணமன்று. நீங்கள் எல்லோரும் சம்மதித்தாலன்றி அதிகமான ஆட்களை நான் அழைத்துச் செல்லமாட்டேன்."

டெங்பிங் தானாகவே சிறிதளவு சமாளித்துக் கொண்டான். பிறகு புன்னகை செய்தான்.

"ஷெக்டின்! லெய்வா! நாம் பல வருஷங்களாக நண்பர்களல்லவா? நான் முன்பு உங்களுக்கு உதவி செய்திருக்கிறேன். இப்போது நான் சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறேன். என்னையும் உங்களுடன் அழைத்து செல்லும்படி கெஞ்சிக் கேட்கிறேன்."

ஃபான் பெரிதும் குழப்பம் அடைந்தான். டெங்பிங் எப்போதும் அவர்கள் வழியில் குறுக்கிடுவான்; அவன் என்ன செய்வானோ? கடவுளுக்குத் தான் தெரியும்!—எல்லைப்புற ரோந்துப் படையினரிடம் அவர்களைக் காட்டிக் கொடுத்துவிடவும் அவனால் முடியும்!

டெங்பிங்கிடம் என்ன இருக்கிறதென்று ஆராய்ந்தான் ஜேம்ஸ்; ஆனால் அவனிடம் ஒன்றும் இல்லை. பிறகு சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு "எல்லோரும் கீழே அமர்ந்து சற்று ஓய்வு எடுத்துக்கொள்ளலாமே?"

அப்பொழுதுதான் முதன் முறையாக ஜேம்ஸ் துப்பாக்கியை வெளியில் எடுத்து அதை எல்லோரும் பார்க்கும்படி புல்தரைமீது வைத்தான்,

டெங்பிங் அதைக் கண்டு நடுங்கிஞன். அந்தத் துப்பாக்கியை அவன் அடையாளம் கண்டு கொண் டான்,

"நீங்கள் என்னைச் சுடப்போவதில்லை அல்லவா?"

"இல்லை. நான் ஏன் சுடவேண்டும்?" என்று உறுதியாகக் கூறிவிட்டு தன் அமைதியைக் காட்ட புன்னகை செய்துகொண்டான்.

"சபாஷ்! நான்தான் அந்தத் துப்பாக்கியை உங் களுக்காகக் கொண்டுவந்து கொடுத்தேன்!" என் ருன் அசாய். சட்டைப் பைகளில் கைகளைத் திணித்த வாறு, ஜேம்ஸின் பக்கத்தில் உட்கார சுற்றிவந்தான் அவன். எல்லோரும் தரையில் உட்கார்ந்துவிட்ட னர். டெங்பிங் மாத்திரம் அவர்களுக்கு முன்ஞல் தலை குனிந்து, முழங்காலில் கையை ஊன்றியபடி நின்ருன், பிறகு அவன் மெள்ள தரையில் உட்கார லாஞன்.

"ஒரு பகிரங்க விசாரணை மாதிரி இருக்கிறது இது" என்று ஜேம்ஸின் காதில் ரகசியமாகக் கூறி ஞன் அசாய்.

"நீங்கள் கவலைப்பட வேண்டாம்" என்று கமிஷ னரிடம் ஜேம்ஸ் சொன்ஞன்.

ஆஞல் டெங்பிங் துப்பாக்கியை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒருவரும் கேள்விகள் கேட்கவில்லை. டெங் பேசட்டும் என்று அவர்கள் காத்திருந்தார்கள்,

டெங்பிங்கின் முகபாவம் வியக்கத்தக்க முறை யில் மாறியது. அன்று ஜேம்ஸை உற்சாகத்துடனும் தன்னம்பிக்கையுடனும் அதிகார தோரணையிலும்

விசாரணை செய்த அந்தக் கமிஷனர் இப்போது உணர்ச்சியற்று தெம்பு இழந்து ஒடுங்கிக்கிடந்தான். அவனது தோள்கள் தொய்ந்தன; அவர்களை நேராக உற்று நோக்கக்கூட அவனால் முடியவில்லை.

இறுதியில், டெங் மெதுவாகப் பேசினான். தன் மனத்தை திடப்படுத்திக் கொண்டான். அவனுடைய முகபாவம் மீண்டும் உயிர் பெற்றது. பிறகு லெய்வா வையும் ஃபானையும் கள்ளப்பார்வை பார்த்தான்,

"நான் இங்கே இருப்பதற்கான காரணம் என்ன என்பது உங்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்திருக் கும். பாலத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நான் உத்தரவு பிறப்பிக்கவில்லை. இருப்பினும், அதுதான் பிற்பகலில் கலகத்தை உண்டாக்கிவிட் டது. இதுபற்றி அறிவிக்க ஸென்கே கான்டனுக்குப் போயிருக்கிறார். உண்மையில் ஒவ்வொருவரும் என் னைத்தான் குற்றஞ்சாட்டுவார்கள். தீப்பிடித்து எரிந்ததையும் உணவுப்பொருள் கிட்டங்கி கொள்ளை யடிக்கப்பட்டதையும் நான் பார்த்தபோது, இதற் குரிய தண்டனையை நான் அனுபவித்தே தீரவேண்டு மென்பதை உணர்ந்துகொண்டேன். மஞ்சூரியா அல்லது டர்க்கிஸ்டானில் பனியையும் குளிரையும் எதிர்த்துப் போராடுவதைவிட, தெற்கே செல்வதே சிறந்ததென்று நான் தேர்ந்தேன் என்றான். பிறகு இறைஞ்சும் பார்வையுடன் அவன் லெய்வாவின் பக்கம் திரும்பி "ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழவே ஆசைப்படுகிறான். சரிதானே?" என்றான்.

லெய்வா அவனைப் பொருட்படுத்தவில்லை. தங் கள் திட்டங்கள் அனைத்தும் டெங்பிங்கினால் ஆபத்

துக்கு இலக்காகிவிட்டனவென்று ஃபானைப்போன்றே அவளும் கவலைப்பட்டாள்.

"உங்கள் கருத்து என்ன?" என்று ஃபானைக் கேட்டான் ஜேம்ஸ்.

ஃபான் மூக்கைத் தேய்த்துக்கொண்டே கமிஷனர்மீது அனல்கக்கும் பார்வை ஒன்றை வீசினான்.

"இந்த நாயைத் தூக்கிலிட வேண்டும்" என்று சொன்னான். "அவன் என்னிடமிருந்து முப்பதாயிரம் டாலர்களைக் கொள்ளையடித்தபோது, அதில் தன் சொந்தத்துக்கென்று பத்தாயிரம் டாலர்களை இவன் சுருட்டிக்கொண்டதை நான் மறந்துவிடவே மாட்டேன்........நீ இடைமறிக்காதே. நான் உன்னைத் தூக்கில் போடமாட்டேன். ஆனால் உன் சகவாசத்தை இங்கு யாரும் வரவேற்கமாட்டார்கள். ஏனென்றால், நான் உன்னை ஒருபோதும் நம்பமாட்டேன். எங்களிடமிருந்து விலகிப்போய்விடு. ஆனால் நீ வேறு ஏதாவது சூழ்ச்சி செய்ய முயற்சி செய்தால்....என் நண்பர் மிஸ்டர் டாய் குறிதவறாமல் சுடுவதில் மிகவும் கைதேர்ந்தவர். மறந்துவிடாதே!....இனி நீ விரும்பும் இடத்துக்குப் போகலாம்!" என்றான் அவன்.

டெங்பிங் கண்கொட்டாமல் மெல்ல எழுந்து நின்றான். லேசாக நொண்டி நடந்தான். லெய்வாவைக் கடைசியாகப் பார்க்கத் திரும்பினான். பிறகு முன்னேக்கி வழி நடக்கலானான்.

"முதலில் அவன் இங்கிருந்து தப்பிச் செல்லட்டும்" என்றான் ஃபான்.

"அவன் மறுபடியும் நம்மைப் பதுங்கி இருந்து வழிமறிக்கமாட்டானே?" என்று கேட்டாள் லெய்வா

"அவனால் எவ்விதம் முடியும்?" என்று விடை பகர்ந்தான் ஃபான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் குழுவினர் புறப் படத் தீர்மானித்தனர்.

கடமையிலிருந்து தவறி, அபாயத்திற்குப் பயந் தோடிய அந்தக் கமிஷனரை கண்காணிக்க அசாய் முன்னே சென்றான். ஸ்வாட்டும் அவனைத் தொடர் ந்து சென்று கொண்டிருந்தாள்.

சிறிது தூரம் சென்றதும், அவர்கள் மீண்டும் வடக்கே திரும்பினர். அங்கு பாதை சரிந்து ஓடியது; வெய்யில் பூரணமாகக் காய்ந்தது. இவ்விடத்தில் அருகிலிருந்த சுண்ணும்புக்கல் சிகரங்களின் கரடுமுர டான விளிம்புகள் தெளிவாகத் தெரிந்தது; மறை வாக இருந்த கணவாய் ஒன்றும் தெரிந்தது. வேக மாகப் பாய்ந்தோடும் சிற்றாறு ஒன்று பாறைகளைப் பிளந்து கொண்டு சுமார் இருநூறு அடி கீழே சுழன் றோடியது. அந்த இடம் ஆழமாக இருந்தது.

"இன்னும் கால்மணி நேரத்தில் வடதிசைச் சாலையை நாம் அடைந்துவிடுவோம்; இனி நாம் ஒன்றாய்ச் சேர்ந்து உஷாராக இருக்கவேண்டும்!". என்றான் வழிகாட்டி.

அங்கே ராணுவ வீரர்கள் இருப்பார்களா?"

"அநேகமாக இருக்கமாட்டார்கள் என்றே தோன்றுகிறது. இங்கிருந்து பிலிங்குனுக்கு இன்னும் ஒருமைலோ சற்று கூடுதலாகவோ இருக்கும். ஆனால் பாதை நெடுகிலும் ஒரே கரடுமுரடு." முன்னால் செல் லும் இருவரையும் அழைத்து தங்களுக்காகக் காத்து நிற்கும்படிக் கூறினான். மற்றவர்களுக்கு சுமார் ஐம்ப

தடி முன்னே ஸ்வாட்டுடன் அசாய் நின்று கொண்டிருந்தான்; கூழாங்கற்களைக் காலால் உதைத்து சாலைப்பக்கம் வீசியெறிந்து கொண்டிருந்தான். ஸைஸாமின் கண்கள் ஒருகணம் உற்று நோக்கின.

"அங்கேயே நில்லுங்கள். தடத்துக்கு வந்து சேருங்கள். வாருங்கள்! வாருங்கள்!"

வழிகாட்டியின் குரல் கரகரத்தது. கைகளை மேலே தூக்கிக்கொண்டு அவன் வேகமாக முன்னேக்கிப் பாய்ந்தான். தன் அழைப்பைச் செவிமடுத்து அசாய் விரைவாகப் பின்னல் நடந்து வருவதை அவன் பார்த்ததும் தன் கைகளைத் தாழ்த்தி தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

"தடத்தில் வந்து நில்லுங்கள்!" என்று அவன் திரும்பவும் கத்தினன்.

ஆபத்து என்னவென்பதைப் புரிந்துகொள்ள முயல்பவனைப் போன்று தன் கைகளை ஆட்டினன் அசாய்; புன்சிரிப்போடு அவனும் திரும்பக் குரல் கொடுத்தான்.

"என்ன விஷயம்?"

"பாதையிலே நில்; சொல்கிறேன். பாதையிலே நில்!"

அவர்கள் வருவதற்காகக் காத்திருந்த ஸ்வாட் கல்லாய்ச் சமைந்து நின்றுள்.

அவள் நின்ற இடத்தை அவர்கள் அடைந்ததும், தாங்கள் வந்த தடத்தினின்றும் சற்றே விலகிச் சென்ற இருண்ட பாறை ஒன்றைச் சுட்டிக்காட்டி "நல்ல காலம்! அந்த வழியில் போகாமல் இருந்தீர்

களே! காட்டுப் பன்றியைப் பிடிக்க வலே விரிக்கப் பட்டிருக்கிறது" என்முன் சைசாம்.

சாலேயிலிருந்து பத்தடி தள்ளி புதர் நிறைந்த வழியில் பசுமையான மரக்கிளேகளின் குவியலேச் சுட்டிக்காட்டி உங்களே எச்சரிக்க மறந்துவிட்டேன். அது என் தவறுதான் என்முன் வழிகாட்டி சைசாம்.

மறுபடியும் அவர்கள் நிம்மதியாக நல்ல மூச்சு விட்டார்கள்; அவர்கள் களத்திற்கு வந்துவிட்டனர் அங்கு பாதை கணிசமாக அகன்றிருந்தது. குன்றின் வட பகுதியினின்றும் சாலேயொன்று கீழிறங்கி நேராக முன்னேக்கிச் சென்றது;

முச்சந்தியில் ஒரு கணம் தயங்கி நின்றுவிட்டு பிறகு வலப்பக்கம் ஏற்றத்தில் ஏறிக்கொண்டிருந்த டெங்பிங்கின் கரிய தனி உருவம் தென்பட்டது.

"அதுதான் பிங்ஷானிலிருந்து வரும் சாலே. அவன் நகரத்துக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருக்க வேண்டும்; அல்லது, இப்போது வழிதவறியிருக்க வேண்டும்" என்முன் ஃபான், சற்று அனுதாபத்துடன்.

சாலேயிலிருந்து சிலர் இறங்கி வந்துகொண்டிருந்ததை சைசாமும் மற்றவர்களும் பார்த்தபோது டெங் அதிக தூரம் சென்றுவிடவில்லே. பாதையில் பார்வையைப் பதித்தவண்ணம், தான் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம் என்பதையே அறியாதவன் போன்று டெங் மெதுவாக நடந்துகெண்டிருந்தான். அவனுக்குப் பத்தடி தூரத்துக்கு உள்ளாகவே தான் அந்த மூவரும் இருந்தார்கள். டெங்பிங் அவர்களேக் கண்டதும் பீதியடைந்து திடுதிப்பென்று பின்னேக்கி வேகமாகத் திரும்பி, ஓடிஞன்.

தெளிவற்ற கூச்சல்கள் கேட்டன. கணநேரத் தயக்கத்துக்குப் பின் அந்த மனிதர்கள் இறங்கி, டெங்கைத் துரத்தத் தொடங்கினார்கள். உயிர் தப்பி ஓடிக்கொண்டிருந்த அவன் சாலையிலிருந்து இறங்கி இடப்புறம் பாய்ந்தோடினான்!

"டா! டா! டா!—அவனை அடித்துப் போடுங்கள்!" என்ற கடுங் கூச்சல் கிளம்பி சுற்றியிருந்த குன்றுகளில் எதிரொலித்தன. இங்கே, மிக ஆழமான பள்ளத்திற்குக் குறுக்கே எதிர்ப்பக்கமிருந்த குன்றின் ஓரமாக பாதை சென்றது. சாலைத் திருப்பத்தில் நின்ற உயரமான மனிதன் ஒருவன் பின்னால் வந்து கொண்டிருந்தவர்களை நோக்கிக் கைகளை ஆட்டி "அவனை விடாதீர்கள்! அவனைத் தப்ப விடாதீர்கள்!" என்று கூச்சலிட்டான். இன்னும் பலர் சரிவிலிருந்து கீழே இறங்கி வருவது தெரிந்தது.

டெங்கை வேகமாகத் துரத்திக்கொண்டு வந்த உயரமான ஆள் தடத்திற்கு வந்தபோது" வாருங்கள்! வாருங்கள்! என்று கூச்சலிட்டுக்கொண்டிருந்தான்.

ஸ்வாட் திடீரென்று முன்னேக்கித் தள்ளாடிச் சென்றான். "சாங்ஃபூ!சாங்ஃபூ!" என்று அவள் உயிரை விட்டு அழைத்தாள், அவள் அழைப்புக்கு யாரும் செவிசாய்க்கவில்லை. பிறகு போக்லோ குடியானவர்களை நோக்கி ஓடினாள். ஃபானும் ஜேம்ஸும் பிறரும் ஐம்பது அல்லது அறுபது அடி தொலைவில் நின்று என்ன நடந்துகொண்டிருக்கிறதென்பதைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

டெங்பிங் ஒரு பாறைமீது தொற்றிக்கொண்டான். தன்னைச் சூழ்ந்திருந்த ஆட்களைக் கண்டதும்

தான் தனிமையில் மாட்டிக்கொண்டு விட்டதை அவன் உணர்ந்தான். குடியானவன் ஒருவன் அவனது கால்களைக் குறிவைத்து தடியை வீசி அடித்து அவனை நிலைகுலையச் செய்ய முயன்றான்.

இவையாவும் வெகு துரிதமாக நடந்துவிட்டன. டெங் மூர்க்கத்தனமாக மேலே இருந்து தேய்ந்த பாதையில் குதித்தான்; விழுந்த வேகத்தில் அவன் அதன் விளிம்புக்கு உருண்டு வந்துவிட்டான். வேறு வழியின்றி அவன் கரங்கள் அதன் முனையை கெட்டியாகப் பற்றின.

யாரோ அவனுடைய கைவிரல்களை நசுக்கினார்கள். அவன் விழுந்திருந்தால்—அவனுடைய 'கோட்' சுமார் முப்பதடி கீழே யிருந்த மரக்கிளையில் சிக்காமலிருந்தால்—அவன் செங்குத்தாக நூற்றைம்பதடி கீழேயிருந்த பாறையில் விழுந்து அடிபட்டிருப்பான்.

அந்தப் பயங்கரக் காட்சியைக் காணச் சகிக்காது ஈஸூ பார்வையைத் திருப்பிக்கொண்டாள்.

இந்த நிலையில் அவன் துடித்து ஊசலாடிக் கொண்டிருந்தான்; அவனுடைய கைகள் பிடிப் பற்றுத் துவண்டன. அவனது கால்கள் அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தன.

உழவர்கள் திகைப்படைந்தார்கள். அவர்களில் ஒருவன் அவன் மீது கல்லை வீச இருந்தான்; ஆனால் மற்றவர்கள் "வேண்டாம்! அவனை விட்டுவிடுங்கள்!" என்று கத்தினார்கள்.

அக்காட்சியைக் கண்டு ஜேம்ஸ் சிலையானான். இதைவிட கோரமான காட்சியை அவர்கள் கண்டிருக்க முடியாது.

"அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்றான் ஃபான் சுருக்கமாக.

ஏதோ சத்தம் போட்டுப் பேசிக்கொண்டே அந்தப் போக்லோ குடியானவர்கள் புறப்பட்டார்கள். எல்லையைத் தாண்டிச் செல்லும் வழியில் எதிர்பாராத விதமாக டெங்பிங்கைச் சந்தித்ததும் அவனை ஒழித்துக் கட்டினார்கள்.

பசிதாகத்தினால் களைத்துப்போய் உயிருக்குப் போராடும் அந்தக் கமிஷனர் எவ்வளவு நேரத்துக்கு இவ்வாறு தாக்குப்பிடிக்க முடியும்? இதைவிட இவர்களோடு அவன் தனியாகப் போராடி உடனடியான மரணத்தைத் தழுவி இருக்கலாம்.

அவர்கள் முற்சந்தியில் வந்து நிற்க வேண்டியதாயிற்று. ஏனென்றால் அங்கு ஸ்வாட் தன் கணவனின் மார்பில் சாய்ந்து அழுதுகொண்டிருந்தாள்.

ஜேம்ஸும் ஃபானும் அவர்களிடம் சென்றனர். சாங்ஃபூ கண்களில் கோபம் கொப்பளிக்க பேச முடியாமல் திணறிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். சாங்ஃபூவுக்கு மூச்சு வாங்கியது. தன் தாயாரைத் துன்புறுத்திய—தன் மைந்தனின் சாவுக்குக் காரணமான டெங்பிங்கை அவனால் எப்படி மறக்க முடியும்?

அசாவையும் ஜேம்ஸையும் சுட்டிக்காட்டி, தன் கணவனிடம் "இவர்கள்தான் என் உயிரைக் காப்பாற்றினார்கள்" என்றாள் ஸ்வாட்.

சாங்ஃபூவின் அசைவற்ற முகத்தில் எவ்விதச் சலனமும் ஏற்படவில்லை. அவனுக்கு அப்போதும் மூச்சு இரைத்துக்கொண்டுதான் இருந்தது. அவள்

பேச்சை அவன் செவி சாய்த்ததாகவே தோன்ற வில்லை.

"அவர்கள் என்னைக் காப்பாற்றினார்கள். அவர்களுக்குத் தாங்கள் நன்றி கூறப் போவதில்லையா?" என்று கேட்டாள் அவள்.

கடைசியில் அவன் முகத்தில் நன்றியுடன் புன்னகை இளகியது; கைகளை ஒன்றுசேரக் குவித்து அவர்கட்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தலைவணங்கினான்; அவனால் அதை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை.

"நம் ஜனங்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள்?" என்று கேட்டாள் ஸ்வாட்,

"சுதந்திர நகரத்துக்கு!" என்று விடையளித்தான் அவள் கணவன்.

"அப்படியென்றால், நீங்களும் எங்களுடன்தான் வரவேண்டும்."

தன் கணவனின் காதோடு ரகசியமாகப் பேசினாள் ஸ்வாட். சாங்ஃபூவும் உடனடியாக ஒரு முடிவுக்கு வரவேண்டியவன் ஆனான்; ஆகவே, தன் ஆட்களுடன் கலந்து பேசச் சென்றான்.

ஆழமான பள்ளத்தாக்கின் மரக் கிளையில் தொங்கிக் கொண்டிருந்த உருவத்தைக் கண்ணோட்டமிட்டான் ஜேம்ஸ். இப்போது அவனைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை. டெங் தன்னை விடுவித்துக் கொள்ள பெரு முயற்சி செய்து, மரக்கிளையைப் பற்றிக்கொள்ள மேல்நோக்கித் தாவி வந்தான். அவனுடைய 'கோட்'டைத் தடுத்துக்கொண்டிருந்த மரக் கிளையை அவனால் எட்டிப் பிடிக்க முடியவில்லை;

மரம் மட்டும் தாவி ஏறி வருவதற்கு வசதியாக இருந்தது, அவன் தாவிப் பற்ற முயன்ருன். தூக்கிய அவனது வலது புஜத்திஞல் எதையும் எட்டிப் பிடிக்க முடியவில்லை; ஆகவே அவன் மீண்டும் கீழே நழுவி விழுந்தான்.

ஜேம்ஸ் மெதுவாகத் தன் கைப் துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்தான். ஒரு ரவை வெடித்தது. டெங்கின் உடல் துவண்டு மரத்தில் தொங்கியது. எல்லோரும் பார்ப்பதற்குத் திரும்பினூர்கள். துப்பாக்கிக் குண்டின் அடியிஞல் உடல் துடித்தது. ஆஞல் தலையும் கைகளும் தொங்கிவிட்டன. அந்த உடல் மரத்தில் அப்போதும் தொங்கிக்கொண்டிருந்தது. அவனுடைய நெற்றிப் பொட்டில் குண்டு பாய்ந்த இடத்திலிருந்து பொங்கிய ரத்தம் அவளது 'கோட்' டையும் கைகளையும் சிவப்பாக்கிக் கொண்டிருந்தது.

ஈஸூ திரும்பி தன் கரங்களால் முகத்தை மூடிக் கொண்டாள். சாலையிலிருந்த அவர்கள் மீது நிழல் விரித்தவாறு சூரியன் மலைவாயிலில் இறங்கிஞன்.

"நாம் அவனுக்குக் கருணை காட்ட இதுவே சிறந்த வழி" என்று ஈஸூவின் பக்கம் திரும்பி மெதுவாகக் கூறிஞன் ஜேம்ஸ்.

அத்தியாயம் 16

மலைப் பிராந்திய நிலைகளுக்கு ஏற்ப பிலிங்சூன் சத்திரம் வசதியாக அமைந்திருந்தது. முகட்டினின் றும் தொங்கிய பச்சை நிற மூடியுடன் கூடிய பழைய எண்ணெய் விளக்கு ஒன்று நடுவிலிருந்த மேஜைமீது பிரகாசமான ஒளியை பரப்பியது.மூலையில் மற்றொரு மேஜை இருந்தது. அறை ஈரமின்றி கதகதப்பாக இருந்தது. சமையல்கட்டு பின்புறத்தில் இருந்தது; சிறிது தூரத்தில் வெளியே நீண்டிருந்த உயர்ந்த செங்குத்தாக பாறையின் பக்கமாக சன்னலொன்று இருந்தது. வெள்ளையடிக்கப்பட்டிருந்த சுண்ணும்பு மங்கிப்போய் இங்கும் அங்குமாக வெடிப்புக்கண் டிருந்த சுவர்களிலே ஈரடிச் செய்யுள்கள் இரண்டு காணப்பட்டன; அவை சிவப்புத்தாளில் எழுதப் பட்டிருந்தன. நெடுங்காலமாகிவிட்டதால் நிறம் மாறிப்போயிருந்தன; கையெழுத்தும் மோசமாக இருந்தது. இருப்பினும், அது சத்திரத்தின் தொன் மையை உணர்த்தியது. அவை, வழிப்பயணம் செய் வோர்களுக்கான பண்டைய, பிரசித்தமான மூதுரை களைத் தவிர வேறொன்றும் இல்லை.

சேவல் கூவிடச் சென்றிடுவாய்;
செங்கதிர் சாயுமுன் சேர்ந்திடுவாய்!

அடுத்த வாசகம்:

ஒவ்வொருவனும் அயலான் கூரைப்பனி துடைக்காது;
தன்வாசற்பனி துடைக்கட்டும்!

சத்திரப் பொறுப்பாளன் ஓர் உல்லாசமனிதன்; எருதுபோன்ற முகம்; ஐம்பது வயதுக்கு மேலிருக்கும் பழையகால தலைக்கவசம் அணிந்திருந்தான். இலாப கரமாகத் தொழில் நடத்துகிறான் என்பதை அவன் முகத் தோற்றம் காட்டியது. தன் விருந்தினர் அனைவரையும் மகிழ்வுடனும் மனப்பூர்வமாகவும் வரவேற்றான்.

பிலிங்சூன் என்றால் செங்குத்தான சுவர்ப்பாறை என்று அர்த்தம். இந்த இடம் வசதிமிக்க முனையில் அமைந்திருந்தது; அங்கே குடியானவர்களும், வேட்டு வர்களும், வழிப் போக்கர்களும் குடிக்கவோ அல்லது ஒரு கோப்பை தேநீர் அருந்தவோ தங்குவார்கள். வடக்கில் செல்லும் குறுகலான ஒற்றையடிப்பாதை ஒன்று அவ்வூரை ஹெங்காங்ஷுவோடு இணைத்தது. ஸஞ்சௌடின் நீர்த் தேக்கத்துக்கும் அடியில் உள்ள நெடுஞ்சாலைக்கும் வழிகாட்டியபடி மேற்குப் பகுதி யின் நேர் இறக்கத்தில் அது மையமாக அமைந் திருந்தது.

பக்கத்திலே சுண்ணும்புக் காளவாய் ஒன்றும் இருந்தது; இந்தப் பகுதியின் செங்குத்துப் பாறை களில் சுண்ணும்பு கற்கள் மலிந்திருந்தன. செங்குத் துப்பாறைகள் பல அதிசயமான அழகிய உருவ அமைப்புக்களாக அரிக்கப்பட்டிருந்தன; கட்டட வேலைக்கும் உரத்துக்கும் இந்தச் சுண்ணும்பு மிகச்

சிறந்ததாக கருதப்பட்டதால், பல ஆண்டுகளுக்கு முன் பாவோ-ஆன் அதிகாரவர்க்கத்தினர் இங்கே காளவாய் அமைத்து வேலை செய்யவும் சுண்ணும்பு எரிக்கவும் ஒரு கூட்டத்தினரை அமர்த்தி, காள வாயை விரிவுபடுத்தியிருந்தனர். இருப்பினும் சென்ற ஆண்டின் காற்று ஊதுலை திட்டத்திலும், சில அதிர்ச்சிமிக்க ஏற்பாடுகளுக்கு மனிதசக்தி தேவைப்பட்டதாலும் அதிகாரவர்க்கத்தின் நிர்வாக சம்மந்தமான மாற்றங்களாலும் இந்தக் காளவாய் கைவிடப்பட்டுவிட்டது.

அவர்களுக்கு உருளைக்கிழங்குகள் பரிமாறப் பட்டன; அரிசிச்சோறு கிடைக்கவில்லை; ஆனால் வெங்காயம் ஏராளமாக இருந்தது. அந்தக் குழுவினர் நகரத்திலிருந்து வந்திருந்ததையும், அவர்களோடு ஆங்கிலேயன் ஒருவன் சேர்ந்திருந்ததையும் அவர் களால் பணம் கொடுக்க முடியுமென்பதையும் அறிந் தான் மலைவிடுதியின் நிர்வாகி. சுதேசி மதுபானத் துடன் உப்பிடப்பட்ட பன்றி இறைச்சியை அவர் களுக்குப் பரிமாறினான். பன்றி இறைச்சி மொரு மொருப்பாகவும் ருசியாகவும் இருந்தது. பரிசுத்த மான மலைக்காற்றினால் ஏற்பட்ட கடும் பசியை அது நிறைவுடன் தீர்த்தது.

அன்றைய களேபரத்தினால் குழுவினர் களைப் படைந்திருந்தனர்.

"சாப்பாட்டுக்குப் பிறகு நீங்கள் அனைவரும் குதூகலமாக இருப்பீர்கள்!" என்று உபசாரம் கூறினான் அந்த விடுதியின் நிர்வாகி.

"ரோந்துப் படையினர் சமீபத்தில் இந்தப் பக்கம் வந்தார்களா?" என்று கேட்டான் சைசாம்.

"இல்லை; ஒரு வாரத்திற்கு முந்தி இராணுவ வீரர்கள் சிலர் மது அருந்த வந்தார்கள். அவர்கள் சிறிது நேரம் மாடியில் தங்கினார்கள். பிறகு போய் விட்டார்கள்."

அவன் கபடமாக கண் சிமிட்டியதை ஈஸு கவனித்தாள்.

உணவு பரிமாறிய அதேபெண் இப்போது, எண்ணெய்பசைமிக்க அழுக்குத் துணியால் மேஜை யைத் துடைத்துக்கொண்டிருந்தாள். கன்னத்து எலும்புகள் நீண்டு அவலட்சணமாக இருந்தாள். அவளுக்கு வயது முப்பது என்றும் அவள் ஒரு விதவை என்றும் வழிகாட்டி அவர்களிடம் சொன் னான். அவளுடைய தலைமயிர் பெண்வாத்தின் வால் நுனிபோல் குட்டையாக வெட்டப்பட்டிருந்தது. அவள் குனிந்து மேஜையை அழுத்தித் துடைத்த போது அதைத் தொட்டு நின்ற அவளது முழு வளர்ச்சிப்பெற்ற மார்பகங்களைத் தவிர, அவளிடம் பெண்மைக்குரிய லட்சணம் வேறெதுவுமில்லை.

அவள் இதைச் செய்துகொண்டிருக்கையில், அறையிலிருந்த ஒரே ஒரு பிரம்பு நாற்காலியில் தன் தந்தையை அமரச் செய்துகொண்டிருந்தாள் ஈஸு. நாற்காலியின் நடுப்பகுதி தொய்ந்து இருந் தது. ஒரு பக்கம் ஒடிந்திருந்தது. நடையின் காரணமாக முற்றிலும் சோர்ந்து போயிருந்தான் டுவான்.

"நான் சரியாகிவிடுவேன். மதுவினுல் பலம் பெற்றிருக்கிறேன்" என்று தன் மகளிடம் ஆறுதலாக சொன்னுன்.

விடுதி நிர்வாகி அந்த அம்மணியிடம், "சுடுதண்ணீர் மீத மிருக்கிறது; அதைச் சுத்தமாகத் தேய்த்துக்கழுவு. இரண்டு மேஜையையும் சேர்த்து ஒன்ருகப் போடலாம்; ஒருவர் படுப்பதற்கு அது சௌகரியமாக இருக்கும்" என்று கட்டளையிட்டுக் கொண்டிருந்தான்.

பிறகு அவன் விருந்தினர்பக்கம் திரும்பி;

"எப்படி நீங்கள் ஏற்பாடு செய்துகொள்ளப் போகிறீர்கள் என்றுதான் தெரியவில்லை. மாடியில் இரண்டு படுக்கைகள் உள்ளன. எனக்கு நிச்சயமாகத் தெரியும்-பெண்கள் அந்த அறையில் தங்கவே விரும்புவார்கள்; சுண்ணும்புக் கிடங்கில் படுக்கும் இடங்கள் இருக்கின்றன.ஆனுல் அங்கே குளிராகவும் ஈரமாகவும் இருக்கும், தவிர அங்கு விளக்கும் இல்லை" என்ருன்.

படுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வயதான டுவோனும் அவனது பேரனும் ஒரே மெத்தையில் படுத்துக்கொள்வதென்றும் மற்றொன்றை லெய்வாவும் ஈஸாவும் பங்கிட்டுக்கொள்வதென்றும் முடிவு செய்தனர். மரியாதைக்கு உபசாரமொழிகளைப் பரிவர்த்தனை செய்துகொண்டபிறகு மேஜைமீது போடப்பட்டிருந்த படுக்கையில் தான் படுத்துக் கொள்ள இணங்கினுன் ஃபான். பிரம்பு நாற்காலியும் கால் நீட்ட ஒரு விசுப்பலகையும் கிடைத்தாலே போதும், தான்மிகவும் சந்தோஷமாகத் தூங்கமுடியு

மென்று ஜேம்ஸ் சொல்லிவிட்டான். மற்றவர்கள் சுண்ணும்புக் கிடங்குக்குச் சென்றுர்கள்.

அந்த அம்மாள் மேஜைமீது ஒரு பாயையும் அழுக்கடைந்த சிறு மெல்லிய மெத்தையையும் விரிக்கலாஞள். "பரவாயில்லே, நான் பார்த்துக் கொள்கிறேன் நீங்கள் சிரமப்படவேண்டாம்" என்று அவளிடம் ஃபான் சொல்லிவிட்டான். அவளும் சரி என்று சென்று விட்டாள்.

சத்திர நிர்வாகியும் அவன் மனேவியும் அவர்களுக்கு நல்லிரவு வணக்கம் சொல்லிப் பிரிந்தார்கள்.

"இன்று நான் பிடிக்கும் நாலாவது சிகரெட் இது. நமக்கு இது தேவைதான். இல்லேயா?"—சிகரெட் பெட்டியை ஃபான் பக்கம் நீட்டியபடி, ஜேம்ஸ் சொன்ஞன்.

விளக்கொளியில் சுருண்டு செல்லும் வெண்மையான மெல்லிய புகையைக் கவனித்தபடி அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

டெங்பிங்கைப்பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஃபான் சொன்ஞன்:

"இன்னமும் எனக்கு அது ஆறவில்லே. நல்ல காரியம் செய்தீர்கள்! அந்த நாயைச் கட்டு ஒழித்தீர்கள்."

"அவன் துன்பத்திற்கும் ஒரு முடிவு கட்டவேண்டாமா?—அதற்காகத்தான்!....உடனடியான நீதி கிடைத்துவிட்டது! இல்லேயா?"

ஃபான் வெடுவெடுப்பான புன்னகை புரிந்தான். "அது உங்கள் விருப்பம்! கம்யூனிஸ்டுகள் செய்த

காரியங்களை நாமெல்லாம் எப்பொழுதும் செய்ய இயலாது. சில சமயம் நிதானமாக வழங்கப்படும் நீதி மிகவும் பயங்கரமானதாக இருந்துவிடுகிறது. 1950-ல் அவர்கள் ஒரு பிரபலமான செளமின்டாங் தளபதியைப் பிடித்தார்கள். அவனை அவர்கள் என்ன செய்தார்களென்று உங்களுக்குத் தெரியுமா? அவர்கள் அவனைச் சுட்டார்களா? அதுதான் இல்லை!'' என்றான் அவன்.

"பின்னே என்ன செய்தார்கள்?"

"மக்கள் எள்ளி நகையாட வேண்டுமென்பதற்காக முதலில் 'ஏகாதிபத்தியக் கொள்கை கொண்ட பண்ணைய விதூஷகன் அணியும் தொப்பியை அவனுக்கு அணிவித்து, டாய்ஷான் வீதிகளின் வழியாக அணி வகுத்து அவனை அழைத்துச் சென்றார்கள். பிறகு அவர்கள் அவனைச் சவுக்கால் அடித்து, பிறகு செக்கு நுகத்தடியில் அவன் ஒரு பக்கமும் எருது மற்றோர் பக்கமுமாகப் பூட்டினார்கள். அவன் சாகும் நிலையை அடையும்வரை, அவன் ஓய்ந்துபோய் மண்ணில் சாயும்வரை அவனை சுற்றிச் சுற்றி எருதுடன் ஓட்டினார்கள். மூச்சு வாங்க அவன் நிற்க விரும்பியபோது, எருது தொடர்ந்துசென்றது; எருதைக் காட்டிலும் அவனைத்தான் அவர்கள் அதிகமாகச் சவுக்கால் அடித்தார்கள். எருது அலறியது; அங்கு நடந்து கொண்டிருந்ததை எண்ணி அது ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். எருது கண்ணீர் வடித்ததைத் தாங்கள் பார்த்ததாகக் கிராம மக்கள் பலர் சொன்னார்கள். எருதுகள் கூட கண்ணீர் விடுவதுண்டா? பாவம் அந்தப் பேதையின் தோள்கள்

வழுவுண்டுவிட்டது. சவுக்கடியினுல் அவன் முதுகு வீங்கிச் சிவந்து நீலம் பாரித்துப் போய்விட்டது. ஏழுநாள் சித்ரவதைக்குள்ளாகி அவன் மாண்டான்''

மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் உடலை நாம் மறக்கவே முடியாது. பாவம்! டெங்பிங் கெட்ட மனிதன் என்று நான் சொல்லமாட்டேன். ஒரு கமிஷனர் என்ன செய்ய வேண்டுமென்று அரசாங்கம் விதித்ததோ அதையே அவன் செய்தான். ஆனுல் தயை இல்லாதவன்; யோக்கியமற்றவன். இரக்க உள்ளம் கொண்ட அன்பும், மனிதாபிமானமும் மிகுந்த மனிதர்கள்உடனடியாகக் களையெடுக்கப் பட்டுவிடுகிருர்கள். கடின இதயம் கொண்ட தலைவர்களும் அவர்களுடைய அடிவருடிகளும் மட்டும் தப்பிப் பிழைத்துவிடுகிருர்கள். அம்மாதிரியான முறையைச் சேர்ந்த அமைப்பு அது!........

"நீங்கள் டெங்பிங்கின் தகப்பனுருக்குப் பணம் கடன் கொடுத்தது பற்றியும் விசாரணை பற்றியும் கூறினீர்களே!"

"என்னுல் மறக்கவொண்ணுத கோர்வையான ஒரு நிகழ்ச்சியை நான் உங்களுக்குச் சொல்கிறேன். இன்று பிற்பகல் நாம் எல்லோரும் அவனைச் சுற்றி உட்கார்ந்தபோது, அவன் எவ்வளவு பீதியடைந்தான் என்பதை நீங்கள் பார்த்தீர்களே? நீங்கள் அவனை அப்போதே சுட்டு வீழ்த்தப்போகிறீர்கள் என்று அவன் நினைத்தான். அது என் சம்பந்தமான பொது விசாரணையை நினைவுபடுத்தியது."

"நல்லது, நான் ஒரு ஏழையின் ரத்தத்தை உறிஞ்சும் அளவுக்குக் கடும் வட்டி வாங்குபவன்

என்பது. மற்றக் குற்றச்சாட்டுகளுடன் சேர்த்து என்மீது சுமத்தியதாகும். என் தாத்தா காலத்தி லிருந்து நாங்கள் எத்தனை பேருக்குப் பணம் கொடுத் திருந்தோம் என்பதைக் கடவுள் அறிவார். தேவை ஏற்படும்போது எங்களுடைய சுற்றத்தார்கள், பணி யாட்கள், நண்பர்கள் எல்லோரும் எங்களுடைய உதவியை நாடி வந்தார்கள். அவர்கள் டெங்பிங்கின் அப்பாவையும் சேர்த்து பன்னிரண்டுக்கு மேற்பட்ட சாட்சிகளைத் தயார் செய்திருந்தார்கள். நானும் அவனும் சிறந்த நண்பர்களாக இருந்தோம். நாங்கள் டெங்பிங்கின் கல்விக்காகத்தான் பணம் கொடுத் திருந்தோம்; கடனுக்காக அல்ல என்பதை அவன் அறிவான். ஆயினும் டெங்பிங் தன் தந்தையை எனக்கு எதிராகச் சாட்சி கூறும்படி நிர்ப்பந்தப் படுத்தினன். அவர்கள் என்னை நோக்கி குரங்குகளின் கூட்டம் போன்று உரக்கக் கூச்சலிட்டுக் கொக்க ரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனல், அங்கே தரையில் மண்டியிட்டு கைகளைப் பின்னல் கட்டிய வாறு, ஒருவர்பின் ஒருவராக சாட்சிகளின் கூற்றுக்கு செவிசாய்த்துக் கொண்டிருந்தேன். உடம்பின் வலியும், கூட்டத்தின் கூக்குரலும், மக்களின் அர்த்த மற்ற உளறல்களும் ஒரு மனிதன் சகிக்க முடியாத அளவுக்கு இருந்தன. மற்றவர்களைச் சுட்டதைப் போல் என்னையும் சுடப்போகிருர்கள் என்றுதான் நான் நினைத்தேன். டெங்பிங் மனத்தில் வைத் திருந்தது அதுவல்ல, அது வேறு என்பதை சிறிது நேரம் வரை நான் புரிந்துகொள்ளவில்லை.

"குற்றத்தை வெளிப்படையாக ஒப்புக்கொள்கிருயா?"—சதுக்கத்தில் அமைக்கப்பட்ட தற்காலிக மேடையிலிருந்து டெங்பிங் கத்திஞன்.

"ஒப்புக் கொள்ளும் அளவுக்கு நான் ஒன்றும் செய்யவில்லை" என்று நான் பதிலளித்தேன். எனக்கு என்ன நேரப்போகிறது என்பதைப் பற்றி நான் உண்மையிலேயே லட்சியம் செய்யவில்லை.

"நன்று, 'அவனை ஒரு மூலைக்கு இழுத்துச் செல்லுங்கள்' என்று அவன் கத்திஞன். நீங்கள் வரிசையில் அவனை விட்டு அப்பால் நில்லுங்கள். அவன் முகத்தில் ஒவ்வொருவராகக் காறி உமிழ்ந்து அதன் மூலம் கட்சியிடம் உங்களுக்குள்ள பற்றைத் தெரிவியுங்கள். பிற்பாடு அவனை நான் கவனித்துக்கொள்கிறேன்" என்ருன்.

"உண்மையிலேயே அது மிகப் பயங்கரமானதாக இருந்தது. ஆனுல், சிறிது நேரம் என்னுடைய உணர்ச்சியே மரத்துப் போயிருந்தது. நான் எதையுமே உணரவில்லை.

"அடுத்து டெங்பிங் தன் தந்தை வந்துகொண்டிருந்ததைப் பார்த்தான். இது அவர் முறை. என் முகத்தில் அவர் உமிழ்வதற்காக எனது தலையை நிமிர்த்தினேன். ஆனுல் அவர் தயங்கி நின்றுவிட்டார். அவர் என்னை நோக்கிஞர். நான் அவரை நோக்கினேன். எங்களது கண்கள் சந்தித்தன. 'விரைவில் வருக, இது உங்கள் முறை' என்று நான் கூறினேன். அவர் என்னைப் பார்த்தார். அவர் விழிகளில் கண்ணீர் தளும்பியிருந்தது.

'வாருங்கள் அப்பா, உங்கள் காரியத்தை முடியுங்கள்' என்று டெங்பிங் அவரைப் பார்த்துச் சொன்னான்.

அப்போது டெங்பிங்கைப் பார்த்து நான் என்ன நினைத்தேன் என்பதை உங்களுக்கு நான் கூற இயலாது. ஆனால், அவன் தந்தை நினைத்தது நான் நினைத்ததைவிட மோசமானது என்பதை நான் அறிவேன்."

'மகனே, உனக்குக் கல்வி புகட்டியவனின் மேல் காறி உமிழ்வதற்கு என்னிடம் எச்சில் கிடையாது' என்று அவர் கூறினார். இதைக் கூறிவிட்டு, அவர் அநேகமாக மூர்ச்சையடைந்துவிட்டார். அவர்கள் அவரைஅவ்விடம் விட்டு தூக்கிச்செல்ல வேண்டியதாயிற்று.

"இதுதான் நான் என்றும் மறக்க இயலாதது!" என்று முடித்தான் ஃபான்.

சத்திரப் பொறுப்பாளனின் மனைவி கதவின் வழியாகத் தன் தலையை நீட்டிக் கூறினாள்: "உங்களுக்கு அவசியமில்லை என்றால் விளக்கைக் கொஞ்சம் தாழ்த்தி வைப்பீர்களா?"

அவர்கள் அப்படியே செய்து விட்டு, தாங்கள் எங்கிருக்கிறோம் என்பதையும் மறந்து, சீக்கிரமே தூக்கத்தில் ஆழ்ந்தார்கள்!

அத்தியாயம் 17

மேல் மாடியில் கேட்ட அரவத்திஞல் ஜேம்ஸ் விழித்துத் தன்னுடைய நாற்காலியில் நெளிந்தான். ஃபான் பலமாகக் குறட்டை விட்டபடி மேஜைமீது தூங்கிக்கொண்டிருந்தான். அவனுடைய மீசையின் மேல்முனை ஒரே சீராக அசைந்துகொண்டிருந்தது. நாற்காலிமீதும் விசுப்பலகைமீதும் சற்று அமர்ந்தும் சற்று தூங்கியும் இரவைக் கழித்ததால் ஜேம்ஸுக்கு இரவு பூராவும் உடம்பு வலித்தது.

காலை நீட்டிப் படுத்திருந்த இரு உருவங்களுக்கு இடையில் உள்ள குறுகலான வழியே, நீர் நிரம்பிய போகணியைக் கையில் தூக்கிக்கொண்டு, இரவு பரி மாறிய அப்பெண் கவனமாக கால் வைத்து நடந்து மாடிக்குப் போய்க்கொண்டிருந்தாள். வெளியே யாரோ ஒருவனுடன் ஸ்வாட் பேசிக்கொண்டிருந்தது ஜேம்ஸின் காதில் விழுந்தது.

கோட்டைக் கழற்றி எறிந்துவிட்டு, தன் முதுகு வலி தாங்காமல் இடுப்பில் கையை வைத்து அழுத்திக் கொண்டு நின்ருன் அவன். கீழே படுத்துக் கிடப் பதைவிட அமர்ந்திருப்பதோ நிற்பதோ அவனுக்கு சௌகரியமாக இருந்தது.

அவன் தாழை விலக்கிக் கதவைத் திறந்தபோது அந்தப் பணிப் பெண் திரும்பி வந்து அவர்களைக் கடந்து அவசரமாகச் சென்றாள்.

மனத்தை உருக்கும் காட்சி ஒன்று அவனை வரவேற்றது. ஆஜானுபாகுவான தன்னுடைய கணவனுக்கு எதிரில் நின்று அவனது தோள்களில் இருந்த வெள்ளைப் புள்ளிகளைத் துடைத்தெடுக்க முயன்று கொண்டிருந்தாள் ஸ்வாட். அதற்குப் பதிலாக சாங்ஃபூ, ஸ்வாட்டின் தலைமுடியிலிருந்து சுண்ணாம்புச் சில்லுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தான். அவர்கள் சுண்ணாம்புக் கிடங்கில் உறங்கச் சென்றிருந்தனர்.

"எப்படி இருக்கிறீர்கள்? நன்றாகத் தூங்கினீர்களா" என்று ஜேம்ஸ் விசாரித்தான்.

"மிகவும் நன்றாகத் தூங்கினோம்" என்று அமரிக்கையாக தன் பெருங்குரலில் சாங்ஃபூ பதில் சொன்னான்.

ஸ்வாட் உதட்டைக் கடித்துக்கொண்டாள்; தர்மசங்கடமான நிலைக்கு ஆளானாற்போல ஒரு ஓரமாகத் திரும்பிக் கொண்டாள்.

இப்போது அசாய் அவர்களை நாடிக் குதித்து வந்தான்; அவனுடைய தலைமயிரும் உடம்பும் சுண்ணாம்பினால் மூழ்கடிக்கப்பட்டிருந்தது. சுண்ணாம்புக் கிடங்கிலிருந்து வந்த குறுகிய பாறை மயமான பாதை வழியே அவன் வந்து கொண்டிருந்தான்.

"ஏ, ஸ்ப்ரௌட் இறங்கிவா."

ஜேம்ஸ் அண்ணாந்து பார்த்தான். ஈஸாவும் அவள் சகோதரர் மகனும் திறந்திருந்த ஜன்னலி

விருந்து அவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"நேற்று இரவு நீ எப்படித் தூங்கினாய்?" என்று உரக்கக் கத்தினான் ஜேம்ஸ்.

"மூட்டைப்பூச்சிகள் நிறைந்திருந்தன."

ஜன்னலிலிருந்து உருவங்கள் மறைந்தன. ஜேம்ஸ் வீட்டிற்குள் சென்றான். ஃபான் முன்னமேயே எழுந்துவிட்டிருந்தான்: அந்தப் பெண் மேஜையைக் காலி செய்து கொண்டிருந்தாள்.

டுவானுக்கு லேசாக ஜுரம் அடித்தது; அவனுக்குச் சூடான தேநீர் வாங்கிக்கொண்டு போக ஈஸா கீழே வந்தாள்.

"ஜுரம் கடுமையாக இருக்கிறதா?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"எனக்கு அவ்வாறு தோன்றவில்லை. அவர் களைப்பாகவும் பலஹீனமாகவும் இருப்பதாகச் சொன்னார். அவ்வளவுதான், கடும் அலைச்சலாலும், மன உளைச்சலாலும் அவ்வாறு ஏற்பட்டிருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்."

"உன் தகப்பனார் உடல் நலமில்லாமல் இருந்தால் இன்றைக்கு நாம் புறப்படக் கூடாது, நான் அவருடன் பேசுகிறேன்" என்று ஈஸாவிடம் ஃபான் சொன்னான்.

அவன் மேலே போய் லெய்வாவைப் பார்த்தான். அவள் தன் உதட்டுக்குச் சாயம் பூசிக்கொண்டிருந்தாள், அந்தப் பெண்கள் இருவரும் இரவு மூட்டைப்பூச்சிக்கடி பொறுக்காமல் தங்கள் துணிகளை விரித்துப் படுத்துத் தூங்கினார்கள் என்பது விளங்

கியது. ஜன்னல் வெளிச்சத்தில் டூவானின் முகம் வெளுத்து சோர்வடைந்திருந்தது தெரிந்தது; ஆயினும் அதில் அபூர்வமானதொரு அமைதி தேங்கி நின்றது காணப்பட்டது, கண்களைச் சிமிட்டிக் கொண்டு அவன் ஃபானை நோக்கி சாந்தமாக மெல்லிய புன்னகை செய்தான்.

"இப்போது உங்கள் உடல்நிலை எப்படி இருக்கிறது?" என்று ஃபான் கேட்டான்.

"அவ்வளவு சுகமாக இல்லை; ஆனாலும் என் உடல்நலம் சரிப்பட்டுவிடும்" என்று கூறிச் சற்று இருமினான்.

"உங்களுக்கு உடல்நலம் ஒத்துவராது என்று தோன்றினால், இன்றைய பாட்டுக்கு இங்கேயே தங்கிவிடுவோம்!"

"நான் வருந்துகிறேன். நாம் இன்னமும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டியிருக்கிறது?"

"இதோ பாருங்கள் நீங்கள் வருத்தப்படாதீர்கள். ஈஸூவும் நானும்-ஏன் நாங்கள் எல்லோருமே உங்களுக்கு வேண்டியதைச் செவ்வனே செய்து கொடுப்போம். உண்மையில் நாம் சுதந்திர நகரத்திற்கு பன்னிரண்டு அல்லது பதினைந்து மைல் தூரத்தில்தான் இருக்கிறோம். சென்ற இரண்டு-மூன்று தினங்களிலே நாம் வெகுதூரம் கடந்திருக்கிறோம். இரண்டொரு நாள் நாம் தங்கிச் செல்வதால் ஒன்றும் முழுகிப்போய்விடாது. நம்முடைய அதிர்ஷ்டம் சரியாக இருந்தால் சனிக்கிழமை இரவு நாம் அங்கே இருக்கலாம்!"

சூடான தேநீர் நிரம்பிய பாண்டத்துடன் ஈஸு மேலே வந்தாள். அவள் டூவானின் தலையையும் பிறகு அவன் நாடியையும் தொட்டுப் பார்த்தாள்.

"அப்பா, உங்களுக்கு விரைவில் குணமாகிவிடும்" என்றாள் அவள். "எங்களிடம் உஷ்ணமானி இல்லை. ஆனாலும் நீங்கள் நல்லபடியாக ஆகிவிடுவீர்களென்று எனக்குத் தெரியும்."

"நான் சற்று ஓய்வு கொள்கிறேன்; நீ ஸ்ப்ரௌட்டைக் கவனித்துக்கொள்; எப்போதும் அவனுடன் யாராவது இருக்கும்படி பார்த்துக்கொள்"

பிறகு தன் சிநேகிதன்மீதும், மகள் பேரிலும் கண்ணோட்டம் பதித்தான் டூவான். "நேற்றையச் சம்பவம் என்னைச் சிந்திக்கச் செய்தது. வழியில் ஏதாவது நேரிடலாம். ஷெக்டின்! ஈஸு! இப்போது என்னுடைய ஒரே நம்பிக்கை அந்தப் பையன்தான். ஸ்ப்ரௌட்டை வளர்த்து அவனை நன்கு படிக்க வைப்பதாக நீங்கள் உறுதி கூறுவீர்களா?"

"நீங்கள் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? நாம் ஹாங்காங்கில் சனிக்கிழமை இரவு அல்லது கடைசிப்பட்சமாக ஞாயிற்றுக்கிழமை இருப்போம்."

"நான் இப்போதுதான் யோசித்துக் கொண்டிருந்தேன். கடைசி இரண்டு மூன்று நாட்கள்தாம் மிகவும் கடினமானதாக இருக்கும்—அப்பால் எல்லையை அடைந்துவிடலாம்!"

"கவலைப்படாதீர்கள். அந்த 'எருமை' (வழிகாட்டி ஸைசாம்) வழியை அறிவான். இதில் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை."

அவர்கள் கீழே இறங்கி வந்தபோது, ஸைசாம் சமையற்கட்டிலிருந்து உள்ளே வந்தான். ரூவான் உடல்நலக் குறைவுடன் இருந்ததை அவனும் அறிவான்.

"நீங்கள் இன்றைக்குப் புறப்பட வேண்டுமென்று நான் கோரவில்லை. முதலில் நான் போய் ஆகவேண்டிய காரியங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். சின்ன சஞ்சௌவும் பெரிய சஞ்சௌவும் ஆன இப்பகுதி மிகவும் ஆபாசமானதாகும். உங்களோடு பெண்களும் பையன்களும் இருக்கிறார்கள். ஆண் பிள்ளைகளாக இரண்டு அல்லது மூன்று ஆட்கள் மட்டுமே இருந்திருந்தால்...........அது வேறு விஷயம் ஆம்; இது ஒரு பிரச்னைதான்!...."

"ரோந்துக்காரர்களோடு பேசி வழி செய்ய உங்களால் இயலுமா?" என்று கேட்டான் ஃபான்.

"நான் முயன்று பார்க்கிறேன். அவர்கள் ரோந்துப்படையினரை வெகு அபூர்வமாகவே மாற்றுகிறார்கள். அவர்களில் சிலரை நான் அறிவேன். அதெல்லாம் அங்கு பொறுப்பிலுள்ள ராணுவத் தலைமை உத்தியோகஸ்தரை-சார்ஜண்டைப் பொறுத்திருக்கிறது! கண்ணில் படாமல் தப்பித்துக்கொள்ளும் திறம்படைத்த மிகப் பலரை நான் அறிவேன். வடக்கே மற்றொரு ஒற்றையடிப்பாதை இருக்கிறது, அது ரோந்துப் படைகளின் எல்லையோரமாகச் செல்கிறது; ஆனால் அது மிகவும் கரடுமுரடான பாதை; அவ்வழியாகச் சென்றால் ஒருநாள் கூட ஆகும்."

"அங்கே உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களாவென்று பாருங்களேன்!"

"அவர்கள் எல்லோரும் ஒரே மாதிரிதான். காசைக் கொடுத்தால் சரிதான்; எல்லாம் முடிந்து விடும். இல்லை என்றால் யாராவது ஒரு நண்பரைக் கொண்டு விஷயத்தை முடிப்பது சுலபமானதாக இருக்கும்!"

"போக்லோ குடியானவர்கள் எங்கே இருக்கிறார்கள்?"

"எனக்குத் தெரியவில்லை. இரவில் அவர்கள் முன்னால் சென்றிருக்க வேண்டும். அவர்களின் படு முட்டாள்தனமான காரியம் இது. இங்கேவாருங்கள் உங்களுக்கு கோலநட்டைக் காட்டுகிறேன்."

குழுவினர் அவனைப் பின் தொடர்ந்தனர். நூறு கஜத்துக்கு அப்பால், தேய்ந்த தடத்தின் ஒரு முனைக்கு அவர்கள் வந்தார்கள். அங்கிருந்து மலைச் சிகரமும்—அதில் அமைந்துள்ள தொலை நோக்கி மட்டும் நன்றாகத் தெரிந்தன. மேற்கே தள்ளியிருந்த மற்றொரு தாழ்வான சிகரத்தையும் அவர்கள் தெளிவாகக் கண்டனர்.

"கோலநட்டிலிருந்து சற்றுக் கீழே இறங்கினால் போதும் எல்லை தென்பட்டுவிடும். கடைசிவரையில் நான் உங்களுக்கு துணைக்கு வரவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா?"

"ஆமாம்; எல்லைவரைக்கும் துணையாக வந்தால் தான் முடியும்"

"நீங்கள் எல்லோரும் அனுமதிச் சீட்டுகள் வைத்திருக்கிறீர்களா?"

"என்ன அனுமதிச் சீட்டு?"

"எல்லைக்குச் செல்வதற்குண்டான அனுமதிச் சீட்டுக்கள், அல்லது பாஓ—ஆன் மாவட்டக் குடியிருப்புச் சீட்டுக்கள்!"

"அசாய். ஸ்வாட், அவள் புருஷன் ஆகியோரைத் தவிர மற்ற எல்லோருக்கும் அனுமதிச் சீட்டுகள் இருக்கின்றன. அவர்கள் மூவரும் வெய்ச்சோ, போக்லோ வசிப்பிடச்சீட்டுகள் வைத்திருக்கின்றனர்" என்று ஃபான் சொன்னான்.

உங்கள் வெள்ளைக்கார நண்பரைப்பற்றி என்ன?" ஸைஸாம், ஜேம்ஸின் பக்கம் கனிவான பார்வையை வீசினான்.

"தன்னுடைய தஸ்தாவேஜுகளுடன் அவர் ஒரு நல்ல துப்பாக்கியையும் வைத்திருக்கிறார்."

வழிகாட்டி சைசாமுக்கு அவன் கூறியது பிடிக்கவில்லை.

"அவர் துப்பாக்கியை உபயோகப்படுத்தப் போவதில்லை, ரோந்துப் படையினருடன் நீங்கள் ஏற்பாடு செய்து கொண்டு விட்டால் அவர் அதை உபயோகிக்க அவசியம் ஏற்படாது!"

கையில் முகவாய்க்கட்டையை ஏந்தினான் ஸைஸாம். இறுதியாக அவன் சொன்னான்: "என் ஆலோசனையை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களென்று நம்புகிறேன். வடக்கே ஒரு தேய்ந்த பாதை இருக்கிறது; அங்கே ரோந்துப் படைகள் இல்லை. ஆங்கிலேயர், அசாய், ஸ்வாட், அவள் கணவர் ஆகியோர்களிடம் அவர்கள் எந்த வழியாகச் சென்று எங்கே நிற்பது, நமக்காக எங்கே காத்திருப்பது என்பதை நான் சொல்லிவிட்டால். அவ்வழியே அவர்கள்

செல்ல இயலுமென்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. அதனுல் நான்கு அல்லது ஐந்து நபர்களுக்கு வசிப்பிடச் சீட்டுகள் கிடைக்கும். மேற்கொண்டு ஏற்பாடுகள் செய்வதற்கு எனக்கும் சுலபமாக இருக்கும். வழி காட்டிகள் முக்கியமாக செய்ய வேண்டிய காரியம், நாம் பாதையைக் கடந்து செல்கையில் விழிப்புடன் கவனித்துக் கொள்ள வேண்டுமென்பதே!...."

"ஜேம்ஸ் படபடத்தான். என்ன செய்யலாம் என்பதைக் கேட்டறிய விரும்புபவனைப் போல் ஈஸாவையும் ஃபானையும் மாறிமாறிப் பார்த்தான்"

"குண்டுகளை வீணுக்கக் கூடாது. இந்த நிலைமையில் காவல் படையினரை விழிப்படையச்செய்யாமல் தப்பவேண்டும்."

ஈஸாக்கு முடிவு செய்வது கஷ்டமாக இருந்தது. சிரமமும் அபாயமும் நிறைந்த இப் பயணத்தை மேலும் ஒருநாள் தொடரும்படி தன் தந்தையிடம் கேட்க அவளுக்கு சங்கடமாக இருந்தது. இன்னமும் தெளிவாகச் சொன்னுல், ஜேம்ஸின் தஸ்தாவேஜுகள் சோதிக்கப்படாமலும் போலீஸ் அவனை கேள்விகள் கேட்காமலும் இருந்தால் சௌகரியமாக இருக்கும் என்று எண்ணினுள்.

ஆகவே தன் தந்தையுடன் போவதென்று தீர்மானம் செய்தாள்.

"நானும் உங்களோடு வருகிறேன். விரும்பினுல் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறேன். நீங்கள் உங்கள் தந்தையை கவனித்துக் கொள்

ளுங்கள். பயணத்தின்போது பையனை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்றாள் ஸ்வாட்;

"நீங்கள் உங்கள் கணவனைப் பிரிந்து வர முடியுமா?'' ஈஸா புன்னகையுடன் கேட்டாள்.

"நீங்கள் உங்கள் கணவரை விட்டுப்பிரிய முடியும் போது, நானும் என் கணவரை விட்டுப் பிரிய முடியும். உங்கள் வேலைக்காரியாக நான் வருகிறேன். அதுதானே முதல் முதலில் செய்து கொண்ட ஏற்பாடு!''

ஜேம்ஸ். அசாய், சாங்ஃபூ ஆகியவர்கள் சுற்றிச் செல்லும் மார்க்கத்தில் செல்லவேண்டு மென்றும், ஏனையவர்கள் நேராகச் செல்ல வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

கீழே ஸஞ்சௌடின் நீர்த்தேக்கம் வெயிலில் பளபளத்துக் கொண்டிருந்தது. அதன் அருகே, வளைந்து வளைந்து வழியைப் பார்த்தார்கள் அவர்கள்; இரண்டு மலைகளையும் பிரித்து பள்ளத்தாக்கின் வழியே ஹெங்காங் பஸ் மார்க்கப் பிரிவுகள் தெரிந்தன.

சத்திரத்தைவிட்டு வெகுதொலைவில் சுற்றித்திரியாதிருக்குமாறு, புறப்படுமுன் அவர்களிடம் சொன்னான் 'எருமை' என்றழைக்கப்பட்ட ஸைஸாம். சத்திரத்தின் வழியே பிரயாணிகள் பலர் கடந்து செல்லக் கூடும்! சுண்ணும்புக் கிடங்குக்கருகில் தங்கியிருக்கலாம்; அவசியமானால், கைவிடப்பட்ட காளவாயில் ஒளிந்திருப்பதும் பாதுகாப்பாக இருக்கும்!''

ஜேம்ஸின் குழுவினர் இருட்டிய பின் புறப்பட்டு, குன்றின் அடிவாரத்தைச் சுற்றிச்சென்று மறுநாள்

அவர்களோடு மீண்டும் சேர்ந்துகொள்வதாக இருந்தார்கள்.

அதற்குச் சம்மதித்து ஸைஸாம் பிற்பகலில் சீக்கிரமாக திரும்பிவிடுவதாகச் சொல்லிப் புறப்பட்டான். காத்திருப்பதைத் தவிர அவர்கள் வேறொன்றும் செய்வதற்கில்லை.

சைசாம் திரும்பிவந்தான்; தன்னுடன் கவலையடையும் செய்தியொன்றையும் கொண்டுவந்தான். ரோந்துக்காரர்கள் ஆத்திரம் கொண்டிருக்கின்றனர். சென்ற இரவு ஒரு சம்பவம் நிகழ்ந்தது, போக்லோ குடியானவர்களில் சிலர் கையில் தடிக்கம்புகளுடன் எல்லையைத் தாண்டிச்செல்ல முயன்றார்கள். உயிரையொட்டிப் போராடிய ஆட்டம் அது. நீர்த்தேக்கத்துக்குப் பாதுகாப்பு உண்டு; இரவில் அங்கு விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும். அவர்கள் மலையைக் கடந்தபிறகு அங்கே ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றங்கரையுடன் நடந்தால் எல்லையைக் கடந்துவிடலாம் என்று அந்தக் குடியானவர்களுக்கு யாரோ சொல்லியிருந்தார்கள். அவர்கள் மலையைக் கடந்தார்கள்; அங்கு தண்ணீரும் இருந்தது. நீர்த்தேக்கத்திலிருந்து தெரிந்த பிரகாசமான விளக்குகளை ஹாங்காங் நகர விளக்குகளென்று தவறுதலாக கருதிவிட்டிருக்க வேண்டும். நான்கைந்து பேர் தண்ணீரில் குதித்துவிட்டார்கள்; உடனே துப்பாக்கிக் குண்டுகள் சுடப்பட்டன. சிலர் எதிர்நோக்கி நீந்தினார்கள்; அவர்கள் எதிர்க்கரையை அடைந்ததும், சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மற்றவர்கள் வெவ்வேறு திக்குகளை நோக்கி நீந்தினார்கள். ஏழு அல்லது எட்டு

காவலாளிகள் கரையைச் சுற்றி ஓடினார்கள். பயங்கரமான சண்டை நடந்தது. காவலாளிகள் இருவர் காயமடைந்தனர்; உழவர்களில் பெரும்பாலானோர் தப்பிவிட்டனர். எல்லாம் முடிந்தபிறகு, நீர்த்தேக்கத்தின் கரையைச்சுற்றி ஐந்துபிணங்கள் சிதறிக் கிடந்தன.

"நான் சார்ஜண்டைப் பார்க்கவே முடியவில்லை; யாரோ வழிப்போக்கனைப்போல் நடித்தேன். காவலாளிகளோடு பேசினேன். சார்ஜண்டின் பெயர் வூ என்று நான் அறிந்தேன். அவர் லாவோவூவாக இருக்கும் பட்சத்தில் அவருடன் நான் பேசி ஏற்பாடு செய்யமுடியும்."

ஃபான் மேஜைமீது விரல்களால் தட்டினான்.

"நாம் என்ன செய்யலாம்?"

"திட்டமிட்டபடி நாம் புறப்படுவோம். நாளைக்குள் அவர்கள் அமைதியடைந்துவிடுவார்கள். எல்லோரும் சரியான அடையாளச்சீட்டுக்களை வைத்துக்கொண்டிருங்கள். முக்கியமாக, அந்த ஆள் லாவோவூவாக இருந்தால் அவனை நான் காசுகொடுத்து சரிக்கட்டிவிட முடியுமென்று கருதுகிறேன். நீங்கள் அனைவரும் நிராயுதபாணிகளாக இருக்கவேண்டுமென்று மட்டும் நான் விரும்புகிறேன்."

"நான் அவ்விடத்தில் இருக்கமாட்டேனே!" என்றான் ஜேம்ஸ் முகத்தில் வரண்ட புன்னகையுடன்.

"அது உண்மைதான்."

சைசாமின் ஆலோசனைப்பிரகாரம் சூரியாஸ்தமனத்துக்கு முன்னால் சாங்ஃபூவோடும் அசாயோடும் ஜேம்ஸ் புறப்பட்டான்; காட்டினூடே நீண்டபாதை

யில் பயணம் செய்வதைப்பற்றி அவன் சட்டைசெய்ய வில்லை. மற்றவர்கள் மறுதினம் புறப்படுவார்கள்.

வீடு கதகதப்பாக இருந்ததால், அவர்கள் கீழ்த் தளத்தில் இருந்த பெரிய அறையில் தங்கியிருந் தார்கள். வயோதிகனுன டுவான் சாப்பாட்டுக்குக் கீழே வந்தான். ஆனால் மற்றவர்கள் சாப்பிட்டு முடிந்த போது, அவன் ஓய்வு எடுத்துக்கொண் டிருந்தான். அக்கம் பக்கமுள்ளவர்கள் யாரிடமாவது பேசலாமென்று சைசாம் வெளியே போய்விட்டான். புதிய விருந்தினர்கள் யாரும் வருவார்கள் என்று தோன்றவில்லை. சீட்டாட விருப்பமுண்டா?'' என்று விடுதி உரிமையாளர் கேட்டார்.

சீட்டு ஆடுவோமா, அல்லது எண்களை ஜோடி சேர்க்கும் ஆட்டம் ஆடுவோமா?'' என்று லெய்வா வைக் கேட்டான் ஃபான்.

''எண்களை ஜோடி சேர்க்கும் ஆட்டம்தான் எனக்குப் பிடிக்கும்'' என்றாள் லெய்வா.

அது ஒரு பண்டைய சீன விளையாட்டு. டோமினேஸ் என்று பெயர், கறுப்புத் துண்டுக்களில் பொறிக்கப்பட்ட எண்களை ஜோடிசேர்த்து விளை யாடப்படும் ஆட்டம் அது.

''ஆஹா! அவைகளும் என்னிடம் இருக்கின் றனவே!'' என்றான் சத்திரப் பொறுப்பாளன்; ''சில சமயம் இராணுவ வீரர்கள் இங்கு வரும்போது பொழுதைக் கழிக்கவேண்டி இதை விளையாடு வார்கள்.''

''டோமினேஸ் அத்துடன் கொஞ்சம் தானியப் பீரும் கொஞ்சம் கொண்டு வாருங்கள்!

நீங்கள் சீட்டு விளையாடுவீர்களா?" என்று ஈஸா வின் பக்கம் திரும்பிக் கேட்டான் ஃபான்.

"ஊஹூம், தெரியாது" என்றாள் அவள். அவள் கத்தோலிக்க மிஷன் பள்ளியில் படித்து வளர்ந்தவள்.

ஈஸா மாடிக்குச் சென்றாள். அவளுடைய தந்தை தன் குடும்பத்தின் பழைய புகைப்படம் ஒன்றை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். சிறுவன் ஸ்ப்ரௌட் விளையாடுவதற்குத் துணை இல்லாததால் தன் தாத்தாவின் வயிற்றில் தலையை பதித்த வண்ணம், கால்களை மேலே இருந்த பலகைக்குமேலே நீட்டி தலைகீழாகப் படுத்துக்கொண்டிருந்தான்.

"சரிதான்! நீ தாத்தாவினிடம் அதுமாதிரி தொந்தரவு செய்யக்கூடாது. என்னுடன் கீழேவா. தாத்தா கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்ளட்டும்?"

"இல்லை. அவன் இங்கேயே இருக்கட்டும்; அவன் என்னைத் தொந்தரவு செய்யவில்லை. நீயும் இங்கேயே இரேன்! அவர்கள் கீழே என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?"

"அவர்கள் டோமினோஸ் ஆட்டம் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்."

"நீங்கள் லெய்வாவிடம் அதிகமாகக் கலந்து பழகவேண்டாமென்று நான் நினைக்கிறேன். அவள் ஒரு மாதிரியான பெண்!

"நான் அறிவேன்."

"நான் உன்னை கிறிஸ்தவப் பெண்ணாக வளர்த்திருக்கிறேன். நீ ஒரு சிறந்த கிறிஸ்தவப் பெண்

ஞகவே இருக்கவேண்டும்! இப்படி உட்காரு, நான் உன்னிடம் பேச விரும்புகிறேன்."

தாத்தாவின் கையிலிருந்து நழுவி புகைப்படத்துடன் பையன் விளையாடிக்கொண்டிருந்தான். அது ஒரு பழைய போட்டோ; அதில் ஈஸு தனது இரண்டு மூத்த சகோதரர்களுடனும் பெற்றோர்களுடனும் ஆறு வயதுச் சிறுமியாகத் தென்பட்டாள்.

ஈஸு படுக்கையின் விளிம்பில் சாய்ந்து உட்கார்ந்தாள். டுவோன் படுக்கையின் மேல் ஊன்றியிருந்த தன் புதல்வியின் கையை எடுத்தான்.

"ஈஸு, நான் உன்னை நம்பித்தான் வாழவேண்டியிருக்கும் என்று ஒரு போதும் எண்ணியதில்லை" என்று அவன் சொன்னான். "நீ ஒரு நல்ல பெண்; அதில் நான் பெருமைப்படுகிறேன். ஜேம்ஸ் வருவதற்கு முன்னால், நான் கவலையுடன் இருந்தேன். நீ இத்தனை ஆண்டுகளாக அவனை எதிர்பார்த்துக் காத்திருந்தாய்; நான் உன்னை ஆசீர்வதிக்க விரும்புகிறேன். ஆனால் அதை எப்படிச் செய்வதென்றுதான் எனக்குத் தெரியவில்லை. இப்படி பக்கமாக வா"

அவன் ஈஸுவின் தலையிலும் பின்பு சிறுவனின் தலையிலும் தனது கையை வைத்து "ஆண்டவன் உங்களை ஆசீர்வதித்து என்றும் ரட்சிப்பாராக!" என்று கூறினான்;

அவனுள் உணர்ச்சிபொங்கி வார்த்தைகள் தொண்டையில் அடைபட்டன; கண்களைத் துடைப்பதற்காக ஒரு விரலை உயர்த்தினான்.

"அப்பா, எல்லாம் சரியாகிவிடும். கவலைப் படாதீர்கள்!"

அவனுடைய நாசித் துவாரங்கள் சிறிது விரிவடைந்தன. "நான் அந்தத் பழைய புகைப் படத்தை பார்த்துக்கொண்டிருந்தேன்!" அவனுடைய கண்கள் தூரத்துப் பார்வையில் லயித்திருந்தன. "அப்போது நம்முடையது ஒரு மகிழ்ச்சியான குடும்பம் இல்லையா? உன் அன்னை போய்விட்டாள்; நான் ஒரு காலத்தில் குடும்பத்திற்காகப் பெரிய திட்டங்கள் தீட்டினேன். ஆனால் உன்னுடைய சகோதரர்களும் விதி வழியே போய்விட்டார்கள். மனிதர்கள் நினைக்கிறார்கள்; கடவுள் நிச்சயிக்கிறார் என்று பழமொழி கூறுகிறது. நான் என்னால் முடிந்த அளவு உங்களுக்குச் செய்திருக்கிறேன். ஆனால் இவைகளெல்லாம் தற்செயலாக நடந்தவை. சிறுவன் ஸ்ப்ரௌட்தான் என்னுடைய வம்சத்திற்கு விதை. நான் இறந்தபிறகு அவனைக் கவனித்துக்கொள். நான் உன்னை நம்புகிறேன்."

"அப்பா, நீங்கள் ஏன் இதையெல்லாம் பேசுகிறீர்கள்?"

டுவானின் உதடுகளிலிருந்து வார்த்தைகள் லேசாக வெளிப்பட்டன. "நான் உன்னுடைய உறுதிமொழியை விரும்புகிறேன்."

"அப்பா நான் உறுதியளிக்கிறேன்."

"அப்படியென்றால், நான் திருப்தியடைகிறேன்."

கீழே யாரோ பேசும் குரலோசையை அவர்கள் கேட்டார்கள். சில அந்நியர்கள் சத்திரநிர்வாகியுடன் பேசிக்கொண்டிருந்தார்கள்; கீழே சென்று

பார்த்துவருமாறு ஸ்ப்ரௌட்டை அனுப்பினார்கள். அவன் சென்று பார்த்துவிட்டு வந்து இரண்டு சிப்பாய்கள் வந்திருப்பதாகச் சொன்னான்.

அவர்கள் என்ன செய்து கொண்டிருக் கிறார்கள்?''

''மதுபானம் வேண்டுமென்று கேட்டுக்கொண் டிருக்கிறார்கள்.''

''எல்லைக்காவல் ரோந்துப் படையினர்தானே;''

''எனக்குத் தெரியாது. அவர்களின் இடைக் கச்சைகளில் துப்பாக்கிகள் இருக்கின்றன.''

அந்த காவல் படைவீரர்கள் இருவரும் உள்ளே நுழைந்து முக்காலிகளை இழுத்து நடுவிலிருந்த மேஜையருகே போட்டுக்கொண்ட போது, ஃபானும் லெய்வாவும் கீழே டோமினோஸ் ஆடிக்கொண்டிருந் தார்கள்; காவலாளிகள் வந்து அமர்ந்ததையும் கவனித்தனர்.

அடிக்கடி அவர்கள் காவலாளிகளின்மீது பார் வையைச் செலுத்தினார்கள். அவர்கள் இருவரும் தங்கள் முன்னால் கண்ணாடி தம்ளரில் மதுவை வைத் துக்கொண்டு அமர்ந்திருந்தார்கள். ஒருவன் எழுந்து நின்று தன்னுடைய இடுப்பு வாரைக் கழற்றிவிட்டு நிம்மதியுடன் நெடுமூச்சு விட்டான். பிறகு அதை மேஜைமீது தூக்கி எறிந்துவிட்டு துப்பாக்கியை அதன்மீது வைத்தான். பிறகு சுற்றுமுற்றும் பார்த்து விட்டு, மறுபடியும் முக்காலியில் அமர்ந்தான். மற்ற வன் தன்னுடைய தொப்பியைக் கழற்றி மேஜையின் மேல் வைத்துவிட்டுத் தன் தலையைச் சொரிந்து கொண்டான்.

ஃபானும் லெய்வாவும் மூச்சுக்கூட விடாமல் மௌனமாக விளையாடினார்கள். ஃபானின் முகம் கடுகடுத்திருந்தது. ஆனால் படைவீரர்களோ முற்றிலும் நிம்மதியடைந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

அப்போது விடுதி நிர்வாகி அறைக்கு நடுவே வந்து, "உங்களுக்கு வேறு ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டான்.

"வேண்டாம் நாங்கள் திரும்பிப் போவதற்கு முன்னால் இன்னும் சிறிது பானம் அருந்தப் போகிறோம். போக்லோவிலிருந்து யாராவது நாடோடிகள் இவ்வழியே சென்றதுண்டா?"

"எனக்குத் தெரிந்தவரை அப்படியொன்றுமில்லை."

அவர்களில் ஒருவன் லெய்வாவின் முகச்சாயலையும், பிற்பகலின் மங்கிய சூரிய ஒளி அவள் முகத்திலும் தலை முடியிலும் விழுந்து கொண்டிருந்ததையும் பார்த்தான்.

"அங்கே பார்க்காதே" என்று ஃபான் முணுமுணுத்தான்.

இருவரில் உயரமாக இருந்த இராணுவ வீரன் கோப்பையைக் கையில் தூக்கிக்கொண்டு, "ஏய்ச்சிங்! என்ன? உன்னை நீயே ரசித்துக் கொண்டிருக்கிறாயே?" என்று கேட்டான்.

ஃபான் எழுந்து நின்று தன்னுடைய கண்ணாடிக் கோப்பையை எடுத்துக்கொண்டு அவர்களை நோக்கி நடந்தான்.

"உன் தேக ஆரோக்கியத்துக்காக!...." என்று அவன் சொன்ன‌ன்.

,,உனக்காகவும் அந்த அழகிய யுவதிக்காகவும் கூட!...." என்ருன் காவலன்.

அவர்கள் பரஸ்பர வாழ்த்துக்கூறி மதுவைப் பருகிஞர்கள்.

"நீங்கள் இங்கே என்ன செய்துகொண்டிருக் கிறீர்கள்?"

"நாங்கள் பிங்ஷானிலிருந்து வந்தோம். இங்கே இருப்பது மகிழ்ச்சிகரமாக இருக்கிறது. உங்களுக்கு சைசாமைத் தெரியுமா¿"

"தெரியுமே' அந்தப் பெண்மணி உங்கள் மனை வியா?"

"இல்லை, அவள் என் சிநேகிதி!"

இராணுவ வீரர்கள் கண்ணடித்துக் கொண் டார்கள்.

சற்றைக்கெல்லாம் அவர்கள் அவ்விடத்தை விட்டுப் புறப்படும்போது, பழகிய தோரணையில் கைகளை ஆட்டி வாழ்த்துக்கூறி விடைபெற்றுச் சென்ருர்கள்.

ஈஸா திறந்த கதவு வழியாகக் கீழே நடந்த பேச்சுக்களைக் கவனித்துக்கொண்டிருந்தாள். பயத் திஞல் நடுங்கிஞள்!

விரைவில் அவள் தன் தந்தை ஸ்ப்ரௌட் இரு வருடன் கீழே வந்து லெய்வா ஃபான் இருவருடன் சேர்ந்துகொண்டாள்.

"அவர்கள் யார்? என்று கேட்டான் டூவான்.

"எல்லை ரோந்துக்காரர்கள்!"

"அவர்கள் ஏதாவது விசாரித்தார்களா?"

"அவர்கள் நாங்கள் இருவரும் ஏகாந்தமாக இருந்ததாக நினைத்தார்கள். நாங்கள் பிங்ஷானி லிருந்து வருகிறோம் என்று அவர்களிடம் சொல்லி விட்டோம்!"

சைசாமும் ஸ்வாட்டும் இரவுச் சாப்பாட்டின் போது வந்து அவர்களுடன் கலந்துகொண்டார்கள். ஃபான் அங்கு வந்த படை வீரர்களைப்பற்றி அவர் களிடம் கூறினான்.

"எனக்குத் தெரியும். அவர்கள் அடிக்கடி இங்கே குடிப்பதற்காக வருகிறார்கள். ஒரு நல்ல சேதி, இப் போது இங்கே பொறுப்பில் இருப்பவர் சார்ஜண்ட் லாவோ லூ! நான் அவர்களில் ஒருவரிடம் பேசி னேன். நாளைய தினம் முடிக்கலாம் என்று நான் நம்புகிறேன். அதோடு நீங்கள் ஏமாந்துவிடாதீர் கள். அவர்கள் நம்மைப்பற்றிய சகல விவரங்களை யும் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் மூலமோ, விடுதிக் காரனிடமிருந்தோ தெரிந்துகொண்டிருக்கிறார்கள்."

சிறிது நேரத்திற்கெல்லாம் ஃபானும் லெய்வா வும் மறுபடியும் மத்தியிலிருந்த மேஜைமீது டாமி னோஸ் ஆட்டத்தைத் தொடங்கினார்கள். ஃவான் குடும்பத்தினரை தங்களுடன் ஆடுவதற்கு அழைத்த னர்; ஆனால் அவர்கள் மறுத்துவிட்டனர்.

"ஏன் உங்களுக்குப் பயமாக இருக்கிறதா?"

"இல்லை, நாங்கள் ஒருபோதும் டாமினோஸ் ஆட்டம் ஆடிப்பழக்கமில்லை. எங்களைப்பற்றிக் கவலைப் படாதீர்கள். நீங்கள் ஆட்டத்தைக் கவனியுங்கள்!"

அப்பொழுது சுமார் ஒன்பது மணி இருக்கும்.

யாரோ கதவைத் தட்டினுர்கள். அதற்குப் பதிலிறுக்கும் முன்னமேயே நன்கு உடையணிந்த நடுத்தர உயரமுள்ள எடுப்பான முகத்தோற்றமும் நேராகக் கீறிவிட்டாற் போன்ற உதடுகளும் அவற்றை ஒட்டிய மீசையும் கொண்ட ஓர் அதிகாரி உள்ளே நுழைந்தான். அவனுடைய முகபாவத்தில் உறுதியும் கண் இமைகள் பக்கவாட்டில் கீழ் நோக்கிச் சரிந்தும் இருந்தன. அவன் மேஜையைச்சுற்றி அமர்ந்திருந்த குழுவினரை வியப்புடன் நோட்டமிட்டபடி கம்பீரமாக நடந்தான். அது பாவனையா அல்லது 'உண்மையா என்பதை அவர்களால் தீர்மானிக்க முடியவில்லை.

"ஹல்லோ!" என்று அழைத்தபடி சைசாம் அவனை நோக்கி நடந்தான்.

"ஹல்லோ! நீங்களா?" என்று அதிகாரி அழைத்தபடி சைசாமின் முதுகில் தட்டிக்கொடுத்து அவன் கையைக் குலுக்கினுன். அப்போது அவன் மிகவும் நேசபாவத்துடன் காணப்பட்டான்.

லெய்வா அதிகாரியின் தோற்றத்தை வெளிப்படையாகக் கூர்ந்து நோக்கியபோது, ஈஸு தன்னுடைய உதட்டைக் கடித்துக்கொண்டாள். ஃபானின் கண்ணுடி அணிந்த கண்கள் சஞ்சலத்துடன் கண்ணோட்டமிட்டன.

"இவர்தான் நண்பர், லாவோவூ!" சார்ஜண்ட் என்று சைசாம் அறிமுகப்படுத்தினுன்.

"வாருங்கள் என் பெயரைச்சொல்லி எல்லோரும் மது அருந்துவோம்" என்ருன் சார்ஜண்ட். அவன் குரலில் குதூகலம் துள்ளியது.

"நீங்கள் தனியாகத்தான் வந்தீர்களா?" என்று சத்திர நிர்வாகி வினவினான்.

"ஆம். தனியாகவே வந்தேன்" மேஜைமீதிருந்த டாமினோஸ் ஆட்டத்துக்குரிய துண்டுகளைப் பார்த்த படி "சரி, ஆட்டம் நடக்கட்டும்" என்றான் அவன்.

"நீங்களும் எங்களோடு ஆடலாமே?"

சார்ஜண்ட் சுற்றிலும் பார்வையைச் செலுத்தினான். ஈஸா மேஜைக்குப் பின்னால் நிழலில் பின் வாங்கினாள். அவள்மீது பார்வையை வீசிய வண்ணம் "நீங்கள் விளையாடவில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை. என் அப்பாவும் நானும் ஆடுவதில்லை."

தாத்தாவின் நீண்ட கைகளுள்ள மேலங்கியைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு பின்புறம் ஒடுங்கி நின்றுகொண்டிருந்தான் குட்டி ஸ்ப்ரௌட்.

"நீங்கள் ஏன் விளையாடக்கூடாது?"

"நாங்கள் கிறிஸ்தவர்கள்!"

"ஓஹோ! சரி, அப்படியென்றால் நாங்கள் ஆடுவதைப் பார்த்துக்கொண்டிருங்கள்."

டாமினோஸ் ஆட்டம் தொடர்ந்து மும்முரமான போது சூழ்நிலை சாதகமாக மாறியது, குழுவினரில் லெய்வா ஒருத்திதான் மகிழ்ச்சியோடு இருந்தாள். ஜோடி சேர்ந்த ஒரு துண்டை எடுத்து அவள் வீசிய போது அவள் சிரித்தாள். அவள் குரலின் மென்மை வெற்றியின் கேலிச்சிரிப்பாக மிளிர்ந்தது.

"உங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை; அதிகாரி அவர்களே!" என்றாள் அவள்.

சார்ஜண்ட் வூ தன்னை மறந்து ஆட்டத்தை ரசித்துக்கொண்டிருந்தான். அவன் தன் குல்லாயை

எடுத்துவிட்டு தன்னுடைய மேலங்கியின் பொத்தான்களையும் கழற்றியிருந்தான்.

ஓர்ஆட்டம் முடிந்ததும் அவன் தன் கைகளை உதறிக்கொண்டான், பல தடவைகள் அவன் ஃபானைப் பார்க்கும்போதெல்லாம் ஃபானின் கண்களும் தன் கண்களையே ஊடுருவுவதைக் கண்டான். அவர்கள் இருவரில் யாரும் எதுவும் பேசவில்லை; ஆனால் இருவரும் ஒருவர் மனத்தை ஒருவர் அறிந்துகொள்ள முயன்றுகொண்டிருந்தனர். "சரி, இப்போது!" என்று கைகளை உயர்த்தி சோம்பல் முறித்துக்கொண்டே சொன்னான் அதிகாரி.

"பிறகு நான் மீண்டும் கொஞ்சம் மது அருந்துகிறேன்" என்றான்.

"இந்தப் பிரதேசத்தின் காவல் நிர்வாக அதிகாரி நீங்கள்தானே?" என்று ஃபான் விசாரித்தான்.

"ஆமாம். சின்ன சஞ்செள பெரிய சஞ்செள அப்புறம் கீழேயுள்ள பகுதி யாவும் இதில் அடக்கம். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை நாங்கள் மாறி மாறி முறை வைத்துப் பணிபுரிகிறோம். அதுதான் வேலையின் ஒழுங்கு! முதல் சில தினங்களுக்கு இயற்கைக் காட்சியும் காற்றும் நேர்த்தியாக இருக்கின்றன. ஆனால் பிறகு கள்ளக்கடத்தல் செய்பவர்கள்-தப்பியோட முயலும் ஆட்கள் ஆகியவர்களைப் பின்தொடர்ந்து ஓடும் நாட்கள் கொஞ்சம் சலிப்பாக இருக்கும்....! நேற்று என்ன நடந்ததென்று உங்களுக்குத் தெரியுமா? முட்டாள்களின் கூட்டம் ஒன்று நீர்த்தேக்கத்தைக் கண்டதும் தாங்கள் ஹாங்காங் வந்து சேர்ந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு குரங்கு

கள் மாதிரி நீர்த்தேக்கத்திற்குள் குதித்துவிட்டார்கள். என் ஆட்களில் இருவர் படுகாயமடைந்தனர். முட்டாள் பயல்கள்! கண்ணியமுள்ள மக்களைப் பாதுகாப்பதற்காகத்தான் எங்கள் படைவீரர்கள் இருக்கிறார்களேயன்றி அவர்களைத் துன்புறுத்துவதற்காக அல்ல!"

"அவர்களில் சிலபேரை நீங்கள் கைது செய்தீர்களா?"

"இல்லை. அவர்களில் ஐந்து பேர்கள் கரையில் செத்துவிட்டார்கள்; அல்லது குத்துயிராகிவிட்டார்கள்; பாக்கிப்பேர் இருளில் ஓடி மறைந்துவிட்டார்கள். நாங்கள் அவர்களைக் கொல்ல விரும்பவில்லை. அவர்கள் தாம் எங்களைக் கொல்ல விரும்பினார்கள். அத்தகைய நிர்மூடங்களை நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை. அவர்கள் நேர்மையான பிரயாணிகளாக இருந்திருந்தால் நாங்களே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்க முடியும்!"

அவசரமாக முன்னால் வந்த சத்திர நிர்வாகியை அவன் கூப்பிட்டான்.

"அதுசரி! மாடியில் ஒரு அறை இருக்கிறதல்லவா? நான் கொஞ்ச நேரம் ஓய்வெடுக்கலாமென்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டு பதிலுக்காகக் காத்திராமல், தன் குல்லாயை கையில் எடுத்துக்கொண்டு அவன் எழுந்து நின்றான்.

சத்திரத்தின் பொருப்பாளன் ஒரு மெழுகு வத்தியைக் கொளுத்திக்கொண்டு; அதிகாரியை அழைத்துச் சென்றான்.

ஃபானும் டூவோனும் கருத்து நிறைந்த பார்வையை பரிவர்த்தனை செய்துகொண்டார்கள்.

"சரி மேலே சென்று எங்களுக்கு வேண்டிய விஷயத்தை ஏற்பாடு செய்யுங்கள்" என்று சைசாமிடம் ஃபான் கூறினான்: அதாவது பரஸ்பர உதவிக்கு அதிகாரி இணங்குகிறவன்தான் என்ற ஜாடைக் குறிப்புகள் காட்டினான். எவ்வளவு என்று அவனிடம் கேளுங்கள். நாம் கொடுத்துவிடுவோம்" என்றான்.

இதற்குள் சத்திர நிர்வாகி கீழே வந்து அதிகாரி சைசாமை அழைப்பதாகத் தெரிவித்தான்.

"என்னிடம் சொல்லுங்கள். எல்லையைக் கடந்து செல்ல விரும்பும் கூட்டம்தானே அது?" அதிகாரி எதிரில் அமர்ந்துகொண்டு, சைஸாம் உள்ளே வந்ததும் அவனிடம் கேட்டான்.

சைஸாம் தலையை இணக்கமுடன் அசைத்தான்.

"அவர்கள் எத்தனை பேர்?"

சைஸாம் விரல்களை மடக்கி எண்ணினான்; "ஐந்து பேரும் ஒரு பையனும்" என்றான்.

"அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? வசதி படைத்தவர்களாக அவர்கள் காணப்படுகிறார்கள்; அந்த இரண்டு அழகிய மங்கையரும் கூடத்தான். உங்களுக்கு அவர்கள் எவ்வளவு கொடுக்கிறார்கள்.

ஒரு வினாடி சைசாம் தயங்கினான்; "தலைக்கு நூறு தருவார்கள்!"

"பரவாயில்லையே?"

"லாவோ வூ! இவர்கள் நல்ல மனிதர்கள். நீங்கள் அவர்களை தப்பிச்செல்ல அனுமதித்தால், உங்களுக்கு நான் இருநூறு கொடுக்க முடியும்."

"ஒரு நிமிஷம் பொறுங்கள். முழு உண்மையையும் நீங்கள் என்னிடம் சொல்லவில்லையே! சென்ற இரவு எட்டு அல்லது ஒன்பது பேர் இங்கு வந்து சேர்ந்ததாக நான் அறிந்தேன். அப்படியென்றால், தொள்ளாயிரம் ஆகிறது! உங்கள்பாடு பரவாயில்லை!"

"லாவே வூ, முன்பெல்லாம் நீங்கள் எனக்குப் பல சாதகங்கள் செய்திருக்கிறீர்கள். உங்களிடம் நான் யோக்கியமாகவே இருப்பேன். அவர்கள் நல்ல மனிதர்கள். கீழேயுள்ள பெரிய மனிதர் என்னுடைய பழைய நாள் சிநேகிதர். அவர்கள் எல்லோரையும் எல்லையைத் தாண்டி ஹாங்காங் போக அனுமதிக்க இயலுமா உங்களால்? அவ்விஷயத்தில் எனக்குக் கஷ்டம் உண்டாக்கிவிடாதீர்கள்" என்று முதலில் மூன்று விரல்களையும், பிறகு நான்கு விரல்களையும் இறுதியாக ஐந்து விரல்களையும் உயர்த்திக் காட்டினான்.

சார்ஜண்ட் சம்மதித்துத் தலையை அசைத்தான்; சைசாம் இளநகை பூத்தான்.

"ஒரு நிமிஷம் தாமதியுங்கள். அவர்களிடம் பணத்தைப்பற்றி யாதொன்றும் சொல்லவேண்டாம்."

வேறொரு மெத்தையில் ஈஸா விட்டுச் சென்றிருந்த அவளது போர்வையைச் சுட்டினான் அவன்;

அலட்சியமாகப் பார்த்தான்; வழிகாட்டியின் செவி களில் ரகசியமாக ஏதோ ஓதினன்.

"நான் முயன்று பார்க்கிறேன். அவள் அதற்கு இணங்குவாளா என்று எனக்குத் தெரியவில்லை!"

"அவர்கள் எல்லையைக் கடந்து தப்பிக்க வேண்டு மென்று விரும்பினல், ளவள் கட்டாயம்........இணங்கு வாள்!....புரிகிறதா?"

சைசாம் கீழே இறங்கி வந்து, குழுவினரை ஒரு பக்கமாக வருமாறு ஜாடை காட்டினன்.

"எவ்வளவு பணம்?" என்று ஃபான் கேட்டான்.

சைசாம் ஐந்து விரல்களை நீட்டிக் காட்டினன்; டுவானிடம் ஏதோ முணுமுணுத்தான். தலையைக் குனிந்தபடி, "நான் வருந்துகிறேன். அவன் இப்போது உங்கள் புதல்வியைப் பார்த்திருக்கிருன்; இது விஷயமாக நீங்கள் ஜாக்கிரதையாக யோசனை செய்துபார்க்க வேண்டும்; அதுதான் எனக்கு அச்ச மாக இருக்கிறது!" என்ருன்.

அன்று டுவானின் கண்கள் கோபத்தால் கனலைக் கக்கியதை அதற்குமுன் அவர்கள் ஒருபோதும் கண்ட தில்லை. பெண்கள் வந்து பயந்து அமர்ந்தனர்.

"அறிவுகெட்ட மிருகம்!....நீ அந்தக் காரியம் செய்யவேமாட்டாய் என்று நான் அறிவேன்; நானும் அதை அனுமதிக்கவே மாட்டேன்!" என்று டுவான் தன் மகளிடம் கூறினன்.

"எதை நான் செய்ய மாட்டேன்?" என்று திகைப்புடன் வினவினள் ஈஸா.

பெருமூச்சுகளுக்கிடையே அங்கு ஒரு கணம் பயங்கர மௌனம் நிலவியது.

சைசாம் ஃபானை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று "அதிகாரி அந்த இளைய பெண்ணை விரும்பு கிருர். நாம் இணங்குவது நல்லது. அந்தப் பெண்ணை இசையச் செய்யும்படி உங்கள் சிநேகிதியிடம் நீங்கள் சொல்லுங்கள்" என்று தாழ்குரலில் கூறிஞன்.

இதற்குள் செய்தியின் உட்பொருளும் தாங்கள் தப்பிக்க கொடுத்தாகவேண்டிய விலையும் என்ன வென்பது அவர்களுக்கு தெளிவாகிவிட்டது.

"நான் மாட்டேன்!....நான் மாட்டேன்!" என்று ஈஸூ கதறி அழுதாள். அது சமயம் லெய்வா அவளிடம் ஏதோ பேச முயன்ருள்.

தலையைக் கவிழ்த்துக்கொண்டு கைகள் மேஜை யில் வெளியே நீண்டு கிடக்க, முஷ்டிகளை மூடியவாறு தலைமயிர் கலைந்து தோள்கள்மீது புரள ஈஸூ சாய்ந்து கிடந்தாள். என்ன நடந்தது என்பதைப் புரிந்துகொள்ளாமல் சிறுவன் ஸ்ப்ரெளட் அழத் தொடங்கிவிட்டான். ஈஸூ விசும்பி விசும்பி அழுது கொண்டிருந்தாள்.

திடீரென்று லெய்வா எழுந்து நின்ருள். ஃபான் மீது அலட்சியப் பார்வை ஒன்றை வீசிவிட்டு, ஆபாச மான முறையில் சபதம் கூறி "அவ்வாறே நடக்கட் டும்!....நான் போகிறேன்!....அந்த மிருகத்துக்கு அது விரும்பும் இரையைக் கொடுங்கள்!" என்று சொன் ஞள். இதைக் கூறிவிட்டு மற்றவர்களை ஏறெடுத்துப் பார்க்காமல், அவள் தலை நிமிர்ந்து நடந்து சென்று மாடிப்படிக்கட்டில் ஏறிஞள். மேலே சென்று ஒரு விஞடி நின்றுவிட்டு, பிறகு அறைக்குள்ளே சென்ருள்.

லெய்வாவின் செய்கை குழுவினரை வியப்பில் ஆழ்த்தியது. ஈஸா மட்டும் அதில் கவனம் செலுத்த வில்லை. கைகளில் தலையை ஏந்தியவாறு தோள்கள் குலுங்க அவள் தேம்பித் தேம்பி அழுதுகொண்டே யிருந்தாள்.

ஐந்து நிமிஷங்கள் கழிந்தன. அமைதி பயங்கர மாக இருந்தது; லெய்வா இன்னமும் திரும்பவில்லை, அவர்கள் ஒவ்வொருவரும் மாடி முகட்டை மாறி மாறிப் பார்த்த வண்ணம், எதையோ எதிர்நோக்கிய வாறு அமைதியுடன் மௌனமாக அமர்ந்திருந் தார்கள்.

தன் உடம்பை முன் வளைத்து பிரம்பு நாற்காலி யில் திணித்துக்கொண்டு குந்துவதற்காக ஃபான் அப்பால் விலகிச் சென்றான். அவனது கண்கள் வெடித்துவிடுவது போல் கடுங்கோபத்தினால் பளபளத்துக் கொண்டிருந்தன. அவனுடைய தாடை எலும்புகளின் தசைகள் திடீர் திடீரென்று இழுத்துக் கொண்டன.

பத்துப் பதினைந்து நிமிஷங்கள் கழிந்தன, ஈஸா அமைதியடைந்தாள்; என்ன நடந்துகொண்டிருந்த தென்பதைச் சிறுகச் சிறுக புரிந்துகொள்ள ஆரம் பித்தாள்.

"அவள் கீழே இறங்கி வராததிலிருந்து, எல்லாம் நல்லபடியாகவே இருக்கவேண்டும் என்றுதான் நினைக்கிறேன்!" என்று சத்திர நிர்வாகியின் மனைவி யிடம் எல்லோரும் கேட்கும்படியாகச் சொன்னாள் ஸ்வாட்.

அவளை அப்படியே சுட்டு எரித்து விடுவதைப் போல் பார்த்தான் ஃபான்;

மேலே இருந்து சிரிப்பு ஒலி கூரைப் பலகைகளின் வழியாகக் கீழே கேட்டது.

தன்னை அடக்கிக்கொள்ள முடியாமல் மெய்ம் மறந்து தன் வாய்க்கு நேராக தன்னுடைய கை முஷ்டியால் குத்திக்கொண்டான் டூவான். லெய்வா மாடிக்குப் போனது முதல் அவர்களில் ஒருவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

அரைமணி நேரம் கழிந்தது.

பிறகு சார்ஜண்ட் தன் முழு உடுப்போடு, மெதுவாக மெள்ளக் காலடி வைத்து தனியாகக் கீழே இறங்கிவந்தான். பிறகு அவன் சத்திர நிர்வாகியை நோக்கித் தலையை அசைத்தபடி தலை நிமிர்ந்து, முக வாய்க்கட்டை வெளியே தெரியும்படி கதவை நோக்கி நடந்தான். சைசாம் அவனுக்காகக் கதவைத் திறந்து கொண்டிருந்தான்.

அதிகாரி ஒரு பக்கமாகத் தலையை அசைத்தான். சைசாம் அவனைப் பின்தொடர்ந்து வெளியே சென்றான்.

"இதோ என்னுடைய கார்டு இருக்கிறது. நாளைக்குக் காவல் நிலையத்தில் இதைக் கொடுக்கும் படி அவர்களிடம் சொல்லுங்கள்; நெடுஞ்சாலையைக் கடந்து செல்ல அவர்களுக்குப் பாதுகாப்பாக நான் இரண்டு படைவீரர்களை அனுப்பிவைக்கிறேன்."

சிகரெட் பற்றவைக்க அவன் நின்றான்; சில தப்படிகள் நடந்தான்; பிறகு சற்றே தள்ளாடி சாலை யில் இறங்கிவிட்டான்.

அத்தியாயம் 18

அன்று இரவு ஈஸு ஒரு காரணமும் சொல்லாமல் கீழ்த்தளத்திலேயே படுத்து உறங்கினாள். சார்ஜண்ட் புறப்பட்டுச் சென்ற பிறகு லெய்வா கீழே இறங்கிவர வில்லை. சாப்பாட்டு மேஜைமீது விரித்திருந்த படுக்கையை ஈஸுவுக்குக் கொடுத்து விட்டு, ஃபான் மாடிக்குச் சென்றான்.

அவள் அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்து விட்டாள். கடந்த இரவு நிகழ்ச்சியால் மனம் குழம்பி இருந்தாள். அத்துடன் ஜேம்ஸின் குழுவினரைப் பற்றியும் கவலைப்பட்டாள்; அவர்களுக்கு என்ன நேரிட்டதோ என்பதை அறியவும் துடித்துக் கொண்டிருந்தாள். மாடியில் சந்தடியே இல்லை. ஃபானும் லெய்வாவும் தூங்கிக்கொண்டிருக்கையில் உள்ளே சென்று தன் தந்தையைப் பார்க்க அவள் விரும்பவில்லை; அவள் வெளியே சென்று கொஞ்ச தூரம் நடந்தாள்.

லெய்வா தலையிடாமல் இருந்திருந்தால், என்ன நேர்ந்திருக்குமென்பதைப் பற்றி அவளால் சிந்திக்காமல் இருக்க முடியவில்லை. ஒரே ஒரு இரவு மாத்திரம் அவளிடமிருந்து ஜேம்ஸ் பிரிந்துசென்ற தருணத்தில்

இது நடந்துவிட்டது. அந்த அதிகாரி அவளை ஏன் தேர்ந்தெடுத்திருந்தான்? ஏனென்றால், அவன் ஃபானை விரோதித்துக்கொள்ள இஷ்டப்படவில்லை! —இந்தச் சிந்தனையினால் அவள் முகம் பீதியடைந்து சிவந்தது; லெய்வாவின் செய்கையின் நல்லொழுக் கத்தைப்பற்றி அவளால் எவ்வித தீர்மானத்துக்கும் வர முடியவில்லை.

சுண்ணும்புக் காளவாய் அவளை ஈர்த்தது; அதைச் சோதித்துப்பார்க்கச் சென்றாள் அவள். சென்ற இரவுக்கு முன் இரவு மழை பெய்திருந்தது! எனவே, பூமி அப்போதும் ஈரமாக இருந்தது.

சைசாமும் ஸ்வாட்டும் விழித்தெழுந்து விட்டிருந்தனர்.

"நீங்கள் தூங்கிய இடம் இதுதானா?" என்று கேட்டாள் ஈஸூ. "மிகவும் வசதியாக இருக்கிறதே! எனக்குத் தெரிந்திருந்தால், நானும் இங்கு வந்து தூங்கியிருப்பேன்" என்று தொடர்ந்தாள்.

"ஏன் மாடியில் படுத்துத் தூங்குவதில் என்ன சிரமம் ஏற்பட்டது?"

"சென்ற இரவு அங்கு நான் தூங்கவில்லை."

"ஏன்?"

"நான் உறங்க முடியவில்லை. ஆமாம்; நான் சரியாக உறங்க முடியவில்லை."

"ஷியுஜி! நல்ல குடும்பத்துப் பெண்ணே!" என்றாள் ஸ்வாட்.

அவள் முன்னமேயே டுவான் குடும்பத்தாரின் வேலைக்காரியாக இருந்ததுபோல அவள் ஈஸூவை அழைத்தாள். சென்ற இரவு....இது போன்ற சம்ப

வத்தை என் வாழ்நாளில் நான் ஒருபோதும் கண்டதில்லை; உங்களுக்காக என் மனம் துடிதுடித்தது. இன்னொரு நல்ல குடும்பத்துப் பெண்மணி என்னை வியப்பில் ஆழ்த்தினாள். அவள் உங்களைக் காப்பாற்றினாள்; நம்மை எல்லோரையுமே காப்பாற்றி விட்டாள்!"

அந்நிகழ்ச்சியின் காரணமாக ஸ்வாட் அப்போதும் பரபரப்புடன்தான் இருந்தாள் என்பதை அவளது குரல் காட்டியது.

"அவள் அப்படி அல்ல!" ஸ்வாட் குறிப்பிட்ட 'ஷியுஜி'—'நல்ல குடும்பத்துப் பெண்' என்னும் பதத்தை ஈஸூ மனத்தில் கருதியே இதைக் கூறினாள். ஆனால் அவளால் வார்த்தையைப் பூர்த்தி செய்ய முடியாமல் பாதியில் நிறுத்திக்கொண்டாள்.

"ஃபானும் லெய்வாவும் கல்யாணம் செய்து கொண்டுவிட்டார்களா? சொல்லுங்கள்."

"இல்லை."

"நான் அப்படிக் கருதவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் ரொம்பவும் அன்பாக இருக்கிறார்கள்."

விருந்தினர்கள் எல்லோரும் கீழ்த்தளத்திற்கு வந்துவிட்டார்களா என்று காண அவர்கள் திரும்பி வந்தார்கள்.

சத்திரத்துப் பொறுப்பாளனின் மனைவி காலைச் சிற்றுண்டிக்கு மேஜை போட்டுக்கொண்டிருந்தாள்.

லெய்வாமீது கடைக்கண் பார்வையை வீசினாள் அவள்; லெய்வா இயல்பாகத் தோன்றவேண்டுமென விழைந்தாள்! ஆனால் அவளால் அவ்வாறு இருக்க முடியவில்லை என்று கண்டுகொண்டாள்.

காலைச் சிற்றுண்டியின்போது குழப்பமும், தயக்க மும் நிறைந்த மௌனம் சிறிது நேரம் நிலவியது. டூவான் அதைக் கலைத்தான். அவன் தன் மகளிடம், "நான் லெய்வாவுக்கு ஏற்கெனவே நன்றி சொல்லி விட்டேன். நம் எல்லோரையும் மிகச் சங்கடமான ஒரு நிலைமையிலிருந்து அவள் காப்பாற்றிவிட்டாள். முக்கியமாக உன்னைக் காப்பாற்றிவிட்டாள். அவள் தான் உன்னுடைய தாய்!"

"உங்களுக்கு நன்றி" என்றாள் ஈஸு; நாக் குழறியது, பீதியால் முகம் பூராவும் சிவந்தது.

"நான் உங்களுக்காக அப்படி என்ன செய்து விட்டேன்?"

அவள் வார்த்தையில் பரிகாசமும் அதே சமயம் குழுவினருக்குதான் காட்டவேண்டிய நன்றி உணர்ச் சியும் கலந்திருந்தது.

"என்னுடைய வருங்கால மருமகன் அவசியம் உங்களுக்கு நன்றி தெரிவிப்பார்" என்றான் டூவான்.

"இதோ பாருங்கள்; மீண்டும் அதை ஞாபகப் படுத்தாமல் இருந்தால், அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் பெரிய உபகாரமாக இருக்கும். நாம் மாட்டிக்கொண்ட வலையல்லவா அது? நீங்கள் எட்டுப்பேர் இருக்கிறீர்கள். உங்களில் ஒவ்வொரு வரும் தனித்தனியே எனக்கு நன்றி தெரிவிப்பதாக இருந்தால், அவ்வளவுதான், நான் இறந்துவிடுவேன்" என்றாள் லெய்வா.

ஃபான் உடனே பேச்சின் போக்கை மாற்றினான்.

"அதுதான் தெய்வச் செயல் என்று நினைக் கிறேன். அதைப்பற்றி இனிமேல் நாம் பேசவேண்

டாம். வருந்துதற்குரிய விஷயம் அது. ஆனால் அது முடிந்துவிட்டது. பத்திரமான பிரயாணத்திற்கு நமக்கு உறுதியளித்திருக்கிறான் சார்ஜன்ட். நாம் காவல் நிலையத்துக்கு வரும்பொழுதுதானே அந்தச் சீட்டைக் கொடுப்பதாக அவன் சொல்லி இருக்கிறான்?''

சமையலறையிலிருந்து சைசாம் உள்ளே நுழைந்தான்.

''நெடுஞ்சாலையைக் கடந்து மறு பகுதியை அடைய, நமக்குப் பாதுகாப்பிற்கு இரண்டு படை வீரர்களையும் அனுப்புவதாக அவன் என்னிடம் வாக்களித்துள்ளான்!''

''நாம் எதிர்பார்த்ததைவிட அது பெரிய காரியம்தான்'' என்றான் ஃபான்.

காலைச் சிற்றுண்டி முடிந்ததும், விரைவாக அவர்கள் பிலிங்கூனை விட்டுப் புறப்பட்டு ஒரு மைல் நடந்தார்கள்.

இடதுபுறம் மேட்டுப்பாங்கான கரைகளின் மத்தியில் ஆட்சி செலுத்திக்கொண்டிருந்த நீர்த் தேக்கத்தை அவர்கள் பார்த்தார்கள். அதற்கு நேர் எதிரே மேகங்கள் மூடியிருந்த வானத்தின் பின்னணியில் அமைதியாகவும் கம்பீரமாகவும் விளங்கியது கோலநட் சிகரம்.

அவர்கள் நின்ற இடத்திலிருந்து கீழே நீர்ப் படுகைக்கு உள்ள தூரம் ஒரே ஒரு மைல்தான். அங்கு நெல்வயல்களும், சிறிய பண்ணை வீடுகள் சிலவும் இருந்தன. அவை உப்பளக் குகைக்கு— கொண்டுவிட்டன; அக்குகை கடலருகில் இருந்தது.

லெய்வா காவல் நிலையத்திலிருந்து வெளியே வந்தாள். சைசாமும் அவர்களுக்குப் பாதுகாப் பளிக்க சாம்பல்நிற உடை அணிந்த இரு இளைஞர் களும் அவளைப் பின் தொடர்ந்தனர். அவள் கையை ஆட்டிவிட்டு வெற்றி பெருமிதத்துடன் நடந்தாள்.

''அவர்கள் இங்கே இருக்கிறார்கள். துப்பாக்கி யால்கூட செய்ய முடியாத ஒரு காரியம்....'' அவள் பூரிப்பால் கூறினாள்.

நீர்ப்படுகையின் அமைதி தேங்கும் இயற்கைக் காட்சியும் கோலநட்டின் கம்பீரமான குவிந்த சிகரமும் அந்த மங்கிய பொழுதில் மனதை வசீகரித் துக்கொண்டிருந்தன. சகதிக் குட்டைகளையும் முன்னால் நீட்டிக்கொண்டிருந்த பாறைகளையும் சுற்றி அவர்கள் வெகு சுறுசுறுப்பாக நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். மேல்மட்டத்திலிருந்த வயல் களுக்கு நடுவில் குறுகிய பாதைகளில் ஒருசணம் அந்த மௌன ஊர்வலம் சென்றது. கடந்த இரவு பெய்த மழையினால் அவ்வயல்களில் நிரம்பிய நீர் ஓடையாகி ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறிமாறி பாய்ந்தன; சில வேளைகளிலே அவர்களுக்கு முன்னே யிருந்த பாதைகளின்மீது தண்ணீர் மிதமிஞ்சி வழிந்து கொண்டிருந்தது.

கடைசியாகக் கடக்கவேண்டிய கால்மைல் தூரத்தில், மிகமிகக் குறுகிய திருப்பங்கள் பல இருந்தன. குறுகிய உலர்ந்த தடத்தின்மீது தன் தந்தையை எச்சரிக்கையுடன் வழிநடத்திச் சென்றாள் ஈஸா. சிறுவன் ஸ்ப்ரௌட்டோடு நடந்துகொண் டிருந்தாள் ஸ்வாட்,

"அவனைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்" என்று கூச்சலிட்டான் தாத்தா.

அதேகணத்தில் டீவான் வழுக்கி ஒரு குட்டையில் மல்லாந்து விழுந்துவிட்டான். இதைத் தொடர்ந்து பல நிகழ்ச்சிகள் சங்கிலி கோர்வைபோல் நிகழ்ந்தன.

சிறுவன் ஸ்ப்ரௌட், ஸ்வாட்டின் இறுக்கமான பிடியினின்றும் நழுவி வேகமாகச் சுழன்று, செங்குத்துப் பாறைமீது விழுந்தான்.

"ஐயையோ!" என்று அவனைத் தொடர்ந்து குதித்தவண்ணம் அலறினாள் ஸ்வாட்.

"ஸ்ப்ரௌட் தவறி விழுந்துவிட்டானே!" என்று ஓலமிட்டாள் ஈஸு.

அவ்விரு உடல்களும் செங்குத்துச் சரிவுக்குக் கீழே ஒருவர்மீது ஒருவராக உருண்டுகொண்டிருந்ததை அச்சமும் பீதியும் கொண்டு அவர்கள் பார்த்தார்கள். சிறுவனை ஸ்வாட் திறமையுடன் வெடுக்கெனப் பற்றிப் பிடித்துக்கொண்டாள். அவள் முழு முயற்சியுடன் அவனைத் தன்னுடன் கெட்டியாக அணைத்துக்கொண்டபடி, மாக்கல் சரிவிலிருந்து உருண்டு விழுந்துகொண்டிருந்தாள்!

பாதையை அனுசரித்து மற்றவர்கள் வெகு வேகமாக ஓடினார்கள். ஃபானும் வழிகாட்டியும் முன்னேயும், காவலர்கள் அடுத்தும் ஓடினார்கள்.

ஸ்வாட்டும் சிறுவனும் வழுக்கிவிழுந்த இடத்தை அடைந்ததும், நேர்கீழாகச் சரிந்திருந்த பாறை மண்டிய மேற்பரப்பையும், அடியில் தண்ணீர் பாதியளவு மூழ்கிய நெல்வயலில் ஒரு ஸ்திரீ உருண்டு கிடந்ததையும், அவள் அருகே அச்சிறுவன் எழுந்து

உட்கார ஆவலோடு போராடிக்கொண்டிருப்பதை யும் அவர்கள் கண்டார்கள்.

"அங்கேயே இருங்கள். நாங்கள் கீழே வரு கிருேம்" என்று கத்திஞள் ஈஸு.

வயதான டுவான் சகதியால் மூடப்பட்டு, பித்துப் பிடித்த நிலேயில் இருந்தான். "ஸ்ப்ரௌட்! நாங்கள் கீழே இறங்கி வந்துகொண்டிருக்கிருேம்" என்று அவன் சத்தமிட்டான். அவன் ஓட விரும்பிஞன். அவனே ஈஸு தடுத்தாள்.

"ஷெக்டின், விரையுங்கள்!" என்று ஃபானிடம் சொன்ஞன் அவன். வழிகாட்டி முன்னமேயே முன் ஞேக்கி ஓடிக்கொண்டிருந்தான்.

ஸ்வாட் அங்கே படுத்துக்கொண்டிருந்தாள். அவள் மண்டையில் அடிப்பட்டு காயம் ஏற்பட் டிருந்தது. முகத்தில் ரத்தம் பீறிட்டுக்கொண் டிருந்தது. விழுந்ததன் காரணமாக அவள் அதிர்ச்சி யடைந்திருந்தாள். பையனுக்கு ஒரு கீறல்கூட ஏற்படவில்லே.

அவர்கள் முதலில் பையனே உலர்ந்த தரைக்குக் கொண்டு சென்றனர்; பிறகு, ஃபானும் இரண்டு காவலர்களும் அந்த அம்மணியை மேலே சுமந்து சென்று ரஸ்தா ஓரத்தில் மெதுவாகக் கிடத்திஞர்கள்.

ஈஸு அவள் நாடியைப் பரிசோதித்தாள். அது வெகு வேகமாக இயங்கிக்கொண்டிருந்தது. ஸ்வாட் டின் கண் இமைகளேத் திறந்தாள்; அவள் கன்னத்தில் சில தடவைகள் மென்மையாகத் தட்டிஞள். பிறகு "ஸ்வாட்! ஸ்வாட்!" என்று கூப்பிட்டாள்.

ஸ்வாட்டின் கண் இமைகள் மெள்ளத் திறக்க ஆரம்பித்தன; அவள் கண்கள் ஒரு நிலைப்பட்டன. அவள் நெடுமூச்செறிந்தாள்.

"ஸ்வாட், நீங்கள் நல்லபடியாக இருக்கிறீர்களல்லவா?"

"நான் எங்கே இருக்கிறேன்."

"நாங்கள் உங்களுடன் இருக்கிறோம். நீங்கள் செங்குத்துப் பாறையிலிருந்து விழுந்து விட்டீர்கள்."

"ஓ, தெய்வமே! நாங்கள் அவ்வளவு கீழேயா விழுந்துவிட்டோம்?....குழந்தை ஸ்ப்ரௌட் எங்கே?" சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அவள் கேட்டாள். அப்போதும் அவளது கலக்கம் தெரியவில்லை.

தன் பேரனைக் கையால் பற்றியவண்ணமிருந்த தாத்தா டூவானை அவள் திடுதிப்பென்று பார்த்தாள்; அவனைச் சிரமத்தோடு நோக்கி, "நீ நல்லபடியாக இருக்கிறாய் அல்லவா?" என்று கேட்டாள்.

"அவன் நல்லபடியாகவே இருக்கிறான்!" என்று பதிலளித்தான் டூவான்.

"எல்லாம் புத்தரின் கருணைதான்! புத்தர்பிரான் புகழப்படட்டும்!....நாங்கள் அத்துணை பயங்கரமாக விழுந்துவிட்டிருந்தோம்!...." என்று அவள் சொன்னாள். அப்போது அவள் கண்கள் கணநேரத்துக்கு மூடிக்கொண்டன; அவள் உடல் நடுங்கியது.

ஈஸா உடனே அவளைத் தாங்கிக்கொண்டாள்; பிறகு சுத்தமான கைக்குட்டையால் அவள் முகத்தை ஓரளவு சுத்தம் செய்ய முயன்றாள்; அவளது கன்னத்திலிருந்த நீண்ட வெட்டுக் காயத்தினின்றும் ரத்தம் கசியத் தொடங்கிற்று.

தோலில் ஏற்பட்டிருந்த சிராய்ப்புக்களைத் தவிர வேறு ஆபத்துக்களின்றி ஸ்வாட் தப்பித்தது ஓர் அதிசயம்தான்! அவளது கன்னத்து எலும்பில் பட்டிருந்த காயத்தைத் தவிர, அவளது புறங் கைகளிலும் விரல் மூட்டுக்களிலும் சில இடங்களில் சிராய்க்கப்பட்டிருந்தன.

ஸ்வாட்டை நிற்க வைப்பதற்கு இரண்டு காவலர்களும் உதவினர்.

"அருகில் சுத்தமான குட்டையொன்று இருக் கிறது. அங்கே நீங்களெல்லோரும் கைகால்களைக் கழுவிச் சுத்தப்படுத்திக் கொள்ளலாம்."

வளைவைச் சுற்றி, சில சிறிய நீர்வீழ்ச்சிகளோடு கூடிய வேகம் நிறைந்த மலை அருவி ஒன்றிருந்தது. இது யென்டீன்டாங் அல்லது உப்பளங்கள் என்று காவலர்கள் அவர்களிடம் தெரிவித்தார்கள், அவர் கள் முன்கூட்டியே சமதரைக்கு வந்துவிட்டனர்.

அந்த இடம் அவர்கள் மனதைக் கவர்ந்தது. ரோவான் ஒரு பாறையில் ஓய்வெடுத்துக்கொண் டிருந்தான். ஈஸு அவனிடம் தன்னுடைய 'கோட் டை'க் கொடுத்தாள். மடிப்பு வைத்துத் தைக்கப் பட்டிருந்த அவனது மென்மையான மேலங்கியைக் கழற்றித் தரும்படி அவள் கேட்டாள்; அதைப் பிழிந்து போட்டால், அது காய்ந்துவிடும். வெய்யில் இல்லை; நாங்கள் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

தீ மூட்டலாமாவென்று வழிகாட்டியிடம் கேட்டாள் ஈஸு.

"நம்மைப்பற்றி இப்போது லாவோவுக்குத் தெரிந்துவிட்டது. ஆகவே எனக்குக் கவலை இல்லை" என்றான் அவன்.

"உங்களுக்குக் கவலை இல்லையெனில், எங்களுக்கும் கவலை இல்லை."

"ஸ்வாட், என்னுடைய ஒரே பேரப்பிள்ளையின் உயிரை நீ காப்பாற்றினாய். எனது இதயபூர்வமான நன்றியைஉனக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்" என்று சொன்னான் டூவான். அன்று காலையில் லெய்வாவிடம் அதே மாதிரியே சொல்லியிருந்ததை அவன் நினைவுபடுத்திக் கொண்டான்.

தன் குடும்பத்தின் அருமை மிகுந்ததோர் உயிரைக் காப்பாற்றியதற்காக, இருபத்திநான்கு மணி நேரத்திற்குள்ளாக இரண்டாந் தடவையாக மற்றொரு பெண்மணிக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருந்தான் டூவான். அவன் நன்றிகூறிய இருவரும் பெண்கள். சாதாரண வாழ்விலே தன் இனத்தைவிடத் தாழ்ந்தவர்கள். இந்தப் பிரயாணத்தில் அவர்கள் ஒரு தொல்லையாக மட்டுமே இருக்க முடியுமென்றும் அவன் நினைத்தான். ஆனால் இருவரும் இம்மாதிரி மறக்க முடியாத காரியங்களைச் செய்வார்களென்று யார் கண்டார்கள்.

"கீழே உருண்டு விழுந்தபோது உங்களுக்கு எப்படி இருந்தது?" என்று கேட்டாள் ஈஸோ.

"எனக்குத் தெரியவில்லை. ஸ்ப்ரௌட் கீழே விழுந்தான்; அடுத்தகணமே அவனைப் பிடித்துக் கொண்டுவிட்டேன். என் நெஞ்சோடு அவனைக் கெட்டியாகப் பிடித்துச் சேர்த்து அணைத்துக்

கொண்டு என் கண்களை மூடிக் கொண்டு விட்டேன். நான் மேலும் மேலும் உருண்டு கொண்டிருந்ததை மாத்திரமே என்னல் அறிய முடிந்தது: இதுவே என்னுடைய வாழ்வின் முடிவாக இருக்குமென்றும் எண்ணிவிட்டேன். என் விழிகளைத் திறக்கவே நான் துணியவில்லை. இருளையும் ஒளியையும் மாறி மாறி உணர்ந்தேன். அப்பால், எதுவுமே எனக்குத் தெரியாது........;"

"நல்லது; உன்னையும் உன் புருஷனையும் நான் ஒருபோதும் மறக்கவே மாட்டேன்........!" என்முன் டூவான்.

"புத்தர்பிரான் புகழப்படட்டும்.........நான் எதுவும் செய்துவிடவில்லை. 'நல்ல குடும்பத்துப் பெண் மணியின் கணவர் என் உயிரை ஒருமுறை காப்பாற்றினர்; 'நல்ல குடும்பத்துப் பெண்மணிக்கு' அதற்கு ஈடு செய்ய, நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்........!"

அவளது தலைமயிர் கலைந்து கிடந்தது. அவளது துணிமணிகள் நனைந்து ஈரமாகவும் சேறு அப்பிக் கொண்டு மஞ்சளாகவும் இருந்தது. அவளது முகத்திலிருந்த வெட்டுக் காயத்தில் அப்போதும் சேறு படிந்து ரத்தம் கசிந்து கொண்டு இருந்தது. இத்தகைய பரிதாபகரமான தோற்றத்துடன் ஸ்வாட் விளங்கினள். ஆனல், அவள் விபத்தைப் பற்றிச் சொன்னபோது, அவள் விழிகளில் ஒப்பற்ற அழகான பேரொளி ஒன்றை டூவான் கண்டான்.

"இதோ பாருங்கள். நீங்கள் இவ்விடத்தைச் சுற்றித் தங்கியிருங்கள். குன்றின் இந்தப் பகுதியில்

இருந்தால், நெடுஞ்சாலையிலிருந்து உங்களை யாரும் பார்க்க முடியாது. நான் போய்மற்றக் குழுவினரைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களையும் இங்கு கொண்டு வந்து சேர்க்கிறேன்" என்று கூறினன் சைசாம்,

சைசாம் போனபின், அவர்கள் ஒவ்வொருவரும் அமைதியிழந்தனர். பாதுகாப்பு இல்லாமல், இப் புதிய குன்றுப் பகுதியில் தங்களை அனுதரவாக கை விட்டு விட்டதைப்போல் உணர்ந்தனர். காலையில் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்ட லெய்வாகூட கலக்கமடைந்து நம்பிக்கை இழந்தது போல உணர லாளுள். எதற்கும் கலங்காத ஒரே நபர் ஃபான்தான். அவன் எப்போதும் எதிர்நோக்கி நிற்கும் அடுத்த நாளைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். இதுதான் அவர்களது கடைசி நாளாக நெருக்கடி நிறைந்த நாளாக இருக்குமென்று தோன்றியது. அசம்பாவிதமாக எதுவும் நேரிடக் கூடாதென்று அவன் விரும்பினன். சைசாம் எப்படி ஜேம்ஸைத் தேடிக் கண்டுபிடிக்கப்போகிருன், அவனுல் ஜேம்ஸை கண்டு பிடிக்க முடியுமா? என்றெல்லாம் அவன் கவலைப்பட்டான். இங்கே பார்த்தான்:—டுவான் நடுங்கிக் கொண்டு இருந்தது பரிதாபகரமாக இருந்தது: ஸ்வாட், ஸ்ப்ரௌட் ஆகியோரின் துணிகள் ஈரத்திஞல் அவர்களின் உடம்புகளில் ஒட்டிக்கொண்டு கிழிந்து தொங்கின. அவர்கள் குளிர் காய அவன் காய்ந்த விறகு கொண்டு வரவேண்டும். ஃபான் புறப்பட்டான்.

செடிகளையும் முட்புதர்களையும் விலக்கிக் கொண்டு அவற்றின் ஊடே விரைந்து சென்ற அவன்

ஒரு செங்குத்துப் பாறைக்கு முப்பதடி தூரத்தில் வந்துவிட்டான். ஒரு சிற்ருறு அதன் பக்கமாக ஓடியது; குகைமாதிரி தோன்றிய ஓர் இருண்ட ஒட்டு நிலத்தின் நுழைவாயில்மீது அதன் தண்ணீர் சொட்டுச் சொட்டாக வழிந்து கொண்டிருந்தது. ஏதோ ஒரு சிறிய பிராணி வேகமாக உள்ளே பாய்ந் தோடியதால், அதன் நிழல் அவனுடைய கணுக்கால் மீது படர்ந்து மறைந்தது, அவன் ஜாக்கிரதையாக முன்னேறினன்; இருண்ட உட்பகுதியில் விஸ்தார மானதொரு நிலப்பரப்பைக் கண்டுபிடித்தான். அந்த இடம் மரங்களடர்ந்து சதசதப்பாக இருண்டு பயங்கரமாக இருந்தது.

கண்ணுடிப் பளிங்கு போன்ற இரண்டு கண்கள் ஒரு முடுக்கிலிருந்து அவனை வரவேற்றன. ஃபான் 'டக்' கென்று நின்ருன். கண்கள் அசைந்தன. ஆனுல், அங்கே சந்தடியற்ற பயங்கரமான அமைதி நிலவியது.

"யார் அங்கே?" என்று கேட்டான் ஃபான்.

அவன் முன்னேறிச் சென்றபோது, அவனை வெறித்துப் பார்த்தவண்ணம் இருந்தன அக்கண்கள்; அவன் குகையை நெருங்கியதும் அங்கே உட்கார்ந் திருந்த ஒரு பையனின் உருவம் மாசுபடர்ந்தாற் போல் அவன் கண்களுக்குத் தெரிந்தது.

"யார்?" என்று அவன் வினவினுன்.

அந்தப் பையன் நடுங்கிக்கொண்டே தன் கால் களை இழுத்துக் கொண்டான்.

அருகே நின்று பார்க்கலாமென்று ஃபான் சற்று நகர்ந்தான். பையன் முற்றிலும் பயந்துபோனுன். அச்சத்தால் கைகளை உயர்த்தினுன்.

"பயப்படாதே. நான் ரோந்துக்காரன் அல்ல!"

பீதியால் கலங்கிய மெலிந்த முகமொன்றை அந்தக் குறை இருட்டில் பார்த்துப் புரிந்துகொள்ளும்படியாகவே இருந்தது.

"தாங்கள் என்னைக் கைது செய்யப்போவதில்லையே?" மெல்லிய நடுங்கும் குரலில் இவ்வார்த்தைகள் வெளிவந்தன.

"இல்லை. நானும் உன்போல் ஒரு அகதிதான்!...."

"சற்று நேரத்துக்கு முன்பு வெளியே குரல் கேட்டனவே!—அவை காவல் படையினருடையவை இல்லையா?"

"இல்லை. அவர்கள் என் சிநேகிதர்கள்; எங்களுடன் ஒரு சிறுவனும் சில பெண்களும் இருக்கின்றனர்."

"உங்களிடம் சாப்பிட ஏதாகிலும் இருக்கிறதா?"

அவனுடைய நம்பிக்கையைப் பெறும் பாவனையில் ஃபான் குனிந்து அவனுடன் அமர்ந்தான்.

"ஜாக்கிரதை. முள்ளம் பன்றிகளின் மீது உட்காராதே! அவைகளின் முட்கள் மிகக் கூர்மையானவை, குத்திவிடும்!" என்று கூறி ஃபான் எழுந்து நகர்ந்து நின்றான்.

மனிதர்களின் அரவத்தால் பீதியடைந்த அந்தச் சின்னஞ் சிறிய கரிய உருவங்கள் மெள்ள நகர்ந்து செல்வதை அவன் கண்டான்.

"நீ எப்படி இங்கே வந்தாய் அதைச் சொல்."

"நான் என்னுடைய பெற்றோர்களை இழந்துவிட்டேன். மூன்று தினங்களாக நான் சாப்பிட

வில்லை. அன்புமிக்க சிற்றப்பா! எனக்குச் சாப்பிட நீங்கள் ஏதாவது தர இயலுமா?"

"சாப்பிடுவதற்கு எங்களிடம் ஏதாவது இருக்கும் உன்னால் நடந்துவர முடியுமா?"

மெதுவாக அவனை எழுந்து நிற்கச்செய்ய உதவினான் ஃபான். குகையின் நுழைவாசலை அவர்கள் அடைந்தபோது நீள்வட்டமான அந்தச் சிறுவன் முகத்தில் திகைப்பும் பயமும் குடிகொண்டிருப்பதை அவன் கண்டான். அவன் வெறுங் காலோடு இருந்தான். அவனது முழங்கால்களில் உள்ள சிகப்புத் தழும்புகள் அவன் அணிந்திருந்த அரைக்காற்சட்டைக்கு வெளியே நன்கு தெரிந்தன. அவனுக்குப் பத்துப் பனிரெண்டு வயது இருக்கும். ஃபான் அவனை பலதடவை இறுகப் பிடித்துக் கொள்ளவேண்டிய அளவுக்கு அவன் பலவீனமாக இருந்தான். அவனது இடுப்பைச் சுற்றி ஒரு கையைப் போட்டு அணைத்துக்கொண்டு மற்றொரு கையை அக்குளுக்கு அடியில் வைத்துத் தூக்கி அவனைக் கடக்கச் செய்தான் ஃபான்; அதாவது, நீர்ப்பகுதியைத் தாண்டி அவனை மெய்யாகவே புதர்வழிகளினூடே தூக்கிக்கொண்டு போனான் ஃபான்.

ஃபான் விறகு தேட வந்ததை மறந்தேவிட்டான். நோயாளிப் பையன் ஒருவனுடன் அவன் திரும்பிவந்துகொண்டிருந்ததைப் பார்த்தபோது, மற்றவர்கள் பெரிதும் ஆச்சரியமடைந்தார்கள். பையனின் சட்டை கிழிந்திருந்தது; முகத்தில் சேறு அப்பிக்கொண்டிருந்தது; கண்களைத் திறந்து பார்க்க

கூட முடியாத அளவுக்கு அவன் பலவீனமாக இருந்தான். அவனது கண்கள் அடிக்கடி செருகிக்கொண்டிருந்தது. பீதியடைந்த அவனது பார்வை அவர்களது கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் தாமதம் காட்டியது.

"இவன் ஒரு குகையில், முள்ளம் பன்றிகளால் சூழப்பட்டுத் தனியாக இருந்ததைக் கண்டேன்" என்றான் ஃபான்.

"உன் பெற்றோர்கள் எங்கே?" என்று கேட்டான் டுவான்.

"இந்த உலகத்தில் இப்போது நான் தன்னந் தனியே இருக்கிறேன்."

அந்தப் பையன் வெய்ச்சோவிற்கு வடகிழக்கில் இருந்த மலைநாட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவன். அவனும் அவனது தாய்தந்தையரும் டாம்ஹுயி வழியாக வந்தார்கள். அவர்கள் எல்லையை அடைந்தனர்; ஆனால் அவன் பெற்றோர்கள் செங்குத்துப் பாறைகள் மீது ஏறியபோது விழுந்துவிட்டார்கள். இவன் மட்டும் தப்பி ஓடினான். ஸம்சூன் ஆற்றின் கரையை அடைந்தபோது, ரோந்துக்காரன் ஒருவனை இவன் பார்த்தான். அது மூன்று நாட்களுக்கு முந்தி நடந்தது; அன்றிலிருந்து அவன் தலைமறைவாக ஒளிந்து கொண்டிருந்தான்.

ஃபான் தன்னுடைய இடுப்புக் கச்சையை தளர்த்தி கொஞ்சம் வறுத்த அரிசியைப் பையனின் கையில் கொட்டினான். பையன் பேராவாலோடு அதைத் தின்றான். அவன் எல்லாவற்றையும் தின்று முடித்துவிட்டு பாறைமீது இரைந்து கிடந்த தானி

யங்களைப் பொறுக்கக் குனிந்தான். பிறகு நீர்க்காலில் நீரருந்தி, முகத்தை அலம்பிக்கொண்டபோது' அவனுக்கு தெம்பும் மனோதிடமும் உயிர்த்தெழுந்தது; அப்போதுதான் தன்னைச் சுற்றிலும் நோக்க ஆரம்பித்தான் அவன்.

"உன் பெயர் என்ன?"

"க்வென் என்று அழைப்பார்கள்!"

குழுவினர் அப்போதும் காய்ந்த விறகு வேண்டுமென்று தேடிக்கொண்டிருந்தனர். ஜ்வாலை விட்டெரியும் நெருப்பு, கொஞ்சம் கொதிதண்ணீர், கொஞ்சம் உணவு ஆகியவையே இப்போது அவர்களது மனத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தன.

அங்கே அநேக குகைகள் இருப்பதாகவும், அங்கு சருகுகளும் சுள்ளிகளும் கிடைக்குமென்றும் பையன் கூறினன். அந்த இடத்திற்கு யென்டீன்டங் என்று பெயர் என்பதை ஃபான் நினைவுபடுத்திக் கொண்டான்.

"இங்கிருந்து சிறிது தூரத்தில் இருக்கும் ஒரு குகையிலே ஆறு அல்லது ஏழு சவப்பெட்டிகளை வரிசையாகக் கண்டேன். அது அதிக தூரமில்லை. அருகேதான்!"

"ஐயோ, சொல்லாதீர்கள், வேண்டாம்!" என்று ஈஸாவும் லெய்வாவும் ஏககாலத்தில் பயத்தால் கதறினார்கள். ஃபான் புன்சிரிப்புச் சிரித்தான்.

சிறுவன் க்வென்னின் முகம் உண்மையிலேயே அழகாக இருந்தது. அவனது தாடை வட்டவடிவமாக இருந்தது. அவன் கண்கள் இரண்டும் இருண்ட நீர்க் குட்டைகளைப்போல் ஜ்வலித்தன.

"சவப்பெட்டிகளுக்கு அடியில் பெஞ்சுப்பலகைகள் இருக்கின்றனவென்று நான் கருதுகிறேன். அந்தப் பிணங்களில் ஒன்றை நாம் நகர்த்தினுல், மடிந்தவர்களை நாம் தொந்தரவு செய்ததாக ஆகுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"அப்படித்தான் நாங்கள் நினைப்போம்" என்று பயப்படுத்தும் விதத்தில் சொன்னுன் ஃபான்.

ஜேம்ஸ் கோஷ்டினர் இன்னமும் வரவில்லையே என்பதுபற்றி ஃபான் கவலையடைந்தான். அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதில் யாதொரு கஷ்டமும் இருக்காதென்றே அவன் நம்பினுன். ஈஸா அளித்திருந்த 'கோட்'டுடன் டுேவான் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தான். ஸ்வாட்டும் ஸ்ப்ரௌட்டும் தங்களுடைய ஈரத் துணிமணிகளோடு குளிரை தைரியமாக எதிர்த்து நின்றுகொண்டிருந்தார்கள்.

"நீ என்னேடு வந்து அந்தக் குகைகளை எனக்குக் காண்பிக்க இயலுமா?"

க்வென் மகிழ்ச்சியுடன் எழுந்தான். நடந்து செல்லும் வழக்கம் இல்லாதவன்போன்று அவன் நகர்ந்தான். பிறகு மெள்ள நடக்க முயன்றுன். அவனது காலடிகள் தாளப்பிரமாணத்தோடு விழுந்தன. தன்னைக் கவனித்துக்கொண்டிருந்த அக்குழுவினரை அவன் திரும்பிப் பார்த்தபொழுது, அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்து விளையாடியது.

"உன் பெற்றேர்கள் இறந்துவிட்டதாகவே நீ நினைக்கிருயா?"

"நிச்சயமாக இறந்துவிட்டார்கள். செங்குத்துப் பாறையிலிருந்து அவர்கள் விழுந்துகொண்டிருந்ததை

நான் பார்த்தேன். நான் பீதியடைந்து ஆற்றை நோக்கி ஓடத் தலைப்பட்டேன்."

போலீசிடம் அகப்பட்டு சும்சூன் ஸ்டேஷனுக்கு மேற்கேயுள்ள துர்நாற்றம் வீசும் கிடங்குக்கு அனுப்பப்படுவதைப் பார்க்கிலும், சாவதே மேலென்று கருதிய பலர் இந்த செங்குத்துப் பாறைகள் மீதிருந்து விழுந்து இறப்பதற்கு மார்பினால் ஊர்ந்து சென்றதை ஃபான் கேள்விப்பட்டிருந்தான். அகப்பட்டுக் கொண்ட பலர் அங்கேயே மாண்டிருந்தார்கள்; உயிர் தப்பியவர்கள் வழக்கமாக விடுவிக்கப்பட்டு, அவர்களின் கிராமங்களுக்குத் திரும்பவும் அனுப்பப் பட்டனர்!

"நான் பல பேய்களைப் பார்த்தேன்" என்றான் க்வென்.

"நீ பார்த்தாயா?"

"ஆம்; நான் இரவில் அவைகளைப் பார்த்தேன்."

"உன் சொந்தக் கண்களாலா?"

"ஆம்; என் சொந்தக் கண்களால்தான். அவைகளில் சில இரண்டடி உயரம் இருந்தன. அவை குகையின் உள்ளே எட்டிப் பார்த்துவிட்டுச் சென்றன. சில பேய்கள் மலைகளில் முப்பதடி உயரம் இருந்தன; அவற்றின் குரல்கள் தூரத்திலிருந்த மலைமீது தேய்ந்து மறைந்துவிட்டன."

"நீ என்ன செய்தாய்?"

"நானா? நான் ஒரு மூலையில் கூனிக் குறுகிப்போய் ஒளிந்துகொண்டு தூங்கிவிட்டேன்."

"முள்ளம்பன்றிகளிடம் நீ பயப்பட வில்லையா?"

"ஊஹும். அவை எனக்கு நல்ல துணையாக இருந்தன. தங்களைக் கதகதப்பாக வைத்துக் கொள்ளுவதற்காகத்தான் அவை நெருக்கமாக அடைந்துகொள்கின்றன போலும்! அவை பிரிந்து, பிறகு மெல்லிய சத்தம் செய்துகொண்டு மீண்டும் ஒன்ருகக்கூடி அடைந்துகொள்கின்றன. அவை என்னைப்பற்றிச் சற்றும் கவலைப்படவில்லை; நானும் அவைகளைப்பற்றிக் கவலைப்படவில்லை!"

சவப்பெட்டிகள் இருந்த குகைக்கு அவர்கள் வந்தார்கள். க்வென் சொல்லியிருந்த மாதிரியே, அங்கே ஏழு பிணப்பெட்டிகள் ஒரு வரிசையில் இருந்தன. அவை அங்கே பல வருஷங்களாக இருக்க வேண்டும். இறந்தவர்களின் சொந்தக்காரர்கள் பிணத்தைத் தங்கள் சொந்தக் கிராமத்துக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்வதற்கு தக்க தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பது வழக்கமாக இருந்ததால் அவை அங்கேயே வருஷக்கணக்கில் இருந்தன.

நம்பிக்கை குலைந்து எதற்கும் துணிந்த ஒருவனுக்கு மற்றவன் என்ன செய்ய முடியுமென்பது பற்றி யாதொரு அறிவுரையும் இல்லை. ஃபான் வெறுங்கையுடன் திரும்ப விரும்பவில்லை. டுவானோ அல்லது சிறுவன் ஸ்ப்ரௌட்டோ நோய்வாய்ப்பட நேரிட்டால், அப்பால் அவர்களின் பாதுகாப்பு ஆபத்திற்குள்ளாகிவிடும்! அவன் மனம் விஞ்ஞான ரீதியான நுட்பத்துடன் இயங்கியது. ஆற்றின் மறு கரைக்குச் செல்ல முயலும்போது காய்ச்சல் கண்டிருக்கும் வயோதிகனை தூக்கிச் செல்ல இந்தச் சவப்

பெட்டிகள் பயன்படும். ஆகவே அவைகளை எடுத்துச் செல்வதைப்பற்றி அவன் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

ஃபான் அமைதியாக நிற்பதைக் கண்டு, "அதெல்லாம் சரியாகவே இருக்கின்றன. நல்ல மனிதர்கள். படைவீரன் ஒருவன் என்னைத் துரத்திக்கொண்டு வருவதாக எனக்குத் தோன்றியபோது, அந்தச் சவப்பெட்டி ஒன்றினடியில் நான் ஒளிந்துகொண்டேன்" என்றான் க்வென்.

"நீ இங்கேயே இரவு பூராவும் தூங்கினாயா?"

"இல்லை. அது அந்திக்கருக்கல் நேரம். இங்கே நான் அரைமணி நேரம் மறைந்திருந்தேன். அவன் போய்விட்ட பிறகு, மலைமீது மிகத் தொலைவுக்கு நான் ஓடினேன். இறந்தவர்கள் இதைப் பொருட்படுத்துவார்களென்று நீங்கள் நினைக்கிறீர்களா?"

"இல்லை, உண்மையில் நான் அப்படி நினைக்கவில்லை."

சவப்பெட்டிகள் கனமாகவும் பருத்த உடல்களைத் தாங்கிக்கொண்டும் இருந்தன. சில மலிவான 'பைன்' மரத்தாலும், மற்றவை கருங்காலி மரத்தாலும் செய்யப்பட்டிருந்தன.

சிறிதாக இருந்த ஒரு பெஞ்சுப் பலகை எடுப்பதற்கு வசதியாக இருக்கும் என்று நினைத்தனர்.

"ஒரு கைகொடு. பெஞ்சுப் பலகையை நீ வெளியே இழுக்க முயற்சி செய்! அதுவரை நான் அதைத் தூக்கிப் பிடிக்கிறேன்."

"நீங்கள் இறந்தவர்களிடமிருந்து பாவமன்னிப்புக் கோரப்போவதில்லையா?" க்வென் வினவினான்.

சிறுவன் பேரில் அன்பான பார்வை ஒன்றை வீசி விட்டு, "நீ அவ்வாறு செய்வதுதான் உனக்கு மிக நல்லது" என்ருன் ஃபான்.

சவப்பெட்டிமீது சிலதடவை மெதுவாகத் தட்டினுன் க்வென். முழந்தாளிட்டு அமர்ந்து தன் சிறிய கரங்களை ஒன்று சேர்த்துக் குவித்தான் அவன்.

"அன்புமிக்க ஆவியே! நீ யாராயிருந்தாலும் சரி. நான் ஒரு அகதி: ஒரு குழந்தையுங்கூட. எங்கள் ஜனங்கள் நீரோடைக்குக் கீழ்ப்புறம் இருக்கிருர்கள்; நாங்கள் பசியுடனும் உற்சாகமில்லாமலும் இருக்கிருேம். தயவுசெய்து புரிந்துகொள்ள முயற்சி செய் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டுமென்று எங்களுக்கு எண்ணமில்லை. தீ மூட்டுவதற்காக உன்னுடைய பெஞ்சுப் பலகையைக் கடன் வாங்கிக் கொள்ள நாங்கள் விரும்புகிருேம்; அவ்வளவுதான்! உன்னைத் தொந்தரவு செய்வதற்காக எங்களை மன்னித்து விடு. சரிதானே?....சரிதானே?"

அவன் எழுந்து நின்று, "சரி என்று அவன் சொல்கிருன்" என்று கூறினுன்.

"அவன் அதைச் சொன்னுனு?"

"இல்லையென்று அவன் சொல்லவில்லை. பாருங்களேன்!—அவன் ரொம்பவும் அமைதியாக இருக்கிருன். அவன் அதைப் பொருட்படுத்தமாட்டான்!"

"இப்போது கவனமாக இரு. அவசரப்படாதே!" என்று கூறிவிட்டு ஃபான் தன் கால்களை அகலமாக விரித்து தரையில் ஊன்றிக்கொண்டு பெஞ்சுப் பலகையிலிருந்து சவப்பெட்டியின் பாரத்தைத் தூக்க முயன்ருன். பையன் பலகையை மெள்ள சில அங்கு

லங்கள் நகர்த்தினன். அசாய் மட்டும் இங்கு இருந்திருந்தால், ஒரே வினடியில் பெஞ்சுப் பலகையை அகற்றிவிட்டிருப்பான் என்று ஃபான் எண்ணினன்.

"ஊம், இப்போது இழு!" என்றன் ஃபான்.

க்வென் பெஞ்சுப் பலகையை வெளியே இழுத்தான்.

ஃபான் அதை ஒரு தள்ளுத் தள்ளினன்; சவப் பெட்டி அப்படியே தரையில் படாரென்ற சத்தத்தோடு அதிர்ந்து விழுந்தது.

"ஐயோ!....உங்களுக்கு ஏதாவது கேட்டதா?"

"இல்லையே!"

"நான் ஒரு குரலைக் கேட்டேன்."

"உன்னுடைய கற்பனசக்தி அபாரம்!"

ஒரு சிறுவனேடு சேர்ந்துகொண்டு எதையோ திருடிக்கொண்டிருக்கும் காரியம் ஓரளவு சிறுபிள்ளைத்தனமாகவும் முட்டாள்தனமாகவும் இருப்பதாகத் தோன்றியது ஃபானுக்கு; என்றலும், இரண்டு விசுப்பலகைகள் அவனுக்கு அவசியம் தேவைப்பட்டன.

ஆளுக்கொரு பெஞ்சுப் பலகையைத் தூக்கிக்கொண்டு, குழுவினரைப் பேருவகையில் ஆழ்த்தும் வகையில் திரும்பிச் சென்றர்கள். பெஞ்சுப் பலகைகளை பாறைகள்மீது மோதிப் பிளந்தார்கள். சீக்கிரமாக நெருப்பு மூட்டப்பட்டு கட்டைகள் படபடவென்று வெடித்து எரிந்தபோது ஈரமான குச்சிகளை வாரி நெருப்பில் வீசினர்கள்.

அப்போது பிற்பகல் கிட்டத்தட்ட மணி மூன்று ஆகியிருந்தது. குளிர் நிறைந்த அந்த அக்டோபர்

பருவத்திற்கு நெருப்பு இதமாக இருந்ததைப்போல் மற்றக்காலத்தில் இருந்ததில்லை. லெய்வாவும் ஃபானும் தீ அணையாமல் எரித்துக்கொண்டிருந் தனர். நெருப்பு கொழுந்துவிட்டு எரியும்போது நிறைய கிளைகளையும் இலைகளையும் வாரி அதில் வீசி ஞர்கள். மரப் பட்டைகளின் சுரீர் சுரீர் என்று போடும் சத்தத்தையும் இலைகளின் படபடவென்று வெடிக்கும் சத்தத்தையும் அனுபவித்துக்கொண்டு எல்லோரும் அதைச் சுற்றிலும் நின்முர்கள்.

தந்தை அணிந்திருந்த தன் 'கோட்'டைக் கழற்றி விட்டு, அவரை நெருப்பின் அருகே நிற்கும்படியும், நனைந்துபோன மேலங்கியின் கைகளைக் காயவைக்கும் படியும் ஈஸா சொன்னுள். அவன் ஒரு பக்கமாக அமர்ந்துபோதுமான அளவுக்கு குளிர் காய்ந்தான். பிறகு தன் முதுகை நெருப்பின் வசமாகத் திருப்பிக் கொண்டான். ஸ்வாட்டும், ஸ்ப்ரௌட்டோடு நின்று அம்மாதிரியே செய்துகொண்டிருந்தாள்.

"இப்போது எப்படி இருக்கிறீர்கள், அப்பா?" என்று கேட்டாள் ஈஸா,

"மிகவும் நல்லபடியாக இருக்கிறேன்" என்முன் அவன். அவன் களைத்துப் போயிருந்ததையும் குளிரிஞல் அவன் முகம் சுருங்கிப் போயிருந்ததையும் அவளால் காண முடிந்தது.

"நாம் இப்போது திரும்பிவிட வேண்டும்" என்முன் ஃபான். ஜேம்ஸையும் மற்றவர்களையும் சைசாம் கண்டுபிடிக்க வேண்டிய இடம் எவ்வளவு தொலைவில் இருந்தது என்பது பற்றி அவர்களுக்கு ஒரு விவரமும் புரியவில்லை.

ஃபான் அமைதி இல்லாமல் இருந்தான். ஜேம்ஸின் கூட்டத்தினரைப் பற்றிய தகவல்கள் ஏதாவது கிடைக்கின்றனவா என்று பார்க்க அவன் புறப்பட்டுச் சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் மனச் சோர்வடைந்து அவன் திரும்பிவந்தான்.

"ஹல்லோ!" என்ற குரலை அவர்கள் திடீரென்று கேட்டனர். அது ஒரு பையனின் குரல் போலத் தோன்றியது. நீரோடைக்கு மேலே அவர்கள் எதிர் பார்க்க முடியாத ஒரு திசையிலிருந்து வந்தது அக் குரல், ஓர் உருவம் பாறைக்குப் பாறை தாவிக் கொண்டு வருவதை ஃபான் கண்டான். ஆம்! அது அசாய்தான்! ஸைஸாமும் மற்றவர்களும் மெள்ள மெள்ள அவனுக்குப் பின்னால் நடந்து வந்தார்கள்.

அவர்களைப் பார்ப்பதற்காக அனைவரும் முன்னால் ஓடினார்கள்.

"கடவுளே, உனக்கு நன்றி. அவர்கள் பத்திரமாக இருக்கிறார்கள்" என்று முணுமுணுத்தாள் ஈஸா.

பின்னால் இருந்தது யாரென்று என்பதையறிய ஸ்வாட்டின் கண்கள் பிரயாசைப் பட்டுக்கொண்டிருந்தன.

"அதோ, என் கணவர்!....அவரோடு இருக்கும் அந்த இரண்டு-மூன்று பேர் யார்?"

அவ்வுருவங்கள் நெருங்கி நெருங்கி வந்தன; இப்போது மறைந்துகொண்டிருந்தன; இப்போது பாறைமயமான ஓடைக்குக் கீழே மெதுவாக வழி நடந்த வண்ணம் காணப்பட்டன. மெய்யாகவே,

சைசாம் அவர்களை மற்றொரு மார்க்கமாக அழைத்து வந்துவிட்டான்!

அவர்களுடையவட்டாரத்திற்கு பத்திரமாகவும் சுகமாகவும் அசாய் வந்து "நான் அரைமைல் தொலைவில் உங்கள் புகையைப் பார்த்தேன் என்று சொன்னான். நெருப்புக்கொளுத்துவது ஆபத்துக் கேதுவான காரியம்!" என்று சைசாம் கூறினார்.

அத்தியாயம் 19

குழுவினர் ஒருவர்பின் ஒருவராக வந்து சேர்ந்தனர். காவலரிடம் சிக்காமலிருக்க, அவர்கள் இரவு பூராவும் சுமார் பத்துமைல் தூரம் நடந்தார்கள். நேர்வழி மூலம் அவ்விபத்துக்கு வந்து சேர அரை மணி நேரம்தான் பிடிக்கும். எல்லோரும் நிம்மதியடைந்தார்கள். முக்கியமாக ஃபான் பெரு நிம்மதியடைந்தான்.

சாங்ஃபூ தன் மனைவியோடும் மூன்று புதிய அகதிகளோடும் சுறுசுறுப்பாகப் பேசிக்கொண்டிருந்தான். அவர்களில் ஒருவன் சுங்ஷான் ராணுவ உடுப்புகளுடன் இருந்தான்; கையில் துப்பாக்கி வைத்துக் கொண்டிருந்தான்; அவனும் அவர்களோடு வந்திருந்தான்.

ஜேம்ஸ்தான் கடைசியாக வந்து சேர்ந்தவன்.

"ஜேம்ஸ்! ஜேம்ஸ்!" ஈஸு அழைத்தாள்.

அவன் பாறைமேல் பத்தடி தூரத்தில் நின்று கொண்டிருந்தான்; கீழே வர இருந்தான் அவன். ஈஸு கைகளை நீட்டி அவனை வரவேற்க நின்றாள்.

"என் அன்பே! நான் திரும்பி வந்துவிட்டேன்!"

ஈஸு மகிழ்ச்சியில் திளைத்தாள்; கால் இடறி

கீழே நீரோடையில் விழுந்து விட்டாள். அவளைப் பிடிக்க உடனே தண்ணீரில் பாய்ந்தான் ஜேம்ஸ் தண்ணீரில் பெருஞ் சத்தம் எழும்பியது. நீரோடை இங்கு குறுகலாக இருந்தது. ஈஸுவின் மேற் சட்டையிலும் முகத்திலும் தண்ணீர் வாரி அடித்தது.

"என் அன்பே! உனக்கு ஏதாவது அடிபட்டு விட்டதா?"

"இல்லை; உங்களுக்கு அடிபட்டு விட்டதோ?"

அவர்கள் இருவரும் கலகலவென்று சிரித்தனர். அருகிருந்த ஸ்வாட்டும் சாங்கூவும் காதலர்களின் விளையாட்டை மௌனமாகப் பார்த்து ரசித்தனர். கை கோர்த்தபடி, ஜேம்ஸும் ஈஸுவும் சென்றார்கள்.

முகத்திரையில் தண்ணீருடன் கண்ணீரும் கலந்திருக்க ஈஸு சிரித்துக் கொண்டிருந்தாள்.

ஜேம்ஸ் கால்களைப் பதித்து 'கோட்'டிலிருந்த தண்ணீரை உதறினான்.

டுவான் மகிழ்ச்சியுடன் நோக்கினான்.

"நீங்கள் இருவருமே காலுறைகளைக் கழற்றி விடுவது நல்லது. அங்கே நெருப்பு நன்கு எரிந்து கொண்டிருக்கிறது."

அவர்கள் தீயை நெருங்கி உட்கார்ந்தார்கள்.

"உங்களோடு வந்துள்ள அந்த ஆட்கள் யார்?" என்று ஈஸு வினவினாள்

"அவர்களும் நம்முடன் சேரப் போகிறார்கள். நான் உனக்கு அதைப்பற்றிப் பிறகு சொல்கிறேன்."

அவர்கள் தங்கள் பாதங்களை காய வைத்துக் கொண்டிருக்கையில், டுவான் தீயருகே வந்து, "ஜேம்ஸ், சென்ற இரவு இங்கு ஒரு சம்பவம் நடந்

தது. அதுபற்றி லெய்வாவுக்கு நீங்கள் நன்றிசெலுத்த வேண்டு மென்று விரும்புகிறேன்" என்றுகூறினுன்.

"எதற்காக?"

"அதிருக்கட்டும்; நீங்கள் உங்களால் முடிந்த அளவுக்கு இதய பூர்வமாக அவளுக்கு உங்கள் நன்றியைச் செலுத்துங்கள். நான் அதைப்பற்றி பிறகு விளக்குகிறேன்."

ஜேம்ஸ், ஈஸாவை நோக்கினுன். அவள் நாணத்தால் முகம் சிவந்து, "அப்பா சொல்வது சரி. நீங்கள் சென்று முதலில் அவளுக்கு நன்றி தெரிவியுங்கள்" என்று கூறினுள்.

"ஏன், நீ சொல்ல முடியாதா?"

"அப்பா சொன்னபடி செய்யுங்கள்."

"ஒருவருக்கு எதற்காக நன்றி செலுத்துகிறோம் என்று தெரியாமல், நன்றி தெரிவிப்பது முட்டாள் தனமில்லையா?" என்று ஜேம்ஸ் சொன்னுன்.

"மனத்தை அலட்டிக் கொள்ளாதீர்கள்........! ஆனல் உங்கள் கைக் கடிகாரம் எங்கே?" என்று ஈஸா கேட்டாள்.

"அதில்தான் ஒரு கதை அடங்கியிருக்கிறது. நாங்கள் கடும் பட்டினி கிடந்து, இரவெல்லாம் நடந்து சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லாமல், பகல் பூராவும் தலை மறைவாயிருந்தோம்."

லெய்வா அவர்களை நோக்கி முதுகைக் காட்டிய வண்ணம் ஃபாரேடு பக்கமாக நின்றிருந்தாள்.

ஜேம்ஸ் தன்னுடைய பாதங்களை காலணிக்குள் நுழைத்துக் கொண்டு லெய்வாவை நோக்கிச் சென்றான். அவளுக்குக் கை கொடுத்தான்,

"என்ன காரணத்துக் கென்று தெரியாமல் இருந்தபோதிலும், உனக்கு நான் மனப்பூர்வமாக என் நன்றியைச் செலுத்த வேண்டுமென்று பணிக்கப் பட்டுள்ளேன்—அதுஏதோ ஈஸாவின் சம்பந்தப் பட்டதாக இருக்க வேண்டும். என்னுடைய மன முவந்த நன்றியை ஏற்றுக் கொள்வாயா?"

லெய்வா அவனை நோக்கி ஒரு பார்வையை வீசி விட்டு, வேறு பக்கம் திரும்பி கேலியாக நகைத்தாள்.

"அது ஒன்றுமில்லை. உண்மையிலேயே ஒன்று மில்லை!........"

"அது என்ன விஷயம்?" என்று அவன் ஃபானைக் கேட்டான்.

ஃபான் அவனைச் சிறிது தூரம் தள்ளி அழைத் துச்சென்று, முந்திய நாள் இரவு என்ன நடந்ததென் பதை விளக்கினான். தான் அங்கிருப்பது ஃபானுக்கு சங்கடமாக இருக்குமென்று எண்ணிய லெய்வா அங்கிருந்து நடந்து டீவான் குடும்பத்தாருடன் சேர்ந்து கொண்டாள்.

"அதிகாரி ஏன் ஈஸாவைத் தேர்ந்தெடுத்தான்?"

"ஏனென்றால், லெய்வா என்னுடன் இருப்பதை அவன் பார்த்தான். எது எப்படி இருப்பினும் அது முடிந்துபோன விஷயம்."

அவர்கள் எரிதழல் மூட்டத்தைச் சுற்றிக் குழுமி யிருந்த கூட்டத்தை நோக்கித் திரும்பி நடந்தார்கள். சைசாம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தான்.

"நாளை பிற்பகல் நான்கு மணிக்கு நாம் கோல நட்டிலிருந்து கீழே இறங்குவோம். ஆனால் இன்றிரவு நமக்கு ஒரு சோதனையான இரவாகும். நாம் எதிர்ப்

புறத்திலுள்ள மலையில் ஏறி விடுவதற்குள் பாதுகாப்பான மறைவிடத்தை அடைந்துவிட வேண்டும். நான் உங்களையெல்லாம் அதற்குத் தக்கபடி தயாராக இருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அவ்விடம் இங்கிருந்து நேராக ஐந்து மைல்கள்தான் என்றாலும் நாம் அங்கு போய்ச் சேருவதற்குள் இரவில் பெரும்பகுதி கழிந்துவிடும்.''

''நாம் எப்பொழுது புறப்பட வேண்டும்?'' என்று விசாரித்தான் ஃபான்.

''சமவெளிப் பிரதேசங்களில் இருள் கப்பிய பிறகே நாம் பத்திரமாக நடந்து செல்ல இயலும். எதிரேயுள்ள மலையில் இருக்கும் ஒரு கிராமத்தை அடைய கொஞ்சம் சிரமப்பட்டு ஏற வேண்டியதிருக்கும். அங்கே நாம் சிறுபொழுது தங்குவோம். மலையுச்சிக்கு நடு இரவுக்குப்பின் சென்றால், ஓரளவு பத்திரமாக இருக்கும்.''

''அக்கிராமத்தில் எல்லை காவல் ரோந்துப்படை வீரர்கள் இருப்பார்களா?''

''அதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை; அந்த மூன்று பேர்களும் நம்மோடு வருகிறார்கள். அதுவும் நல்லதற்குத்தான் என்றும் நான் நினைத்தேன். அவர்கள் மிகவும் பலசாலிகளாகத் தென்படுகிறார்கள். நிலைமை திடீரென மாறலாம். அதைப் பற்றிய முழு விவரங்களையும் அவன் உங்களுக்குச் சொல்லுவான்'' என ஜேம்ஸைச் காட்டினான் சைசாம்.

ஈஸா முன்னால் சென்று பாறையின்மேல் உட்கார்ந்து நெருப்பை பார்த்த வண்ணம் ஏதோ சிந்தனை செய்து கொண்டிருந்தாள்.

"நம்மிடம் ஒரு பொட்டலம் தேயிலை இருக்கிறது."

"நீ சென்று அதை எடுத்து வா."

"இப்பொழுது, தண்ணீர் பாத்திரத்தை தீயின் மீது வைத்துவிட்டு கூட்டத்தினர் சுற்றி அமர்ந்தனர். லெய்வா கையில் ஒரு காகிதப் பொட்டலத்துடன் திரும்பி வந்து, "நாம் இரவு சாப்பிடப்போகிறோம், இல்லையா?" என்று கேட்டாள்.

"ஆமாம், நமது கடைசி இரவுச் சாப்பாடு!" என்று மிகவும் கம்பீரமாகச் சொன்னான் ஜேம்ஸ்.

"நாளை இரவு நாம் ஹாங்காங்கில் இருப்போம். சரிதானே?"

"எல்லாம் நல்லபடி முடிந்தால்தான்!....காரியங்கள் எப்போதும் நாம் நினைத்தபடி நடப்பதில்லையென்பது உங்களுக்குத் தெரியுமே" அவன் தனிமையில் சிந்தித்துக் கொண்டிருந்தான். தன்னைச் சுற்றிலும் ஸ்திரீகளோ குழந்தைகளோ இல்லாத தனிமையை விரும்பினான் ஜேம்ஸ்.

தண்ணீர்ப் பாத்திரம் கொதித்துக்கொண்டிருந்தது. ஒரு மரக் கட்டையின் மூலம் லெய்வா அப்பாத்திரத்தை தீயிலிருந்து வெளியே எடுத்து அதில் கொஞ்சம் தேயிலைத் தூளைத் தூவினாள்.

அவரவர்கள் தங்களுக்கு சௌகரியமான பொழுது சாப்பிடுங்கள்" என்று இடுப்புக் கச்சைத் துணியை எடுத்துத் தரையில் விரித்தவாறுசொன்னான் ஃபான்.

"ஏ, க்வென்! இங்கே வா. என்னுடன் கொஞ்சம் சாப்பிடு."

சாங்ஃபூவுடன் வந்திருந்த மூன்று ஆட்களை ஈஸூ எவ்வாறு சந்தேகத்துடன் நோக்கினாரோ அவ்வாறே ஜேம்ஸ் அந்தப் புதுப் பையனைக் கண்டு திகைத்தான்.

"இதுவே நாம் கடைசியாக அருந்தும் சூடான இரவுச் சாப்பாடு.

"நாம் ஹாங்காங் போய்ச் சேரும்வரை வழியில் கோலநட் உச்சியில் தீ மூட்டவோ, இது போன்று சூடான இரவுணவு தயாரிக்கவோ முடியாது" என்று சொன்னான் ஃபான்.

ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள உணவுப் பண்டங்களை எடுத்து. அவற்றை சாங்ஃபூவின் கூட்டத்தினருக்கும் பிரித்துக் கொடுத்தார்கள். அங்கே கோப்பைகள் ஒன்றும் இல்லாததால், தேநீர் அருந்தும் அளவுக்கு குளிர்ந்தவுடன், அப்படியே தேநீர்ப் பாத்திரத்தோடு ஒருவர்பின் ஒருவராக அருந்தினர். பிறகு போதாக் குறைக்கு மேலும் கொஞ்சம் தயாரித்தார்கள்.

ஆடவர்கள் தீயைச் சுற்றி சிலர் அமர்ந்தும் சிலர் நின்றுகொண்டும் இருந்தனர். பெண்டிர்கள் அமைதியாக அமர்ந்து உற்றுக் கேட்டுக்கொண்டிருந்தனர். "சாங்ஃபூ கூறலானான்: இந்த நண்பர்களை நான்தான் என்னோடு அழைத்து வந்தேன். நாங்கள் ஒரு மலையடிவாரத்தில் ஒற்றையடிப் பாதை வழியாக வந்துகொண்டிருந்த ஒரு பெரிய கூட்டத்தைச் சந்தித்தோம். அவர்கள் தாங்கள் என்ன செய்யப் போகிறார்களென்பதை என்னிடம் கூறினார்கள்."

ஃபான் தன்னுடைய கூர்மையான பார்வையை போக்லோ குடியானவனிடமிருந்து அகற்றவே

இல்லை. அவன் கூட்டத்தின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு வந்ததைப் பற்றி மிகவும் வருத்தமடைந் தான். தன் பார்வையை சாங்ஃபூவிடமிருந்து ஜேம்ஸின் பக்கம் திருப்பினான்.

"அவர்கள் எத்தனை பேர்கள்?" என்று ஃபான் வினவினான்.

"முப்பது அல்லது நாற்பது பேர். நான் அவர் களில் பலசாலிகளான இரண்டு மூன்று ஆட்களை எங்களுடன் வரும்படி கேட்டேன். நாம் தைரியமாகப் போராடி முன்னேறிச் செல்லுவோம்! நம்மை மலை யுச்சியில் சந்திப்பதற்கென ஹெங்பெய் வழியாக இரண்டு கூட்டத்தினர் போய்க்கொண்டிருக் கிறார்கள். நாம் மூன்றாவது கூட்டத்தினராக இருப் போம்."

"அதனால்தான் நான் அவர்களுக்கு எனது கைக் கடிகாரத்தைக் கொடுத்து உதவினேன்" என்று ஜேம்ஸ் அமைதியாகக் கூறினான்.

"உங்களுக்கு அவர்களுடைய திட்டத்தைப் பற்றி தெரியுமா" என்று கேட்ட ஃபானின் குரல் கரகரத் தது. ஜேம்ஸ் தலையை ஆட்டினான்.

"நீங்கள் அதை எடுத்துக் கொள்கிறீர்களா?"

"எந்தத் திட்டமுமே பூரணமாக இராது. இது சிறந்ததாகத்தான் தெரிகிறது" என்று கூறி, சிறிது நிறுத்தினான் ஜேம்ஸ். பின்பு "நாம் சில உயிர்களை இழக்க நேரிடலாம்—இழக்க வேண்டியதுதான்! எந்த வகையிலும் அபாயம் இருக்கிறது. ஆயினும் எண்ணிக்கை கூடுவதால் பலம் பெருகும்" என்று சொன்னான்.

விடிவதற்குச் சற்று நேரத்துக்கு முன்பு சாலையின் வழியாக வந்துகொண்டிருந்த கூட்டத்தினரை தாங்கள் எப்படிச் சந்தித்தோம் என்பதை ஜேம்ஸ் விளக்கினன். அவனும் அவன் சகாக்களும் அவ்வழியாகத் தப்பிச்செல்லும் அகதிகளை கவனிப்பதற்காகப் புதர் மறைவில் ஒளிந்திருந்தார்கள். வானத்தில் நிலவு பால்போல் காய்ந்தது. அவர்கள் யதேச்சையாக சிரித்துக்கொண்டும் இரைந்துகொண்டும் நடந்து வருவதாக ஜேம்ஸ் கருதினன். சாங்ஃபூ சில போக்லோ ஆட்களை அடையாளம் புரிந்துகொண்டு அவுர்களிடம் பேசச் சென்ருன். அவர்கள் சாங்பூவை தங்களோடு சேர்ந்துகொள்ளுமாறு சொன்ஞர்கள். சாங்ஃபூ, ஜேம்ஸ் வெளியே வருவதற்காக சீழ்க்கை ஒலி எழுப்பினன். அவர்கள் அவனுடைய துப்பாக்கியைப் பார்க்க விரும்பினர்கள். அவர்களிடமும் ஏழு துப்பாக்கிகள் இருந்தன.

எதிர்மாருன முறையைக் கையாளும் மாறுபட்ட கருத்துடைய குழுவினராக இருந்தார்கள். அவர்கள் கூட்டம் இராணுவ முறையில் அமைக்கப்பட்டிருந்தது. முடிந்தால் தந்திரத்தின் மூலமாகவும், அவசியம் ஏற்பட்டால் நேரிடையாக ரோந்துப் படையினருடன் கைகலப்பதென்றும் அக்குழு தீர்மானித்திருந்தது. அவர்கள் எல்லோருமே அநேகமாக சுற்றுப்புற கிராமங்களிலிருந்து வந்தவர்கள். பிங்ஷான் மாகாணத்திலுள்ள அரசாங்கப் பண்ணையில் செயலாற்றிய மூன்று சமிஷனர்களால் அக்குழு அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. எந்த மார்க்க

மாகத் தப்புவது என்பதுபற்றி அந்தக் கமிஷனர்கள் மாதக்கணக்கில் ஆலோசித்து திட்டமிட்டிருந்தனர்.

அவர்களுடைய தலைவர்கள் ஹுவாங்கும் மற்றுமொரு வளர்ந்த ஆளான சூபாதா என்பவனும் ஆவர். இருவரும் ராணுவப் பயிற்சி பெற்றிருந்தனர். ஆட்களை பன்னிரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூன்று அணிகளாகப் பிரித்து ஒவ்வொரு அணியும் ஓர் அணித்தலைவரைக் கொண்டிருந்தது. தப்பிச்சென்ற அகதிகள் பலர் தாம்ஷ்யு-பிங்ஷான் பரப்புக்களில் சுற்றி அலைந்து கொண்டிருந்தார்கள். செயல் முறைகள் ஆராய்ந்து கவனமாகத் திட்டமிடப்பட்டிருந்தன. ஈட்டிகள், கட்டப்பாறைகள், மண்வெட்டி பிகாசிகள், நீண்ட பிடியுள்ள மண்வெட்டிகள், துப்பாக்கிகள் ஆகியவை மாகாணப் பண்ணையிலிருந்து திருடிக்கொண்டு வந்து நகரத்திற்கு வெளிப்புறத்தில் மறைத்து வைத்திருந்தார்கள். சமயம் கிடைத்ததும் பிங்ஷானிலிருந்து நழுவி தங்களுடைய ஆயுதங்களையெல்லாம் சேர்த்துக் கொண்டு நேரே கோலநட்டை நோக்கி இரவோடு இரவாக நடந்தார்கள். அவர்களுடைய திட்டப்படி ஹாங்காங்கை இருபத்தி நான்கு மணி நேரத்தில் அடைய வேண்டும்! தனித்துக் காணப்பட்ட ரோந்துப்படையினரால் அவர்களுக்கு எவ்வித கஷ்டமும் நேராது. "எதிரி ஒன்றுசேரும்பொழுது பிரிந்துவிடுங்கள்!....எதிரி பிரியும்போது தாக்குங்கள்! பலமான ஆயுத தாக்குதலை ஆயுதமற்றுச் சமாளியுங்கள்! சாதாரண தாக்குதலை ஆயுதம் கொண்டு தாக்கி முறியடியுங்கள்! எதிரி முன்னேறும்பொழுது, நாம்

பின்வாங்குகிறோம். எதிரி பின்வாங்கும் நேரத்தில் நாம் தொடர்கிறோம்!" என்று சூபாதா சாங்ஃபூவுக்கும் ஜேம்ஸுக்கும் விளக்கியிருந்தான்.

"நாம் உச்சியில் சந்திப்போம். கீழே இறங்கும் பொழுது நூறு கெஜங்களுக்கு அப்பால் மூன்று திக்குகளிலும் பிரிந்து செல்லுவோம். நமது ஆட்கள் ஏழு துப்பாக்கிகளையும் மேற்கொண்டு தங்களுக்குக் கிடைக்கக்கூடிய மற்ற எல்லா ஆயுதங்களையும் கொண்டு தாக்குவார்கள்! ரோந்துப்படையினர் நீண்ட தூரத்திற்கு இங்குமங்குமாகப் பரவியிருக்கிறார்கள். அநேகமாக அவர்கள் எதிரிகளின் எண்ணிக்கை தங்களை மிஞ்சியிருப்பதைக் காணும் பொழுது பீதியடைந்து ஓடிவிடுவார்கள். ஒவ்வொரு ரோந்துப்படையிலும் ஏழு அல்லது எட்டுக்கு மேல் ஆட்கள் இல்லை. நாம் நடுவில் ஒருவனைப் பிடித்து விட்டால், இரு பக்கங்களிலிருந்தும் அவர்களைச் சூழ்ந்துவிடலாம். அவர்கள் ஒரு முனையில் பிடிபட்டால் போதும் தங்களின் உயிரைக்காப்பாற்றிக் கொள்ள பயந்து ஓடிவிடலாம்!...."

"எங்களுக்கு உங்களுடைய துப்பாக்கி தேவைப்படுகிறது" என்று சூபாதா தன் கைகளை நீட்டிக் கூறினான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுடன் சேர்ந்து தானும் தன்னுடைய துப்பாக்கியை வைத்திருத்தல் நலம் என்று எண்ணினான் ஜேம்ஸ்.

"மேலும் எங்களுக்கு இன்னொரு கைக்கடிகாரம் தேவைப்படுகிறது."

ஈஸாவும் ஃபானும் தங்களிடம் கைக்கடிகாரங்களை வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்துதான் ஜேம்ஸ் தன்னுடைய கைக்கடிகாரத்தைக் கொடுத்தான்.

ஃபான் அமைதியாக அமர்ந்து உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"அது சரி, ஆனால் நாம் திட்டமிட்டிருந்ததற்கும் இதற்கும் வெகுதூரம்?"

"இதில் ஆக்ஷேபனை ஏதாவது உண்டா? அவர்கள் நாளை இரவு புறப்படப் போகிறார்கள். இனி அவர்கள் தாமதிக்க முடியாது. தங்களை யாராவது கண்டு பிடிக்கப்படு முன்னால் அவர்கள் தப்பிப்போய் விட விரும்புகிறார்கள்."

ஃபான் சாதத்தை மென்றுகொண்டிருந்தான். பிறகு தன் மீசையைத் துடைத்த வண்ணம் உமிழ்ந்தான்.

"நான் நம்முடன் உள்ள பெண்களையும் குழந்தைகளையும்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் இந்தச் சண்டையில் மாட்டிக்கொள்வதை நான் விரும்பவில்லை. நமது திட்டம் எவ்வித ஹிம்சையுமின்றி நிசப்தமாக சல்லிசாக நடைபெற வேண்டும்."

"நீ என்ன சொல்கிறாய்?" என்று ஜேம்ஸ் ஈஸாவை நோக்கினான்.

"என் தந்தையும் பையன்களும் இம்மாதிரி ஆபத்துக்கு உள்ளாக வேண்டுமென்று நான் நினைக்க

வில்லை. நமது ஆட்கள் ரோந்துப்படையினரைக் காட்டிலும் பலசாலிகளாகவும் அதிக எண்ணிக்கை கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை அறிய சந்தோஷம்தான். என்றாலும் அகலமான இந்த நதியை நாம் எப்படி நீந்திக் கடக்கப்போகி றோம்?

"நான் அறிந்த வரையில் சம்சன் நதி இந்த முனையில் அவ்வளவாக ஆழமில்லை; அநேகமாக இரு பது அல்லது இருபத்தைந்தடி அகலமிருக்கலாம். கரையின் இருமருங்கிலும் முள்கம்பி வேலிகள் சிறிது தூரம்வரை இருக்கின்றன; நம்மை யாரும் பார்த்து விட்டாலொழிய நதியைக் கடந்து செல்வது அவ்வ ளவு கடினமான காரியமல்ல."

புதிய ஆட்களில் ஒருவனை மாவோபெங் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். மூன்று மாஜி கமிஷனர்களிலே அவன் ஒருவன். தனது பழைய கறுப்பு நிற சுங்ஷான் ராணுவ உடுப்புக்கு வெளியே உள்ள தோலுறையில் துப்பாக்கி வைத்திருந்தான். இருந்த போதிலும், அவனது உயரமான, மெலிந்த தோற்றம் ஓரளவு இராணுவ இயல்பைக்காட்டிலும் சிறந்த ஓர் அறிஞனின்தோற்றத்தையே காட்டியது. லேசாக புன்னகை செய்தான்! அவன்.

"அபாயத்திற்கேதுவான காரியங்களை நாங்கள் மேற்கொள்ளவில்லை. எங்கள் ஆட்களிடம் கடப் பாறைகள், மண்கோடாரிகள், பிக்காசுகள், நீண்ட பிடியுள்ள மண்வெட்டி எல்லாம் இருக்கின்றன. ஆற்றின் குறுக்கே வீசி மறுகரையில் கட்ட கயிறு களும் வைத்திருக்கிறோம்."

இந்தத் திட்டத்தால் அசாய் பரபரப்படைந்தான்.

"கவலேவேண்டாம். அந்தப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நான் உதவி செய்கிறேன். நாம் சற்று அப்பால் தள்ளி ஒதுங்கி நின்று சமயம்பார்த்து குறுக்கே பாய்ந்து ஆற்றைக் கடந்துவிடுவோம். இரண்டு பையன்கள் மட்டுந்தானே இருக்கிறார்கள். அவர்களை நான் கவனித்துக்கொள்கிறேன் என்றான்" அசாய்

"நீ உன்னைப் பெரிய ஆளாகக் கணக்கிட்டுக் கொண்டுவிட்டாயா?, என்ன?" என்று கேட்டான் ஃபான்.

"நிச்சயமாக! நான் உங்களில் யாரையும்விட வேகமாக ஓடித் தப்பித்துவிட முடியும்!"

ஜேம்ஸும் ஈஸுவும் உள்ளூரச் சிரித்துக்கொண்டார்கள்.

"அந்தப் பையன் சும்மா உட்கார்ந்திருக்க மாட்டான் என்பது எனக்குத் தெரியும்."

"நாம் அவனைப் பயன்படுத்திக்கொள்ளலாம்" என்றான் மாவோபெங்.

"நீங்கள் மா-ஸே-துங்குக்கு உறவா?"

"இல்லை. ஆனால் நான் ஹுனனைச் சேர்ந்தவன்."

"சென்ற இரவு இந்த கமிஷனர்களின் பெயரைக் கேட்டபொழுது, இங்கே நமது குழுவிலும் கூட அது போலவே ஒரு 'சூ'வும் ஒரு 'யா'வும் இருக்கிறார்களே!' என்று நினைத்துக் கொண்டேன்" என்றான் அசாய். பிறகு குரலை மாற்றிக்கொண்டு 'பன்றியைப் போலவும் பூனையைப் போலவும்' சத்தம் செய்து

காட்டினான். சூடேயையும் மாசேதுங்கையும் அடையாளம் காட்டப் பொதுமக்கள் கண்டுபிடித்த ஒரு கேலிக்குரல் இது.

"உன் வாயை மூடு" என்று கூறி தன் கையை ஓங்கினான் மாவோபெங்; அசாய் ஏய்த்துவிட்டு ஓடிவிட்டான்.

தான் முதலில் சென்று சுற்றிலும் ஒரு நோட்டமிடப் போவதாக சைசாம் கூறினான். அவன் அசாயையும்தன்னுடன் அழைத்துச் செல்ல விரும்பினான். ஆரம்பத்திலிருந்தே அவன் அசாயை விரும்பினான்; காரணம் அவன் மிகவும் புத்திசாலி, கூர்மையான அறிவுள்ளவன், சாமர்த்தியமும் விழிப்பும் உள்ளவன் என்று நினைத்தான்.

"உங்களுடைய வருகைக்காக என்னுடைய நண்பனைத் தயார் செய்யப்போகிறேன். உங்களில் பலபேர் அங்கே இருக்கிறார்கள். ஆனால், சிறிது தூரத்தில் மிகவும் பாதுகாப்பு மிகுந்த ஆலிவ் மரத் தோப்பு ஒன்று இருக்கின்றது. நடுவே தங்குவதற்கு அது சிறந்த இடமாக அமையும். ரோந்துப்படையினர் அநேகமாக பதினொரு மணிக்குத்தான் அந்த வழியாகச் செல்கிறார்கள். அது இங்கிருந்து ஏறக்குறைய ஒரு மணிநேரத்தில் சேர்ந்துவிடக்கூடிய இடமாகும். பகல் நேரத்தில் அதைக்காட்டிலும் குறுகிய நேரமே பிடிக்கும். அங்கிருந்து உச்சிக்குச் செல்ல இன்னும் ஒரு மணி நேரம் பிடிக்கலாம் நீங்கள் புறப்படுவதற்கு முன்னால் நாங்கள் திரும்பி வந்துவிடுவோம்."

"இதைவிட்டு நகராதீர்கள்; மறுபடியும் தீ மூட்டாதீர்கள். இது மற்ற எந்த இடத்தையும்விட பாதுகாப்பானது. நான் திரும்பி வரும்போது. நீங்கள் எல்லோரும் இங்கு தயாராக இருக்க வேண்டும்."

கூட்டத்தினர் பாறையின்மேல் பரவலாக அமர்ந்தார்கள். தங்குவதற்கு தகுதியாக இருந்தது அந்த ஒரே இடம்தான். ரூவான் குடும்பத்தார் ஒரு புறத்திலும் புதிதாக வந்த மனிதர்கள் மற்றொரு பக்கமாகவும் தங்கினார்கள். ஃபானும் லெய்வாவும் குகையில் ஈரம் இல்லாமலிருக்கும் என்று சொல்லிக் கொண்டு குகையைத் தேடினார்கள். க்வெனும் அவர்களுடன் சென்றான். ஸ்வாட்டும் சாங்ஃபூவும் ஒரு பாறையின்மேல் சாய்ந்துகொண்டிருந்தார்கள். புதிய ஆட்களில் ஒருவனை வழியில் நின்று கண் காணிக்கும்படி நியமித்திருந்தார்கள்.

மாவோபெங்குடன் பேசவிரும்பினான் ஜேம்ஸ். மாவோபெங்கும் மற்றொருவனும் ஒரு பாறைமேல் உட்கார்ந்திருந்தனர். ஜேம்ஸ் வரவே அவனுக்கு இட வசதி செய்துகொடுத்தான்.

மாவோ அதிகம் பேசவிரும்பவில்லை. ஜேம்ஸ் தான் முதலில் பேச்சை ஆரம்பித்தான்.

உங்கள் கோஷ்டியில் எத்தனை ஆட்கள் இருக்கிறார்கள்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"எங்கள் பட்டியலை முப்பதெட்டு அல்லது முப்பத்தொன்பது ஆட்களுடன் ஆரம்பித்தோம். சிலர் சேர்ந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். அவர்களில் சிலர் ஹைலாக்வாங்—ஹைஹுப்வாங் லக்ஃபாங்

கைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தாம்ஷுரிய வட்டத்தில் எங்களைப் பிரிந்துவிட்டார்கள். அவர்கள் சிறந்த சண்டை வீரர்கள்: கடற் கொள்ளைக்குப் பெயர் போனவர்களென்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஹுவாங்கும் சூபாதாவும் அரசாங்கப் பண்ணைக்கு வந்து சேர்ந்த நாள்முதலாக, அதாவது நான்கு மாதகாலமாக நாங்கள் இதைத் திட்டமிட்டு வருகிறோம். ஆட்களில் சிலரை பகலில் வேலை செய்ய வருகிறவர்களைப் போல் கடத்திவந்தோம். மாஜி கமிஷனர்கள் என்ற காரணத்தால் மாகாணப் பண்ணையில் மிகவும் பொறுப்பான ஸ்தானங்கள்—அதிலும் முக்கியமாக—அலுவலக வேலை எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. சிலரை வாசல் காவலர்களாகக் கூட நாங்கள் நியமித்தோம்."

"நீங்கள் ஏன் தப்பிச்செல்ல விரும்புகிறீர்கள்? நாட்டுப்புறத்துக்கு அனுப்பப்படுவதன் காரணமாகவா?"

தவறு செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எல்லோரும் தவறு செய்கிறார்கள். அதற்காக எல்லோரையும் தண்டிக்க வேண்டும் என்பதல்ல முறை—அது சரியான முறையும் ஆகாது."

"சரி! அவைகளெல்லாம் கடந்துபோன விஷயம். நாங்கள் வெளியேறத் தீர்மானித்தோம். எங்கே என்பது பற்றி அக்கறையில்லை! எங்கு நாம் உழைக்க முடியுமோ, எங்கு நாம் முட்டைக்கோசைப் பயிரிட்டு அதனுடைய தலைபாகத்தைக் கையில் பிடித்து 'இது என்னுடையது' என்றுகூற அனுமதிக்கப்படுகிறோமோ அங்கு செல்ல விழைகிறோம். இப்பொழுது இந்தப்

'பெரும் முன்னணி பாய்ச்சல் திட்டத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பதைப் பாருங்கள். மக்கள் வெறும் வயிற்றோடு முன்னேறிப் பாய முடியாது! மக்கள் உணவு உற்பத்தி செய்யவில்லையெனில், எப்பொழுதும் பட்டினிக் கிடக்கும் வயிறுகள் இருந்து கொண்டுதான் இருக்கும், மக்களை சாட்டை அடிவாங்கி ஓடும் கோவேறு கழுதைகள் போலவோ அல்லது, கூட்டம் கூட்டமாகக் கைது செய்தோ, உணவு உற்பத்தி பண்ணிவிட முடியாது. அது நடக்காத காரியம்!"

அத்தியாயம் 20

ருகையில் தன் கைக்கடிகாரத்தில் மணி பார்க்க டார்ச் விளக்கை அடித்தான் ஃபான். பத்து அடித்து பத்து நிமிஷமாகியிருந்தது. அறுைதைச் சிறுவன் க்வெனே அணைத்தபடி லெய்வா ஒரு பாறைமீது முதுகைச் சாய்ந்து அமர்ந்தாள். சிறுவன் பகலில் உறங்கியதைவிட இப்போது மிகவும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனைத் தன் மார்பின்மீது படுக்கவைத்து உறங்கச் செய்தாள் லெய்வா. பாது காப்போடும் கதகதப்போடும் இருந்த க்வென் அவளோடு ஒட்டிக் கொண்டிருந்தான். அவன் சிறிது அசைந்தாலும் அவனை அன்புடன் முதுகில் தட்டித் தூங்க வைத்தாள். அசாய் மிகவும் சின்னப் பையனாக இருக்கையில், அவனையும் இவ்வாறுதான் சீராட்டி வளர்த்தாள். அந்த நினைவுகள் அவளை அறியாமல் அவள் மனத்தில் நிழலாடியது. "இதுதான் சரியான நேரம். நாம் அவர்களுடன் சேர்ந்து கொள்வோம். அவர்கள் கீழே என்ன செய்து கொண்டிருக்கிறார்களெனத் தெரியவில்லையே!" என்று தாழ்ந்தகுரலில் சொன்னான் ஃபான்.

பையனை எழுப்ப எத்தனித்தாள் லெய்வா. ஆனால் அவன் அவளை இறுகப் பற்றிக்கொண்டு சற்று அசைந்து கொடுத்தான்.

"க்வென், க்வென்!" எழுந்திரு; நாம் போக வேண்டும்" என்று கூப்பிட்டாள்.

சற்றுச் சிரமத்துடன் அவள் நிமிர்ந்து உட்கார்ந்தாள்; பையனை தரையில் படுக்கவிட்டாள்.

"டார்ச்சை அடியுங்கள். எனக்கு ஒன்றுமே தெரியவில்லை" என்றாள் லெய்வா.

பிறகு அவள் க்வெனை எழுந்து உட்காரச் செய்தாள். தான் எங்கே இருக்கிறோம் என்பதை அறியாமல் அவன் இன்னமும் கனவுலகிலேயே இருந்தான். அப்போது ஃபானின் கண்டிப்பான குரல் அவன் காதில் விழுந்தது: "க்வென் எழுந்திரு. நாம் போய் மற்றவர்களோடு சேர்ந்துகொள்ள வேண்டும்."

கண்களை கசக்கிக்கொண்டே க்வென் எழுந்து நின்றான்.

கீழேயிருந்து பேசும் குரல்களை அவர்களால் கேட்க முடிந்தது. விண்ணில் நட்சத்திரங்கள் இல்லை. மூடுபனி கவிந்து கொண்டிருந்தது.

அடர்ந்த புதர்களினூடே ஃபான் டார்ச் விளக்குடன் வந்து கொண்டிருந்ததை கீழே விழித்துக் கொண்டிருந்தவர்கள் கண்டபோது அங்கு முணுமுணுப்புகள் எழுந்தன.

அவன் குழுவினர்கள்மீது டார்ச் விளக்கை அடித்தான். சிலர் கீழே படுத்துக் கொண்டிருந்தனர். மற்றவர்கள் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தனர். தன் அருகில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த சிறுவன் ஸ்ப்ரௌட்டுக்கு தன்னுடைய ஒரு கையை நீட்டி அதை தலையணையாக ஆக்கியபடி ஈஸூ ஒரு பக்கமாக படுத்து உறங்கிக்

கொண்டிருந்தாள். டுவான் நன்கு விழித்துக் கொண் டிருந்தான். அவ்வாறே ஸ்வாட்டும் சாங்ஃபூவும் பிறரும் வழிகாட்டிசைஸாம் திரும்பி வரவேண்டி காத்திருந்தனர். அவன் வந்து சேராததால் அவர் களுக்கு சங்கடமாக இருந்தது. அவர்கள் மௌன மாக இருந்தார்கள்.

பத்து நிமிஷங்கள் கழித்து, ஸைஸாம் திரும்பி ஞன். மலையடிவாரத்தில் கவனித்துக் கொள்வதற் காக அசாயைத் தனியாக விட்டுச் சென்றிருந்தான் அவன். சூழ்நிலை சகஜமாக இருந்தது; ஆகவே அவர் கள் உடனடியாகப் புறப்பட்டுவிட வேண்டும்.

அன்றைய இரவு மற்ற இரவுகளைப் போலன்றி சற்று மங்கிய ஒளியுடன் இருந்தது. அவர்களில் சிலர் மற்றவர்களைக் காட்டிலும் நன்ருகவே பார்க்க முடிந்தது. அந்த மங்கிய இரவில் தூரத்தில் வெள் ளைக் கோடுபோல் தோன்றும் சாலையை அடையும் வரை அவர்கள் எல்லோரும் மிகவும் மெதுவாகவே போகவேண்டி இருந்தது. சாலையை அடைந்துவிட் டால் பிறகு நன்ருகப் பார்க்க முடியும். இருள் அவர் களுக்கு ஒரு பாதுகாப்பாக அமைந்திருந்தது. ஆபத்து ஏற்பட்டால் சுலபமாக ஓடி ஒளிந்து கொண்டுவிடலாம். சிறுவன் ஸ்ப்ரௌட்டை மீண் டும் ஸ்வாட் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்; ஜேம்ஸ் ஒரு பக்கத்திலும் ஈஸு மறு பக்கத்திலுமாக டுவான் நடந்து கொண்டிருந்தான்.

நெடுஞ்சாலை வடக்கே இருந்த ஓர் ஏற்றத்துக்கு அவர்களை விரைவில் இட்டுச் சென்றது. அங்கே அவர்கள் ஒரு மலைப்பாதையில் திரும்பினூர்கள்; அப்

படியே சென்றால் அவர்கள் ஒரு கிராமத்திற்குப் போய் சேர்ந்துவிட முடியும்.

திடீரென்று இருட்டைப் பிளந்துகொண்டு அசாயின் தாழ்குரல் கேட்டது. "நான் இங்கே இருக்கிறேன்!"

"ஏதாவது தென்பட்டதா?"

"அதோ அந்த வெளிச்சத்தைப் பார்த்தீர்களா? ரோந்துப்படை காவல் நிலையம் அது. இப்போது கூட அங்கு யாரோ இருக்கிறார்கள். நாம் சற்று காத்திருப்போமா?"

சாலைக்குக் கீழே அவர்களுக்கு நேர் எதிர்பக்கமாக சில நூறு அடி தூரத்தில் ரோந்துப்படை நிலையம் இருந்தது.

"காவலர்கள் திரும்பிச் சென்றதை நீ பார்த்தாயா?"

"ஆம்; பதினைந்து நிமிஷங்களுக்கு முன்னர்தான்

அவர்கள் காவல் நிலையத்திற்குள் சென்றதைக் கண்டேன். விளக்கைப் பொருத்தினார்கள்; பிறகு தங்கள் தோள்களிலிருந்த துப்பாக்கிகளை எடுத்து வைத்துக்கொண்டிருந்ததையும் நான் பார்த்தேன். அவர்களுடன் ஒரு நாயும் இருந்தது."

"இரண்டு பேர் மட்டிலும்தானா?"

"இரண்டு பேரும், ஒரு நாயும்!"

அது ஒரு சிறிய காவல் நிலையம். அங்கே ஒரு சிறு ரோந்துப்படை இரவும் பகலும் காவல் புரிந்தது. அவர்கள் கோலநட்டின் வடபுறத்துப் பாதையைக் காவல் காத்து வந்தனர். எல்லைக்கு அருகாமையில்

இருந்த தென்புறத்தை ஆயுதம் தாங்கிய பெரும் ரோந்துப்படை சென்று காவல் புரிந்தது.

"கீழே உள்ள சாலைக்கும் அதற்கும் எவ்வளவு தூரம் இருக்கும்?" என்று ஸைஸாமிடம் வினவினான் ஃபான்.

"அதிக தூரமில்லை. சாலையில் நடப்பவர்களின் காலடியோசை அவர்களுக்குக் கேட்கும். தவிர இது போன்ற பெரிய கோஷ்டியாக இருந்தால் சற்று சிரமம்தான். எப்படியும் சந்தடி கேட்குமே!"

"நீ ஒரு நாயைப் பார்த்ததாகச் சொன்னாயே?" என்று ஃபான் கேட்டான்.

"ஆம்" என்று அசாய் பதிலளித்தான்.

அப்பொழுதுதான் அவர்களோடு வந்து சேர்ந்த மாவோபெங்,"அவை நம்மை நூறு அடிக்கு அப்பாலி லிருந்தே மோப்பம் பிடித்துவிட முடியும்; இது அபாயம் குறைந்த இடம். அவர்கள் மத்ய ரோந்துப் படை காரியாலயத்துடன் தொலை பேசியில் தொடர்புகொள்ள வசதி இருக்கிறது. ஆகவே நமது குழுவை அவர்கள் சுலபமாகக் கண்டுபிடித்து விடு வார்கள். நாம் ஆபத்திற்குள்ளாக நேரிடும்."

"உங்கள் யோசனை என்ன?"

"பெண்டுகளையும் குழந்தைகளையும் இங்கே விட்டுவிடுங்கள்; அவர்கள் மறைந்து இருக்கட்டும். நம்மில் சிலர் கீழே சென்று திடீரென்று அவர்களைத் தாக்கவேண்டும். முடிந்தால் சுடுவதைத் தவிர்த்தல் நலம்."

மாவோபெங், ஜேம்ஸ், ஃபான், டிங் என்ற பெய ருடைய புது ஆட்களில் ஒருவன் ஆகிய நால்வருமாக

மெள்ள அக்குடிசையை இருபுறங்களிலும் சூழ்ந்து கொள்ளவேண்டும். அசாய் சாலையில் நின்று, அவர்கள் தானாக வெளிவராவிட்டால் அவர்களை வெளிவரச் செய்ய சூழ்ச்சி செய்யவேண்டும்.

ஜேம்ஸுடன் ஃபான் ஒருபக்கம் இறங்கிச் சென்றான். அதேசமயம் மாவோவும் டிங்கும் மறுபுறம் நோக்கிச் சென்றனர். டிங் செய்லோ ஃபாங்கிலிருந்து வந்த மீனவன். உடற்கட்டும் பலமும் உள்ள தீரன். அவன், தனக்குப் பிடித்தமான இந்தச் செயலில் தானாகவே முன்வந்து ஈடுபட்டான்.

அந்தக் காவல் நிலையத்தில் எல்லாப் பக்கங்களிலும் பலகணிகள் இருந்தன. சாலையை நோக்கிச் செல்லக்கூடிய கப்பிக்கல்பாதைக்கு நேரே திறந்தபடி அமைந்திருந்த கதவு இப்போது மூடப்பட்டிருந்தது. அந்தப் பாதையைத் தவிர்த்து, புழுதியிலும் புல்லிலும் மெள்ள ஊர்ந்து சென்றார்கள். பலகணிகளின் வழியாக விளக்கின் ஒளிக்கதிர்கள் வெளியே வந்து சுற்றிக்கொண்டிருந்தன.

ஃபான் சற்றே தாமதித்தான். காவலாளிகள் இருவர் பக்கத்திலிருந்த பிரம்பு நாற்காலியில் தொப்பிகளை மாட்டிவிட்டு, தங்களுடைய அங்கிகளுடன் சீட்டு ஆடிக்கொண்டிருந்ததை அவன் பார்த்தான். சிறு உலோகப் பெட்டியை கையில் பிடித்தவண்ணம் டிங்கும் மாவோவும் மறுபுறத்தில் இறங்குவதையும் அவன் கவனித்தான்.

அம் மனிதர்களில் ஒருவன் சிறிது சத்தம் போட்டுக்கொண்டே எதிர்ப்புறத்திலிருந்த பாறையின்மேல் ஏறும்பொழுது, ஃபான் ஏற்கெனவே

காவல் நிலையத்திற்கு இருபதடி தூரத்துக்கு வந்து விட்டான்.

நாய் பாய்ந்தோடி ஒன்றிரண்டு தடவை குரைத்தது. காவலாளிகள் நிதானத்துடன் அதை உற்றுக் கவனித்தனர்.

ஃபான் தனது பெட்டியைத் திறந்து ஜன்னலை நோக்கிப் பிடித்தான். தான் நின்ற இடத்திலிருந்து அந்த நாய் திடீரென்று குனிந்து மிகவும் பயத்துடன் அடிக்கடி உறுமிக்கொண்டே காவலன் பாதத்தருகே குனிந்து மோப்பம் பிடித்ததைக் காண முடிந்தது. நாயின் விசித்திர நடத்தையால் பீதியுற்ற காவலாளிகள் சீட்டுக்களைக் கீழே எறிந்தனர்.

துப்பாக்கிகளுடன் வந்த ஆட்கள் பின்பக்கத்தில் அவர்களை மறிக்கத் தயாராக நின்றனர். ஃபானும் ஜேம்ஸும் இப்பொழுது குடிசைக்கு அருகில் வந்து அங்குள்ள ஒரு மூலையில் மறைந்தனர்.

யாரோ உள்ளே நாற்காலியைப் பின்னால் தள்ளும் சத்தம் கேட்டது. ஒரு காவலன் எழுந்து தன்னுடைய துப்பாக்கியை எடுத்துக்கொண்டு நாயை முன்னால் பாயும்படி சைகை காட்டினான். ஆனால் நாயோ, மறுப்பதுபோல் முனகிக்கொண்டே நின்றது. அது நகரக்கூடாதென்று தீர்மானித்திருந்ததுபோல் தோன்றியது.

கதவு திறந்த அதே கணத்தில் அங்கே மௌனமான ஒரு சண்டையின் பரபரப்புக் கேட்டது. கைத் துப்பாக்கி ஒன்று கீழே விழுந்தது. அடுத்த வினாடி டிங் கத்தியை ஒருவனின் வயிற்றில் பாய்ச்சி அவனை வீழ்த்தினான். மற்றொரு காவலாளி துப்பாக்கியை

நீட்டிப் பிடித்துக்கொண்டே இருளை நோக்கி, "யார் அங்கே? யார் அங்கே?" என்று கூக்குரல் எழுப்பிய வண்ணம், வெளியே பாய்ந்தான்.

அவன் வெளியே ஓடுமுன் ஜேம்ஸ் பின்னாலிருந்து தாவி தனக்குப் பழக்கமான 'பிடி' முறையில் அவனுடைய கழுத்தில் கையைப் போட்டு மடக்கிப் பிடித்தான். அவன் உடம்பு துவண்டு தரையில் சாய்ந்தது.

நாய் திணறித் திணறி ஒன்றிரண்டு தடவை குரைத்தது. ஃபான் கதவைத் தள்ளித் திறந்தான். நாய் பாதி உருமலுடனும் பாதி முனகலுடனும் அவன்மேலே பாய முயன்றது. ஆனால் அது அப்படியே சுருண்டு பின்னால் விழுந்தது. ஃபானிடம் ஒரு முரட்டுத் தடி இருந்தது. அதனால் அதன் தலையில் அவன் போட்ட ஒரே அடியில் அந்த நாய் முடிவான மௌனத்தில் மூழ்கியது. ரத்தம் தோய்ந்த தனது கத்தியை நாயின் தொண்டையில் சொருகிக் கிழித்தான் டிங்.

இவை யாவும் சில விநாடிகளில் நடந்தேறி விட்டன. இதற்குள்ளாக, அசாய் சாலையிலிருந்து ஓடிவந்தான். திறந்த கதவிலிருந்து வந்த வெளிச்சம் இரண்டு உடல்கள் ஒன்றின்மேலொன்றாகக் குறுக்காகக் கிடந்ததைக் காட்டியது.

"இப்போது நாம் என்ன செய்யப்போகிறோம்?" என்று அவன் கத்தினான்.

ஒருவரும் பதில் சொல்லவில்லை. ஜேம்ஸ் வீட்டை ஆராய்ந்துகொண்டிருந்தான். மாவோ பெங் தொலைபேசிக் கம்பிகளை வெட்டிக்கொண்டிருந்தான். நாயின்

உடம்பிலிருந்து வழிந்த ரத்தம் மரத்தரையைக் கறையாக்கியது.

"ஜாக்கிரதையாக இரு. அதன்மேல் அடி வைக்காதே!" என்று ஃபான் பையனை எச்சரித்தான்.

"சரி, வா இங்கே! இந்த இடங்களை உள்ளே இழுத்துச் செல்ல கொஞ்சம் ஒத்தாசை பண்ணு. அதிகமாகச் சத்தப்படுத்தாதே" என்று மாவோ பெங் கூறினான்.

உடல்களை உள்ளே இழுத்துச் செல்லும்போது, அவர்கள் இறந்துவிட்டார்களா?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"சந்தேகமே இல்லை, இறந்துவிட்டனர்!"

ஜேம்ஸ் மண்டியிட்டு அமர்ந்து அந்த மனிதரின் நாடித்துடிப்புகளை உற்றுக் கவனித்துக்கேட்டான். சந்தேகமே இல்லை. அவர்கள் இருவரும் இறந்து விட்டனர்."

உடனே அவன் இப்போது நேரம் என்னவென்று ஃபானிடம் கேட்டதற்கு, "பதினொன்று—முப்பத்தைந்து" என்று அவன் பதில் கூறினான்.

ஜேம்ஸ் எழுந்து நின்று, "இப்பொழுது ஒன்றும் செய்வதற்கில்லை. துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு செல்லுங்கள்" என்று கூறினான்.

பக்கத்திலிருந்த மேஜைமீது ஒரு போகிணியும், தண்ணீர் குவளை ஒன்றும் இருந்தன. மாவோ அதைச் சுட்டி கைகளிலும், தனது மேல்சட்டையிலும் கால்சட்டையிலும் படிந்திருந்த ரத்தக் கறைகளைச் சுத்தமாகக் கழுவுமாறு டிங்கிடம் கூறினான்.

அசாய் தானாகவே ஒரு கோப்பைத் தேநீர் தயார் செய்துவிட்டான்.

"யாருக்காவது தேநீர் வேண்டுமா? மிகவும் நன்றாக இருக்கிறது!"

மாவோ முறையான வழியில், காவலாளிகளின் ராணுவ உடுப்புகளைக் களைந்து, அந்த அறையிலிருந்த பொருள்களையெல்லாம் சோதனை செய்தான். அங்கு நாட்குறிப்புடனும் சில தொலைபேசி எண்களுடனும் ஒரு நிகழ்ச்சிநிரல் புத்தகம் இருந்தது.. ஷான்டங்கில் இறந்த மனிதர்களில் ஒருவனுடைய மனைவிக்கு எழுதப்பட்ட ஒரு முற்றுப்பெறாத கடிதம், ஏற் கெனவே விலாசம் எழுதப்பட்டு தபால்தலை ஒட்டப் பட்டிருந்த உறையில் இருந்தது. மற்றொருவனின் உடலில் பெயர் எழுதப்பட்ட அட்டைகள் கொண்ட சிறு நோட்டுப் புத்தகமும் ஒரு பேனாவும், ஒரு ஸ்திரீ, குழந்தை ஆகியோரின் புகைப்படமும் இருப்பதை மாவோ கண்டான். வறுத்த அரிசி நிறைந்த ஒரு பையையும் ஜேம்ஸ் பார்த்தான்.

"பாவம்! இவர்களுக்கும் தின்பதற்கு இதைத் தவிர ஒன்றும் கிடைப்பதில்லை போலிருக்கிறது. அவர்களுடைய காலணிகளைப் பார். அதன் அடிப் பகுதிகள் பிய்ந்துவிட்டன."

ஜேம்ஸ் தன் கைகளைக் கெட்டியாகப் பிசைந்து கொள்ளும்போது,அவை ஈரப்பசையுடன் இருந்ததை உணர்ந்தான்.

"அவன் தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தை என்னிடம் கொடு. நான் அதை ஹாங்காங்கிலிருந்து தபாலில் அவளுக்கு அனுப்ப விரும்புகிறேன்" என்று

கூறினான் அவன். அதனுள் கொஞ்சம் பணத்தையும் வைத்து தான் அவளுக்கு அனுப்பப் போவதை அவன் கூறவில்லை.

அப்பொழுது எல்லாம் தயாராக இருந்தது. காவல் நிலையத்தில் அமைதியாக நடமாடிக்கொண்டிருந்த உருவங்களின் நிழல்களை குழுவைச் சேர்ந்த பெண்களும் பையன்களும் தாங்கள் இருந்த இடத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தனர். இப்போது அவர்கள் வெளியே வந்துவிட்டனர். ஜேம்ஸ் இரண்டு மழைச் சட்டைகளையும் இரண்டு போர்வைகளையும் எடுத்துக்கொண்டு அவர்களுடன் வெளியே வந்து கொண்டிருந்தான்.

"அவைகளை என்னிடம் கொடுங்கள்" என்று மாவோபெங் கூறினான்.

"நீ அவற்றை விரும்புகிறாயா? அந்த மழைச் சட்டைகள் பெண்களுக்கு சௌகரியமாக இருக்குமென்று நினைத்தேன்."

"நான்தான் இங்கே தளபதி. நீங்கள் அதுபற்றி முதலில் என்னிடம் தெரிவித்திருக்க வேண்டும். நீங்கள் இஷ்டப்பட்டால் மழைச் சட்டைகளைப் பெண்களுக்குக் கொடுத்து விடுங்கள்."

ஜேம்ஸ் போர்வைகளை மாவோவிடம் கொடுத்தான். அவர்கள் துப்பாக்கிகளை யெல்லாம் ஒன்று சேர்த்து எடுத்துக் கொண்டு விளக்கை அணைத்து விட்டு, வெளியிலிருந்து கதவைத் தாழ்ப்பாளிட்டு, அவ்விடத்தைவிட்டு நீங்கினார்கள்.

"நாம் பேசியதை யாராவது கேட்டிருப்பார்களென்று நான் நினைக்கவில்லை. இன்னும் ஒன்றிரண்டு

தினங்களுக்கு அவர்கள் இந்த உடல்களைக் கண்டு பிடிக்க மாட்டார்கள்!" என்று மாவோ கூறினான். அமைதியாக அவர்கள் சாலையை நோக்கி நடந்தார்கள். அங்கு ஸைஸாமும் மற்றவர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

வழியில் ஜேம்ஸ் ஒன்றும் அதிகமாகச் சொல்லவில்லை. ஈஸு இருளில் அவன் தோளோடு தோள் சாய்ந்து கொண்டு வினவியபோது, "இன்றிரவு நான் ஒருவனைக் கொன்றுவிட்டேன்!" என்று மட்டும் சொன்னான் அவன்.

மேற்கொண்டு விவரிக்க அவன் விரும்பவில்லை.

அத்தியாயம் 21

சோலநட் மலை உச்சிமீது குளிர்ந்த மூடுபனி கவிழ்ந்து மூடி இருந்தது;

பகலும் இரவும் இணைபிரியும் அந்த நேரத்தில் மெல்லிய ஒளியில் வைகறை மேகங்களில் மிதந்து வான வெளியில் தொங்குவது போன்று கற்பனை எழுப்பியது.

அப்போது காலை மணி மூன்று, அடித்து முப்பது, நிமிஷங்கள் ஆகிவிட்டன.

கோலநட் மலைச் சிகரம், கடல் மட்டத்துக்கு மேல் இரண்டாயிரம் அடி உயரத்தில் இருந்தது; இப்போது அவர்கள் அதற்குக் கீழே சுமார் இருநூறு அடி தொலைவில் இருந்தனர். நிலவு மேகத்தில் மறைந் திருந்தது; ஆனால் அதன் சிதறிய வெளிச்சத்தில் பத்தடி தூரம் வரை வருபவர்களைப் பார்த்து கண்டு கொள்ள உதவியது.

குழுவினர் உச்சிக்கு வந்து சேர்ந்து 'ஆலிவ்' மரத்தோட்டில் அமர்ந்து, பொழுது புலரட்டுமென்று காத்திருந்தனர். இருள் மண்டிய அந்த இரவில், வழி காட்டி இல்லாமல் வழிகண்டு செல்ல யாராலுமே முடியாது.

பையன்கள் நல்லபடியாகச் சமாளித்துக்கொண்டார்கள்; ஆனால் டுவோன் மிகவும் களைத்துவிட்டான். அது இலையுதிர் காலம். அவர்கள் உட்கார்ந்திருந்த புல்லினின்றும், பனித்துளிகள் சிதறிச் சலசலத்தன.

இந்த மலை ஏறும் முயற்சியை ஒருபோதும் செய்திருக்கக் கூடாது. அதிக உயரத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அவர்கள் இருக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு அது பாதுகாப்புத்தான். ரோந்துப் படையினர் அதிகமாக அவர்களைப் பின்பற்ற மாட்டார்கள் என்பது ஒரு முடிவான கருத்து. எப்படியெனில், ரோந்துப் படையினர் உயரே வரும் சமயத்தில் அகதிகள் மலை உச்சியின் பக்கவாட்டில் சிதறிவிடுவார்கள்.

எப்படியும், தற்சமயத்திற்கு அவர்கள் பாதுகாப்பாக இருந்தனர்.

அங்கே குளிர் உடலைத் துளைத்தது. சிறிதளவு கூட காற்று கிடையாது. அருகே உள்ளவர்களின் முகத்தைத் தவிர வேறு எதையும் காண முடியாதபடி அவர்களைப் பனி கவ்விக் கொண்டிருந்தது. தாங்கமுடியாதபடி வாட்டிய அக் குளிர்தான் அவர்களை ஆழ்ந்த தூக்கத்தில் அமிழவிடாமல் தடுத்தது.

அவர்கள், சீன நாட்டில் தங்களுடைய கடைசி சூர்யோதயத்தைக் காணக் காத்துக் கிடந்தார்கள். வாழ்க்கையில் நாம் சிந்திக்காத நேரமும் ஒன்றுண்டு. அது எப்போது? என்ன சிந்திப்பதென்றே தெரியாத ஒரு நிலையில் சிந்தனைக்கு இடமேது? கடந்த காலம் அவர்களுக்குப் பின்னால் இருந்த மூடுபனியில் அமுங்கிக்கிடந்தது. தோன்றப்போகும் எதிர்காலம் கீழே

யிருந்த சூன்யத்தினின்றும் தலை நீட்டியது. நாம் எதற்காகக் காத்திருக்கிறோம் என்பதை அறியாமல் காத்திருப்பது சங்கடமானது, பயங்கரமானதும்கூட. ரத்த வெள்ளம் ஓடும் போராட்டமா, அல்லது பயங்கரம் நிறைந்த எல்லை தாண்டும் பயணமா? இல்லை, படையினரெல்லாம் மருந்தின்மயக்கத்தில் திளைத்துத் தூக்கத்தில் ஆழ்ந்தோ, அல்லது, வேறு எங்கோ அசந்து இருக்கும் நேரத்தில் ஒரு அதிர்ஷ்டவசமாக இலகுவான நழுவலா? என்ன நேரப்போகிற தென்பது யாருக்குத் தெரியும்?

சுமார் ஒரு மணி நேரம் கழித்து கடுமையான கடற் காற்று வீசியது. அக்காற்று, அங்கிருந்த இயற்கை மணங்களைத் தவிர மற்ற நாற்றங்களை எல்லாம் அடித்துக் கொண்டு சென்றது. காற்று கீழ்ப்பகுதியின்நாற்புறமிருந்தும் ஹோவென்றுவீசிய தால், அது எந்தத் திக்கிலிருந்து வீசியதென்று கண்டு கொள்ள முடியவில்லை. மூடுபனி பெயர்ந்தது. கொஞ்சம் கொஞ்சமாக வானம் ஒளி வாங்கியது. பனிக்கு அடியிலிருந்த இருள் படிவங்களைக் காண முடிந்தது. கீழ்ப்பகுதியிலிருந்த மேடுபள்ளங்கள் தெளிவாகத் தோன்ற ஆரம்பித்தன.

மேற்கே, மற்றொரு சிகரம் வெண்ணிறக்கடலின் மேல் அமைதியாக எழும்பும் அரக்கன்போல் மங்கலாக எழும்பியது.

ஸைஸாமும் மாவோவும் மேற்கிலிருந்து வரும் மற்றக் கூட்டங்களைக் காணச் சென்றிருந்தனர். ஜேம்ஸ் மிகவும் பசியோடிருந்தான். எல்லோரும் புல்தரையில் உட்கார்ந்திருந்தனர். அவன், தன்

னுடைய மேல்சட்டையை அணிந்துகொண்டிருந் தான். ஈஸா தன் போர்வையையும் மேற்சட்டை யையும் போர்த்திக்கொண்டு தூங்குகிற பாவனையில் யிருந்தாள். இரண்டு கெஜங்களுக்கப்பால் டூவான் தனது தலையை முழங்காலிலும் கைகளுக்கடியிலும் பதித்தவண்ணம் குளிரால் நடுங்கிக்கொண்டிருந் தான். அவர்களுக்காக ஜேம்ஸ் விரித்திருந்த மழைச் சட்டையின் மீது டூவானுடைய முழங்கால்களுக் கடியில் சிறுவன் ஸ்ப்ரௌட் உட்கார்ந்திருந்தான்.

இன்னும் சற்றுத்தள்ளி புது ஆட்கள் தங்கள் துப்பாக்கிகளைப் பக்கத்தில் வைத்தவண்ணம் போர் வைகளைப் போர்த்திக்கொண்டு காலை நீட்டிப் படுத் திருந்தார்கள்.

ஜேம்ஸ் இடைவாரை அவிழ்த்து கொஞ்சம் வறுத்த அரிசியை எடுத்து வாயில்போட்டுமெதுவாக மென்றுகொண்டிருந்தான். அவன் ஈஸாவைத் தொந்தரவுபண்ண விரும்பவில்லை.

திடீரென்று சாரைக்காற்று வீசியது. வானம் லேசாகத் தூற ஆரம்பித்தது. அநேகமாக, அது அதிகமாகப் பலக்காது என்ற நம்பிக்கையில் உட் கார்ந்திருப்பதைத் தவிர்த்து அவர்களுக்கு வேறுவழி இல்லை.

ஜேம்ஸ் எழுந்து சென்று டூவானைத் தட்டினான்.

"உங்களுக்கு மிகவும் குளிர்கிறதா?" என்று கேட்டான்.

"ஆம்; இங்கே இவ்வளவு குளிர் இருக்குமென்று நான் ஒருபோதும் நினைத்ததில்லை."

ஜேம்ஸ் மேல்சட்டையும் தலையில் தொப்பியும் அணிந்திருந்ததால் குளிரில் அவனுக்கு அது பாது காப்பாக இருந்தது. அவன் டேவானையும் ஈஸாவையும் எழுந்து மழைச்சட்டையைப் போட்டுக்கொள்ளு மாறு செய்தான். ஈஸா தன்னுடைய தலைமுடி வெளியே வந்து ஈரம் படாமல் இருக்க போர்வையை இழுத்துத் தலைக்குமேல் போர்த்திக்கொண்டாள்.

மழைசற்று வலுத்தது. டிங்கும், மாவும், அவர் களைச் சேர்ந்த மற்றவனும் இதை எதிர்பார்க்க வில்லை. லெய்வா ஒரு பிளாஸ்டிக் பையை எடுத்துத் தன் தலைமயிர் நனையாமல் மூடிக்கொண்டாள். அங்கே தங்க இடம் வேறு கிடையாது. மழை வலுத் தால் அவர்கள் கீழே இறங்கிச்சென்று எங்காவது தங்கவேண்டும்.

"இங்கே வா. உன்னால் எழுந்திருக்க முடிய வில்லையா? அவ்வளவு களைப்பாகவா இருக்கிறது?" என்று ஈஸாவைக் கேட்டான் ஜேம்ஸ்.

ஈஸா தலையைத் தூக்கி வருத்தத்துடன் அவனை நோக்கினாள்.

"நீ நடமாடிக்கொண்டிரு, அப்போது குளிர் தெரியாது" என்றான் ஜேம்ஸ்.

அவளுடைய கம்பளிச்சட்டை சில இடங்களில் நனைந்திருந்தாலும் அப்போதும் நல்ல நிலையில்தான் இருந்தது. ஜேம்ஸ் அதிலிருந்த நீர்த் துளிகளை நீவி விட்டு, அவளுடைய தோளைச் சுற்றித் தன் கைகளை போட்டுக்கொண்டான்.

"எல்லாம் சரியாகிவிடும். வானம் நேற்றுமாதிரி அவ்வளவு மப்பும் மந்தாரமுமாக இல்லை" என்று

சொன்ஞன். பகல் வேளையில் சூரியன் பிரகாசிக் லாம் என்பதைத் தெளிவாக்கும் வகையில் வானம் பிரகாசமாக இருந்தது. காற்றிஞல் அலேக்கழிக்கப் பட்டு புகை வண்ணமாக இருந்த மேகங்கள் நாலா திக்குகளிலும் சிதைந்து நகர்ந்து கொண்டிருந்தன.

ஜேம்ஸும் ஈஸுவும் எழுந்து நடக்கத்தொடங்கி விட்டதைப் பார்த்து, ஃபானும் எழுந்தான். அவனும் தன் தலேயை ஒரு பிளாஸ்டிக் பையைப்போட்டு மூடிக்கொண்டான்.

"நீங்கள் அந்தப் பையை வைத்துக்கொண் டிருப்பது வேடிக்கையாகத்தான் இருக்கிறது! என்று ஈஸு சிரித்துக்கொண்டே கூறிஞள்.

"நல்லது. அவை உங்களது தலேயை வெது வெதுப்பாக வைத்திருக்கின்றன! நாம் நதியைக் கடக்கும்பொழுது, நமதுபொருள்களில் சிலவற்றை ஏன், நமது துணிமணிகள் எல்லாவற்றையுமே கூட அதில் மூட்டை கட்டிக்கொள்ளலாம்."

"இந்த முனேயில் ஆறு கொஞ்சம் மேடாகவே இருக்கிறது. வயதானவர்கள் இறங்கி நடந்து விடலாம். உண்மையிலேயே இது ஒரு சிற்றேடை தானே! இருமருங்குகளிலும் கரைகள் சரிவாக இருக் கின்றன."

"மேடான இடத்திற்குச் சென்று அங்கிருந்து ஒரு முறை நோட்டமிடலாம்" என்று ஜேம்ஸ் சொன் ஞன். அவன் தன்னுடைய கடைசிப்பெட்டியிலுள்ள சிகரெட்டுகளே எடுத்தான். அதில் மூன்றே எஞ்சி யிருந்தன. அவன் ஃபானுக்கு ஒன்றைக் கொடுத்து விட்டு மீதமிருந்த தனது கடைசி சிகரெட்டை கவன

மாகத் தன் சட்டைப் பையில் வைத்துக்கொண்டான். இருவரின் குல்லாய்களும் ஒன்றையொன்று தொடும் அளவுக்கு நெருக்கமாக நின்று தலைகளைச் சேர்த்தவண்ணம் ஒரு தீக்குச்சியைக் கொளுத்த ஜேம்ஸ் உரசினான். அது அணைந்துவிட்டதால், இரண்டாவதொன்றை பற்றவைத்தான்.

"உங்களுடைய தீக்குச்சிகளைப் பத்திரமாக வைத்துக்கொள்ளுங்கள். அவற்றை உங்களுடைய பிளாஸ்டிக் பைகளில் ஒன்றில் போட்டு வைத்துக் கொள்ளுங்கள்."

"அதற்கு அவசியமில்லையென்று நினைக்கிறேன். கடைசி ஒன்றை என்னிடம் கொடுங்கள். நானும் இழுத்துப் பார்க்கிறேன். நீங்கள் சுதந்திர நகரைச் சென்றடையும் வரை மீண்டும் சிகரெட்டைப் புகைப்பீர்களென்று நான் நினைக்கவில்லை!" என்றாள் ஈஸா.

"நீங்கள் இப்போதே அங்குபோய்ச் சேர்ந்து விட்டதைப் போன்று பேசுவது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது" என்று ஃபான் தெரிவித்தான்.

"மறுபடியும் உங்களுக்குப் புகை, இன்றிரவு கிடைக்கும் வெடி மருந்துப் புகைதான். இன்றிரவு சிகரெட்டுகள் துப்பாக்கி மருந்துகளிலிருந்துதான் தயாரிக்கப்படும் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கூறினாள்.

"அது உனக்கு எப்படித் தெரியும்?" என்று ஃபான் வினவினான்.

"ஆம் ஒருவகையான வெடியுப்பிலிருந்துதான் தயாரிக்கப்படுகின்றது. அவ்வெடியுப்பு அவைகளை அணையாமல் எரியவைக்கின்றன. எனவேதான்,

சிகரெட்டுகள் தாமாக அணைந்துவிடுவதில்லை. புகையிலை தானாக அணைந்துவிடும். அதே மூலப்பொருளைத் தான் திரியில் சுற்றி அதை குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் குண்டாக (டைம் பாம்) உபயோகிக்கிறார்கள்!"

அவன் மழைத் துளிகளைப் பிடிப்பதற்காக முகத்தை மேலே திருப்பிக்கொண்டு திமிர் பிடித்த பாவனையில் 'குப்'பென்று சத்தமிட்டான்.

"நீ அதை சுகமாக ரசித்துக்கொண்டிருக்கிறாய் என்பது தெரிகிறது" என்று ஜேம்ஸ் கூறினான்.

"ஆமாம், நான் ரசிக்கிறேன்."

"நீ வெடிமருந்தைக் கண்டு பயப்படவில்லையா?"

"நான் அதை வரவேற்காவிடினும், அதைப் பார்த்துப் பயப்படவில்லை. சிறிதளவு துர்நாற்ற முடைய பட்டாசுகளை நீங்கள் சகித்துக்கொள்ளுகிறீர்கள் அல்லவா? இதுவும் அதே வாடைதான் என்று நான் கூறுகிறேன், என்னுடைய குழந்தைப் பருவத்தின் புது வருடக் கொண்டாட்டத்தை நான் எப்பொழுதும் ஞாபகத்தில்வைத்திருக்கிறேன். நகரம் முழுவதுமே பட்டாசுகளின் வாசனைகளில் திளைத்திருந்தது. துப்பாக்கி மருந்தின் வாடை அப்போது உண்மையிலேயே ஒவ்வொருவரையும் இன்பமடையச் செய்கிறது. நல்லது. நமது கடைசிச் சிகரெட்டு இதோ இருக்கிறது!"

ஃபான் சிரித்தான். "நீங்கள் புகை பிடிப்பதற்கு மாற்றாக எரியும் துப்பாக்கி மருந்தைப் புகைக்கச் சொல்லவில்லையே?"

"ஏன் இல்லை?....? என்று உணர்ச்சிகரமாகப் பதிலளித்தாள் ஈஸு.

ஓர் அறையை பட்டாசுகளின் அல்லது வெடி மருந்துகளின் நாற்றத்தால் நிரப்புங்கள். ஒருவரும் புகை பிடிக்க வேண்டியிருக்காது!"

மூவரும் சேர்ந்து புகைபிடித்து அநேக தடவை குப்பென்று புகையை வெளியிட்டவண்ணம் ஒருவருக்கொருவர் சிரித்துக்கொண்டார்கள்.

எஞ்சிய சிகரெட்டுத் துண்டுகளை, ஷாம்பேன் மதுக்கிண்ணங்களை எறிவதுபோல் தரையில் வீசியெறிந்தார்கள் அவர்கள்.

"விரைந்து வாருங்கள். நாம் சென்று ஒரு தடவை பார்க்கலாம்" என்று ஜேம்ஸ் உரைத்தான்.

ஈஸு மிகவும் கலகலப்பாக இருந்தாள்.காரணம் அன்று விடியப்போகும் நாளின் இரவில் அவர்கள் ஹாங்காங்கில் இருப்பார்கள் என்ற மகிழ்ச்சியே அதன் காரணம்.

ஜேம்ஸின் கைகள் அவளைச்சுற்றி அணைத்திருக்க அவள் சுறுசுறுப்பாக நடந்தாள்.

அவர்களைத் தெளிவாகப் 'பார்க்கக்கூடிய தூரத்தில் ஃபான் நடந்துக்கொண்டிருந்தான்.

எல்லையின் இடதுபுறத்திலும் வலது புறத்திலும் குறுக்காவும் அடுத்தடுத்த சிகரங்களும் மேடு பள்ளங்களும் காட்சியளித்தன. கீழ்த் தளத்தில் குறுகலானதொரு வெள்ளிப்பட்டைபோன்று சம்சன் நதி தென்பட்டது. அதன் இரு மருங்கிலும் வெள்ளைச் சிமிட்டியிலான கம்பங்களால் பாதுகாப்பாக நின்றன. நதி கிழக்கு மேற்காக நேர்கோட்டில் ஓடிக்கொண்

டிருந்தது. மேற்கே சற்றுத்தள்ளி, குன்றுகளால் நதியின் பிரவாகம் மறைக்கப் பட்டிருந்தது. எல்லையை நோக்கி அமைந்திருந்த பள்ளத்தாக்கி லிருந்த இரண்டு குன்றுகளுக்கிடையே இருந்த ஒரு சுவட்டுப்பாதை, அடர்ந்த பசுஞ்செடிகளினால் மறைக் கப்படாமலிருந்ததால், வெவ்வேறு பிரிவுகளாகத் தென்பட்டது.

ஜேம்ஸ் தன் சட்டைப்பையிலிருந்த திசை காட்டும் கருவியை எடுத்து, திசையைக்கண்டான்.

சைசாம் மேலே ஏறிவந்து கொண்டிருந்ததை அவர்கள் கண்டார்கள்; அவனுடன் ராணுவ உடுப்பு அணிந்த ஒருவனும் வந்துகொண்டிருந்தான்; அவ னுடைய அகலமான செம்படவன் தொப்பியும் கால் துணிப்பட்டையும் அவனை இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள வசதியாக இருந்தது. அவனுடன் வந்தவன் மாவோபெங்!

"மாவோபெங்கைப்பற்றி நீங்கள் என்ன நினைக் கிறீர்கள்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"அவன் நல்லவன் என்றே நினைக்கிறேன். கடந்த இரவு அவனை நான் காவல் நிலையத்தில் பார்த்த பொழுது, அவன் மிகவும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டான். ஆனால், திட்டமிடுவது வேறு, களத் தில் இறங்கி செயல்புரிவது வேறு. ஒருவனுடைய நடத்தையை அறியவேண்டுமானால் அவன் கஷ்டத் தில் சிக்கிக்கொள்ளும்போதுதான் நன்கு அறிய முடியும்.

"நம்முடன் உள்ள மற்ற இருவர்களும் நல்லவர் களாகவே தோன்றுகிறார்கள்" என்று சொல்லிவிட்டு

ஃபான் மேலும் தொடர்ந்தான்: "அவர்கள் எல்லோருமே நல்ல வலுவுள்ளவர்கள். தன்னுடைய கையில் ரத்தம் தோய்ந்த கத்தியோடு காவல் நிலையத்திற்குள் வந்தபோது, டிங்கின் முகத்தை வெளிச்சத்தில் நான் நோக்கினேன். அவன் அதை விரும்புவதாகவே தென்பட்டான்."

"என்ன நடக்குமென்று நீங்கள் ஒருபோதும் சொல்லமுடியாது. என்ன இருந்தாலும் அவர்கள் குடியானவர்கள்!....இதற்கு முன்னால், ராணுவத்தில் இருந்தவர்கள் அல்லர். அவர்களில் சிலர் வெறி கொண்டு சண்டையிடலாம்; அவர்கள் 'கட்சி'யைச் சேர்ந்த ஓர் ஆளைக் கொல்லும்பொழுது, காரணத்தோடுதான் கொல்லுவார்கள்; அவர்கள் தங்களது மனைவியையோ குழந்தையோ தங்களுடைய பூர்வீக நிலபுலன்கள் முழுவதையுமோ இழந்திருக்கலாம். சண்டை ஆரம்பமாகும்பொழுது, ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்தத் திறமையில் சண்டையிடுகிறான். அவர்கள் சில சமயம் பிறரைக் கொல்ல நினைக்கலாம்; அதே சமயம் நதியைக் கடக்க மறந்து விடலாம்" என்று கூறிவிட்டு ஜேம்ஸை உற்றுக் கவனித்தான்.

"மாவோ நமது கூட்டத்திற்கு தளபதிபோல இருக்கிறான்; பெண்கள், குழந்தைகளுக்கான திட்டங்களைப்பற்றி நான்அவனுடன் பேசவேண்டும்" என்றான் ஜேம்ஸ்.

"இது நான் போட்ட திட்டமே அல்ல ரத்தம் சிந்தும் தாக்குதலை நாம் விரும்பினதில்லை."

"ஒரு வேளை அவர்களுடைய திட்டங்கள் நல்லவையாக இருக்கக்கூடும். நான், ஹாவோங்கின் கூட்டத்தினரைப்பற்றி நல்ல விதமாகவே நினைக்கிறேன்."

அப்போது மாவோவும் ஸையும் கூப்பிடு தூரத்தில் வந்தார்கள்.

"ஹல்லோ! அதோ!....

"நாம் கீழே சென்று அவர்களோடு சேர்ந்து கொள்ளவேண்டும். நான் உங்களைக் கீழே கூட்டிச் சென்றபின், உங்களிடமிருந்து பிரிந்துவிடுவேன்" என்று ஸைஸாம் கூறினான்.

இப்பொழுது கனம் குறைந்துகொண்டிருந்தது; மழைத்தூறல் நின்றுவிட்டிருந்தது. பள்ளத்தாக்கில் உருவங்கள் மங்கலாகத் தெரிந்தன. பெரும்பாலானோர் உட்கார்ந்தோ அல்லது நின்றுகொண்டோ இருந்தனர். ஸ்ப்ரௌட் அப்போதும் அயர்ந்த நித்திரையில் இருந்தான்.

மாவோபெங் கூட்டத்தினருக்குக் கட்டளை பிறப்பித்துக்கொண்டிருந்தான்.

"நாம் கீழே சென்று அவர்களுடன் சேர்ந்து கொள்வோம். அது ஒரு அமைதியான காடு. வழுக்கி விழாமல் ஜாக்கிரதையாகக் கீழே இறங்குங்கள். தரை சில இடங்களில் பிசுபிசுப்பாக இருக்கிறது. நாம் போய்ச் சேரும்வரை ஏதாவது துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டால், தரையில் படுத்துவிடுங்கள்; துப்பாக்கிச் சூடு முடியும் வரையில் எழுந்து ஓடாதீர்கள்!....

அத்தியாயம் 22

காட்டிற்குள் அவர்கள் ஒன்று கூடிய பொழுது, "இங்கே நாம் பத்திரமாக இருக்கிறோம்" என்று ஹுவாங் புதிய ஆட்களிடம் கூறினான். "கீழே உள்ள பாதை நெடுகிலும் கடந்து செல்லும் ஜனங்களை நீங்கள் பார்க்கையில், குழப்பமடைந்து விடாதீர்கள். ரோந்துப் படையினர் இவ்வளவு தூரம் வருவார்கள் என்று நான் கருதவில்லை. ஆறு மணிக்கு நாம் கீழே போகலாம். அதுவரையில் பரவலாகப் பிரிந்து, மறைந்து கொள்ளுங்கள்."

அவன் தன் கூட்டாளியான சூபாதாவிடம் திரும்பி, "நீங்கள் ஏதாகிலும் கூற விரும்புகிறீர்களா?" என்று கேட்டான். சூபாதா அவனது இரண்டாவது தளபதி, அதாவது அவன் அவ்வாறு விரும்பினான்.

சூ நிமிர்ந்தான்? அவன் வழக்கமாக எப்போதும் குனிந்து கொண்டிருப்பான்: "நான் என் ஆட்களிடம் சொல்லியிருக்கிறேன்; அதையே இப்பொழுது உங்களிடமும் சொல்கிறேன். இருள் பிரிவதற்கு முன்னால் நம்மை யாரும் கண்டுபிடிக்கவில்லையானால், நமக்கு அது ஒரு சிறந்த சந்தர்ப்பமாக இருக்கும்.

நாம் நேரே ந்துப் படையினரை எதிர் பார்க்காமல் தாக்கிப் பிடிக்க முடிந்தால், பாதி வேலை முடிந்த மாதிரிதான். ஆனால் கீழே போவதற்குமுன் அவர்கள் நம்மைக் கண்டு கொண்டு விட்டால் நம்முடைய திட்டத்தில் பாதி தோல்யடைந்ததாகும்!'' இதை அவன் சுருக்கமாகவும், ஆனால் கண்டிப்பாகவும் கூறினான்.

மேகங்களின் இடுக்கு வழியாக நோய் பிடித்தது போல் கதிரவன் வெளுத்து வெளிக் கிளம்பினான். ஆனால் மிகவும் வரவேற்கத்தக்க காட்சியாக அது இருந்தது. நிச்சயம் வரவேற்கக் கூடியதுதான். வானத்தின் பெரும் பகுதி அப்போதும் மேகங்களால் சூழப்பட்டிருந்தது. ஆனால், மேற்கில் தெளிந்த நீல வானத்தின் மீது தூரத்தில் இருந்த மேகம் மென் மையான இளஞ் சிவப்பு நிறத்தோடு பிரகாசித்தது. அப்போது ஒவ்வொருவரும் விரும்பியது. குளிர் காய் வதற்குரிய ஒரு சந்தர்ப்பத்தையேதான். சிறிது வெய் யில்வந்தாலும் போதும் அவர்களுக்கு அது சுகமாக இருக்கும். இதைத் தவிர வேறு சௌகரியம் எதுவும் அவர்களுக்கு தேவை இல்லை. அவர்கள் இயற்கை யையே நம்பி எல்லையைக் கடந்து செல்லும்போது தங்களை மறைத்துக் கொள்ள இருட்டை விரும்பி னார்கள். இன்னும் சிலமணிநேரமே பாக்கி இருந்தது. அவர்கள் எல்லாவற்றையும்விட, தாங்கள் சுகமாக வும் சிறிதளவு கதகதப்பாகவும் இருக்க சிறிது வெய்யிலையே விரும்பினார்கள்:

கடல் மட்டத்திலிருந்த சிற்றோடைக்கு அறுநூறு அடி உயரத்தில் அவர்கள் இப்போது இருந்தார்கள்.

அவர்களுக்குக் கீழே வல்லூறுகள் காற்றிடை வட்ட மிட்டுக் கொண்டிருந்தன. அடிச் சுவட்டுப் பாதையில் இரண்டு குன்றுகள் அடைந்திருந்த இடத்தில், மரமடர்ந்த காடும் தாவர வகைகளும் இருந்தன. மரங்கள் யாவும் ஏதோ ஒரு இடத்தை விரும்பியது போல் குறிப்பிட்ட உயரத்தில் வளர்ந்திருந்தன. கோலநட்டின் உச்சியில் பழுப்பு நிறம் கொண்ட புல்லைத் தவிர்த்து, மரங்கள் ஏதுமில்லை. காற்று மேலே ஊளையிட்டுச் சுழன்றது; ஆனால், இங்கே இலைத் தொகுதிகளைத் தாக்கியபோது; அடிக்கடி சல சலப்பு எழுந்தது. சுற்றிலும் அடர்ந்த புதரில் சிள் வண்டுகளின் ரீங்கார ஒலிகள் பலமாகக் கேட்டது. சிவப்பு எறும்புகள் தரையில் ஊர்ந்தன.

ஹுவாங் அகன்ற கன்னங்களுடன் கக்கூடிய நடுத்தர உயரமுள்ள மனிதன். அவன் தலை அகாலத்தில் வழுக்கை விழுந்துவிட்டது; ஆனால் நன்கு தலை நிமிர்ந்து நடந்தான். கண்களுக்கடியில் தோல் பிடிப்புக்கள் உருவாகிக்கொண்டிருந்தன; தாறு மாறாக இருந்த தன் பல்வரிசை வெளியே தெரியும் படி அவன் பேசியபோது. அவன் மனப்பூர்வமாக, புன்னகை செய்வது போலவே இருந்தது. தன்னம்பிக்கையுள்ள உறுதியான மனிதன் அவன்.

ஃபானுடன் அமைதியாகக் காத்திருந்தான் ஜேம்ஸ். முந்தின இரவில் என்ன நடந்தது என்பதை பற்றி டிங்கையும் மாவோவையும் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான் ஹுவாங்.

தாங்கள் கைப்பற்றிய இரண்டு துப்பாக்கிகளையும் பரிசோதித்தபடி, "மிக நல்ல துப்பாக்கி!

மிகவும் நன்ருக இருக்கிறது, அவற்றை நாம் பயன் படுத்திக் கொள்ளலாம்" என்று சொன்ஞன் அவன்.

"ரோந்துப் படையினரின் ராணுவ உடுப்புக் களையும் கூட நாம் உபயோகப்படுத்திக் கொள்ள முடியும்," என்று சூபாதா கூறிஞன். சூ மெலிந்தும் உயரமாயும் இருந்தான்.

தப்பிச் செல்வதற்கு யோசனை கூறுபவர்களில் அவன் முக்கிய இடம் வகித்தான். சிறந்த கருத்துக் களை வழங்கிஞன்; கொரியாப் போரில் அவன் பங்கு கொண்டிருந்தான்; ஆஞல், ஹுவாங்கின் தளபதி போன்ற தோற்றமும் மிடுக்கும் அவனுக்கு இல்லை.

குழுவினரில் பாதிப்பேர் கறுப்புத் தலைப்பாகை களைத் தரித்தனர். அது சூவின் யோசனைகளுள் ஒன்று. ஓர் எதிரியை முதுகுப் புறத்திலிருந்தபடி குரல்வளையைத் திருகிக் கொல்வதற்குத் தலைப்பா கைகள்தான் மிகவும் சிறந்தவை. அவைகளை ஒன்று சேர்த்து முடிபோட்டு பயனுள்ள கயிருகச் செய்து கொள்கிருர்கள் அவர்கள். அரசாங்கப் பண்ணையில் தங்கி இருந்தபோது, இந்த மாதிரியான விஷயங்கள் எல்லாவற்றையும் சிந்தித்திருந்தான் சூ.

பெண்களும் குழந்தைகளும் இருந்த குழுவைச் சற்று வியப்புடன் பார்த்தான் ஹுவாங்.

ஃபானையும் ஆங்கிலேயனையும் மாவோபெங் அறிமுகப்படுத்தி வைத்தான்.

"ஏதாவது விசேஷம் நடந்ததா?"

"ஒன்றுமில்லை. நாங்கள் மூன்று மணிக்குத்தான் மேலே வந்தோம்; நீங்கள் எங்கே ஒளிந்து கொண் டிருக்கிறீர்களென்று வியந்தோம்; பிறகு ஜேம்ஸின்

பக்கம் திரும்பியபடி, உங்கள் துப்பாக்கி உங்களிடம் தானே இருக்கிறது?" என்று அவன் வினவினான். ஜேம்ஸ் இணக்கமாகத் தலையை அசைத்தான்.

"குண்டுகள்?"

"ஐந்து துப்பாக்கிக் குண்டுகள் இருக்கின்றன!"

"அவ்வளவுதானா?"

ஸைஸாம் திரும்பி வந்து கொண்டிருந்ததை அறிவிக்க அசாய் வந்தான். ஸைஸாம் அவர்களை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தான்.

"நீங்கள் எங்களோடு வரவில்லையா?" என்று ஹூவாங் கேட்டான்.

"இல்லை. அந்தக் கோஷ்டியினரை இதுவரை நான் கொணர்ந்து சேர்த்தேன். இப்போது அவர்களை தக்கோருடன் சேர்த்துவிட்டேன். இனிக் கவலை இல்லை."

ஃபானும் ஜேம்ஸும் அவனுடைய உதவிக்காக நன்றி தெரிவித்தார்கள்; அவனுக்குரிய ஊதியத்தை ஃபான் கொடுத்தான்; தாங்கள் அவனை நினைவில் வைத்துக் கொண்டிருப்போம், என்று கூறினார்கள். ஃபான் அவனைப் பாராட்டினான்.

தங்களதுஅடுத்த திட்டத்தைப் பற்றியும், அதில் பெண்டுகளும், குழந்தைகளும் எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பதைப்பற்றியும் அறிவதற்கு ஃபானும் ஜேம்ஸும் பெரிதும் விரும்பினார்கள்.

"எங்கள் குழுவில் சண்டை செய்கிறவர்களைவிட சண்டை செய்யாதவர்களே அதிகம் உள்ளனர்— இதற்காக நான் வருந்துகிறேன். உங்கள் ஆட்களுக்கு

அவர்கள் ஒரு சுமையாக இருப்பார்களென்று நான் அஞ்சுகிறேன்" என்றான் ஃபான்.

"நிலைமை அப்படித்தான் இருக்கிறது; அங்கு எத்தனை பேர் இருக்கிறார்கள்?"

"சென்ற இரவில் எங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி உங்களுடைய ஆங்கிலேய நண்பரை நான் கேட்டபோது, மூன்று பெண்கள்மாத்திரமே இருந்ததாக நான் எண்ணினேன்." சோலையிலிருந்த குழுவினரை எட்டிப் பார்த்தான் அவன். "நாம் பார்க்க வேண்டியிருக்கிறது."

"அங்கே என் மனைவியும் அவரது மனைவியும் இருக்கிறார்கள். குழு இப்போது சற்றுப் பெருத்து விட்டது. பட்டினியால் உயிர் போகும் நிலையில் ஒளிந்திருந்த பத்து வயதுப் பையன் ஒருவனைக் கண்டுபிடித்தேன். செங்குத்துப் பாறையிலிருந்து அவன் பெற்றோர்கள் விழுந்து விட்டனர். அப்போது அவன் இதுவரை வந்து, பின்னர், திரும்பி ஓடி விட்டான். இப்போது அவனையும் நான் உடன் அழைத்துச் செல்லவேண்டி யிருக்கிறது."

"அத்துடன். என் மனைவியின் சிறு மருமகனும் என்னுடைய மாமனாரும் இருக்கிறார்கள்" என்று ஜேம்ஸ் சேர்த்தான்.

"அது சரிதான். அவர்கள் இவ்வளவு தூரம் வந்துவிட்டார்கள்; அவர்களும் நம்மோடு கடந்து வந்துவிட முடியும்; நன் வாக்குக் கொடுத்துள்ளேன்; அதைக் காப்பாற்றியும் வருகிறேன். இப்போது உளவு அறியும் வேலை கொஞ்சம் இருக்கிறது. பிறகு தான் நமக்கு நிலைமை புரியும்;"

ஆகாய விமானங்கள் மேலே கடந்து கொண்டிருந்ததைப் போல, தலைக்கு மேலே தேய்ந்த ரீங்காரச் சத்தமொன்று கேட்டது. குழுவினரில் சிலர் அதைக் கவனிப்பதகற்றாகத் தோப்பிலிருந்து விரைந்து வெளியே வந்தனர்.

"அது சியாங்கே-ஷேக்கின் ஆகாய விமானமாக இருக்க வேண்டும்" என்றான் அசாய்.

"அது அமெரிக்காவின் விமானமாகவோ அல்லது பிரிட்டனைச் சேர்ந்த வேவுபார்க்கும் விமானமாகவோ இருக்கக்கூடும். ஏன் கம்யூனிஸ்ட் சீனாவின் விமானமாகவும்கூட இருக்க முடியும்!"

"அது கம்யூனிஸ்ட் விமானம் அன்று" என்றான் சூபாதா. "கடந்த அக்டோபரில் ஃபார்மோஸா ஜலசந்தியின் காரணமாக விதிவசமாய் ஏற்பட்ட சண்டைக்குப் பிறகு அவை தலைமறைவாக இருக்கின்றன; கம்யூனிஸ்ட் விமானம் கண்ணில் பட்டவுடனேயே ராட்டில் பாம்பு (அமெரிக்க பீரங்கி) அதை விழுங்கி விடும்" என்றான் சூபாதா.

"கடந்த வருஷம் வெய்ச்சோவில் ட்ராகன் படகுத் திருவிழாவின்போது சியாங்கே-ஷேக்கின் விமானங்கள் உணவுப் பொட்டலங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் வானத்திலிருந்து பொழிந்ததை நாங்கள் கண்டோம்" என்றான் அசாய்.

ஹுவாங் பையனை ஏற இறங்க நோட்டமிட்டான்.

"உனக்கு வயது என்ன?"

"பதினைந்து!"

"அவன் பொய் சொல்கிறான். அவனுக்கு வயது மெய்யாகவே பதினான்குதான்!" என்று அன்பு தவழும் முறுவலுடன் ஃபான் கூறினான்.

"எனக்குப் பதினைந்துதான். நீங்கள் லெய்வாவைக் கேளுங்கள்."

"வாயை மூடு" என்றான் ஃபான், பிறகு அவன் தொடர்ந்தான்; அவன் உண்மையில் நமக்கு ஒரு சிறந்த சாரணனாக இருக்கிறான். அவன் இல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது."

அசாய் திருப்தியடைந்து புன்னகை செய்தான். தன்பால் வைத்திருந்த அளவிட முடியாத மதிப்பை மறைத்துக் கொள்ளுவதற்கு அவன் இன்னமும் கற்கவில்லை.

ஹுவாங் அவனை அரவணைக்க வேண்டி இருந்தது. வேறு வழி இல்லை. அவன் ஜேம்ஸிடம், "அவன் உங்கள் மனைவியின் உறவினர்களில் ஒருவனா? அல்லது ஃபானின் உறவினனா?" என்று கேட்டான்.

"அவன் என் மனைவியின் சுவீகார மகன்" என்று அவனுக்காக ஃபான் மறுமொழி பகர்ந்தான்.

ஹுவாங் ஒருகணம் யோசனையில் ஆழ்ந்திருந்தான். பிறகு ஆள்காட்டி விரலைச் சுட்டிக்காட்டி "அசாய் இங்கே வா" என்று அழைத்தான்.

அசாய் பல்லை இளித்தவாறு திரும்பினான். தனது சட்டைப்பைக்குள் கைகளை விட்ட வண்ணம் நிதானமாக கம்பீரத்துடன் கால்களை அகட்டி தலைநிமிர்ந்து நடந்துவந்தான்.

"நான் உனக்குச் சில வேலைகள் வைத்திருக்கிறேன், நீ இங்கேயே இரு!"

அவன் டென்ஸனையும் காவோவியையும் அழைத்தான். இருவரும் நதியைக் கடந்து தப்பிக்க முயன்றவர்கள். காவோவி ஒரு தடவையும், டென்ஸன் மூன்று தடவையும் முயன்று காவற்படையால் பிடிபட்டுத் திருப்பியனுப்பப்பட்டவர்கள்.

டென்ஸன் ஒல்லியாக இருப்பான். எப்பொழுதும் லேசான புன்சிரிப்பு அவன் உதடுகளில் தவழும். காவோவி நீண்ட கால்களும், வலுவான உடற்கட்டும் உள்ளவன். அவனைப் புரிந்துகொள்வது கடினம். அவன் விஷயங்களை மனத்திலே கிரகித்துக்கொண்டு யாரும் அறியவொண்ணு வண்ணம் தீவிரமாக வேலை செய்யக்கூடிய திடச்சித்தமும், கபடமும் நிறைந்தவன். தேர்ந்த ஒரு வீரனின் அமைதியான முகமும் கொண்டிருந்தான்.

"இங்கே பாருங்கள்! பிடுங்கிக்கொண்டு வந்த அந்த காவற்படையினரின் உடைகளை அணிந்து கொள்ளுங்கள். துப்பாக்கிகளை உங்கள் தோள்கள்மீது தொங்கவிட்டுக் கொள்ளுங்கள். நான் உங்களைப் பார்க்கிறேன்!"

அசாய் பார்த்துக்கொண்டிருக்க கணத்திற்குள் டென்னும் காவோவும் காவற்படையினரின் உடுப்புக்களையும், துணிக்குல்லாய்களையும் அணிந்து நின்றனர்.

"இப்போது அவர்கள் எப்படித் தோன்றுகிறார்கள்?" என்று சூபாதாவிடம் அபிப்பிராயம் கேட்டான் ஹூவாங்.

"எல்லாம் சரியாக இருக்கிறது" என்று கூறிவிட்டு காவோவின் இடைவாரைத் தட்டிக்காட்டி

"இதை இன்னும் கொஞ்சம் இறுக்கிக்கொள்" என்று கூறினன்.

"நான் உங்களை வேவு பார்க்கும் வேலைக்கு அனுப்பப் போகிறேன்" என்று ஹுவாங் விளக்கி னன். காவல்படையினரின் எண்ணிக்கை எவ்வளவு அவர்கள் எங்கெங்கே இருக்கிருர்கள் என்பதை நீங்கள் கண்டுபிடியுங்கள். உங்களை பெர்ல் கிராமத் துக் காவலாளிகளென்று கூறிக்கொள்ளுங்கள். உங்களை யாராவது ஏதாவது கேட்டால், உங்கள் தொலைபேசி பழுதாகிவிட்டதென்றும், அதனுல் லியுவான் தலைமைக் காரியாலயத்திற்கு அதுபற்றிப் புகார் கொடுக்கச் செல்வதாகவும் கூறவேண்டும், புரிகிறதா? இது ஒரு அபாயகரமான காரியம். உங்க ளுக்குச் செல்ல விருப்பம்தானே?"

"நான் வெற்றிகரமாகச் செய்ய முடியுமென்று நினைக்கிறேன்" என்று கூறிவிட்டு டென்ஸானை ஓரப் பார்வை பார்த்தான் காவோவி.

டென்ஸான் ஒரு லேசான புன்முறுவலுடன் தலையை ஆட்டிப் பதிலளித்தான்.

"நல்லது. அப்படியானுல் கிழக்குப் பகுதியை கவனத்தில் கொள்ளுங்கள். லியூவானை நோக்கி மலையைச்சுற்றி சுால்நடையாக நடந்து திரும்பி வாருங்கள். அசாய் நீ மேல் தளத்திலிருந்து அவர் களைக் கவனிக்க வேண்டும். நீ பிறர் கண்ணுக்குத் தென்படக்கூடாது. அவர்களுக்கு ஏதாவது நேரிடு மாயின் திரும்பிவந்து தகவல் கொடுக்கவேண்டும். ஆனுல் ஓடாதே. துப்பாக்கிப்பிரயோகம் நடந்

தால் தரையில் படுத்துக்கொள். பிறர் கண்களுக்குப் புலப்படா வண்ணம் பார்த்துக்கொள்.''

''நான் பந்தயம் கூறுவேன் நீங்கள்கூட என்னைப் பார்க்க முடியாது'' என்று ரௌடிகளின் வீரத்துடன் அசாய் கூறினன்.

ஹுவாங் மண்டியிட்டு வரை படத்தைத் தரையில் விரித்தான். டென்ஸேனும் காவோவியும் அவனுடைய தோளின் பக்கம் குனிந்து பார்த்தார்கள். வடபுறத்தில் லிவானை நோக்கியிருந்த மலைகளுக்கு நடுவே சென்ற ஒற்றையடிப்பாதையை இணைப்பதற்காக வளைகுடாவின் பாதை நெளிந்து வளைந்த போக்கில் சென்றது.

''அந்தச் சந்திப்பில்தான் ஸர்ச்லைட் இருக்கிறது. அங்கே ஏழு எட்டு காவற்படையினரும் இருக்கின்றனர் என்பது எனக்குத் தெரியும்!''

''இயந்திரத் துப்பாக்கி நிலையம் ஏதாவது அங்கு இருக்கிறதா?''

''நான் அறிந்தவரையில் இல்லை. அதிகமாப் போனல் ஒன்று அல்லது இரண்டு குதிரைப்படைத் துப்பாக்கிகள் இருக்கலாம். அங்குள்ளவர்கள் சண்டையிடும் அணியினரல்லர். தப்பிச்செல்பவர்களை வளைத்துப் பிடிப்பதற்காகவேதான் அவர்கள் அங்கே இருக்கிறார்கள்.''

ஹுவாங் வரைப்படத்தைச் சுருட்டிக்கொண்டான். மற்றவர்கள் நிமிர்ந்து நின்றனர். அவர்கள் செல்வதற்குத் தயாரானதும் ஹுவாங் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ''அசாய் எங்கே?'' என்று வினவினன்.

அவன் இருந்த இடமே தென்படவில்லை. அவன் அப்போதே உளவு பார்க்கும் வேலையில் ஈடுபட்டு விட்டான்.

இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு அந்த உளவு பார்க்கும் கூட்டத்தினர் வடக்கிலிருந்து சாய்தளத்தின் மேலேறித் திரும்பி வந்தார்கள். சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். மற்றவர்கள் தங்களை யாரும் காண முடியாத வண்ணம் காட்டின் புதர்களிலிருந்து வெளியே வந்து கீழே அமர்ந்திருந்தனர்.

அவர்களில் சிலர் உட்கார்ந்தும் படுத்தும் கதிரவனின் வெப்பம் படும்படி கீழே சாய்ந்துகொண்டும் பரவலாகச் சிதறி இருந்தார்கள். கடினமான இரவுக் குப்பின் அவர்களில் பலர் அயர்ந்த தூக்கத்தில் இருந்தது அமைதியான ஆட்டுக்கிடை ஒன்று பரவிக்கிடப்பதுபோல் காட்சியளித்தது. சிறுவன் ஸ்ப்ரௌட் தன்னுடைய தாத்தாவின் தாடியைச் சோதனை செய்துகொண்டிருந்தான். தாடியின் இழைகளைப் பிரித்தெடுத்து தன் உள்ளங்கையில் ஒன்று சேர்த்துக் கொண்டிருந்தான். பேரன் ஸ்ப்ரௌட்டை வேடிக்கையாக விளையாடட்டு மென்று கிழவனும் பேசாமல் தரையில் நீட்டிப்படுத் திருந்தான்.

ஹுவாங் தனது கைகளைக் கண்களுக்கிடையே வைத்தபடி அமர்ந்திருந்தான். அவன் சுவாசிக்கும் போது வயிறு மேலும் கீழும் ஏறி இறங்கிய வண்ணம் இருந்தது.

அசாய் திடீரென்று தோன்றி அவனைத் தட்டி எழுப்பக் குனிந்தான். கைகளை அகற்றி நிமிர்ந்து

பார்த்த ஹுவாங் வியப்படைந்தவனாய் சரியாக அமர்ந்து கொண்டான்.

"அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்" என்றான் அசாய். ஓர் ஆட்டிடையனின் ஆட்டை வீட்டுக்குக் கொண்டுவந்த நாயின் மனத்திருப்தியுடன் பேசினான் அசாய்.

ஹுவாங் எழுந்தான். இரண்டு மெலிந்த உருவங்கள் சரிவில் ஏறிக்கொண்டிருந்தன. அவர்கள் முன் தளத்தில் ஏறும்போது மட்டுமே சிற்சில சமயங்களில் தென்பட்டனர். அசாய் அவர்களை நோக்கிக் கீழே ஓடினான்.

"ஏ சித்திரக்குள்ளா! நீ எங்கிருந்தாய்? நாங்கள் உன்னை இழந்து விட்டோமென்றல்லவோ நினைத்தோம்" என்றான் டென்ஸான்.

"நான் உங்களைப் பார்க்க முடியும்; நீங்கள் என்னைப் பார்த்திருக்க முடியாது" என்று அசாய் பதிலளித்தான்.

அவர்கள் சரிவில் ஏறிச் சமதளத்தை அடைந்த போது அவர்களை வரவேற்கும் அடையாளமாக ஹுவாங்கும் சூபாதாவும் கைகளை ஆட்டினார்கள். அவ்வாட்கள் கடைசி ஏற்றத்திலிருந்து கஷ்டப்பட்டு மூச்சு விட்டுக்கொண்டிருந்தனர். கூட்டத்திலிருந்த மற்றவர்கள் தங்களை ஹுவாங் வினவியபோது உற்றுக் கேட்பதற்காகச் சுற்றிக் கூடினர்.

"குன்றுகள் கடலைச் சந்திக்கும் இடத்துக்கு நேராகக் கீழே நாங்கள் சென்றோம். நாங்கள் சென்ற இடம் அநேகமாகபள்ளத்திற்கு அப்பால்மலை மீதுள்ள பிரிட்டிஷ் போலீஸ் நிலையத்துக்கு எதிரில்

உள்ளது நாங்கள் பெர்ல் கிராமத்திலிருந்து பள்ளத் தாக்கைச் சுற்றிவரும் ரோந்துக் காவல் படையினர் என்னும் அபிப்பிராயத்தை உண்டுபண்ணிக் கொண்டு இவ்வட்டாரத்தின் முழுப்பரப்பையும் பரி சோதிக்க விரும்பினோம்."

"நீங்கள் ரோந்துக்காரர்களில் எவரையாவது சந்தித்தீர்களா?"

"ஷாஜிங்டோவில் ஒரு காவல் நிலையம் உள்ளது. ஒரு காவலாளி வெளியே நின்று கொண்டிருந்தான் நாங்கள் அதை மேலிருந்து பார்த்தோம். நாங்கள் காவலாளியைக் கடந்து செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. கடல் முனைவரை எங்கும் நெல்வயல் கள் பரந்து கிடக்கின்றன. உள்ளே சுமார் அரை மைல் தூரம் தள்ளி இருந்த முதல் காவல் நிலையத் திற்குள் நாங்கள் சென்றோம்."

"அவர்கள் எத்தனை பேர்?"

"துப்பாக்கியோடு நான்கு பேர்கள்!"

அவர்கள் மிகவும் சலிப்படைந்தவர்கள்போல் காணப்பட்டார்கள். துப்பாக்கிகளைப் பக்கத்தில் வைத்துவிட்டு இருவரும் பேசாமல் தரையில் அமர்ந் திருந்தனர்.

"அவர்களிடம் நீங்கள் பேசினீர்களா?"

"இரண்டொரு வார்த்தைகளுக்கு மேல் பேச வில்லை. அவர்களில் ஒருவன் எங்களைப் பார்த்து 'எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டான். நான் லீவானில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு என்று சொன்னேன். இதைக் கேட்பதில்கூட அக்கறையுள் வர்களாகத் தோன்றவில்லை.

"சரியாக எந்த இடத்தில் அந்த ரோந்துப்படையினர் இருந்தனர்?"

"சா ஜிங்டோவிலிருந்து நெல் வயல்களுக்குமேல் நூறு அடி உயரத்தில் ஒற்றையடிப் பாதையில் இருந்தார்களென்று சொல்லலாம். அங்கிருந்து சம்சன் அரைமைல் தூரம்தான் இருக்கும்!"

"நான்கு பேர்தான் என்று கூறினீர்களா?"

"ஆம். இருவர் தங்கள் தோள்களில் துப்பாக்கிகளைத் தாங்கியவண்ணம் நின்றிருந்தனர். மற்றிருவர் புல்தரையில் அமர்ந்திருந்தனர்; அநேகமாக அவர்கள் பகல் உணவுக்காக கீழே செல்லக் காத்திருந்தனர்." என்று நினைக்கிறேன்."

"நீங்கள் சென்றவுடனேயே அவர்கள் கடலை நோக்கிச் செல்வதை நான் பார்த்தேன்" என்றான் அசாய்.

"இன்னும் என்ன பார்த்தாய்?" என்று ஹூவாங் பையனைக் கேட்டான்.

"அதன் பிறகு, சிறிது நேரம் அவர்களைப் பார்க்கவில்லை. பாதை, செங்குத்தான மலைப்பகுதிகளை ஒட்டி அமைந்துள்ளதால் நான் அவர்களைப் பார்க்க முடியவில்லை. நான் மறுபடியும் மேலே ஏறினேன். அப்போது அவர்கள் மேலே வந்துகொண்டிருந்ததைப் பார்த்தேன்."

"கொஞ்சம் இரு!" என்று டென்ஸான் கூறினான். அங்கேஒரு கூர்மையான வளைவு இருக்கிறது. நாங்கள் லிவானிலிருந்து எல்லைக்குச் செல்வதற்காக சாலையைப் பிடித்த இடத்தில் சரியாக நமக்கு இடது பக்கத்தில் நிலப்பரப்பு சரிவாக அமைந்திருந்தது.

இந்த இடத்தில் செல்வது மிகவும் கடினமாக இருந்தது. நிலயத்திலிருந்து சுமார் நூறு கஜ தூரத்தில் சம்சம் நதிக்கு நாங்கள் வந்தோம்."

"அது எங்கே இருக்கிறது?"

"லியுவான் சாலே எல்லேக்கு வரும் இடத்தில் ஜிங்கௌசுனில் இருக்கிறது. அங்கு சில பண்ணே வீடுகளும் இருக்கின்றன; அதோடு, ஒரு பத்தடி உயரமுள்ள கம்பத்திலிருந்து ஓர் ஸர்ச்லேட் ஒளி விளக்குத்தூண், வெளியேநீட்டிவிடப்பட்டு இருக்கிறது!"

"நீங்கள் அங்கு காவலாளிகளேச் சமாளித் தீர்களா?"

"நாங்கள் நேராக அவர்கள் இருந்த இடம் வரைக்கும் நடந்தோம். அவர்கள் எங்களே தங்களேச் சேர்ந்தவராகவே நினேத்தார்கள். நான் தாம்ஷ்யூ பேசுகிறேன்."

"நீங்கள் எங்கே செல்கிறீர்கள்?" என்று ஒருவன் சகோதரபாவத்துடன் கேட்டான்.

"எங்கள் தொலேபேசி பழுதாகிவிட்டது. யாரை யாவது கீழே அனுப்பி அதைச் சரி பண்ணச்சொல் வதற்காக நாங்கள் மேலே போகிறேம்"என்றேன்.

"அங்கே எத்தனேபேர் இருந்தார்கள்?" என்று ஹுவாங் கேட்டான்.

"பன்னிரெண்டு பேர்கள் இருந்தார்கள். எல் லோரும் ஆயுதம் தரித்தவர்கள். வடக்கிலிருந்து யாராவது மேலே வந்து கொண்டிருந்ததைப் பார்த் தீர்களா என்று ஒருவன் எங்களேக் கேட்டான். யாரு மில்லே! என்று சொன்னேன்."

"அப்படியானால் அகதிகள் இவ்வழியே வருவார்களென்று நீங்கள் எதிர்பார்க்கவில்லையா?"

"இல்லை. எப்படியும் எங்கள் நிலையத்திற்கு இருட்டுவதற்குள்ளாகத் திரும்பி விடுவோமென்று நான் சொன்னேன்."

ஹூவாங் வரைப் படத்தை எடுத்து முழுமையாக விரித்தான். பிறகு ஆபத்தான பகுதி என்று காட்டப்பட்ட இடத்தில் சிறு பிரிவாகத் திரும்ப மடித்தான், பிறகு அதில் உள்ள வழிகளை மீண்டும் ஆராய்ந்துவிட்டு டென்ஸானை அம்முனைகளைக் குறிப்பிடச் சொல்லி அவற்றைப் பென்சிலால் அடையாளம் செய்தான்.

அவன் சில கஜ தூரம் தள்ளிச்சென்று அமர்ந்து சூபாதாவுடன் தங்களுடைய யுத்த தந்திரங்களைப் பற்றிக்கலந்து பேச ஆரம்பித்தான்.

பெரிய காவல் நிலையம் இருக்கும் பெய்குங்காவோவும், அந்த இடத்துக்குச் சற்று மேற்கே தள்ளி இருந்த ஜிங்கௌசுன் என்ற இடமும் அபாயகரமான முனைகள் என்பது நெளிவாகத் தெரிந்தது. ஜிங்கௌசுனுக்குக் கிழக்கே கடலை நோக்கி பரந்துகிடந்த நெல் வயல்களோடு கூடிய நிலபரப்பு ஒன்று இருந்தது. வயல்களைத் தாண்டிச்செல்ல நினைக்கும் எவரும் அந்தத் திடலை தாண்டும்போது ஒளிவிளக்கினால் அடையாளம் காட்டப்பட்டுவிடுவர். அதே சமயம் சற்றுமேற்கே தள்ளி வலது புறமாக உள்ள இரண்டு ரோந்துக் காரர்களுக்கு இடையே பிடிபட்டுவிடுவார்கள். இங்கு ஒரு மோதல் தவிர்க்க முடியாததாகத் தென்பட்டது.

ஜேம்ஸூம் ஃபானும் மேலே நடந்தனர்.

"உங்கள் திட்டங்களைக் கேட்கலாமா?"

ஹூவாங் நிமிர்ந்து நோக்கி அவர்களை கீழே உட்காரும்படி சமிக்ஞை செய்தான். ஜேம்ஸூம் ஃபானும் தரையில் அமர்ந்தனர். ஜேம்ஸ் தன் கையில் வைத்திருந்த ஒரு நீண்ட கூர்மையான புல்லைக் கடித்துக்கொண்டிருந்தான்.

"நாம் சூரியாஸ்தமனத்தோடு கீழே செல்லப் போகிறோம். மணி ஆறாகிறதா, அல்லது ஏழு ஆகிறதா என்று பார்ப்போம். ஆனால் இவையெல்லாம் நாம் எல்லையைக் காணும் இடத்தை வந்தடையும் முன் கண்டு பிடிக்கப் படாமல் இருப்பதைப் பொறுத்திருக்கிறது. நாம் இப்போது இருக்கும் இடத்திலிருந்து மூன்றுமைல் தூரம் நடந்துசெல்ல வேண்டும். மேலும் நம்மில் பலர் பெண்டிர்களுடனும் குழந்தைகளுடனும் வந்திருக்கிறார்கள். நாம் டார்ச் விளக்குகளையும் பயன்படுத்தமுடியாது. அங்கே நிலவொளியும் இருக்காது. ஜிங்கௌசுனில் சிறிது வெளிச்சம் இருக்கும் என்பது நிச்சயம். அங்கு தான் நாம் செல்லப் போகிறோம்."

"ஏ இங்கே வாருங்கள்!" டென்ஸானையும் காவோவியையும் சைகை காட்டி அழைத்தான் ஹூவாங். தன் கால்களை ஒரு புறமாக நீட்டியவாறு ஒரு கையில் உடம்பைத் தாங்கியபடி சூபாதா தரையில் உட்கார்ந்துகொண்டிருந்தான்.

"பெரிய நிலையத்தை நீங்கள் திடீரென்று தாக்கப் போவதில்லையா?" என்று ஃபான் கேட்டான்.

"அங்கே இருக்கும் ஆட்களை நாம் கேட்போம்."

"நதியிலிருந்து நிலையம் எவ்வளவு தூரம் இருக்கிறது?" என்று டென்னையும் காவோவையும் ஹுவாங் கேட்டான்.

"நூறு கஜ தூரம் இருக்கும்."

"அங்கு எத்தனை காவலாளிகளை நீங்கள் பார்த்தீர்கள்?"

"ஒரு டஜன் என்று நினைக்கிறேன். பதினாறு பேர்கள் என்று வைத்துக்கொண்டால் நாம் இன்னும் ஜாக்கிரதையாக இருக்கலாம். அவர்கள் நாலு திசையிலும் பரவி இருக்கலாம்."

"சாலைகள் எவ்வாறு உள்ளன?"

"கடற்பகுதிகளில் பெரும்பாலும் மணல் நிரம்பியும் கப்பிக்கல் மிகுந்தும் இருக்கின்றன. உள்ளே புகுந்தால் வெறும் பாறைகளும் கற்களும் மிகுந்து காணப்படுகின்றன.

ஹுவாங் தன் உதடுகளை நாக்கினால் தடவிக்கொண்டு, "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று சூவிடம் வினவினான்.

"பதுங்கித் தாக்குவதற்கு ஏற்ற இடம் ஏதாகிலும் அங்கே இருக்கின்றதா?" என்று ஒற்றர்களை விசாரித்தான் சூ.

"நிலயத்திலிருந்து சுமார் நானூறு அடி தூரத்தில் நீர்க்கால்களிடையே சாலை புகும் இடத்தில் இரு கரைகளும் புதர் மண்டிக் கிடக்கின்றன.

"அது சரியல்ல, போதாது!" என்றான் ஃபான்.

வரைப்படத்தை காட்டும்படி ஜேம்ஸ் கேட்டான்; ஒரு நோட்டுப் புத்தகத்தின் பின்னால் குறித்திருந்த ஒரு படத்தை சூ அவனிடம் நீட்டினான்.

"இதோ பாருங்கள்" என்று சாலேயிலிருந்த தாழ்வான பகுதியைச் சுட்டிக்காட்டி விவரித்தான் சூ

"நிலேயத்துக்குப் போகும் பாதை முற்றிலும் சம தரையாகவும் நேராகவும் இருந்தால் நாம் அதை நேரிடையாக அணுகப் போவதில்லே" என்றான் ஜேம்ஸ். "நம் வசம் அதிகப்படியான ஆட்கள் இருக்கிறார்கள்; ஆனால். எட்டு அல்லது ஒன்பது துப்பாக்கிகள் மட்டுமே இருக்கின்றன. பூரணமானதொரு இலக்கை நாம் அமைத்துக்கொள்ளுவோம்; ஆட்கள் அதிகமாக இருக்கும்போது, படுகொலேகளும் மிக அதிகமாக இருக்கும். தாக்கும் அவர்களே நாம் ஏமாற்றி இட்டுச்சென்று அங்கே அவர்களேப்பிடித்து விட வேண்டியிருக்கும். நமக்குள்ள ஒரே ஒரு சாதகம், இருட்டும் திடீர்த்தாக்குதலும்தான்!"

தன் தலேயை நிமிர்த்தி, உதடுகள் புன்னகை செய்ய வரைபடத்தை உற்றுப் பார்த்த வண்ணம் காவோ வி பேசலானான்:-

"கொரியாவிலிருந்த ஒரு மலேக்கணவாயில் ஒரு முழு அமெரிக்கப்படை ஏமாற்றிப் பிடிக்கப்பட்டு படுகொலே செய்யப்பட்டதை நான் கண்டிருக்கிறேன். திரும்பி வருகையில் அதைப் பற்றிதான் யோசித்துக் கொண்டிருந்தேன். நூறு கஜங்களுக்கு இரு புறங்களிலும் கற்பாறைகளும் மரங்களும் அடைத்துக் கொண்டிருக்கின்றன. கரைகளின் இரு விளிம்புகள்; பதுங்கித் தாக்கும் இடத்துக்கு ஏற்ற மிகச் சிறந்த நிலப்பரப்பை உண்டாக்கிக் கொடுக்கின்றன."

"பெண்கள் குழந்தைகளைப் பற்றி என்ன?" என்று கேட்டான் ஜேம்ஸ்.

"அவர்களை மூன்று சிறு கும்பல்களாகப் பிரித்து விடுவோம்," என்று ஹுவாங் விளக்கினான். "மாவோ பெங் அவர்களுடன் இருப்பார். சூவும் நானும் மற்றவர்களை வழி நடத்திச் செல்வோம். நாம் ஒரு வருக் கொருவர் ஐம்பது கஜ தூரத்தில் விரவிக் கிடக்க வேண்டிவரும்; ஆனால் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்; உங்கள் கோஷ்டியினர் சண்டை முடியும் வரை மறைந்தே இருக்க வேண்டிவரும். இதற்காக நான் அஞ்சு கிறேன், துப்பாக்கி சுடுவதில் நீங்கள் கைதேர்ந்த வர்களாயிற்றே!"

"குறி தவறாமல் சுடுவதில் மகா நிபுணன் என்று நான் சொல்லிக் கொள்ளமாட்டேன். ஆனால், ஐம்பது அல்லது அறுபது கஜ தூரத்திற்குள் உள்ள எதையும் என்னால் கச்சிதமாக அடித்துவிட முடியும். நான் என்ன செய்யவேண்டுமென்று நீங்கள் விரும்பு கிறீர்கள்?" என்றான் ஜேம்ஸ்.

"காவோ துப்பாக்கிப் பிரயோகத்தில் வல்லவன். மற்ற இரண்டு அல்லது மூன்று பேர் ஏற்கெனவேதுப் பாக்கிகளைக் கையாண்டிருக்கிறார்கள். என்னுடைய நண்பர் சூ துப்பாக்கி சுடுவதில் திறமை மிகுந்தவர். எங்களிலே யாரும் மெய்யாகவே வல்லவர்களல்ல சர்ச்லைட் ஒளிவிளக்கைக் குறித்துத்தான் நான் கிலே சப்படுகிறேன். நிலையத்தை நாம் நெருங்குவதற்கு முன்னதாக அதை நாசம் செய்துவிட விரும்புகிறேன்

நான். இரண்டு மனிதத் தலைகளின் அளவுக்கு அது இருக்கிறது. உங்களால் முடியுமா?"

"முடியும்; ஐம்பது அல்லது அறுபது கஜதூரத்தில் இருந்தால் முடியும்!...."

"நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் அது தான். நாம் அந்த ஒளிவிளக்கை அழித்துவிட்டால், எஞ்சியுள்ளவை மின்மினிப் பூச்சிகளைத் துரத்துவது போன்றவைதான். அதை யார் வேண்டுமென்றாலும் செய்யலாம்."

சூ உங்களோடு வருவார்; நாம் முதல்காரியமாக காவலரை நிலையத்திலிருந்து ஏமாற்றி வெளிப்படுத்திப் பிடித்து விடுவோம். பிறகு நீங்கள் உள்ளே புகுந்து எல்லாவற்றையும் குழப்பிப் பீதி உண்டு பண்ணிவிட்டு திரும்பிவிடுங்கள்!"

"பிறகு, நிச்சயம் நாம் வெற்றி பெற்றுவிடலாம்!" என்று உணர்ச்சிவயப்படாத வகையில் சொன்னான் ஜேம்ஸ்:

"நாங்கள் கொஞ்சதூரம் பின்னால் நின்று உங்களை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொண்டிருப்போம். அவர்களை ஏமாற்றி சாலைக்கு இழுத்துவர மிகச் சிறந்த ஆட்கள் சிலரை நான் ஏற்பாடு செய்கிறேன். திருப்திகரமாக யிருக்கிறதல்லவா?" அவன் தன் கையைக் கொடுத்தான்.

ஜேம்ஸ் அவனுடன் கைகுலுக்கினான்; "திருப்தி யளிக்கக் கூடியதாகத்தான் இருக்கிறது!" என்று சொன்னான்.

அத்தியாயம் 23

ஜேம்ஸ் தொலை நோக்கியை இரவல் வாங்கிக் கொண்டு தானாகவே புறப்பட்டான். காட்டின் பின்புறம் இருந்த தரை மேற்குத் திசையில் பத்து கஜத்துக்கு அப்பால் சற்றுச் சரிந்திருந்தது; சூரியன் மறையவில்லை. சாலையில் தொலைவில் வந்துகொண்டிருப்பவர்களோ. அல்லது ஒரு மைல் தொலைவிலிருந்த மரங்களுக்கிடையில் நின்று உளவு பார்ப்பவர்களோ அவனைக் கண்டுக்கொள்ளமுடியும். அவன் பக்கவாட்டில் வலப்புறமாக நடந்து சென்று,' ஒரு மரத்தடியில் மறைவிடம் தேடினான். தன்னுடைய குல்லாயை ஒரு புறமாகச் சிறிது சாய்த்தபடி, தொலை நோக்கியின் மூலம் கூர்ந்து கவனித்தான் அவன். இரு குன்றுகளுக்கும் இடையில் இருந்த சரிவில் தாவர வகைகள் மண்டிக் கிடந்தன. மலைகளுக்கிடையே இருந்த பள்ளத்தின் அமைப்புக் கோட்டை அவன் தொடர்ந்து சென்றபோது எங்கே சண்டை நிகழலாம் என்று கருதினார்களோ அந்த குத்துப் பள்ளத்தின் உருத் தோற்றத்தை மனக்கண் கொண்டு நோக்கினான்.

மேற்கில், சிவப்புப் புள்ளிகளோடு கூடிய குன்றுகள் இருண்ட பச்சை நிறத்தோடும் பழுப்பு

நிறத்தோடும் குவிந்திருந்தன; மிகத் தாழ்ந்திருந்த இரண்டு சிகரங்கள் ஒரு பெண்ணின் மார்பகத்தைப் போன்று புடைத்திருந்தன.

குழுவினரை நோக்கி அவன் திரும்பவும் வந்தான்; அவர்களைத் தாண்டிச் சென்ருன்; காட்டைச் சுற்றிவந்தான்; பிறகு தெற்கு நோக்கி நடந்து சென்ருன். கோலநட்டின் தென்பகுதியும் வடபகுதியைப்போலவே மரங்கள் சூழ்ந்து செங்குத்தாக இருந்தது. இடதுபுறம் கடல் இருந்தது; கடற்கரையில் மீன் பிடிக்கும் படகுகள் வரிசையாக இருந்தன, கடற்கரையிலிருந்து சிறிது தூரத்தில் அவன் காலடியில் தரை மேடிட்டிருந்தது. முன்புறத்தில் செங்குத்தாக நீட்டிக்கொண்டிருந்த பாறையின் பகுதியால் ஜிங்கௌசுன் நிலையம் பார்வையினின்றும் மறைந்திருந்தது. அவன் கவிழ்ந்து படுத்து ஊர்ந்து கொண்டே தன் வழியைக் கணித்தபடி வந்தான். அவனுல் நன்ருகப் பார்க்க முடிந்தது; ஆனுல் போதுமான அளவுக்கு அல்ல. மீண்டும் சிறிது சிறிதாக முன்னேக்கி நகர்ந்த வண்ணம் தன் குல்லாயைக் கீழே வீசி எறிந்தான்; தன் முழங்கைகளில் சாய்ந்தவாறு தான் பார்க்க வந்திருந்தைக் கவனித்தான் அவன். நதி, இடதுபுறத்தில் நெல்வயல், மரச்சாரத்தின்மீது பொருந்தியிருந்த காவல் நிலையம் ஆகியவை அவன் நன்கு கண்ணுக்குத் தென்பட்டன. சாரத்தின் உச்சியில் உருண்ட வடிவம் கொண்ட ஒரு பொருளைப் பார்த்தான்; அதுதான் ஒளிவிளக்காக (ஸர்ச்லைட்) இருக்க வேண்டும்.

தனக்கு முன்னால் அருகாமையில் ஊசிஇலை மரங்கள், பைன் மரங்கள் ஆகியவற்றின் உச்சி முனைகளைத் தான் பார்க்க முடிந்தது; ஆனால் இடைவெளிகளின் வழியே நிலையத்துக்குச் செல்லும் பாதையை அவன் சரிபார்த்துக் கொண்டான். ஒற்றர்கள் அறிவித்திருந்ததைப்போலவே முற்றிலும் நேராகச்சென்றது பாதை. பின்னர் பாதை உயர்ந்து வடக்கே சென்று மறைந்தது; அவனால் தீர்மானிக்க முடிந்தவரை மலைகளுக்கிடையே இருந்த பள்ளத்தாக்கின் தூரப் பகுதியில் சிறிய ஓடைக்கு மேலே வலது பக்கத்தில் காடு முன்னேறிக் நீட்டிக்கொண்டிருந்தது. தான் என்ன செய்ய வேண்டுமென்பதற்குரிய ஒரு தீர்மானத்தை அவன் உருவாக்கிக் கொண்டான்.

கோஷ்டியிடம் ஜேம்ஸ் திரும்பி வந்து தான் பார்த்திருந்ததை ஹுவாங்கிடமும் சூபாதாவிடமும் அறிவித்தான், ஆட்களின் ஆகாரப் பொருள்களின் விநியோகம்பற்றி விளக்கிய வண்ணம் இப்போது முழுவதும் உலர்ந்திருந்த புல்மீது அவர்கள் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.

பொழுது பட்டதும் கீழே இறங்கி எல்லையை நோக்கி விரைய இப்போது அவர்கள் காத்துக்கிடந்தனர். அனேகமாக எல்லோர் முகத்திலும் கவலையே தேங்கிக்கிடந்தது.

பிங்ஷானைச் சேர்ந்த ஆட்கள் தங்களுடைய சொந்த உணவுப் பங்கீடுகளைக் கொண்டுவந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். இந்தப் பலவந்தமான முன்னேற்றம் முன் நின்று தாக்குதல் ஆகியவற்றால் அவர்கள் எல்லையை இருபத்தி நான்கு மணி நேரத்

தில் அடைய முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் குழுவில் சில ஷூன்டாக் பெண்களும் இருந்தார்கள்.

ஈஸுவிடம் ஜேம்ஸ் திரும்பிச் சென்றான். அவள் தலைமுடி காற்றினால் அலைக்கழிக்கப்பட்டிருந்தது. குழுவினர் தங்களைச் சிறிதளவு சுத்தப்படுத்திக் கொண்டு சற்றே சௌகரியமாக இருப்பதுபோல் தோன்றினார்கள். தாத்தா பார்த்துக்கொண்டிருக்க வறுத்த அரிசியை ஒரு தேக்கரண்டியால் பங்கிட்டுக் கொண்டிருந்தாள் ஈஸு. டூவான் முந்திய நாள் சகதியில் விழுந்தபோது அவனுடைய உணவு அவிழ்ந்து சிதறிவிட்டது. ஸ்வாட்டும் அவள் கணவன் சாங்லீபூவும் உணவு எதுவும் கொண்டுவரவில்லை. அவர்கள் பேசாமல் அருகே உட்கார்ந்துகொண்டிருந் தார்கள். ஆனால் அங்கு இருந்த அரிசி எல்லோருக் கும் காணும்படியாக இருந்தது; இதுதான் அவர் களது கடைசிச் சாப்பாடாக இருக்க வேண்டும், அவர்கள் எல்லையைத் தாண்டிவிட்டால் பின்னர் அவர்களுக்கு இந்த உணவுப்பங்கீடுகள் தேவைப்பட மாட்டா.

"உங்கள் தலைப்பாகை எங்கே?" என்று சாங்லீ பூவை விசாரித்தான் ஜேம்ஸ்.

"எல்லாம் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டு விட்டது!"

"கீழே உள்ள கிராமத்தை நான் பார்வையிட் டேன்" என்றான் ஈஸுவிடம் அவன்.

"கீழே அமர்ந்து கொஞ்சம் சாப்பிடுங்கள்!"

ஒருமாதிரி கோணிக்கொண்டு தரையில் அமர்ந்தான் ஜேம்ஸ். குழுவினரிடம் தாங்கள் எம்மாதிரி நடந்துகொள்ள வேண்டும் என்பதுபற்றி ஃபான் சொல்லிக்கொண்டிருந்தான்.

"இது எப்படித் தோன்றுகிறது?" என்று ஈஸா வினவினாள்.

ஜேம்ஸ் கைத்துப்பாக்கி வைக்கும் தோலுறை கொண்ட இடுப்புவாரை சற்றுத் தளர்த்தி விட்டுக் கொண்டு ஆழ்ந்த பெருமூச்செறிந்து, "பரவாயில்லை, ஒன்றும் மோசமில்லை. என் இலக்கை நான் கண்டு வைத்திருக்கிறேன்" என்று பதிலிறுத்தான். தன்னுடைய வில்ஸன் 38 ஸ்பெஷல் துப்பாக்கியை மெதுவாகத் தட்டிக்கொடுத்தான்.

பிரகாசித்துக் கொண்டிருந்த பொருளை நோக்கித் தன் சிறிய கையை நீட்டினான் ஸ்ப்ரௌட். ஆனால் ஈஸா உடனே "கையை நீட்டாதே" என்றாள்.

அவன் கையில் கொஞ்சம் வறுத்த அரிசியைக் கொட்டிக்கொண்டே "என்ன இலக்கு அது?" என்று ஈஸா கேட்டாள்.

"என்ன இலக்கென்று கேட்கிறாயா? வேறொன்றுமில்லை. அந்த விளக்குகள்தான்! நாங்கள் நிலையத்தைத் தாக்கத் தொடங்குமுன் அதை உடைத்துவிட வேண்டியது என்னுடையபொறுப்பு!"

எப்போதுமே சுத்தமாக இருக்கும் லெய்வா முகம்பார்க்கும் சிறு கைக்கண்ணாடியில் தன் முகப் பூச்சு அலங்காரத்தைப் பூர்த்தி செய்துகொண்டிருந்தாள். அப்போது அனாதைச் சிறுவன் க்வென் அவள் மடியில் தன் தலையைப் பதித்தவண்ணம் மேலே

நோக்கினான். கபில நிற முகமும் கறு விழிகளும் கொண்ட ஷான்டாக் கன்னிப் பெண்களினின்றும் அவள் தோற்றம் முற்றிலும் வேறுபட்டிருந்தது.

"அசாய் எங்கே?" என்று ஃபான் கேட்டான்.

"ஆட்களுடன் எங்கேயோ போயிருக்கிறான்."

அசாய் எல்லா இடங்களிலும் முன்கூட்டியே சிநேகம் பிடித்து வைத்துக்கொண்டிருந்தான். பசியினாலும் வறுத்த அரிசியில் ஏற்பட்டிருந்த வெறுப்பாலும் அவன் அரிசியைக் கொடுத்துவிட்டு மசாலை போட்டிருந்த ரொட்டியை பண்டமாற்றுச் செய்து கொண்டிருந்தான். அவை ஆறிப்போய் கடினமாக இருந்தன; ஆனால் அவற்றில் வெங்காயமும் உப்புமோ, அல்லது வெங்காயமும் சர்க்கரையுமோ கலந்த மசாலை அடங்கியிருந்தது. ரொட்டிகள் மிக எளிதாக நொறுங்கின; ஏனென்றால் அதில் பன்றிக் கொழுப்பு இல்லை. அவன் வாய் வரண்டுவிட்டது; ரொட்டியை விழுங்குமுன் அவனது கன்னங்கள் உப்பின. வேறொருவனது தண்ணீர்ச் சீசாவிலிருந்த தண்ணீரைப்பருக அவன் விழைந்தான்.

"வா! வா! தண்ணீர் தருகிறேன்; பூராவையும் நான் குடித்துவிடமாட்டேன்!"

அவன் தண்ணீர்க் குப்பியைக் கொடுத்துவிட்டு மீண்டும் அதைத் திரும்பிப்பெற கையை நீட்டினான்.

"ஹாங்காங்குக்குப் போய் நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டான் அந்த மனிதன்.

"பெரியவனானதும் டாக்ஸி ஓட்டுபவனாக இருக்கப் போகிறேன் நான். சரி; நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

"ஏதாவது செய்ய வேண்டும்; ஆமாம் ஏதாவது செய்தாக வேண்டும்!"

உள்ளங்கைகளில் முகத்தைத் தாங்கியபடி குப்புறப் படுத்துக்கொண்டிருந்த ஒருவன் "நான் மீன் வற்றல் தயாரித்து விற்பேன். எனக்கு அதில் மிகுந்த பழக்கம் உண்டு. சுதந்திர நகரில் அவைகளை தயாரிக்க நிரம்ப எண்ணெய் கிடைக்கும்" என்றான்

நீண்ட மீசையுடன் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்த ஒல்லியான ஓர் இளைஞன் தன் தலையைத் தூக்கி "நான் ஆரஞ்சுப்பழங்கள் விற்பேன்! அல்லது பாத அணிகளுக்கு மெருகு போடுவேன். அத்துடன் இரவுப் பள்ளிக்கும் செல்ல முடியுமே!"

"ஒருவன் என்ன செய்கிறான் என்பது முக்கியமன்று, விஷயம் என்னவென்றால் ஒருவன் வயதானபின் தன் வயதிற்குரிய காரியத்தை அவன் செய்யும்படி விட்டுவிட வேண்டும். தான் செய்ய வேண்டியதை தானே தீர்மானித்துக் கொள்ளவும் அவனை அனுமதிக்க வேண்டும்!...."

"இந்தத் தத்துவங்களை எல்லாம் நீ எப்போது எங்கே படித்தாய்? நீ அந்த வகுப்பு நடந்தபோது இல்லையே?"

"ஆம்! நான் இருக்கவில்லை உண்மைதான்!"

"ஏன் நீங்கள் கட்சியில் சேரவில்லையா?"

"நான் பள்ளியில் கடைசி வருஷம் படித்தபோது, கட்சியில் சேரவேண்டுமென்று எண்ணினேன். என்னைத் தொலைவுக்கு அனுப்பப்படாத அளவிற்கு கட்சி எனக்குச் சில சலுகைகளையும் தொடர்புகளையும் அளித்தது. ஆனால், 'சுறுசுறுப்பான' அங்கத்தி

னர் என்று அவர்கள் சொல்லுகிற அந்த அளவில் நான் ஒருபோதும் இருந்தது கிடையாது. கொள்கைகள் சம்பந்தப்பட்ட விவாதங்கள் ஒன்றிலே ஒருவன் வயதுக்கு வந்த பிறகு தான் தக்காளி சாப்பிடுவதா அல்லது முட்டைகோஸ் சாப்பிடுவதா என்பதைத் தானே தீர்மானிப்பதற்கு அவனால் முடியுமாவென்று நான் கேட்டேன். தனி மனிதனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த குட்டி பூர்ஷ்வா என்று ஆரவாரம் செய்து என்னை உட்கார வைத்து விட்டார்கள். ஆதலால் நான் 'சுறுசுறுப்பு அற்ற உறுப்பினர்'ஆக ஆகிவிட்டேன்!...."

கபில நிறமும் சுருக்கம் விழுந்த முகமும் கொண்ட ஓர் உழவன் நிதானமாகச் சொன்னான்; "எனக்கு ஒரு சிறு துண்டு நிலம் கொடுங்கள்; அந்தக் கமிஷனர்கள் எல்லோரையும்விட நல்ல முறையில் நான் முட்டைகோசு பயிரிட முடியும்."

"சரி, நீங்கள் முட்டைக்கோசு பயிரிடுங்கள். நான் உங்களுக்காக அவைகளை விற்பனை செய்கிறேன்" என்றான் இளைஞன்.

"எது நல்லதென்று உங்களுக்குத் தெரிவதில்லை" என்று மணியோசை போன்ற புதிய குரலில் ஒன்று கிளம்பியது. பேசியவனுக்கு சுமார் நாற்பது வயது இருக்கும். "மாட்டிறைச்சிச் சவ்வுகள், முட்டைகள் சேர்ந்த உயர்ந்த மாவுப்பணியாரம் சூப்பு இவைகளை டாம்ஷுநியில் என் வாழ்நாள் பூராவும் தயாரித்து விற்பனை செய்திருக்கிறேன். அதையே ஹாங்காங்கிலும் செய்யப்போகிறேன். மண்ணாலான அடுப்பும் குழிந்த வாணலியும்தான் எனக்குத் தேவை!"

குழுத் தலைவர்கள் தங்கள் ஆட்களை ஒவ்வொருவராக அழைத்துக் கொண்டிருந்தார்கள். எல்லா ஆயுதங்களும் தரைமீது வைக்கப்பட்டு எண்ணப் பட்டன; கைத்துப்பாக்கிகள் தரையில் வரிசையாகக் ஹாவாங்குக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்தன.

முதலில் எல்லோருக்கும் கைத்துப்பாக்கிகள் கொடுக்கப்பட்டன; ஆட்கள் எல்லோரும் வட்டமாக நின்றார்கள்; இரண்டு கவைக்கம்புகளும் மண் கீறும் பிக்காசியும் ஷூண்டாக் பெண்களுக்குக் கொடுக்கப்பட்டன; அவர்கள் அவைகளை சிரித்துக் கொண்டே பெற்றுக்கொண்டார்கள். ஃபானை உற்றுப் பார்த்தான் ஹாவாங்; அவனிடம் ஒரு தலைப்பாகையை நீட்டினான்.

"இதோ இது உன்னுடையது."

பெயர்ப் பட்டியலை பார்த்து மீதமிருந்த தலைப் பாகைகளை இளைஞர்களுக்கு வழங்கினான்.

"நான் என்னுடைய கத்தியை வைத்துக் கொள்ளலாமா?" என்று ஹைலோக் ஃபாங் ஆட்களில் ஒருவன் கேட்டான்.

"அவசியம் நீங்கள் வைத்துக்கொள்ளலாம்" என்று கத்தியை அவனிடம் திரும்பத் தந்தனர்.

"என்னுடையதை என்னிடம் கொடுங்கள்!" என்று இன்னொருவன் சொன்னான்.

மூன்று செம்படவர்களும் தலைப்பாகைகளையும் கத்திகளையும் வைத்திருந்தார்கள். மற்றவர்களுக்கு மண்வெட்டிகளும், பில்கீறியும் கொடுக்கப்பட்டன. அவர்களில் சிலர் தலைப்பாகை அணிந்து பிக்காசியை ஏந்தி நின்றார்கள்.

உள்நாட்டில் செய்யப்பட்ட கைக் குண்டுகள் அடங்கிய ஒரு கறுப்புப் பொட்டலத்தைப் பக்கத்தில் வைத்திருந்தான் சூபாதா.

"அவற்றில் ஒன்றை நான் வைத்துக்கொள்ளட்டுமா?" என்று அசாய் வினவினன்.

"இல்லை; உனக்கு வேண்டாம், உன் தலைப் பாகையை சரியாக நீ வைத்துக் கொள்."

"சரி! இப்போது கேளுங்கள், உங்கள் பெயர்களை நான் கூப்பிடுங்கால், நீங்கள் வரிசையாக வந்து நிற்க வேண்டும்!" என்றான் சூபாதா.

ஆட்கள், மூன்று குழுக்களாகப் பிரிந்துநின்றனர்.

"முதல் குழுவை நான் வழி நடத்திச்செல்வேன். மிஸ்டர் ஹுவாங் மத்தியக் குழுவுக்கு வழி காட்டுவார்; மிஸ்டர் மாவோபெங் பெண்களும் சிறுவர்களும் உள்ள பின்பகுதியைக் கவனித்துக் கொள்வார். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் அணியின் தலைவரைப் பின் தொடர வேண்டும். இதில் தவறு ஏற்படக்கூடாது; கடமையில் தவறவும் கூடாது. சண்டை ஆரம்பமாகும்போது, குழப்பம் அடைந்து விடாதீர்கள். உங்கள் தலைவர் நகர்ந்து செல்லும்படி உத்தரவிடும்வரை, நீங்கள் இருக்கும் இடத்தை விட்டு நகரக்கூடாது. நாம் புதரில் பதுங்கி எதிரியை ஏமாற்றிப் பிடிக்கப் போகிறோம்; அத்துடன் குறித்த நேரத்தில் செயற்படுவது முக்கியமானது!........

"இன்றிரவு அநேகமாக கை கலப்புச் சண்டை ஒன்று நடக்கும். ஒவ்வொரு நிலையிலும் உங்கள் தலைவர்கள் என்ன செய்வதென்று உங்களுக்குச் சொல்லுவார்கள், இந்தக் கறுப்புத் தலைப்பாகை

களையே நாம் உதவிக்கு நம்பிக் கொண்டிருக்கிறோம்; அவற்றை நீங்கள் நன்கு பயன்படுத்தக் கூடும். நீங்கள் மௌனமாகவும் திறம்படவும் எதிரியின் குரல்வளையை நசுக்கிக் கொல்லவும் முடியும்! அதனால் தான், அவைகளை மிகச் சிறந்த ஆட்கள் சிலருக்கு நான் கொடுத்திருக்கிறேன்;........

"இன்னொரு விஷயம். இருட்டில் நம் ஆட்களில் ஒருவரின் குரல்வளையை நாமே நசுக்கிக்கொல்லு வதைத் தவிர்க்க இருட்டியவுடன் உங்கள் கழுத்தைச் சுற்றிலும் ஒரு வெள்ளைக் கைக்குட்டையைக் கட்டிக் கொள்ளுங்கள்!"........

"கைக் குட்டைகள் இல்லாதவர்கள் என்ன செய்வது?"

"ஒரு சட்டையையோ அல்லது ஏதாவது கையில் அகப்பட்டதையோ கிழியுங்கள், உங்களது சொந்தப் பாதுகாப்புக்கு நீங்கள் செய்து கொள்ளவேண்டிய அவசியமான காரியம் அது; இதுவரை சண்டையில் ஈடுபட்டுள்ள படைகளில் விசித்திரமான ஒன்றாக இது இருக்கும். ஆனால் இதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்: நீங்கள் பின்புறமிருந்து சுருக்குக் கயிற்றினால் எதிரியை மாட்டிப் பிடிக்கையில், உடனே இன்னொரு சுருக்குப்போட்டு அதை இறுக்கி விடுங்கள்; அவன் மடிந்துவிடுவான்!....அவ்வளவு தான்!"

அத்தியாயம் 24

மரங்களின் நிழல்கள் கிழக்குச் சரிவுவரை நீண்டிருந்தன. சூரியன் மறைய மறைய கண்ணுக்கு இனிமையாக நிழலும் நீண்டுகொண்டிருந்தது. அப் பரந்த நிழலில் கோஷ்டியினர் வந்து அடங்கினர். கோலநட்டின் சிகரம் மட்டும் நிழல் படியாமல் கீழே மங்கிய ஒளியைப் பரப்பிக் கொண்டு இருந்தது.

அரைமணி நேரம்வரை அவர்கள் நிழலைக் கண்டு களித்தனர். கூட்டத்தில் மயான அமைதி நிலவியது. பேசியவர்கள் கூட லேசாக முணு முணுத்தார்கள். அவர்கள் ஏற்கனவே கோஷ்டிகளாகப் பிரிக்கப்பட் டிருந்தனர். பொறுமையிழந்த விவசாயிகள் சிலர் தங்களுடைய கைகளை மண் வெட்டிக் கணைகளில் முட்டுக் கொடுத்த வண்ணம், நின்று கொண்டிருந் தனர். தலைவர்கள்.... அவ்வப்போது அவர்களைக் குழப் பத்தோடு நோக்கிய வண்ணம் நிம்மதியிழந்து காத் திருந்தனர். ஒவ்வொருவர் கழுத்திலும் ஓர் ஊதல் தொங்கிக் கொண்டிருந்தது.

சிலர் தங்கள் விரலின் நகங்களைக் கடித்துக் கொண்டிருந்தார்கள். மலையுச்சியின் மேல் சூரிய ஒளி கடைசியாக பிரகாசித்த பொழுது, அவர்க ளிடையே முணு முணுப்பு எழுந்தது. ஹுவாங்

வானத்தை நோக்கி, குழுவினரை விளித்தவாறு, "நாம் இப்போது புறப்படுகிறோம். ஒவ்வொரு கோஷ்டியும் தன்னுடைய தலைவருக்குப் பணிய வேண்டும். அவர்களுக்குத்தான் நாம் எப்போது எங்கே செல்ல வேண்டும் என்பது தெரியும். நாம் கீழே பள்ளமான பகுதிக்கு சென்று கொண்டிருக்கிறோம்; நன்றாக இருட்டும் வரை அங்கே காத்திருப்போம். வானம் நிர்மலமாக இருக்கிறது. அங்கே சிறு நட்சத்திர ஒளி தென்படலாம். எக்காரணத்தைக் கொண்டும் பிறர் கண்ணுக்குத் தென்படுவதைத் தவிர்த்து விடுங்கள். நாம் கீழே போகும்போது முற்றிலும் நிசப்தமாக இருக்க வேண்டும். உங்கள் தலைவர்கள் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைத் திட்டமாகச் சொல்வார்கள்" என்று கூறினான்.

ஈஸா 'ஏ' குழுவிலிருந்த ஜேம்ஸை கவலையோடு நோக்கினாள். குழுத் தலைவன் சூபாதாவைப் பின் தொடர்ந்து குழு நகரத் தலைப்பட்டபோது, அவள் ஜேம்ஸுக்கு கையால் சைகை காட்டினாள். அது வரையில் மிகுந்த உற்சாகத்துடன் இருந்த க்வென் பீதியடையத் தலைப்பட்டான். குழுவில் ஃபானும் சாங்ஃபூவும் பெண்களோடு இருந்தனர். அசாய் மத்தியக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருந்தான்.

சில நூறு கஜதூரம் கீழே சென்று, புழுதி மண்டிய சடினமான ஒரு நடைபாதையை அடைந்தார்கள் அவர்கள். குழுவினர் ஐம்பதிலிருந்து எழுபது கஜங்கள் இடைவெளி விட்டு பிரிக்கப்பட்டிருந்தபோதிலும், விஷயங்கள் பரிமாறிக்கொள்ளும் அளவுக்கு நெருக்கமாகவே இருந்தனர், மாலை

ஒளியை இருள் விழுங்கிக்கொண்டிருந்தது. அந்த மங்கும் இருளில் அவர்கள் செங்குத்தான மலைப்பகுதிகளைச் சூழ்ந்தனர். அவர்கள் மேலும் மேலும் கீழே சென்று கொண்டிருந்தனர். இப்பொழுது தாங்கள் எங்கே சென்று கொண்டிருக்கிறோம் என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை. வழியில் பிரிந்துவிடாமல் இருப்பதற்காக, ஒவ்வொருவரும் முன்னால் சென்று கொண்டிருந்தவர்களைப் பின்பற்றி மிகவும் கஷ்டப்பட்டு நடந்தார்கள். சிலர் கால் இடறி விழுந்தனர்.

ஃபான் தன் கைகளால் ஒரு பக்கத்தில் லெய்வாவையும் மற்றொரு பக்கத்தில் க்வென்னையும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருந்தான். அந்த அனாதைச் சிறுவன் மிகவும் பயந்திருந்தான்; பொங்கிவரும் விம்மலை அடக்கிக்கொண்டு அடிக்கொருதடவை விசும்பிக் கொண்டிருந்தான். அநேகமாக இந்த இடத்தில்தான் அவன் தனது பெற்றோர்களை இழந்து விட்டிருந்தான். ஈஸா தன் தந்தையை கவனித்துக் கொண்டாள். ஸ்வாட்டிடம் சிறுவன் ஸ்ப்ரௌட் ஒப்படைக்கப்பட்டான்.

மற்றக் கூட்டத்தினர் பார்வையை விட்டு மறைந்து விட்டார்கள் கீழே எங்கிருந்தோ மெல்லிய காலடிச் சத்தம் கேட்டது. பாதை குறுகியிருந்ததுடன் ஒரு பக்கத்தில் அகன்ற செங்குத்தான பாறை அனுகூலமாயிருந்ததால், கூடியவரையில் அவர்கள் ஒரே வரிசையில் சென்றனர்.

வழி திடீரென்று கீழிறங்கியது, அங்கு சிக்கலான ஒரு திருப்பம் வந்தது.

"ஜாக்கிரதையாக, மெதுவாகச் செல்லுங்கள்," என்று மாவோ பெங் கிசுகிசுத்தான்.

இதுதான் என்ட்செய் எனப்படும் தூக்கணங் குருவிச் செங்குத்துப் பாறை. அங்கிருந்த கரடு முரடான நடைபாதையில் பகல்வெளிச்சத்தில் இரண்டு அல்லது மூன்று பேர்கள் பக்கவாட்டில் ஒதுங்கிச் செல்லும் அளவுக்குத்தான் அது இருந்தது. பாறை கீழ்நோக்கி சுமார் ஐம்பது அடிவரை தொங்கியது. நடை பாதை வழுக்கும்போல் இருந்ததால், முன்னாலிருந்த குழுவினர் ஒரு மரத்தின் அடிப் பாகத்தில் ஒரு கயிற்றைக் கட்டி அதைப் பிடித்துக் கொண்டே கீழே இறங்கினர்.

மத்தியக் குழுவின் கடைசி மனிதன் கயிற்றின் அடிப்பகுதியை வந்தடைந்தபோது, ஈஸூவின் குழு வந்து சேர்ந்தது.

மாவோ பெங் சற்றே நின்றான். பின்னாலிருந்து விவரமின்றி ஒருவரை ஒருவர் தள்ளினார்கள். ஹைலோக்ஃபாங் செம்படவர் ஒவ்வொருவராகக் கீழே இறங்கினர். பெண்களைப் பொறுத்தவரை கயிற்றினால் ஒரு உபயோகமும் இல்லை.

"என்னைப் பின் தொடருங்கள். நாம் பாதை வழியே கீழே செல்லுவோம்," என்று மாவோ பெங் சொன்னான். க்வென் தன்னுடைய பெற்றோர்களை இழந்த அந்த இடத்தைக் கடந்தபொழுது, தன்னையும் மீறிய திகிலினால் நடுங்கி அழுதுவிட்டான்.

"நீங்கள் அவனைப் பிடித்துக்கொள்ளுங்கள்." என்று ஸ்வாட் தன் கணவனிடம் கூறினாள்.

சாங்ஃபூ சிறுவனைப் பிடித்துக் கொள்கையில் தன் உடம்பு புல்லரித்து நடுங்குவதை உணர்ந்தான்.

"செங்குத்துப் பாறைக்கு இடதுபுறமாகச் செல்லுங்கள், நானும் உங்களோடு வருகிறேன்" என்று ஃபான் மெதுவாக டூவானிடம் தெரிவித்தான்.

தன்னுடைய புஜங்களில் நடுங்கும் சிறுவனை அணைத்தவண்ணம் சாங்ஃபூ எச்சரிக்கையுடன் முன்னால் சென்றான். டூவானும் ஈஸுவும் பின்தொடர ஸ்வாட் சிறுவன் ஸ்ப்ரௌட்டோடு சென்றாள். டூவான் அப்போதும் மழைச் சட்டையை அணிந்திருந்தான். ஏனெனில். அவனுக்குக் குளிர் தாங்கவில்லை. ஈஸு, தன் தந்தைக்கு வேகமாக மூச்சு வாங்கியதைக் கண்டாள்.

"நீங்கள் சௌகரியமாக இருக்கிறீர்களா?" என்று வினவினாள்.

"நான் நன்றாக இருக்கிறேன்."

ஸ்வாட் கீழே விழும் அளவுக்கு நிலைகுலைந்தாள்.

"அவனைப் பலமாகப் பிடித்துக் கொள்" என்று டூவான் பயத்தினால் கத்தினான்.

அக்கணத்தில் திடீரென்று டூவான் தனதுமழைச் சட்டை தடுக்கிக் கீழே விழுந்து, விளிம்புவரை உருண்டு சென்றான். திடீரென்று ஒரு வாளியைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டதுபோல் கீழே தொப்பென்று சத்தம் கேட்டது.

இருள் கப்பியிருந்ததால், அது எவ்வாறு நேர்ந்தது என்று ஈஸுவால் பார்க்கமுடியவில்லை. ஃபானும் லெய்வாவும் "ஐயோ!"என்று அலறினார்கள்.

"என்ன நடந்தது?" என்று ஃபான் விசாரித்தான்.

ஈஸுா துக்கத்திலும் பயத்திலும் பேச முடியவில்லை. அவளால் அதை நம்பவே முடியவில்லை.

சரி! "இப்பாது சுதாரித்துக் கொள்ளுங்கள். நாம் கீழே சென்று பார்ப்போம்," என்றான் ஃபான்.

ஈஸுாவின் நெஞ்சு உலர்ந்திருந்தது. யாரோ கையினால் தன் தொண்டையைஅழுத்துவதுபோல் ஏதோ ஒன்று அவள் தொண்டையை இருக்கியது.

"செங்குத்துப்பாறையைப் பிடித்துக்கொண்டு என் பின்னே மெதுவாக வா!" என்று லெய்வாவிடம் ஃபான் கூறிக்கொண்டே, ஈஸுாவைப் பிடித்துக் கொள்வதற்காக முன்னேக்கிச் சென்றான். ஸ்வாட் முன்னால் வெகுதூரம் சென்றிருந்தாள்; இங்கு என்ன நடந்ததென்பதை அவள் கவனிக்கவில்லை.

சில நிமிஷங்களில் அவர்கள் மற்றவர்களோடு சேர்ந்தனர். கீழேயிருந்தவர்கள் தொப்பென்ற ஒலியைக் கேட்டு அந்தக்குறை இருளில் பாய்ந்தோடி வந்தனர். முழு இரவைக் காட்டிலும் இந்த அரை குறையான இருளில் எந்த ஒரு விவரங்களையும் பார்ப்பது கடினமாக இருந்தது.

எல்லாமே மங்கலாகத் தெரிந்தது. அசைவற்று கிடந்த டுவானுடைய உடம்பைச் சிலர் சூழ்ந்து கொண்டனர். டார்ச் விளக்கைத் தன் கைகளால் மூடியவண்ணம் மாவோபெங் அதை இறந்தவனின் மீது அடித்தான்.

டுவான் குப்பு[illegible]ழுந்து கிடந்தான். விழுந்து அடிப்பட்டதி[illegible]டைய தாடைகள்நொறுங்கி

முக அடையாளம் கண்டுபிடிக்க முடியாதபடி குதறி விட்டது. விளக்கு வெளிச்சத்தில் ரத்தத் துளிகள் அவன் தாடியின்மேல் மினுமினுத்தது. அவனுடைய நெற்றியிலும் நெற்றிப் பொட்டிலும் இருந்து அப் போதும் ரத்தம் பீறிட்டுத் தரையில் வழிந்து கொண்டேயிருந்தது. அவனுடைய கைகள் கும்பிடும் நிலைமையில் வெளியே நீட்டிக் கிடந்தன.

சோர்ந்து நிலை குலைந்த ஈஸா கீழே மண்டியிட்டு அமர்ந்தாள். அவளுடைய கை தன் தந்தையின் தலைக்குப் பின்னால் சென்றது. அவரது கழுத்து முறிந்திருந்தது; "அவரைப் புரட்டிப் பரிசோதிக்க முயற்சிப்பதில் இனி அர்த்தமில்லை. இயந்திரம் போல் நகர்ந்து 'அவள் தன் தந்தையின் நீட்டப்பட் டிருந்த புஜங்களை நிமிர்த்தினாள்; பின்பு அவர் உடலின் மீது விழுந்து கதறி அழுது புலம்பலானாள்.

"சரி, போதும்! அழாதீர்கள். அவர் முடிவை அடைந்துவிட்டார். இனி ஒன்றும் செய்யமுடியாது" என்று மாவோபெங் மெதுவான குரலில் கூறினான்.

அவன் ஈஸாவின் துவண்ட உடலைப்பற்றி இழுக்க வேண்டியிருந்தது. ஃபான் அவளைப் பிடித்துக் கொண்டான். அவள் அப்போதும் துடித்துக்கொண் டிருந்தாள்.

"நான் மிகவும் வருந்துகிறேன். ஆனால் நாம் மேலும் செல்லவேண்டியிருக்கிறது" என்று மாவோ பெங் சொன்னான்.

சிறுவன் ஸ்ப்ரெளட் க[illegible]போய் பேச்சற்று இருந்தான். க்வென் மற[illegible] நடுக்கத்திற்கு

உள்ளானுன். ஆனால், சாங்கூபூ அவனை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருந்தான்.

பிறகு ஈஸு ஒருவாறு சுதாரித்துக்கொண்டாள். சிறுவன் ஸ்ப்ரௌட்டைப் பிடிப்பதற்காக கைகளை நீட்டி, "தாத்தா இறந்துவிட்டார்; நாம் இவ்விடத்தைவிட்டு உடனே அகலவேண்டும் வா!" என்று உரைத்தாள்.

அதற்குப் பிறகு அவள் வாய் திறந்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. மௌனமாக அழுது கொண்டிருந்தாள்.

மரணம் ஒன்றுதான்—மனிதனை பயம்-ஆசை-நம்பிக்கை ஆகிய யாவற்றினின்றும் பிரிக்கும் சக்தி வாய்ந்தது; அது முடிவானது-மாற்றமுடியாதது. அதை நாம் ஒன்றும் செய்யமுடியாது. போகட்டும்! அவரை முறைப்படி புதைக்கக்கூட நமக்கு நேரமில்லை!"

லெய்வா மெதுவாக ஈஸுவின் பக்கம் வந்து அவளுடைய கையை அமைதியாக அழுத்தினுள்.

"நாம் இதை ஜேம்ஸுக்குத் தெரியப்படுத்தக் கூடாது" என்று லெய்வா சுருக்கமாகச் சொன்னுள்.

ஈஸு தலையை இணக்கமாக அசைத்தாள்.

இந்நேரம் அவர்கள் சமதளத்திலிருந்து சுமார் இருநூறு கஜம் மேலே சென்றிருக்கவேண்டும். இருளின் காரணமாக தூரத்தை அவர்களால் கணிக்கமுடியவில்லை; தூக்கணங்குருவிப் பாறைக்குக் கீழே தரை பூராவும் கரடு முரடான கூழாங்கற்கள் மண்டிக் கிடந்தது. [illegible] ரா ஒருவன் தனது தலையை ஒரு மரத்தில் [illegible] ண்டான். அவர்கள் ஒரு

திருப்பத்தைச் சுற்றி வரும்போது சுமார் ஆயிரம் கஜம் தூரத்திலிருந்த ஒரு காவல் நிலையத்திலிருந்து இருளைக் கிழித்துக்கொண்டு ஓர் ஒளி அவர்கள் பக்கம் வீசியது. அவர்கள் ஒருவர் பின் ஒருவராக மேலே நோக்கினர். நிலையத்துக்குப் போகும் சாலையின் பக்கமாக இருந்த சிறு வாய்க்காலை நோக்கிப் பாதித் தூரம்வரை வந்திருந்தார்கள். முன்னால் சென்ற இரு பிரிவினரும் ஏற்கனவே அங்கு நின்றிருந்தனர்.

அங்கே எழுந்த முணுமுணுப்புக்கு 'உஸ்' என்ற சத்தம் பதிலளித்து அடக்கியது. அவர்கள் அங்கே சிறிது நேரத்தை கழிக்கவேண்டியதாயிற்று. இருள் கவிந்த வானக் கிண்ணத்தில் விண்மீன்கள் ஒளிரத் தொடங்கின.

சுமார் பத்து நிமிஷங்கள் கழித்து மீண்டும் ஸர்ச் விளக்கு தெரிந்தது; அவ்விளக்கு முதலில் முன்னும்பின்னுமாக பலதடவை மாறிமாறி வீசியது பின்னர் அவ்வொளி கீழ்த்திசையிலுள்ள நதியை நோக்கிப் பாய்ந்தது. அவ்வொளியினால் பிணைக்கப்பட்டு அவர்கள் கண்கள் யாவும் அவ்வொளியைத் தொடர்ந்து அதிலேயே லயித்திருந்தன.

வெகு விரைவில் அவ்வெளிச்சம் சாலையை நோக்கி நகர்ந்தது; அவ்வொளியில் ராணுவ உடை அணிந்த உருவங்கள் சில அவர்கள் இருந்த திக்கை நோக்கி வந்துகொண்டிருப்பது தெரிந்தது. சாலை வளைவாக இருந்த இடத்தில் அந்த ரோந்துப் படையினர் இருளில் மறைந்தது [illegible]ணுக்குப் புலப்படவில்லை; அவர்கள் நீர்க்கா[illegible]க்கி வந்துகொண்

டிருந்தார்கள். சீக்கிரமே கீழே அவர்கள் இருக்குமிடத்தைக் கடந்து செல்வார்கள். ஒளிக்கீற்று விட்டுவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. லேசான உரையாடலோடு கலந்த காலடியோசைகள் கேட்டன; மேலே இருந்த குழுவினர் மூச்சைப் பிடித்துக்கொண்டு மௌனமானார்கள்.

டார்ச் விளக்கு மீண்டும் மலையுச்சியிலிருந்த இடங்கள் மீது வீசியபடி நகர்ந்தது. அப்பால், சுற்றிலும் இருந்த இலைத் தொகுதிகளினூடே கண் கூசும் ஒளிக்கீற்றை அவர்களின் முகத்தில் பரப்பிய வண்ணம் குழுவினருக்கு அப்பால் கடந்து வந்தது. கடைசியாக அவர்களுக்கு இடதுபுறமிருந்த சம வெளிப்பகுதியில் நிலைத்து நின்றது.

அப்போது ரோந்துப் படையினர் சாலையின் ஏற்றத்தைக் கடந்துவிட்டனர்.

முதல் குழு, சரிவைச் சுற்றி மரங்களைக்கடந்து புதர்களின்மேல் மெள்ளக் கால் வைத்து நகர்ந்தது. ஒளியினால் கலங்கிய தங்களுடைய கண்களை ஒருவாறு சரிசெய்துகொண்டு அந்தமங்கிய ஒளியில் பார்க்கும் போது—அ[illegible] ஒரு பயங்கரக் காட்சியைக் கண்டனர். தூக்கிலிடப்[illegible] அ[illegible]களின் ஆவிகளைக்கொண்ட ஒரு கூட்டம் மந்திர[illegible] வொருவனும் தன் கழுத்தைச் சுற்றி வெள்ளைக் கழுத்துப் பட்டையுடன் காணப்பட்டான். அந்த வெ[illegible]ள்ளை வட்டம் நகர்ந்தது; அல்லது மேலும் கீழும் [illegible]ல மட்டங்களில் மிதந்தது எனலாம்.

டார்ச் விள[illegible]ரி திரும்பவும் நகர்ந்தது. அதனுடைய ஒ[illegible] இருளும் அவர்களின் முன்

னேற்றத்தைக் கணக்கிட வசதியாக இருந்தது. அவர்கள் நின்றிருந்த இடம் சிற்றருவியிலிருந்த வளை விஞல் பாதுகாப்பாக இருந்தது.

முதல் குழு சாலையை அடைந்து, அதைத் தாண்டி எதிரில் இருந்த புதர்களுக்கும் பாறைகளுக் கும்உள்ளே புகுந்து சென்றது. இப்பொழுது அவர் களால் அந்த வெள்ளை வட்டத்தைக்கூடப் பார்க்க முடியவில்லை.

முதல் குழு வாய்க்காலுக்கு மேலாக ஓர் இடத் துக்கு சென்றுவிட்டது என்பதை ஹூவாங் நிச்சயித் தான். உடனே எழுந்து நின்று தன்னுடைய கூட்டத் தினரை தன்னைத் தொடர்ந்து வரும்படி அடை யாளம் செய்தான்.

இதுதான் மிகவும் பலம் வாய்ந்த குழு; அதனிட மிருந்த மூன்று துப்பாக்கிகளும் பதுங்கியிருந்து தாக்குவதற்கு வசதியாக இருந்தது. குழுவினர் பலர் தலைப் பாகைகளும் கையில் ஆயுதங்களும் வைத்திருந்தனர்.

"மெல்லப் பேசுங்கள்; அப்பே [illegible] ாலையின் மேட்டில் துப்பாக்கி சுடும் [illegible] கேட் பீர்கள். ஆனுல் ஊதல் [illegible] ப்வரை [illegible] டக் கூடாது. நீங்கள் கீழே ப [illegible] நும் பொழுது ஒவ்வொரு வருடைய கைகளையும் ப [illegible] றிக்கொள்ளுங்கள்."

மெதுவாக அக்கூட்ட [illegible] குழுமியது; [illegible] அந்தத் திக்கில் திரும்பிய [illegible] அவர்கள் அமைதி யாக இருந்தார்கள். இலை [illegible] சலப்பட்டுமே கேட்டது. அவ்வப்போ [illegible] ங்கல் உருண்டு

வாய்க்காலில் விழுந்தது. ஆனால் அதன் ஒலி ஐம்பது கஜத்திற்குமேல் கேட்கவில்லை.

மத்தியிலிருந்த குழு சாலை சிறிதளவு மட்டமாக இருந்த இடத்துக்கு நேரே முன்னேறிச் சென்றது. அங்கே வசதியாக பெரிய பாராங் கற்கள் இருந்தன. அவற்றிற்குப் பின்னால், ஆட்கள் அப்படி அப்படியே அமர்ந்துகொண்டனர்; அப்பொழுது அவர்கள் சாலைக்குப் பக்கத்தில் இருந்தனர். அருகே சிற்றாறு ஒன்று சலசலவென்ற சத்தத்துடன் ஓடியது.

'மூன்று ராஜ்யங்கள்' என்ற கதையில் வரும் தளபதி க்வான்குங், குதிரையில் செல்லும்போது ஒரு மலைக் கணவாயின் குறுக்கே கட்டப்பட்டிருந்த கயிற்றில் சிக்கி, இறந்துபோன சம்பவத்தை ஞாபகப் படுத்திக்கொண்ட அசாய் சாலையைக் கடப்பதற்கு அனுமதி கோரினான்.

அவன் மேலே தாவி, ஒரு தலைப்பாகையை மரக் கிளையில் சுற்றிக்கட்டி, முடிச்சுகள் நன்றாக பிணைக்கப்பட்டிருக்கிறதாவென்று நிச்சயப்படுத்திக் கொண் [illegible] வுபடியும் கீழே தாவி சாலையின் கீ [illegible] வில் ஒளிந்துகொண்டான்.

[illegible] தகளும் இங்கே தங்கிக் [illegible] ரஙுங்க... [illegible] ழே செல்கிறோம். இரண்டு ஆட்கள் உங்களோடு [illegible] யார்கள். ஆனால், சத்தம் [illegible] ாதீர்கள்!" [illegible] மாவோ பெங் மெதுவான கு [illegible] லில் கூறினா [illegible]

[illegible] து நிமி [illegible] கழித்து, ஒரு டலத்த கீச்சுக் குரல் [illegible] ந்தது. கத்தியால் குத்தப் பட்டவ [illegible] இருந்தது அது. அது

சாலைக்கு மேல் பக்கம் சிகரத்துக்கு அப்பால் கொஞ்ச தூரத்திலிருந்து வந்தது. அதையடுத்து மற்றுமொரு அவலக் குரல், அதைத் தொடர்ந்து துப்பாக்கி சுடும் ஒலிகள் கேட்டன!....

ஸர்ச்லைட்டு, சாலையை நோக்கித் திரும்பியது. ரோந்துப் படையினர் இரண்டு போலீஸ் நாய்கள் பின் தொடர பாய்ந்துவந்துகொண்டிருந்தனர். காவல் நிலையத்தில் கூச்சல்கள் எழுந்தன. ஏழு அல்லது எட்டு ஆட்கள் வாய்க்காலை நோக்கி ஓடிக் கொண்டிருந்தனர். மூன்றாவது ஓலம் இறந்து கொண்டிருந்த மனிதனின் புலம்பலாகக் கேட்டது.

போலீஸ் நாய்களில் ஒன்று மிகுந்த வேகத்துடன் முன்னேறி வந்து கொண்டிருந்தது. ஃபான் தன்னுடைய உலோகப் பெட்டியைத் திறந்தான்; நாய் அதைச் சட்டை செய்யாமல் நேராக வந்துகொண்டிருந்தது. ஒருகால் அந்தப் புலிச் சாணத்தை அது மோப்பம் பிடிக்கவில்லையோ, என்னவோ? எவ்விதச் சத்தத்துக்கும் காதுகொடுக்காமல் நேராகப் பாய்ந்து வந்தது. இரண்டாவது [illegible] மோப்பம் பிடித்து உணர்ந்து [illegible]க் குரைத்தபடி அப்படியே [illegible], முதல் நாய் முன்னால் [illegible] [illegible]ற்றிலும் எச்சரிக்கை கொண்டே ஒன்றும் புரிய[illegible] [illegible] அதை[illegible] யோடு நோக்கிய வ[illegible] தொடர்ந்தது.

இப்போது மலைஉச்சியில் [illegible] [illegible]வியை நாடி பலவீனமான அபய[illegible] [illegible]பொழுது நாய்கள் வெறி கொண்டு [illegible]டரென்று

மனிதனின் கூக்குரலும் நாயின் குரைப்பும் நின்று விட்டன. மனிதனோ அல்லது நாயோ இரண்டில் ஒன்று தீர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

மலைச் சிகரத்தை நோக்கி ஓடிவந்த ரோந்துப் படையினர் அப்பொழுது நேர்கீழாக அவர்களைக் கடந்து சென்றுகொண்டிருந்தனர்.

"செல்லுங்கள்!" என்று ஹாவாங் சொன்னான். கறுப்பு உருவங்களின் கூட்டம் ஒன்று இருளிலிருந்து தாவி வீரர்களின் மேல் பாய்ந்தது.

அசாய்க்கு இப்பொழுது கொண்டாட்டம்தான். தன்னுடைய தலைப்பாகைக் கயிற்றை, மேலும் கீழும் போட்டு சுண்டிக்கொண்டிருந்தான். தன் முன்னால் ஒரு வீரன் மேலே ஏறி வருவதைக் கண்டபொழுது அவன் கயிற்றை இழுத்து "அதோ!" என்று கத்தினான்.

அந்த ஆள் இடறி விழுந்தான். ஊதல் ஒலித்தது. நிலையம் இருந்த திசையில் மூன்று துப்பாக்கி வே[illegible]னை. திடீரென்று ஸர்ச்விளக்கு [illegible] இடம் முழுவதையும் இருள் [illegible] இருளினூடே ஜேம்ஸும் [illegible]த்தில் ஒருவருக்கொருவர் [illegible]த்திலிருந்து வந்துகொண் [illegible] ஈஸாவும் மற்றவர்களும் [illegible] வெடிப்பதைக் கேட்டனர். இத[illegible] அருகாமையில் ஆயுதங்கள் உரா[illegible] க் குரல்களும் மரண ஓலங் களும் ப[illegible]ன.

பிறகு எங்கும் நிசப்தம் நிலவியது. வலது பக்கத்தில் இரண்டு துப்பாக்கி வேட்டுக்களை அடுத்து ஒளிக்கீற்றுகள் தென்பட்டன. பிறகு, சிறிதுசிறிதாகக் குறைந்து துடித்து அடங்கும் ஓலம்போல் அதுவும் மலைகளில் மங்கி அணைந்தது.

சாலையின் தலைப்பிலிருந்து மெதுவாக இரண்டு ஒளிப் பிழம்புகள் வந்தன. அங்கேதான் ஆட்கள் எதிரிகளை மடக்குவதற்காக வரிசையாக நிறுத்தப் பட்டிருந்தனர்.

ஹாவாங் சாலையின் பக்கம் விளக்கை வீசினான். இறந்தவர்களும் காயமுற்றவர்களும் தரையில் புரண்டுகொண்டிருந்தனர். நீட்டிய தங்கள் கைகளின் பக்கத்தில் துப்பாக்கிகளை வைத்தபடி சிலர் கிடந் தனர். ஏழு அல்லது எட்டு படை வீரர்கள் அடி பட்டுக் கிடந்தனர். குரல்வளை நசுக்கப்பட்டோ, கத்தியால் குத்தப்பட்டோ அல்லது மூச்சையடையும் அளவிற்குத் தாக்கப்பட்டோ அவர்கள் கிடந்தனர். அவர்களில் வெள்ளைக் கழுத்துப் பட்டை அணிந்த சிலர் செயலற்று சலக்கத்து... ...ர்ந் திருந்தனர்.

"இப்பொழுது எல்...
என்று தன்னுடைய மூர...
முகத்தில் தேய்த்தவண்ண...

இவையெல்லாம் நான்...
களில் நடந்து முடிந்துவிட்ட...

அவன் தன்னுடைய ... ...றை
ஊதினான். உடனே பல ... ...மத்திய

பாகத்தை நோக்கி ஒருங்கு சேர்ந்து ஒளி வீச ஆரம்பித்தன.

ஜேம்ஸ் வந்துசேரவில்லே.

"அசாய், எழுந்திரு. இனி ஒருவரையும் சுருக்கு மாட்டவோ அடித்து வீழ்த்தவோ, வேண்டாம். வா, தம்பி! போதும்!" என்று ஹூவாங் கட்டளையிட்டான்.

மெதுவாக, ஆனுல் விருப்பம் இல்லாமல் அசாய் சேறு அப்பிக்கொண்ட தன்னுடைய கடுகடுத்த முகத்துடன் வாய்க்காலே விட்டு வெளியே வந்தான்.

படை வீரர்கள் அநேகமாக எல்லோரும் இறந்துவிட்டனர். சிலரது கழுத்தைச்சுற்றி அப்போதும் கறுப்புத் தலேப்பாகைகள் தொங்கிய வண்ணம் இருந்தன. அகதிகளில் சிலரும் காயமுற்றிருந்தனர். படை வீரர்கள் ஒன்றும் புரியாமல் திகைத்தனர். அவர்களுக்குப் போர்புரிய சந்தர்ப்பமே கிடைக்கவில்லே.

த... ...வர்களிலே அந்த இரண்டு நாய்
க... ...தல் நாய் குரல்வளே நெறிக்கப்
...வது நாய் பயத்தால் நடுங்கி
...ம் ஓடி முடிவில் தரையில்
...து. யாரோ ஒருவன் அத
...ாக்கி ரவையைப் பாய்ச்சி

...நந்து தன்னே நோக்கி வரும்
இரு... ...ப்பாக்கி வேட்டு போட்டீர்
கள்?" ... ...ஹூவாங்.

"எதிர்ப்பக்கத்திலிருக்கும் ரோந்துப் படை ஒன்று எங்களைச் சுட முயன்றது. நாங்களும் பதிலுக்குச் சுட்டோம்!"

மற்றவர்கள் வந்தபோது ஜேம்ஸூம் சூவும் ஏன் திரும்பவில்லை என்று ஹூவாங் வியப்பும் கவலையும் அடைந்தான். காயமடைந்தவர்கள் நடந்துவர ஒருவருக்கொருவர் உதவி செய்தனர். கால் ஊனமுற்ற ஒருவன் இரு ஆட்களின் தோள்களைச் சுற்றிக் கைகளைப் போட்ட வண்ணம் நடந்தான்.

ஃபான் தனது கைவிளக்கை தாராளமாக உபயோகித்த வண்ணம் பெண்கள் இருந்த இடத்துக்கு வெகு விரைவில் வந்து சேர்ந்தான்.

"இப்போது எல்லாம் முடிந்துவிட்டது! வாருங்கள்!" என்று அவன் சுருக்கமாகக் கூறினான்.

"ஜேம்ஸைப் பார்த்தீர்களா?" என்று ஈஸூ கேட்டாள்.

"இல்லை, அவர் கீழே நிலையத்துக்கு அருகாமையில் இருக்கிறார்."

ஈஸூ, தன் கைகளை மார்பி ... பித்துக் கொண்டாள். திணறிவரும் ... க்கு பவள்போல.

"அவர்கள் இப்போ...

என்று ஃபான் சொன்னான்

சிறுவர்களான க்வெடு...

ஃபானைப் பயத்தால் நோ... க மாக இணைந்து நின்றனர்.

"நான் செய்ய வேண்ட... டா?"

என்று ஈஸூ கேட்டாள்.

"இல்லை; நாங்கள் கைதிகளைப் பிடித்துச் செல்ல வில்லை!"

"நாம் எப்போது கீழே போகப்போகிறோம்?" என்று கேட்டாள் லெய்வா.

"இப்போது இல்லை. ஊதல் ஒலி மூன்றுமுறை ஒலிக்கும் வரை நாம் இவ்விடத்திலேயே காத்திருக்க வேண்டும்!"

கீழே சாலை சமதளமாக அமைந்த இடத்திற்கு கூட்டத்தினர் வந்து சேர்ந்தனர். சிறிதுநேரத்துக் கெல்லாம், இருளிலிருந்து ஜேம்ஸ் வெளியே வந்தான்.

"ஹலோ, அதோ! இருக்கிறார்கள்!" என்று அவன் சொன்னான்.

"எங்கே?"

"ஒரு வேவுப்படைவீரன் அவரைப் பிடித்து விட்டான். நான் அவரைப் பத்திரமாக மேலே இழுத்துவர வேண்டியிருந்தது. ஜாக்கிரதையாக இருந் [illegible] மக் சுற்றிலும்கூட வேவுப் படை யி [illegible]"

[illegible] ணைந்தன. ஜேம்ஸ் அவர்களை [illegible] ள்ள சாலையோரத்துக்கு

[illegible] ல் சென்று வெளியே காற் [illegible] இருங்கள். வேவுப் படை யின [illegible] ாள்ளுங்கள். பிறகு நிலையத் திற் [illegible] ரகக் காத்திருங்கள்" என்று ஹ [illegible] வா

ஹுவாங் மண்டியிட்டு அமர்ந்து சூவின் உடம்பின்மீது விளக்கை அடித்தான். சூ முகத்தைக் கவிழ்த்த வண்ணம் படுத்திருந்தான். அவன் முதுகில் இரண்டு இடங்களில் குண்டுகள் துளைத்து இருந்தன. அவனுடைய மேற் சட்டை ரத்தத்தில் தோய்ந்திருந்தன. ஆனால் அவன் அப்போதும் சுவாசித்துக் கொண்டிருந்தான். ஹுவாங்கின் தோள்களின் அருகாக ஜேம்ஸ் குனிந்து பார்த்தான்.

"பிறகு ஜேம்ஸ் சொன்னான்;—துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டவுடன் நான் தரையில் விழுந்து விட்டேன். அது குதிரைப்படை வீரர்கள் உபயோகிக்கும் சிறு கைத்துப்பாக்கி போன்று ஒலித்தது. சூ கைகளை முன்னால் நீட்டியபடி ஓடிவந்து தடுமாறி சுருண்டு தரையில் விழுந்ததை நான் பார்த்தேன்!"

அவர்கள் சூவை மெதுவாக நிலையத்துக்குத் தூக்கிச் சென்றார்கள். அப்போது ஹுவாங் மெதுவாக என்னிடம் "நாம் சிறிது நேரம்கூட தாமதிக்கலாகாது. இந்தத் துப்பாக்கி வேட்டுகள் லின்மஹாங் வரை எட்டக்கூடும். நாம் சு[illegible]யாகக் கடந்து செல்லும்போது ப[illegible]து நெருங்கி வருவோரைத் தடு[illegible] நிறுத்தி வைக்கிறேன்" எ[illegible]

சூ சிறிதளவு கூட ச[illegible] பொறுக்காமல் முனகக்கூ[illegible] உயிர் வேகமாகப் பிரிந்து செ[illegible] அவனை நிலையத்தின் பக்கத்தி[illegible] [illegible]யமது வாகக் கிடத்தினார்கள். அவ[illegible] [illegible]ந்தத் தினால் குளிர்ந்து, பயங்க[illegible] [illegible]டன. அவன் அமைதியாக உயிர் [illegible]

கூட்டத்தினர் விரைந்து வந்துகொண்டிருந்ததைப் பார்த்து, மிகுந்திருந்த வீரர்களும் தப்பி ஓடிவிட்டார்கள்! தங்கள் துப்பாக்கிகளை இழுத்துக் கொண்டு நெல் வயல்களில் புகுந்து விழுந்தடித்து ஓடிக் கொண்டிருந்த இரண்டு உருவங்களை நமது ஆட்கள் விளக்கை அடித்துப் பார்த்தார்கள்.

மேலே இருந்த பெண்கள் இப்போது ஊதுகுழல் மூன்று முறை ஒலித்ததைக் கேட்டு கீழே இறங்கி வரத் தொடங்கினர். சாங்ஃபூ, க்வெனைத் தூக்கிக் கொள்ள மற்றொருவன் ஸ்ப்ரௌட்டை தன்னுடைய முதுகில் தூக்கிக் கொண்டான்.

ஃபானும் லெய்வாவும் ஈஸுவும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்தனர்.

ஜேம்ஸைப் பற்றிய கவலையினாலும், பயத்தினாலும் ஈஸுவின் கால்கள் சில சமயம் தள்ளாடின.

நிலையத்துக்குச் செல்லும்பொழுது வழியில் அவர்களை நோக்கி ஜேம்ஸ் ஓடிவருவதைக் கண்டார்கள்.

...ளைப் பார்க்க முடியவில்லை; ஆனால்
...ர்த்தான்.
...று அவன் அழைத்தான்.
...நக்கிறேன்! ஜேம்ஸ்!"
...சி அவளுடைய தொண்
...தியது. அவள் ஓட விரும்
...லை.
...ரியா?" என்று அவளை நோக்கி
வந்... ...ன் ஜேம்ஸ்.

அவனுடைய கைகள் தன்னைச் சுற்றி அணைத்திருப்பதை உணர்ந்தாள் ஈஸா. அடக்கமுடியாமல் அழுகை பீறிட்டுக்கிளம்பியது.

ஈஸா தன்வசமிழந்து அப்படியே அவன்மீது சாய்ந்து விட்டாள். ஜேம்ஸ் அவளது உடலைத் தாங்கியபடி நடக்க, அவர்கள் இருவரும் நிலையத்தை நோக்கித் திரும்பினர்.

"என் அப்பா இறந்துவிட்டார்!" என்று அவள் சொன்னாள்.

"உண்மையாகவா? எப்பொழுது? ஏன் என்னிடம் சொல்லவில்லை?"

"நீங்கள் சொல்வதற்கு முன்னால் நான் சொல்ல விரும்பவில்லை."

அவர்கள் நிலையத்தை அடைந்தபோது மற்றவர் யாவரும் அங்கு வந்து சேர்ந்து விட்டனர். அவர்கள் தாண்டவேண்டிய எல்லை இன்னும் நூறு கஜம் தள்ளியிருந்தது.

அங்கே பூராவும் இருள் மண்டிக்கிடந்தது. சிறு வாயில்களையுடைய இரண்டு ... வீடுகள் இருந்தன. குடியானவர்களின் ... ய் பாக்கிச் சூட்டையும் வெடிச் ... தால் தங்கள் வீட்டின் ... கொண்டு உள்ளேயே இரு...

இப்பொழுது கெடுபிட... களும் பெண்களும் நதியை ... சென்றனர். சாங்லீபூவும் ஊ... ளும் சிறுவர்களை கீழே இறக்கிவிட...

அக்கரைப் பிரதேசம் இரவின் மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தது. ஹூவாங் தன் ஆட்களில் அறு வரை ஆற்றைத் தாண்டிச் சென்று நதிக்கரையோரமாக மேலே சென்று தங்களுக்கு வலதுபுறமிருந்த கரையில் தங்களை தாக்க வருபவர்களைத் தடுக்க எச்சரிக்கையாக இருக்கும்படி கட்டளையிட்டான்.

அவ்வாட்கள் முள் வேலிக் கம்பிகளை கத்திரியால் வெட்டுவதில் முனைந்திருந்தனர். செம்படைவர்களில் ஒருவன் கயிற்றுடன் நதியில் இறங்கிஅக்கரை சென்று கயிற்றை முடிபோட நீந்திச் சென்றான். அந்தக் கயிற்றை அடையாளமாகக்கொண்டு தண்ணீரில் இறங்கிச் செல்ல அது உதவியாக இருக்கும். நதியின் ஆழம் பருவகாலத்துக்குத் தகுந்தபடியும் அலைகளாலும் இடத்துக்கு இடம் வித்தியாசமாக இருந்தது. நதியின் நடுமையம் ஓர் ஆளின் கழுத்தளவுக்கு ஆழமாக இருந்தது. எதிர்கரையிலிருந்த சிமெண்டுக் கம்பத்தில் கயிற்றைக் கட்டித் தொங்கவிட்டான் ஒருவன். ஆற்றின் கரைகள் வழவழப்பாகவும் சரிவாகவும் இருந்தது.

"[illegible]ரும் வந்தாகிவிட்டதா?" என்று ஒ[illegible]

[illegible]டை எடுத்துப்பற்றவைத்து

[illegible]ம் இரண்டு ஆட்களை இழந்[illegible]ந்த குழுக்களைச் சோதனை[illegible]ரல்லிக்கொண்டான்.

[illegible]ளும் நங்கையரும் குழந்தைகளு[illegible]டும். ஏனையோர் அவரவர்

களின் இஷ்டப்படி நீந்தலாம், மூழ்கிச்செல்லலாம்; அல்லது கயிற்றைப்பற்றி நடக்கலாம். அக்கரை போய் சேர்ந்துவிட்டால் பிறகு நீங்களே ராஜா, அப்பால் உங்கள் இஷ்டப்படி நடக்கலாம்.

எல்லோரும் பிரிந்து நின்று உங்களால் இயன்ற வரை தலையை மூடிக் கொள்ளுங்கள். வைகறைக்கு முன் பத்திரமான மறைவிடத்தைத் தேடி அடையுங்கள். எல்லோருக்கும் ஆண்டவன் அருளால் நல்லதிர்ஷ்டம் உண்டாவதாக!"

குழுவினரிடையே நன்றியின் முணுமுணுப்பு பலமாக எழுந்தது.

"அவரவர் தங்களது பிளாஸ்டிக் பைகளை எடுத்து பொருள்கள் நனைந்து போகாமல் இருக்க அதில் வைத்துக் கொள்ளுங்கள்" என்று ஃபான் பெண்களிடம் சொன்னான்.

துப்பாக்கி உறையினின்றும் தன்னுடைய துப்பாக்கியை எடுத்தான் ஜேம்ஸ். இன்னமும் இரண்டு குண்டுகள் மிகுந்திருந்தன என்பதை அவன் நினைவு கூர்ந்தான். அவனிடம் சிக[illegible] இல்லை, ஆயினும் தீப்பெட்டியைச் [illegible]யில் வைத்தான்.

"இரண்டொரு சிக[illegible] இயலுமா? எல்லையைச் [illegible] தேவைப்படும்" என்று ஹ[illegible]டான்.

பிறகு ஈஸ்டவை நோக்கி[illegible]ன்னை முதுகில் தூக்கிச்சென்று [illegible]விடு

கிறேன். பிறகு, திரும்பிவந்து லெய்வாவை அழைத்து வருகிறேன்" என்றான் ஜேம்ஸ்.

கயிற்றை ஒரு கையினால் பற்றிக்கொண்டு ஈஸாவுடன் ஜேம்ஸ் தண்ணீரில் நடந்தான். லெய்வாவும் அம்மாதிரியே அவனைத் தொடர்ந்தாள். அப்போது ஷான்டாக் சகோதரிகள் மூவரும் தாங்களாகவே மகிழ்வுடன் ஆற்றைக் கடந்து கொண்டிருந்தார்கள்.

நடு ஆற்றில் லெய்வா இரு கைகளாலும் ஜேம்ஸின் கழுத்தைக் கட்டிக்கொண்டு "மறந்துவிடாதீர்கள். நாளை இரவு எங்களோடு விருந்துண்ண உங்களை அழைத்திருக்கிறோம்" என்றாள்.

"எங்கே?"

"நாங்கள் உங்களைத் தேடி வருவோம்; எங்களிடம் உங்கள் விலாசம் இருக்கிறது."

"3.3320-க்கு டெலிபோன் செய்தால் மிக நல்லது!"

எதிர்க்கரையை அடைந்ததும் ஜேம்ஸ் திரும்பிப் பார்த்துவிட்டு ஈஸாவை தொப்பென்று கரையில் இறக்கி... ...ப் பத்திரமாகக் கரையேறும்படி ஒ...

...ய்வா.

...கரைமீது அமர்ந்து ஓய்வு ...' அவன் சட்டையில் தண் ...முழங்கைகளில் சொட்டிக் ...ைறக் கடந்த சிரமத்தினால் ...ஃபோன் ஈரத்தைப்பற்றிக் ...ாமல் என்ன நிகழ்ந்தது என்

டெ... மிகவு... கூடச்...

பதைத் தெளிவாக அறிந்துகொள்ள முனைந்தான். தப்பிச்செல்ல வேண்டுமென்பதே அவர்களது கனவாக இருந்திருந்தது; அதில் வெற்றிபெற்றுவிட்டார்கள். ஆனால் இப்பொழுது அவர்களால் அதை நம்பவே முடியவில்லை. காலம் நின்றது; அவன் சிந்தனையும் நின்றது. நிச்சயமாக மகத்தான ஏதோ ஒன்று நடந்திருக்கிறது; ஆனால் என்ன நடந்திருந்தது என்பதை வார்த்தைகளால் சொல்ல முடியவில்லை.

திகைப்புற்றுத் தன் தோள்மீது சாய்ந்துகொண்டிருந்த காதலி ஈஸுவுடன் ஜேம்ஸ் உட்கார்ந்துகொண்டிருந்தான். மிகக் குறுகிய காலத்திற்குள் அவளுக்கு பற்பல சம்பவங்கள் நேரிட்டிருந்தன. மெய்யாகவே தாங்கள் இருவரும் ஒன்று சேர்ந்து கரையில் உட்கார்ந்து கொண்டிருப்பது உண்மை தான், அது ஒரு கனவல்ல என்பதை ஜேம்ஸ் தன் மீது விடும் கதகதப்பான மூச்சைக் கொண்டு நிச்சயப் படுத்திக் கொண்டாள் அவனைத் தழுவிக் கொள்ள தன் கையை நீட்டினாள்.

அசாய் லெய்வாவின் அருகில் நின்றுகொண்
டிருந்தான். காலின்கீழ் உள் ... றிய
வண்ணம் ெழியில் தான் ... ன்
என்பதைப்பற்றி க்வெனி ...
தான். அது அவ்வளவு ...
விட்டதில் அவனுக்கு வ ...
தோன்றியது. க்வெனிட ... து
பத்திரமாக இருப்பதாகவுட ... ரங்கில்
இருப்பதாகவும் சொல்லி ... ரைத்

துடைத்து ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள் லெய்வா.

திடீரென்று "ஸ்ப்ரௌட் எங்கே?" என்று கேட்டான் அசாய். பிறகு ஈஸுவின் பக்கம் பார்த்து, "ஸ்ப்ரௌட் எங்கே?" என்று அதிகாரத்துடன் கேட்டான்.

ஈஸுவும் ஜேம்ஸும் உடனே எழுந்தார்கள்.

"அவன் உன்னோடு இருக்கவில்லையா?"

"ஊஹூம்!"

அவர்கள் முகத்தில் திடீரென்று பெரும் திகில் சூழ்ந்தது. ஆற்றைக்கடந்து வருவதில் அவர்கள் மும்முரமாக இருந்தனர். ஆற்றின் மேற்பகுதியை காவல்புரியச் சென்றபோது ஸ்ப்ரௌட்டைச் சுமந்து வந்த ஹைலோக்பாங் ஆட்களில் ஒருவன் அவனை ஒரு குழுவுடன் அமர்த்திவிட்டு காவலுக்குச் சென்றான்.

ஆற்றை நீந்திக்கடக்க ஜேம்ஸ் உடனடியாக கைத்துப்பாக்கி அடங்கிய தன் பையை எடுத்துக் கொண்டான்.

"நானும் உங்களுடன் வருகிறேன்" என்றான் அச

...தித்து நீந்திச்சென்றார்கள்.
...ரக்கியை ஜேம்ஸ் வெளியே

...ரௌட் நீ எங்கே இருக்
...க் கூவி அழைத்தார்கள்.
... கத்தியவாறு ஐம்பது கஜத்
துக் ... ஒரு சிறுவனின் குரல் கேட்டது.

பரந்த இருளில் தனியே கத்திக்கொண்டு சாலையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான் சிறுவன்.

அசாய் அதிவேகமாக முன்னோக்கி ஓடினான்.

"அடே! ஸ்ப்ரௌட்! ஸ்ப்ரௌட்! பயலே! நான் வந்து கொண்டிருக்கிறேன்!" என்று குரல் கொடுத்தான்.

'அசாய், அசாய்!' என்று அழைத்துக் கொண்டிருந்த குரல் வந்த திசையில் அவன் அதிவேகமாகப் பாய்ந்தோடினான்.

அதே கணத்தில் ஆற்றின் மேற்புறம் துப்பாக்கிச் சூடுகள் கேட்டன. ஜேம்ஸ் தன் கைத் துப்பாக்கியைச் சுடுவதற்குத் தயாராக வைத்துக்கொண்டான். காலடிச் சத்தமும் இருண்ட காட்டில் ஒருவரையொருவர் துரத்தி ஓடும் சந்தடியும் அடிதடியும் நெருங்கி நெருங்கி வந்த வண்ணம் கேட்டது.

ஒரு மனிதனின் மரண ஓலம் இரவை கிழித்துக் கொண்டு வந்தது.

ஜேம்ஸ் ஒரு மரத்திற்குப் பின்னால் மறைந்து கொண்டான். இருட்டில் மனம் போனபடி சுட்ட
வாறு ஒரு படைவீரன் கரை ... ஓடிக்
கொண்டிருந்தான். தன் சொ ... ர
யாவது சுட்டுவிடுவோமோ ...
ஜேம்ஸ் தன் துப்பாக்கி ...
கொண்டிருந்தான். அப் ...
கையால்பற்றி இழுத்துக்கொ ...
கிப் பாய்ந்து வந்துகொண்டி ...

"தரையிலே படுத்துவிடுங்க ... ம்ஸ் தாழ்குரலில் சொன்னான்.

காட்டிற்குள்ளே ஓடிக்கொண்டிருப்பவர்களின் காலடியோசை இப்போது அதிகரித்து அருகே கேட்டது.

மடிந்து கொண்டிருந்த மற்றொரு மனிதனின் மரண ஓலம் இருளில் மீண்டும் கேட்டது. ஹைலோக் ஃபாங் ஆட்கள் படை வீரர்களைத் துரத்திச் சென்று கொண்டிருந்தார்கள்.

கரையை நோக்கி ஒரு படைவீரன் மனம்போன படி சுடலானான். அவன் அவர்களுக்கு முப்பதடி தூரத்தில் இருந்தான்.

ஜேம்ஸ் துப்பாக்கிக் குதிரையை இழுத்தான். அது நழுவிவிட்டது. அவன் இரண்டாம் முறை சுட்டான். அதுதான் அவனது கடைசிக்குண்டு. அதே நேரத்தில் பின்னாலிருந்து மற்றொருதுப்பாக்கிக் குண்டு வெடித்தது. ஜேம்ஸின் தோளை உராய்ந்து சென்ற ஒரு துப்பாக்கிக் குண்டுதான் ஓடிக்கொண் டிருந்த உருவம் தந்த பதில்.

படைவீரன் பதைபதைத்து அலறித் தரையில் விழுந்தான்—ஒரு கைத்துப்பாக்கி தரையில் விழுந் தது ... தோடி படைவீரனின் நெஞ்சில் ... ரிய மண்கீறியைப் பாய்ச் ... து ஜேம்ஸ் பார்த்தான்.

... த் "இன்னும் யாராவது ... ளா?" என்று ஜேம்ஸ் வின

... நினைக்கவில்லை! அவர்களை எதிர் பார ... யதன் மூலம் இருளில் நாம் நால் வரை ... விட்டோம்!"

"சரி, இப்போது நீ புறப்படு!" என்று அசா யிடம் சொன்னுன் ஜேம்ஸ்.

அசாய் ஸ்ப்ரௌட்டை இழுத்துக் கொண்டு வெறி கொண்டவன்போல் விரைந்தோடினுன்.

மறைவினின்றும் வெளியே அடி எடுத்து வைத்த ஹூவாங் "உங்களுக்குக் காயம்பட்டுவிட்டதா?" என்று கேட்டான். ஜேம்ஸ் தன் தோளைத் தொட்டுப்பார்த்தான், தோளில் ரத்தம் கசிந்தது.

"அது அப்படியொன்றும் (டுமையானதாக இருக்காது" என்று அவன் விடை பகர்ந்தான்.

அந்த முரட்டுப் பேர்வழிகள் இப்போது மேலே வந்து கொண்டிருந்தார்கள். முதல் துப்பாக்கிக் குண்டு வெடித்தபோது தங்களில் ஒருவனை அவர்கள் இழந்துவிட்டார்கள். ஐந்துபேர் கொண்ட ரோந்துப்படையினர் நீரோடைக்கு அருகே வந்திருந்தனர். நான்குபேர் வெட்டப்பட்டு வீழ்ந்தனர். கடைசிப் படைவீரன் அப்போதுதான் கீழே விழுந்தான்.

சிறுவன் ஸ்ப்ரௌட்டை ஒரு கைச்சடியில் பற்றிக்கொண்டு மற்ெருரு கையா[illegible]க்கொண்டு அசாய் நதியைக் கடந்தான்; [illegible]த்து சிறுவனை மேலே உந்திஞன். [illegible]
பிய ஈஸா, ஃபான், லெய்ச [illegible]
அருகே நின்றிருந்தார்கள். [illegible]
போது, அவர்கள் அப்படி[illegible]
கீழே படுத்துவிட்டனர். [illegible]
தன் கையில் பிடித்தவாறு அசா[illegible] பதை அவர்கள் கவனமாகப் பார்த்துக் [illegible]தார்கள். ஃபான் ஒரு கையை நீட்டினுன், [illegible] எட்டு

எட்டி ஸ்ப்ரௌட்டை மேலே இழுத்துக்கொண்டான். ஈஸூ முன்னுல் பாய்ந்தோடி வந்து சிறுவனை இறுக்கமாகக் கட்டி அணைத்துக் கொண்டாள்.

ஜேம்ஸ் ஆற்றை கடந்து கொண்டே "எல்லாம் சரியாகிவிட்டது" என்றுன்.

ஈஸூவின் தலை சுழன்றது. மனம் குழம்பியது இதயம் படபட வென்று அடித்துக் கொள்வதை அவள் உணர்ந்தாள்.

சாங்பூவுக்காசக் கரையில் காத்திருந்த ஸ்வாட் கடைசி ஆள் வரை ஆற்றைக் கடந்து வந்து கொண்டிருப்பதை வழிமேல் விழிவைத்து நோக்கிக் கொண்டிருந்தாள்.

பின்னணி காவல் நடவடிக்கைக்கு அமர்த்தப் பட்டிருந்த இந்த ஆட்கள் அப்போது கரையில் இருந்தார்கள். ஒருவர் பின் ஒருவராக, அவர்கள் தண்ணீரில் குதித்து மூழ்கிஞர்கள். ஸ்வாட் எழுந்து இருட்டில் புகுந்து கரைக்கு ஓடினுள். ஒவ்வொருவனும் கஷ்டப்பட்டு தொற்றி மேலே கரை ஏறிய போது, அவள், "சாங்பூ!" என்று கூப்பிட்டாள்.

[illegible] வந்தவன் சாங்பூதான்! தண் [illegible] அவன் தரையில் உதைத்துக் [illegible] போக்கடிப்பதற்காகத் தன் [illegible] உதறல் ஒலியை

[illegible] ன் இங்கே இருக்கிறேன்," என்று

கூறிஞ [illegible]

"ஓம [illegible]! நீயா? அது! சரி! சரி!"

இருட்டில் கேட்ட அவன் குரல் அவளுக்கு இனிமையாக இருந்தது.

தன் தலையை அசைத்துவிட்டு, விரிந்து கிடந்த இரவு நேர வானத்தை அண்ணாந்து நோக்க ஆச்சரிய மடைந்தான் அவன். பிறகு. தன் அருகிலிருந்த பெண் பிள்ளையை கூர்ந்து நோக்கினான். உணர்ச்சிப் பெருக்குடன் அவளைத் தோளோடு அணைத்துக் கொண்டு, வயிற்றைச் சுருக்கி. ஆழ்ந்த நெடுமூச்செறிந்து மெல்லிய குரலில் கூறலானான்:—"ஏ! ஸ்வாட்!....நாம் இப்போது சுயேச்சையாக இருக்கிறோம்! மேலும் நான் பணக்காரனாகவும் இருக்கிறேன். நீயும் என்னுடன் இருக்கிறாய்! வேறு என்ன வேண்டும்;"

இப்பொழுது ஹுவாங் அவர்களிடம் வந்தான். நதியின் குறுக்கே தொங்கிய கயிற்றை வலித்து இழுத்துப்போட அவன் கஷ்டப்படவில்லை. அவர்களைப் பின்தொடர்ந்து எந்தக் கம்யூனிஸ்ட் படை வீரனும் வர மாட்டான்! அவனோடு வந்து சேர்ந்து கொள்ள மாவேபெங் காத்துக் கொண்டிருந்தான்.

ஜேம்ஸை ஹுவாங் கடந்தபொழுது, "நீங்கள் தொடர்ந்து செல்லப் போவதில்லையா?" ...று கேட்டான்.

"இல்லை, நாம் சற்றே கா...இருட்.

"எல்லாம் நல்லபடியாக இ... நினைக்கிறேன். இந்தப் பகுதி... ச... சேர்ந்த ரோந்துப் படைகள் ...இல்லை; தவிரவும் இவை முழுவதும் மலைப்பா... ...ரதேச மாயிற்றே!"

"அப்படி இருந்தால் நல்லதுதான்!" என்று கூறி ஜேம்ஸ் இருட்டில் கையை அசைத்தான். ஃபானும் லெய்வாவும் அவனோடு வந்து சேர்ந்து கொண்டார்கள். ஈஸா நடக்க முடியாத அளவுக்கு கலக்கமடைந்திருந்தாள்.

"இதுவரை!....உங்களது உதவிக்கு நன்றி!"

ஹாவாங் கொஞ்ச தூரம் சென்றான். பிறகு ஜேம்ஸின் கைக் கடிகாரத்தைத் திருப்பிக் கொடுக்க திரும்பி வந்தான்.

"இதோ இருக்கிறது. நான் மறந்துபோனேன்!" என்றான் அவன்.

"பரவாயில்லை. என்னுடைய ஞாபகமாக அதை வைத்துக் கொள்ளுங்கள்."

கூர்க்காக்களின் மீது ஒரு கண் வைத்து ஜாக்கிரதையாக இருங்கள். அவர்களில் சிலரோடு நீங்கள் எதிர்த்துச் சண்டையிட நேரிடலாம்."

"ஆகட்டும்."

"என்னிடம் ஒரு நல்ல கைக்குட்டை இருக்கிறது. நீங்கள் சட்டையைக் கழற்றுங்கள். புண்ணுக்குகட்டுப் போடுகிறேன்" என்று ஜேம்ஸிடம் சொன்னாள் ஈஸா.

ஜேம்ஸ் புன்னகையோடு அவள் கேட்டுக் கொ[illegible]டியே செய்தான்; அவனுடைய காயத்து[illegible] செய்ய ஆயத்தமானாள் ஈஸா.

[illegible]த்துக்குப் பின். ஃபான் அழைத்தான்; [illegible]நாம் புறப்பட்டுச் செல்வோம். வை[illegible]றால் நாம் ஒரு கிராமத்தைச் சென்று[illegible] வேண்டும்!"

முடிவுரை

இரண்டு ஆண்டுகள் கழிந்தன. கௌலூண் டாங்கில் ஜேம்ஸும் ஈஸாவும் ஒரு அழகான வீட்டில் வசித்தனர். அவர்களுக்கு ஓர் குழந்தை இருந்தது. ஈஸா உலாவச் செல்லும்போதெல்லாம் சாலை மராமத்து செய்யுமிடத்திலும், கட்டடம் கட்டும் இடங்களிலும் அந்த ஷூண்டாக் பெண்கள் வேலை செய்வதைக் காண்பாள். சாலை ஓரத்தில் காலணிகளுக்கு மெருகு கொடுத்துக் கொண்டோ, அல்லது ஆரஞ்சுப் பழங்கள், முட்டை கோஸ் ஆகியவற்றையும் விற்றுக் கொண்டு இருக்கும் மூக்குக் கண்ணாடி அணிந்த ஓர் இளைஞனையும் அடிக்கடி அவள் பார்ப்பாள். அவள் இளைஞனைக் கண்டு கேட்டாள். மாட்டிறைச்சிச் சவ்வுகளையும், முட்டைகளையும் கலந்தசூப்பும் விற்கும் ஆளைப் பற்றியும் அவன் கடையைப் பற்றியும் அவளிடம் அவ்விளைஞன் சொன்னான். ஜார்டன் சாலைக்கு அருகில் டெம்பிள் தெருவிலிருந்த உயர்ந்த [illegible]டை ஈஸா, ஜேம்ஸ், லெய்வா, ஃபான் [illegible]கு மிகப் பிரியமான கடையாக ஆயிற்று[illegible]

ஈஸாவோடும் ஜேம்ஸோடும் தங்கி[illegible] அவள் தினமும் சிறுவன் ஸ்ப்ரெ[illegible]ந அழைத்துச் சென்றாள். அவள் [illegible]ம்பூ, ஈஸாவின் உதவியால் ஒரு பல சரக்குக்[illegible] திறந்திருந்தான்; அவர்களை அடிக்கடி பார்க்க வருவான்.

வாட்டர்லூ சாலையில் ஒரு வீட்டின் மாடியில் ஃபானும் லெய்வாவும் வசித்தார்கள். ஃபானின் மகன் அமெரிக்காவிலிருந்து அவனைப் பார்ப்பதற்கு சென்ற வருடம் கோடையில் வந்திருந்தான். ஃபானும் லெய்வாவும் மணம் புரிந்து கொண்டிருந்தார்கள்; யாரும் அவர்களைக் கேள்வி கேட்கவில்லை. க்வெனை அவர்கள் சுவீகாரம் எடுத்துக் கொண்டார்கள். அவனும் சிறுவன் ஸ்ப்ரௌட்டைப் போல ஆர்கில் தெரிவிலிருந்த பள்ளிக்குச் சென்று வந்தான்.

அசாயைப் பொறுத்த மட்டில், அவன் ஐந்தடி ஆறு அங்குலம் வளர்ந்திருந்தான். அப்போது அவனுக்கு பதினெட்டு வயது நிறைந்திருந்தது. அவன் வாடகை மோட்டார் வண்டி ஓட்டுபவனாக இருந்தான். 'பெரும் ஜனத்திரளின் வெளியேற்றம் 1962 மே மாதத்தில் தொடங்கியபோது, ஹாங்காங்கில் வந்து குவியத் தொடங்கிய பத்தாயிரக் கணக்கான அகதிகளுக்கு இடையில் அவன் புகுந்து மகத்தான சேவை செய்தான். ஊர்க்காவல் படையினின்றும் தப்பிச் செல்ல அகதிகளுக்கு உதவியதற்காக அவன் இரு முறை பிடிக்கப்பட்டான்; ஒரு முறை அவன் கிழவி ஒருத்தியை காரோட்டியின் ஆசனத்தை அடுத்திருந்த ஆசனத்தில் மரியாதையாக உட்கார [illegible] அவளைத் திரும்ப கௌலூனுக்கு ஓட்டிச் [illegible] அதற்காக அவனை ஊர்க்காவல் படைத் [illegible] முன்னால் ஆஜர்படுத்தினார்கள்; அவன் அசர் [illegible] ண்டித்தான்; ஆயினும் அவன்மீது பிரியமாக [illegible], அசாய். இனிமேல் அப்படிச் செய்யாதே!" என்று புன்சிரிப்போடு கண்டித்து அனுப்பினான்,

ஏறத்தாழ ஒரு லட்சம் அகதிகள் மூன்று வார காலத்திற்குள் தொடர்ந்து வெளியேறினர். உத்தியோக பூர்வமான புள்ளி விவரப்படி, அந்த மூன்று வாரங்களில் மாத்திரம், அறுபத்து இரண்டாயிரத்து நானூறு பேர் கைது செய்யப்பட்டு சைனுவுக்கு வேண்டா வெறுப்பாகத் திருப்பியனுப்பப்பட்டனர். பெரும் ஜனத்திரள் வெளியேற்ற காலத்தின் நம்பத் தகாத கதைகளில் ஒன்று இது; ஒரு சீனத்து காவல் படையினன் ஓர் அகதியைக் கைது செய்திருந்தான். ஆனல் அந்த அகதி அவனுடைய சொந்த மகனுகவே இருந்தான். தந்தையின் சிபாரிசின் பேரில் அவன் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டான்.

நான்காவது தடவையாக அசாய் பிடிபட்டான்; இந்தத் தடவை, காவல் படையினருக்கு ஒத்தாசை செய்வது, போலப் பாவனை செய்து கூர்க்கா காவல் படையினர் அகதிகளைக் கைது செய்வதைத் தடுத்துக் கொண்டிருந்தான் அவன். மறுபடியும் அவன் இராணுவத் தலைவன் முன் ஆஜர்ப் படுத்தப்பட்டபோது, இராணுவத் தலைவன் அவனை ஏறிட்டு நோக்கினன்.

"அடே! அசாய், உன்னை என்ன பண்ணுவதென்றே எனக்குத் தெரியவில்லையே! நீ ஒரு—!"

"ஆம்; எனக்குத் தெரியும்—உங்கள் வாழ்க்கையில் நீங்கள் இதுவரை சந்தித்த வரிலே கொஞ்சமும் திருத்த முடியாத பயல் தானே, காப்டன்?"

இராணுவத் தலைவன் தன்னை மறந்து புன்னகை செய்தான்.

முற்றும்.